வெளியீடு 18-2-2003 Issued 18-2-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 29, 2002 – தொகுதி 25 – எண் 2

**Monday the 29th April, 2002 – Volume 25 – No. 2**

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

296/2003

**29-4-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்-** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 295-341 |
| **2. தகவல் கோரல்-** | |
| (அ) வன்னியர் சங்கத்தின் சார்பில் மகாபலிபுரத்தில் 26-4-2002 அன்று நடந்த சித்ரா பௌர்ணமி விழாவினையொட்டிய அசம்பாவிதம். | 342-344,345 |
| (ஆ) தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல். | 344 |
| (இ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோருதல் | 344-345 |
| 50-51. | |
| **3. கவன ஈர்ப்பு-** | |
| (அ) தூத்துக்குடி மாவட்டத்தில் சூறாவளிக் காற்றினால் வாழைத் தோட்டங்கள் சேதம் | 346-349 |
| (ஆ) வால்பாறை, ஹை பாரஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்காதது | 349-353 |
| **4. அறிக்கை அளித்தல்-** | |
| மதிப்பீட்டுக் குழு | 353 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 14-சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | 354-441 |


53-121—1

பக்கங்கள்

5. **மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத்துறை-சுற்றுலா — 441-444

மாண்புமிகு திரு. ப. மோகன் — 354,360,425-437

மாண்புமிகு திரு. அ. மில்லர் — 360,366,413-424

திரு. கா. கந்தசாமி — 358,363,366-371

திரு. எம். சக்திவேல் முருகன் — 371-382

*திரு. எச்.எம். ராஜூ — 355,361,382-386 439,441

திரு. பி.எஸ். அருள் — 386-398

*திரு. டி. மணி — 357,398-405,439

திரு. க. ரா. கந்தசாமி — 405-410

திரு. சோ. இராசேந்திரன் — 365,410-412,443

(இ) கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை — 444-540

(ஈ) கோரிக்கை எண் 20-நெடுஞ்சாலைகள் துறை — 451-456

(உ) கோரிக்கை எண் 36-மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை — 456-460

(ஊ) கோரிக்கை எண் 34-பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை — 460-463



பக்கங்கள்

5. **மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி



(எ) கோரிக்கை எண் 23-உள்துறை சிறைச்சாலைகள் — 463-540

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 444,451,456, 460,463,468, 536-540

திரு. எஸ்.வி. திரு ஞானசம்பந்தம் — 469,473-477

திரு. செ. அண்ணாதுரை — 477-483

திரு. கே. ஆறுமுகம். — 446,447,453, 458,462,465, 466,483,495

திரு. கு. ஜெயக்குமார் — 496-502

திரு. கே. மகேந்திரன் — 502-507

திரு. தா. பச்சைமால் — 508-512

திரு. ஜி. பழனிசாமி — 448,454,459,460,463,467,513-529,535

திரு. ப. அரசன் — 450,455,529-536

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 540-541

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 16, சித்ரபானு–திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 29, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

## 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 245, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 246, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

246—

**நூலகம் அமைத்தல்**

***1426—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல் கிணறு கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225161
சென்னை—600 008

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு கிராமத்தில் நூலகம் திறக்க வேண்டி விண்ணப்பம் பெறப்படாததாலும், ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததாலும், அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, அந்த நூலகம் அமைப்பதற்குண்டான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஒரு நூலகம் ஆரம்பிப்பதற்கு என்னென்ன நடைமுறைகள் தேவை? என்னென்ன நடைமுறைகள் இருந்தால், ஒரு நூலகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும், ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 5,000-க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட ஊர்களில் கிளை நூலகங்களை அமைக்கலாம். அதற்குக் குறைவாக உள்ள கிராமப்புறங்களில் பகுதி நேர நூலகங்களைத் திறப்பதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. அவ்வாறு திறக்கப்பட வேண்டுமென்றால், கீழ்க்கண்ட நிபந்தனைகளை அந்த ஊர் பொதுமக்கள் பூர்த்தி செய்ய வேண்டும்: ஒன்று, நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்க வேண்டும். இரண்டாவது, நூலகம் கட்டுவதற்கு ஏதுவாக 5 சென்ட்டிலிருந்து 10 சென்ட் வரை உள்ள ஒரு நிலத்தை பொதுமக்கள், அந்தப் பகுதியில் இருப்பவர்கள், இந்த நூலகத் துறைக்கு, கிரயம் செய்து தரவேண்டும். 2,000 ரூபாய் மதிப்புள்ள தளவாடப் பொருட்களை நன்கொடையாகத் தரவேண்டும். மேஜை, நாற்காலி போன்றவற்றையெல்லாம், 2,000 ரூபாய் மதிப்பிற்குத் தரவேண்டும். அந்தப் பகுதி மக்கள், 200 உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். அதோடு 1,000 ரூபாய் செலுத்தி, இரண்டு புரவலர்களை-Patron-களை உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்தால், அரசானது நிதிநிலைக்கு ஏற்ப அவற்றைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.



2002 ஏப்ரல் 29]

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்கள் ஒரு மனிதனுக்கு மிக அத்தியாவசியமானவை. அந்த வகையில், ஒன்றியப் பொது நிதியிலேயிருந்து, இந்த வசதிகளையெல்லாம் பெற்று, அனைத்து ஒன்றியத் தலைமை இடங்களிலேயும் நூலகம் அமைக்கும் எண்ணம் ஏதும் அரசுக்கு உண்டா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் என்பது அவசியமான ஒன்றுதான். ஏனென்றால், மக்களுக்கு நல்ல செய்திகளையும், அதேபோன்று, புத்தகங்களைப் படித்து, அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ளுவதற்கும் ஏதுவாக உள்ள ஓர் இடமாகும். ஆகவே, நூலகங்களை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நான் முன்பு சொன்னதுபோல, கிளை நூலகங்கள் மட்டும் 1,568 அமைக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட நூலகங்கள் 29 இருக்கின்றன. ஊர்ப்புற நூலகங்கள் 625 இருக்கின்றன. இதுபோன்று பல்வேறு நூலகங்கள் அமைந்திருக்கின்றன. நான் முன்பு குறிப்பிட்டதுபோல, சில நிபந்தனைகளை மக்கள் பூர்த்தி செய்தால் அந்தப் பகுதியில் நூலகம் ஆரம்பிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். அதுவும் நிதிநிலைக்கு உட்பட்டுத்தான் அந்த வகையில் செயல்பட இருக்கின்றோம். ஆனால், நூலகங்களை உருவாக்குவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்கள் அமைப்பதற்கான பல்வேறு விதிமுறைகளை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே, எனது தொகுதிக்கு உட்பட்ட மன்னார்குடி வட்ட நூலகத்திற்கு இடம் அளிப்பதிலே பிரச்சினை இருக்கிறது. இப்போது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. அரசின் சார்பிலே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதுவும் நிலுவையிலே இருப்பதாக அறிகிறேன். அந்த நிதியை வேறு துறைக்கு மாற்றிவிடாமல், இந்த ஆண்டு இறுதியிலாவது வழங்குவதற்கான முயற்சிகளை எடுத்து, இடம் அளித்து, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன். மேலும் நூல்களைப் பொறுத்தவரையிலே, சமூக, கலாச்சார, அறிவியல் சிந்தனையுடைய புதிய புதிய நூல்கள் ஏராளமாக

வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நூலகங்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தில் நிலப் பிரச்சினை இருப்பதாகச் சொல்கின்றார்கள். நீங்கள், அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்தால், அரசு அதற்காக ஒதுக்கிய பணத்தை மற்றவற்றிற்கு மாற்றாமல் அதற்காகச் செலவு செய்யப்படும் என்பதற்கு உறுதியளிக்கிறேன். அதோடு பல புத்தகங்களை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். அது நல்ல கருத்துதான். அதற்காகக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு உறுப்பினர்களுடைய சிபாரிசின் பேரில் புத்தகங்கள் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளில் ஆண்டுதோறும் அந்தந்த கிராம வசதிகளுக்கு ஏற்ப, கிளை நூலகங்கள்தான் தொடங்கப்படுகின்றன. அரசின் சார்பாக ஆண்டுதோறும் முழு நேரம் செயல்படும் நூல்நிலையங்கள் எத்தனை தொடங்கப்படும் என்கின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதுபோல, இதுவரையில் 2,879 நூல்நிலையங்கள் தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே, மத்திய-மாநில மைய நூலகம் ஒன்று, மாவட்ட மைய நூலகங்கள் 29, கிளை நூலகங்கள் 1,568, ஊர்ப்புற நூலகங்கள் 625, பகுதி நூலகங்கள் 649, நடமாடும் நூலகங்கள் 7. இவ்வாறாக 2,879 நூலகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறத்தில் பல்வேறு நூலகங்கள் தொடங்குவதற்கு, பகுதி நேர நூலகங்கள் தொடங்குவற்கு சில வரன்முறைகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றின்பேரில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் தந்தை என்று போற்றப்படுகின்ற திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள், நூலகத்திற்காக சிறப்பாகப் பணியாற்றி, பல கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் பிறந்த ஊரான சீர்காழி தொகுதியில் இதுவரையில் இயங்கிவருகின்ற நூலகம், சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு பதிலாக, சொந்தக் கட்டடத்தில் நூல்நிலையம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல, அதற்குரிய நிலத்தை நூலகத் துறைக்கு அந்தப் பகுதி மக்கள் இலவசமாகத் தந்தார்கள் என்றால், நிதி நிலைமைக்கு ஏற்ப புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முனையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அனைத்துத் தகுதிகளுடன் ரூ. 6,000 புரவலர் தொகையாகவும், 200 உறுப்பினர்களுக்குப் பதிலாக 500 உறுப்பினர்களையும், அதேபோல ரூ. 40,000 மதிப்புள்ள இடத்தையும் இலவசமாக கபிலர்மலை தொகுதி, கொளக்காட்டுப்புதூரைச் சேர்ந்த பொதுமக்கள் கொடுப்பதாக மனு கொடுத்து, அந்த மனுவினையும் மூன்று மாதங்களுக்கு முன்பாக மாநில நூலக இயக்குநர் அவர்களுக்குக் கொடுத்திருந்தேன். இதுவரை அதற்கான உத்தரவுகள் வழங்கப்படவில்லை. எனவே, கபிலர்மலை தொகுதி, கொளக்காட்டுப்புதூரிலே அனைத்துத் தகுதிகளுடன்கூடிய நூலகம் அமைக்க அமைச்சரவர்கள் உதவி செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கபிலர்மலைக்கு உட்பட்ட கொளக்காட்டுப்புதூரிலே நூலகம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நிதிநிலைமைக்கு ஏற்ப இந்த ஆண்டு அவருடைய மனு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மக்களிடையே நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, கிராமப்புற, நகர்ப்புறப் பெண்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது. மாநிலத்தில் பெண்களுக்கு என்று தனி நூல் நிலையங்கள் இருக்கின்றனவா? குறிப்பாக, மதுரை, சென்னை போன்ற பெரும் மாநகரங்களில் மட்டுமாவது, பெண்களுக்கென்று தனி நூலகத்தை உருவாக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் இந்த நூலகத் துறைக்கே பெண்தான் டைரக்டராக இருக்கின்றார்கள். ஆகவே பெண்களுக்காக ஒரு தனி நூல் நிலையம் இதுவரையில் அரசின் சார்பாக எதுவும் அமைந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை, தேவை என்றால், மற்றவர்கள் விரும்பினால் அதுபற்றிச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 247, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**247—**

## பல்நோக்கு விளையாட்டுத் திடல்

***5467—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் விளையாட்டில் ஆர்வமாகவுள்ள மாணவர்கள், இளைஞர்களை ஊக்குவிக்க பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும்? திட்ட மதிப்பீடு எவ்வளவு?



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் படித்த இளைஞர்கள், மாணவர்கள் விளையாட்டுகளிலே மிகவும் திறமை வாய்ந்தவர்களெல்லாம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, செங்கல்பட்டு நகரத்திலே Basket Ball, Volley Ball போன்ற விளையாட்டுகள் மாநில அளவிலே வருடந்தோறும் நடத்தப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், இரவு நேரங்களில் மின்னொளிப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே விளையாட்டிலே கைதேர்ந்த சிறந்த மாணவர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அங்கேயுள்ள All India Player-களும், Basket Ball, Volley Ball போட்டிகளில் பங்குகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது போதிய விளையாட்டுத் திடல் இல்லாததால் படித்து முடித்த மாணவர்களெல்லாம் விளையாட்டிலேச் சிறந்த முறையிலே பயிற்சி பெற மேலும் ஊக்குவிக்க, திடல் இல்லாத காரணத்தினாலே தடைப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து செங்கல்பட்டிலாவது ஒரு பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், நகரத்திலேயும் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் நிர்ணயிப்பதை இந்த அரசு ஒரு கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சிறந்த விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளங்கள் போன்றவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கின்றோம். திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு கல்வி மாவட்டத்திலே அமைந்திருக்கிறது. செங்கல்பட்டு கல்வி மாவட்டம் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருக்கிறது. காஞ்சிபுரத்திலே ஒரு விளையாட்டு அரங்கமாவது இருக்கிறது. அந்த விளையாட்டு அரங்கத்திலே—தடகள ஓடுதளம் 4,000 மீட்டரிலிருந்து

[2002 ஏப்ரல் 29

ஓடுகின்ற—8 பாதைகளைக் கொண்ட 4,000 மீட்டர் தடகள ஓடுதளம் இருக்கிறது. அதைப்போலவே, கூடைப் பந்தாட்டம் விளையாட சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. கால் பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கபடி, கையுந்து ஆட்டம், பல்நோக்கு கழல்திறன் கொண்ட சாதனம், மேசைப் பந்தாட்டம், எடை தூக்கும் பயிற்சிக்கூடம், உடை மாற்றும் அறை இவையெல்லாம் சிறப்பாக காஞ்சிபுரத்திலே, மாவட்டத் தலைநகரத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் முடித்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் போன்ற இடங்களில் படிப்படியாக நிதிநிலைக்கு ஏற்ப அமைத்துத்தர அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது திருக்கழுக்குன்றம் வட்டத்திலே இருக்கின்ற புதுப்பட்டினம், மகாபலிபுரம் போன்ற பகுதிகளிலே இருக்கின்றவர்கள் காஞ்சிபுரம் செல்வதற்கு 65-70 கிலோ மீட்டர் செல்லவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் செங்கல்பட்டு நகரத்திலே சிறந்த கைப்பந்தாட்ட வீரர்கள், கூடைப் பந்தாட்ட வீரர்கள், தடகளப் போட்டி வீரர்கள் பல்வேறு நிலைகளிலே உள்ளவர்கள் மாநில அளவிலே விளையாடுபவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். தினமும் அவர்கள் செங்கல்பட்டிலேயிருந்து அல்லது திருக்கழுக்குன்றத்திலேயிருந்து காஞ்சிபுரம் செல்வது என்பது இயலாத காரியமாக இருக்கும். எனவே, அந்தப் பகுதியிலே பல்வேறு பள்ளிகளிலே இருக்கின்ற தடகளத் திடலிலாவது தற்சமயம் இதுபோன்ற இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கித் தருவதற்கு அரசு முன்வருமா? அதுமட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே நீச்சல் குளம் தேவை. அதை மகாபலிபுரத்திலோ அல்லது புதுப்பட்டினத்திலோ அமைத்துக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு முயலுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்நோக்கு விளையாட்டுத் திடல் வேண்டுமென்று மட்டும் கேட்டார்கள். அதைப் பற்றிச் சொல்லும்போதுதான் சொன்னேன் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று. அங்கு பல வசதிகள் செய்து தரப்படுகின்றன. சில விளையாட்டுகளுக்கு சில பயிற்சி இடங்கள் வேண்டுமென்று சொல்கிறபோது ஆங்காங்கு



2002 ஏப்ரல் 29]

இருக்கும் பள்ளிக்கூடங்களில் உள்ள பள்ளி மைதானங்களையாவது அல்லது கல்லூரி மைதானங்களையாவது பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கான விதிமுறைகளைச் செயல்படுத்துவது பற்றி அரசு சிந்தித்துச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ஏராளமான படித்த இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டி, என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் செல்கின்றபோது கிரிக்கெட் விளையாடுவதற்கு சாதனங்கள் வாங்குவதற்கு பணம் கொடுங்கள் என்றெல்லாம் கேட்டு வருகிறார்கள். நம்முடைய அரசு கிராமங்கள் தோறும் இந்த விளையாட்டை ஊக்குவிக்கின்ற வகையில் அவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக்கொடுப்பதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதே இதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. கிராமங்களாக இருந்தாலும், சிறிய நகரங்களாக இருந்தாலும் Youth Club என்று ஒன்று இருக்கிறது. அவர்களுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் அளவிலே பணத்தைத் தந்து சில திட்டங்களைச் செயல்படுத்த திட்டம் இருக்கிறது. ஆனால் பெரிய அளவில் சில திட்டங்கள் வேண்டுமென்றால் இப்பொழுது இருக்கின்ற நிதிநிலை காரணமாக, அத்தகைய திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையிலே இப்பொழுது கிடையாது. ஆனால் நீங்கள் சொல்லியிருக்கின்ற கருத்தானது நல்ல கருத்து. மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும்பொழுது, அவர்களுக்கெல்லாம் இப்படி நல்ல பயிற்சி அளிப்பதன் மூலமாக மன வளமும், உடல் வளமும் நன்றாக உருவாகும் என்பதில் சந்தேகம் கிடையாது. அவற்றை உருவாக்குவதற்கு அரசானது சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் குறிப்பிடுகின்றபோது, விளையாட்டு மைதானங்கள் இல்லாத இடங்களில், பள்ளிகளில் இருக்கிற

[2002 ஏப்ரல் 29

விளையாட்டு மைதானங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அந்தப் பள்ளிகளில் இருக்கிற விளையாட்டு மைதானங்களைப் பழுதுபார்ப்பதற்கு, சீர்திருத்துவதற்கு, மேன்மைப்படுத்துவதற்கு அரசு ஏதாவது நிதியை ஒதுக்குகிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசானது பள்ளி நிறுவனங்களை மேம்படுத்துவது குறித்த திட்டங்களை வகுத்திருக்கிறது. அதாவது பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவது, பள்ளிக்குத் தேவையான குடிநீர் போன்ற வசதிகளைச் செய்து தருவது போன்ற திட்டங்களைச் செயல்படுத்துகிறது. விளையாட்டு அரங்கங்களையும் விளையாட்டு மைதானங்களையும் பயன்படுத்துவதற்கு சில திட்டங்கள் போட்டு நிதியில் ஒரு பகுதியை ஒதுக்கிச் செலவு செய்கிறோம். ஆனால் இப்போது நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக பெற்றோர்—ஆசிரியர் சங்கம் மூலமாகப் பல பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெற்றோர்—ஆசிரியர் சங்கம் மூலமாக சிறப்பாக இதையும் பாதுகாத்துக்கொள்வதற்காகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆகவே அதற்காக இப்போது தனியாகப் பணத்தை ஒதுக்கவில்லை. எதிர்காலத்தில் வேண்டுமானால் நிதிநிலைக்கேற்ப அரசு இதைப்பற்றி சிந்தித்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரில் பல்நோக்கு விளையாட்டு மைதானங்கள் கட்டும்போது விளையாட்டு வீரர்கள் தங்கி பயிற்சி பெறுகின்ற அளவுக்கு அங்கே தங்குவதற்கான இட வசதிகள் செய்து கொடுக்கப்படுமா? அதோடு நேரு விளையாட்டு அரங்கத்தில் வீரர்கள் தங்குவதற்கான போதுமான இடவசதி இல்லாததால் அங்கே போதுமான இடவசதிகளை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அமைக்கப்படும் பல்நோக்கு விளையாட்டு



2002 ஏப்ரல் 29]

அரங்கங்களில் சில இடங்களில் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நேரு விளையாட்டு அரங்கத்திலும் அத்தகைய வசதிகள் இருக்கின்றன. அதை இன்னும் சரியான முறையில் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். நானே பலமுறை சென்று பார்த்திருக்கிறேன். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போதுதான் வீரர்கள் அதிகமாகத் தங்குகிறார்கள். பயிற்சி பெறுகிற நேரத்தில் அதிகமான இடம் காலியாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இருக்கின்ற இடத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். எனினும் விளையாட்டு வீரர்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 248. திரு. ஆ.கு. முருகேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**248—**

**வணிக வளாகம்**

***9021—திரு. ஆ.கு. முருகேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர், அருள்மிகு வெள்ளை விநாயகர் ஆலயத்திற்கான இடங்களில் அறநிலையத் துறை மூலமாகப் பெரிய அளவில் அடுக்குமாடி வணிக வளாகம் கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர், அருள்மிகு வெள்ளை விநாயகர் திருக்கோயில் இடத்தில் வணிக வளாகம் கட்ட, திருக்கோயிலில் நிதி வசதி இல்லாததால், வணிகர்களிடமிருந்து வணிக வளாகம் கட்டுவதற்குச் செலவாகும் மதிப்பீட்டுத் தொகையை டெண்டர் மற்றும் ஏலம் மூலம் வசூல் செய்து வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 29

249—

### கோயிலைப் புதுப்பித்தல்

***16253—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மயிலாடுதுறை தொகுதி, பெரியார் இராமசாமி தெருவில் உள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோயில் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுகள் சரிபாக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், பெரியார் இராமசாமி நகர், அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயிலின் விமானம் பழுதுபார்த்தல், கருவறை பழுதுபார்த்தல் மற்றும் முன்மண்டபம் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் உபயதாரர்கள் மூலமாகச் செய்யப்பட்டு நிறைவடைந்துள்ளன. இதர நிலுவைப் பணிகளான வர்ணம் தீட்டுதல், சுற்றுப்பிரகாரம் தளவரிசை அமைத்தல் ஆகிய பணிகளை விரைவில் நிறைவு செய்தபின், குடமுழுக்கு நடைபெறவுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த வினாவை 9 மாதங்களுக்கு முன்பு கேட்டிருந்தேன். மேற்படி திருக்கோயில் என்பது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் **அவர்கள் இல்லத்திற்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தால், அவர் மறைவுக்குப் பிறகு ரொம்பவும் பாழ்பட்டு இருந்தது. இப்போது நாங்கள்தான் செய்கிறோம். நீங்கள்தான் இப்போது ஜெயித்திருக்கிறீர்களே என்று கேட்டு என் தலைமையில் செய்யச் சொல்கிறார்கள். அந்த வேலையை தெருவாசிகளான நாங்களே சொந்தப் பொறுப்பில் செய்கிறோம்....

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், **என்ற பெயர் வேண்டாம். ** வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பதால் பாழ்பட்டுப் போய்விட்டது என்று சொல்ல வேண்டாம். இது அற்புதமான கேள்வி. பெரியார் இராமசாமி நகர், அவருக்குப் பிடித்த விநாயகர் கோயில் பற்றிய கேள்வி. (சிரிப்பு) பதில் சொல்பவரும் ஈரோட்டு இராமசாமி. (சிரிப்பு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சந்தோஷம். இப்போது நாங்களே சொந்தப் பொறுப்பில் கட்டிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எங்கள் பகுதியிலே சில குக்கிராமங்கள், ஆதிதிராவிடர் காலனிகள் போன்ற பகுதிகளில் மதமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே சிறு சிறு கோயில்களைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், பெரியார் இராமசாமி நகர், அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், சித்தர்காடு அருள்மிகு ஆலந்துரையப்பர் திருக்கோயிலின் உப கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு என்று தனி வருமானம் இல்லை. அர்ச்சகர் சம்பளமாக ரூ. 2,640/- மற்றும் நித்தியப்படி படித்திறம் ரூ.1,800-ம் அருகில் உள்ள சித்தர்காடு கோயில் நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. மேலும் இத்திருக்கோயிலில் தினசரி ஒருகால பூசை நடைபெற்று வருகிறது. வருடாந்திர விநாயகர் சதுர்த்தி விழா உபயதாரர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. தாங்கள் முன்வந்து அங்கே இருக்கின்ற, அந்தப் பகுதியில் இருக்கின்ற பக்தர்கள் மூலம் வசூல் செய்து அந்த ஆலயத்தை சிறப்புறச் செய்தால் வசதியாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவுரைப்படி நாங்களே அந்தத் திருப்பணியை நிறைவு செய்து முடித்துக்கொள்கிறோம். ஆனால் எங்கள் பகுதியில் குக்கிராமங்கள் பல இருக்கின்றன. சோழம்பேட்டை அருகில் கோழிகுத்தி என்ற கிராமத்திலும் அகர கீரங்குடி என்ற பஞ்சாயத்திலும், மேலமருதாந்தநல்லூர் என்ற ஊரிலும் காலனி பகுதியிலும் கோயில்கள் கிடையாது. அவர்கள் விரும்புகிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2002 ஏப்ரல் 29

பக்கத்திலே மதம் மாறுகிற வாய்ப்புகள் அங்கே இருக்கிற காரணத்தால், அந்த 3 பகுதிகளிலும், தமிழக அரசு நேரடியாகக் கோயில் கட்டுவதற்கு உதவிசெய்ய முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், அரசாங்கம் எப்படிக் கோயில் கட்டிக்கொடுக்கும்? பக்தர்கள்தான் கட்ட வேண்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது' என்பது பழமொழி. அதற்கேற்ப, கோயில்களை நீங்கள் உங்கள் பகுதியில் ஏற்படுத்துவீர்களேயானால், அரசு அதற்கு அறநிலையத் துறையின் மூலமாக—வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுடைய காலனியிலேகூட, இப்போது 100 ஆலயங்களைத் தேர்வுசெய்து, திருப்பணி நடத்துவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதேபோல—உங்களுடைய பகுதியிலே எந்தெந்த ஊர்கள் என்று கொடுப்பீர்களேயானால், இந்த ஆண்டு அங்கே அந்தக் கோயில்களில் பணி தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**250—**

**ஆரணி மருத்துவமனை**

***18931—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி, அரசினர் மருத்துவமனையிலுள்ள பிணவறை மிகவும் பழுதடைந்துள்ளதால், அதனை உடனடியாகச் செப்பனிட அரசு முன்வருமா?



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி, அரசினர் மருத்துவமனையில், வார்டுகளுக்கான பராமரிப்புப் பணிகளும், பிணவறை பழுதுபார்த்தலும் முடிவடைந்து தற்போது உபயோகத்தில் உள்ளன.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி மருத்துவ மனையில் இருக்கிற பிணவறை, நீண்ட நாட்களாகப் பழுதடைந்துள்ளது என்று சொல்லியிருந்தேன். அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஓரளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்றாலும், துணைக் கேள்வியாக ஒன்று கேட்க அனுமதி கோருகிறேன். அதாவது, விபத்தாலோ அல்லது தற்கொலை என்றோ செய்துகொள்கிறவர்களை பகல் 2 மணிக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து போட்டால், அதை அடுத்த நாள் 2 மணிக்கு மேல்தான் பிரேதப் பரிசோதனை தொடங்கி, 5 மணிக்குக் கொடுக்கிறார்கள். 24 மணி நேரம் பிணவறையிலே இருக்கிற அந்தப் பிணத்தை உடனுக்குடன் பிரேதப் பரிசோதனை செய்துதர அதிகாரிகளுக்கு, அரசு டாக்டர்களுக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இந்தக் கேள்வியைக் கேட்டதன் விளைவாகத்தான், விரைவில் அந்தப் பணி முடிக்கப்பட்டு, பதிலும் அவருக்குச் சாதகமாக வந்திருக்கிறது. அங்கே, பிரேதப் பரிசோதனை செய்வதிலே காலதாமதம் ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மருத்துவமனை டாக்டர்களால் இந்தக் காலதாமதம் ஏற்படுவதில்லை. காவல் துறையினரால், வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளில், சம்பந்தப்பட்ட காவல் துறை ஆய்வாளர் அங்கே வந்து inquest செய்து, requisition கொடுத்த பிறகுதான், டாக்டர்களாலே பிரேதப் பரிசோதனையைச் செய்யமுடியும். எனவே, காவல் துறையினரால் தாமதம் ஏற்படுகிறபோதுதான், பிரேதப் பரிசோதனையிலும் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறையைக்கூட இப்படிக் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறோம். முடிந்த அளவுக்குக் காலதாமதம் இல்லாத அளவுக்கு நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நெடுஞ்சாலை என்பது, தமிழகத்திலே அதிக விபத்துகள் நடக்கின்ற பகுதியாகும். கடந்த ஆண்டு மட்டும் 287 பிரேதப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஆரணி அரசினர் மருத்துவமனையைப் பற்றியது. (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரேதப் பரிசோதனை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காவல் துறையினரால், இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு, கையெழுத்துப் போட்டு, காலத்தோடு கொடுக்காததால்தான் பரிசோதனை செய்ய முடியவில்லை என்று சொன்னார். அநேகமாக வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயிருந்து இருக்கக்கூடியது இந்தச் சட்டம். காலையிலே 10 மணிக்கு ஒரு பிரேதத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னால், மாலை 4 மணிக்கு மேலே பிரேதப் பரிசோதனை செய்யக்கூடாது என்று சட்டமே இருக்கிறது. அதைத்தான் மருத்துவர்கள் பின்பற்றுகிறார்கள். இன்றைக்கு நவீன உலகமாக இருக்கிறது. நம்முடைய சட்டமன்றமே பகல் மாதிரி காட்சியளிக்கிறது. எனவே ஒரு பிரேதப் பரிசோதனை செய்யவேண்டுமென்றால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பகல்தானே இது?

**திரு. ஜி. பழனிசாமி:** என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பகல்தானே இது?

**திரு. ஜி. பழனிசாமி:** பகல்தான். (சிரிப்பு) என்ன ரொம்ப பிரகாசமாக இருக்கிறது பாருங்கள் நம்முடைய லைட். ஆகையால், இன்றைக்குப் பிரேதப் பரிசோதனைக் கூடங்களில்கூட இதுபோன்ற ஒளி தரக்கூடிய லைட்டுகளை இரவிலே அமைத்துக் கொடுப்பதற்கான வாய்ப்பினை சட்டத் திருத்தத்தின் மூலமாகக் கொண்டு வரமுடியுமா? அப்படிச் சட்டத் திருத்தம் கொண்டு வந்து—ஏனென்றால், சில விபத்துகள் ஏற்பட்டு அதனாலே பதட்டம் அடைந்து, சாலை மறியல், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் இத்தனையும் நாட்டிலே பல இடங்களிலே ஏற்பட்டுவிடுகின்றன. ஆகையால், இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் இடமளிக்காத வகையில் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து—



2002 ஏப்ரல் 29]

இரவிலேயும் பிரேதப் பரிசோதனை செய்யலாம் என்கிற முடிவை அரசு கொண்டுவருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த பிறகு, மனிதனின் உடலில் நிறமாற்றம் ஏற்படுகிறது. அந்த நிறமாற்றத்தை வைத்துத்தான் சம்பவ நேரம், அந்தக் காயத்தின் நிறமாற்றத் தன்மையை வைத்துத்தான், அந்தக் காயத்தினுடைய தன்மை இவற்றையெல்லாம் பிரேதப் பரிசோதனை செய்கிறபோது டாக்டர்கள் ஊர்ஜிதம் செய்கிறார்கள். எனவே, அந்த நிறமாற்றத்தை வைத்து, இந்தப் பிரச்சினையை ஊர்ஜிதம் செய்கிறபோது, இயற்கையான சூரிய ஒளியில் மட்டுமே அதைச் செய்ய முடியும் என்பது விஞ்ஞான ரீதியாக இருக்கிற உண்மை; நடைமுறையும்கூட. இன்னும் சொல்லப்போனால், செயற்கையான ஒளியில் வைத்து அதைச் செய்வதன் மூலமாக, துல்லியமாக அதைக் கணிக்க முடியாது என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை. இன்னும் சொல்லப்போனால், நாம்கூட கடைகளிலே துணிகளைத் தேர்ந்தெடுக்கிறபோது, அவர்கள் அந்த ஒளிவிளக்குகளைப் போட்டுவிடுகிறார்கள். துணிகளை வாங்கியபிறகு–அங்கே பார்க்கிறபோது ஒரு கலராகத் தெரியும்–வீட்டிற்கு வந்து பார்த்தால் அது வேறு கலராகத் தெரியும். எனவே சூரிய ஒளியில், இயற்கையான ஒளியில்தான் அந்த காயத்தினுடைய தன்மையை வைத்து, நிற மாற்றத்தை வைத்து, சம்பவ நேரம், சம்பவம் எப்போது நடந்தது என்பதை எல்லாம் துல்லியமாகக் கணிக்க முடியும். இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து கடைப்பிடித்துவருகிற நடைமுறை. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில்கூட ஒரு வழக்கு போடப்பட்டது. ஆனால், அந்த வழக்கிலே, உச்ச நீதிமன்றம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, முடிந்த அளவிற்கு பிரேதப் பரிசோதனையை இரவிலே தவிர்க்க வேண்டும் என்று சொல்லி, அதாவது சூரிய உதயத்திற்குப் பிறகு சூரிய அஸ்தமனத்திற்கு முன்பாக பிரேதப் பரிசோதனையை முடித்து விடவேண்டும் என்று அவர்கள் உத்தரவேகூட கொடுத்துவிட்டார்கள். எனவே, சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு சாத்தியம் இல்லை. (குறுக்கீடு) ஆமாம். பிற்பகல் 5.30; அதாவது சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு, சூரிய உதயத்திற்குப் பின்பு இந்தக் காலக் கட்டத்திற்குள் முடித்துவிட வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு. எனவே, அதனால்தான் சட்டத்திருத்தம் கொண்டுவருவதற்கு வாய்ப்பில்லை.

[2002 ஏப்ரல் 29

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**251—**

## குடிநீர் ஆதாரம்

***2781—திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர், வேப்பந்தட்டை ஒன்றியங்களில் குடிநீர் ஆதாரமே இல்லாத பகுதிகளை இனம் கண்டு குடிநீர் ஆதாரத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் ஒன்றியத்தில் 10 குடியிருப்புகள், வேப்பந்தட்டை ஒன்றியத்தில் 15 குடியிருப்புகள் நீர் ஆதாரம் இல்லாத குடியிருப்புகள் எனக் கண்டறியப்பட்டு அந்தக் குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களில் முறையே பெரம்பலூரிலே 10 பகுதிகளிலும், வேப்பந்தட்டையிலே 15 பகுதிகளிலும் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கி குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், பெரம்பலூர் பகுதியிலே இருக்கின்ற 20 ஊராட்சிகளிலும், வேப்பந்தட்டை பகுதியிலே இருக்கின்ற 29 ஊராட்சிகளிலும் இருக்கின்ற கிராமக் குடியிருப்புகள் அனைத்திலுமே தற்சமயம் கோடைக் காலம் தொடங்குகின்ற இந்த நேரத்திலேகூட குடிநீர் பற்றாக்குறை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலே வறட்சி நிவாரண நிதி அதிகம் ஒதுக்கியும், மழைநீர் சேமிப்புத் திட்டத்தின் மூலம் அதிக நிதி



2002 ஏப்ரல் 29]

ஒதுக்கியும்—பெரம்பலூர் நகரத்திலே காவிரி கூட்டுக் குடிநீரைக் கொண்டுவருகிற திட்டம் சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டும், கொஞ்சம் மந்தமான நிலையில் அந்தப் பணி நடந்து வருவதால், பெரம்பலூர் பகுதி மக்கள் காவரி குடிநீரைப் பெறுவதற்கு கொஞ்சம் தாமதமான சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—பெரம்பலூர் நகரத்திற்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தியும், பெரம்பலூர், வேப்பந்தட்டை பகுதிகளுக்கு மேலும் அதிக நிதியை ஒதுக்கியும், குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கித் தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி திட்டத்தை விரைவிலே செயல்படுத்தி முடிப்பதற்கும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கேட்டு, எந்தெந்தப் பகுதி குடிநீர் இல்லாத வறட்சிப் பகுதி என்பதையெல்லாம் அறிந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி, விரைவிலே அந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெரம்பலூர் பகுதியைப் பொறுத்தவரையில், அதே தாலுகாவைச் சார்ந்த வேப்பூர், ஆலத்தூர் ஒன்றியத்திலே, என்னுடைய வரகூர் தொகுதியிலே இதேபோல குடிநீர் ஆதாரம் இல்லாத பகுதிகளை இனம் கண்டு—ஏனென்றால் வரகூர் தொகுதி என்றாலே வறட்சியான ஒரு பகுதி; நேற்று நாங்கள் சுற்றுப்பயணம் போன நேரத்திலே, நிறைய இடங்களிலே குடிநீர் இல்லை என்கின்ற ஒரு பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது—அந்த இடங்களுக்கு எல்லாம் இம்மாதிரி குடிநீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்து

[2002 ஏப்ரல் 29

அந்தப் பகுதிகளுக்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே நடவடிக்கை எடுத்து துரிதமாக ஏற்பாடு செய்வாரா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய நியாயமான கருத்துகளை இந்த அரசு ஏற்று, விரைவிலே அந்தப் பகுதிக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரையும், துணைத் தலைவரையும் கவனியுங்கள். (சிரிப்பு)

வினா எண் 252. திரு. மு. கார்த்தி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

**252—**

**காவிரி குடிநீர்**

***3495—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 6-வது கோட்டம், தந்தை பெரியார் நகரில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் இதுவரை நிரப்பப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காவிரி குடிநீர் நிரப்புவது எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் மாநகராட்சியினுடைய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி ஊராட்சிப் பகுதியாக இருந்து மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி. அந்தக் குறிப்பிட்ட



2002 ஏப்ரல் 29]

நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றுவதற்கு அந்தப் பகுதியிலே காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு சுமார் 24.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நிலை-2 என்ற தலைப்பில் பணிகள் துரிதமாக நடந்துகொண்டு வருகின்றன. இந்தத் திட்டம் முழுமையாக முடிவு பெற்றதற்குப் பின்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தொட்டியில் தண்ணீர் ஏற்றப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி 6-வது கோட்டத்திற்கும், 5-வது கோட்டத்திற்கும் இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை. அந்தப் பகுதிக்கு செட்டிசாவடி ஊராட்சிப் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து இதுவரை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக 6-வது கோட்டம், சின்னகுளப்பட்டி தந்தை பெரியார் நகர் பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் தொட்டியும், அதேபோல 5-வது கோட்டத்திலே கோருமேடு பகுதியிலே, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும் இருக்கின்றன. இவற்றைக் கட்டி கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை அந்தத் தொட்டியிலே பாதுகாக்கப்பட்ட குடிநீரோ அல்லது வேறு தண்ணீரோ ஏற்றப்படவில்லை. அந்தத் தொட்டி இதுவரை காலியாகவே உள்ளது. அதேபோல அந்தப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிற காரணத்தால் சென்ற 22-04-2002, 28-04-2002 ஆகிய தேதிகளிலே ஏற்காடு சாலையில் மறியல் செய்து மிகப் பெரிய போராட்டங்கள் நடந்தன. ஆகவே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல அந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டுதான் நிதி ஒதுக்கப்பட்டு, 4 இடங்களிலே தொட்டி அமைக்கும் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டு அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்களா, அந்தப் பணி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிவதோடு அந்தப் பகுதிகளுக்கு இப்போது இருக்கின்ற ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கும், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கும் தண்ணீர் வழங்குவதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல ஊராட்சிப் பகுதியிலிருந்து மாநகராட்சி எல்லையில் சேர்க்கப்பட்ட புதிய பகுதியாகும். அந்தக் குறிப்பிட்ட இரண்டு தொட்டிகளில் தண்ணீர் ஏற்றுவதற்குப் புதிய திட்டத்தின் மூலம் பணிகள் நிறைவு பெற்ற பின்புதான் நீர் ஏற்றப்படும் என்று துறையின் மூலமாகத் தகவல் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி அந்தப் பகுதிக்கு விரைவிலே தொட்டியில் தண்ணீர் ஏற்றுவதற்கு வேறு வகையான திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்த முடியுமா என்பதைத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி விரைவிலே அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் வசதி கிடைப்பதற்கு வேண்டிய விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு 18 நீர்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்காக 24 கோடி ரூபாய் சென்ற ஆட்சியிலே நிதி ஒதுக்கப்பட்டது. இதுவரை 4.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். அதனால் அந்தப் பகுதியிலே 4 தொட்டிகளுக்கு மட்டும்தான் பணி நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு கண்டிப்பாக மாநகராட்சியிலே புதிதாக சேர்க்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கி, இந்த ஆண்டிலாவது அந்த நீர்நிலைத் தொட்டிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை மீண்டும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததற்கு உண்டான சரியான தகவல் இல்லை. அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கு சேலம் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்ற முழு விவரம் கிடைத்ததற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விரிவான விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 253, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 29]

**253—**

**கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடம்**

***2111—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்தில் உள்ள 4,589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 855 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மட்டுமே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றில் 359 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றது.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**254—**

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

***18634—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தாட்கோ மூலம் கடனுதவி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் 300 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களில் 115 குழுக்களுக்கு கடந்த 25-3-2002 அன்று தாட்கோ மூலம் பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் 1,725 மகளிர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களுக்கு மொத்தம் ரூ.33.41 இலட்சம் மானியமாகவும், ரூ.23.98 இலட்சம் விளிம்புத் தொகையாகவும் மற்றும் ரூ.72.19 இலட்சம் பருவக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில்தான் ஆதிதிராவிடர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். ஆதிதிராவிடப் பெண்கள் மட்டும் சுமார் 2 இலட்சம் பேர் உள்ளார்கள். இவர்கள் மேலும் பயன்பெறுகின்ற வகையில் தாட்கோ மூலம் 5 கோடி ரூபாய் மானியம் அளித்து, இவர்கள் சுய தொழிலை மேற்கொள்ள அரசு ஊக்கமளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் 10-க்கும் மேற்பட்ட 20 பெண் உறுப்பினர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் செயல்படுவதற்கு அரசாணை நிலை எண் 11, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 4-2-2002-ல் ஆணையிடப்பட்டு உள்ளது. சுய உதவித் தொழில் குழுக்கள் சுயமாகச் செயல்படும் வகையில் நிதி ஆதாரங்களைச் சேமிப்பின் மூலமாக உருவாக்குவது, கல்வி, சுகாதாரம், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம் போன்றவற்றில் சமுதாய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பது தவிர இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, வருமான நிலைமையில் முன்னேற்றம் காண்பது, சுய வேலைவாய்ப்பை உருவாக்குவது ஆகியவை இதன் நோக்கங்கள் ஆகும். சுய உதவிக் குழுக்கள், கிராம அளவில் ஏழை மக்களுக்காகப் பாடுபடும் ஓர் அதிகாரம் வாய்ந்த, சமுதாய பொருளாதார நிலைமைகளை மாற்றுகின்ற, ஓர் அமைப்பு ஆகும். தாட்கோவில் தற்போது வழங்கப்பட்டு வரும் தனி நபர் பயன்பாடுகள், சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்டு உள்ளன. ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிலை. திட்ட மதிப்பீடு ரூ.6,000 முதல் ரூ.7,50,000 வரை. மானியம் திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது உயர்ந்த பட்சமாக ரூ. 2.50 இலட்சம். சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு திட்ட மதிப்பீட்டில் 5 சதவிகிதம். பருவக் கடன் மொத்தத் திட்ட அலகில் 45 சதவிகிதம். பழங்குடி மகளிர் சுய உதவி குழுக்களின் நிலை. திட்ட மதிப்பீடு ரூ.6,000 முதல் ரூ.7,50,000 வரை. மானியம் திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம். சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு திட்ட மதிப்பீட்டில் 5 சதவிகிதம். பருவக் கடன் மொத்த மதிப்பீட்டில் 45 சதவிகிதம்.



2002 ஏப்ரல் 29]

நீலகிரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கடன் வழங்கப்பட்ட விவரங்கள்: நீலகிரி மாவட்டத்தில் 300, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முனைப்போடு செயல்பட்டதன் காரணமாக 115 குழுக்களுக்கு தாட்கோ மூலமாகக் கடன்கள் வழங்கப்பட்டன. 25-3-2002-ல் தாட்கோ மூலம் மானியம் மற்றும் விளிம்புத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளன. சுமார் 25 விழுக்காட்டுக்கு மேல் சொத்துக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இக்குழுக்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. ஒரு குழுவிற்குத் தோராயமாக 15 உறுப்பினர்கள் வீதம் 115 குழுக்களுக்கு சுமார் 1,725 உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளார்கள். அவற்றின் விவரங்கள்: மளிகைக் கடைகள் வைக்க....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், கேட்டதற்குப் பதில் சொன்னால் போதும். எல்லா விளக்கமும் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பயனாளிகள், எத்தனை குழுக்கள் பயன் அடைந்தன என்ற விவரங்களை நான் அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மளிகைக் கடைகள் வைக்க-20 குழுக்கள்; சிறு பால் பண்ணைகள் வைக்க-12 குழுக்கள்; ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, தையல் தொழில்-7 குழுக்கள்; பல சரக்கு அங்காடி-7 குழுக்கள்; டீ எஸ்டேட் குத்தகைக்கு எடுத்தல்-28 குழுக்கள்; தைலம் காய்ச்சுதல்-3 குழுக்கள்; சிறு வாகனங்கள்-2 குழுக்கள்; பேன்சி ஸ்டோர்ஸ்-1 குழு; உல்லன் ஆடை பின்னுதல் தொழில்-1 குழு; மிதியடி கடை-2 குழுக்கள்; இரும்புக் கடை-1 குழு; சோப்பு பினாயில் தயாரிப்பு-1 குழு; டீப்பை தயாரிப்பு-2 குழுக்கள்; சிறப்பு அங்காடிகள்-1 குழு; வெண்ணெய் தயாரிக்கும் யூனிட்-1 குழு; பாத்திரம், கம்பளிக்

[2002 ஏப்ரல் 29

கடை-1 குழு; ரேஷன் கடை, கூட்டுறவுத் துறை-2 குழுக்கள்; காய்கறி உற்பத்தி பயிரிடுதல்-17 குழுக்கள்; ஆவின் பால் விற்பனை-1 குழு; கூடை, துடைப்பம் தயாரித்தல்-1 குழு; பூ, மலர் சாகுபடி விற்பனை-3 குழுக்கள் உணவகம் நடத்துதல்-1 குழு; ஆக மொத்தம் 115 குழுக்கள். 25-3-2002-ல் நடந்த கடன் வழங்கும் விழாவிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அந்த அளவுக்கு நீலகிரி மாவட்டத்தில் மகளிர் சிறப்பான முறையில் பயன்பெற்று வருகிறார்கள். இன்னும் அவர்கள் கேட்கின்ற, அவர்கள் நினைக்கின்ற அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் 25-3-2002-ல் நீலகிரிக்கு வந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடனுதவி வழங்கினார்கள். மீதம் உள்ள 115 குழுக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. சாதாரணமாக இந்தக் கடன்களை தாட்கோ மூலம் வழங்கும்போது அதிக அளவில் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்தை நீக்கும் வகையில், உடனடியாக அந்தக் கடன்களைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, குடும்பத் தலைவர்கள் 'எல்லாம் சுய உதவிக் குழுக்கள் வந்த பிறகு எங்களை எல்லாம் இந்த அரசு கவனிக்கமாட்டேன் என்கிறது' 50 விழுக்காடாவது எங்களுடைய பெயரில் கடன்கள் வழங்க வேண்டுமென்று, கேட்கிறார்கள். அரசு இதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற நிதிகள், கடன்கள் எல்லாம் நேரடியாகப் பயனாளிகளுக்குச் சென்று அவர்களும் உரிய முறையில் பயன்பெற்று வருகின்றார்கள். ஆகவேதான், இப்படிப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அனைவருக்கும் கிடைக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கிறது.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 115 குழுக்களுக்கு விளிம்புத் தொகை, மானியம் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். கடன் தொகை வழங்குவது வங்கிகளுடைய பொறுப்பில் இருக்கிறது. அமைச்சரவர்கள் வருகின்றபோது நடக்கின்ற நிகழ்ச்சிகளில் வங்கிகள் தாராளமாகக் கடன்களை வழங்கி வருகின்றன. ஆனால், நம்முடைய அமைச்சர் குறிப்பிட்டதைப்போல, அந்த 115 குழுக்களுக்கும் 72 இலட்சம் ரூபாய் கடன் என்று சொன்னார்களே, அவற்றை வங்கி முழுமையாக வழங்கிவிட்டதா? அதன் மீது எத்தனை குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கியிருக்கிறது? வங்கி வழங்காமல், நம்முடைய தாட்கோ விளிம்புத் தொகையும், மானியமும் வழங்கியதோடு மட்டுமல்லாமல், அந்தக் கடன் பெறாமல் நிலுவையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியம் மற்றும் விளிம்புத் தொகை தாட்கோ மூலமாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, வங்கிகள் மூலமாக, கடன்களையும் சேர்த்து பயனாளிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பயனாளிகள் கடனை வாங்கும்போது, அனைத்துத் தொகையையும் வாங்கி விடுகிறார்கள். திரும்பச் செலுத்துகின்ற நேரத்தில் வங்கிகள் சில, அவர்களுக்குள்ள கடனை மட்டும் திரும்ப Refund collection-ஐப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் தாட்கோவிற்குச் செலுத்தக்கூடிய விளிம்புத் தொகையை collection பண்ணுவதற்குத் தாமதம் ஆகிறது. அவற்றையெல்லாம் நேரடியாக அந்தப் பயனாளிகள் கண்டிப்பாக திரும்பச் செலுத்தும்போது. மேலும் மற்ற பயனாளிகளுக்குக் கடன் வழங்குவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே, வாங்கும்போது எப்படி மானியத்தையும், விளிம்புத் தொகையையும் பெறுகிறோமோ, அதுபோல், திரும்பச் செலுத்துவதற்கும் பயனாளிகள் முன்வந்து செலுத்த வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. பாரமலை அவர்கள் இதை முன்னின்று செய்தால் மீண்டும் மற்ற பயனாளிகள் கடன் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும், சுய உதவிக் குழுக்கள் மூலமாகக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி கூறுகிறேன். ஆனால் அதேநேரத்தில், பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக திருவள்ளூர் மாவட்டத்ில்கூட, அதிகமான சுய உதவிக் குழுக்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறபோது தாட்கோ மூலம் மானியத்தையும் margin money-யையும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், பொதுத் துறை வங்கிகள் மறுக்கின்றன. இதுசம்பந்தமாக நான் ஏற்கெனவே சிறுதொழில் துறை மானியத்தின்போது தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்— தாழ்த்தப்பட்ட மக்களுடைய வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள்— பொதுத் துறை வங்கிகளை அழைத்துப் பேசுவதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், அதேநேரத்தில், மாவட்டத்தில் உள்ள தொழில் கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த சுய உதவிக் குழுக்களுக்கு தாட்கோ மூலம் கடன் வழங்கப்படுமா என்று தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்டு அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதுபோல, அரசு அனைத்தையும் அனைவருக்கும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதுபோல், சுய உதவிக் குழுக்கள் மூலமாக அதிகமான கடன்கள் கொடுக்கப்பட வேண்டும். வாங்குகின்ற கடனையும் மீண்டும் செலுத்த வேண்டும். சில வங்கிகள், அந்தக் கடனை சரியான முறையில் கொடுப்பதில்லை; விளிம்புத் தொகையையும், மானியத் தொகையையும் வாங்கி வைத்துக்கொண்டு, தாமதப்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது கடந்த தி.மு.க. ஆட்சியில், பயனாளிகளுக்கு முறையாகப் பயன்படாமல், அவர்கள் தவறான முறையில் பயன்படுத்தியதன் காரணமாக, அந்த வங்கிகள் மூலமாகக் கடன் பெற்றதன் காரணமாக வங்கிகளுக்குத் திருப்பச் செலுத்த முடியாத நிலையும் இருந்ததன் காரணமாக — இப்பொழுது ஏதோ தவறான கண்ணோட்டம், ஒரு கிராமத்தில் ஒருவர் கடன் வாங்கினால்,



2002 ஏப்ரல் 29]

அந்தக் கிராமத்தில் அந்த ஊரில் அவர் இருப்பதில்லை, கடன் திரும்பச் செலுத்துவதில்லை என்கிற தவறான கண்ணோட்டத்தின் காரணமாக — வங்கிகளில் கடன் இப்பொழுது கொடுப்பதற்கு தாமதமாகியும், மறுக்கப்பட்டும் வருகிறது. இவற்றையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நேர்மையான முறையில் உரிய பயனாளிகளுக்குக் கடன் வழங்கி அவர்கள் பயன் பெற வேண்டுமென்கிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் வங்கிகள் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 255, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**255—**

**பேருந்து இயக்குதல்**

***4895—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றதால், அங்கு பக்தர்கள் அதிக அளவில் வருகின்றனர்.

[2002 ஏப்ரல் 29

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்கேற்ப, வருங்காலத்தில் புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் தோரணமலை என்ற ஊர், அம்பாசமுத்திரம்—தென்காசி பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அங்கு அமைந்துள்ள அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்கு திருவிழாக் காலங்களில் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மற்ற நாட்களில் போதுமான பயணிகள் இல்லாது இருந்ததால், நிரந்தரப் பேருந்து வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை. தற்போது திருக்கோயிலுக்கு தனியார் சிற்றுந்து ஒன்றின் மூலம் 14 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அரசு போக்குவரத்துக் கழகம் மூலம், மேலும் தோரணமலைக்குப் பேருந்து எதுவும் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோரணமலை முருகன் கோயில் என்பது எனது தொகுதியின் முடிவிலும், தென்காசி தொகுதியின் ஆரம்பத்திலும் இருக்கிறது. இந்த தோரணமலை முருகன் கோயிலுக்கு அருகில் இராம நதி அணை ஒன்று உள்ளது. இந்த இராம நதி அணையை ஒட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் உள்ளன. அந்த விளைநிலங்களுக்கு மேட்டூர், வாய்க்கால்பட்டி போன்ற பல பகுதிகளிலுள்ள தாய்மார்கள் மினி பஸ் மூலம் தினசரி சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த மினி பஸ் காணாவூர் வரை செல்கிறது. அதிலிருந்து 1 கி.மீ., 2 கி.மீ. தூரம் போனால் இந்த தோரணமலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் திருவிழாக் காலங்களில் நமது அரசாங்கத்தின் மூலம் சிறப்புப் பேருந்துகளை விட்டாலும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகன் கோயிலுக்கு ஒரு கி.மீ. நடந்து போகவேண்டியதுதானே? (சிரிப்பு)



2002 ஏப்ரல் 29]

**திரு. எம். சக்திவேல் முருகன்:** ஏற்கெனவே மலையிலிருந்து 5 கி.மீ. நடக்க வேண்டியிருக்கிறது. மலை உச்சியில் இருக்கிறது. அங்குள்ள படிக்கட்டில் ஏறுவதற்கே ஒன்றரை மணி நேரம், இரண்டு மணி நேரம் ஆகும். நடந்து செல்வது என்பது உடலுக்கு நன்மையாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தினசரி அந்தப் பகுதிகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால் அந்த மினி பஸ்ஸை இராம நதி அணை வரைக்கும், தோரணமலை கோயில் அடிவாரம் வரைக்கும் extend செய்து கொடுத்தாலே பல்வேறு வகையில் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் என்பதால் நம்முடைய அருமை அண்ணாச்சி அவர்கள் கேட்ட கேள்வியில் என்னையும் இணைத்துக்கொண்டு எங்கள் பகுதியும் பயன்படுகிற வகையில் இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்து தருவதற்குப் பணிவோடு கேட்டு, செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த தோரணமலை கோயிலுக்குத் தனியார் சிற்றுந்து ஒன்று சென்று வருகிறது. ஆனால் ஒரே ஒரு கி.மீ. தூரத்திற்கு மட்டும் அந்த சிற்றுந்து வசதியை நீட்டித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுப்படையாக சிற்றுந்துகளுக்கு இப்போது ஓடிக்கொண்டிருக்கிற வழித்தடங்களிலிருந்து கூடுதலாக நீட்டித்துத் தருவதற்கு இன்னும் அரசு கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டியுள்ளது. ஆகவே கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதால், மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இதற்கு அனுமதி பெற்று, சிற்றுந்துக்கு கால நீட்டிப்பு, Route நீட்டிப்பு, அதாவது extension செய்து கொடுப்பதுபற்றி முடிவு எடுக்கும்போது இதைப் பற்றியும் சிந்திப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவரைக்கும் நடராஜா பஸ்ஸில் ஒரு கி.மீ. செல்லுங்கள். (சிரிப்பு)

வினா எண் 256, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 29

முற்பகல் 10-50

**256—**

**துணை மின் நிலையங்கள்**

***19358—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரின் மின்சாரத் தேவைக்கேற்ப அங்கு துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் நகரில் ஏற்கெனவே நான்கு துணை மின் நிலையங்கள் உள்ளன. இருப்பினும், திருப்பூர் நகரின் மின்சாரத் தேவையைக் கருதி, மண்ணரை, நல்லூர், ஆண்டிப்பாளையம் ஆகிய மூன்று இடங்களில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையங்களையும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அமைப்பதற்கான கருத்துரு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு மின் கட்டணமாக பத்து கோடி ரூபாயைச் செலுத்துகின்ற திருப்பூர் நகருக்கு, மண்ணரை, நல்லூர், ஆண்டிப்பாளையம் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதோடு செட்டிபாளையம், அருள்புரம் போன்ற பகுதிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கோவை மாவட்டத்தில் மின்சாரத் துறையினுடைய S.E. ஆபீஸ் மூன்று இருக்கின்றன. மூன்றும் கோவை மாநகரத்திலேயே இருக்கின்றன. அதிலே கோவை S.E. (தெற்கு) என்பது திருப்பூர், பல்லடம், சோமனூர், குனியமுத்தூர் போன்ற பகுதிகளுக்கு உட்பட்டதாகும். S.E. (வடக்கு) என்பது வடவள்ளி, துடியலூர், மேட்டுப்பாளையம், அவினாசிக்கு உட்பட்டதாகும். திருப்பூர் கோட்டாட்சியருடைய எல்லைக்குட்பட்ட திருப்பூர், பல்லடம், சோமனூர் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற S.E.



2002 ஏப்ரல் 29]

(தெற்கு) ஆபீசிலே இருக்கின்ற குனியமுத்தூரை S.E. (வடக்கு)-க்கு மாற்றிவிட்டு, அதிலே இருக்கின்ற அவினாசியை S.E. (தெற்கு)-லே மாற்றி, S.E. (தெற்கு) ஆபிசை, கோவை மாநகரிலே இருப்பதை, திருப்பூர் நகரிலே மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதிக்கு நான் இரண்டு S.E.-க்களிடம் போகவேண்டியிருக்கிறது. எனவே, கோவை மாநகரிலே இயங்கி வருகின்ற அந்த மூன்று S.E. ஆபீஸ்களில் ஒன்றைத் திருப்பூர் மாநகருக்கு மாற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 257, திரு. லா. சந்தானம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**257—**

**தொழிற்சாலை**

***3111—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் பூக்கள் அதிகமாக விளைவதால் உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில், உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக்கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 29

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி விவசாயிகள் மிகுதியாக வாழ்கின்ற பகுதி. இன்றைக்கு வறட்சியின் காரணமாக பல கிணறுகளில் கிணற்றடி நீர் மிக ஆழமாகச் சென்றுவிட்ட காரணத்தினால் அங்கு இயற்கையாகச் செய்து கொண்டிருந்த பருத்தி, கடலை, நெல் போன்ற விவசாயங்கள் எல்லாம் இன்றைககுச் செய்யமுடியாத நிலையில் குறைந்த நீராதாரத்தைக் கொண்டு பூச்செடிகளை வைத்து, அதன் மூலமாகத்தான் விவசாயத்தை அந்தப் பகுதி மக்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது தங்களுக்கும் தெரியும். மல்லிகை என்றால் மதுரை மல்லிகைக்குத்தான் மிகப் பெரிய மரியாதை தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த மதுரை மல்லிகையைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தருவதற்கு— உசிலம்பட்டி என்பது மிகப் பின்தங்கிய பகுதி. நீண்டகாலமாக அரசுத் துறையிலே ஏதாவது ஒரு தொழிற்சாலையை அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும், விவசாயிகளுக்கு ஆதரவாக ஒரு தொழிற்சாலை வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த 55 ஆண்டுகாலமாக அது நடைபெறவில்லை — இந்த ஆட்சியிலேயாவது அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையோடு அங்கு வாசனை திரவியம் தயார் செய்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், தற்போது தொழிற் கூட்டுறவுத் துறையின் மூலம் சென்ட் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலை ஏதும் செயல்படவில்லை. தவிர சென்ட் தொழிற்சாலைக்கென சிறப்பு மானியம் எதுவும் அரசால் வழங்கப்படுவதும் இல்லை. இருப்பினும், தொழிற்சாலை அமையும் இடம் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்குமானால், அவர்களுக்கு மாநில மூலதன மானியம் மற்றும் மின்சார மானியம் போன்றவைகள் வழங்கப்பட்டு, தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, மாண்புமிகு



2002 ஏப்ரல் 29]

புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, மீண்டும் அவர்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீ மல்லிகைப் பூவைச் சூடிக்கொண்டால் ரோஜாவுக்குக் காய்ச்சல் வரும்' என்று ஒரு கவிஞர் பாட்டு எழுதினார். அந்த மல்லிகை போட்டிபோட்டு வளரும் இடம் திருமங்கலம். சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். ஆனால் திருமங்கலத்திலே ரோஜாவுக்குக் காய்ச்சல் வருவதில்லை. அது மீண்டும் மகிழ்ச்சியோடு, மலர்ச்சியோடு பூத்துக் குலுங்குகிற காட்சியை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். மரிக்கொழுந்தும் பூத்துக் குலுங்குகிறது, மனோரஞ்சிதமும் ஏராளமாக விளைந்து கொண்டிருக்கிறது. ஆனால் எவ்வளவுதான் தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தாலும்— மலர்களுக்குத் தேவையான அளவிற்கு பூமியிலேயிருந்து அடியில் நீர்வளம் கொஞ்சம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே— இந்த மலர்கள் எல்லாம் நிறைய மதுரைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஏராளமான மலர்கள் சென்னைக்கு விமானம் மூலம் கொண்டு வந்து இங்கே விற்பனைக்கு வருகிறது. ஆகையாலே அதிகப்படியான அளவிலே மலர்கள் பூத்துக் குலுங்குகிற திருமங்கலம் தொகுதியில் ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலையைத் தொடங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதற்கு ஆதாரமாக நிதியமைச்சர் சொன்ன ஒரே ஒரு விஷயத்தை நினைவுபடுத்துகின்றேன். ஒரு யூனியனுக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று சொல்கிறீர்கள். ஆக எங்கள் திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதியில் — பேரவைத் தலைவருடைய தொகுதியிலே 2 யூனியன், ஒரு முனிசிபாலிட்டி. 3 கோடியாகச் சேர்த்து வைத்து — ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலையை நிறுவினால் ஏராளமான விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும். மலருக்கும் மரியாதை. ரோஜாவும் பூக்கும். மல்லிகையும் காய்ச்சல் இல்லாமல் காய்க்கும். நல்லபடியாக மக்களுக்கும் வாழ்வு சிறக்கும். ஆகவே அப்படி ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துகள் அனைத்தும் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் எழுப்பி இருக்கக்கூடிய இந்தக் கேள்வியினுடைய முக்கிய சாரம் திண்டுக்கல், மதுரை, உசிலம்பட்டி பகுதிகளில் பெண் சிசுக் கொலை மற்றும் கருக்கொலை தொடர்ந்து நடக்கிறது. தொழிற்சாலைகள் எதுவுமே இல்லை. விவசாயமும் பொய்த்துப்போன நிலை. இத்தகைய சூழ்நிலையில் இந்தக் குற்றங்களுக்கு அடிப்படையான காரணமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே இந்த வாசனை திரவியத் தொழிற்சாலையை அமைப்பதற்கு கூடுதல் முக்கியத்துவத்தைக் கொடுத்து எதிர்காலத்தில் நீங்கள் பரிசீலிப்பீர்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்ந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஆர். ராஜாங்கம், சோழவந்தானிலே வேண்டுமா?

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் விளைந்தாலும், திருமங்கலத்தில் விளைந்தாலும் விற்பனையாவது மதுரையில்தான். ஆகவே மதுரையில் ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலையை நிறுவினால் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் விதத்தில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி அமைச்சர் அவர்களுக்கு ஆணையிடுவார்களா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்ட உறுப்பினர்களுக்கு அளித்த பதிலைப்போல மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கும் அரசு ஆய்ந்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**258—**

### அரசு ஊழியர் குடியிருப்பு

***7532—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை அரசு அமைத்துத் தருமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் அங்கே இயங்கி வருகின்றன. வீடுகள் கிடைக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே நகரங்களிலேயிருந்து அரசு அலுவலர்கள் அங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை leave என்பதால் leave-ல் செல்கின்றவர்கள் திங்கட்கிழமை வராமல் இருந்துவிடுகிறார்கள். நிதிநிலை இல்லாத காரணத்தினாலே இப்போது இல்லை என்று பதில் சொன்னாலும், கொடுக்கின்ற எண்ணத்தைப் படைத்த புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் அடுத்த நிதியாண்டிலாவது அரசுக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் ஒரு பிர்கா

[2002 ஏப்ரல் 29

என்பதால் இவ்விடத்தில் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் செயல்படுத்த இயலாது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இந்த அவை மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுப்பது என்பது மிக மிக முக்கியமான ஒன்று. மானாமதுரையை எடுத்துக்கொண்டால் அங்கு சிப்காட் வளாகத்திலே ஏறக்குறைய 50 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதற்குத் தொலைவிலுள்ள பல ஊர்களிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அதுவும் இப்போது கொஞ்சம், கொஞ்சமாக குறைந்து 19 தொழிற்சாலைகள்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்ட வேண்டும் என்று 1984 ஆம் ஆண்டிலேயிருந்து அந்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு 17 ஆண்டுகளுக்குப் பின்னாலும் அது நடைபெறவில்லை. அது ஒரு வட்டம். திருப்பத்தூர் என்பது பிர்கா அல்ல, அது ஒரு வட்டம், தாலுகா. அதைப்போல மானாமதுரை என்பது ஒரு தாலுகா. அங்கே சிப்காட் வளாகத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்காவது அரசின் சார்பிலே நம்முடைய Housing Board மூலமாக வீடு கட்ட முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிதி நிலைமையினைக் கருத்தில்கொண்டு பிர்கா பகுதிகளில் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்கான சாதகமான சூழ்நிலையில்லை என்பதை பேரவைத்



2002 ஏப்ரல் 29]

தலைவர் மூலம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பாரமலை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரியத்தால் சென்னை போன்ற நகரங்களில் கட்டப்பட்ட வீடுகள் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான வீடுகள் விற்கப்படாமல் இருக்கின்றன. அப்படி விற்கப்படாமல் இருக்கின்ற வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகளை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, தனிக் கேள்வி போடவும். அமைச்சரிடம் பதில் இல்லை. திரு. கே.கே. உமாதேவன்.

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது பிர்கா என்று சொன்னார்கள். அது திருப்பத்தூர் தாலுகா என்ற அமைப்பில் அதே திருப்பத்தூர் தாலுகாவைச் சேர்ந்த சிங்கம்புணரி என்ற பேரூராட்சியில் அரசு அலுவலகம் கட்டப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது தாலுகா அலுவலகம் இருக்கின்ற இடத்தில் அரசுக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஒரு பிர்கா என்பதால், அங்கு மாவட்டத் தலைமையிடமும் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடமும் இல்லாததன் காரணத்தினால் அரசு இதுபற்றிச் சிந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வட்டம் என்று சொல்கிறார். தனியாக எழுதிக் கொடுங்கள்.

வினா எண் 259, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 29

**259—**

### மீன்பிடித் துறைமுகம்

***7537—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் 1965 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட மீன்பிடித் துறைமுகத்தை உடனே நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் கடற்கரையையொட்டி பாறைகள் அதிகமாகவும் கடலில் செங்குத்தான சரிவும், ஆக்ரோஷமான அலைகளும் இருப்பதால், அப்பகுதியில் குறைந்த செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தென்கோடி எல்லையான கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோர கிராமங்களின் மையமான குளச்சல் வரலாறு படைத்த ஓர் இயற்கைத் துறைமுகமாகும். கடந்த காலங்களில் குளச்சல் துறைமுகம் வழியாக கப்பல்கள் வந்து ஏற்றுமதி-இறக்குமதி பணி நடைபெற்றுள்ளது. இந்தப் பகுதியில் சுமார் 1500 விசைப் படகுகள் உள்ளன. மற்றும் கட்டுமரங்களும் உள்ளன. அங்குள்ள மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு துறைமுக வசதியோ தங்குதள வசதியோ இல்லாத சூழ்நிலையில், அப் பகுதி விசைப் படகுகள் கேரள மாநிலத்தில் தொழில் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து கொல்லம் நீண்டகரை மீன்பிடித் துறைமுகத்தைத் தங்குதளமாகக் கொண்டு மீன் பிடித்துவந்ததை, கொல்லம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தடைசெய்து விசைப் படகுகளை வெளியேற்றினார். பின்பு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரும் மீனவர் பிரதிநிதிகளும் கொல்லம் சென்று பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தப் பலனும் ஏற்படவில்லை. குளச்சல் கடற்கரைப் பகுதியில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சுமார் 15 கோடி மதிப்புள்ள மீன்களைப் பிடித்து வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். குளச்சலிலிருந்து சுமார் 20 கடல் மைல் தூரத்தில்தான் மீன்கள் அதிகமாக வாழும் வெட்ஜ்பேஸ் என்கிற மீன்கள் உறைவிடம் உள்ளது. இந்தத் துறைமுகம் அமைக்கும் திட்டம் 1965-ல் பூண்டி ஆராய்ச்சி மையத்தால் ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து நலத் திட்டங்களை வழங்குகின்றபோது குளச்சலில் மீன்பிடித் துறைமுகத்திற்கு முதற்கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்து ஆய்வு செய்ய அறிவித்தார்கள். இதன் அடிப்படையில் பெங்களூரில் உள்ள மத்திய கடலோர பொறியியல் ஆய்வு மையம் ஆய்வு செய்து மீன்பிடித் துறைமுகம் அமைக்கலாம் என அறிக்கை வெளியிட்டது. கடந்த 19 ஆம் தேதியன்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்தபோது அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். இந்நிலையில் 1996-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது தி.மு.க. ஆட்சியினர் இந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டனர். எனவே, மீனவர்கள் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர் மத்திய கடல் பொறியியல் ஆய்வு மையம் குளச்சல் துறைமுக இடத்தைப் பார்வையிட்டு குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சுமார் 93 கோடி ரூபாய் செலவாகும் என்று 1998 மே மாதம் அறிக்கை அளித்தது. இந்த அறிக்கைமீது 17-6-1999 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. குறைந்த செலவில் மீனவர்கள் பயன்பெறும் வகையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க முடியுமா என்று ஆராய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு 2-11-1999 அன்று தூத்துக்குடி மண்டல மீன் துறை இணை இயக்குநர், சென்னை மீன்பிடித் துறைமுக திட்ட வட்ட கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் நாகர்கோவில் மீன்பிடித் துறைமுக கோட்டப் பொறியாளர் ஆகியோர் குளச்சலை அடுத்துள்ள சைமன் காலனி, கோடிமுனை, வாணியகுடி மற்றும் தேங்காய்ப்பட்டினம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். மலேசியா அரசின் உதவியோடு குளச்சலில் வர்த்தகத் துறைமுகம் கட்ட தமிழ்நாடு கடல் சார் வாரியம் உத்தேசித்துள்ளது. இதுசம்பந்தமான கோப்பு அரசின் நெடுஞ்சாலைத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 29

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பது சம்பந்தமாக ஏற்கெனவே 1980-81 ஆம் ஆண்டு வாக்கில் இந்த மாமன்றத்திலே நானும் கேள்வியைக் கேட்டு ஓரளவுக்கு அன்றைக்கெல்லாம் ஒப்புதலைப் பெற்றோம். ஆனால், சமீபகாலத்திலே இந்தத் துறைமுகத்தை விரிவாக்கம் செய்கின்ற நிலை வந்தபோது நம்முடைய வர்த்தகத் துறைமுகம் என்று சொல்கின்ற அந்தத் துறைமுகத்தினுடைய பகுதியில் மீன் பிடித் துறைமுகம் கட்டுவது என்ற ஒரு முடிவுக்கு அன்றையதினம் வந்தார்கள். அந்த அடிப்படையில் இதை இலாபகரமாக நடத்துவதற்கு ஒரு பக்கத்திலே துறைமுகம், அதனுடைய பக்கத்திலே மீன்பிடித் துறைமுகம். இது இலாபகரமாக இருக்கும் என்பது மேலெழுந்த வாரியாக ஒத்துக்கொண்ட ஒரு கொள்கை. அந்த அடிப்படையில் செய்வோமானால், செலவு அதிகம் ஆகாது. அந்த இரண்டு கோரிக்கையும் ஏற்புடையதாக இருக்கும். இன்னொன்று, இதற்குத் தேவையான கரைப் பகுதி என்பதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதை இன்று அரசு கையகப்படுத்தி உள்ளதா? அதுபோன்றுதான் ஏற்கெனவே 6, 7 வருடங்களாகப் பேசப்பட்டு வருவது நம்முடைய தேங்காய்பட்டினம் தங்குதளம், மீன்பிடித் தங்குதளம். அவை எந்த அளவிலே இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எந்தெந்த இடத்திலே துறைமுகம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்காக—வருகின்ற மானியக் கோரிக்கையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கென்று ஒரு தனிச் செலவு ஏற்படுமென்ற அடிப்படையிலே ஒவ்வொரு இடத்திலும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக— ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எந்த இடத்திலே சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அந்த இடத்திலெல்லாம் அரசு அமைப்பதற்கு முன்வரும் என்பதை உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



2002 ஏப்ரல் 29]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேசிய நாட்டு அரசு, ஏற்கெனவே நம்முடைய அரசோடு பேசி அதற்கான Memorandum of Understanding-கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வர்த்தகத் துறைமுகம். அது நெடுஞ்சாலைத் துறைமுகம்.

**திரு. சி. ஞானசேகரன்:** வர்த்தகத் துறைமுகத்தோடு இதையும் ஒட்டி, இதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு அங்கு அரசு உறுதிமொழிக் குழு அந்த இடத்திற்கு போனபோதுகூட மக்கள் நிறையபேர் வந்து மனு கொடுத்தார்கள். இந்தத் துறைமுகத்தோடு சேர்த்து மீன்பிடித் துறைமுகத்தையும் குறைந்த செலவிலே கட்ட முடியும். அதற்கான வாய்ப்புகளையும் ஆராய்ந்து வர்த்தகத் துறைமுகத்துடன் சேர்ந்த இந்த மீன்பிடித் துறைமுகத்திற்கும் அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். காரணம், செலவு செய்யப்போவது மலேசிய அரசு. ஆகவே, அவற்றினுடைய உதவியோடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இதற்கென்று தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சொல்வது. வர்த்தகத் துறைமுகம். மலேசியா அரசு உதவியோடு நடப்பது வர்த்தகத் துறைமுகம். டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே ஒரு மீன்பிடித் துறைமுகம் வேண்டுமென்று வெகுகாலமாக ஒரு கோரிக்கை வைத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு தனிக் கேள்வி போடவும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக இந்த அவையிலும் சரி, வெளியிலும் சரி, தரப்பட்ட

[2002 ஏப்ரல் 29

உத்தரவாதம். அதன் அடிப்படையில் அங்கே துறைமுகம் என்று சொல்கிறபோது அவர்களுக்கு பல்வேறு வேலைவாய்ப்புக்காக அமைக்கப்படுகிற ஒரு முதலீடு. அப்படி நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டும். ஆண்டாண்டுதோறும் கன்னியாகுமரி மாவட்டத்தின் மீனவர்கள் கேரள மாநிலத்தில் மீன்பிடிக்கச் செல்கிறபோது — தமிழன், மலையாளி என்கிற பிரச்சினையில் ஆண்டுதோறும் ஒரு Law and Order problem உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆண்டிலே 6 மாதங்கள்தான் அங்கே மீன் பிடிக்க இயலுகிறது. மீதி 6 மாதங்கள் மீன் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை. எனவே, அதைக் கருத்திலே கொண்டு— ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 100 கோடி ரூபாய்க்கு மீன்பிடித் தொழில் நடந்து வருகிறது— அதை ஊக்குவிக்கின்ற முகத்தானும், தேங்காய்ப்பட்டினம் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு 60 கோடி ரூபாய்க்கு ஒரு துறைமுகம் தரலாம் என்று இந்த அவையிலே உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசுக்கு பல்வேறு சிரமங்கள் இருந்தாலும், பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும், பல்லாயிரக்கணக்கான மீனவர்களுடைய வாழ்வைக் கருத்திலே கொண்டு அந்தப் பகுதி மீனவர்களுடைய வாழ்விலே ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு பல ஆண்டுகளாக கிடப்பிலே இருக்கக்கூடிய தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு இந்த ஆண்டே அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை, இந்த ஆண்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கின்ற மீனவர்கள் கட்டுமரங்களிலே காற்று முனையை வைத்துத்தான் மீன் பிடிக்கிறார்கள். ஆனால், காற்று முனையை, மையமாகக் கொண்டிருக்கிறபோதுதான், கன்னியாகுமரி, இராமேசுவரம் ஆகிய இந்தப் பகுதிகளிலேயிருந்து, அனேகமாக கோடியக்கரையை



2002 ஏப்ரல் 29]

மையமாகக் கொண்டுதான் அதிகமான 'boat' இலட்சக்கணக்கில் வந்து மீன் பிடிக்கிற ஒரு தளமாக இருக்கிறது. அங்கே கட்டப்பட்டிருக்கிற துறைமுகத்தினுடைய ஜெட்டி உடைந்து பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அதனாலே 'boat-உடன் boat' அடித்து 'boat' உடைந்து, பல சேதாரமாகி, மீனவர்களுக்குள்ளேயே, உள்நாட்டு மீனவர்கள், வெளிநாட்டு மீனவர்கள் சண்டையெல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே கோடியக்கரை மீன் பிடிக்கும் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு அரசு இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குளச்சலிலேயிருந்து கோடியக்கரைக்குக் கொண்டு போய்விட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிடத்திலே துறைமுகம் கட்ட வேண்டுமென்றாலும், ஜெட்டி கட்ட வேண்டுமென்றாலும் அந்த இடத்தினுடைய அமைப்பு எப்படி இருக்கிறது என்ற சாத்தியக்கூறுகளைப் பார்த்துத்தான் அந்த இடத்திலே கட்ட வேண்டும். நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி அந்த இடத்திலே கட்டுவதற்கு முயற்சிக்கப்படும் என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது மீனவர்களை உள்நாட்டு மீனவர்கள், வெளிநாட்டு மீனவர்கள் என்று சொன்னார்கள். உள்நாட்டு மீனவர்கள், வெளிநாட்டு மீனவர்கள் என்பது இல்லை. Traditional fishermen and Mechanised fishermen என்றுதான் உள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்; மாற்றிக்கொள்கிறேன். அனேகமாக வேறு மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய மீனவர்கள் அதிகமாக அங்கே, கோடியக்கரைக்கு

[2002 ஏப்ரல் 29

வருகிறார்கள். ஆகவே, இரண்டு மாதங்கள் வருகிறார்கள். இந்த மாதம் முழுவதுமே கோடியக்கரைக்குத்தான் , அதிகமான மீனவர்கள் வருகிறார்கள். பல இலட்சம் பேர்கள் அங்கே, வந்து தங்கி மீன் பிடிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. அப்போதுதான் அந்தத் தகராறு ஏற்படுகிறது. ஆகையினால் உள்ளூரிலே இருக்கிற மீனவர்களுக்கும் வேறு மாவட்டங்களிலிருந்து வருகிற மீனவர்களுக்கும் என்று அதைத் திருத்திக்கொள்ளவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும் மீன் பிடிக்கிற இடம் இராமேசுவரம்தான். அதிலே சீசன் எல்லாம் கிடையாது. சீசன் மாறுகிறபோதும் அங்கு, எல்லாக் கடல்களும் சங்கமிக்கிற காரணத்தால் எல்லாக் காலங்களிலும் மீன் பிடிக்கிற இடம். எனவேதான், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த ஆண்டு பட்ஜெட் உரையிலேகூட இராமேசுவரத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக 54 கோடி ரூபாயை மாநில அரசு, மத்திய அரசினுடைய உதவியோடு ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது? ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? திட்டம் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா? நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இராமேசுவரம் துறைமுகப் பணி மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, அதற்கான நிதியும் ஒதுக்கிய பிறகு, இதுசம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தள்ளிவைக்கப்பட்ட வினா. வினா எண் 245, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 29]

**245—**

## வாக்காளர் அடையாள அட்டைகள்

***9735—திரு. கே.ஆர். இராமசாமி:**

*மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதியில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இன்னும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளோர் எத்தனை பேர்?

(இ) நிலுவையில் உள்ளவர்களுக்கு எப்பொழுது அடையாள அட்டை வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாடனை தொகுதியில் இதுவரை 1,33,391 வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 1-1-2001 ஆம் நாளன்றைய வாக்காளர் பட்டியலின்படி மொத்தமுள்ள 1,85,937 வாக்காளர்களில் 52,546 வாக்காளர்களுக்கு இன்னும் அடையாள அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன.

(இ) 25-4-2002 ஆம் நாளன்று வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு அடுத்த சுற்றுக்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெற்றபின் தொடரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 ஏப்ரல் 29

## 2. தகவல் கோரல்

### (அ) வன்னியர் சங்கத்தின் சார்பில் மகாபலிபுரத்தில் 26-4-2002 அன்று நடந்த சித்ரா பௌர்ணமி விழாவினையொட்டிய அசம்பாவிதம்

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்வி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள். கேள்வி வேண்டாம், சொல்லுங்கள் (குறுக்கீடு) அவர், கேட்டவர் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு, 26-4-2002 அன்று மகாபலிபுரத்திலே மிகப் பெரிய ஒரு விழா, ஒரு மாநாடு, தமிழ்நாடு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலேதான் என்னிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். நான் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் என் அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) காலையிலேதான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். காலையில் கொடுத்திருக்கிறீர்கள். பத்திரிகையில் வந்திருக்கிறது. எல்லோரும் பார்த்திருப்பார்கள். காலையிலேதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) பரிதாபம்தான். எல்லாமே பரிதாபம்தான். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. காலையில் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

முற்பகல் 11-15

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, இந்திய நாட்டிலே, பல்வேறு விழாக்கள் நடைபெறுவது வழக்கம். அந்த வகையிலே ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி அன்று தமிழகத்தினுடைய பெரும்பான்மை சமுதாயமாக இருக்கக்கூடிய வன்னியர் சங்கத்தின் சார்பிலே அது சமுதாய விழாவாக ஆண்டுதோறும் நடைபெற்று வரக்கூடியது. அந்த விழாவுக்கு 1998 ஆம் ஆண்டுகூட நம்முடைய முதலமைச்சர்....



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மணி, சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. நீங்கள் அதன் விளக்கத்திற்குள்ளே போனால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) இடையில் ஓர் அசம்பாவிதம் நடந்திருக்கிறது. அதைப்பற்றி கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** விளக்கமாகச் சொல்லவில்லை. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களைக்கூட 1998 ஆம் ஆண்டு அழைத்து, அந்த விழா கட்டுப்பாட்டோடு மிகச் சிறப்பாக நடந்த விழா. அப்படி சிறப்பாக அந்த விழா நடைபெற்று வரக்கூடிய காலகட்டத்தில் இந்த ஆண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எடுப்பதற்கு முன்பாகப் பேசுவது முறையல்ல, மணி.

**திரு. ஜி.கே. மணி:** கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்திற்குக் கொண்டுவந்தால் எங்கேயிருந்து பதில் கிடைக்கும்? காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். எப்படி அங்கேயிருந்து பதில் வரும்? உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். காலையில் கொடுத்திருக்கிறீர்கள். எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று நானே உங்களுக்குச் சொல்கிறேன். உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) காலையில் கொடுத்திருக்கிறீர்கள். இது ஒரு தவறான முன்மாதிரியாகப் போய்விடும். (குறுக்கீடு) காலையில் கொடுத்துவிட்டு அவையில் கிளப்பினால் எப்படி அவர்களிடமிருந்து பதில் வரும்? என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) எல்லாமே முக்கியமான சம்பவங்கள்தான். (குறுக்கீடு) இன்றைக்கு நீங்கள் இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதித்தான் காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) எல்லாமே பத்திரிகையில் வந்திருக்கிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்படுமோ அப்போது எடுத்துக்கொள்ளப்படும். ஞானசேகரன் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதற்குமேல் அனுமதி கொடுக்க முடியாது. முறையல்ல, தவறு. அவைக்கு விதி என்று இல்லையா? சட்டமன்றத்திற்கு விதிகள் என்று இல்லையா? (குறுக்கீடு)

நான் சொல்வதைக் கேளுங்கள். சடுகுடு விளையாட்டுக்குக்கூட விதிகள் இருக்கின்றன. இது சட்டமன்றம். இதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. காலையிலே கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். உடனேயே கிளப்பி அரசாங்கத்திடமிருந்து பதிலை எதிர்பார்த்தால் என்ன பொருள்? இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) காலையிலே கொடுத்துவிட்டு இப்போது உடனே கேட்கிறீர்கள் என்றால் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) இது தவறான முன்மாதிரி. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) எப்படி இருந்தாலும் சரி, இப்போது எடுத்துக்கொள்வதற்கு வழியில்லை. (குறுக்கீடு) எல்லாம் சொல்லி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இது முறையல்ல. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**(ஆ) தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல்**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் ஏற்கெனவே உயர் நீதி மன்றத்தினுடைய உத்தரவுப்படியும், அரசாங்கத்தினுடைய உத்தரவுப்படியும் தனியார் நடத்தக்கூடிய பள்ளிகளிலே 50 சதவிகித மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அது வந்திருக்கிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்ன நிலையில் இருக்கிறது என்பதையும் சொல்கிறேன். எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்றுகூட நான் சொல்கிறேன், அறைக்கு வாருங்கள். திரு. ப. ரங்கநாதன்.

**(இ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோருதல்**

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய எதிர்க்கட்சி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையில் கொடுத்துவிட்டு உடனே கேட்டீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எடுத்துக்கொள்வதற்கு இப்போது வழியில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** 26 ஆம் தேதி நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், அப்போது எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி ... (குறுக்கீடு)





**(அ) வன்னியர் சங்கத்தின் சார்பில் மகாபலிபுரத்தில் 26-4-2002 அன்று நடந்த சித்ரா பௌர்ணமி விழாவினையொட்டிய அசம்பாவிதம்—** தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலே இல்லையென்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) காலையில் கொடுத்துவிட்டு உடனே பதில் கேட்டீர்கள் என்றால் எப்படி பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) அரசாங்கத்திடமிருந்து பதில் வர வேண்டாமா? அரசாங்கம் பதில் சொல்ல வேண்டாமா? உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி, நீங்கள் சொல்ல வேண்டிய பிரச்சினையை சொல்லி முடித்துவிட்டால் போதுமா? அரசு பதில் சொல்ல வேண்டாமா? ஒரு பொறுப்புள்ள அரசு பதில் சொல்ல வேண்டாமா? காலையில் நீங்கள் கொடுத்துவிட்டு கிளப்பினால் என்ன பொருள்? அவையினுடைய விதிகள் உங்களுக்குத் தெரியாதா? ஒரு மூத்த உறுப்பினர் நீங்கள் இப்படி பேசினால் என்ன முறை? (குறுக்கீடு) இது முறையல்ல, நான் அனுமதிக்கமுடியாது. உட்காருங்கள். ரங்கநாதன் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. இது திட்டமிட்டு செய்யப்பட்ட சதி. அதைப்பற்றி எழுப்புவதற்கு அனுமதிக்காததை குற்றச்சாட்டாகச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பின்னர், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**(இ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோருதல்**—தொடர்ச்சி

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 ஆம் தேதி, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்களை அவையினுடைய முன்னவர் அவர்களின் தீர்மானத்தின் மூலமாக எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதும் நீங்கள் நீக்கியுள்ளீர்கள். ஒரு வேண்டுகோளாக இங்கே வைக்க விரும்புகிறேன். மீண்டும் நீங்கள் அந்தத் தீர்மானத்தை இரத்து செய்து இந்த அவையிலே அவர் பணியாற்றுவதற்கும், இந்தத் தமிழக மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து வைப்பதற்கும் நீங்கள் அனுமதி வழங்க வேண்டும். அதோடு ...

முற்பகல் 11-20

## 3. கவன ஈர்ப்பு

### (அ) தூத்துக்குடி மாவட்டத்தில் சூறாவளிக் காற்றினால் வாழைத் தோட்டங்கள் சேதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. ஹேமசந்திரன், திரு. டி. மணி, திரு. ஜி.கே. மணி, திரு. க. முருகவேல் ராஜன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இல்லை, திரு. டி. மணி. (குறுக்கீடு) மணி (குறுக்கீடு) சொல்லிவிட்டீர்கள் உட்காருங்கள், அவ்வளவுதான். உட்காருங்கள். திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, கழுகுமலைப் பகுதிகளில் கோடை மழை பெய்தபோது சூறாவளிக் காற்று வீசி பல வாழைத் தோட்டங்கள் சேதமாகியுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

"தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம், திருச்செந்தூர் மற்றும் கோவில்பட்டி வட்டங்களில் 3-4-2002 அன்று கடுமையான சூறாவளிக் காற்று மற்றும் மழையின் காரணமாக இம்மூன்று வட்டங்களில் உள்ள வாழைத் தோட்டங்களுக்கு சேதம் ஏற்பட்டதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். திருவைகுண்டம் வட்டத்தில், வெள்ளூர் ஆதிச்சநல்லூர், வெள்ளூர் புதுக்குடி, வெள்ளூர் கஸ்பா, கெட்டியம்மாள்புரம், தோழப்பன்பண்ணை மற்றும் பத்மநாபமங்கலம் ஆகிய ஆறு கிராமங்களும், திருச்செந்தூர் வட்டத்தில் ஆழ்வார்திருநகரி, ஆதிநாதபுரம், மழவராயபுரம், அழகியமணவாளபுரம், திருக்கோளூர்,







உடையார்குளம், திருநாவீர் உடையார்குளம் ஆகிய ஏழு கிராமங்களும் மற்றும் கோவில்பட்டி வட்டத்தில் மந்தித் தோப்பு, குமரரெட்டியாபுரம் மற்றும் கிழவிப்பட்டி ஆகிய மூன்று கிராமங்களும், ஆக மொத்தம் பதினாறு கிராமங்களில் வாழைப் பயிர் சேதம் கடுமையாக ஏற்பட்டது என்றும், 3-4-2002 அன்று சராசரி 30 மி.மீ மழை மேற்கண்ட வட்டங்களில் பதிவானது என்றும் தெரிவித்துள்ளார். 3-4-2002 அன்று இப்பகுதிகளில் கடுமையான சூறாவளிக் காற்று வீசியதாகவும், சுமார் 65 கி.மீ. மற்றும் அதற்கு மேல் காற்று வீசினால் சூறாவளி என்று கருதப்படும் என்றும் கணக்கிடுவதற்கான கருவி இல்லாததால் அன்று வீசிய காற்றின் வேகத்தினை கணக்கிட இயலவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2. இச்சூறாவளிக் காற்றினால் திருவைகுண்டம் வட்டத்தில் 4.80 இலட்சம் வாழை மரங்களும், திருச்செந்தூர் வட்டத்தில் 6.80 இலட்சம் வாழை மரங்களும், கோவில்பட்டி வட்டத்தில் சுமார் 12 ஆயிரம் வாழை மரங்களும் சேதமடைந்ததாகவும் சேதமடைந்த வாழை மரங்கள் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்ததாகவும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். சேதமடைந்த நிலத்தின் மொத்த பரப்பு 468.64.0 ஹெக்டேர் ஆகும். மொத்தம் சேதமடைந்த வாழை மரங்களின் எண்ணிக்கை 11.72 இலட்சம் ஆகும். சேதமடைந்த மரங்களின் மதிப்பு ரூ.117.20 இலட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மாவட்ட ஆட்சியரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுவதற்கான முன்மொழிவுகளை விரைவில் அனுப்பிவைப்பதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பாதிக்கப்பட்ட நிலங்களில் சேதமடைந்த மரங்கள் கணக்கெடுப்பு பற்றி இணைந்து தல ஆய்வு செய்து கொண்டிருப்பதாகவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இயற்கைச் சீற்ற நிவாரண நிதியின் விதிமுறைப்படி முழுவதுமாக சேதமடைந்த வாழைகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,000/- வீதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியும். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் முடிவான கருத்துருவும் பரிந்துரையும் கிடைக்கப்பெற்ற பின்னர் சேதத்தின் மதிப்பீட்டின்படி தக்க செயற்குறிப்புகள் அனுப்பி வைக்கப்படும் என்று முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2002 ஏப்ரல் 29

3. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்படும் செயற்குறிப்புகளை ஆராய்ந்து அரசு தக்க முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரிவான அறிக்கையில் பல விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கின்றார்கள். அதிலே மிகவும் குறிப்பாக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு நஷ்ட ஈடு என்று சுமார் 4,000/- ரூபாய் அல்லது அதற்கு மேலே தருவதாகத்தான் கூறியிருக்கின்றார்கள். நம்முடைய வாழை மரத்தை நடுகின்ற ஒரு விவசாயி, ஒரு வாழையை நட்டால்கூட, அதை நடுகின்ற பருவத்திலே வருகின்ற செலவும், அது குலை தள்ளுகின்ற நேரத்தில் அதைப் பாதுகாக்கின்ற அதனுடைய செலவினங்களை நாம் கணக்கிட்டுப் பார்த்தோமானால், ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு எத்தனை ஆயிரம் ரூபாய் செலவாகும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே, பிற மாநிலத்தில், குறிப்பாக அண்டை மாநிலத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. டி. மணி:** அண்டை மாநிலத்தில் ஒரு குலை தள்ளிய வாழை சேதமடைந்தால், காற்றினால் அல்லது மற்ற கோளாறின் காரணமாகச் சேதமடையுமானால் அதற்கு 7 ரூபாய் வரையிலும் நஷ்ட ஈடாக வழங்குகிறார்கள். அந்த வகையிலே ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்று மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அந்த விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு என்று சொல்கின்ற வகையில் குலை தள்ளியிருக்கின்ற வாழை மரத்திற்கு 7 ரூபாயாகிலும் கொடுக்கக்கூடிய வகையிலேயும், இடைப் பருவத்திலே இருக்கின்ற வாழைகளுக்கு 5 ரூபாய் நஷ்ட ஈடு வழங்குகின்ற வகையிலேயும் அரசினுடைய முடிவை மாற்றி அந்த விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, திருச்செந்தூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய 3 வட்டங்களிலே கிட்டத்தட்ட 17 கிராமங்களிலே 3-4-2002 அன்று 10 இலட்சத்து 83 ஆயிரத்து 917 வாழை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவை மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. Natural Calamity Fund, இயற்கைச் சீற்றத்தின் சார்பாக எவ்வளவு ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசு ஒரு வழிமுறையை அறிவித்திருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 4,000/- ரூபாய் என்று இப்போது அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆக, மத்திய அரசினுடைய அந்த அளவுகோலே 4,000/- ரூபாய். இதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து அறிக்கை வரவேண்டியிருக்கிறது. அறிக்கை வந்தவுடனேயே பரிசீலனை செய்து மீண்டும் அதற்கான நிவாரண நிதி வழங்கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### (ஆ) வால்பாறை, ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்காதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள மகாவீர் தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு வருட காலமாக சம்பளம் கொடுக்காமல் எஸ்டேட்டை மூடியுள்ளதால் அரசே அதனை ஏற்று நடத்த வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

திருவாளர்கள் மகாவீர் தோட்ட நிறுவனத்திற்கு கோவை மாவட்டம், வால்பாறையில் ஹைஃபாரஸ்ட் எஸ்டேட், நீலகிரி மாவட்டம் கூடலூரில் ப்ராஸ்பெக்ட் எஸ்டேட், லிட்டில் ஸ்டேல் எஸ்டேட் மற்றும் சீ போர்த் எஸ்டேட் ஆகிய நான்கு தோட்ட நிறுவனங்கள் உள்ளன.

[திரு. வது. நடராஜன்] [2002 ஏப்ரல் 29

2. வால்பாறையில் உள்ள ஹைஃபாரஸ்ட் எஸ்டேட்டில் 250 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 281 ஆண்கள் மற்றும் 324 பெண்கள் ஆக மொத்தம் 605 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இத்தோட்ட நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஜுலை 2001 வரை சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்நிறுவனத்தில் சட்டப்படி குறிப்பிட்ட தேதியில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. காலதாமதமாக, சம்பளம் வழங்கப்படாமைக்காக 1996, 1997, 1998, 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் ஹைஃபாரஸ்ட் தோட்ட நிறுவனத்திற்கெதிராக 14 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. சம்பள நிலுவை மற்றும் இதர சட்டப்படியான சலுகைகள் வழங்கப்படாதது குறித்து கோவை தொழிலாளர் உதவி ஆணையர், கோவை தொழிலாளர் துணை ஆணையர், கோவை தொழிலாளர் இணை ஆணையர் மற்றும் தொழிலாளர் ஆணையர் முன்பு பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டும், அறிவுரைகளில் குறிப்பிட்டபடி நிர்வாகம் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்காமல் தொடர்ந்து காலதாமதமாகவே சம்பளம் வழங்கி வந்தது.

தாமதமாக சம்பளம் வழங்கப்பட்டமைக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்போது, நீதிமன்றம் அபராதக் கட்டணமாக ரூ.200-லிருந்து ரூ.1000 வரைதான் விதிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், நிர்வாகம் மேற்படி அபராதத் தொகையினை செலுத்திவிட்டு சட்டத்தை மீறி வருகிறது.

தொழிலாளர்களுக்கு மாதாந்திர சம்பளம்கூட சரியாக வழங்கப்படாததற்கும் இதர வசதிகள் மறுக்கப்படுவதற்கும் நிர்வாகத்தின் மீது தோட்ட நிறுவன ஆய்வர்களால் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டும், நிர்வாகத்தின் போக்கில் மாறுதல் ஏற்படவில்லை. இந்நிர்வாகத்தின் செயல்பாட்டினை அமலாக்க சட்டங்களினால் சீர்செய்ய இயலாத நிலை எழுந்துள்ளதால் கோவை மாவட்டம் வால்பாறையில் உள்ள ஹைஃபாரஸ்ட் எஸ்டேட் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பிராஸ்பெக்ட், லிட்டில் ஸ்டேல் மற்றும் சீ போர்த் எஸ்டேட் ஆகிய நான்கு தோட்ட நிறுவனங்களை அரசு கையகப்படுத்தி அதன் நிர்வாகத்தினை அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திடம் (Tamil Nadu Tea Plantation Corporation) ஒப்படைக்க



2002 ஏப்ரல் 29] [திரு. வது. நடராஜன்]

தொழிலாளர் ஆணையர், அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அரசு தொழிலாளர் ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில் மகாவீர் தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு தோட்ட நிறுவனங்களையும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்து நடத்த இயலுமா என்பது குறித்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக மேலாண்மை இயக்குநரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கை பெறப்பட்டபிறகு, இத்தோட்ட நிறுவனங்களைக் கையகப்படுத்துவது குறித்து அரசு மேல்நடவடிக்கை எடுக்க உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

முற்பகல் 11-25

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் பல விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, வால்பாறையில் ஹைஃபாரஸ்ட் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த 1 வருடமாக சம்பளம் கொடுக்கவில்லை. மேனேஜிங் டைரக்டர் அவர்கள் 4 வருடங்களாக எஸ்டேட் பக்கம் வருவது கிடையாது. நிர்வாகம் இப்பொழுது எஸ்டேட்டை மூடிவிட்டது. இதனால், தொழிலாளர்கள் மிகவும் பட்டினியால் வாடுகின்றார்கள். ஏற்கெனவே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதுபற்றி நான் கருத்து கூறியபோது முன்னாள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஹைஃபாரஸ்ட்டில் நிர்வாக முறைகேடுகள் நடந்திருக்கின்றன. பலமுறை பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் நிர்வாகம் வரவில்லை. ஆகவே, அரசு ஏற்று நடத்துவதற்கு முயற்சி எடுத்து வருகிறது என்று இந்தச் சட்டமன்றப் பேரவையிலே அறிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் ஹைஃபாரஸ்ட் நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன். இன்று வால்பாறையிலே உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். வால்பாறையில் மிகவும் பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இன்று நடைபெறுவதாக இருந்த சம்பளக் குறைப்புப் பேச்சுவார்த்தை வருகின்ற 6 ஆம் தேதி நடைபெறுவதாக அறிவித்ததன் காரணமாக அங்கு இரண்டு, மூன்று இடங்களில் ரோடு மறியல் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அங்கு நிலவுகின்ற பதற்றத்தைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதில் உடனடியாகத்

[திரு. கோவை தங்கம்] [2002 ஏப்ரல் 29

தேயிலைத் தோட்ட அதிபர்களை அழைத்துப் பேசி மீண்டும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பழைய சம்பளத்தையே கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** திருவாளர்கள் மகாவீர் தோட்ட நிறுவனத்திற்கு கோவை மாவட்டம் வால்பாறையில் ஹைஃபாரஸ்ட் எஸ்டேட், நீலகிரி மாவட்டம், கூடலூரில் பிராஸ்பெக்ட் எஸ்டேட், லிமிடெட் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அவர்கள், அவர் கேட்கிறார். அவர் கேட்பதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும். (குறுக்கீடு) அரசு ஏற்று நடத்துமா என்று கேட்கிறார்?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** அதை அரசு எடுத்து நடத்துவதற்கு டெல்லி சர்க்காருடைய . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** தமிழ்நாடு தேயிலைத் தோட்ட மேலாண்மை இயக்குநரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கை பெறப்பட்ட பிறகு, தோட்ட நிறுவனங்களைக் கையகப்படுத்துவது குறித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலாண்மை இயக்குநரிடம் அறிக்கை கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு முடிவு செய்யப்படும் என்கிறார்கள். தங்கம் என்ன கேட்கிறீர்கள்?

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 606 தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 5,000 பேர்கள். நாள்தோறும், பட்டினியாலும், பசியாலும் வாடிக்



2002 ஏப்ரல் 29] [திரு. கோவை தங்கம்]

கொண்டிருக்கின்றார்கள். தான் பெற்ற குழந்தைகளுக்கு பால் வாங்கிக் கொடுப்பதற்குக்கூட வசதி கிடையாது. மருந்து வாங்கிக் கொடுப்பதற்குக்கூட வசதி கிடையாது. அங்கிருக்கின்றவர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கு வழி இல்லை. அதனால், அந்தத் தொழிலாளர்களுடைய நிலை என்ன என்பதை தயவுசெய்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, உடனடியாக ஹைபாரஸ்ட்-ஐ அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள், மேலாண்மை இயக்குநரிடம் அறிக்கையை சீக்கிரம் வாங்கி நடவடிக்கை நீங்கள் எடுங்கள். அதுதானே சொல்லப் போகிறீர்கள். சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** வருகிற 6ஆம் தேதி முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை நிச்சயம் விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. சி. சிவசாமி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு தனது ஆய்விற்கு எடுத்துக்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்த குழுவின் எட்டாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முறபகல் 11-30

## 5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 14-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா**

**(அ) கோரிக்கை எண் 14-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கை எண் 14-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.97,68,20,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 778, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் ஆலங்காயம் அருகே ஜவ்வாதுமலையில் உள்ள காவலூர் பகுதியில் விலங்குகள் சரணாலயம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3829, திரு. என். நன்மாறன்.





**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3816, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3914, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 825, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7190, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பூங்கா நகர் தொகுதி உட்வார்ப்பகுதியில் எவர்சில்வர் பாலிஷ் செய்யும் கம்பெனிகளால் சுற்றுப்புறச் சூழ்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1889, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1008, திரு. ப. ரங்கநாதன், போய்விட்டாரா? திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6970, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1799, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5936, திரு. வி.கே. லட்சுமணன்.



***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வனத் துறை மாவட்ட மையங்களில் பிள்ளமருது, ஈட்டி, மஞ்சக்கடம்பை, கருமருது, பலா போன்ற மரங்களையும், நெல்லிக்காய், சப்போட்டா, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கம் போன்ற மரங்களையும் பெருமளவில் வளர்க்க நாற்றுப்பண்ணைகளை நிறுவ வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7797, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5992, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், தடிக்காரகோணம் பகுதியிலிருந்து கீரிப்பாறை வரையிலுள்ள வனப் பகுதியில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை நீக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5757, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3857, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மரங்கள் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தையும், அதனால் சுற்றுச்சூழல் மேன்மையடையச் செய்வதன் அவசியம் பற்றியும்' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 355, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, கப்பட்டி கிராமத்திற்கு காட்டெருமைகள் அடிக்கடி வந்து ஊர் பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 403, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் உள்ள மலைப்பகுதிகளில் யானை மிதித்து இறந்தவர்களின் குடும்பத்திற்கும் மற்றும் சிறுத்தைப் புலி கொன்று இறந்தவர்களின் குடும்பத்திற்கும், மத்திய அரசு வழங்கி வரும் உதவித் தொகையை உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4621, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல்லில் உள்ள தோல்ஷாப் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் ஆலையை தமிழக அரசே ஏற்று நடத்த முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7926, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5230, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி அருகிலுள்ள தனியார் சர்க்கரை ஆலையால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ப. அரசன்] [2002 ஏப்ரல் 29

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,68,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, நிருவாகம் பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவை முன் மாண்புமிகு உறுப்பினர்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பினை (1) நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா மானியக் கோரிக்கை எண் 28-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.67,09,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(1) 543 முதல் 584 வரையிலான பக்கங்களிலே இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4422, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 131, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3926, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8271, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7010, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3096, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை வால்பாறையில் உள்ள புல் மலையையும், தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ள கோவை குற்றாலம், வைதேகி நீர்வீழ்ச்சி, பேரூர், மருதமலை ஆகியவற்றைக் கண்டு மகிழும்வண்ணம், கோவை நகரை ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7784, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1875, திரு. ரா. ஈஸ்வரன்.



**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை' பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 364, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1194, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை மாவட்டம் கோயில்கள் நிறைந்த மாவட்டம், நகரம், சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது போல சிறந்த சுற்றுலா மையமொன்றினை மதுரை மாநகரில் ஏற்படுத்த, வண்டியூர் கண்மாயில் படகு விட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 404, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்றத் தொகுதியில், டேம்கள், டாப்சிலிப், புல்மலை, monkey falls போன்ற இயற்கைக் காட்சிகள் நிறைந்து இருப்பதால், வால்பாறையை சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3741, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சுற்றுலாத் தலமான பழவேற்காட்டைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2621, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியில் பூண்டி நீர்த்தேக்கம் அமைந்துள்ள பகுதியை சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1923, திரு. ப. அரசன்.



***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் புண்ணியத் தலத்தை சுற்றுலாத் தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6695, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2371, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு திருத்தலங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா மையமாக அறிவிப்பது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8245, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 116, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும், பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை குறித்த கோரிக்கை எண் 28 என்ற தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென வேண்டுகிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களுடைய கேள்விகளுக்கு இறுதியில் என்னுடைய பதிலையும், அரசு எடுத்திருக்கின்ற முடிவுகளையும் தெரிவிக்கின்றேன் எனக் கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம். திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மானியக் கோரிக்கையின்கீழ் என்னைப் பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வனங்களுக்கு அருகிலுள்ள பட்டா உரிமையாளர்களும், எஸ்டேட் உரிமையாளர்களும் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வருவதாக வனத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் நீலகிரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் எஸ்டேட் முதலாளிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை மீட்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குன்னூர் தாலுகாவில் உளிக்கல் பேரூராட்சியில், ட்ரூக் பகுதியில்

@ 585 முதல் 626 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



அரசுப் புறம்போக்கு நிலத்தை எஸ்டேட் முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். ட்ரூக் பகுதியிலிருந்து, பக்காசூரன் மலைவரை புதிய சாலை போட வேண்டிய நிலை இருக்கிறது. 'நபார்டு' திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலை அமைக்க நெடுஞ்சாலைத் துறையினர் திட்டம் தயாரித்து அரசு அனுமதிக்காக அனுப்பி இருக்கின்றார்கள். ஆனால் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்ற காரணத்தினால், இந்த புதிய சாலையைப் போடுவதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சிக்கலைக் களைய அரசு முன்வர வேண்டும். கடந்த காலத்தில் அரசால், ஏரிகளில் 'சிடா' திட்டத்தின்கீழ் கருவேல மரங்கள் நடப்பட்டு வந்தன. கடந்த 5 ஆண்டு காலமாக இந்த 'சிடா' திட்டம் கைவிடப்பட்டு, கருவேல மரங்களை ஏரிகளில் நடாமல் இருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் திருப்பத்தூர் சந்தனக் கிடங்கில் 600 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் எரிந்துபோயின. அதனை விசாரித்த ராமன் கமிஷன், குழந்தைகள் விளையாடிய காரணத்தினால் தீ ஏற்படவில்லை என்று கருத்து தெரிவித்துள்ளது. எனவே, இந்த சதிக்குக் காரணமானவர்கள் யார் என்பதை அரசு கண்டுபிடித்து தண்டிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கூடலூர்-சிறியூர் - தெங்குமராடா வழியாக சத்தியமங்கலத்திற்குச் செல்ல, 1982 ஆம் ஆண்டு, ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதைச் செயல்படுத்துகின்ற நேரத்திலே அந்தச் சாலையை அமைக்கக்கூடாது என்று வனத் துறையினர் தடுத்துவிட்டார்கள். இந்தச் சாலை நீலகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டால், பல கிலோ மீட்டர் தூரம் குறையும். எனவே, இந்தச் சாலையை மீண்டும் அமைப்பதற்கு வனத் துறையினர் முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சாலையை அமைப்பதால், ஒரு மரத்தைக்கூட வெட்ட வேண்டிய சூழ்நிலை இல்லை. ஏற்கெனவே மண் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மண் சாலை மீது தார்ச் சாலையை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கோத்தகிரி தாலுகா, கோடநாடு கிராமத்தில், சுண்டட்டி என்ற ஒரு சிறிய கிராமம் உள்ளது. இந்த சுண்டட்டி கிராமத்தில், வனத் துறைக்குச்

சொந்தமான 40 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கே சமூகக் காடுகளை வளர்தது வருகின்றார்கள். ஆனால் இந்த வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றார்கள். இந்த நிலத்திலிருந்துதான் சுண்டட்டி கிராமத்திற்குக் குடிநீர் வருகிறது. இந்த ஆக்கிரமிப்பின் காரணமாக குடிநீர் ஆதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 11-40

குன்னூர் தொகுதியில் தெங்குமராடா என்ற கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்திற்குச் செல்ல கோவை, ஈரோடு ஆகிய இரண்டு மாவட்டங்களைக் கடந்துதான் செல்ல வேண்டும். ரோடு வசதியில்லை. நீலகிரி மாவட்டத்திலுள்ள இந்தக் கிராமத்திற்குச் செல்ல—ஈரோடு மாவட்டம், பவானிசாகரிலிருந்து ரோடு குண்டும் குழியுமாக உள்ளது—கோத்தகிரியிலிருந்து ஒரேயொரு பஸ் மட்டும்தான் வந்து கொண்டிருக்கிறது. கோவையிலிருந்தும், சத்தியமங்கலத்திலிருந்தும் வந்துகொண்டிருந்த பஸ்களை நிறுத்திவிட்டார்கள். மோசமான சாலையின் காரணமாகத்தான் இந்த பஸ்களை நிறுத்திவிட்டதாகப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் சொல்கின்றார்கள். இந்த தெங்குமராடா கிராமத்தின் அருகே மாயாறு என்று ஓர் ஆறு ஓடுகிறது. வருடம் முழுவதும் அங்கே தண்ணீர் வற்றாமல், இந்த ஆற்றிலே ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த மாயாற்றின் குறுக்கே பாலம் கட்டினால், 30 கி.மீ. தூரம் குறையும். இந்த மாயாற்றின் குறுக்கே பாலம் கட்ட, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் 1.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். ஆனால் வனத் துறையினர் இந்தப் பாலத்தைக் கட்டக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள். எனவே, வனத் துறை அமைச்சர் இதிலே தனிக்கவனம் செலுத்தி, இந்த மாயாற்றின் குறுக்கே பாலத்தைக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெங்குமராடா கிராமத்திற்குச் செல்வதற்கு அந்தப் பகுதி மக்கள் பரிசல்களில்தான் செல்கிறார்கள். இந்தப் பாலம் மிகவும் அவசியமாக இருக்கிறது. எனவே இந்த மாயாற்றின் குறுக்கே பாலத்தைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்திவரும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 4 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு 77.00 இலட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.



இதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத் துறையின் சார்பில் தமிழ்நாடு தேயிலைக் கழகம் தேயிலைத் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. இதற்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள தேயிலை எஸ்டேட்கள் உள்ளன. இருந்தாலும்கூட, தமிழ்நாடு தேயிலைத் தொழிற்சாலை நஷ்டத்திலே இயங்குகிறது. நீலகிரி மாவட்டத்திலுள்ள மற்ற தேயிலைத் தொழிற்சாலைகள் எல்லாம் இலாபத்திலே இயங்குகின்றபோது, அர்சு நடத்துகின்ற தேயிலைத் தொழிற்சாலை மட்டும் நஷ்டத்திலே இயங்குவது வருந்தத்தக்கது. எனவே, இலாபத்திலே இயங்குகின்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 39-ல், கூவம். அடையாறு, பக்கிங்காம் கால்வாய் ஆகிய்வற்றில் மாசு தடுப்புப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 1,700 கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. நமது சட்டமன்றத்தின் தெற்கே, சென்னைப் பல்கலைக்கழகத்தின் அருகே, நேப்பியர் பாலத்தின் கீழேயுள்ள ஆற்றை சற்று கவனித்தால் நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நேப்பியர் பாலத்தின் வழியாகத்தான் நமது அமைச்சர்கள் எல்லாம்கூட இங்கே சட்டமன்றத்திற்கு வருகின்றார்கள். அவர்கள் வருகின்றபோது, கார் கண்ணாடிகளைத் தூக்கிவிட்டு, மூடிக்கொண்டு வருவதால் அவர்களுக்கு அந்த நாற்றம் தெரியவில்லை போலிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள். சட்டமன்ற விடுதியிலிருந்து பஸ்ஸில் வருகின்றோம். அந்த நேப்பியர் பாலத்தின் அருகே வருகின்ற போது, துர்நாற்றம் குடலைப் பிடுங்குகின்ற அளவில் இருக்கிறது. எனவே அந்த நேப்பியர் பாலத்தின் கீழே வருகின்ற கால்வாயை சீர்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சுற்றுச்சூழல் மாசினைத் தடுக்கும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க, இராமேஸ்வரம், திருச்செந்தூர் ஆகிய நகரங்களில் தலா 9.00 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசுக்குத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதனை நான் வரவேற்கிறேன். ஆனால், சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்

[திரு. கா. கந்தசாமி] [2002 ஏப்ரல் 29

1982 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்கள். அடிக்கல் நாட்டி 20 ஆண்டுகள் ஆகியும்கூட, சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்தை இன்னும் தொடங்கவில்லை. சேலம் மாநகரத்தின் இடையே ஓடுகின்ற திருமணிமுத்தாற்றில் சாக்கடை நீர் கலந்து, மிகப் பெரிய அளவிலே மாசுபடுகின்றது. ஒரு மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்காதது, சேலம் மக்களுக்கு வருத்தத்தை அளிக்கின்றது. பெங்களூர் அருகே பெள்ளண்டூர் என்ற சிறிய கிராமம் உள்ளது. இந்த பெள்ளண்டூர் கிராமம் டவுன் பஞ்சாயத்துகூட அல்ல. சிறிய கிராமம். அந்தக் கிராமத்திலே பாதாள சாக்கடைத் திட்டத்தைத் தொடங்கி, நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றது. எனவே, சேலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

கோளாவில் படகு வீடுகள் இருப்பதுபோல, பைக்காரா, முட்டுக்காடு, கொடைக்கானல் ஆகிய இடங்களில் படகு வீடுகள் அமைக்கப்படும் என்று சுற்றுலாத் துறை கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. ஊட்டி ஏரியிலும் வாய்ப்பிருந்தால் படகு வீடுகள் விடுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நீலகிரி மாவட்டத்தில் முதுமலை சரணாலயம் உள்ளது. இந்தச் சரணாலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆனால், இந்தச் சரணாலயத்திலே தண்ணீர் இல்லாமல் அடிக்கடி மிருகங்கள் வேறு இடங்களுக்குப் பெயர்ந்து விடுகின்றன என்று சொல்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் இந்தச் சரணாலயத்திலே அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்தத் தீ விபத்தினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குன்னூர் தாலூகாவில் மிகவும் உயரமான பக்காசூரன் மலை உள்ளது. இது ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். ஆனால், இங்கு செல்வதற்கு ரோடு வசதி இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். இன்னும் 9 பேர் பேச வேண்டும்.

**திரு. கா. கந்தசாமி:** முடித்து விடுகிறேன். இந்த பக்காசூரன் மலைக்கு ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறை பல்வேறு இடங்களிலே தமிழ்நாடு ஓட்டலை நடத்துகிறது. ஏதோ ஓர் அவசரத்திற்கு இந்த சுற்றுலாத் துறை நடத்தும் தமிழ்நாடு ஓட்டலுக்குச் சென்றால்,



2002 ஏப்ரல் 29] [திரு. கா. கந்தசாமி]

நாம் உணவிற்கு ஆர்டர் கொடுத்து, உணவு வருவதற்கு ½ மணி நேரம், ¾ மணி நேரம்கூட ஆகிவிடுகிறது. மிகவும் காலதாமதமாக உணவை சப்ளை செய்கின்றார்கள். அந்தச் சமயத்தில், நாம் காத்திருக்கின்ற நேரத்தில், சிறுகுடல் பெருங்குடலைச் சாப்பிட்டுவிடுகின்ற அளவிற்கு, மிகவும் காலதாமதமாகக் கொடுக்கின்றார்கள். எனவே, தமிழ்நாடு ஓட்டல்களில் உடனடியாக உணவு வகைகளைப் பரிமாறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இரப்பர் கழகத்தில் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை. அங்கே முதிர்ந்த மரங்களை விற்று 2 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த 2 கோடி ரூபாயிலிருந்து சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

***திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003ஆம் ஆண்டிற்கான வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, சுற்றுலாத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் தொகுதியில், மதுரா கோட்ஸில் பணிபுரிந்த என்னை சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக அறிவித்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்களுடைய குல தெய்வம், என்னுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, என்னுடைய இந்த உரையைத் தொடங்குகின்றேன்.

ஒரு மனிதனுக்கு கண் எப்படி முக்கியமோ, அதைப்போல ஒரு நாட்டிற்கு வனம் முக்கியம். வனம் செழிப்பாக இருந்தால்தான் அந்த நாட்டில் பொய்யாது மழை பொழிந்து, நாடும் செழிப்பாக இருக்கும். சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக வாழ்வியல் ஆதார அமைப்புகளைப் பாதுகாத்து மேம்படுத்துதலே, இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தின் உள்ளடக்கமாகும். இத்திட்டம் மூலம் அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்வு அளிக்கும் வகையில், ஆறுகள் மற்றும் ஏரிகள் மாசுபடுவதைத் தடுத்தல், வனங்களை

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2002 ஏப்ரல் 29

அழிவிலிருந்து பாதுகாத்தல், தரிசு நிலங்களை மேம்படுத்துதல், திட மற்றும் திரவக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், மருத்துவக் கழிவுகளைத் தக்க முறையில் அகற்றுதல், வாகனங்களின் புகையினைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தில் ஒன்றாகும். இதுதான் இந்த மானியக் கோரிக்கையின் அடிப்படை அம்சமாகத் திகழ்கிறது.

முற்பகல் 11-50

சுற்றுலாத் துறை என்பது மிகவும் முக்கியமான ஒன்று. ஒரு மனிதன் உழைத்து உழைத்து சோர்ந்த நேரத்திலும், அலுவலகங்களில் வேலை பார்த்து சோர்ந்தபோதிலும், விடுமுறை நாட்களிலும், வெளிநாட்டவர் வந்து கண்டுகளிக்கிற வகையிலும், இப்படி மக்களுக்கு பலவித துன்பத்தைப்போக்கி, பொழுதுபோக்கிற்காகவும் உதவியாக உள்ளது சுற்றுலாத் துறை. எனது அம்பாசமுத்திரம் தொகுதியைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறையும், வனத் துறையும் ஒன்றுக்கொன்று பின்னி இருந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்று வனத் துறையின் பரப்பளவான 22,865 சதுர கிலோ மீட்டர், நமது நாட்டின் மொத்தப் பரப்பளவில் 17.58 சதவிகிதம் ஆகும். மாநிலத்தின் வனப் பகுதியையும், மரங்களின் அடர்த்தியையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற குறிக்கோளினைச் செயல்படுத்தும்முகமாக, 2001-2002 ஆம் ஆண்டு ரூ.98.28 கோடி செலவில் 75,250 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் வளர்த்தல், 300 கிலோ மீட்டர் நீளத்தில் நீள்வரிசைத் தோட்டங்களை உருவாக்கி, அதனைச் சுற்றியுள்ள 200 கிராமங்களில் 200 வனக் குழுக்கள், 351 சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, இதன் மூலம் இன்று, 5085 பெண்கள் பயனுற்றுள்ளதாகவும் சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். வன ஆராய்ச்சி மற்றும் கல்வி விரிவாக்கத் திட்டமான இத்திட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தை ஒட்டி அமைந்துள்ள கிராமங்களில் 1084.17 இலட்சம் ரூபாய் 31-12-2001 வரை செல்விடப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நான் இந்த நேரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தத் திட்டம் முழுக்க முழுக்க என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியில் அமைந்துள்ள திட்டமாகும்.



2002 ஏப்ரல் 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

இந்தத் திட்டத்தில் 80 சதவிகிதம் எனது தொகுதி மக்களும், 20 சதவிகிதம் சேரன் மகாதேவி, நாங்குனேரி பகுதியிலுள்ள மக்களும்தான் பயன்பெறுகிறார்கள். இந்த நேரத்திலே நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அம்மா அவர்களுடைய கவனத்திற்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்வது என்னவென்று சொன்னால், இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறவேண்டும், இந்தத் திட்டத்தை நீங்கள் நல்ல முறையில் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதாகும். கிராம வனக் குழுக்கள் என்ற ஒன்றை வைத்து, இன்னும் சில கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் இதை அவர்களுடைய சொந்த நலனுக்காக இந்தக் கிராம வனக் குழுக்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அதை நீங்கள் நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினர், எனது இந்த ஊரைச் சுற்றி கிராம வனக் குழுவை எடுத்திருக்கிறார்கள். ஆனால், எனது ஊரை மட்டுமே எடுக்கவில்லை. கேட்டால் அதற்குத் தகுதியில்லையென்று சொன்னார்கள். எனது ஊரைச் சுற்றி அந்த வனக் குழுவை எடுத்தார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எனது ஊரையும் அந்த கிராம வனக் குழுவில் சேர்க்கவேண்டும். எனது சொந்த ஊரான அடைய கருங்குளம் கிராமத்தை, வனக் குழுவில் சேர்க்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புரட்சித் திட்டமான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.60 இலட்சம் செலவு செய்யப்பட்டு, எங்கள் மாவட்டமான திருநெல்வேலி மாவட்டம் உட்பட 20 மாவட்டங்களில் 400 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதை நான் வரவேற்கிறேன். 2001-2002 ஆம் ஆண்டில் வனத் துறையில் வனத்தின் மூலம் சுமார் 8890.23 இலட்சம் வருமானம் பெறப்பட்டதற்கும், 2002-2003 ஆம் ஆண்டில் அது கூடுதலாக 11,018.56 இலட்சமாக உயரும் என்பதற்கும் எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே, மிகப்பெரிய பூங்காவான அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த ரூ.350.56

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2002 ஏப்ரல் 29

இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என்பதற்கும், 2002-2003 ஆம் ஆண்டில் 428.21 இலட்சமாக அதிகப்படுத்தி அதற்கு செலவிடப்படும் என்பதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வரவேற்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதேபோல மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மொத்த வனப்பரப்பில் நான்கில் ஒரு பகுதி இருக்கிறது. இந்த மேற்கு மலைத் தொடர்ச்சி மலையில்தான் எனது தொகுதியும் உள்ளது. எனவே, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நான் பணிவோடு வேண்டுகோள் விடுக்கிறேன். இதற்கு 2002-2003 ஆம் ஆண்டில் 346.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்வது, என்னுடைய தொகுதி கேரளாவினுடைய எல்லையில், பார்டரில்— அமைந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் முண்டந்துறை ரேஞ்சர் ஆபீஸ் இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியில் உள்பகுதியில் குடமாடி ஒட்டி அடர்ந்த காடுகளில் சந்தன மரம் போன்ற விலை உயர்ந்த மரங்கள் இருக்கின்றன. அங்கு வருவதற்கு கேரளாவில் இருந்து பாதை வசதி இருக்கிறது. ஆனால், இந்த ரேஞ்சர் ஆபிஸிலிருந்து செல்ல கிட்டத்தட்ட 25-30 கிலோ மீட்டர் செல்வதற்கு இரண்டு நாட்கள் ஆகும். அந்த இடத்திற்கு கேரளாவிலிருந்து அடிக்கடி இங்கே வந்து சந்தன மரங்களை வெட்டிச் செல்கின்ற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் நம்முடைய ரேஞ்ச் வரையிலுள்ள வனத் துறை ஆபீசர்களுக்கும், கேரளாவில் இருந்து வருகிற தீவிரவாதிகளுக்கும் இடையில் சில சமயங்களில் துப்பாக்கிச்சூடுகூட நடக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உள் பகுதியான குடமாடி மற்றும் கன்னிகட்டிப் பகுதிகள் இரண்டிலும் பாரஸ்ட் தலைமையிலான அலுவலகத்தை அமைத்தீர்கள் என்று சொன்னால், அது மிகவும் வசதியாக இருக்கும்.

முற்பகல் 11-55

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சமயம் அம்பாசமுத்திரம் தொகுதி என்று சொன்னாலே, போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு வளமான பகுதி எங்கள் அம்பாசமுத்திரம் பகுதி. ஆனால் இப்பொழுதெல்லாம் அம்பாசமுத்திரம் என்று சொன்னால் பெண் கொடுப்பதற்கு யோசிக்கிறார்கள். காரணம் சிறப்பாகச்



2002 ஏப்ரல் 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

செயல்படும் மதுரா கோட்ஸ் ஆலையில் 10,000 பேர்கள் வேலை பார்த்து வந்த தொகுதி, இன்று நவீனப் பொருளாதார கொள்கை மூலமாக இயந்திரங்கள் நவீனமயமாக்கப்பட்டு வேறு வழியில்லாமல் அங்கே ஆட்கள் V.R.S.-ல் குறைக்கப்பட்டதினால் இந்தத் தொகுதி பொருளாதார செழிப்பு இழந்திருக்கிறது. இங்கு திருவனந்தபுரம் மலை வழிச்சாலை ஒன்று இருக்கிறது. அரசு அதிகாரிகள் அந்தப் பகுதியில் பாதையை அமைத்தால் மலை வளம் குறைந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலை அதுவல்ல. அந்தப் பாதையை அமைத்தார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே நம்முடைய பொருட்கள், நம்முடைய நாட்டிலேயுள்ள அந்த வளமான பொருட்கள் திருடுவது தவிர்க்கப்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் அந்த இடத்தை நேரில் பார்வையிட்டு பாபநாசம் மேற்குத் தொடர்ச்சிமலையிலுள்ள திருவனந்தபுரம் சாலையை நீங்கள் அமைத்துத் தருவீர்களென்று சொன்னால் என்னுடைய தொகுதியும் செழிப்பாகும், இந்த வனத்திலுள்ள மரங்கள் திருடுவதும் தவிர்க்கப்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியிலே பாதையை அமைத்துத் தருவார்கள் என்று சொன்னால் கேரளாவிலுள்ளவர்கள் free-ஆக வந்து திருடிச் செல்வது தவிர்க்கப்படும். மேலும், இந்தப் பாதையை உருவாக்குவதன் மூலம் என்னுடைய தொகுதியும் செழிப்பாகும் என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் வணங்குகிற என்னுடைய இதய தெய்வம் அம்மா அவர்களிடம், சட்டமன்ற உறுப்பினர்களின் முக்கியமான கோரிக்கைகளையெல்லாம் எழுதித் தரச் சொல்லியிருக்கிறார்கள். அதில் நான் இதை முக்கிய கோரிக்கையாக, முதல் கோரிக்கையாக கொடுத்திருந்தேன். மேற்குத் தொடர்ச்சி மலை என்பது இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. பாபநாசம், திருவனந்தபுரம் மலைவழிச் சாலை என்பது எங்கள் ஊரிலிருந்து 23 கிலோமீட்டர். அந்தப் பாதையை மட்டும் நீங்கள் அமைத்துத் தந்தீர்கள் என்று சொன்னால் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதி மக்கள் அம்மாவினுடைய ஆட்சியில் என்றும் அம்மாவிற்கு விசுவாசமாக இருப்பார்கள். அந்த மலைவழிப் பாதையை அமைக்க நீங்கள் மத்திய அரசிடம் பேசி— அரசு அதிகாரிகள் அந்தப் பாதையை அமைத்தீர்கள் என்று சொன்னால் மலை வளம் குன்றிவிடும் என்று சொல்கிறார்கள். உண்மை நிலை அதுவல்ல. இந்தப் பாதையை அமைப்பதினால் நம்முடைய உட்பகுதியிலுளள சந்தன மரங்கள், பல்வேறு மரங்கள் அங்கே களவு போய்க்கொண்டிருக்கின்ற பல

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2002 ஏப்ரல் 29

சமயங்களில் வனத் துறை அலுவலர்களுக்கும், கேரள தீவிரவாதிகளுக்கும்
துப்பாக்கிச் சூடுகூட நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அம்மா
அவர்கள்— இந்தப் பாதையை அமைத்துத் தருவீர்கள் என்று
சொன்னால் வனமும் செழிப்பாகும். என்னுடைய அம்பாசமுத்திரம்
தொகுதியும் செழிப்பாகும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியில்தான் 7 அணைகள்
இருக்கின்றன. இன்று தமிழ்நாட்டிலே அதிகமான அணைகள் உள்ள
தொகுதி எது என்று சொன்னால், அது அம்பாசமுத்திரம் தொகுதிதான்.
அங்கு 365 நாட்களும் வற்றாத ஒரு ஜீவ நதியாக தாமிரபரணி ஆறு
உள்ளது. அந்த ஆற்றில், அகஸ்தியர் அருவி என்று ஒன்று இருக்கிறது.
குற்றாலத்தில்கூட ஆண்டிற்கு 4 மாதங்கள்தான் மழை அதிகமாகப்
பொழிந்து அங்கே ஆறுகளில் தண்ணீர் விழும். ஆனால் இந்த
அகஸ்தியர் அருவியில் 365 நாட்களும் தண்ணீர் விழும். இதற்கு ஒரு
பெரிய வரலாறே உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள்கூட 1992
ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது தாமிரபரணி ஆற்றில் திடீரென்று
ஏற்பட்ட வெள்ளத்தினால் அங்கே 36 உயிர்கள் பலியாகிவிட்டன
என்று கேள்விப்பட்டு 1992-ல் திடீர் என எங்கள் பகுதிக்கு வந்து
அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்கினீர்கள்.
அதை எங்கள் தொகுதியிலுள்ள மக்கள் என்றும் மறக்காமல் உள்ளோம்.
அதற்குப் பிறகு நீங்கள் செய்த நிவாரணத்தின் காரணமாக இன்று
வரை அந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட வெள்ளச் சேதத்தினால்
உயிர்கள் பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் அம்மாவினுடைய
கவனத்திற்குக் கொண்டுவந்து அப்படிப்பட்ட இடத்தில் பல்வேறு
இயற்கைச் சூழ்நிலைகளுடன் அந்த அருவி அமைந்திருக்கிறது.
உண்மையிலே ஒரு தடவை அந்தப் பகுதிக்கு யாரும் வருவார்கள்
என்று சொன்னால், மீண்டும் மீண்டும் வரக்கூடிய அளவுக்கு ஆவலைத்
தூண்டும் ஒரு பகுதி அது. அப்படிப்பட்ட அகஸ்தியர் அருவி என்ற
பகுதி இன்று நம்முடைய பூமிதானத்திலிருந்து 5 கிலோ மீட்டர்
தூரத்திலிருக்கிறது. அந்தப் பகுதிக்கு தினசரி 300 வாகனங்கள்
வருகின்றன. அங்கே ரோடு போடுவற்குக்கூட வனத் துறையினர்—
அவர்களை நான் குற்றமாகச் சொல்லவில்லை. அது புலிகள் காப்பகம்
என்ற பெயரில் இருப்பதால் அதற்கு ரோடுகள் போடுவதற்கு—அனுமதி
அளிக்க மறுக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் மாண்புமிகு
அம்மாவினுடைய கனிவான கவனத்திற்கு ஒன்றே ஒன்றைச்



2002 ஏப்ரல் 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புலிகளின் காப்பகத்தினை அரசு
வளப்படுத்துவதற்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டவன் அல்ல;
நம்முடைய அரசும் இல்லை என்பது தெரிந்தாலும் என்னுடைய
அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள வனப் பகுதியில்தான் 2 பவர்
ஹவுஸ்கள் இருக்கின்றன. நம்முடைய அந்த பவர் ஹவுஸில்
கிட்டத்தட்ட 210 குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாக 90
குடும்பங்களும் ஆக மொத்தம் 300 குடும்பங்கள் அங்கே தினசரி
வேலை செய்து கொண்டிருக்கின்றன. எனவே, போக்குவரத்து என்பது
தடை செய்யமுடியாத ஒரு சூழ்நிலை. ஏனென்று சொன்னால், தினசரி
அங்கே பவர் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு ஒரு பெரிய
துறையே இருக்கிறது. அப்படிப்பட்ட EBயின் அருகில்தான் இந்த
அருவியும் இருக்கிறது. எனவே, புலிகள் காப்பகம் என்ற ஒன்று
இருந்தாலும், எனது தொகுதிக்கு விதிவிலக்கு கொடுத்து இந்த
தொகுதியிலே உள்ள அருவி, சாலை மற்றும் அருவியைச் சுற்றி
மேம்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுகிறேன். லோயர் டேம்,
காளிகுடியிருப்பு, காளையார், சேர்வலார் ஆகிய பகுதி மக்கள், 30
வருடங்களாக இருப்பவர்களுக்கு மின்சாரம்கூட கொடுக்க
மறுக்கப்படுகின்றது. எனவே, அந்தப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம்
அம்மா அவர்களின் ஆட்சியில் மின்சாரம் கிடைக்கும் என்று நம்பிக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்க
வேண்டுகிறேன். எனவே, புலிகள் காப்பகம் என்பதை நாம் ஊக்குவிக்கிற
அதே வேளையில் அங்கே சில தொழில்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்க முடியாது என்ற காரணத்திற்காக
இதற்கு சற்று விதிவிலக்கு அளித்து எங்களின் பாபநாசம் மலையிலுள்ள
மக்களுக்குத் தேவையான சாலை வசதிகளையும் செய்து தருமாறு
நான் மாண்புமிகு அம்மா அவர்களிடம் இந்த நேரத்தில் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து மாண்புமிகு அம்மா அவர்களிடம் நான் எனது
தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லி முடிக்கலாம்
என்று கருதுகிறேன். அம்மா, என்னுடைய தொகுதி 7 அணைகள்
கொண்ட வளமான தொகுதி. ஆனால், 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட
பயங்கரமான வெள்ளத்தால், புயலால் அணைகள் அதிகமாக
பாதிக்கப்பட்டுள்ளன. அதிலும் இராம நதியின்மேல் ஓர் அணை
இருக்கிறது. இராம நதி அணையின் கால்பாகம் மரங்களாலும்
மணலாலும் மூடப்பட்டிருக்கிறது. ஒருமுறை மழை பெய்தால்கூட

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2002 ஏப்ரல் 29

அந்த அணையிலிருந்து தண்ணீர் வெளியேறி விவசாயம் செய்ய முடியவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை கூர்ந்து அந்த அணையை தூர்வாரச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தூர்வார பத்தேகால் கோடி ரூபாய் தேவை என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். அப்படி ஒருவேளை நிதி நெருக்கடி இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த அணை வறண்டிருக்கிற நேரத்தில் மணலை அள்ளச் சொன்னால்கூட இரண்டு மாதத்தில் அந்த அணையை தூர் வாரிவிடுவார்கள். எனவே, அம்மா அவர்கள் எங்கள் விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் பாதம் தொட்டு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காரையாறு—முண்டந்துறை பாலம். தாங்கள் அதை 1992-ல் வந்து பார்வையிட்டீர்கள். அந்த நேரத்தில் பாலம் கட்ட மதிப்பீடு ரூ.36 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டது. பிறகு அது 60 இலட்சம் ரூபாயாகி, பிறகு ஒன்றேகால் கோடி ரூபாயாகி இன்றைக்கு மூன்றே கால் கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்போது மிலிட்டரியிலிருந்து வந்து போட்ட செயற்கைப் பாலம்தான் இப்போதும் அந்த ஆற்றில் இருக்கிறது. தங்களுடைய முயற்சியால் அந்த நேரத்தில் 1992-ல் போடப்பட்ட அந்த மிலிட்டரி பாலம்தான் இன்னும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அது எவ்வளவு நாள் தாங்கும் என்று சொல்லமுடியாது. மேலும், அந்தப் பகுதியில், அதற்கு அருகில்தான் 2 பவர் ஹவுஸ்கள் இருக்கின்றன. இரண்டு அணைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் காரையாறு—முண்டந்துறை பாலத்தை அமைத்துத் தருமாறு உங்கள் பாதம் தொட்டு நான் வேண்டுகிறேன்.

மேலும், எங்கள் தொகுதியைச் சுற்றி ஆறுகள் இருந்தாலும் கடந்த ஆட்சியில் 100 சதவிகிதம் தன்னிறைவு பெற்ற பகுதி என்று அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இன்னும் அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஆற்றின் அருகிலே நாங்கள் இருந்தாலும்— எங்கள் ஊர் ஆற்றிலிருந்து 200 கிலோ மீட்டர் 300 கிலோ மீட்டர் தூரம் உள்ள கோவில்பட்டி, சாத்தூர் போன்ற இடங்களுக்குக் குடிநீர் செல்கிறது; அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால்— ஆற்றின் அருகில் இருக்கிற தெற்கு பாப்பான்குளம், ஜமீன் சிங்கம்பட்டி, அயன் சிங்கம்பட்டி, வைராவி குளம் ஊராட்சியில் உள்ள எங்களுடைய மக்களின் குடிநீர்ப் பிரச்சினை



2002 ஏப்ரல் 29] [திரு. எம். சக்திவேல் முருகன்]

தீர்க்கப்படாமல் பல கிராமங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பகுதிக்கான குடிநீர்த் திட்டம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட திட்டம்தான் இப்போதும் இருக்கிறது. இதில் மேலும் கடையம் சேர்வைக்காரன்பட்டி, புலவனூர், சிவந்திபுரம் ஊராட்சியும் அடங்கும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றின் அருகில் உள்ள எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் அதிகமாகக் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறும் கூடுதல் குடிநீர்த் திட்டம் தருமாறும் உங்கள் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் சிவந்திபுரம் ஊராட்சி இருக்கிறது. அது 1965 ஆம் ஆண்டிலிருந்து இனாம் ஒழிப்புத் திட்டம் என்ற பெயரில் விடுதலை பெற்றிருந்தாலும்கூட- இன்னும் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. 11,000 மக்கள் தொகை கொண்ட பெரிய ஊராட்சி அது. அங்கு உள்ளவர்களுக்கு பட்டா கிடைக்காமல் இன்னும் சங்கடப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். 30 ஆண்டுகளாக வீடுகளில் குடியிருந்தும் பட்டா கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் பட்டா கிடைத்தால் என்னுடைய தொகுதியில் மிகப்பெரிய சாதனை படைத்ததாக ஆகிவிடும் என்ற நம்பிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இதை வேண்டுகோளாக விடுக்கிறேன். அதிகாரிகள் பட்டா வழங்கினாலே போதும். பட்டா இல்லாததன் காரணமாக, 30 ஆண்டு காலமாக சொந்த வீடுகளில் குடியிருந்தும் பி.எப். லோன் போன்றவை வாங்க முடியவில்லை. காரணம், பட்டா இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, அவர்களுக்கு பட்டா கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அருள்கூர்ந்து ஆவன செய்யுமாறு உங்கள் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாஞ்சோலை பிரச்சினை. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு சம்பளப் பிரச்சினை இருந்துகொண்டு இருக்கிறது. கடந்த ஆட்சியில் 17 பேரை பலி வாங்கிய தாமிரபரணி ஆற்றுச் சம்பவம் நடந்த அந்த மாஞ்சோலை எனது தொகுதியில்தான் இருக்கிறது. அந்த மாஞ்சோலைத் தொழிலாளர்கள் மீது, சம்பளம் சம்பந்தமாக கோர்ட்டில் தாவா இருக்கிறது. அது பைசலாகி தீர்ப்பு வரும்வரை இடைக்கால நிவாரணமாக ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ்-ஆக இரண்டு மாதமாக நிர்வாகம் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது இரண்டு மாதங்களாக அந்த அட்வான்ஸ் ரூ.1000 கொடுக்கமாட்டோம் என்று சொல்கிறார்கள். பழைய சம்பளத்தை வாங்குங்கள், அட்வான்ஸ் தரமுடியாது என்று சொல்கிறார்கள். அந்தத் தீர்ப்பு வருகிற வரைக்கும்

அம்மா அவர்கள் நம்முடைய தொழிலாளர் நலத் துறை மூலமாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 25 நாட்கள், 30 நாட்கள் வேலை செய்தால் சுமார் 2,500 ரூபாய் சம்பளம் வரும் என்று நினைக்கிறேன். பிரச்சினை இருப்பதால், அட்வான்ஸ் ரூ.1000 கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் தீர்ப்பு வருகிற வரைக்கும் இந்த ஆயிரம் ரூபாயை அட்வான்சாகத் தரச்சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். கம்பெனி நிர்வாகம் சம்பளத்தை வாங்கு என்று சொல்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் அவர்களுக்குக் கிடைப்பதற்கு அருள்கூர்ந்து தொழிலாளர் நலத் துறை மூலம் ஆவன செய்யுமாறு உங்கள் பாதம் தொட்டு வேண்டிக்கொள்கிறேன். அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் அனுமதி அளிக்கப்பட்டு, பின்வராமல் இருக்கும் . "விரைவு நீதிமன்றத்தை". மீண்டும் எனது அம்பாசமுத்திரத்தில் அமைக்க வேண்டுகிறேன்.

40 ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் நடத்தப்படாத அம்பாசமுத்திரம் அருள்மிகு காசிநாதர் ஆலயம், மன்னார்கோயில் ஆலயம், அம்பாசமுத்திரம் அருள்மிகு திருமூலநாதர் ஆலயம், ஊர்க்கார கோடீஸ்வரர் ஆலயம், பாபநாசம், அருள்மிகு பாபநாச சுவாமி கோயில் ஆகிய ஆலயங்கள் மன்னர் காலத்தில் கட்டிய பிரசித்தி பெற்ற கோயில்களாகும். அந்த ஆலயங்களுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கும்பாபிஷேகம் நடத்தி நிறைவேற்றித் தருமாறு உங்கள் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன். அங்கேயுள்ள 3 தேர்கள் பழுதுபட்டு ஓடாமல் நின்று கொண்டிருக்கின்றன. அருள்மிகு மூலநாதர் கோயில்தேர், அருள்மிகு காசிநாதர் கோயில் தேர், பட்டவராயர் கோயில் தேர் என மூன்று தேர்கள் பழுதுபட்டிருக்கின்றன. ஏற்கெனவே, நான் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாகக் கொடுத்திருக்கிறேன். அந்தத் தேர்களை, நம்முடைய அம்மாவினுடைய ஆட்சியில் — ஏனென்று சொன்னால், சாமிகளுக்குக்கூட நம்முடைய அம்மாவினுடைய ஆட்சியில்தான்— எல்லாக் காரியங்களும் நடத்தப்பெற்று வருகின்றன. எனவே, அந்தத் தேர்களைப் பழுதுநீக்கித் தருமாறு கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் இந்த நேரத்திலே கடைசியாக அம்மா அவர்களிடம் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)



பிற்பகல் 12-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அம்மா அவர்கள் பேரவையில் அமர்ந்திருந்தாலும்கூட, நேரடியாக அம்மா, அம்மா என்று எனக்கே address செய்து பேசக்கூடாது. எந்தக் கருத்தைத் தெரிவிப்பதாக இருந்தாலும், எந்தக் கோரிக்கையை வைப்பதாக இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்துத்தான் பேச வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** அம்மாவினுடைய கட்டளையை நான் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், கடந்த ஆட்சியிலே ஒன்றுக்கும் இல்லாத சிறுசிறு அரசு அறிவிப்பைக்கூட, கோடிக்கணக்கான ரூபாய் திட்டத்தைப்போல, கிராம மக்களுக்குத் தெரியும்படி, ஒரு கடுமையான விளம்பரம் செய்து, 'பொற்கால ஆட்சி' பொற்கால ஆட்சி' என்று கூறிக்கொண்டு, நமது கழகக் கண்மணிகளை பொய் வழக்குகளுக்குத்தான் ஆளாக்கினார்கள். நான் மதுரா கோட்ஸ் ஆலையிலே இரவு வேலைக்குச் சென்றுவிட்டு, காலையிலே வீட்டிற்கு வருவேன். எனது வீட்டிலே, காவல் துறையினர் இருப்பார்கள். கேட்டால், தி.மு.க. கொடியை நீங்கள் இரவில் வெட்டிவிட்டீர்கள்; உங்கள் மீது வழக்கு என்று கூறிவிடுவார்கள். இப்படி இயக்கத்திற்கு ஒருபக்கம், இவ்வாறு பல்வேறு தண்டனைகளைத் தந்து, கடந்த ஆட்சியில் அழிக்கப் பார்த்தார்கள். மறுபக்கம் அவர்கள் சிறுசிறு காரியங்களைக்கூட பெரிய சாதனையைப் போல விளம்பரப்படுத்தினார்கள். ஆனால், அம்மாவினுடைய ஆட்சியில், இந்த ஒரு வருட காலத்தில், யாருமே செய்ய முடியாத சிறப்பான சாதனையான ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியது; விவசாயிகளுக்கு ரூ.310 கோடி அளவுக்கு அபராத வட்டி, வட்டி தள்ளுபடி செய்தது; இப்போது one time settlement என்ற திட்டத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகளின் கடனுக்குச் சலுகை அளித்தது; எந்தவொரு குறுக்கீடும் இல்லாமல், இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், டாக்டர்களைத் தேர்வு செய்தது; பல ஆண்டுகளாக ஏங்கி, பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பயின்றவர்களுக்கு மீண்டும் அவர்களுக்கு நல்வாழ்வு அளித்தது; வேளாண்மைத் துறையில் அதிநவீன புரட்சிகள் செய்து, பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கியது என இப்படி பல்வேறு

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2002 ஏப்ரல் 29

திட்டங்கள். நமது ஆட்சியின் சாதனைகள். அதிலுள்ள உண்மை விவரங்களை நகரம் முதல் பாமர மக்கள் வரை, ஏன் பேரூராட்சிகளிலும்கூட, நம்முடைய அம்மாவின் அரசு அதிகாரிகள், எளிமை என்ற பெயரால் மறைக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவிகளுக்கு சைக்கிள் அளித்த நேரத்தில்கூட அந்த நிகழ்ச்சிக்கு wall poster கூட ஒட்டவில்லை. அதை நான் அதிகாரிகளிடம் கேட்கும்போது அம்மாவினுடைய உத்தரவு wall poster-ஒட்டக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் என்றார்கள். நாம் இலவச சைக்கிள்கள் வழங்கியது தொகுதியிலே பாதி பேர்களுக்கு, வந்த பிறகுதான் தெரிகிறது. நான் பணிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்வது. இப்படிப்பட்ட பல்வேறு மகத்தான சேவை செய்த நம்முடைய அரசு. அதிகாரிகள் மூலம் முறையாக விளம்பரப்படுத்த வேண்டும். நம்முடைய அரசு, இதுவரை யாருமே செய்யாத பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது என்பதைப் பாமர மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும். நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்; ஒரு கெட்டது என்றால், உடனே மக்களுக்குத் தெரியும் என்பார்கள்; நல்லது என்றால் அந்த அளவுக்கு விளம்பரம் ஆகாது; தெரியாது என்பார்கள். ஆனால், நல்லதைச் செய்கின்ற நம்முடைய அரசு, அதை முறையாக விளம்பரப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இன்றைக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றிகூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், வனத் துறையின் மூலமாக, பல குடிநீர்த் திட்டங்களுக்கு எல்லாம் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வனத் துறையினர் அனுமதி தருவதில்லை. ஆதிவாசிகளான தோடர் இன மக்கள் எல்லாம் 124 மந்துகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். குடிநீர்ப் பிரச்சினைக்கு நமது அரசு முன்னுரிமை தருவதால், குடிநீர்ப் பிரச்சினைகளில் வன இலாகா விதி எதுவாக இருந்தாலும் அங்கு வாழும் மக்களுக்கு வழிவகை செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 29] [திரு. எச்.எம். ராஜு]

பிற்பகல் 12-10

இரண்டாவதாக, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் வழியில், எப்போது பார்த்தாலும், இரண்டு, மூன்று வினாடிக்கு ஒரு வண்டி, வாகனம் அங்கே செல்வதைப் பார்க்கிறோம். அதற்காக ஒரு மாற்றுப் பாதையாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1991-96-இல் இருந்தபோது, நாங்கள் வைத்த கோரிக்கையை நிறைவேற்றித் தந்தார்கள். ஆனால், கடந்த கால அரசு அதை நிறைவேற்றாமல், 1.3 கிலோ மீட்டர் அளவுக்கு மட்டும் வனத் துறை அனுமதி வழங்கவில்லை. அந்த அனுமதி வழங்கப்பட்டால் புதிதாக உருவாக்கப்பட்ட குந்தா தாலுகாவினுடைய மக்கள் அனைவரும் முள்ளியூர் ஊராட்சி, பாலகுவா ஊராட்சி, மேலூர் ஊராட்சி, குந்தா ஊராட்சி, கீழ்க்குந்தா பேரூராட்சி மக்கள் எல்லாம்—5, 6 ஊராட்சி மக்கள் எல்லாம்—அந்தச் சாலையை உபயோகித்து, காரமடை சென்று, காரமடையிலிருந்து கோயம்புத்தூருக்கு வந்து சேரலாம்; ஆக் வாகன நெரிசல் குறையும்; அந்த வழியானது நீலகிரி மாவட்டத்தில் உதகை சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட மேலூர் ஊராட்சியில் உள்ள கொலைக்கொம்பை, உட்லண்ட்ஸ், மானார் எஸ்டேட், பல்மராலிஸ் சாம்பார் எஸ்டேட்— அந்த வழிகளுக்குப் பிறகு மேட்டுப்பாளையம் தொகுதி ஆரம்பிக்கிறது; 1.3 கிலோ மீட்டர் தூரம் மட்டிலும் நிலுவையில் இருக்கிறது; மீதி உள்ள பகுதிகளில் எல்லாம் தார் போட்டாகிவிட்டது. 1946-ல் அன்றிருந்த வெள்ளைக்காரன் ஒருவன் அந்த வழியை கண்டுபிடித்துச் சென்று கொண்டிருந்தான். அதற்குப் பிறகு நான் சட்டமன்ற உறுப்பினராக ஆன பிறகு அந்த வழியை 1992-ல் பார்த்து, அந்தப் பாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து அவர்கள் எங்களுக்கு அனுமதி கொடுத்தார்கள். அந்தப் பணி இன்னும் நிலுவையிலே இருக்கிறது. அதை தயவுசெய்து செய்து கொடுத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் 25 கிலோமீட்டர் தூரம் குறைக்கப்பட்டு செல்வதுடன், நேரமும் குறைவாக எடுத்துக் கொண்டு, கோயம்புத்தூர் வழியாகச் செல்லலாம். தயவுசெய்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பாதைக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி கிண்ணக்கோரை என்ற கிராமம் உதகையிலிருந்து 72 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சூரிலிருந்து 36 கிலோ மீட்டர் தூரம். அங்கு வன அலுவலகம் ஒன்றும் கிடையாது. வனத் துறையினருக்கும் மற்றும்

பொதுமக்களுக்கும் அங்கிருந்து ஒரே ஒரு பாதைதான் இருக்கிறது. இப்போது கிண்ணக்கோரையிலிருந்து மஞ்சூருக்கு வரும் பாதை அது. அந்த கிண்ணக்கோரையிலிருந்து கெத்தைக்கு ஒரு பாதை, கடந்த கால ஆட்சியிலே நிலுவையில் வைத்துவிட்டார்கள். இதுவும் 1991-96-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அனுமதி கொடுத்த, அந்தப் பணியும் நிலுவையில் இருக்கிறது. (குறுக்கீடு) 500 மீட்டர் தூரம் மட்டும் பாக்கி இருக்கிறது. மீதியுள்ள சாலைக்கு தார்ச்சாலை எல்லாம் போட்டாகிவிட்டது. 500 மீட்டர் தூரம் மட்டும் போட்டுவிட்டீர்களேயானால், அதற்கு அனுமதி கொடுத்து விட்டீர்களேயானால்—500 மீட்டர் தூரம் மட்டும்தான் இருக்கிறது—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் செய்து கொடுத்துவிட்டால், மாற்றுப் பாதைகள் எல்லாம் சரியாகிவிடும். கடந்த காலத்திலே கிண்ணக்கோரையில் வரலாறு காணாத அளவுக்கு ஒரு நிலச்சரிவு ஏற்பட்டபோது 15 நாட்கள் நாங்க்ள் எல்லாம் அங்கு செல்ல முடியவில்லை. அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவரும் நானும் அங்கேயே 5 நாட்கள் இருந்து பிணங்களை எல்லாம் எடுத்தது எல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆக ஒரு மாற்றுச் சாலை வேண்டும்; கண்டிப்பாக மக்களுக்காகத்தான் எந்தத் துறையும் இருக்கிறது; மக்களுக்காகத்தான் அரசு இருக்கிறது. ஆகவே, மக்களுக்கு அந்தப் பாதை கண்டிப்பாக சீர் செய்யப்பட்டு கொடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி சுற்றுலாத் துறையை எடுத்துக்கொண்டால் இன்றையதினம் பிரசித்திபெற்ற ஊட்டியிலே படகு இல்லம் இருக்கிறது. படகு இல்லத்தைப் பார்த்தால், மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆகாயத் தாமரை — ஹயாசிந்த் என்று சொல்லுவார்கள்; — படகு இல்லத்தை மூழ்கடித்துவிட்டது. கடந்த காலத்தில், 95 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்து இருக்கிறது. அந்த 5 ஆண்டு காலத்தில் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. ஒரு பணியும் செய்யப்படவில்லை. நாளடைவில் இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் கண்டிப்பாக ஆகாயத் தாமரை அந்தப் படகு இல்லத்தையே மூடிவிடும் ஓர் அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்து இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாயும் தந்து இருக்கிறார்கள். ஆக, என்ன செய்கிறோம் என்று பார்க்க வேண்டும். நிரந்தரமாக ஏதாவது செய்ய வேண்டும். ட்ரெட்ஜர் போன்ற இயந்திரங்களை எல்லாம் வைத்தால்கூட போதாது. இண்டர்நெட்





வசதிகள் எல்லாம் இருக்கும்போது, எப்படிச் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நாம் பார்க்க வேண்டும்; இல்லையென்றால் நம்முடைய அரசு அதிகாரிகள் அயல்நாட்டிற்குச் சென்று இதைத் தீவிரமாக சிந்தித்து இங்கு நிரந்தரமாக ஆகாயத் தாமரையே வளரவிடாமல் மக்களுக்கு உதவி செய்யும் வகையில் என்ன செய்ய வேண்டுமென்ற ஒரு சிறப்பான திட்டத்தைத் தீட்டினால்தான் அந்தப் படகு இல்லம் சிறப்பாகச் செயல்படும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், முக்குருத்தி, கிண்ணக்கோரை அப்பர் பவானி போன்ற பகுதிகள் எல்லாம் சுற்றுலாத் தலங்களுக்கு உரிய சிறப்பான இடங்கள். அந்த இடங்களை எல்லாம் சுற்றுலாத் தலங்களாக அமைத்தால் கண்டிப்பாக அங்குள்ளவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கும்; அங்குள்ள மக்களுக்கு நல்ல வசதிகள் ஏற்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட காலமாக மக்கள் எங்களுக்கு கோரிக்கை வைத்ததெல்லாம் கேபிள் கார் வேண்டும் என்பதுதான். நானும் சொல்லியிருந்தேன். டைகர் ஹில்லில் இருந்து மேல்ஓடையரட்டி வரைக்கும் அல்லது தொட்டபெட்டாவிலிருந்து ஊட்டி வரைக்கும் அல்லது பூங்கா வரைக்கும்—கேரளாவில் உள்ள மலம்புழாவில் போட்டதுபோல் — அமைத்துத் தாருங்கள் என்று மக்கள் கேட்கிறார்கள். ஆகையால் எந்தவகையில் எது சரி என்று தென்படுகிறதோ அதை ஆராய்ந்து, அரசு கேபிள் கார் வசதி செய்து கொடுத்தால் சுற்றுலாத் துறைக்கு அதிக அளவிலே இன்னும் வசூல் ஆகும்.

பிற்பகல் 12-15

அடுத்து இந்த சுற்றுலாத் துறை மூலமாக நடைபெறும் ஓட்டல்கள் எல்லாம் இன்னும் நவீனமாகச் செயல்பட வேண்டும். இன்னும் நாம் அதை சீர்திருத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பழைய காலத்தைப் போன்றுதான் இருந்து கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் சீர்திருத்தினால் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவிலே வருவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீலகிரி மாவட்டத்திலே உள்ள ஓட்டல்களில் 24 மணி நேரம் ஒரு அறையை எடுத்தால் அவர்கள், 24 மணிநேரம் வரைக்கும் கெடு கொடுப்பார்கள். இன்றையதினம் பத்திரிகையிலே பார்த்தால் மதியம் 12 மணிக்குள் அறையைக் காலி செய்யவேண்டும் என்ற வகையிலே செய்தி காணப்படுகிறது என்று அறிய வருகிறோம். ஆகவே, அந்தமாதிரி இல்லாமல் செக் அவுட் டைம் 12 Noon என்பதைக் காட்டிலும் முன்பிருந்தது மாதிரி இருக்க வேண்டும். ஏனென்றால், ஏப்ரல், மே,

ஜூன் மாதங்களில் இரட்டிப்புக் கட்டணம் மீதியுள்ள 9 மாதங்களில் சாதாரணமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஜூன் ஆகிய 3 மாதங்களில் இரட்டிப்புக் கட்டணமும், ஏப்ரல், மே, வசூலிக்கப்படுகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகள், அவர்கள் அறைக்கு வரும் நேரத்திலிருந்து 24 மணி நேரம் என முன்பு கொடுத்துக் கொண்டிருந்ததுபோல கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

சுற்றுலாத் துறையில் கோத்தகிரி, கூடலூர், குன்னூர், புதிதாக ஆரம்பித்த நமது குந்தா தாலுகா போன்ற பகுதிகளில் நிறைய புதிய சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் இதை மனுவாகக் கொடுக்க இருக்கிறேன். அவற்றையெல்லாம் சுற்றுலாத் தலங்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எனது அன்பு தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்களை வணங்கி,

'அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க அன்பில்லாதவர் எப்பொருளையும் தாமே அனுபவிப்பர். அன்புடையவர் தம் பொருள் மட்டுமன்று தமது உடைமையையும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறருக்கு உரிமையாக்குபவர் என்பதற்கிணங்க தமிழ் மக்கள் மீது கொண்ட அழியாத அன்பின் காரணத்தால், தன்னையே தமிழக மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்ட அன்னையே, தனது சொந்தக் குரலால் திரைப்படத்தில் பாடிய முதல் பாடலே

அம்மா என்றால் அன்பு,
அப்பா என்றால் அறிவு,
ஆசான் என்றால் கல்வி,
அவரே நமது தெய்வம்



என்பது. அப்பேர்ப்பட்ட அன்பின் இலக்கணமாகவும், மறைந்தும் மறையாமல் நம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் ஆட்சியில் இருந்தபோது மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைதூரக் கல்வி மூலம் 1984-ல் மைசூர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. அரசியல் விஞ்ஞானம் பயின்றபோது, தனது படிப்பு தொடர்பாக உலகப் புகழ்பெற்ற அரசியல் அறிஞர் அரிஸ்டாட்டில் எழுதிய "Until Philosophers are Kings`` என்ற ஆயிரம் பக்கங்களைக் கொண்ட ஆங்கிலப் புத்தகத்தை ஒரு பேராசிரியர் மூலம் புரட்சித் தலைவர் பெற்று அந்தப் புத்தகத்தை அம்மாவிடம் வழங்கியதாகவும், அந்தப் புத்தகத்தை ஒரே இரவில், அனைத்தையும் படித்து முடித்து, ஆயிரம் பக்கங்களிலும் குறிப்பு எடுத்துவிட்டு மேலும் புத்தகம் வேண்டுமென்று கேட்டபோது, கொடுத்தனுப்பிய புத்தகத்தைப் படித்து முடியுங்கள், இரண்டு நாட்கள் கழித்து வேறு புத்தகம் தருகிறேன் என்று பதில் அளித்துள்ளார், அந்தப் பேராசிரியர். ஆனால், அம்மா அவர்களோ தான் எடுத்த குறிப்புகளை அந்தப் பேராசிரியருக்கு அனுப்பிவைத்து விளக்கம் கேட்டார். என்ன விளக்கம் என்று சொன்னால், புரட்சித் தலைவி படித்த அத்தனை பக்கங்களிலும் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை அந்தப் பேராசிரியருக்கு மேற்கோள் காட்டி அனுப்பியிருந்ததைப் பார்த்து அந்தப் பேராசிரியர் மிகவும் அதிர்ச்சியுற்று நேற்றுதான் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தோம். அதற்குள் அம்மா அவர்கள் அனைத்துப் பக்கங்களையும் படித்து தனது சந்தேகத்தைக் கேட்டிருக்கிறார்களே என்று ஆச்சரியத்தோடு பேசுகின்ற அளவிற்கு அறிவுப் பெட்டகமாக திகழ்ந்தார் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

தமிழக அரசியல் வரலாற்றில் எந்த ஒரு கட்சியும் அதிக இடங்களில் போட்டியிட்டு அறுதிப் பெரும்பான்மை பெற நினைக்கும். ஆனால், நம்முடைய அன்னை நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே குறைவான இடங்களான 142 இடங்களிலே போட்டியிட்டு 133 இடங்களில் வெற்றி வாகை சூடி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அந்த அளவுக்கு துணிவு மனப்பான்மை கொண்டவர். அன்பு, அறிவு, துணிவு ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமாகவும், தமிழகத்தின் அடையாளமாகவும், தமிழர்களின் முகவரியாகவும், தமிழின் அங்கீகாரமாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் எங்களின் அன்புத் தாயை வணங்குகிறேன்.

'மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்', என்பதற்கிணங்க காடு வளர்ந்தால் நாடும் வளரும் என்ற உயர்ந்த இலட்சியத்தின் அடிப்படையில், இன்றைக்கு வனத் துறையை, வனப்பு மிக்க துறையாக மாற்றுவதற்கு புரட்சிகரமான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களை நெஞ்சம் நிறைந்த நன்றி உணர்வோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டு மக்களைப் பற்றிச் சிந்திக்கின்ற அதே நேரத்தில் காட்டு விலங்குகளைப் பற்றியும் சிந்திக்கின்ற மனித நேயம் மிக்க தலைவியாக டாக்டர் புரட்சித் தலைவி திகழ்ந்து வருகின்றார்கள். கோடை வெயிலின் வெப்பத்தைத் தணிக்க தண்ணீர்ப் பந்தல் திறந்து வைத்து மக்களின் தாகம் தீர்க்கும் அதே நேரத்தில், காடுகளில் துள்ளித் திரியும் புள்ளி மான்களுக்கும், தண்ணீர்த் தொட்டியினைத் திறந்து வைத்து சாதனை சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்.

நாட்டில் சுற்றுச் சூழல் என்பது வனவளத்தைப் பொறுத்தே அமைந்துள்ளது. ஏழை எளிய மக்களின், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களின் அன்றாடத் தேவையை தன்னிறைவு செய்யும் வகையில் பெரிதும் உதவுகின்ற துறையே வனத் துறை.

பழங்கால கோயில்கள், நமது கலாச்சாரத்தின் அடையாளச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பதே நமது கடமையாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நமது வாழும் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் தனது தொலைநோக்கு சிந்தனைத் திறத்தால், அழிந்து வரும் காடுகளையும் பாதுகாப்பதில் மாபெரும் புரட்சியைச் செய்துள்ளார்கள். 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 108 கிராமங்களை "கூட்டு வன வள மேலாண்மை" திட்டத்தின்கீழ் கொண்டு வரத் திட்டமிட்டு, பாதுகாக்கப்பட்ட காடுகளில் அழிந்துவிட்ட நிலையில் உள்ள 86,240 ஏக்கர் பரப்பில் ரூ. 82.99 கோடி மதிப்பீட்டுச் செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வன ஆராய்ச்சிக் கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம் போன்றவற்றை அறிமுகப்படுத்தியும் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதை நான் நன்றியுணர்வோடு பாராட்டுகின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் காடுகள் தீவிரவாதிகளின் கூடாரமாகவும், ஆள் கடத்துவோர்களின் அரண்மனைத் தோட்டமாகவும்



கோடிக்கணக்கான ரூபாய்களை மூட்டை மூட்டையாகக் கொண்டு போய்க் கொடுத்து கடத்தப்பட்டவர்களை மீட்டு வருவதற்கு பேச்சு வார்த்தை நடத்தும் சாகச இடமாகவும், இருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு காடுகளை விலங்குகளின் சரணாலயமாக மாற்றிக் காட்டியவர்தான் நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி.

இந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலமாக ஒரு பணிவான வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன். உலகிலேயே மேங்க்ரோவ் இன தாவர வகையைக் கொண்ட காடுகள் இரண்டு இடங்களிலேதான் உள்ளன. ஒன்று ஆஸ்திரேலியா. மற்றொன்று எனது தொகுதியான புவனகிரி தொகுதியில் உள்ள பிச்சாவரம் வனப் பகுதியாகும். படிக்காத மக்களின் பாடப் புத்தகமாக விளங்கிய திரைப்படத் துறையின் முடிசூடா மன்னன், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களால் இதயக்கனி என்ற திரைப்படம் மூலம் அடையாளம் காட்டப்பட்ட பகுதியே பிச்சாவரம் வனப்பகுதி. வனம் சார்ந்த இந்த சுற்றுலாப் பகுதியின் பரப்பளவு 1099.35 ஹெக்டேர் ஆகும்.

கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே பிச்சாவரம் வனப் பகுதியில் புதிய வன உயிரின சரணாலயம் அமைத்திட மத்திய அரசுடன் கலந்து ஆலோசனை செய்து அமைக்கப்பட உள்ளது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அப்பணியினை விரைவாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

பிச்சாவரம் வனப்பகுதியில் பெருஉமரி, சிறுஉமரி, மணிஉமரி, வங்காரவாசி, கழிமுள்ளி போன்ற தாவரங்கள் வளர்கின்றன. இது போன்ற சதுப்பு நிலக்காடுகளால் மட்டுமே புயலைத் தடுத்து கிராம மக்களுக்கு பாதுகாப்பைத் தர முடியும். இந்த வனப்பகுதி கடந்த கால தி.மு.க. ஆட்சியில் புரட்சித் தலைவரால் அறிமுகப்படுத்தப்பட்ட வனப்பகுதி என்ற ஒரே காரணத்தால் பராமரிக்கப்படாமல் சீரழிந்துள்ளது. இப்படி அழிந்து போன தரைப் பகுதியை, பொட்டல் சதுப்பு நிலப்பகுதியை வன இலாகா மூலம் மீன் முள் வடிவத்தில் கால்வாய்களை வெட்டி அதில் மேங்க்ரோவ் இன விதைகளை நேர்த்தி செய்து பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற மேங்க்ரோவ் காடுகள் அழிவதற்கு தண்ணீர்ப் பற்றாக்குறையே காரணம். இதை நிவர்த்தி செய்கின்ற வகையில் முகத்துவாரம் வெட்ட நமது அரசு முன்வருவதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்துள்ள, தமிழ்நாடு காடு வளர்ப்புத்

திட்டத்தின்கீழ், 'கிராம கூட்டு வன வள மேலாண்மை திட்டத்தின்கீழ்' பிச்சாவரம் வனப் பகுதியை தத்து எடுத்து அழிந்து வரும் மேங்க்ரோவ் இனக் காடுகளைக் கொண்ட பிச்சாவரம் வனப் பகுதியைப் பாதுகாத்திட அரசு முன்வரவேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-25

பிச்சாவரம் வனப்பகுதி மிகச் சிறந்த சுற்றுலா மையமாகவும் விளங்குகிறது. பல நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு தினந்தோறும் வந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம் கடந்த தி.மு.க. ஆட்சியில் சரியான பராமரிப்பின்றி கட்டடங்கள் இடிந்தும் சீரழிந்த நிலையிலும் உள்ளன. இதனைச் சீரமைத்திட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வரவேண்டும் என்றும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சாவரம் வனப்பகுதியில் உள்ள தனிச் சிறப்பு என்னவென்றால், படகு சவாரி செய்கின்ற வகையில் 4,443 கால்வாய்கள் உள்ளன. இப்படிப்பட்ட கால்வாய்கள் கொண்ட வனப்பகுதி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் பிச்சாவரம் வனப் பகுதியில், 'சிறப்பு படகு சவாரி இல்லம்' அமைத்துக் கொடுத்திட முன்வரவேண்டும் என்றும் பணிவுடன் வேண்டுகிறேன்.

அதேபோன்று பிச்சாவரம் வனப்பகுதி மீன்வளம் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் சொர்க்க பூமியாகத் திகழ்கிறது. சதுப்பு நிலக் காடுகளைக் கொண்ட இந்த வனப் பகுதியில் வளர்ந்து நிற்கும் மேங்க்ரோவ் காடுகளின் இதமான, பதமான சூழ்நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற தரமுள்ள, தகுதியான செழிப்பான நண்டுகள் மற்றும் இறால் வகைகள் வளர்ந்து வருகின்றன. இவைகள் மேங்க்ரோவ் தாவர இனத்தின் வேர்ப் பகுதியில் நிழலுடன்கூடிய கால்வாய்ப் பகுதியில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்கின்ற வகையில் இப்பகுதியின் சுற்றுச் சூழல் அமைந்துள்ளது. எனவே, சுற்றுலா மையமாகவும், மீன்வளம் மற்றும் கடல்வாழ் உயிரினம் வனப் பகுதிகளைக் கொண்டு பின்னிப் பிணைந்துள்ளது. இப்பகுதி மிகச் சிறப்பான பறவைகள் சரணாலயமாகவும் திகழ்கிறது. வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஹங்கேரி, ருமேனியா, சுவீடன், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலிருந்தும் பிளாக் டெய்ல்டு, காடுவிட், நமுடு,



சாம்பல் நிற கொக்கு, செங்கால் நாரை போன்ற அரிய பறவை இனங்கள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலும், மார்ச், ஏப்ரல், மே மாதங்களிலும் இங்கு வந்து தங்கிவிட்டுச் செல்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பறவைகள் சரணாலயமாகவும் இப்பகுதி திகழ்கிறது. மேங்க்ரோவ் காடுகளைப் பாதுகாப்பதன் மூலம் இப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இருளர் சமுதாய மக்கள் பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைகின்ற வாய்ப்பும் உள்ளது.

மீன்வளம், சுற்றுலா மையம், சிறப்பான வனப்பகுதி, பறவைகள் சரணாலயம், படகு சவாரி செய்ய ஏற்ற இடம் போன்ற பலவும் பின்னிப் பிணைந்துள்ள பிச்சாவரம் வனப் பகுதியினை வனப்பு மிக்க பகுதியாக மாற்றியே தீரவேண்டும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் எல்லா வளமும் அமைந்திருக்கின்றன. கலைநுட்பம் மிக்க தொன்மை வாய்ந்த கோயில்கள் இருக்கின்றன. கண்ணைக் கவரும் கடற்கரைகள், மனதிற்கு மகிழ்வூட்டும் மலைச்சாரல்கள், பறவைகள் வந்து செல்கின்ற பறவைகள் சரணாலயம் உள்ளன. இவை அனைத்தும் கொண்ட பகுதியே பிச்சாவரம் வனப் பகுதி மற்றும் சிதம்பரம் நகரமாகும். உலக அளவிலான சுற்றுலா வரைபடத்திலே Global Tourism Map-ல் நமது தமிழகம் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம் கடந்த கால தி.மு.க. ஆட்சியே.

வனத் துறைக்கும், வனம் சார்ந்த சுற்றுலாத் துறைக்கும் தி.மு.க. ஆட்சியில் அதிகமான நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால், அண்டை மாநிலங்களான உத்திரப்பிரதேசத்தில் 100 கோடியும், கேரளாவில் 32 கோடியும், கர்நாடகத்தில் 36 கோடியும், 1999-2000 நிதி ஆண்டிலே ஒதுக்கப்பட்டன. ஆனால், தமிழகத்தில் இருந்த தி.மு.க. அரசு, சுற்றுலாத் துறைக்கு வெறும் ரூ. 3 கோடி மட்டுமே ஒதுக்கியது. மாற்றந்தாய் மனப்போக்கிலேதான் தி.மு.க. அரசு வனம் சார்ந்த சுற்றுலாத் துறையை நடத்தியது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் வனத் துறையின் வளர்ச்சிக்கு ரூ. 82.99 கோடி ஒதுக்கி மாபெரும் சாதனை படைத்துள்ளார்கள்.

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சுற்றுலாத் துறை சுரேஷ் ராஜன் துறையாக மாற்றப்பட்டு சூறையாடப்பட்டது. போஸ்டர்கள் அடிப்பதிலும், விளம்பரங்கள் செய்வதிலும் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. வனத் துறை மூலம் கிடைத்த சந்தன

மரங்களை எல்லாம் பாதுகாத்திட வேண்டிய தி.மு.க. அரசில் சந்தன மர குடோன்கள் திட்டமிட்டு திருப்பத்தூர் தீவட்டிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டதாகக் கூறி, கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. சந்தன மர குடோன்களை எரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களைக் காப்பாற்றவே கடந்த கால தி.மு.க. அரசு முயன்றது.

கடந்த காலங்களில் தமிழகத்தை ஆட்சி செய்தவர்களை பட்டியல் போட்டுப் பார்த்தால் 15-4-1947 முதல் 5-4-1949 வரை ஆட்சி புரிந்த திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களும், 6-4-1949 முதல் 10-4-1952 வரை ஆட்சி புரிந்த திரு. குமாரசாமி ராஜா அவர்களும், 10-4-1952 முதல் 12-4-1954 வரை ஆட்சி புரிந்த திரு. இராஜாஜி அவர்களும். 13-4-1954 முதல் 1-10-1963 வரை ஆட்சி புரிந்த திரு. காமராஜர் அவர்களும், 2-10-1963 முதல் 5-3-1967 வரை ஆட்சி புரிந்த திரு. பக்தவச்சலம் அவர்களும், ஆண்ட காலத்திலும் 6-3-1967 முதல் 3-2-1969 வரை ஆட்சிபுரிந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், ஊழலென்ற வார்த்தையே தமிழக அரசியலில் இல்லாமல் இருந்தது. ஆனால், 3-2-1969 முதல் 30-1-1976 வரை ஆட்சி புரிந்த தமிழகத்தின் தீய சக்தியான கருணாநிதி ஆட்சியில்தான் ஊழல் என்பதே தெரிய வந்தது. இந்தியத் துணைக் கண்டத்திலே சர்க்காரியா கமிஷனால்.... '

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள், திரு. என்று சேர்த்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** விசாரிக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியில் ஊழல் செய்தார் என்பதற்காகத்தான் தமிழகத்திலே திரு. கருணாநிதியின் ஊழல் ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால், 1980 ஆம் ஆண்டு தனது சுயநலத்திற்காக அன்றைய பாரதப் பிரதமர் அன்னை இந்திராவின் காலில் மண்டியிட்டு, சதி செய்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டது. எனவேதான் அடுத்து வந்த தேர்தலில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'ஊழலற்ற ஆட்சி அமைப்பேன்' என்ற முழக்கத்தோடு தேர்தலைச் சந்தித்தார்கள். இதனை எதற்காகக் கூறுகின்றேன் என்றால் ஊழல் என்பதை அறிமுகப்படுத்தியவரே திரு. கருணாநிதிதான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் சிந்தனை திறத்தாலும், சுந்தரச் சொல்லாலும், சுறுசுறுப்புச் செயலாலும், எங்கள்



தாய் மண்ணாம் தமிழ் மண்ணின் கப்பிய இருளை கழுவித் துடைத்த காவியத் தலைவியே; காசில்லா ஏழையும் அணியும் காஞ்சிப் பட்டே; என்றென்றும் எங்கள் மனங்களில் மங்காமல் ஒளிரும் திருவிளக்கே; அடித்தள மக்களின் படித்துறையான நீங்கள் படித்த நூல்களே பல்கலைக்கழகங்களின் படியேறாதவர்களின் பாடப் புத்தகங்கள். மகான்களே மதிக்கும் மனிதப் புனிதவதியே; அறிவுக் குன்றின் அணையா விளக்கே; அன்புக் கடலின் அமுதப் பிரவாகமே; நீங்கள் கற்றது கடலின் அளவு சிந்தித்ததோ வானின் விரிவு. உங்கள் சிந்தனையில் விளைந்ததல்லவோ புரட்சிகரமான 15 அம்சத் திட்டம்.

பிற்பகல் 12-30

உங்களின் ஒவ்வொரு வார்த்தையும் காற்றைச் செதுக்கி காவியமாக்கும் மகத்துவம் கொண்டவை. கன்னித் தமிழ் எழுதிய காவியப் புத்தகமே, சூன்யமான தமிழகத்தின் சூர்யோதயமே, எங்களின் இராக்காலப் பொழுதின் சந்திரோதயமே, நீங்கள் போட்டியிடத் தேர்ந்தெடுத்த புவனகிரி தொகுதி மக்களின் சார்பாகக் கேட்கிறேன். புரட்சித் தலைவரால் கண்டெடுக்கப்பட்ட பிச்சாவரம் வனப் பகுதியை சிறப்பான சுற்றுலா மையமாகவும், பறவைகள் சரணாலயமாகவும், படகு சவாரி செய்ய ஏற்ற இடமாகவும் மாற்றிட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து உதவ வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப்போல், மக்களிடம் செல், மக்களோடு வாழ், மக்களிடமே கற்றுக்கொள், மக்களிடம் அன்புகாட்டு, மக்களுக்காகப் பணியாற்று, மக்களுக்காகத் திட்டமிடு. மக்களின் தேவைகளை நிறைவேற்றிட பணிகளை மக்களிடமிருந்தே தொடங்கிடு' என்பதற்கிணங்க மக்கள் பணியாற்றும் மகத்தான மக்கள் தலைவியே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை பெற்ற மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் எனச் சூளுரைத்த எங்களின் அன்பு அன்னையே, புதிய வரலாற்றை புதுப் பொலிவுடன் படைத்துக் கொண்டிருக்கின்ற எங்களின் புரட்சித் தலைவியே, சதிகாரர்களின் முகத்திரையைக் கிழித்தெறிந்து, அரசியல் சதி வலைகளை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அறுத்தெறிந்து அரிமா போல் அமர்ந்திருக்கும் எங்களின் அன்னையே,

'பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது'
சிறுத்தையே வெளியில் வா,
எலி என உன்னை இகழ்ந்தோர்

புலி என செயல்பட புறப்படு வெளியில்
சிங்க இளைஞனே
• திருப்பு முகம் - திற விழி
சிம்புட் பறவையே
சிறகை விரி - எழு,

என்பதற்கிணங்கவும் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற நிலையை தூள் தூளாக்கி பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்த பெண்ணினத்தின் பேரரசியே, நீதி வழி நடைபயிலும் நெடும்புகழே, தாயே, தமிழே, பல்லாண்டுக் காலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்குப் பணியாற்றிட நீண்ட பெருவாழ்வு வாழ்ந்திட இறைவனை வேண்டுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் எனக்கு வேண்டும். என்னுடைய தொகுதி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதி சார்பான கோரிக்கையாக இருந்தால், அம்மாவிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** ஒரு முக்கியமான கோரிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேத்தியாத்தோப்பில் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய நிலப் பரப்பு 94 ஏக்கர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 25-11-1987-லே அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்கு 1987-லே நமது ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அதன் திறப்பு விழா 25-8-1990-ல் நடந்தது. அதில் விவசாய சங்கத்தினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 31-03-2001 நிலவரப்படி 20,354 விவசாயிகளைக் கொண்டு அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலை சிதம்பரம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில்தான். இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கள்ளக்குறிச்சி விழாவிலே அந்த அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் *12-35*

1989-90 முதல், முதல் ஆண்டு அரவையாக அங்கே 73,412 டன்னும், 1990-91-லே 4,42,780 டன்னும், 1991-92-லே 4,89,809 டன்னும், 1992-93-லே 3,35,687 டன்னும், 1993-94-லே 2,81,711 டன்னும் 1994-95-லே 6,71,167 டன்னும், 1995-96-லே 5,51,377 டன்னும், 1996-97-லே



3,09,329 டன்னும், 1997-98-லே 3,49,400 டன்னும், 1998-99-லே 4,08,176 டன்னும், 1999-2000-லே 3,65,831 டன்னும், 2000-2001-லே, 3,77,054 டன்னும், அரவை நடைபெற்றது. 2001-2002-லே 3,27,480 டன் அங்கே அரவை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நான் எதற்காக விளக்கமாகச் சொல்கிறேன் என்று சொன்னால் புரட்சித் தலைவர் காலத்திலே 94 ஏக்கர் நிலப்பரப்பிலே அப்போது ஏற்படுத்தப்பட்ட சிதம்பரம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1990-லே எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று அதற்கு பெயரிடப்பட்டிருக்கிறது. அது எந்த அளவிற்கு அப்போதிருந்த அரசு 1990-லே செய்தது என்பதை அந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்களும் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மக்களும் மிகவும் வேதனையோடு அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிதம்பரம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று அடிக்கல் நாட்டப்பட்ட ஆலை எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று ஏன் பெயர் மாற்றம் செய்தார்கள் என்று தெரியவில்லை. ஏனென்று சொன்னால் அது எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய தகப்பனார் பெயரிலே எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி என்று அவருடைய பெயரிலே அது அப்போது நிறுவப்பட்டிருக்கிறது. எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஒரு பெரிய சுதந்திரப் போராட்டத் தியாகியும் அல்ல; நமது நாட்டிற்காகப் பெரிதும் உழைத்துவிடவில்லை. ஏன் 1990-லே அந்த அரசு, அப்போதிருந்த அரசு அவருடைய பெயரிலே இந்தச் சர்க்கரை ஆலையை வைத்தார்கள் என்று தெரியாத காரணத்தினாலே, அம்மா அவர்களுடைய இந்த அரசு—புரட்சித் தலைவர் 25-11-1987-லே அடிக்கல் நாட்டியபோது சிதம்பரம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று வைத்தார்கள். எனவே, அந்தப் பெயர் மாற்றத்தை நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு—சிதம்பரம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அல்லது சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று கூட அந்தப் பெயரை அப்படியே வைக்கலாம். அதனாலே, இந்த அரசு எம்.ஆர்.கே. என்று இருக்கின்ற — அந்தப் பெயரை நிச்சயமாக மாற்றி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு 3-4-2002 அன்று இந்த மன்றத்தில் பேசிய மாண்புமிகு.......... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** இரண்டே இரண்டு நிமிடம். சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள்

[திரு. பி.எஸ். அருள்] [2002 ஏப்ரல் 29

இந்த அரசின் நிதி ஒதுக்கீடு பல துறைகளுக்கு மிகக் குறைவாகவும் பூஜ்யமாக உள்ளதாகவும் குறிப்பிட்டார். கடந்த தி.மு.க. அரசு திறமையற்ற முறையில் ஆட்சி செய்த காரணத்தினால், இந்த அரசு இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு ஒருசில பொருள்களுக்கு வரி போடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக ஒன்றை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்துகின்றபோது அப்போதிருந்த அதிகாரிகள் சிலர் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தமுடியாது; இருக்கின்ற நிதிச் சுமையில் இதுபோன்ற திட்டங்களும் முழுமையாகச் செயல்படுத்தமுடியாமல் போய்விடும். இடையில் நிறுத்திவிட்டால் ஆட்சிக்குக் கெட்ட பெயர் வந்துவிடும் என்றெல்லாம் அதிகாரிகள் சொல்லிப் பார்த்தனர். ஆனால் நடந்தது என்ன என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது ஏழையெளிய குழந்தைகள் பயன்பெறும் இந்தச் சத்துணவுத் திட்டத்தை என் உயிர்மூச்சுள்ளவரை நடத்திக் காட்டுவேன்; நிதிநிலை எப்படியிருந்தாலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த இன்றுமுதல் ஆணையிடுகிறேன் என்று சொன்னார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். உடனே மறுநாள் திரு. கருணாநிதி அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொச்சைப்படுத்தி எம்.ஜி.ஆர். பிச்சைக்காரர்கள் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்; பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகளை தட்டு ஏந்த வைத்துவிட்டார் என்று இந்த சத்துணவுத் திட்டத்தைக் குறை கூறவில்லையா? புரட்சித் தலைவர் கொண்டுவந்த இந்தத் திட்டம் தமிழக மக்களிடையே - ஏன் இந்தியா முழுவதும் நல்ல பாராட்டுப் பெற்ற நிலையில் இடையில் 1989-ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தை பிச்சைக்காரர்கள் திட்டத்தை நிறுத்திவிடாமல் சத்துணவோடு இனி முட்டையும் வழங்கப்படும் என்று ஏன் அறிவித்தது? சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

பிறகு 4-4-2002-லே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி பேசுகின்றபோது, இந்த அரசு ஏழையெளிய மக்கள் பயன்படுத்தும் பட்டுப் புடவைக்கு வரிபோட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார். ஏழையெளிய மக்கள் - அதை நான் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர் பேசிய பேச்சுக்கள் ஏழையெளிய மக்கள்—பயன்படுத்தும் பட்டுப் புடவைக்கு என்று சொன்னார். இப்போதெல்லாம் பட்டுப் புடவைக்கு காஞ்சிப் பட்டு, திருவோணம் பட்டு என்றுதான் சொல்வார்கள்; சேலம் பட்டு என்று கூட தற்போது வந்துவிட்டது. ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற விதத்திலே குறைவான விலையிலே இந்தப்



2002 ஏப்ரல் 29] [திரு. பி.எஸ். அருள்]

பட்டுப் புடவை கிடைக்கின்ற காலகட்டத்திலே அவர் இந்த மாமன்றத்திலே இந்த அரசு மீது ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு பேசினார்கள். நெல்கொள்முதல் செய்ததிலே இந்த அரசு விவசாயிகளின் நெல்லை எடுக்காமல் வியாபாரிகளின் நெல்லைத்தான் வாங்கியதாகக் குறிப்பிட்டார் அவர். அவருக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் கடந்த ஐந்தாண்டு காலத்தில் தேவையற்ற முறைகளில் நெல் கொள்முதல் செய்ததன் விளைவாக இன்றைக்குப் பல இலட்சம் டன் நெல் வீணாக மண்ணாகியுள்ளது என்பதை இந்த நாடே அறியும்.

நான் மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம், மின் துறையில் ஏற்பட்ட பல கோடி நஷ்டத்திற்குக் காரணம் 100-க்கு 50 சதவிகிதம் இவர் வகித்த உள்ளாட்சித் துறைதான் என்பதை உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் இந்த மன்றத்திலே இல்லாவிட்டாலும் நான் இந்த அவையிலே பதிய வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் கொண்டு வந்தார். அதற்கு அளவுகோல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதாவது 2-½ ஏக்கர் நிலம் உள்ள ஏழை விவசாயிக்கு இலவச மின்சாரம் கொடுத்தார். அந்த இலவச மின்சாரத்தை இன்று விவசாயிகள் எத்தனைபேர் பயன்படுத்துகிறார்கள் என்றால், சற்று அதிர்ச்சியான விஷயம் இதில் உள்ளது. இன்று இந்த இலவச மின்சாரத்தை 1,000 ஏக்கர், 500 ஏக்கர், 200 ஏக்கர், 100 ஏக்கர் உள்ள நிலச் சுவான்தார்கள் பயன்படுத்துகிறார்கள் என்ற உண்மையை அம்மையார் அவர்கள் தலைமையிலே இயங்கிக்கொண்டிருக்கிற இந்த அரசு கண்டுபிடித்திருக்கிறது. மேலும் சில விவசாயிகள் மற்ற விவசாய நிலங்களுக்கு மணிக்கு இவ்வளவு தொகை என நிர்ணயித்து தண்ணீர் இறைத்துக் கொடுக்கிறார்கள். அதனால்தான் இந்த அரசு மீட்டர் பொருத்த வேண்டும் என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

பிற்பகல் 12-40

அதைப்போல 9-4-2002 அன்று இம்மன்றத்தில் உள்ளாட்சி இடைத் தேர்தல் சம்பந்தமாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் இந்த அரசைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லி அவர் வெளியே சென்றுவிட்டார். அவர் வெளிநடப்பு என்று சொல்லி சென்ற பிறகும் அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் குறிப்பாக பரிதி இளம்வழுதி, திரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை திரு. அருள் வேண்டாம். அந்தப் பிரச்சினை எல்லாம் வேண்டாம். அதோடு பேசி முடியுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மீனவர் சமுதாய மக்கள் பெரும்பாலும் அதிகமாக வசிக்கின்ற பகுதி. அங்கே 20 ஆயிரம் மீனவர் சமுதாயத்தினுடைய வாக்குகள் இருக்கின்றன. அதேபோல நெசவாளர்களுடைய 15 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன. என்னுடைய புவனகிரி தொகுதியிலே பட்டு சொசைட்டியை பெரும்பாலும் அதிகமாக தொடங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதைப்போல 536 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஒரு பாலம். தில்லைநாயகபுரம் என்ற ஊரிலே 1996-வது ஆண்டு 12-வது மாதம் இடிந்து விழுந்து கிடந்த நிலையிலே இப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அதை நம்பி 25 ஆயிரம் விவசாயிகள் பாசன வசதிக்காக கடைமடைப் பாசனப் பகுதியிலே ஷட்டர் அமைந்திருக்கிற காரணத்தினாலே—5 ஆண்டு காலமாக அந்த ஷட்டர் இடிந்து கிடக்கிறது—இரண்டு முறை பயிரிடுகின்ற விவசாயிகள் சம்பா பயிர்கூட பயிரிடமுடியாத ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இதை அம்மாவினுடைய அரசு நன்கு அறிந்து புதிய ஷட்டர் ஒன்றைக் கட்டித் தரவேண்டும். மற்றும் என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு நான் மனுவாகக் கொடுக்கின்றேன் என்று கூறி எனக்கு இங்கு பேசுவதற்கு வாய்ப்பு தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மற்றும் சுற்றுப்புறச்சூழல் சம்பந்தமான மானியக் கோரிக்கையில் ஒரு சில கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே வைக்க விரும்புகின்றேன். முதலிலே நம்முடைய வனங்களைப் பாதுகாக்க வேண்டும்; வனத்தைப் பாதுகாப்பதன் மூலமாகத்தான் நம்முடைய நாட்டிற்குத் தேவையான மழை கிடைக்கும் என்பது உலக விஞ்ஞானிகளுடைய கருத்து. ஆனால் இன்றைக்கு வனங்கள் எந்த அளவிற்கு — நம்முடைய தமிழ் நாட்டிலே மட்டும் இல்லை, — இந்தியா பூராவிலும் அழிக்கப்படுகின்றன என்ற விவரங்களை, எந்த அளவிற்குக் குறைந்துபோய் இருக்கின்றன என்ற விவரங்களை நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.



இரண்டாவது, மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டிற்கு எத்தனை கோடி தருகின்றது? மத்திய அரசு தருகின்ற பணத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின் மூலமாக மலைப்பாங்கான பகுதிகளில் காடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எந்த வகையிலே நடவடிக்கையை நாம் இதுவரையிலே மேற்கொண்டுள்ளோம்? அதனுடைய ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டத்திலே அதனுடைய ஒதுக்கீடு எவ்வளவு?, எந்த அளவிற்கு மலைப்பாங்கான பகுதிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அங்கே புதிய மரங்களை நடுவதற்கும் நாம் எவ்வளவு செலவிட்டுள்ளோம் என்பதையும் நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். ஏற்கெனவே சில தினங்களுக்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் கிடைக்குமேயானால் நம்முடைய இந்தத் துறை எந்த அளவிற்கு விரைவாகச் செயல்படுகிறது, நம்முடைய காடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

அடுத்து நம்முடைய வனத் தோட்டக் காவலர்கள் சுமார் 5 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். வனத் தோட்டங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், வனத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் இரண்டு வகையான ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளம் என்பது வெறும் 817 ரூபாய் சில்லறை காசு. இதை வைத்துக்கொண்டு ஒரு மாதம் பூராவிலும் ஒரு ஊழியர் எப்படித் தன்னுடைய பணியை ஆற்ற முடியும். ஆக அவருடைய பணி சிறக்க வேண்டும் என்றால் இன்றைய காலகட்டத்திலே வனத் துறையோடு சேர்ந்த இந்த அமைப்பு இன்னும் சிறப்பாகச் செயல்படுவதன் மூலமாக நம்முடைய காடுகளைப் பராமரிப்பதும், வளர்த்து வருவதற்குமாக அவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றுவதும் அவர்களுக்கு உரிய சம்பளத்தைத் தரவேண்டியதும் ஒரு முக்கியமான கடமை என்பதை நான் நம்முடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

[திரு. டி. மணி]

பிற்பகல் 12-45 [2002 ஏப்ரல் 29

அடுத்து நம்முடைய வனத் தோட்டத்திற்குள்ளே இருக்கின்ற வருவாய். இதிலே ஒரு பெரிய வருவாய் என்பது நம்முடைய காடுகளிலே கிடைக்கின்ற. குறிப்பாக, தமிழ்நாட்டினுடைய பல்வேறு காட்டுப் பகுதிகளிலே கிடைக்கின்ற சந்தன மரம் சந்தன மரங்களிலிருந்து எடுக்கப்படுகின்ற எண்ணெய். இவை பற்றி இரண்டுவிதமான கருத்துகள் அதிலே சொல்லப்படுகின்றன. சமீபத்திலே இரண்டு தினங்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே மூன்று கோடிக்கு சந்தனக் கட்டைகள் ஏலம் விடப்பட்டதாக ஒரு செய்தி. இன்னொரு செய்தி என்னவென்று சொன்னால், ஏறத்தாழ 519 டன் சந்தனக் கட்டைகள் ஏலம் போனதில் அரசுக்கு ரூ. 46 கோடியே 24 இலட்சம் வந்ததாகச் சொல்கின்றார்கள். ஆனால், பாலிசி நோட்டிலே இதற்கு கொஞ்சம் மாறுதலாக அந்த விவரங்கள் இருக்கின்றன. எது சரி என்பது எனக்குத் தெரியவில்லை. ஆக, இதற்கும் நம்முடைய அரசு சரியான ஒரு விடையை அளிக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அடுத்து இந்த வனத் துறைக்குள் வருகிற கழகங்கள்; தேயிலைக் கழகம், ரப்பர் கழகம் இவையெல்லாம் வனத் துறையோடு சேர்ந்ததுதான். ஏற்கெனவே நீலகிரி மாவட்டத்திலே உற்பத்தியாகின்ற தேயிலையின் அளவு, நம்முடைய நாட்டிலே உற்பத்தியாகின்ற தேயிலையினுடைய அளவுக்கு நாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இருந்தாலும்கூட, நம்முடைய தேயிலைக்குச் சரியான விலையில்லை. காரணம் வெளிநாட்டிலேயிருந்து தேயிலை இறக்குமதி செய்வதன் மூலமாகத்தான் இந்த நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திலே சொல்லி, பரிந்துரையின் மூலமாக வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு 150 சதவிகிதம் வரியைச் செலுத்தினால் மட்டும்தான் நாம் உற்பத்தி செய்கின்ற தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும். தேயிலை பயிரிடுகின்ற நம்முடைய சிறிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகளுக்குச் சரியான வருவாயையும் நாம் ஈட்டிக்கொடுக்க முடியும். அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அதுபோன்றுதான் நம்முடைய ரப்பர். ஏற்கெனவே, எடுத்த எடுப்பிலே ஒன்றைச் சொல்கின்றார்கள். அது என்னவென்றால், நஷ்டத்திலே ஓடுகின்றது என்பது. இந்த இடத்தை நாம் கையகப்படுத்துகின்றபோது இந்த அரசாங்கத்திற்கு, இந்த ரப்பர் தோட்டத்திற்கு 4 ஆயிரத்து



2002 ஏப்ரல் 29] [திரு. டி. மணி]

சொச்சம் ஹெக்டேர் நிலத்தைத் தருகின்றபோது, அதற்கு ஒரு விலையை நிர்ணயித்தார்கள். ஆனால் அந்த நேரத்திலே அந்த வனப் பகுதியிலேயிருந்த, அந்தக் காடுகளிலேயிருந்த மரங்கள் இருக்கின்றனவே அவற்றை இந்தத் துறை வெட்டி விற்றதன் மூலமாக, முழுக்க விற்றதன் மூலமாக 20 கோடிக்கும் அதிகமான ரூபாயை இந்தத் துறை அன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கின்றது. அதற்கடுத்தபடியாக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு ஒரு வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் நாம் குத்தகையாக அரசுக்குத் தருகின்றோம். இதன்மூலமாக அந்தப் பகுதி பூராவிலும் ஒரு ஆண்டிலே சுமார் மூன்று கோடி ரூபாய் குத்தகை இனத்திலே நாம் அரசுக்குத் தருகின்றோம். ஆக, இதன் காரணமாக நஷ்டம் என்று எந்த முறையிலே சொல்ல முடியும்? இப்போது அதற்கு மேலே இன்னும் இருக்கக்கூடிய சம்பவம் என்னவென்றால், இந்த ரப்பர் மரம் அதனுடைய காலம் பல பகுதியிலே முடிந்துவிட்டது. பால் ஊற்று நின்றுவிட்டது. சில பகுதிகளிலே நாம் அந்த மரங்களை விற்பனை செய்கின்றோம். ஆனால் வனத் துறை அதிகாரிகள் என்ன சொல்கின்றார்கள்? இந்த மரத்தை விற்பனை செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை, அதனுடைய பணத்தையெல்லாம் எங்களுக்குத் தந்துவிட வேண்டும். அப்படி இரண்டு பிளாக்கில், இரண்டு கோட்டங்களில் எடுத்துக்கொண்ட அல்லது அவர்கள் கைவசம் வைத்திருக்கின்ற நிதி என்பது ஏறத்தாழ ரூ. 4 கோடி வரையிலே இருக்கும். ஆக இந்தக் கணக்குகளையெல்லாம் இன்னும் தள்ளிப் பார்ப்போமேயானால், இந்த வேளாண்மை நிதி என்று சொல்கின்ற, விவசாய நிதி என்று சொல்கின்ற (Agriculture Tax) ஒரு நிதியும், இந்தக் குத்தகை, பாட்டம் அதெல்லாம் விட்டுப்போய் ஏறத்தாழ எவ்வளவு வசூலிக்கின்றார்கள்? 65 சதவிகிதம் வசூலிக்கின்றார்கள். ஆக, இந்த வசூல் செய்கின்ற கணக்குகளையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் பார்த்தால், ஒரு சல்லி காசுகூட அது நஷ்டத்திலே ஓடுகின்றது என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை. எனவேதான் இதனுடைய பின்னணியிலே இருந்துகொண்டு ஏறத்தாழ 2 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்களைப் பாதுகாப்பது; அது ஒன்று. இன்னொரு பகுதியாக இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்புத் தருகின்ற வகையிலேதான் இந்த ரப்பர் தோட்டங்களை அன்றைய காலகட்டத்திலே பயன்படுத்தினார்கள். அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அந்தத் துறை சீராகச் செயல்படுவதற்கு நடவடிக்கை வேண்டும். ஏனென்றால் பல பிளாக்குகளில் இன்றைக்கு மரத்தை வெட்டிவிட்டார்கள். திரும்பப் பயிரிடுவதற்கு யோசனை செய்கின்ற ஒரு காலகட்டத்திலே நாம் இருக்கின்றோம். எனவேதான் இந்த 2 ஆயிரத்திற்கும் அதிகமான

ஊழியர்களையும் அதிலே பணியாற்றுகின்ற அரசாங்க ஊழியர்களையும் பாதுகாக்கின்ற வகையில் அரசுக்கு அதிகப்படியான இலாபத்தை ஈட்டுகின்ற வகையிலே—குறைந்த விலை இருந்தாலும்கூட, அந்த வகையிலே நாம் அதைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கையை—ஏற்பாடு செய்வோம் என்று சொன்னால், அந்தத் துறை நஷ்டத்திலே ஓடாது என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-50*

அடுத்து பிற பகுதிகளிலே இருக்கின்ற வனம். அதிலே இந்த அழகியபாண்டியபுரம் Range. இந்தத் துறையினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். அந்த ரேஞ்சிலே ஒரு அருங்காடு இருக்கிறது. தேவகிரி தோட்டத்திற்கு மேல் பகுதியிலே 1946-ல் மிகப் பெரிய காடாக இருந்த காலத்தில் அந்தப் பகுதியை நான் நேரடியாகப் பார்த்தவன். அங்கே சிம்சன் துறைக்கு 2,000 ஏக்கர் பட்டா எப்படிக் கொடுத்தார்கள் என்ற ஒரு கேள்வியை முன்வைக்கிறேன். அந்த மலைப் பகுதிக்கு உள்ளே, மிக அடர்ந்த காட்டுக்குள்ளே எப்படி பட்டா கொடுக்க முடிந்தது. அதற்குமேல் இன்னும் சொல்லப்போனால்-அந்த வட்டாரங்களில் வருவாய்த் துறை முதலிலே 2 சி பட்டா என்று கொடுத்த பிறகு அது பட்டாவாக மாற்றப்படுகிறது. சமீபத்திலே வந்திருக்கிற ஒரு அதிகாரி அந்த வனப் பகுதிக்கு உள்ளே நுழைந்து 500 ஏக்கராவை திரும்பக் கைப்பற்றி இருக்கிறார்கள். நிலுவையில் இருக்கின்ற வழக்குகளை — நம்முடைய ஐகோர்ட்டிலும் சரி, சுப்ரீம் கோர்ட்டிலும் சரி காலகாலத்திலே வருகின்ற வழக்குகளை வன நிலங்களை கொள்ளையடிக்கின்ற அல்லது ஆக்கிரமிக்கின்ற பேர்கள்மீது வருகின்ற வழக்குகளை — சரிவர நடத்தாததன் காரணமாக இந்த நிலை அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, நான் இந்த அரசின் முன்னால் வைக்கின்ற கோரிக்கை இந்த அழகியபாண்டியபுரம் Range இருக்கின்ற தடிக்காரன்கோணபுரம் பகுதியிலே இருந்து அதனுடைய கடைசிப் பகுதி வரையிலும்—ஒரு Re-survey என்பது இந்த வனச் சட்டம் வருவதற்கு முன்னால் என்று சொன்னால்—1956-க்கு முன்னால் எந்த record நமக்கு இருந்ததோ, எந்தக் காரியங்கள் ரெக்கார்டாக இருக்கின்றதோ, அந்த அளவில் நின்றுகொண்டு ஒரு Re-survey செய்வதன் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நாம் திரும்பப் பெற முடியும். நம்முடைய காடுகளை அந்தச் சின்னஞ்சிறிய மாவட்டத்திலே பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால் அங்கே



கிடக்கின்ற அந்த மரங்கள் என்பது தேக்கு, மிக விலையுயர்ந்த மரம். இரண்டாவது ஈட்டி. இப்போது மருந்துக்குக்கூட பார்க்க முடியாத அளவுக்கு இன்று அது கொள்ளை போயிருக்கிறது. அதேபோல இன்று மகாகனி, வேங்கை மரங்கள் என்பது விலையுயர்ந்த மரங்கள் நமக்கு இருக்கின்றன. இவற்றைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் என்ன நடவடிக்கை என்று இப்போது பார்த்தால் ஒன்றுமில்லை. தற்போது இருக்கிற அதிகாரி வலுவாகச் செயல்படுகின்றார். ஆனால் அவர்களுக்குப் போதுமான வாகனங்கள் இல்லை உள்ளே செல்வதற்கு. துப்பாக்கி இருக்கின்றதா என்று கேட்டால் இல்லை. வனக் கொள்ளையர்கள் எப்படியெல்லாம் செயல்படுவார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்ததுதான். ஆக அந்த வகையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டுமல்லாமல் நம்முடைய மாநிலத்தில் பிற மாவட்டங்களில் இருக்கின்ற வனங்களை பூராவிலும் பாதுகாக்கின்ற வகையில் ஒரு நல்ல முடிவை எடுத்து, வனப் பாதுகாப்பாளர்களுக்குத் தருகின்ற இந்த உதவிகள் பூராவையும் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே செய்வதன் மூலமாக இவைகளைச் சீராக்க முடியும் என்பது என்னுடைய கருத்து.

அதேபோன்றுதான் நம்முடைய ரப்பர் கழகத்திலே 3 IFS அதிகாரிகள் இருக்கின்றனர். ஒரேயொரு ஆள் போதும். மற்ற இரண்டு பேர் தேவையில்லை. அவர்களை வனத் துறைக்கு நீங்கள் அனுப்பினால் போதும். ஏற்கெனவே, இதைப் பற்றிச் சொல்லிவிட்டோம். M.D. அங்கே தேவையா? நம்முடைய கேள்வி, தேவையில்லை என்பது. அவர்கள் பெருவாரியான சம்பளத்தைப் பெறுகின்றார்கள். நமக்குத் தேவையில்லை என்பது, நீண்ட காலமாக எங்களுக்கு அந்தத் துறையோடு இருக்கிற அனுபவத்தினுடைய கருத்து.

அதேபோன்றுதான் நம்முடைய சுற்றுலாத் துறை. இந்தச் சுற்றுலாத் துறையிலே முக்கியமாக இயற்கையாகவே நம்முடைய திற்பரப்பு அருவி என்ற ஒன்று இருக்கிறது. அது இயற்கையாகவே, ஒரு சுற்றுலாத் தலமாக மாறிவிட்டது. அதை அரசாங்கம் சுற்றுலாத் தலமாக மாற்றிக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதேபோன்று பிற பகுதிகள், எவை எங்கே லாயக்காக இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அதிலே இன்னுமொன்று மலையோடு சேர்ந்து வருகிற சில பகுதிகள், காடுகள், காடு புறம்போக்கு என்று சொல்கின்றார்கள். காட்டுப் புறம்போக்கு என்று சொன்னாலும் அங்கே ஒரு மரம் கூட இருக்காது. அரசுக்குச் சொந்தமான, வனத்திற்குச் சொந்தமான ஒரு மரம்கூட இருக்காது. கால மாற்றத்தினுடைய பின்னணியில் எங்களுடைய

பகுதியிலே 1946-ல் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் முன்னாள் திவான் ஆட்சி காலத்திலே ஒரு பகுதியிலே வளிய ஏலா என்ற இந்த இடத்திலே விவசாயிகள் குடியேறினார்கள். ஒரு மரம்கூட காட்டுமரம் இல்லை. ஆனால் இந்த வனச் சட்டம் வந்ததன் மூலமாக அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அந்தப் பாதுகாப்பு இல்லாத நிலை காரணமாக நெல்லை சாகுபடி செய்கின்றார்கள். ரப்பர் நட்டிருக்கின்றார்கள். தென்னை, பாக்கு மரம், கிராம்பு இவைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த விவசாயிகளுக்கு பட்டா வேண்டுமென்பது நீண்டகால கோரிக்கை. ஆனால் வனச் சட்டத்தின் மூலமாக பட்டா வழங்கும் சட்டம் தடை செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு பட்டா கிடைக்க அந்த இடத்தை நேரடியாகப் பார்வையிடுவதற்கு முன்வரவேண்டும். ஏற்கெனவே இரண்டு முன்னாள் அமைச்சர்களை அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிடச் செய்தேன். ஆனால் முடிவு ஏற்படவில்லை. அந்த விவசாயிகளுக்கு தங்களுடைய வயல், காடுகளுக்குத் தேவையானது ஒரு சின்ன குளம். அந்தக் குளத்தைப் பராமரிப்பதற்கு, உடைந்துபோன குளத்தைக் கட்டுவதற்கு, அந்த விவசாயிகளுக்கு நாம் பணம் கொடுத்தால்கூட. அது இந்தத் துறையின் மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்ற ஓர் உத்தரவைப் போடுகின்றார்கள். அது எந்த அளவிற்குச் சரியானது என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அதுபோன்று இந்தச் சுற்றுலாத் துறை மூலம், மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற நம்முடைய பல்வேறு பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

இரப்பர் கழகத்தைப் பாதுகாக்க வேண்டும். நான் சொல்லியிருக்கின்ற சந்தன மரம் சம்பந்தமாக இன்னும் அதிகப்படியான—ஏற்கெனவே மைசூர் சந்தனம்தான் சிறப்பானது என்று சொல்வார்கள்.—சந்தனக் காடுகளை அதிகமாக வைப்பதற்கு உரிய நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ள வேண்டும். நல்ல விலை உயர்ந்த காட்டு மரங்களை இந்தப் பகுதிகள் பூராவிலும் நம்முடைய காடுகளிலே, வனங்களிலே பூராவிலும் நடுவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்



என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க.ரா. கந்தசாமி.

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை கிளைக் கழகச் செயலாளராக, அம்மா பேரவையின் ஒன்றியச் செயலாளராக, ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக, சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக முகவரி தந்து, எங்களை வாழ வைத்து வழிநடத்திச் செல்லும் தெய்வத்தாயே, பெண் குலத்தின் திருவிளக்கே, தமிழகத்தின் விடிவெள்ளியே, உலகம் போற்றும் உத்தமத் தலைவியே, சோதனைகளை வென்று சாதனைகளைப் படைக்கும் கருணை உள்ளம் கொண்ட தாயின் பாதம் பணிந்து வணங்கி இந்த உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாக நிலப் பரப்பை நேரடியாக நிர்வகிக்கும் சிறப்பு வாய்ந்த துறையாக வனத் துறை திகழ்கிறது. இவ்வனப் பகுதி மதிப்பு மிக்க தாவர வகைகளையும், மர வகைகளையும், அரிய உயிரினங்களையும் தன்னிடத்தே கொண்டுள்ளது. இவ்வனத்தினைக் காப்பதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறந்து விளங்குகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அரசானது தற்போது நிறைவேற்றி வருகின்ற, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், வன ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டம், மாவட்ட தரிசு நிலங்களில் பசுமைத் தோட்டங்கள் உருவாக்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் வனப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது இத்திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது இவ்வனப் பகுதியிலே வசிக்கின்ற ஏழையெளிய, பழங்குடியின மலைவாழ் மக்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பினை அளிக்கின்ற விதத்தில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், இவ்வனத் துறைப் பகுதிகளுக்கு உட்பட்ட வனக் கட்டுப்பாட்டுப் பகுதி, settlement area எனப்படும் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு இத்துறையானது தானே

முன்வந்து அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதுபோன்ற கிராமங்களுக்கு மற்ற துறைகளிலேயிருந்து சாலைகள், மின்சாரத்திற்குத் தேவைப்படும் கம்பங்கள், குடிநீர் வசதிக்குத் தேவைப்படும் குழாய்கள், மேல்நிலைத் தொட்டிகள் போன்றவற்றை அத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அமைக்கின்றபொழுது, வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. இதனால் இம்மலைவாழ் மக்களுடைய கிராமங்களில் வளர்ச்சிப் பணிகள் முழுவதும் நடைபெறாமல் நின்று விடுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் இதனைக் கண்டறிந்து இப்பணிகளைச் செய்து முடிக்க வனத் துறை உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு அமமா அவர்களை இம்மலை வாழ் மக்கள் சார்பாகப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த ஆண்டு எங்களது சத்தியமங்கலம் தொகுதியிலுள்ள மலைவாழ் மக்கள் வசிக்கின்ற வனப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எளிதாகச் சென்று கிடைக்கின்ற விதத்திலே நடமாடும் ரேஷன் கடை (மொபைல் வேன்) மூலம் எடுத்துச் செல்ல உத்தரவிட்டு நடைமுறைப்படுத்தியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மலைவாழ் மக்களின் சார்பாக, என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சத்தியமங்கலத்திலுள்ள மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது முழுவதும் மலைவாழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு நடைபெறும் சங்கமாகும். இச்சங்கமானது முழுவதும் நேரடியாக மலைவாழ் மக்களுக்கு வேலை அளிக்கின்ற விதத்தில் வனத் துறைக்குக் குத்தகைத் தொகையினைக் கட்டி சிறு வனப் பொருட்களைச் சேகரம் செய்து வருகிறது. இந்த குத்தகைத் தொகையானது மிக அதிகமாக இருப்பதால், மலைவாழ் மக்களுடைய நலன் கருதி குத்தகைத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் குறைத்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இம்மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் எங்களது சத்தியமங்கலம் தொகுதிக்குட்பட்ட தாளவாடி, கடம்பூர் போன்ற மலைப் பகுதிகளில் சுமார் 50,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை இப்பகுதி மலைவாழ் மக்கள் உழுது மானாவாரிப்



பயிர் செய்து வருகின்றனர். மாவட்ட நிர்வாகம் இந்நிலங்களை ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாப் பகுதிகளுடன் ஒப்பிட்டு இவர்களுக்கு நிலப்பட்டா வழங்க மறுத்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இம்மக்களுடைய நலனைக் கருதி இந்நிலங்களுக்குப் பட்டா வழங்க மாவட்ட நிர்வாகத்திற்கு ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

மேலும் முற்றிலும் மலைப் பகுதியைக் கொண்ட 10 ஊராட்சிகளை உள்ளடக்கிய தாளவாடி ஊராட்சி ஒன்றியமானது, சத்தியமங்கலத்திலிருந்து 27 கொண்டை ஊசி வளைவுகளுக்கு அப்பால் சுமார் 70 கிலோ மீட்டர் தாண்டி கர்நாடக மாநில எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. பரப்பளவில் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமான இப்பகுதியை மலைவாழ் மக்களின் நலன் கருதி தனி வட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குத்தியாலத்தூர், குன்றி, மாக்கம்பாளையம் ஆகிய மூன்று ஊராட்சிகளும் அடர்ந்த மலைப்பகுதி ஆகும். இங்குள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்களுக்கு கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியதற்கு அம்மலைவாழ் மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மக்களுக்கு ஆதிதிராவிட பழங்குடியினர் நலத் துறையின் மூலம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் சார்பாக ரூபாய் 8 இலட்சம் செலவில் குடிநீர்த் தொட்டியும், 41.30 இலட்சம் ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதியும் கட்ட நிதி ஒதுக்கி அனுமதி அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க.ரா. கந்தசாமி] [2002 ஏப்ரல் 29

மேலும் இக்கோயிலின் நிதி ஆதாரத்தைக் கொண்டு இப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான திருமண மண்டபம் ஒன்றும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பாக கல்லூரி கட்டியுள்ளதுபோல மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் சார்பாக கலை அறிவியல், தமிழ்ப் பண்பாடு கல்லூரி ஒன்றும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் நகரத்தின் கழிவுநீர், பவானி ஆற்றில் கலந்து ஆற்று நீர் மாசுபடுவதைத் தடுக்கும் வண்ணம், சத்தியமங்கலம் நகரத்திற்கு இவ்வாண்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைக்க ஆணை வழங்குமாறும், மேலும் இந்த நகரத்திலே நீண்ட நாட்களாக இடிந்து கிடக்கும் சார்பதிவாளர் அலுவலகத்தை இவ்வாண்டு கட்டிக் கொடுக்க ஆவன செய்யுமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கருணை உள்ளம் கொண்ட தாயே, தூக்கநாய்க்கன்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட வாணிப்புத்தூர் பேரூராட்சி, அரக்கன்கோட்டை ஊராட்சி, கொங்கர்பாளையம் ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிகளுக்கு பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இந்த நிதியாண்டிலே ஒப்புதல் வழங்கி நிதி ஒதுக்கித் தருமாறும், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மா.கொமராபாளையம் ஊராட்சியை ஒட்டி உள்ள 12 கிராமங்கள் பயன்பெறுகின்ற வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூக்கநாய்க்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கள்ளிப்பட்டியிலிருந்து நஞ்சே கவுண்டன்பாளையம் வழியாக கோபிசெட்டிப்பாளையம் சென்றடைய பவானி ஆற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலம் ஒன்று அமைக்க ரூபாய் 4 கோடி அளவில் ஹட்கோ நிதியுதவியுடன் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமல் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தை இவ்வாண்டு செயல்படுத்தித் தருமாறு அன்புடன், பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 29] [திரு. க.ரா. கந்தசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தூக்க நாய்க்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கணக்கம்பாளையம் மற்றும் பெருமுகை கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான வேதபாறை நீர்த்தேக்கத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இவ்வாண்டு நிறைவேற்றித் தருமாறும், சத்தியமங்கலம் அருகில் உள்ள பெரியகுளம் விவசாயிகள் பயனடைகின்ற வகையில் புளியங்கோம்பை அருகே பெரியகுளம் நீர்த்தேக்கத் திட்டத்தை இவ்வாண்டு நிறைவேற்றித் தருமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வழியாகச் செல்லும் என்.எச். 209 சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சத்தி-அத்தாணி-பவானி சாலையானது பவானியில் உள்ள என்.எச். 47 சாலையில் சென்று சேருகிறது. இந்த மாநிலச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி வழியாகச் செல்லும் பவானி ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு சத்தியமங்கலம் வட்டம் கோபிசெட்டிப்பாளையம் வட்டம், பவானி வட்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றார்கள். இந்த பாசன முறையை, அரசானது முறைகேடான பாசன முறை என்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி 20 மடங்கு தண்டத் தீர்வை விதித்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 முதல் ரூபாய் 2,000 வரையில் வசூல் செய்து வருகின்றது. இந்தத் தண்டத் தீர்வையைக் கட்ட இயலாமல் பல இலட்ச ரூபாய் நிலுவையில் இருந்து வருகின்றது. இருப்பினும் வருவாய்த் துறையினர் இத்தண்டத் தீர்வையை வசூலிக்க விவசாயிகளை பல்வேறு வழிகளில் தொல்லை கொடுத்து வருகிறார்கள். இதே மாவட்டத்தில் ஈரோடு காவிரி ஆற்றிலிருந்தும் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காவிரி ஆற்றிலிருந்தும் நேரடியாக மின் மோட்டார் மூலம் நீர் எடுத்து பாசனம் செய்யும் விவசாயிகளுக்கு முறையான பாசன அந்தஸ்த்தை வழங்கியுள்ளது. 1985 ஆம் ஆண்டும், 1994 ஆம் ஆண்டும் அரசானது முறையான பாசன அந்தஸ்த்தை வழங்கியுள்ளது. இதேபோல் பவானி ஆற்றுக் கரையோர விவசாயிகளுக்கு விதித்த முறையற்ற தண்டத்

தீர்வையை இரத்து செய்து முறையான பாசன அந்தஸ்த்தை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்குமாறு அந்தப் பகுதி விவசாயிகளினுடைய சார்பாக தங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே வனத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய எங்களது கருணை உள்ளம் கொண்ட தாயின் பொற்பாதம் பணிந்து வணங்கி என் உரையை நிறைவு செய்து அமர்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. ஒவ்வொரு மானியக் கோரிக்கை வருகிறபோதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உறுப்பினர்கள் பேச வருகிறபொழுதுதான் நேரம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. சிவபுண்ணியம், திரு. இராசேந்திரன் அவருடன் பேசி, அவரிடத்திலே சொல்லிக் கேட்டுத்தான் அதற்கப்புறம்தான் உரையை முடித்தோம். (குறுக்கீடுகள்) பேச வேண்டுமா? சரி, இராசேந்திரன் பேசுங்கள். அவரிடத்திலே சம்மதம் கேட்டதற்குப் பிறகுதான் நான் இந்த முடிவை எடுத்தேன். பேச வேண்டுமென்றால் பேசுங்கள். 5 நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை சார்பிலே பேச வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதுவாக வனத் துறையிலே (குறுக்கீடு) சரி. வனவாழ் மக்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். சந்தன மரங்களை வெட்டிக் கடத்துபவர்களை விட்டுவிட்டு சாதாரண மக்களை வனத் துறை அதிகாரிகள் துன்புறுத்துகிறார்கள். அந்தப் போக்கினை அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பைப் பெறுகின்ற சந்தன மரங்களை எரித்ததற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப்



பதிலாக 5 வயதுச் சிறுவன் அந்த சந்தன மரங்களை எரித்தான் என்று சொல்லி, அவனைக் கைது செய்து அவனைத் துன்புறுத்தியது எந்த வகையிலே நியாயம்? அதனடிப்படையிலே கடந்த கால அரசு செய்த அந்த மோசடியின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மலைவாழ் மக்கள் சாகுபடி செய்யும் நிலங்களில் உள்ள புளி மற்றும் கடுக்காய், பலா போன்ற மரங்களின் பலனை அனுபவிக்கவும், அதை துறையே பராமரிக்கின்ற வகையிலே 2-சி என்னும் மரப் பட்டா வழங்குவதற்கு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதைப்போல சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பொறுத்தமட்டிலும் பல்வேறு இடங்களிலேயுள்ள ஆறுகளிலே அந்தந்த நகரத்திலேயுள்ள சாக்கடைகள் கலந்துவிடுகின்றன. அதைத் தடுப்பதற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 15 அம்சத் திட்டம் அறிவித்தபொழுது, இந்த மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே கொசுத் தொல்லை அதிகமாக உள்ள காரணத்தினால் கொசுவை ஒழித்தாலே போதும்; இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கலாம் என்ற ஒரு கருத்தை எடுத்து வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல மாநகரப் பேருந்துகளிலே, அவை விடுகின்ற புகை மிகவும் மோசமான தீங்கினை விளைவிக்கக்கூடிய அளவிலே உள்ளது. அதேபோன்று நகரப் பேருந்து விடுகின்ற புகை மண்டலங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருள் அவர்கள் சிதம்பரம் அருகேயுள்ள பிச்சாவரம் சுற்றுலா மையத்தைப்பற்றி, வனப் பகுதியைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓய்வு எடுப்பதற்கு பிச்சாவரம் சுற்றுலாத் தலத்திற்குத்தான் சென்று வருவார்கள். அதேபோல மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் பிச்சாவரம் சுற்றுலா வனப் பகுதியை நல்ல முறையிலே கொண்டு வருவதற்காக முயற்சி செய்தார்கள். ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே அதை ஏனோ செய்யத் தவறிவிட்டார்கள். அண்ணா அவர்களும், எம்.ஜி.ஆர். அவர்களும்

எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் அதைக் கைவிட்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அந்த வனத் துறைப் பகுதிக்குப் போதிய ரோடு வசதிகள் இல்லை. அதேபோல அந்த இடத்திற்குச் செல்லக்கூடிய சாலைகளிலே ஒரு போர்டுகூட வைக்கப்படவில்லை என்ற நிலை இருக்கின்றது. எதையும் சாதிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வனத் துறை இடத்தை சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்றும், சுற்றுலாத் துறையை முன்னேற்றம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் அமைச்சர் அவர்களிடத்திலேயும் ஒரு கோரிக்கையை வைத்தேன். எட்டையபுரத்திலே உமறுப் புலவர் அவர்களுக்கு ஒரு நினைவு இல்லம் கட்டப்பட வேண்டும்; வருகின்ற 26-5-2002 ஆம் தேதியிலே அவர்களின் நினைவு தினத்தை அரசு விழாவாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல அரசு அலுவலகங்களின் சுவர்களிலே, பல்வேறு இடங்களிலே wall posters ஒட்டப்படுகின்றன. அது மாநகர அழகைக் கெடுக்கக்கூடிய வகையிலே அமைந்துள்ளது. இதுபோன்று 'வால் போஸ்டர்கள்' ஒட்டுவதை முறைப்படுத்த வேண்டும் என்றும் இந்த அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல பல்வேறு தொழிற்சாலைகளிலே உள்ள கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், பிளாஸ்டிக் பொருட்கள் தடைச் சட்டம் நடைமுறையிலே உள்ளது. இதுபோன்ற பிளாஸ்டிக் பொருட்கள் ஏராளமாக பயன்படுத்தப்படுவதால் நிலத்தினுடைய தன்மை கெட்டு விவசாயம் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சட்டப் பேரவையின் போற்றுதலுக்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆறரைக் கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், ஏழையெளியோர்க்கு கலங்கரை விளக்கமாகவும், இந்தியத் திருநாட்டிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்திட முன்னேற்றத் திட்டங்கள் பல தீட்டி அதனைச் செயல்வடிவமாக்கிட அரும்பாடுபட்டு வரும் அகில இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தமிழக அரசின் அடுத்து வரும் நலத் திட்டங்கள் என்னவென்று ஆவலோடு எதிர்பார்க்க வைக்கவும், நாளைய சரித்திர வல்லுநர்களும், வரலாற்று ஆசிரியர்களும் தமிழக அரசின் ஆட்சி பொற்கால ஆட்சி என எழுத வைக்கப்போகும் சாதனைச் செம்மலான என் தாயே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தாங்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் அரும்பெரும் சபையில் எனக்கும் ஓர் அமைச்சர் பதவி கொடுத்து இந்தச் சிறியவனைப் பெருமைப்படுத்தியதோடு அல்லாமல் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பணியையும் கொடுத்து அழகு பார்க்கும் என் அன்னையே, அன்றாடம் நான் தொழுது வணங்கும் தெய்வமே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் குறளுக்கேற்ப தமிழக மக்கள் அம்மா அவர்களிடம் ஆட்சியைத் தந்துள்ளார்கள்.

எதிரிகளின் கூடாரங்களை அழித்து அவர்களது மனக் கோட்டையை தவிடு பொடியாக்கி இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே கோலோச்சும், சோதனைகளை வென்று சாதனைகளாக்கிய வீரத்தாயே, அம்மா அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பொற்காலத்தில் தாங்களும் வாழ்ந்து கொண்டிருப்பதை எண்ணி ஆறரைக் கோடி தமிழ் நெஞ்சங்களும் பெருமை கொள்கின்றன. அம்மாவின் ஆற்றல்மிகு அமைச்சரவையிலே சீரிய தலைமையில் என்னையும் மக்கள் பணியாற்ற அழைத்ததை நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் வீற்றிருக்கும் சிங்கநிகர் தலைவியே, பொதிகை மலைத் தென்றலே, திக்கெட்டும் பரவட்டும்

உங்கள் புகழ். கழகத்தின் காவல் தெய்வம், ஆறரைக் கோடித் தமிழ்
மக்களை வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது
பொற்பாதங்கள் பணிந்து வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

இங்கே தமிழக சுற்றுலா மேம்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்
பலர் தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள். அவர்களுக்கெல்லாம்
எனது முதற்கண் நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
"குறைந்த முதலீட்டில் அதிகப் பயன்" என்பதுதான் சுற்றுலாவின்
சிறப்பாகும். வேலைவாய்ப்பு, பண்பாட்டு பரிமாற்றம், பொழுதுபோக்கு,
அறிவு வளர்ச்சி, உடல்நலம் பேணுதல் போன்ற பல்வேறு வகையான
பயன்கள் இதில் பெறலாம்.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"

என்று புரட்சித் தலைவர் அன்று 'விவசாயி' படத்தில் அறைகூவல்
விடுத்தார். இது சுற்றுலாவிற்கு மிகவும் பொருத்தமாகும். தமிழகம்
எல்லாவிதமான சுற்றுலாச் சிறப்புகளையும் பெற்றுள்ளது. ஆனால்
அதை முறையாக வெளிக் கொணர்ந்து உலக மக்களைக் கவரத்தக்க
வகையில் முனைப்போடு செய்யவில்லை என்பதுதான் பெரிய
குறையாகக் கருதப்படுகிறது.

குறிப்பாக தமிழகத்தில் கடந்த ஆட்சியில் சுற்றுலா வளர்ச்சிக்கு
என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு பணிகள் நடைபெறாதது
வருந்தத்தக்கதாகும். மிக முக்கியமான காரணம் குறைந்த நிதி
ஒதுக்கீடுதான். 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டது. இதில் ஊழியர்கள் சம்பளம், வாடகை போன்ற
திட்டமில்லாச் செலவினம் ரூ. 2.26 கோடி போக மீதம் உள்ள
தொகையைத் திட்டப் பணிக்காக ஒதுக்கியிருந்தார்கள். எனவே, அச்
சிறுதொகையில் சுற்றுலா வளர்ச்சி என்பது கைக்கெட்டாத ஒன்றாகும்.
ஆனால் 2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற
பிறகு ரூ. 17.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பளம் வாடகை
போன்ற செலவுகள் ரூ. 2.19 கோடி போக மீதித் தொகை திட்டப்
பணிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதிலிருந்து நாம் தெரிந்து கொண்டது
என்னவென்றால் சுற்றுலா வளர்ச்சி என்பதில் கடந்த அரசு எந்த





முனைப்பும் காட்டவில்லை. எனவே, தமிழக சுற்றுலாத் துறை
புறக்கணிக்கப்பட்ட ஒரு துறையாகவே இருந்துள்ளது.

பிற்பகல் 1-15

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி
அம்மா அவர்கள் பொறுப்பேற்றது முதல்தான் தமிழக சுற்றுலா என்பது
பலர் கண்களுக்குத் தெரிய வந்துள்ளது. ஆளுநர் உரையில் சுற்றுலா
பற்றிய செய்தியைப் பெரும்பாலும் பார்த்ததே இல்லை. ஆனால்
கடந்த 2001-2002 மற்றும் 2002-2003 ஆகிய இரண்டு ஆளுநர்
உரைகளிலும் சுற்றுலா வளர்ச்சிக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,
நிதி ஒதுக்கீடு அதிகமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு அதிக
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து புரட்சித் தலைவி
அம்மா அவர்களின் அரசு தமிழக சுற்றுலா வளர்ச்சிக்கு முன்னுரிமை
அளித்துள்ளது என்பது தெளிவாகும்.

அண்டை மாநிலங்களெல்லாம் சுற்றுலாவை ஒரு முக்கியமான,
வருவாய் ஈட்டக்கூடிய துறையாக மாற்றியமைத்துக் கொண்டு
வரும்போது நாம் மட்டும் கண்டுகொள்ளாமல் இருந்தால் நமக்குத்தான்
நட்டமேயொழிய வேறொன்றுமில்லை. இதை நன்குணர்ந்த மாண்புமிகு
தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் 13-7-2001-லும் 18-4-2002-லும் சுற்றுலா வளர்ச்சி பற்றி
நேரடியாக விவாதித்து, தக்க அறிவுரைகளை வழங்கியதால் கடந்த
நிதியாண்டில் ரூ. 17.50 கோடியையும், இந்த நிதியாண்டில் ரூ. 32.64
கோடியையும் (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு
செய்து அதன் பணிகளை முடுக்கியுள்ளார்கள். இந்த
நடவடிக்கையால்தான் கடந்த செப்டம்பர் 11 ஆம் தேதி முதல்
உலகளவில் சுற்றுலாத் தொழில் பாதிப்புக்குள்ளாகி இருந்தும் தமிழகம்
அதிகமாக பாதிப்புக்குள்ளாகாமல் அமைதிப் பூங்காவாக இருந்துள்ளது.

கடந்த ஆண்டில் ரூ. 5 கோடி செலவில் அடிப்படைக் கட்டமைப்பு
வசதிகளை ஏற்படுத்தவும் ரூ. 5.10 கோடியை சுற்றுலா விளம்பரத்திற்கும்
ஒதுக்கீடு செய்தார்கள். இந்த நிதியாண்டில் ரூ. 12.00 கோடியை
அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் 14.50 கோடி
ரூபாயை விளம்பரத்திற்காகவும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதன்
மூலம் விளம்பரப் பணியைச் சிறப்பாகவும், செம்மையாகவும், ஓரளவு
அண்டை மாநிலங்களுடன் போட்டியிடுகின்ற வகையிலும் செயல்படுத்த
இயலும்.

புதிய முறையில் வெளியீடுகள் வெளியிடுதல், உலக சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்றல், விளம்பர முகாம் நடத்துதல், புதிய விழாக்கள் நடத்துதல், சி.டி.ரோம், சிறிய திரைப்படங்கள் தயாரித்தல், அயல் நாட்டு நாளிதழ், வார இதழ்களில் விளம்பரங்கள் செய்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பலவகையான கையேடுகள் உயர்ந்த தரத்தில் தயாரிக்கப்பட்டு, அதை சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்துகின்ற வகையில் அதற்கான ஸ்டாண்டு மூலம் புதிய முறையில் தயாரிக்கப்பட்டு எல்லா முக்கியமான இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். 1985 ஆம் ஆண்டு முதல் மைய அரசு தமிழக சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு செய்து வருகிறது. இதில் முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு மைய அரசு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை ரூ. 2.12 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சீரிய நடவடிக்கையால்தான் நிலுவைத் தொகை மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழக சுற்றுலாவில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கவும் அதற்குரிய விதிகளை உருவாக்கவும் முதலீட்டுப் பிரிவு ஒன்று தனியாக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தனியார் துறையுடன் கலந்துரையாடி கூட்டு முயற்சியில் சுற்றுலா வளர்ச்சிக்கு வழிகாட்டப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தொழில் சார்ந்த பொருள்களை விற்பனை செய்ய விற்பனைப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பிற மாநிலங்களுடன் ஒப்பந்தம் போடப்பட்டு தமிழகத்திற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம், ஹைதராபாத், பாண்டிச்சேரி போன்ற இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் தமிழக சுற்றுலாத் துறை பங்கேற்றது. இது மட்டுமல்லாமல், ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர், ஜெர்மனி, லண்டன், பெர்லின் போன்ற நாடுகளில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.



இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து பயண எழுத்தாளர்கள், செய்தியாளர்களை அழைத்து தமிழக சுற்றுலாச் சிறப்புகளை நேரடியாகப் பார்க்கச் செய்து அவர்களது மொழிகளில் வெளியாகும் இதழ்களில் எழுதச் செய்தது.

முட்டுக்காடு படகு குழாமில் சாகச புனல் விளையாட்டுகள் 27-9-2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 8 விதமான நீர் விளையாட்டுகள் தொடங்கப்பட்டு பலராலும் பாராட்டப்பட்டுள்ளன.

கடற்கரைப் பகுதிகளை சுற்றுலாப் பகுதியாக தூய்மையாகப் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுப்பது போன்ற பணிகள் தொடங்கியது மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு புதிய பாதையில் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி திட்டங்கள் அமலாக்கப்பட உள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் 43 திட்டங்கள் ரூ.11.23 கோடியில் தமிழகமெங்கும் தொடங்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் முடிவுறும் நிலையில் உள்ள திட்டப் பணிகளின் எண்ணிக்கை 17 ஆகும். இதன் மதிப்பீடு ரூ.3.89 கோடியாகும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ55 இலட்சத்தில் 9 திட்டங்கள் நீலகிரி மாவட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

இந்த ஆண்டு நாகூர், வேளாங்கன்னி, திருவண்ணாமலை, பழனி ஆகிய இடங்களில் இடம் தேர்வு செய்யப்பட்டு தனியார் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் 3 நட்சத்திரத் தகுதியுடைய ஓட்டல்கள் கட்டப்பட உள்ளன.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சிக்கு தொலைநோக்குத் திட்டம் மத்திய அரசு நிதி உதவியுடன் தயாரிக்கப்படும். இது 2002-2022 ஆகிய இருபது ஆண்டுகளுக்குரியதாக அமையும்.

கிராமங்களின் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சி என காந்தியடிகள் கூறியுள்ளார். தமிழகக் கிராமங்களில் சிறப்பாக போற்றிப் பாதுகாக்க கலை, பண்பாடு, விளையாட்டுகள், கைத்தொழில், மூலிகை மருத்துவம் போன்ற எண்ணற்றவை உள்ளன. இவைகளின் சிறப்பை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அறியும் வகையில் கிராமிய சுற்றுலாவை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டில் 6

[திரு. அ. மில்லர்] [2002 ஏப்ரல் 29

கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-20

அதிக விளம்பரம் இல்லாத சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் கண்டறிந்து படிப்படியாக மேம்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2001-2002-ல், 11 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிலும் (2002-2003) மேலும் இதுபோன்ற மலைத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி "பண்பாட்டு கிராமம்" எனும் சுற்றுலாப் பெருந்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக முட்டுக்காடு முதல் மாமல்லபுரம் வரை கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி அமைந்துள்ள சுமார் 632 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள ஆலயங்கள் மற்றும் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களாகும். இந்நிலங்களை நீண்டகால குத்தகைக்கு சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 27-12-2001 அன்று இந்த இடத்தைப் பார்வையிட்ட மத்திய சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் இப்பெருந்திட்டத்தைக் கொண்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் முயற்சிகளை மிகவும் பாராட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு இத்திட்டத்திற்காக தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியினை அளிக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளது. இப்பெருந்திட்டம் இந்தியத் துணைக்கண்டத்தையே பிரதிபலிக்கும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படவுள்ள "அமைதிப் பூங்கா" திட்டமாகும். அமெரிக்க நாட்டின் சுதந்திர தேவி சிலையைப் போல்—சாதி, மதம், பண்பாடு ஒற்றுமையைச் சித்தரிக்கும் சிலையாகும்—இத்திட்டத்தை பண்பாட்டுக் கிராமத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறந்த



2002 ஏப்ரல் 29] [திரு. அ. மில்லர்]

வல்லுநர்கள், சிற்பக் கலைஞர்களிடம் மாதிரி வடிவம் பெறப்பட்ட பின்பு இச்சிலைக்கான அமைப்புப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

உறையும்-உணவும் (Bed and Breakfast) திட்டம், தமிழகத்தில் ஒரு வீட்டில் கட்டணம் செலுத்தும் விருந்தினராகத் தங்க வைத்து அவர்களுக்கு உணவு படைப்பது. இதை அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் மிகவும் விரும்புகிறார்கள். இத்தகைய திட்டத்தில் சேர விரும்புவோர் தங்களது இல்ல விவரம் தெரிவிக்குமாறு விளம்பரத்தின்மூலம் கோரப்பட்டுள்ளது. தனியாரிடமிருந்து பெறப்பட்ட சுற்றுலாத் திட்டங்கள், தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படும். இந்தப் பிரிவிலிருந்து உயர்மட்டக் குழு ஒப்புதல் வழங்கும். இவ்வாறு தனியார்/அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் ஆகியோருடன் நல்லதொரு உறவை ஏற்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் சர்வதேசத் தரத்துடன் ஒப்பிடும் அளவிற்கு கட்டமைப்பு வசதிகளைச் செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழவைக்கும் நோக்கத்தை நிறைவேற்ற வழிவகைகள் செய்யப்படும் என்பதையும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இதுபோன்று இன்னும் பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. அவைகளில் சில: (1) சுற்றுலாக் காவலர், (2) ஹெலிடாக்ஸி, (3) இரயில்வே துறையுடன் இணைந்து செயல்படுவது போன்ற சுற்றுலாத் திட்டங்களைச் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரும்பாலான ஓட்டல்களையும், ஏழு உணவகங்களையும் குத்தகை அடிப்படையில் தனியாருடன் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒன்பது ஓட்டல்கள் தனியார் மூலம் குத்தகை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அணைப்பகுதிகள், புனிதத் தலங்கள், பாரம்பரியமிக்க நகரங்கள், திருக்கோயில்கள், நீர்வீழ்ச்சிகள், நல்வாழ்வு மையங்கள், கடற்கரைப் பகுதிகள் மற்றும் சரணாலயங்கள் முதலிய இடங்களுக்கு செல்லத்தக்க வகையில் பயணத்திட்டங்களைப் புதியதாக அறிமுகப்படுத்தவேண்டும் என்ற ஆணைப்படி 11-1-2002 முதல் 11 பயணத் திட்டங்கள் மாற்றி

அமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த ஆண்டு சுற்றுலாத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்திருந்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்த சீரிய முயற்சிகளின் காரணமாக 2001-2002 நிதியாண்டில் ரூ.20 இலட்சம் லாபம் ஈட்டக்கூடிய வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செயல்பட்டுள்ளது என்பதை இங்கே மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரத்தை சர்வதேசத் தரம் வாய்ந்த சுற்றுலாப் பகுதியாக மாற்ற, பெரும் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியுடன் முதற்கட்டமாக இத்திட்டத்திற்காக மாநில அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடையாறு முகத்துவாரம் தனியார் ஒத்துழைப்புடன் ஆழப்படுத்தப்பட்டு முட்டுக்காடு படகு இல்லம் போன்று சுற்றுலா மையமாக மாற்ற தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலும், சுற்றுலாப் பயணங்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு அனைத்து வசதிகளையும் கொண்ட இரண்டு சொகுசு பேருந்துகள் (Volvo bus) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வாங்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு இத்துறை நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊட்டி மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தனியார் துறையின் உதவியுடன் கேபிள் கார்



வசதிகள் செய்ய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு இத்துறை நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளை வெளிநாட்டுப் பயணிகளும், பயண எழுத்தாளர்களும் அறிந்துகொள்ளும் வகையில், தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் விரிவான தரமான இணைய தளம் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்படவேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி 2001-2002 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா போன்ற இடங்களில் சுற்றுலா அலுவலகங்களைத் திறக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் அந்தமான்-நிக்கோபார் மற்றும் விசாகப்பட்டினம் போன்ற இடங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, திற்பரப்பு நீர்வீழ்ச்சிப் பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 4.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் பொதுப் பணித் துறையின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளன. 2002-2003-ல் மேலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த கருத்துருக்கள் அனுப்ப மாவட்ட ஆட்சியரைக் கேட்கப்பட்டுள்ளது என்பதைப் பதிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்கள் கூறியதற்கிணங்க, பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியில் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக 55.55 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு தனது முதல் தவணையாக ரூ. 15.00 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த நிதியிலிருந்து கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்:

புதிய படகுகள் வாங்குதல், நிலச் சீரமைப்பு, படகு இல்ல மேம்பாடு, தற்போதுள்ள குடில்கள் சீரமைப்பு, உணவக மேம்பாடு, சாலை வசதி போன்றவற்றை இத்துறை செய்துதர உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் கூறியதற்கிணங்க, மலைப் பகுதியில் உள்ள ஹோட்டல்களில், ஊட்டி, ஏறகாடு, கொடைக்கானல் போன்ற ஹோட்டல்களில் வழக்கம்போல்தான் செக்-அவுட் டைம் பின்பற்றப்படுகிறது. இதில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. பருவ காலங்களில் வாடகை சற்று அதிகமாக வசூலிக்கப்படுகிறது. இந்த முறை ஹோட்டல் தொடங்கிய காலம்தொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஊட்டி ஏரியில் இருக்கக்கூடிய ஆகாயத் தாமரையின் நிலையை எடுத்துக் கூறினார்கள். ஆகாயத் தாமரையினை அகற்றுவதற்காக 1.75 கோடி ரூபாய் செலவில் டெண்டர் விடப்பட்டுள்ளது. மெடிக்கல் ட்ரீட்மென்ட் என்ற நவீன முறையில் அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்திவேல் முருகன் அவர்கள், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலம் நீர்வீழ்ச்சிப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கூறியிருந்தார்கள். அடிப்படை வசதிகளை மேம்படுத்த 39.00 இலட்சம் ரூபாய், 2001-2002 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் அகஸ்தியர் நீர்வீழ்ச்சியை மேம்படுத்துவது குறித்து, வனத் துறையினருடன் கலந்துபேசி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் பக்காசூரன் மலையில் அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கூறினார்கள். 1996-97 ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 7.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணி தொடங்கப்படவுள்ளது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேறி இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், 223 வெட்டுப் பிரேரணைகள் வரப்பெற்றன. அவற்றில் 31 பிரேரணைகள் கொள்கை விளக்கத்தைப் பற்றியும், 61 பிரேரணைகள் சுற்றுலா மையம் ஏற்படுத்துவது பற்றியும், தங்கும் வசதி ஏற்படுத்த 32 பிரேரணைகளும், சுற்றுலாப் பேருந்துகள் வசதி ஏற்படுத்த 19 பிரேரணைகளும், சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 66 பிரேரணைகளும், சுற்றுலா ஆலோசனைக் குழு அமைப்பது பற்றியும், ஒளி-ஒலிக் காட்சி அமைப்பது பற்றியும், கேபிள் கார் ஏற்படுத்துவது பற்றியும் பிரேரணைகள் வந்துள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ வேண்டுமென்றும், அதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்கள். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க சுற்றுலாப் பகுதிகளில் சர்வதேசத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்றும், சுற்றுலாப் பகுதிகளில் சர்வதேசத் தரம்வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள். 2002-2003-ல் மேலும் பல சுற்றுலாப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா ஆலோசனைக் குழு சிறப்பாகச் செயல்பட இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. சுற்றுலாப் பகுதிகளில் தனியார் ஒத்துழைப்புடன் தங்கும் வசதிகளை அதிகரிக்க இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கம் இடம் பெற்றிருப்பதால், எனது பதிலுரையினை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமாய் மாண்புமிகு உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30 [2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், 'செக்-அவுட் டைம்' பற்றி ஒரு சிறு விளக்கம் சொன்னார்கள். ஒருவர் காலையிலே 10-00 மணிக்கு வந்து, 1-00 மணிக்கு ஹோட்டலை விட்டு வெளியேறினால், 2 நாளைக்கு வாடகை கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையினாலே, இந்த நேரத்தை 24 மணி நேரமாக ஆக்க வேண்டுமென்றுதான் உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். எனவே, அவ்வாறு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டு இருக்கின்ற ஹோட்டல்களில், தொடக்க காலம் முதல் அது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்று, நிதிநிலைக்கு ஏற்ப ஆராயப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில், மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவில்லம் இருக்கிறது. அதில் பொதுமக்கள் நித்தம் நித்தம், நூற்றுக்கணக்கான மக்கள் என்ற நிலை மாறி இப்போது ஆயிரக்கணக்கான மக்கள் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையொட்டி சுற்றுலா மையம் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக அறிவிப்பது என்பது, தமிழக அரசினுடைய கொள்கை முடிவு அல்ல. சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்து, சுற்றுலா மையமாக அமைக்க, அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு நிதிநிலைக்கு ஏற்ப ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (குறுக்கீடு) உட்காருங்கள், அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடையது அரண்"*

என்ற திருக்குறளை வனத் துறையினுடைய அனைத்து வன அலுவலகங்களிலும் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் பார்வையில் படும் வண்ணம், பிரதான இடங்களில் பொறிக்கப்பட வேண்டுமென ஆணையிட்ட நமது இதயதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி)

*"சுற்றி நின்ற பகை முடித்து*
*சூழ்ந்து வந்த சதி அழித்து*
*வெற்றியெனும் தேரேறி*
*வீர உலாவரும் எங்கள் தாயே"*

பயம் என்றால் என்ன என்று கேட்கும் எங்களின் குடும்ப விளக்கே, சாதாரண விவசாயியாக இருந்த என்னை, சின்னசேலம் சட்டமன்ற உறுப்பினராக்கி, வனத் துறையின் அமைச்சராக்கி, ஆசி பதித்துள்ள எனது இதயதெய்வமே, தங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், வனவளம் மற்றும் வன உயிரினங்களைப் பெருக்குவதுடன், அவற்றினைப் பாதுகாப்பது, இவற்றிற்கெல்லாம் மேலாக மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக உழைப்பது என்ற முக்கிய குறிக்கோள்களோடு செயல்பட்டு வருகிறது.

*வனங்களின் பரப்பளவு :* தமிழ்நாட்டிலுள்ள மொத்த நிலப்பரப்பான 22,699 சதுர கிலோமீட்டரில் சுமார் 17.5 விழுக்காடு மட்டுமே வனப்பகுதியாகும். அதில் 6 விழுக்காடு தரம்குறைந்த காடுகள் அடங்கும். தேசிய சராசரி 33 விழுக்காட்டைக் காட்டிலும் குறைவாக வனப்பகுதிகள் உள்ளன. சமூக வனங்கள், குளம், கண்மாய்த் தோட்டங்களில் வளர்க்கப்பட்ட மரங்கள் மூலம் கூடுதலாக 2 விழுக்காடு வனப்பகுதி சேர்ந்துள்ளது. அதனால் கிராம மக்களுக்கு நிலையான

சொத்தும், வருங்கால மரம் வளர்ப்புப் பணிகளுக்கான நிதி ஆதாரங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்:** தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 17.5 விழுக்காடு மட்டுமே வனப்பகுதியாகும். 7,000 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள காடுகள் தரமிழந்துள்ளன. சுமார் 3,000 கிராமங்கள் இத்தகைய தரம் குன்றிய காடுகளின் அடிவாரத்தில் அமைந்துள்ளன. அத்தகைய தரம் குன்றிய வனப் பரப்பினை மேம்படுத்துகிற திட்டம்தான் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்கின்ற மகத்தான திட்டம். இத்திட்டத்தை 1995-ல் நம்முடைய இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம் அறிவித்தார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக கூட்டு வன நிர்வாகத்தின் அடிப்படையில் கிராம வளர்ச்சியினையும், காடு வளர்ப்பினையும் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு அடிப்படையிலான மேம்பாட்டுப் பணிக்காக செயல்படுத்தப்பட்டு வருவதால், மக்களுக்கும், வனத் துறைக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்து வந்த இடைவெளி அநேகமாக நிரப்பப்பட்டு நல்லுறவு வளர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் 200 கிராமங்கள் வீதம், 800 கிராமங்களில், ஆண்டுக்கு 75,000 ஹெக்டேர் காடுகள் என்ற அளவில் சுமார் 3 இலட்சம் ஹெக்டேர் காடுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

2001-2002-இல் 100 கோடியே 08 இலட்சம் ரூபாய் செலவில் 75 ஆயிரத்து 250 ஹெக்டேர் நிலப்பரப்பில் காடுகள் வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், 200 வனக் குழுக்களும், 351 சுய உதவிக் குழுக்களும் அமைக்கப்பட்டன. இதன் மூலமாக 5,085 பெண்கள் பலன் அடைந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 2,851 தடுப்பணைகளும், 341 கசிவு நீர்க்குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

**மற்றொன்று, வனவியல் விரிவாக்கம்:** தரிசு மற்றும் மானாவாரி நிலங்களின் செயல்விளக்கத் தோட்டங்களை அமைத்தல், மரம் வளர்ப்பு பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பயிற்சி அளித்தல், கருத்தரங்கு மற்றும் கண்காட்சிகள் நடத்துதல் மூலமாக வனவியல்



விரிவாக்கப் பணிகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

19 மாவட்டங்களில் வன விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நவீனமயமான புவியியல் தகவல் மையம் ஒன்று முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் கணினிமயமாக்குதலுக்காக நம்முடைய அரசு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.326.98 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைப் பெருமையோடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் தொடங்கி, வனச்சரக அலுவலகம் வரை 273 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தமிழக வனத் துறைக்கென ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, 2002-2003 ஆம் ஆண்டில் 83.15 கோடி ரூபாய் செலவில் 39 ஆயிரத்து 400 ஹெக்டேர் பரப்பில் காடுகள் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

வனக்கொள்கையில் அறிவுறுத்தப்பட்ட கூட்டு வன நிருவாகம் என்ற அடிப்படையில் திட்ட கிராமங்கள் அனைத்தையும் வனக் குழுக்கள் மூலமாக சிறப்போடு நடாத்திக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 1,89,000 ஆண்களும், 1,69,000 பெண்களும் கிராம வனக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். 34 பெண்கள் கிராம வனக் குழுக்களுக்குத் தலைமை ஏற்று நடாத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று நம்முடைய அம்மா அவர்கள்—மிகப் பெரிய திட்டமாக அவர்களுடைய பார்வையிலே பட்டுவிட்ட அத்தனைத் திட்டங்களுக்கும் சிறப்பு சேர்க்கிற வகையில்—Green Cover Plots பசுமை வேலிப் பகுதிகள் என்கின்ற மிகப்பெரிய திட்டத்தை அம்மா அவர்கள் 3-10-2001 அன்று பகுதி-2 திட்டத்தின்கீழ் தொடங்கினார்கள். இந்தத் திட்டம், திருநெல்வேலி, மதுரை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல்,

கரூர், தூத்துக்குடி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் உட்பட 20 மாவட்டங்களில் தரிசு நிலங்களில் ரூ.60 இலட்சம் செலவில் பசுமை வேலிப் பகுதிகள் நிறுவ வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ், திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலை, சிலுக்குவார்பட்டி கிராமம், அய்யங்கார்குளம் என்னும் இடத்தில் 20 ஹெக்டேர் பரப்பில் வளம் தரும் பசுமைத் தோட்டம் வனத் துறையால்—அம்மா அவர்கள் என்ன எண்ணினார்களோ, அந்த எண்ணங்களுக்கு ஏற்ப அந்த இடம்—அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அந்தப் பசுமை வனத் தோட்டத்தின் ஒரு பகுதியில் மதச்சார்பற்ற முறையில் ஒரு தியான மண்டபமும், பிரமிடும் அனைவராலும் பாராட்டும்வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று சந்தன மர விஷயங்களைப்பற்றி உறுப்பினர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். இப்பொழுது, முன்பிருந்த அரசு எடுக்காத ஒரு நடவடிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்ததனுடைய காரணமாக பல்வேறு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு 2001-2002-ல் 312 சந்தன மரக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ரூ. 39.33 இலட்சம் மதிப்புள்ள சந்தனக் கட்டைகளும், அதில் ஈடுபடுத்தப்பட்ட 11 வாகனங்களும், கைப்பற்றப்பட்டன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவதோடு மட்டுமல்ல, இந்த ஆண்டு—519 மெட்ரிக் டன்னை—46 கோடியே, 24 இலட்சத்து 50 ஆயிரத்து 975 ரூபாய் இலாபமாக, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே கிடைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

அதுமாத்திரமல்ல. இங்கே வனத்தைச் சார்ந்திட்ட 3 கழகங்கள் உள்ளன. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் திருச்சியை தலைநகரமாகக் கொண்டு இதன் செயல் எல்லை விழுப்புரம், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் வரை பரவி உள்ளது. இதனுடைய முக்கிய நோக்கம், செயல், முந்திரித் தோட்டங்கள், கூழ் மரம் போன்றவைகளை பராமரிப்பதாகும். முந்திரியைச் சேகரித்து விற்பனைச் செய்தலும், வனம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு கூழ்





மரம் வழங்குதலும் இவற்றினுடைய பணியாகும். 2001-2002-ல் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் ரூ. 424.59 இலட்சம் லாபமாக இந்தக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) ஈட்டியிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்:** 4431.92 ஹெக்டேர் நிலப்பரப்பிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலேயிருந்து, இலங்கையிலிருந்து, திரும்பி வந்த தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதை இதன் முதல் வேலையாகக் கொண்டிருக்கிறது. இந்தக் கழகம் 2001-2002-ல் தேயிலை விலை வீழ்ச்சியினால் ரூ. 437 இலட்சம் நட்டம் அடைந்து இருக்கிறது என்பதைப் பணிவோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலே தமிழ்நாடு வனத் துறையில் 4279.78 ஹெக்டேர் வன நிலங்களில் ரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண் வளம், தட்பவெட்ப நிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது என்பதினால் அங்கே இது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 2001-2002-ல் ரப்பர் விலை வீழ்ச்சியினால் கழகத்திற்கு ரூ. 325.51 இலட்சம் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு நிகழ்வுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசு, பொருளாதார வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றோடொன்று இணைந்து நிலைத்தகு வளர்ச்சியை எய்த முழு மூச்சாக கொள்கையை வகுத்துச் செயல்பட உறுதிகொண்டுள்ளது. காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய முக்கிய நதிகளில் ஏற்பட்டுள்ள மாசை அகற்றி தூய்மையை மேம்படுத்தும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதகை, கொடைக்கானல் ஏரிகளை சுத்தப்படுத்தி பாதுகாத்தல்; கடற்கரைக் கட்டுப்பாட்டு அறிவிக்கைமீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்; தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால், செயல்படாத பிற சுற்றுச்சூழல் பணிகள் மேற்கொள்ளுதல்; சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளைத் திட்டமிட்டுச் செயலாக்குதல் ஆகியவை முக்கியப்பணிகளாகும்.

[திரு. ப. மோகன்] [2002 ஏப்ரல் 29

அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி ஓடை, மாம்பலம் கால்வாய், கேப்டன் குக் கால்வாய் ஆகிய 6 நீர் வழித் தடங்களை தூய்மைப்படுத்தும் மதிப்பீடு ரூ. 1700 கோடியில், சென்னை பெருநகரத் திட்டம் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மூலமாக செய்யப்படும். கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளுக்காக மட்டுமே ரூ. 491.52 கோடிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 2002 வரை பெறப்பட்ட நிதி ரூ. 84.83 கோடியில் ரூ. 71.36 கோடி செலவிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். இந்தத் திட்டம் நம்முடைய அம்மா அவர்கள் ஆட்சியிலே 1991-லே வந்தபோது ஏற்படுத்தப்பட்டது. நடுவிலே வந்த தி.மு.க. ஆட்சியில் சரியாக நடத்தப்படாமல் மீண்டும், அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஓர் ஆண்டிலேதான் 62 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு எடுத்துசசொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமாத்திரமல்ல. நம்முடைய அம்மா அவர்கள்—காவிரி மாசுபடுவதைத் தவிர்க்க எடுத்துக்கொள்ளப்பட்ட 5 நகரங்களுக்கான திட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நிலம் கிடைக்காத நிலை இருந்துவந்தது. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 3-8-2001- அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அளித்த நல்ல அறிவுறுத்தலின் பேரில் விவசாயத் துறைக்குச் சொந்தமான 8.2 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளாக முடிக்கப்படாமல் இருந்த இப்பிரச்சினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு மூன்றே மாதத்தில் முடிக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-45

அதுமாத்திரமல்ல. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் 1982 ஆம் ஆண்டு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, 25 மாவட்ட அலுவலர்களுடனும் 15 சுற்றுச் சூழல் ஆய்வகங்களுடனும் இது செயல்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளின் மாசின் அளவினைப் பொறுத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதிக அளவில் மாசுபடும் 17 வகையான 175 பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு அவை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதிக மாசுபடுத்தும்



2002 ஏப்ரல் 29] [திரு. ப. மோகன்]

தொழிற்சாலைகளுக்கு பொதுமக்கள் கேட்பு மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசின் சுற்றுச் சூழல் வாரிய அனுமதி பெற்றபின், வாரியத்தின் இசைவாணை வழங்கப்படுகிறது. மத்திய மாநில அரசுகள் மூலம் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தலா 25 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை மாநில அரசு மட்டும் ரூ.2440.10 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது என்பதையும், இதுவரை தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக 12 நிலையங்கள், சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான 18 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. காற்றின் தன்மை கண்காணிப்பு நிலையங்கள் 6 இடங்களிலும், வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்கள் சென்னையில் 3 இடங்களிலும், தவிரவும் திண்டுக்கல், பழனி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நீரின் தன்மையைக் கண்காணிக்கவும், காவிரி, தாமிரபரணி ஆகிய இடங்களிலும், கடல் கண்காணிக்கும் திட்டத்தின்கீழ் கடலில் கழிவு நீர் கலப்பதைக் கண்டறிய 7 இடங்களிலும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை சீரோடும் சிறப்போடும் நடத்துவதற்கு நம்முடைய அம்மா அவர்கள் நல்லதொரு ஆலோசனையை வழங்கினார்கள். எந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் இதைச் சிறப்போடு செயல்படுத்துகிறாரோ அவருக்கு 'பசுமை விருது' வழங்கவேண்டும் என்ற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல ஆலோசனையின் பேரில் வருகின்ற சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி, அவ்வாறு தரப்பட வேண்டுமென்ற அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலுக்கிணங்க, தரப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். திரு. கந்தசாமி அவர்கள் கூவம் ஆற்றில் நேப்பியர் பாலம் அருகில் மாசு களையப்படவேண்டுமென்று சொன்னார்கள். சென்னைப் பெருநகரில், கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீர்வழிகளை மாசு நீக்கி தூய்மைப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆறுகளில் 422 இடங்களில் கலக்கும் சாக்கடைகளின் நீரைத் தடுத்து நிறுத்தி, மாசு அகற்றப்பட, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். தற்போது காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி போன்ற பெருநதிக் கரைகளில் உள்ள நகரங்கள் மட்டும்தான் தேசிய நதிநீர்ப் பாசனத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூடலூர்-பவானிசாகர் சாலையை அமைத்தால், சுற்றுச்சூழல் பாதிக்கும், குறிப்பாக யானைகள் நடமாட்டத்திற்கு பாதகம் விளைவிக்கும் நிலையில் உள்ளதால் இத்திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்கப்பட முடியாத நிலை உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மோயாரிலிருந்து தெங்குமராடா செல்வதற்கு நடைப்பாலம் அமைப்பதற்கு அரசின் கருத்துரு புரட்சித் தலைவி அவர்களாலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தேயிலைத் தோட்டங்களில் தேயிலை உற்பத்திச் செலவை கணிசமாகக் குறைக்க வனத் துறையைச் சேர்ந்த ஊழியர்களைத் துறைக்கே திரும்ப அழைப்பதன் மூலமாக பல்வேறு நிலைப்பாட்டில் தேயிலை உற்பத்தித் திட்டத்தைச் சிறப்பாக அடைய வைக்கமுடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரியாதைக்குரிய எச்.எம். ராஜு அவர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்தார்கள். உதகை ஏரியைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். தேசிய ஏரிகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 1.95 கோடி ரூபாய் செலவில், உதகை ஏரி சீர்படுத்தப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல. நீலகிரி மாவட்டத்தின் வன வளத்தைப் பாதுகாக்க 48 பஞ்சாயத்துகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் பொதுமக்கள் பங்குகொள்வதன் மூலமாகத்தான் இது சாத்தியமாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிண்ணக்கோரை கிராமத்தில், 500 மீட்டர் சாலையை வனத் துறை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோன்று திரு. அருள் அவர்கள் தெரிவித்த பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகளைச் சரணாலயமாக மாற்றுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில், அம்மா அவர்களாலே பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மாண்புமிகு திரு. மணி அவர்கள் பல்வேறு கருத்துகளை சிறப்போடு இங்கே எடுத்து வைத்தார்கள். அது நம்முடைய புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குச் சென்று இருக்கிறது. அம்மாவினுடைய கவனத்திற்கு வந்த எந்தக் கருத்தும் சிறப்பாக இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்; இந்த அவையும் அறியும் என்கிற வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்த வனப் பகுதியாக இருக்கிற 440 சதுர கிலோமீட்டரை re-survey செய்ய வேண்டுமென்று மாண்புமிகு திரு. மணி அவர்கள் கேட்டார்கள். அது தீவிரமாக, அம்மா அவர்களுடைய பரிசீலனையில் இருந்து, அவர்கள் சொல்கிற ஆணையின்படி, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று மாண்புமிகு திரு. மணி அவர்கள். அழகியபாண்டியபுரம் வனச் சரகத்தைச் சார்ந்த பழைய சிம்சனுக்கு நிலங்கள் தரப்பட்டு இருக்கின்றன என்பதைச் சொன்னார்கள். அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டுவிட்ட காரணத்தினால், தக்கதொரு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த அவையின் மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று திரு. மணி அவர்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தை எடுத்துச் சொன்னார்கள். 2002-2003-ஆம் ஆண்டில், 346.4 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு, அம்மா அவர்களால் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.14.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே பல்வேறு அறிவிப்புகள் அறிவிக்கப்பட வேண்டுமென்று இங்கே கூறியிருப்பதற்கு, அவருடைய ஆணைக்கிணங்க பல்வேறு அறிவிப்புகளை இங்கே அறிவிக்க இருக்கிறேன்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி-1 திட்டமானது, ரூ.172 கோடி செலவில், 2002-2003 ஆம் நிதியாண்டிலிருந்து மேலும் இரண்டாண்டுகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அடுத்த ஆண்டில் 108 கிராமங்களில், சுமார் 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலுள்ள தரமிழந்த காடுகள் மற்றும் சமுதாய நிலங்கள், இத்திட்டத்தின் மூலமாக தரமுள்ளதாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு இயற்கை வள மேம்பாட்டுத் திட்டமானது, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி-1-இன் விரிவாக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், தரமிழந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பரப்புள்ள வனங்களை, 5 ஆண்டு காலகட்டத்திற்குள் தரமுள்ள வனங்களாக மாற்றியமைக்க 779 கோடி ரூபாய் அயல் நாட்டு நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுச் சூழல் மேம்பாடு, தடிமர மேலாண்மை திட்டம் மற்றும் வன ஆராய்ச்சி உள்ளடக்கிய கீழ்க்காணும் 5 திட்டங்கள், மைய அரசின் மூலமாக, அயல் நாட்டு நிதியுதவி பெற்றுச் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் பொதுப் பணி மற்றும் பஞ்சாயத்து யூனியன் குளங்களில், படுகைகளில் மரங்கள் நடவு செய்ய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், தடை செய்யப்பட்ட அந்தத் தடையாணையை நீக்கி – நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அந்தப் பணம் சென்று சேர வேண்டும் என்கின்ற ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில், மரக் கன்று நடுகின்ற தடையினை நீக்கி— நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மன்னார் வளைகுடாப் பகுதியில் உள்ள பல அரிய கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, உலகச் சுற்றுச் சூழல் நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.130 கோடி நிதியுதவி பெற்று திட்டம் நிறைவேற்றி, விரைவில் செயல்படுத்தப்படும். காடு வளர்ப்பு மற்றும் அது தொடர்பான



நடவடிக்கைகள் மூலம், மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக 70 கோடி ரூபாய் செலவினத்தில் மைய அரசின் நிதியுதவியுடன் திட்டம் உருவாக்கப்படும்.

வனக் கொள்கைக்கிணங்க, மலைவாழ் இனத்தவர்க்கு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், செயல்படுத்தியுள்ளதுபோன்று, கிராம வனக் குழு தோற்றுவித்து சிறு வனப் பொருட்கள், இலவசமாக மலைவாழ் மக்களுக்குத் தரப்படும் என்பதை அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

தஞ்சாவூர் மாவட்டத்தை ஒட்டியுள்ள ஆற்றுக்கரை ஓரப் பகுதிகளில் முதிர்ந்த தேக்கு மரங்களை வெட்டி ஏலம் விடுவதன் மூலமாக அரசுக்குக் கூடுதல் வருவாய் ஈட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனச் சாலைகளில் செல்வதற்கு வனப் பாதைக் கட்டணம் விதிக்கப்படுவதையும், அங்கே கிராமப் பகுதிகளிலே இருப்பவர்கள் வனப் பகுதிக்குச் செல்வதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதையும் சீரிய சிந்தனையோடு செயல்படும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். எனவே, அந்தக் கட்டண விகிதம் முறைப்படுத்தப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் வசமுள்ள வன நிலங்களில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வேம்பு, நெல்லி போன்ற மரங்களை வளர்த்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

வண்டலூர் உயிரியல் பூங்காவின் பணிகளை நெறிப்படுத்த ஒரு மாநில உரிமையியல் குழுமம் தோற்றுவிக்கப்படும் என்று இந்த நேரத்திலே அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வலுப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 100 பள்ளிகள் என்ற அளவில், 3,000 பள்ளிகளில் தேசிய பசுமைப்படைத் திட்டம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களாலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெளிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மேலும் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கைகள் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்கை விளக்கம் குறித்து 20 வெட்டுத் தீர்மானங்களையும், இதர பொருட்கள் குறித்து 159 வெட்டுத் தீர்மானங்களையும், ஆக மொத்தம் 179 வெட்டுப் பிரேரணைகளை அளித்து அவற்றின் விவாதத்தில் கலந்துகொண்டு தங்களின் மேலான கருத்துகளையும் நல்ல பல யோசனைகளையும் இந்த அவைமுன் எடுத்து வைத்துள்ளார்கள். அவற்றிற்கெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அரசின் சார்பாக எனது பதிலினை இந்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளித்தும், வெட்டுத் தீர்மானங்களுக்கு பதில் அளித்தும் இந்த அவைமுன் எடுத்து வைத்துள்ளேன். எனது பதிலுரையை ஏற்று தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்கள் அத்தனை பேரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த சுற்றுச்சூழல் தொடர்பான அறிவிப்புகள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்களா? இதிலே கொடுக்கப்பட்டு இருப்பதிலே சில அறிவிப்புகள், தாங்கள் எல்லாவற்றையும் சொல்லி இருக்கிறீர்களா என்று சரிபார்த்துக்கொள்ளுங்கள். சுற்றுச்சூழல், காற்றின் தன்மை, நீரின் தன்மை, ஒலி மாசு, நிலம் மற்றும் இதர இனங்கள் தொடர்புடையவற்றை சரி பார்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** காற்றின் தன்மை, நீரின் தன்மை, ஒலி மாசு, நிலம் மற்றும் இதர இனங்கள் தொடர்புடைய சென்னை மாநகர சுற்றுச் சூழல் மேலாண்மைத் திட்டம் ஒன்று இதர துறைகளுடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் மூலமாக பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான, சுற்றுச்சூழல் பாதிக்காத பொருட்களைத் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் பயிற்சி அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.



பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்தி சென்னை நகரில் திடக் கழிவுகளைப் பிரித்தல் ஊக்குவிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கிய சுற்றுலா நகரங்கள் மற்றும் புனிதத் தலங்கள் உள்ளடக்கிய 102 நகராட்சிகளில் மற்றும் 6 மாநகராட்சிகளில் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும். சுற்றுச்சூழல் முன்னோடி நகரங்களாகத் தேர்வு செய்யப்பட்ட நகரங்களுக்கு முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்த ஆதார நிதி அளிக்கப்படும்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இன்னல் விளைவிக்கும் திடக் கழிவுகள் அகற்றுவது தொடர்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின்படி இன்னல் விளைவிக்கும் பொது திடக்கழிவு அகற்றும் வசதிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் உறுதி செய்யப்படும்.

சுகாதார நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பாதுகாப்பாக வெளியேற்ற பல நகரங்களில் பொது உயிரின மருத்துவக் கழிவு மற்றும் வசதிகள் ஏற்படுத்தி கண்காணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்குமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தபோது, நீலகிரி மாவட்டத்தில் இப்போது செல்லக்கூடிய ரோடு, தெங்குமராடா-கூடலூர் ரோடை போட வேண்டுமென்று சொன்னால், அங்கே வனத்திற்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும், அதேபோல வன விலங்குகளுக்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தால் ஒற்றையடிப் பாதை மட்டும், நடைபாதை மட்டும் போடுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே, 1986-லேயே ரோடு எல்லாம் போட்டு, அதற்கான கேசட்டை எல்லாம் கூடலூர் மக்கள் வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ரோடு இருந்த காரணத்தால் சொல்கிறேன்; ரோடு போடுவதால் மட்டுமே காடு அழிந்து போய்விடும் என்று சொல்ல முடியாது. ஏற்கெனவே

முக்கால்வாசி காடு அழிந்துபோய் விட்டது. அதையே காரணம் காட்டி இன்னும் நாம் மக்களுக்கு வசதி செய்யாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிச்சத்தையும் ஒரு வழி செய்துவிடலாம் என்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்காக இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த தெங்குமரகடா ரோடு போடவில்லை என்று சொன்னால், நீலகிரி மாவட்டத்து மக்கள், கோவை மாவட்டம் வந்து, நீலகிரி மாவட்டம் வந்து, பிறகு செல்ல வேண்டிய ஒரு கொடுமை இருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இதற்கு ஏதாவது ஒரு விலக்கு அளித்து அந்த ரோடை போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளை அழிப்பது என்பது இயலாத காரியம் என்பதையும் மத்திய அரசினுடைய பல்வேறு பணிகள் தொடர்ந்து எங்களை நிர்ப்பந்திக்கிற காரணத்தால் காடுகள் அழிவதை நாங்கள் ஏற்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(அ) கோரிக்கை எண் 14-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 14, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.





**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கை எண் 14-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.96,88,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.97,68,20,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா மானியக் கோரிக்கை எண் 28-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.31,97,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.67,09,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டபடி நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[2002 ஏப்ரல் 29

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(இ) **கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை**

(ஈ) **கோரிக்கை எண் 20-நெடுஞ்சாலைகள் துறை**

(உ) **கோரிக்கை எண் 36-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

(ஊ) **கோரிக்கை எண் 34-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை**

(எ) **கோரிக்கை எண் 23-உள் துறை-சிறைச்சாலைகள்**

### (இ) கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 38, பொதுப் பணித் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி,

"பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை எண் 38-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.389,93,27,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 775, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் தொகுதியில் சதுப்பேரி முழுக்க ஆழப்படுத்தி கரைகளை



2002 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

பலப்படுத்தி சுற்றி தோட்டம் வைத்து ஏரியில் படகு விட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7491, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட, பெரும்பாலை மேல்நிலைப் பள்ளி, ஏரியூர் மேல்நிலைப் பள்ளி, பாப்பாரப்பட்டி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்ணாகரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பி. அக்ரகாரம் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லாமலிருப்பதால் அங்கு கூடுதல் கட்டட வசதிகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8153, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

***திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் செல்விக்குறிச்சி பெரிய ஏரியில் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3830, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7964, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியிலுள்ள மெய்யூர் வேம்பேடு ஏரியை உடனடியாக ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6591, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3932, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1364, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7762, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6649, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1971, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5076, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5788, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7217, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 850, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7182, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1865, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7002, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. எல்லோரும் தூங்கிவிட்டார்களா?

வெட்டுத் தீர்மானம் எண் 1032, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8281, திரு. வை. சிவபுண்ணியம்.

[2002 ஏப்ரல் 29

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7042, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5897, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை சின்னவேடம்பட்டி நீர்த்தேக்கத்தில் சங்கலூர் பள்ளத் தண்ணீர் முழுவதையும் தேக்கி வைக்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7792, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6098, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4669, செல்வி க. பாலபாரதி.



2002 ஏப்ரல் 29]

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாழக்கொம்பு பேரூராட்சியில் உள்ள அய்யம்பாளையம் கிராமத்திற்கும், ஆத்துப்பட்டி கிராமத்திற்கும் பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2363, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட காவேரி, மண்ணியாறு, அரசலாறு போன்ற ஆறுகளில் இருந்து பிரியும் தூர்வாரப்படாத அனைத்து வாய்க்கால்களையும் தூர்வார வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6336, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5999, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்த போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8184, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மஞ்சூர் ஒன்றியம், நாப்பாளையம் பகுதி கொசஸ்தலையாற்றில் வீணாகக் கடலில் கலக்கும் நீரைத் தேக்க நீர்த்தேக்கம் கட்டி, விவசாயத்திற்கு நீரைத் திருப்பிவிடும் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5220, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதியிலுள்ள கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலுள்ள ஏரிகளை மராமத்து செய்வது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6391, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6683, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எட்டயபுரம் காவல் நிலையத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பற்றிய 38ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.514,52,25,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.389,93,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



பிற்பகல் 4-35

### (ஈ) மானியக் கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20- நெடுஞ்சாலைகள் துறை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கை எண் 20-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.719,08,29,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 699, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4828, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3832, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7899, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3918, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1340, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8020, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், சத்தரை ஊராட்சியில் எல்லை தரிசு சாலை மற்றும் கசவநல்லாத்தூர் முதல் தண்டலம் வரை தார்ச்சாலை போட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4256, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1954, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4987, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 831, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 408, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6998, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகெங்கை மாவட்டம், திருபுவனம் ஒன்றியம், பழையனூரிலிருந்து ஓடாத்தூர் செல்லும் சாலையில் கிருதுமால் நதியின்மீது மேல் மட்டப்பாலம் கட்டுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6979, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5930, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்தில் உள்ள மோயாற்றிலிருந்து தெங்குமராடாவிற்கு புதிய இணைப்புப் பாதை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6089, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2369, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதிக்குட்பட்ட அண்டக்கு, கூளந்தேரி வழியாக திருவைகாவூர் வரை செல்லும் சாலையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5683, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.,

வெட்டுத் தீர்மானம் எண் 5995, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு புத்தர் சந்தை சந்திப்பிலிருந்து, மூவோட்டுக்கோணம், கண்ணுமாடு, பளுகல் வரையிலுள்ள சாலையை விரிவுபடுத்தி தார்களம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5227, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி நெடுஞ்சாலையை (State Highways 26) இரட்டை வழிப்பாதையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 378, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6418, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6692, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதிக்குட்பட்ட அனைத்து சாலைகளையும் செப்பனிட்டு தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.428,05,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7709, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

**(உ) கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36- மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கை எண் 36-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.25,44,82,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 654, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தைக் கடுமையாக்கி கள்ள மது வைத்திருந்தால், கடத்தினால், விற்றால் குறைந்தபட்சம் ஏழு ஆண்டு



சிறைத் தண்டனை என்றும், அந்தக் குற்றம் ஜாமீனில் விடப்படாத குற்றமாக்கப்படவேண்டி சட்டத் திருத்தம் கொண்டுவரவேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய *36* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7411, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய *36* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7967, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், விற்பனை செய்வதையும் கடுமையாகத் தடுத்து, தண்டனை தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய *36* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8124, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்கவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [2002 ஏப்ரல் 29

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3931, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7757, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6640, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1969, திரு. மு. கார்த்தி.



2002 ஏப்ரல் 29]

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8278, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5905, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் உடல் நலத்தையும் ஒழுக்கத்தையும் விரும்பும் சான்றோர்கள் எண்ணத்திற்கு விரோதமாக மதுக்கடைகள் திறக்கப்பட்டுள்ளதால் கள்ளுக்கடைகள் திறப்பது தவிர்க்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6111, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6319, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5994, திரு. டி. மணி.

**திரு. டி.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,44,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6197, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

### (ஊ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை எண் 34-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.21,93,53,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 658, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மத்திய அரசு போன்று விருப்ப ஓய்வுத் திட்டம் மூலம் பணியாளர் எண்ணிக்கையை இவ்வாண்டே அரசு குறைக்கவேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7421, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3836, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகினற ரூ.21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3929, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1368, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6635, திரு. கே. ஆறுமுகம்.

[2002 ஏப்ரல் 29

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7755, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1967, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8275, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6058, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5908, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தங்கள் உயர்கல்வி காரணமாக உயர் அரசு அலுவலர்கள் புதிதாக பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை தங்கள் பணியாட்கள்போல கருதுவதைத் தவிர்க்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,93,53,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

### (எ) கோரிக்கை எண் 23—உள் துறை—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23-உள்துறை-சிறைச்சாலைகள். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்துறை-சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கை எண் 23-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 3,35,34,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 731, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் ஆண்கள் மத்திய சிறையிலும், பெண்கள் சிறையிலும் போராட்ட காலத்தில் அதிக அளவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் கைதிகள் தங்க கூடுதல் கட்டடங்கள், நவீன கழிவறைகள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7492, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3839, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7897, திரு. டி. சுதர்சனம்.





**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3921, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8041, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த கிளைச் சிறைச்சாலை மூடப்பட்டிருப்பதனால் மீண்டும் அந்த சிறைச் சாலை திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4173, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1957, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6982, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5924, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற





ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6049, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2377, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதி, பாபநாசம் கிளைச் சிறைச்சாலை பழுதடைந்து உள்ளதால், அதனைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2126, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5993, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறைச்சாலைகளை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

53-121--12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5456, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பாசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள்துறை-சிறைச்சாலைகள் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,51,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,35,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6168, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7113, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் உள்துறை-சிறைச்சாலைகள் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@627 முதல் 849 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III, IV, V, VI மற்றும் VII-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

***திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை தமிழகத்திற்கு அடையாளம் காட்டி, வழிகாட்டிக் கொண்டிருக்கிற எங்களுடைய மக்கள் தளபதி, ஐயா, நாடாளுமன்ற உறுப்பினர், திரு. ஜி.கே. வாசன் அவர்களை வணங்குகின்றேன்.

**"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"**

என்ற வள்ளுவரின் வாக்கினை நிரூபிக்கின்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்று தேசிய கவி பாரதி பெரிதும் விரும்பினான். அந்த முண்டாசுக் கவிஞனின் கனவினை நனவாக்குகின்ற நோக்கத்தோடு உணவு உற்பத்தியைப் பெருக்கிட பொதுப் பணித் துறையிலே சிறப்பான காரியங்களை நிறைவேற்றிட முன்வந்துள்ள தமிழகத்தின் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கெல்லாம் முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுத்து அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், விவசாயிகளுடைய உள்ளத்திலே மிகுந்த நம்பிக்கையையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்று இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தமிழ்நாடு தனது மேற்பரப்பு நீர்வளம் முழுமையும் பயன்படுத்தி, தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, மிகுந்த நீர்வளம் பெற்றுள்ள நமது சகோதர மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள உபரி நீரைப் பயன்படுத்திடவும், தமிழ்நாட்டின் மாநிலத்தை மேம்படுத்துவதற்கு, அங்கு வீணாகச் செல்லுகின்ற நதிகளின் நீர்வளத்தை மேம்படுத்துவதற்கு, அங்கு வீணாகச் செல்லுகின்ற நதிகளின் உபரி நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடவும், தமிழக அரசு மத்திய அரசு உருவாக்கியுள்ள தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையை

அணுகியுள்ளதுடன், தென்னக நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை போன்ற நதிகளை இணைக்கின்ற தென்னக நதி இணைப்புத் திட்டத்தை முடிக்க தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வரும் தமிழக அரசை, தமிழகத்தினுடைய விவசாயிகள் சார்பாகவும் நான் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

நான சார்ந்திருக்கின்ற பேராவூரணி தொகுதி, கல்லணைக் கால்வாயினுடைய கடைமடைப் பகுதியாகும். இந்த கடைமடைப் பகுதியிலே மேட்டூரிலே ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டு மூன்று மாத காலமாகியும்—ஏறக்குறைய ஜூனிலே தண்ணீர் திறக்கப்பட்டிருந்தாலும் மூன்று மாதம்—கடந்த ஆகஸ்டு மாதம்தான் எங்கள் பகுதிக்குத் தண்ணீர் வந்தது. காரணம், கல்லணைக் கால்வாயின் முகத்துவாரப் பகுதியிலே மணல் திட்டுக்கள் இருந்த காரணத்தினாலே—இருக்கின்ற காரணத்தினாலே—கல்லணைக் கால்வாயிலே 4000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டாலும் எங்கள் பகுதிக்கு ஆயிரம் கன அடிதான் வந்துகொண்டிருக்கிறது. அதனாலே, தஞ்சை மாவட்டத்திலே காவிரி டெல்டா பகுதியிலே பாசன வேலைகள் எல்லாம் உரிய காலத்திலே தொடங்கப்பட்டிருந்தாலும், ஏறக்குறைய மூன்று மாதகாலம் கழித்து கடைமடைப் பகுதியிலே விவசாயம் தொடங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவற்றையெல்லாம் நிறைவு செய்துகொள்கிற வகையிலே கல்லணைக் கால்வாயின் முகத்துவாரப் பகுதியிலே இருக்கின்ற மணல் திட்டுக்கள் ஆண்டுதோறும் தூர் வாரப்படவேண்டும். கடந்த இரண்டாண்டுகளாக தூர் வாரப்படாததால், கல்லணைக் கால்வாயினுடைய கடைமடைப் பகுதி முற்றிலுமே பாசனம், பாசனத்துடன் கூடிய விவசாயம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற காவிரி டெல்டா பாசனப் பகுதியிலே, நமது அரசு தூர் வாருவதற்கு மட்டும் இந்த காவிரி டெல்டா பாசனப் பகுதி நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு முதல் கட்டமாக ரூபாய் 460 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசின் அனுமதிக்காக





அனுப்பப்பட்டிருக்கின்றது. அதற்காக தமிழக அரசுக்கு தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் சார்பாக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே 1998 ஆம் ஆண்டு முதல் காவிரி டெல்டா பாசனப் பகுதியிலே தூர் வாருவதற்கு முதலாம் ஆண்டுக்கு ரூ. 50 கோடி நிதியாதாரம் வழங்கப்பட்டிருந்தாலும்—ஆண்டுதோறும் நிதியாதாரம் வழங்கப்பட்டிருந்தாலும்—அன்றைய ஆட்சியாளர்கள் அந்த நிதியாதாரத்தை ஒழுங்காகப பயன்படுத்தாமல் அங்குள்ள தேவையற்ற காட்டாறுகளிலே தூர் வாரும் பணியை மேற்கொண்டார்கள். ஆனால் முழுமையாக பாசனப் பகுதியிலே அந்தப் பணிகள் செய்யப்படவில்லை. அவற்றையெல்லாம் நிறைவு செய்கின்றவகையிலே இன்று பொறுப்பிலே இருக்கின்ற மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தஞ்சை மாவட்ட விவசாயிகளின் நலன் கருதியும், தஞ்சை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியாக இருக்கின்ற ஒரத்த நாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, பேராவூரணி தொகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு பயன்படுகின்ற வகையிலேயும் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற பாசன கிளை வாய்க்கால்களையெல்லாம் தூர் வாருவதற்கு இந்த ஆண்டு அதிக நிதியாதாரம் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பேராவூரணி தொகுதியிலே இருக்கின்ற பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏறக்குறைய 15 ஊராட்சிப் பகுதிகள் இராஜாமடம் பாசன வாய்க்கால் பகுதிகளாகும். இந்த இராஜாமடம் பாசனப் பகுதி உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 50 ஆண்டு காலம் ஆகிறது. இந்த 50 ஆண்டு காலத்திலே இதுவரை ஒரு ஆண்டுகூட தூர் வாரப்படாத காரணத்தினால் கடந்த ஐந்தாண்டுகளிலே இந்தப் பகுதியிலே முற்றிலுமாக விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இந்தப் பகுதியினுடைய விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் குறைவதோடு, அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக ஆகிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையைக் கருதி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தின் கடைமடைப் பகுதியான பட்டுக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற, 15 ஊராட்சிகளைச் சார்ந்த 16 கிலோ மீட்டர் தூரமுள்ள இராஜாமடம் வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [2002 ஏப்ரல் 29

அதேபோல கல்லணைக் கால்வாயிலே இருக்கின்ற பிரிவு வாய்க்கால்கள் மற்றும் ரெகுலேட்டர்கள் எல்லாம் மிகவும் மோசமான நிலையிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி ஆண்டுதோறும் சொல்லியும்கூட இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இன்று மத்திய அரசும் மாநில அரசும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு பணிகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இதுபோல மழைக் காலங்களிலே காட்டாறுகளில் சென்று வீணாகக் கடலில் கலக்கின்ற பெருவெள்ளத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற வகையிலே பட்டுக்கோட்டை, பேராவூரணி தொகுதிகளிலே இருக்கின்ற மகாராஜ சமுத்திரம்—காட்டாறுகளிலிருந்து இலட்சத்திற்கு அதிகமான கன அடி தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கிறது. குறிப்பாக, மகாராஜ சமுத்திரம்—காட்டாறு அருகிலே இருக்கின்ற முதல் சேரி, பள்ளிகொண்டான், தொக்காலிகாடு, புதுக்கோட்டை உள்ளூர், மெண்டிக்குளம், காற்காவயல், திருவத்தேவன் போன்ற கிராமங்களிலே இத்திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று பலமுறை வலியுறுத்தியிருக்கின்றோம். இந்த ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு ஏறக்குறைய முப்பதிலிருந்து அறுபது இலட்சம் ரூபாய் வரை செலவாகுமென்ற திட்ட மதிப்பீடு பொதுப் பணித் துறையின் சார்பாக அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு வழங்கி ஐந்தாறு ஆண்டுகாலமாகியும் இத்திட்டம் நிறைவேற்றப் படவில்லை. ஆண்டுக்கு ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால்கூட நல்லது. இந்த கிராமத்திற்குச் செலவாகின்ற தொகை வெறும் அறுபது இலட்சமே. அந்த வகையிலே ஏறக்குறைய 8 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்ற காரணத்தால் ஆண்டுக்கு ஒரு கிராமத்தில் இந்த நீரேற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழகத்திலே ஏறக்குறைய 8,939 பொதுப் பணித் துறை ஏரிகளும், 9,850 முன் ஜமீன் கண்மாய்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கால்வாய்களையும், ஏரிகளையும் நவீனப்படுத்துவதற்கு 1996-லே நவீனமயமாக்கும் திட்டம் ஒன்றை அமல்படுத்தி அதன் வாயிலாக சென்ற ஆட்சிக் காலத்திலே சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு ஏரி என்று ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஏரியில் தூர் வாருவதற்கு தலா 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இந்தக் கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற எங்கள் பகுதிக்கு இந்த நிதியாதாரம்



2002 ஏப்ரல் 29] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

ஒதுக்கப்படவில்லை. குறிப்பாக எனது தொகுதியைப் பொறுத்தமட்டிலே—ஏறக்குறைய 375 பெரிய ஏரிகள்—தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற பெரிய தொகுதி, இந்தப் பேராவூரணித் தொகுதியாகும். இந்தத் தொகுதியிலே முக்கியமான ஏரிகளாக இருக்கின்ற இந்த 375 ஏரிகளும் கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியைச் சேர்ந்திருந்தால்கூட கல்லணைக் கால்வாயில் தண்ணீர் வருவதில்லை. முற்றிலும் மழைநீரையே நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட மானாவாரிப் பட்டியலிலே இந்த ஏரிகளை எல்லாம் சேர்த்து தூர் வாருவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 4-50

குறிப்பாக எனது தொகுதியிலே இருக்கின்ற பெரிய ஏரிகளான பட்டுக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற செல்லிக்குறிச்சி ஏரி, பண்ணவயல் ஏரி, குறிச்சி ஏரி, வாட்டாத்திக்கோட்டை ஏரி, சீதா ஏரி, போன்ற பல்வேறு பெரிய ஏரிகள் எல்லாம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக தூர் வாரப்படாமல் அந்த ஏரிகள் முழுவதும் காட்டாமணக்குச் செடிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அங்கே நீர் தேங்கியிருக்க வாய்ப்பில்லை. வரவிருக்கிற நிதியாண்டிலே இந்தப் பெரிய ஏரிகளில் எல்லாம் போர்க்கால அடிப்படையிலே தூர் வாரி அந்தக் காட்டாமணக்குச் செடிகளை எல்லாம் அழிக்க வேண்டுகின்றேன்.

அதுபோல எனது தொகுதியிலே நரியாறு என்கிற பெரிய காட்டாறு ஓடுகிறது. அந்தக் காட்டாற்றைச் சுற்றி 11 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே அலிவலம் என்ற கிராமத்திலே ஒரு நீர்த்தேக்கம் ஏற்படுத்துவதற்கு தமிழக அரசுக்கு கருத்துரு ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த நீர்த்தேக்கம் ஏற்படுத்தப்பட்டால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற முடத்தாணி ஏரி, கொத்தமங்கலம் ஏரி, சீதாம்பாள்புரம் ஏரி, கழுகுப் புலிக்காடு ஏரி போன்ற ஏரிகளும், மணவயல், குறிச்சி, அலிவலம் போன்ற கிராமங்களும் முழு அளவிலே பயன்படும். இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்று சொன்னால் அதற்குச் சாலை வசதி முக்கியம். அந்த வகையிலே இன்று தமிழகத்திலே சாலை வசதிகளைப் பொறுத்தமட்டிலே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. அதன் முதற்படியாக கடந்த ஆட்சிக் காலத்திலே 4,168 கிலோ மீட்டராக

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [2002 ஏப்ரல் 29

இருந்த மாநில நெடுஞ்சாலைகளை இந்த அரசு பொறுப்பினை ஏற்ற இந்த ஆண்டிலே 7,131 கிலோ மீட்டராக தூரத்தை அதிகரித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெரு முயற்சியினால் ஏறக்குறைய 2,968 கிலோ மீட்டர் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சாலைகள் சேர்க்கப்பட்டிருந்தாலும்கூட பல்வேறு மாநில நெடுஞ்சாலைகள் இருவழிச் சாலைகளாக இருக்கின்றன. இன்னும் அதிலே 1,000 கிலோ மீட்டருக்கு அதிகமான சாலைகள் ஒருவழிப் பாதையாக இருக்கின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து தஞ்சை—பட்டுக்கோட்டை—அறந்தாங்கி செல்கிற மாநில நெடுஞ்சாலை எண் 28-ம் அதுபோல குளித்தலை-சேதுபாவாசத்திரம் சாலை எண் 71-ம் மிகவும் மோசமான நிலையிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியைப் பொறுத்தமட்டிலே பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி உபகோட்டங்களைக் கொண்ட ஏறக்குறைய 400 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் இருக்கின்றன. இந்தச் சாலைகள் எல்லாம் மிக மோசமான நிலையிலே அண்மையிலே பெய்த மழையின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே அன்றைய ஆட்சியாளர்கள் எனது தொகுதியிலே வெறும் ரூ. 50 இலட்சமே ஒதுக்கினார்கள். 400 கிலோ மீட்டர் சாலைகளுக்கு. அதனால் இப்போது முற்றிலுமாக அங்கே இருக்கின்ற சாலைகள் பழுதடைந்து இன்று போக்குவரத்து நிறுத்தப்படுகிற சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி இந்தப் பகுதிகளுக்கெல்லாம் நிறைய நிதி ஆதாரங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராம நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டிலே—தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு முக்கியமான தொழில் விவசாயம்தான். இந்த விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளை நகரங்களுக்கு எடுத்துச் செல்லவும், 1000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களிலே நகரத்துடன் இணைக்கின்ற வகையிலே— தற்போது கிராம நெடுஞ்சாலைப் பணிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. இந்த கிராம நெடுஞ்சாலைப் பணிகளைச் செய்வதற்கு 1 கிலோ மீட்டருக்கு ஏறக்குறைய ரூ. 12 இலட்சம் செலவு செய்யப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த ரூ. 12 இலட்சம் செலவு செய்யப்பட்டு போடப்படுகிற சாலை, போடப்பட்டு 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் ஆனதற்குப் பின்னாலே அதைப் பராமரிப்பதும், சீரமைப்பதும் ஊராட்சி



2002 ஏப்ரல் 29] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

ஒன்றியங்களா அல்லது நெடுஞ்சாலைத் துறையா என்ற ஒரு கேள்விக்குறி இருக்கிறது. ரூ. 12 இலட்சம் செலவு செய்து போடப்படுகிற சாலைகள்—தற்போது—ஊராட்சி ஒன்றியங்கள் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு சாலைகள்—மோசமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே நெடுஞ்சாலைத் துறை மூலமாக இந்தச் சாலைகள் பராமரிக்கப்பட்டால் உரிய காலத்தில் அந்தச் சாலைகள் நல்ல சாலைகளாகத் தொடர்ந்து இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே பெருமகளூர்-முதுகாடு சாலை, பெருமகளூர்-கல்யாண இராமநாதபுரம் சாலை, அதம்பை இணைப்புச் சாலை, ஏரிப்புறக்கரை-மயிலங்கோட்டைச் சாலை, பண்ணவயல்— தோட்டங்குடிச் சாலை, கொண்ணக்காடு—ஆனைகாடு சாலை போன்ற பல்வேறு சாலைகள் எல்லாம் திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டும். அதுபோல எனது தொகுதியிலே கடந்த ஆண்டுகளிலே கட்டையங்காடு என்ற கிராமத்திலே அக்னியாற்றின் குறுக்கே 2 கோடியே 20 இலட்சத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டு அது முடியும் தருவாயில் இருக்கிறது. அதற்கு அப்ரோச்சிங் சாலைக்கு, இணைப்புச் சாலைகள் அமைக்க ரூபாய் 98 இலட்சம் மதிப்பீட்டிலே ஒரு திட்ட மதிப்பீடு உருவாக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு காலதாமதமாக ஆகிக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு சாலைகளும் போடப்பட்டால் ரூ. 2 கோடியே 20 இலட்சத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற பாலம் கட்டப்பட்டு பட்டுக்கோட்டை பேராவூரணியின் குறுக்கே உள்ள தூரம் ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் குறைவாக குறுக்கே செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

அதேபோல தற்போது தமிழ்நாட்டிலே கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தமட்டிலே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை ஏறக்குறைய 737 கிலோ மீட்டர் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைந்துள்ளது. ஆனால், தற்போது சென்னையிலிருந்து கடலூர் வரை 166 கிலோ மீட்டர் சாலைதான் போடப்பட்டிருக்கின்றது. எஞ்சிய சாலைகள், கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை இரண்டாம் கட்டப் பணி தொடங்கப்படுவதாகக் கடந்த கால ஆட்சியிலே சொல்லப்பட்டது. ஆனால், இரண்டு ஆண்டு காலமாக அந்தச் சாலைகள் எல்லாம் ஆய்வுசெய்யப்படுகின்றனவே தவிர, இதுவரை எந்தப் பணியும்

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [2002 ஏப்ரல் 29

தொடங்கப்படவில்லை. எனவே, அந்தப் பணியை இந்த அரசு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள். 10 பேர் பேச இருக்கின்றார்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அதேபோல இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே தனியார் பங்கேற்புடன் பாலம் கட்டுதல் என்ற குறிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் விக்கிரவாண்டி-தஞ்சாவூர்-கும்பகோணத்தை இணைக்கின்ற வகையிலே கொள்ளிடம் ஆற்றின் அருகே அணைக்கரை கிராமத்திலே பெரிய பாலம் கட்டுவதற்கு கருத்துரு உருவாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த கால ஆட்சியிலே பெரம்பலூர் மாவட்டத்தை இணைக்கின்ற வகையிலே, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, கடந்த கால அரசால் நீலத்தநல்லூர்-மதனத்தூர் பாலம் அமைப்பதற்கு ஏறக்குறைய ரூ. 49 கோடிக்கு கருத்துரு உருவாக்கப்பட்டது. ஆனால், இப்போது இருக்கின்ற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே அது விடுபட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், பெரம்பலூர் மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றவர்கள் சென்னைக்குச் செல்வதற்கும், ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் குறைந்த பாதையில் செல்வதற்கும், இந்தப் பாலம் அமைக்க வேண்டுமென்பது பல்வேறு பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதுரை, அவரே பேசுகிறார் இப்போது. அவர் பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** ஒரு செகன்ட், பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 10 பேர் பேச இருக்கின்றார்கள். (குறுக்கீடு) 10 பேர் பேச வேண்டும். பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லுங்கள்.



2002 ஏப்ரல் 29]

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அதேபோல தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆயுள் தண்டனைக் கைதிகளாக சிறையிலே உள்ள வயது முதிர்ந்தவர்களை கருணை அடிப்படையிலே விடுதலை செய்ய வேண்டுமென்று பல்வேறு மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் கருணையோடு இதைப் பரிசீலித்து வயதாகியுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு முகவரி தந்து இந்த அவையிலே அமர்த்திய இந்திய நாட்டின் சாணக்கியத் தாயே, நான் வணங்கும் தெய்வமே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு, இந்த மாமன்ற பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர்களையும், என்னை இந்த மாமன்ற உறுப்பினர் ஆக்கிய என் தொகுதி ஜெயங்கொண்டம் வாழ் மக்களையும் வணங்கி, எனக்கு மட்டுமின்றி ஆறரை கோடி தமிழர்களுக்கும் கதியாய், கலங்கரை விளக்கமாய் தமிழகம் தழைக்க வந்த எங்கள் நடமாடும் தெய்வமே, உங்கள் நல்லாசியோடு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தற்போதைய பாசன நிலையை மேம்படுத்தும் விதமாக ரூ.2,900 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் நீர் ஆதார தொகுப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தினால் தமிழக பாசன முறை நவீனப்படுத்தப்பட்டு அதன் நிலைமை உயரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதுமட்டுமின்றி சிறிய, நடுத்தரப் பாசனங்களை மேம்படுத்தவும் இந்நிதிநிலை அறிக்கையில் பல்வேறு செயல் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது.

நமது நாட்டின் மேற்பரப்பு நீர்வளம் முழுவதும் பயன்படுத்தப்பட்டதனால் நீர்வளத்தைப் பெருக்க அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இதனை மனதில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை நம் நாட்டிற்குத் திருப்பிவிட்டு, பாசன வசதியை மேம்படுத்த மைய அரசின் தேசிய

நீர்வள மேம்பாட்டு முகமையை காலத்தே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அணுகியுள்ளது. இதனை, பொதுமக்கள் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாராட்டுகின்றார்கள்.

அதேபோல இந்த மானியக் கோரிக்கையில் பாசனங்கள் மற்றும் கட்டடங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள 53 திட்டங்கள்மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் என்பதிலே எள்ளளவும் சந்தேகமில்லை. குறிப்பாக, நெடுஞ்சாலை மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருந்த தஞ்சையிலிருந்து சென்னை செல்லும் மெயின் ரோட்டில் கும்பகோணம் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கரையில் பாலம் கட்ட வேண்டுமென்பது மக்களின் நீண்ட கால கோரிக்கை. தற்போது மலேசிய நாட்டு C.I.D.B. நிறுவனத்தின் உதவியுடன் இப்பாலத்தை ஏற்பாடு செய்துள்ள இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

பிறபகல் 5-00

அதேபோல கிராமச் சாலைகள் திட்டம் என்ற புதிய திட்டத்தின் அடிப்படையில் 500 முதல் 1000 மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் செய்து கொடுக்கும் திட்டம் மிகவும் அற்புதமான திட்டமாகும். இத்திட்டமானது, விவசாயக் குடிமக்களுக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் திட்டமாகும். அதேபோல 3 ஆண்டுகளுக்கு மேலாக கிராமப் பகுதிகளிலே பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு இணையாக தார்ச் சாலைகளாக மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 200 கி.மீ. சாலைகளையும் 9 பாலங்களையும் மேம்படுத்துவதற்காக வந்துள்ள அறிவிப்பால் கிராமப்புற மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல ஆதிதிராவிட மக்களுக்கு உதவிகளை வழங்குவதிலும், திட்டங்களைத் தீட்டுவதிலும் கழகம்தான் முன்னோடி என்பதனை உணர்த்தும் விதமாக ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் சிறப்பான திட்டங்களை அறிமுகம் செய்யும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலும் கிராம மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் 50 விழுக்காடு கொண்ட கிராமத்திற்கு தார்ச் சாலை வசதி செய்திட, 55 கிராமங்களுக்கு வசதி கிடைத்திட, ரூ.23





கோடி ஒதுக்கீடு செய்து ஆதிதிராவிட குடியிருப்பு இணைப்புச் சாலைகள் திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளார். இது ஆதிதிராவிட மக்கள் வாழும் கிராமங்களுக்கு வளஞ்சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இப்படிப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி ஏழைகளின் வாழ்வை ஏற்றம் பெறச் செய்யும் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் உரியதாகும்.

அதேபோல எனது தொகுதியில் ஏழை மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வந்த ஒளிவிளக்கே, தமிழ்நாட்டின் கலங்கரை விளக்கமே! தாயே! தெய்வமே! எனது தொகுதி வளமிருந்தும் வறண்டு போன பூமி. வசதி இருந்தும் வறுமையில் வாடும் தொகுதி. செல்வம் கொழித்திருக்கும் என் தொகுதியில் 75 சதவிகிதம் பேர் வறுமையில் வாடுகிறார்கள். இந்த ஏழைகளின் துயர் துடைக்க அவதாரம் எடுத்துள்ள எங்கள் தாயே! கடந்த ஆட்சிக் காலத்தில் இருண்டு போயிருந்த என் தொகுதி மக்களின் நல்வாழ்வுக்கு தாங்கள்தான் வழிகாட்ட வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த பொற்கால ஆட்சியிலே ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டது. இடையில் வந்தவர்கள் ஏழையின் வயிற்றில் அடித்து திட்டத்தினை ஆமை வேகத்தில் செயல்படுத்திச் சீர்குலைத்து விட்டனர். கருணையுள்ளம் கொண்ட தாயே! தங்களால் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்து இத்திட்டத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு உரிய விலை கொடுத்தும், வேலையும் கொடுத்தும் காத்திட வேண்டுகிறேன். இத்திட்டத்தின்மூலம் வறுமைக் கோட்டிலிருந்து வசதிக் கோட்டிற்கு எம் தொகுதி மக்களைக் கொண்டு வந்து தமிழ்நாடே திரும்பிப் பார்க்கும் வளமிக்க தொகுதியாக மாற்றிட தங்களது பொற்பாதங்களைத் தொட்டு வேண்டுகிறேன். ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், திசைமாறும் ஏழை இளைஞர்களின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்த முடியும். இதனால் எனது தொகுதி உழைப்பாளிகளின் கூடாரமாக மாறும். இதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க அம்மா அவர்களின் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற குறளுக்கேற்ப வருகின்ற காலகட்டங்களில் நிலத்தடி நீரைப் பராமரிக்கின்ற வகையில் நீர்வள மேம்பாட்டுத் துறை என்ற தனித் துறையை ஏற்படுத்திய புரட்சித்தாயே! என் தொகுதியில் 85 சதவிகிதம் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக உள்ளன. எனது தொகுதியில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் 10 ஏரிகளும், 180-க்கும் மேற்பட்ட பாசனக் குளங்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலும், 150 குளங்கள் ஊராட்சியின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இவற்றில் 80 விழுக்காடுகளுக்கு மேல் கடந்த பல ஆண்டுகளாக வெட்டப்படாமல் காட்டாமணக்குச் செடிகள் நிறைந்து நீர் தேங்குவதற்கு வசதி இல்லாமல் உள்ளன. எனவே, கருணையுள்ளம் கொண்ட தாயே! காட்டாமணக்குச் செடிகளை அகற்றி ஆழப்படுத்தித் தருமாறு தங்களது பொற்பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பொன்னாறு வாய்க்காலைத் தூர் வாரி, அதன் முகப்பில் கொள்ளிடத்தின் நீரைத் தேவையான அளவு பொன்னாறு வாய்க்காலுக்கு திருப்பும் வகையில் நிலையான ஒரு நீர்த்தேக்கம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். அந்த பொன்னாறு வாய்க்காலின் கரையைத்தான் பல்வேறு கிராம மக்கள் சாலையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கரையை அகலப்படுத்தி சாலை அமைத்துத் தருவதன்மூலம் சுமார் 15 கிராமங்களுக்குமேல் பயன்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள பெரிய ஏரியான இராஜேந்திர சோழனால் வெட்டப்பட்ட பொன்னேரியினுடைய பரப்பளவு சுமார் 500 ஏக்கர் ஆகும். அதனுடைய பாசனப் பரப்பளவு 1742 ஏக்கர் ஆகும். இது பல ஆண்டு காலமாக தூர் வாரப்படாமலும் இதில் நீர்ப் பிடிப்பு அதிகமாக இல்லாததாலும் இதைத் தூர் வாரி அதனுடைய வரத்து வாரியை ஒழுங்குபடுத்தித் தர வேண்டுமென்றும் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எனது தொகுதியில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுத்தமல்லி நீர்த் தேக்கத் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பே நிறைவுறப்பட்டு இன்றுவரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அது ஏனோ தெரியவில்லை. கடந்த ஆட்சியினர் புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதனால் அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள்.





பிற்பகல் 5-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போல் எனது தொகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள், எனது தொகுதியிலுள்ள சாலைகள் அனைத்தும் போக்குவரத்திற்குத் தகுதியற்றதாக உள்ளன. குறிப்பாக M.D.R., O.D.R. சாலைகள் செப்பனிடப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதேபோல சென்னையிலிருந்து குடந்தை செல்லும் சாலையை— கடந்த ஆட்சியினர், குறிப்பாக இரண்டு முன்னாள் அமைச்சர்கள் மட்டும் தமது மாவட்டங்களுக்கு மட்டும் சாலையைச் செப்பனிட்டுக்கொண்டு, எனது தொகுதியிலுள்ள சாலைகள் மட்டும் செப்பனிடப்படாமல் இதுவரையில் இருக்கின்றன. எனவே, குடந்தையிலிருந்து சென்னை செல்லும் சாலையை—எனது தொகுதியிலுள்ள சாலையைச் செப்பனிட்டுத் தரவேண்டுமாய் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதியில் குறைந்த மின்னழுத்தம் காரணமாக வானம் பார்த்த பூமியாக உள்ள விவசாயிகளின் பம்பு செட்டுகள் ஓடாமல் விவசாயிகள் பாதிப்பு அடைகிறார்கள். இந்த நிலையைப் போக்க, கோட்டியால், பாப்பாக்குடி, மீன்சுருட்டி ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்களை அமைத்து, விவசாயிகளின் வாட்டத்தைப் போக்க அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் மதனத்தூர்-நிலத்தநல்லூர் இடையே உள்ள கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டுவதன்மூலம் எனது தொகுதி மட்டுமல்ல, எனது மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏழைகளின் வாழ்வில் ஒளி பிறக்கின்ற வகையிலே வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். கல்வி கற்க வாய்ப்பு இல்லாமல் இருக்கும் பல ஏழை எளிய மாணவர்களின் வாழ்வில் வளம் பெருகும்வகையில் இப்பாலம் அமையும். மேலும், விவசாயத் துறையில் வளம் பல காண, பலதரப்பட்ட மக்களின் வாழ்வில் வளம் பெறும்வகையில் இப்பாலம் அமையும் என்பதனால் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதனத்தூர்-நிலத்தநல்லூர் இடையே பாலம் அமைத்திட ஆவன செய்ய இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனது தொகுதி வளம் நிறைந்த தொகுதியாக இருப்பதனால் யூகலிப்டஸ்—தைல மரம்—அதிகம் உள்ளது. இவற்றை முறைப்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தந்தால் அப்பகுதியில் வேலைவாய்ப்பற்ற ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகையால், தொழிற்புரட்சி ஏற்படுத்தி, இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் பள்ளிக் கல்வி முடித்ததும் மாணவர்கள் தொலைதூரம் சென்று கல்லூரிக் கல்வியைத் தொடர வேண்டியுள்ளதால் வசதியுள்ளவர்கள் மட்டும் தொலைதூரம் சென்று கல்வி கற்க முடிகிறது. ஏழை எளிய, குறிப்பாக ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் வசதியில்லாத காரணத்தினால், பள்ளிக் கல்வியோடு படிப்பை முடித்து விடுகிறார்கள். ஏழை எளியோர்களின் ஏந்தலாக இருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் பகுதியில் கலை—அறிவியல் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டுமாய் உங்கள் பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள எல்லாத் தொகுதிகளையும் தம்முடைய தொகுதியாகப் பாவித்து தமிழகத்தையே வளர்ச்சிமிகு முன்னோடி மாநிலமாக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னுடைய தொகுதியில் முந்திரித் தொழிற்சாலையையும், கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததுபோல் மகளிர் காவல் நிலையம் ஒன்றையும் அமைத்தமைக்கும், அதேபோல் கங்கைகொண்ட சோழபுரத்தை ஒரு சுற்றுலா மையமாக அறிவித்தமைக்கும், தற்போது அந்தச் சுற்றுலா மையத்திற்கு அடிப்படை வசதிகளுக்காக 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதியைச் சார்ந்த பொதுமக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைப் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்.

எளியவனான என்னை இந்நிலைக்கு உயர்த்திய நான் வணங்கும் தெய்வமே, அன்னை தெரசாவின் மறு உருவமே, ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற வந்த தாயே, தமிழே, எதிரிகளின் சதிகளைச் சுட்டெரிக்கும் சுடரே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் சீரிய தலைமையில் என் தொகுதி மட்டுமல்ல, தமிழகமே தரணிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கப்போகிறது என்பதில் ஐயமில்லை என்று கூறி, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இந்தப் பேரவையிலே எனக்கு இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது உரையை முடிக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அண்ணாதுரை என்றால், அண்ணாதுரைதான். மாண்புமிகு உறுப்பினர் கே. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு....

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இருக்கட்டும், பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு மாலை நேரச் சிற்றுண்டி இங்கே பிளாசாவிலே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோடையாக இருந்தால் போய் சாப்பிட்டுவிட்டு, அப்புறம் உட்கார்ந்து கொள்ளலாம். (சிரிப்பு)

பிற்பகல் 5-10

***திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது அனைவரையும் சிற்றுண்டிக்கு அனுப்புகிறீர்களே, நான் பேசுவதை எல்லோரும் கேட்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்பவர்கள் கேட்பார்கள். கொஞ்சம் தூக்கமாக இருந்தால் சாப்பிட்டுவிட்டு வந்துவிடுவார்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சிறைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆறுமுகம்] [2002 ஏப்ரல் 29

நீரின்றி அமையாது உலகு என்பது பொது மொழி. எனவே நீரின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு வட இந்திய நதிகளையும், தென்னிந்திய நதிகளையும் இணைக்கும் திட்டத்திற்கு, குறிப்பாக கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசை மீண்டும் நமது தமிழக அரசு வலியுறுத்திச் செயல்பட வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

"காவிரி தென்பெண்ணை, பாலாறு-தமிழ்
கண்டதோர் வையை பொருணைநதி-யென
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என பாரதியார் தமிழ்நாட்டின் ஆறுகளைப் பற்றியும் விவசாயச் செழிப்பு பற்றியும் பாடியுள்ளார்.

தற்பொழுது பாசனத் திட்டத்திற்கு முக்கியத்துவம் குறைவாகவே உள்ளது என அரசின் கொள்கை விளக்கக் குறிப்பின் மூலமாகத் தெரியவருகிறது. 2002-2003 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் பாசனம் பெறுகிற திட்டத்திலே கால்வாய் மூலம் 8.67 இலட்சம் எக்டேர்களும், ஏரிகள் மூலம் 6.33 இலட்சம் எக்டேர்களும் பாசன வசதி பெறும் என்றும், 1999-2000 ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் கால்வாய் மூலம் 9 இலட்சம் எக்டேர் பாசனமும், ஏரிகள் மூலம் 9 இலட்சம் எக்டேர் பாசனமும் பெறும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு குறைந்திருப்பதற்குண்டான காரணத்தை நம்முடைய தமிழக அரசு கண்டறிய வேண்டும். அப்படிக் குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குறைந்தது தென்னிந்திய நதிகளையாவது இணைக்கும் முயற்சியில் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை நதிகளை இணைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்திட வேண்டும் எனவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நமக்கு வரவேண்டிய பங்கினைப் பெறுவதற்கு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளையும், அனைத்து அமைப்புகளையும் ஒருமுகமாக எடுத்துச் செல்ல வேண்டியது நம்முடைய முதலமைச்சரையே சாரும்.



2002 ஏப்ரல் 29] [திரு. கே. ஆறுமுகம்]

மேட்டூர் அணையில் நீர் மிகவும் குறைந்துவிட்டது. வருகின்ற ஜூன் 12 ஆம் தேதி வாய்க்காலைத் திறந்துவிடுவது வழக்கம். எனவே கர்நாடகத்திடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய வீராணம் திட்டம், இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கும் திட்டம், செயல்பட ரூபாய் 464 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் உலக வங்கியாலே ஏற்கெனவே கைவிடப்பட்ட திட்டம். இத்திட்டத்தினால் வீராணம் ஏரிப் பாசன விவசாயிகள் மிகவும் அதிருப்தி அடைந்து விவசாயம் அந்தப் பகுதியில் பாதிக்கும் என அஞ்சுகிறார்கள். அதைக் கைவிட்டுவிட்டு கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை முறைப்படுத்தினாலே போதுமான தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீராதார தொகுப்புத் திட்டம் 2-ல் ரூபாய் 2,900 கோடி உலக நிதி உதவி கோரப்பட்டு நீராதாரத்தைப் பெருக்க உத்தேசித்திருப்பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் எப்போது செயலாக்கத்திற்கு வரும் என அறிய விரும்புகிறேன்.

அதேபோல வரும் நிதியாண்டில் ரூபாய் 250 கோடி செலவில் நபார்டு மூலம் சிறு மற்றும் நடுத்தர ஏரிகள் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தியதை வரவேற்கிறோம். ஏற்கெனவே ஏரிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சரியாக பணிகள் செய்யவில்லை என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நிலவுகின்றன. இதை நம்முடைய அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, மறு ஆய்வு செய்து, அதைச் சீர் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள நீஞ்சல்மடுவு அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் களத்தூரான் கால்வாய் செப்பனிடும் பணிகளுக்கு ரூ. 90 இலட்சம் என மதிப்பிடப்பட்டும் கிடப்பில் உள்ளது. உடனடியாகப் பணி தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது மதுராந்தகம் ஏரியிலிருந்து வெளிவரும் உபரி நீர் 30

ஏரிகளுக்குச் செல்லும் வண்ணம் மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அந்தக் கால்வாய்கள் இப்போது தூர் வாரப்படாமலும், ஆழப்படுத்தப்படாமலும் இருப்பதால் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வது மிகவும் சங்கடமாக இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாலாறு பாழாய்ப்போன ஆறாக தோல் கழிவுகள், சாயப்பட்டறைக் கழிவுகளால் மாசுபடுவதும், மணல் அள்ளுவதால் காஞ்சிபுரம், செங்கற்பட்டு, வாயலூர் பகுதிகளில் நீராதாரம் குறைந்து கொண்டு வருகிறது. இதனால் பயிரிடும் விவசாய நிலங்கள் குறைந்து கொண்டு வருகின்றன. எனவே பாலாற்றின் மீது அரசு போதிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்காதது ஏன் எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல செங்கற்பட்டு தொகுதியில் உள்ள மேலப்பட்டு, சதுரங்கப்பட்டினம் ஏரி, பெரிய பொத்தேரி, பட்ரவாக்கம் ஏரி, அமனம்பாக்கம் ஏரி, வசவசமுத்திரம் ஏரி, பெரும்பேடு ஏரி, கோரப்பட்டு ஏரி, ஆனூர் ஏரி, பொன்பதிக் கூடம், சோகண்டி, ஒத்திவாக்கம், நெம்மேலி, எச்சூர், சாலூர் ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. செங்கற்பட்டு அருகிலே இருக்கிற கழிவுகள் ஒட்டுமொத்தமாக செங்கற்பட்டு கொளவாய் ஏரியிலே சென்றுவிடுவதால் அந்த ஏரி மாசுபட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஏரிக்குள்ளே இவை செல்லாமல் அந்தக் கழிவுகளை வேறு மாற்று வழியிலே அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

அதேபோன்று வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் ஆண்டியப்பனூர் ஓடை அணைத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே தீட்டப்பட்ட திட்டமாகும். தற்போது 24 கோடி ரூபாய்க்கு டெண்டர்கள் விடப்பட்டு அதிலே 3 ஆண்டுகாலமாக அரைகுறையான வேலைகள் மட்டுமே நடத்தப்பட்டு இப்போது





நிலுவையில் உள்ளது. ஊழியர்களுக்கு, சம்பளம் மட்டுமே 1½ கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இதனை விரைந்து முடித்தால்தான் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பலன் பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், கபிலர் மலைத் தொகுதியிலுள்ள இராஜ வாய்க்கால், காவிரி இடது கரையிலுள்ள மிகப் பெரிய வாய்க்கால். இந்தத் திட்டத்தை உலக வங்கி நிதியுதவி பெற்று வாய்க்காலைச் சீரமைத்தால் கடைமடைப் பகுதி விவசாயிகளுக்குப் பேராதரவாக இருக்கும். இந்தப் பிரச்சினையை நீண்ட நாள் பிரச்சினையாகப் பொதுமக்கள் கருதுகிறார்கள். அதை உடனடியாகச் செய்து கொடுக்க இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியை அடுத்துள்ள ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்கால் இணைப்புத் திட்டம் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இதனை நிறைவேற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசுக் கல்லூரிக்குக் கூடுதலாக வகுப்பறைகள் கட்டித்தர வேண்டும்.

திருக்கழுக்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டட வசதி இல்லை. எனவே, கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென அந்தப் பகுதியினுடைய மாணவிகளும், பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினரும், ஆசிரியர்களும் நீண்ட நாட்களாக கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். அதனையும் கட்டித்தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலேயுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாழடைந்துள்ள கட்டடங்களைச் சரி செய்ய வேண்டுமெனவும், சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்கள், குறிப்பாக எனது செங்கற்பட்டு தொகுதியிலே இருக்கிற அலுவலகம், மதுராந்தகம், அச்சரப்பாக்கம், திருப்போரூர், வேலூர் மாவட்டத்திலே இருக்கிற திருப்பத்தூர் மற்றும் வேலூர் சட்டமன்ற உறுப்பினர்களின்

ஒவ்வொரு தடவை வசூலிக்கக்கூடிய கட்டணத்திலே பாதிக் கட்டணததை வசூலித்துக்கொண்டு ஆண்டுகளை வேண்டுமானால் அதிகரித்துக்கொண்டு அந்தக் கட்டணத்தை வசூலிக்கலாம் என்ற ஒரு கோரிக்கையையும் இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-20

அதுமட்டுமல்லாமல் மாமல்லபுரம், திருக்குழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி, திருப்பதி சாலை இப்போது மாநிலச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சாலை- (மணியடிக்கப்பெற்றது) தலைவரே, இன்னும் நிறைய இருக்கிறது. உடனே பெல் அடித்துவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய இருக்கும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** இந்தச் சாலை மாநிலச் சாலையாக இருக்கிறது. அதை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும். ஏனென்று சொன்னால், திருப்பதியிலேயிருந்து வருகிறவர்கள் திருத்தணி தேவஸ்தானத்திற்கு வந்து பார்க்கிறார்கள். அங்கிருந்து காஞ்சிபுரம், அங்கிருந்து திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் போன்ற பகுதிகளுக்கு அதிகமான பயணிகள் வருகிறார்கள். ஆனால் அந்தச் சாலை மிக மோசமாக இருக்கிறது. அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் இந்த மன்றத்திலே தொடர்ந்து பலமுறை சொல்லிக்கொண்டிருப்பது, திருக்கழுக்குன்றம்-நெடும்பூர் - வாயலூர் - விட்டலாபும்-புதுப்பட்டினம் சாலை. அந்தச் சாலைப் பணிகள் கிடபபிலே கிடக்கின்றன. அங்கே 100 கிராம மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை இந்த மன்றத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு பிரச்சினை. நெடுஞ்சாலை துறையின் மூலமாக தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு சாலைகளை ஆய்வு செய்யத் தனியாக ஒரு தனிப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். அதிலே மணல் குவாரிகள், செங்கற் சூளைகள், கருங்கல் குவாரிகள் மற்றும் இதர கனிம குவாரிகள் உள்ள பகுதியிலுள்ள சாலைகள் முழுமையாக போக்குவரத்திற்கு லாயக்கற்ற சாலைகளாக இருப்பதால், இந்தச் சாலைகளை வருடா வருடம் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும்,



சாலைகளின் தரத்தை உயர்த்தித் தரவும், நெடுஞ்சாலைத் துறையில் தனிப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பழைய மகாபலிபுரம் சாலையிலிருந்து பல்லாவரம் ஜி.எஸ்.டி. சாலை, தாம்பரம்-கோயம்பேடு சாலையை இணைக்கும் பணி கிடப்பில் கிடக்கின்றது. பல்லாவரத்தில் இன்னும் மேம்பாலம் அமைக்கப்படுவதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. அதை உடனடியாகத் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு இரயில்வே கேட்டிற்கு மாமல்லபுரம் சாலையிலே ஒரு மேம்பாலமும், அதேபோன்று சிங்கப்பெருமாள்கோயிலிலே என்.எச். 4-ஐயும், என்.எச் 45-ஐயும் இணைக்கிற சிங்கப்பெருமாள் கோயில்-ஸ்ரீபெரும்புதூர் சாலையிலே ஒரு இரயில்வே மேம்பாலமும் அமைக்கவேண்டுமெனவும் கோரிக்கையாக வைக்கக கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் அதிகமான போக்குவரத்து நெரிசல் உள்ளதால், இந்த நெரிசலைப் போக்கத் தொலைநோக்குப் பார்வையில் புதிய ஆரச் சாலைகள், வட்டச் சாலைகள் அமைக்க வேண்டும். தினம் தினம் நூற்றுக்கணக்கான புதிய வாகனங்கள் சாலைகளில் இயங்குவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதற்கேற்ப சாலையின் பல்வேறு நிலைகளை உயர்த்த வே்ண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன்.

இன்னும் ஒன்று. குளச்சல் பகுதிக்கு நாங்கள் எல்லாம் செல்கின்றபோது, நம்முடைய அண்ணன் ஞானசேகரன் அவர்களும் வந்தார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், மீனவ நண்பர்கள் சொல்கின்றார்கள், எங்களுக்கு மீன் பிடிக்க வேண்டும், அந்தப் பகுதியிலே மலேசிய நாட்டு உதவியுடன் கட்டப்பட இருக்கின்ற துறைமுகம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது, உடனடியாக அதைக் கட்ட வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எங்களுக்கு தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க வேண்டும், அரபிக் கடலிலே அதிகமாக இப்பொழுது அலைகள் அடிப்பதாலே நாங்கள் எங்களுடைய படகுகளை இழுத்துச் செல்ல முடியவில்லை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேசி முடித்துவிடுகிறேன். அதேபோன்று சாலை விபத்துக்கள் தினந்தோறும் அதிகமாகி உள்ள செங்கற்பட்டு-உளுந்தூர்பேட்டை வரையிலான தேசிய நெடுஞ்சாலையை இரண்டாகப் பிரிக்கும் பணி நீண்ட காலமாக தொடங்கப்படாமல் உள்ளது என்பதையும் அதை உடனடியாகத் தொடங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலையைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு சிறைவாசிகள் 18,292 பேர் இருக்கிறார்கள் என்றும் அதிலே அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மட்டும் 4,808 பேர் இருக்கிறார்கள் என்றும் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகிற பருத்தித் துணிகளுக்குப் பதிலாக இப்பொழுது டெரிக்காட்டன் வழங்கப்படுவதாக அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே இலவச வேட்டி-சேலை வழங்கப்படாத காரணத்தினாலே நெசவுத் தொழில் நசுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இந்தக் கதர்த் துணி வழங்காததனாலே கதர்த் துறையும் நசுங்குகிற ஒரு நிலைமை இருக்கிறது. ஏனென்று சொன்னால், 1/2 கோடி ரூபாய்க்கு வருடத்திலே அந்தச் சிறைக் கைதிகளுக்கு கதர்த் துணி வழங்கப்படும். அது நிறுத்தப்பட்டால் அந்தக் கதர்த் துறையும், கதர் வாரியமும் இன்று நசுக்கப்படும் நிலைமை வரும். எனவே மீண்டும் அவர்களுக்கு கதர்த் துணியை வழங்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

அதேபோன்று சிறைக் கைதிகள் மனந்திருந்தி வாழ மன வளப் பயிற்சிகளும், யோகாசனப் பயிற்சிகளும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சிறைத் துறையில் கூடுதலாக ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும். மனித உரிமை, கைதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளதாகப் பல்வேறு புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளை அளித்து கைதிகளுக்கு உணவு மற்றும் காற்றோட்டமான அறைகள் மற்றும் மனித உரிமை அடிப்படையில் அவர்களைப் பராமரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் உள்ளதாலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு நீதிமன்றங்கள் இருப்பதாலும், அந்தப் பகுதியிலே ஒரு மத்திய சிறைச்சாலை அமைக்க வேண்டும்



2002 ஏப்ரல் 29] [திரு. கே. ஆறுமுகம்]

எனவும் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் செங்கற்பட்டு கிளைச் சிறைச்சாலையிலே கடந்த 10 ஆண்டு காலமாக இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனாலே நீதிமன்றங்களில் தண்டனை வழங்கப்படுகின்ற குற்றவாளிகளை உடனடியாகச் சிறையிலே அடைக்க முடியவில்லை. அவர்களை வேலூர், சென்னை, கடலூர் போன்ற பல்வேறு மத்திய சிறைச்சாலைகளுக்குச் செல்வதனாலே மிக பாதிப்பு இருக்கிறது. அந்தச் சிறையிலே இருக்கிற அகதிகளை உடனடியாக வெளியேற்றி அந்தப் பகுதியிலே இருக்கிற கைதிகளை அங்கே அடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு நல்ல கருத்தையும் நம்முடைய அரசாங்கம் வலியுறுத்தியிருக்கிறது. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். சிறைவாசிகளின் குறைகளை அறிய மூடி முத்திரையிட்ட புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட உள்ளதாக அரசு கூறியுள்ளது. அதன்மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கை குறித்துப் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமெனவும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-25

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை சிறப்பாகவே செயலாற்றி வருவதாக அரசு கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக 1988இலே—59,481 வழக்குகள் நிலுவையில் உள்ளன எனத் தெரிய வருகிறது. இதனை உடனடியாக முடித்திட இந்த அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் பதவி உயர்வுத் தேர்வில் S.C., S.T., M.B.C., B.C. ஊழியர்கள் நலன் காத்திட வேண்டுமெனவும், ஆட்குறைப்பையும் தவிர்த்து, அரசுப் பணிகளுக்கு ஆட்கள் நியமனம் தேவை எனவும் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள். (குறுக்கீடு) நிறைய பேர் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பேச வேண்டுமென்று இருக்கிறார்கள். முக்கியமான மானியக் கோரிக்கை. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று நினைக்கிறார்கள். (குறுக்கீடு) பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உள்ளவர்கள் 49 இலட்சம் பேர். இதில் பெண்கள் மட்டும் 17 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் வேலை எப்போது கிடைக்கும் என்று வயது வரம்பைக் கடந்த நிலையில் உள்ளனர். அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க அரசு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே T.N.P.S.C. மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் ஓராண்டு பணி முடித்தும்கூட இன்றைக்கு அவர்கள் எல்லாம் பணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும். இன்னும் சில பேர் பயந்துகொண்டிருக்கிறார்கள். தங்களை எப்போது வேலையிலிருந்து எடுத்துவிடுவார்களோ என்று பயந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** அவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜெயக்குமார் அவர்கள். (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும், நேரம் 5-30 ஆகி விட்டது.

**திரு. கே. ஆறுமுகம்:** டாக்டர் ஐயா அவர்கள் இந்த மலிவு விலை மதுவைக் கொண்டுவர வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்கள். இப்போது நம்முடைய அரசாங்கம் அதிலே இருக்கின்ற சிக்கலைப் புரிந்து, மலிவு விலை மதுவை ஒழித்துவிட்டோம் என்று சொல்லி இருக்கின்றார்கள்.

இப்போது நம்முடைய தமிழகத்திலே வணிக வரித் துறைக்குப் பிறகு அதிகமாக வரியை வசூலிக்கிற துறையாக ஆயத்தீர்வைத் துறை இருக்கிறது. அதில் இன்னும் அதிகமாக வரியை வசூலிக்கிற நிலைமை இருக்கிறது. குறிப்பாக போலி மதுபான பாட்டில்களை முழுமையாக முடக்க வேண்டும். அப்போதுதான் இன்னும் 1,000, 1,500 கோடி ரூபாய் தமிழக அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, நல்ல திறமையான, நம்பிக்கையான, இலஞ்சம் வாங்காத காவல் துறை அதிகாரிகளை அந்தத் துறைக்கு, நியமித்து அந்தத் துறையை மேலும் வலுப்பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்போது அரசு அறிவித்திருக்கிற அந்த Bar-களை நிறுத்திவிட வேண்டும். அதனால் சட்டம்-ஒழுங்கு கெடக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் கொடுக்கப்படுகிற கடைகள் இன்றைக்கு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** 5 இலட்ச ரூபாய்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடியுங்கள். பேசி முடிக்கிறாற்போல் தெரியவில்லை. (குறுக்கீடு) பேசி முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** 5 இலட்ச ரூபாய் மட்டுமே வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பல்வேறு கிராமக் கடைகளில் பெரிய பேரூராட்சிகள், நகரங்களில் நடைபெறுகிற அளவுக்கு கிராமங்களில் வியாபாரம் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கடைகளில் வசூல் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் கிராமக் கடைகள் என்ற பெயரிலே குறைந்த அளவுக்கே, 5 இலட்ச ரூபாய் கட்டி எடுத்திருக்கிறார்கள். ஆனால் நகரக் கடைகளைவிட கிராமக் கடைகளில், பல்வேறு இடங்களில் நகரப் பகுதிகளை ஒட்டியிருக்கிற கிராமக் கடைகளிலே, இன்றைக்கு அதிக அளவு வியாபாரம் நடக்கிறது. அதையும் கண்டறிந்து, கூடுதல் கடைகளை அரசே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மைக் கொடுங்க.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொடுப்பார்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** இந்த நல்ல வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவருக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார், பெல் அடிக்காமல் பேசி முடித்துக்கொள்ளுங்கள். நன்றாக, அருமையாகப் பேசி, குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** நிச்சயமாக அப்படிச் செய்வேன் என்று மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை, மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சிறைச்சாலைகள் ஆகிய அத்தனை மானியக் கோரிக்கைகள் மீதும் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்தமைக்காக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையானது மக்களை இணைக்கின்ற ஒரு பாலமாகவும், பொருளாதாரத்தை இணைக்கின்ற ஒரு பாலமாகவும், நாட்டு மக்கள் மத்தியிலே நட்புறவை இணைக்கின்ற பாலமாகவும், மனித நேயத்தை இணைக்கின்ற பாலமாகவும் அமைந்திருக்கின்றது. அத்தகையதோர் துறையின்மீது பேசுகின்றபோது இந்த அரசு செய்ய இருக்கின்ற நல்ல பல திட்டங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டுமென்றால் நீங்கள் சொன்னதுபோல் மணியடிப்பதற்கு முன்பாக நான் அமர முடியாது என்ற ஒரு கருத்தினால், எவற்றையெல்லாம் சொன்னால் இந்த அரசுக்கு, அது ஒரு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும், இன்னும் தன்னுடைய செயல்பாட்டினை மேம்படுத்திக் கொள்வதற்கு துணையாக இருக்கும் என்ற கருத்தினை மனதிலே கொண்டு, ஒருசில கருத்துகளை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு, உங்களுடைய மானியக் கோரிக்கையாக 1,147 கோடி ரூபாயைக் கேட்டிருக்கிறீர்கள். இதில் வருவாய்ச் செலவானது 719 கோடி ரூபாய். மூலதனச் செலவானது 428 கோடி ரூபாயாக இருக்கின்றது. நீங்கள் சற்று சதவிகிதத்தைப் பார்த்தீர்கள் என்றால், உங்களுடைய வருவாய்ச் செலவு 62 சதவிகிதமாகவும், மூலதனச் செலவு 38 சதவிகிதமாகவும் இருக்கின்றது. ஆக, 38 சதவிகிதத்திற்கான சொத்துக்களைச் செய்வதற்காக, சாலைகளைப் போடுவதற்காக, மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக நீங்கள் வருவாய்ச் செலவிலே 62 சதவிகிதத்தைச் செலவு செய்ய இருக்கின்றீர்கள். உங்களுடைய வருவாய்ச் செலவு அதிகமாகவும், மூலதனச் செலவு குறைவாகவும் இருக்கின்றது. இது ஏன் என்பதை தாங்கள் விளக்கினால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். பொதுப் பணித் துறையிலும் இதே நிலைமைதான் இருக்கிறது.



பிற்பகல் 5-30

மற்றொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் நான். 2001-2002 ஆம் ஆண்டிலே, மாநில நெடுஞ்சாலை தலைப்பின்கீழே ரூ.442 இலட்சங்கள் செலவு செய்யப்படும் என்று கூறி, 230 இலட்சம்தான் செலவு செய்யப்பட்டு, 48 விழுக்காடு குறைவாக செயல்பட்டிருக்கின்றீர்கள். மாவட்டச் சாலைகளிலே 43 விழுக்காடு குறைவாகச் செயல்பட்டிருக்கின்றீர்கள். மாவட்ட இதரச் சாலைகளில் 25 சதவிகிதம் குறைவாகச் செயல்பட்டிருக்கின்றீர்கள். 'நபார்டு' சாலைகளில் 41 சதவிகிதம் குறைவாகச் செயல்பட்டிருக்கின்றீர்கள், இருப்புப் பாதைகளின்மீது, பாலங்கள் கட்டுவதிலே 24 சதவிகிதமும், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திலே 58 சதவிகிதமும் குறைவாகச் செயல்பட்டிருக்கின்றீர்கள் என்பது உங்களுடைய சாதனைப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது உண்மையாகக் கூடாது என்றும், அது தவறாக இருந்தால் நலமாக இருக்கும் என்றும் நான் கருதுகின்றேன். இந்தக் குறைபாடு ஏன்? ஏன் இந்த அளவிற்குக் குறைவாக (சிரிப்பு). ஆக திட்டங்கள் ஒன்றும்...(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன், தனியாகச் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒன்றும் புரியவில்லை.

**திரு. கு. ஜெயக்குமார்:** It is called the body language between the Finance Minister and the Speaker here. ஆக இன்றைய நிலையில், கிராமப் பகுதிகளிலே கிராமச் சாலைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. எந்த அடிப்படையின்கீழ் மாவட்டங்களுக்கு அல்லது தொகுதிகளுக்கு நீங்கள் பணத்தைப் பிரித்துக் கொடுக்கீறீர்கள் என்று உங்கள் கொள்கை ஏடுகளிலே பார்த்தேன். எந்த இடத்திலும் அத்தகைய ஒரு கொள்கை முடிவை நீங்கள் கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் என்னுடைய தொகுதிக்கு எந்த அடிப்படையில் நீங்கள் கொடுக்கப்போகின்றீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே அதைத் துருவித் துருவி படித்துப் பார்த்தேன். அது கிடைக்காத காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை விளக்கினால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். மற்றும் பொதுவாக இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையில் சாலையை எடுத்துக்கொண்டாலேயே, 2 ஆண்டுகளுக்குள்ளாக போட்ட சாலைகள் காணாமல் போய்விடுகின்றன. எங்களுடைய கட்சியின் தலைவர் திருமதி யசோதா அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். அவர்கள் பகுதியில் இருக்கின்ற சாலை எத்தகையதாக இருக்கின்றது என்றும், அது ஏன்

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 ஏப்ரல் 29

அந்த நிலையிலே இருக்கின்றது என்றும் ஒரு புலனாய்வு நடத்தவேண்டும் என்றுகூடச் சொன்னார்கள். அவர்களுடைய தொகுதியில் மட்டும் அந்த நிலை இருக்கின்றது என்று நான் எடுத்துக்கொள்ள மாட்டேன்:

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்கள் தலைமை)**

என்னுடைய தொகுதியிலேகூட அந்த நிலைதான். எந்தவொரு தொகுதியை எடுத்துக்கொண்டாலும், சாலைகள் எல்லாம் விரைவிலே பழுதடைந்துவிடுகின்றன. நானும் இந்த நெடுஞ்சாலைத் துறையிலே 2, 3 ஆண்டுகள் ஆரம்ப காலத்திலே வேலை செய்திருக்கின்றவன் என்ற காரணத்தினால் எதனால் இது ஏற்படுகின்றது என்று எனக்குத் தெரியும். சட்ட திட்டங்கள் சரியாக இருக்க, ஒப்பந்தக்காரர்களிடம் வேலையைக் கொடுத்துச் செய்கின்றபொழுது அளவுகளைச் சரிபார்க்க முடியாமல் போகின்ற காரணத்தினால்தான் இது நடக்கின்றது என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நல்லவர், வல்லவர், அன்பானவர், மன்ற உறுப்பினர்களிடையேயும், மக்களிடையேயும் மிகவும் அன்போடு பழகக்கூடியவர். இதில் அன்பிற்கு இடம் அளிக்காமல் சற்று கடினமாகவே நீங்கள் செயல்பட்டு, நல்ல தரம் வாய்ந்த சாலைகளை இந்த அரசு செயல்படுத்துகின்ற காலத்திலே கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒருகாலத்திலே இங்கே நாம் சிமெண்ட்டைப் பற்றி அதிகமாக பேசினோம். சிமெண்ட் பயன்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்று கூடச் சொன்னோம். பம்பாயிலே இருக்கின்றபோது அங்கே எனக்கு ஓர் அனுபவம். அங்கே கண்ட அனுபவம். மிக நீண்ட ஒரு சாலை, சுவாமி விவேகானந்தா சாலை என்று சொல்லுவார்கள். அது நரிமண் பாயின்டிலேயிருந்து ஆரம்பித்து 100 கிலோமீட்டர் தூரம் செல்கின்றது. உலக வங்கியின் நிதி ஒப்பந்தத்தின்கீழ் அந்தச் சாலையை நல்ல கான்கிரீட் சாலையாக போட்டிருக்கின்றார்கள். இன்னும் 30, 40 ஆண்டுகள் வரை அந்தச் சாலையைத் தொட்டுப்பார்க்க வேண்டியதில்லை. நம்முடைய நகரிலேயும், நம்முடைய தமிழகத்திலேயும் இருக்கின்ற முக்கியமான சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்றினால் நீங்கள் பிற்பாடு அதைச் செப்பனிடவேண்டிய அந்தப் பணம் மிச்சமாகும் என்ற கருத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். டெல்லியிலேகூட செய்கிறார்கள். இரப்பர் சாலை போடுகின்றார்கள். இவை நீண்டகாலத்திற்கு உழைக்கும். எனவே இரப்பர் சாலைகளைப் போடுவதுகூட நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 29] [திரு. கு. ஜெயக்குமார்]

எங்களுடைய நாமக்கல் தொகுதியிலே எந்தவொரு அலுவலகமும் இல்லாமல் இருக்கிறது. மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அங்கே கிடையாது. அது மாவட்டமாகி 5 வருடங்கள் ஆன பிறகும், அந்த மாவட்டத்திலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரும், மாண்புமிகு நிதியமைச்சரும் என இதற்கு முன்னால்கூட மாண்புமிகு பெண் அமைச்சர் ஒருவர் அங்கு இருந்தார்கள். ஆக— இத்தனை அமைச்சர்கள் இருக்கின்ற அந்த மாவட்டம் பெருவாரியாக அலுவலகங்கள் இல்லாத மாவட்டமாக உள்ளது. பெருவாரியான அலுவலகங்கள் அங்கே கிடையாது. எஸ்.பி. ஆபீஸ் கிடையாது; எஸ்.பி.-க்கு வீடு கிடையாது. ஆர்.டி.ஓ. அலுவலகம் கிடையாது. ஆக, எது ஒன்றை எடுத்துக்கொண்டாலும் எல்லாம் வாடகையிலே இயங்கிக் கொண்டிருக்கிற நிலை அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-35

நாமக்கல் நகரத்தைப் பொறுத்தமட்டில் அது மிகவும் நெரிசல் மிகுந்த நகரமாக இருந்து கொண்டிருக்கிறது. 7 திசைகளிலேயிருந்து வாகனங்கள் வந்து செல்கின்றன. வாகனத் தொழில் மிகவும் சிறந்து நடக்கின்ற நகரம் நாமக்கல். ஆக, அந்த நாமக்கல் நகரத்தைச் சுற்றி ரிங்-ரோடு ஒன்றை நீங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இது என்னுடைய மிகத் தாழ்மையான வேண்டுகோள். என்னுடைய காலத்திலே இந்த ரிங்-ரோடு கொண்டு வரப்பட்டது என்ற பெருமை என்னைச் சாரும். அந்தப் பெருமையை நீங்கள் எனக்கு ஈட்டித் தரவேண்டுமென உங்களை நான் மிகவும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக பொதுப் பணித் துறையை எடுத்தாலும், the difference between the capital expenditure and the revenue expenditure remains the same. I am sure that the Hon. Finance Minister during his reply will explain why this kind of a difference exists. The capital expenses is far less when compared to your revenue expenses. அதுவும் இந்தத் துறையில், பொதுப் பணித் துறையில், கட்டடங்கள் கட்டுகின்ற துறையில்— நீங்கள் கட்டடத்தைவிட, கூலி கொடுப்பது அதிகமாக எனக்குத் தெரிகின்றது. இதை ஆராய்ந்து பார்த்தால், முடிவில் அப்படித்தான் சென்று முடியும். ஆக— ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை தயவுசெய்து நீங்கள் விளக்க வேண்டும். பொதுப் பணித் துறையை எடுத்துக்கொண்டால், 57 சதவிகிதம் வருவாய்ச் செலவாகவும்,

43 சதவிகிதம் மூலதனச் செலவாகவும் நீங்கள் செய்கின்றீர்கள். வருவாய்ச் செலவைக் குறைத்து, மூலதனம் பெருகினால் நாட்டில் வளர்ச்சியும் பெருகும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்கு 2.75 கோடி ரூபாய்தான் நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். இந்தச் சபையிலே கடந்த தொடரிலேகூட கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப் பற்றி விவாதிக்கின்றபோது, 32 கிலோமீட்டர் தூரம் இன்னும் கால்வாய் வெட்டப்படாமலே இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) 13 கி.மீ. என்றால்கூட 2.75 கோடி ரூபாயை இங்கே கொடுத்திருக்கின்றீர்கள். இந்த 2.75 கோடி ரூபாயிலே, இந்த வருடத்திலே இந்தத் திட்டத்தை உங்களால் முடிக்க முடியுமா என்பதை தங்கள் வாயிலாக நீங்கள் பதில் சொல்லும்போது நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

53 பாசனத் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று இங்கே கொடுத்திருக்கிறீர்கள். இந்த 53-ல் ஒன்றுகூட நாமக்கல் வழியாகச் செல்லவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து நீங்கள் இதில் சற்று அக்கறை காட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயம்புத்தூர் காரமடையிலிருந்து மேட்டுப்பாளையம், கள்ளர் பழப் பண்ணை வழியாக ஒரு புறவழிச்சாலை தேவைப்படுகிறது. கோயம்புத்தூர், காரமடை, மேட்டுப்பாளையம் பகுதியிலே நெரிசல் அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தினால், அங்கே சில மணிநேரம் வாகனங்கள் நிற்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அங்கே ஒரு புறவழிச்சாலையை தாங்கள் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எச்.எம். ராஜு அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து பொதுப் பணிக் கட்டடங்கள் பாசனத்திற்கு சுமார் 646 கோடி ரூபாய். அதில் 350 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கு; 295 கோடி ரூபாய் மூலதனக் கணக்கு. நிலத்தடி நீருக்கு 20.00 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றீர்கள். 17.00 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் இருக்கின்றது. 2.39 கோடி ரூபாய்தான் மூலதனத்திலே



இருக்கிறது. ஆக, இந்தத் திட்டங்களையெல்லாம் தயவுசெய்து நீங்கள் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

இன்னொன்று. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்று ஒரு மின் திட்டத்தைக் குறித்து காமராஜர், பக்தவச்சலம் அய்யா இருந்த காலத்திலேயே கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தத் திட்டம் இன்னும் செயல்படாமல் இருக்கிறது. இதை நீங்கள் செயல்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் அண்மையிலே ஒரு செய்தித்தாளிலே ஒரு நல்ல செய்தி வந்திருக்கிறது. U.S. agency is to fund Noyyal wet land Project என்று. மத்திய அரசு 50.00 கோடி ரூபாய்ச் செலவிலே நொய்யல் நீர்ப்பாசனத் திட்டத்தைச் சீர்செய்ய இருப்பதாகவும், இதில் 10.00 கோடி ரூபாயை Global Environmental Facility என்னும் அமெரிக்க நிறுவனம் அளிக்க முன் வந்திருப்பதாகவும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால்.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம்.ஏ. ஹக்கீம்):** தயவு செய்து நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், 12,000 ஏக்கர் நிலங்கள் இதனால் பயன்பெறும் என்று கோவை (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு மகேஸ்வரி அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு குறித்து ஒரேயொரு கருத்தை மட்டும் நான் சொல்லி விடைபெறுகின்றேன். கடந்த ஆண்டில் மதுபானக் கடைகளை ஒப்பந்தக்காரர்களுக்கு ஒதுக்கிய முறை வரவேற்கத்தக்கது. இதன்மூலம் அரசுக்கு 67.7 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்தது என்பது போற்றத்தக்கது. மதுபான விலையும், மதுபான விலையிலே நீங்கள் பெற்ற பணமும், அதிகமாக இருக்கலாம். மதுபான விற்பனையும் quantity அளவும் அதிகமாக இருக்கிறது. மக்களை அதிகமாகக் குடிக்க வைத்து நாம் பணம் ஈட்ட வேண்டிய எண்ணம் இங்கே இருக்கக்கூடாது என்பதனைக் கூறிக்கொள்கிறேன். குறிப்பாக ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே, சேரிப் பகுதிகளிலே அதிகமாக இந்த மதுபானக் கடைகள் இருக்கின்றன. உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள், மதுபானங்களுக்கு என்று செலவு செய்யும் நிலையில் உள்ள பிரிவினரிடமிருந்து கிடைக்கும் வருவாயை அதிகரிக்க



225-161.

அதிக அக்கறை காட்டுவோம் என்று. ஆனால் இன்றைக்கு கடைகள் இருப்பதெல்லாம் சேரிப் பகுதியிலே—இருக்க, உண்ண உணவு இல்லாத மக்கள் தன்னுடைய தினக் கூலியை இந்தக் குடிக்காக கொடுத்து, தங்கள் குடியையும் கெடுத்து, நாட்டையும் கெடுத்து, தன் உடலையும் கெடுத்துக் கொள்கின்ற நிலை இருக்கிறது. நாமக்கல்லிலேகூட நீங்கள் வந்து பாருங்கள். அதிகமான கடைகள் சேரிப் பகுதிகளிலேதான் இருந்துகொண்டிருக்கின்றன. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சற்று அக்கறை காட்டவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 5-40

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம்.ஏ. ஹக்கீம்):** அடுத்தாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், (குறுக்கீடு) மிக்க நன்றி.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகளிலே கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையிலே தேசிய நெடுஞ்சாலைகள் என்ற தலைப்பில் நான்கு பெரு நகரங்களை இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் என்ற தலைப்பிலே தேசிய நெடுஞ்சாலை 5. சென்னை-கொல்கத்தா இணைப்பு என்று, 42 கிலோமீட்டர் சாலை சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னை-கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரை, சென்னை மாநகரத்திற்குள்ளே இந்தச் சாலை வருவது என்பது, திருவொற்றியூர் தொகுதியில் இருக்கக்கூடிய இரண்டு வட்டங்களில் ஒரு வட்டத்திலும். பெரம்பூரிலே இருக்கக்கூடிய மூன்று வட்டங்களிலே இந்தச் சாலை வருகிறது. இந்தச் சாலைகளைப் பொறுத்தவரை, 4 வழிச் சாலையாக/6 வழிச்சாலையாக மாற்ற வேண்டுமென்று கருத்துரு உருவாக்கப்பட்டிருப்பதாக, ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாக கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 4 வழிச் சாலைகளாக இந்தச் சாலைகளை மாற்றுவதற்கு சென்னை மாநகரத்திற்குள் இருக்கக்கூடிய, பெரம்பூர் பகுதியிலே கடந்த மூன்று ஆண்டு காலமாக அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு, தடைப்பட்ட நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. பல்வேறு பணிகள் அந்தச் சாலைகளிலே நடைபெறுவதால்,



போக்குவரத்திற்குக் கடுமையான இடைஞ்சலாக இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு நீடித்துக்கொண்டிருக்கிறது. உடனடியாக என்.எச். 5 சென்னை-கொல்கத்தா சாலையை, குறிப்பாக சென்னை மாநகரத்திற்குள் வரக்கூடிய அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அந்தச் சாலை இருக்கக்கூடிய வியாசர்பாடி பகுதி, இரயில்வே கடவு கீழ்ப்பாலம் என்பது நீண்டகாலமாக பராமரிக்கப்படாமல் இருக்கக்கூடிய ஒரு பாலமாக இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய அந்தப் பாலத்தைப் பொறுத்தவரை மழைக் காலங்களிலே கடுமையான மழை பெய்தால், 4 அடியிலிருந்து 5 அடி வரை நீர் தேங்கி நிற்கக்கூடிய நிலைமை வியாசர்பாடி பாலத்திலே இருந்துகொண்டிருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த ஆண்டுகூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் சட்டத் துறை அமைச்சரினுடைய பரிந்துரையோடு அந்தக் கோரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல முன்னாள் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்கள்கூட ஒருமுறை அந்த வழியே வரும்போது, இரண்டு மணி நேரம் போக்குவரத்து நெரிசலில் சிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே வியாசர்பாடி பகுதியிலே இருக்கக்கூடிய அந்தப் பாலம் மேம்பாலமாகக் கட்டப்படுவதன் மூலம்தான் வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் நெரிசலைத் தவிர்க்க முடியும். மக்கள்தொகையைக் கணக்கில்கொண்டு, இன்றைக்கு இருக்கக்கூடிய தேவைகளைக் கணக்கில் கொண்டு, ஒரு மேம்பாலத்தைக் கட்டுவதற்கு இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கருத்துரு உருவாக்கி, இந்த ஆண்டிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏன் இதைச் சுட்டிக்காட்டுகிறோம் என்றால், இன்றைக்கு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, வியாசர்பாடி பாலம் ஒன்று இருக்கிறது. இரயில்வே கடவு, கீழ்ப்பாலம் என்பது இருக்கிறது. அதேபோன்று கன்னிகாபுரத்திலே ஒரு பாலம் இருக்கிறது. பெரம்பூரிலே ஒரு பாலம் இருக்கிறது. சென்னை மாநகரத்திலே 10 பாலங்கள் கட்டுவதற்கு, பெரம்பூரிலே அடிக்கல் நாட்டப்பட்டாலும்கூட,

9 பாலங்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டு, பெரம்பூர் பாலம் மட்டும் கட்டுமானப் பணி தொடக்கப் பணியிலே இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கிறது. அதற்கு விசாரணைக் கமிஷன் இருக்கிறது. மற்ற மூன்று பாலங்களிலே மழைக் காலங்களிலே தண்ணீர் தேங்கி நிற்பதனால், பெரம்பூர் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் சென்னை மாநகரத்தோடு தொடர்பு கொள்ள முடியாத ஒரு நிலைமை நீண்ட நெடுங்காலமாக, 40—50 ஆண்டுகாலமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, வியாசர்பாடி பகுதியிலே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கும், உடனடியாக அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கும் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மழைக் காலம் வரும்போது, அந்தப் பாலத்திலே தேங்கியிருக்கக்கூடிய நீர் மாநகராட்சிக்குச் சொந்தமான நீரா அல்லது தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான நீரா என்ற தகராறு இரண்டு துறைகளினுடைய அதிகாரிகளுக்கு மத்தியில் நடந்து கொண்டு இருக்கிறது. வெளியிலேயிருந்து வரக்கூடிய நீரை நாங்கள் வெளியேற்ற முடியாது என்று இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய உயர் அதிகாரிகள் பேசக்கூடிய நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதனைக் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

அதேபோன்று சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய மழை நீர் கால்வாய்களைப் பொறுத்தவரையில், கூவம் ஆறாக இருந்தாலும் சரி, அடையாறு ஆறாக இருந்தாலும் சரி, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி, நல்லா கேப்டன் குக் கால்வாயாக இருந்தாலும் சரி இந்தக் கால்வாய்களைப் பொறுத்தவரையில் சென்னை மாநகரத்திலிருந்து மழை நீர் வெளியேறுவதற்காக உருவாக்கப்பட்ட, அந்தக் கால்வாய்கள் கடந்த பல ஆண்டுகாலமாக தூர் வாரப்படாமல் இருக்கின்றன. இப்போதுகூட, அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், அதைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. கேப்டன் குக் காலாவாயைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் பல குடியிருப்புப் பகுதிகள் வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருக்கின்றது. கடந்த மழைக்காலத்திலே, கேப்டன் குக் கால்வாய் என்பது முறைப்படுத்தப்படாததினால், தூர் வாரப்படாததினால், கேப்டன் குக் கால்வாயில் வந்த மழை நீர் குடியிருப்புப் பகுதிகளிலே மழைநீர்





கால்வாய் மூலமாக வெளியே வந்து பல பகுதிகள் மழை நீரிலே தேங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, கேப்டன் குக் கால்வாய் இருந்தாலும் சரி, ஓட்டேரி நல்லா கால்வாயாக இருந்தாலும் சரி, இந்தக் கால்வாய்களை சீரமைப்பதற்கான பணி உடனடியாகத் தொடங்கப்பட்டு இருபுறத்திலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளில்—மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில்—தொடர்ச்சியாக அந்தப் பகுதிகளிலே மழைக் காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய காரணத்தினால், வியாசர்பாடி Link Canal என்ற ஒரு Canal வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால், வெட்டப்பட்ட அந்த Canal கடந்த பல ஆண்டுகாலமாக பராமரிக்கப்படாததினுடைய விளைவு இன்றைக்கு மழைக் காலங்களிலே, வியாசர்பாடி பகுதியிலே இருக்கக்கூடிய பி.வி. காலனி, சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய மழை நீர் வெளியேற முடியாத நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக வியாசர்பாடி Link Canal-ஐ தூர்வாரி சுற்றுச் சுவர் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்தப் பணி முழுமையாக நிறைவேறாமல் இருக்கிறது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்கும் நான் கொண்டுவருகிறேன்.

அதேபோன்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே பல விவரங்கள் தரும்போது, தனியார் பங்கேற்புடன், கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையிலே திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் என்று வரும்போது, ஏற்கெனவே கோவை மாநகரத்தில் ஆற்றுப் பாலம் அங்கு கட்டி முடிக்கப்பட்டு, அங்கே சுங்கம் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று கரூரிலும் ஒரு பாலத்திலே சுங்கம் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கோவை ஆற்றுப் பாலமாக இருந்தாலும் சரி, கரூரில் இருக்கக்கூடிய ஆற்றுப் பாலமாக இருந்தாலும் சரி, அங்கே கட்டி முடிக்கப்பட்ட தொகையைவிட, கடந்த கால ஆட்சி கொடுத்திருக்கக்கூடிய ஒப்பந்தம் என்பது பல கோடி ரூபாய் இலாபம் தரக்கூடிய ஒரு வாய்ப்பை அந்தத் தனியார் நிறுவனங்களுக்கு, எல். & டி. நிறுவனத்திற்கு

[திரு. கே. மகேந்திரன்] [2002 ஏப்ரல் 29

வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று கரூரிலே ஈ.சி.சி.ஐ-க்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் என்று வரும்போது, இலாப நஷ்டத்தைக் கணக்கில் கொண்டு வருடங்களைத் தீர்மானிப்பது உதவிகரமாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமுள்ள விவரம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. சேது சமுத்திரத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அனேகமாக இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். 1852ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்களுடைய ஆட்சிக் காலத்திலே கமாண்டர் டைலர் என்பவரால் உருவாக்கப்பட்ட சேதுக் கால்வாய் திட்டம் என்பது 12 முறை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த 12 ஆய்வுகளுமே பொருளாதார ரீதியாக தேவையான ஒரு திட்டம், இலாபம் தரக்கூடிய ஒரு திட்டம் என்று சுட்டிக்காட்டியதற்குப் பின்புமகூட, இன்றைக்கு வரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் இன்றைக்கு தொழில் வளர்ச்சியிலே பின்தங்கியிருக்கக்கூடிய தென் மாவட்டங்களிலே, தொழில் வாய்ப்புகளை, தொழில் வளர்ச்சிகளை உருவாக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதேபோன்று கொள்கைக் குறிப்பிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கக்கூடிய கடலூர் துறைமுகமாக இருந்தாலும் சரி, நாகப்பட்டினம் துறைமுகமாக இருந்தாலும் சரி, இராமேஸ்வரம் துறைமுகமாக இருந்தாலும் சரி, தொண்டியாக இருந்தாலும் சரி, வாலிநோக்கமாக இருந்தாலும் சரி, குளச்சல் துறைமுகமாக இருந்தாலும் சரி, இந்தத் துறைமுகங்கள் எல்லாம், வர்த்தக ரீதியிலான துறைமுகங்களாக வளரவேண்டுமென்றால் சேது சமுத்திரத் திட்டம் என்பது அமலாக்கப்பட வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தை அமலாக்குவதற்கு, மத்திய ஆட்சியாளர்களோடு தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைவரும் ஒன்றிணைந்து போராடி, அதைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொதுப் பணித் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களில் 490 என்.எம்.ஆர். ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 10, 12 ஆண்டுகாலமாக பணியாற்றிய அந்த ஊழியர்கள் இன்றைக்கும் நிரந்தப்படுத்தப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை



2002 ஏப்ரல் 29] [திரு. கே. மகேந்திரன்]

நீடித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஊழியர்களை, 5 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றக் கூடிய என்.எம்.ஆர். ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையிலே குழித்துறை கோட்டத்தில்தான் அதிகப்படியான சாலைகள் இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய D.E. பொறுப்பாக அதை கவனிக்காத சூழ்நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. அதேபோன்று குமரி மாவட்டம் பெருஞ்சாணியில் இருக்கக்கூடிய அணை என்பது தூர்வாரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

பிற்பகல் 5-50

இறுதியிலே நான் சுட்டிகாட்ட விரும்புவது இன்றைக்கு பல்வேறு திட்டங்கள் நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறையிலே அறிவிக்கப்பட்டு இருந்தாலும்கூட கட்டுமானக் கழகம் என்ற ஒரு கழகம் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சி அதிகாரத்திலே இருந்தபொழுது உருவாக்கப்பட்டது. இந்தக் கழகத்தின் மூலமாக அரசுக் கட்டடங்கள் கட்டக்கூடிய பணிகள் நடந்துகொண்டிருந்தன. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 4 ஆண்டுகாலமாக அந்த கட்டுமானக் கழகத்திற்கு எந்தப் பணியும் கொடுக்கப்படாத ஒரு நிலைமை இருந்துகொண்டிருந்தது. 235 ஊழியர்கள் பணியாற்றக்கூடிய அந்த கட்டுமானக் கழகத்திற்கு கடந்த 4 ஆண்டுகாலமாக பணிகள் கொடுக்கப்படாததன் விளைவாக இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு கடந்த ஒரு மாதகாலமாக ஊதியம் கூட வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அருகிலே இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திலே இருப்பது போன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய கட்டுமானப் பணிகள் எதுவாக இருந்தாலும், 20 சதவிகித கட்டுமானப் பணிகளை அந்த கட்டுமானக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவினை நாம் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையிலே பெரியார் பேருந்து நிலையம் அருகிலே இருக்கக்கூடிய இரயில்வே மேம்பாலம் பழுதடைந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த இரயில்வே மேம்பாலத்தை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தா. பச்சைமால்.

***திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தம்மத்துக்கோணம் என்னும் குக்கிராமத்தில் பிறந்து, கழகத்தின் சாதாரண தொண்டனாக இருந்த என்னை ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், இந்த மாமன்றத்தில் என்னை சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கிய எங்கள் அன்னையே, உங்கள் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்குகிறேன்.

எனக்கு வாக்களித்த குளச்சல் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்தச் சபையின் வாயிலாக எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். எதிரிகளின் சூழ்ச்சியாலும், வஞ்சக நெஞ்சங்களின் சதியாலும் எத்தனை துன்பங்கள் தொடர்ந்து வந்தபோதும் துணிவையே மூலதனமாகக்கொண்டு களத்தில் நின்று வென்று சாதனை படைத்த சரித்திர நாயகியே, எங்கள் அன்னையே, தோல்விகளை எதிரிகளுக்குப் பரிசாகக் கொடுத்து அகிலத்தில் உள்ளவர்களை வியப்பில் விழியகல வைத்த வீரத் தலைவியே, பெண்தானே என ஏளனமாக நினைத்து பொய்யர்கள் போட்ட பொய் வழக்குகளைக் கண்டு அஞ்சாமல் களத்தில் நின்று போராடி வெற்றிவாகை சூடிய டாக்டர் அம்மா அவர்களே, இமயம் தலைவணங்கவும், எதிரிகள் கலங்கவும் கழகம் நடத்தும் கற்பக விருட்சமே, தந்தை பெரியாரின் பாச விளக்காய், அறிஞர் அண்ணாவின் அறிவுச்சுடராய், புரட்சித் தலைவரின் மறு உருவமாய், எங்கள் இதய தெய்வமாய், ஆறரை கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை துருவமாய், அன்புப் பெருக்கோடு அணுகும் தொண்டருக்கு அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபியாய், ஏழைகளின் விடிவெள்ளியாய் விளங்கும் எங்கள் அன்னையே, கடந்த ஐந்தாண்டு காலத்தில் எத்தனை சோதனைகள், எத்தனை வேதனைகள், அனைத்தையும் வென்று மக்கள் சக்தியாய் விளங்கும் எங்கள் அன்னையே, விவசாயிகளின் கண்ணீர் கண்டு ரூ.311 கோடி கடன் வட்டி தள்ளுபடி செய்த எங்கள் குல விளக்கே, குறிஞ்சி மலரென பூத்திட்ட புது மலரே, திரும்பும் திசையெங்கும் எதிரியைக் கலங்க வைக்கும் வீறுகொண்ட சிங்கமே, எட்டப்பர் பலர் சூழ்ச்சி செய்தும், அதை வெட்டி முறித்த சுடர் வேலே, புவியரசர் யாமே என புளுகுவிட்ட உளுத்தர்களின் கால் அலுக்கும் வரை ஓடவிட்ட சிங்க நிகர்த் தலைவியே, உங்கள் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்குகின்றேன். ஆலயங்களில் அன்னதான திட்டத்தைத் தொடங்கிய அமுத சுரபியே உங்கள் பாதையில் வாழ்வதே எங்கள் பாக்கியம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சிறைச்சாலைகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்கீழ் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறுகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அரசு கஜானாவை எப்படி காலிசெய்து வைத்தார்களோ அதேபோல் கண்ட இடங்களில் எல்லாம் பாலங்களைக் கட்டி பல ஆயிரம் கோடி ரூபாய் காண்ட்ராக்டர்களுக்கு வழங்காமல் சென்றனர். எனது தொகுதி ஆசாரிபள்ளத்தில் அமையவிருக்கும் மருத்துவக் கல்லூரியில் செய்த பணிக்கு 130 இலட்சம் ரூபாய் கடனாக வைத்துச் சென்றார்கள். மக்கள் நலனில் அக்கறைகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள் அரசு அமையப் பெற்றபின் அந்தப் பணத்தை வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுநாள் வரை பராமரிக்கப்படாமல் இருந்த அரசுக் கட்டடங்களில் சிறப்புப் பராமரிப்புப் பணிகள் 110 கோடி ஹட்கோ நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுவதைப் பாராட்டுகிறேன். நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் 114 இடங்களில் புதிய தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு ஹட்கோ உதவியுடன் ரூ.3,699 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியதைப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 5-55

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நபார்டு வங்கி உதவியுடன் 60 இலட்சம் ரூபாய் செலவில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதி செய்து தர கருத்துரு உள்ளதைப் பாராட்டுகிறேன்.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 57.69 கோடி ரூபாய் செலவில் கடற்கரை பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண் 120-ல் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதில் ரூ.46 கோடியை ஹட்கோ கடனாகவும், எஞ்சிய 11.69 கோடி ரூபாயைத் தமிழக அரசும் ஏற்றுக் கொண்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அதில் எனது குளச்சல் தொகுதிக்கு 10 கோடியே 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கிய மீனவர்களின் துயர்துடைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, குளச்சல் தொகுதி மீனவ மக்கள் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

[திரு. தா. பச்சைமால்] [2002 ஏப்ரல் 29

திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 266.40 கிலோ மீட்டர் நீள அணுகுச் சாலைகளை ரூ.79.49 கோடி மதிப்பீட்டில் சீர் செய்வதைப் பாராட்டுகிறேன்.

மேலும் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பொய்கையாறு நீர்த்தேக்கம் மிகவும் முக்கியத்துவம் வாயந்தது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நீர்த்தேக்கம், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொயகையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அணையில் நடைபெற்ற பணிகளும் தற்போது நடைபெறுகின்ற பணிகளும் சேர்ந்து 2002-2003-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற நிதி ஒதுக்கீடாக ரூ.103.83 இலட்சம் ஒதுக்கியதைப் பாராட்டுகிறேன்.

நாட்டின் வடக்கு தெற்குப் பகுதிகளில் கன்னியாகுமரியையும் காஷ்மீரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை-7-ல் மதுரை-கன்னியாகுமரி பிரிவு 232 கிலோ மீட்டர் இணைப்புத் திட்டமும் செயல்படுத்தப்படும்போது, எங்கள் மாவட்ட மக்கள் மனதில் பல ஆண்டுகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த நல்ல திட்டம், பல்முனைப் பயன்களை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

துறைமுகத் துறையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டில் 992 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருசோபுரம் பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேசுவரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 14 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. மேலும் ஒரு சிறப்பு அம்சமாக எனது தொகுதியில் — அதாவது கன்னியாகுமரி மாவட்டத்தில்— உள்ள குளச்சல் துறைமுகத்தினை சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் துறைமுகமாக உருவாக்குவதற்கு மலேசிய அரசு ஆர்வம் காட்டியதன் தொடர்ச்சியாக, இத்துறைமுகத்தில் பொருளாதாரம் மற்றும் ஆற்றலை அறிவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்து, தமிழக அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளது என்பதையும் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிறது. அதிகமான



2002 ஏப்ரல் 29]

கோரிக்கைகள் இருந்தால் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கொடுத்துவிடுங்கள்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையினை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மீனவர்கள் பெரும்பான்மையாக வாழும் குளச்சல் பகுதியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தர அரசை வேண்டுகிறேன். கடந்த ஆட்சியாளர்கள் மத்திய மருத்துவக் கவுன்சிலின் அனுமதி பெறாமல், சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்னால் எனது தொகுதிக்குட்பட்ட ஆசாரிப்பள்ளத்தில் மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்த மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடப்பு ஆண்டில் தொடங்கிட ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன். குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சுமார் 3 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ளது பனந்தும்பு தொழிற்சாலை. அங்கு சுமார் 300 ஏழை மக்கள் வேலை செய்து வந்தனர். அந்தத் தொழிற்சாலை இப்போது இயங்கவில்லை. அங்கு இப்போது 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. மீண்டும் அந்த ஆலையை இயங்க வைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுத்து 300 தொழிலாளர்களின் குடும்பங்களில் விளக்கேற்றிட தங்கள் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்குகின்றேன்.

பிற்பகல் 6-00

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, காரவிளை, பருத்திவிளை, வைரா குடியிருப்புப் பகுதிகளில் அடிக்கல் நாட்டப்பட்ட பன்றிவாய்க்கால் நீரேற்றும் திட்டத்தை நிறைவேற்றித் தந்திட அம்மாவை வேண்டுகிறேன். இத்திட்டம் இப்போது 136 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மீனவ சமுதாய மக்களின் நீண்டகால கோரிக்கையான ஏ.வி.எம். சானலைத் தூர் வாரித் தர வேண்டுகிறேன். இப்பணி நடைபெற்றால், மீனவ சமுதாய மக்கள் நல்ல தண்ணீரில் குளிப்பதற்கும், மீனவ கிராமங்களை ஒட்டிய குடிநீர்க் கிணறுகளில், உப்புநீர் கலவாமல் இருப்பதற்கும் வசதியாக இருக்கும். இராஜாத்திமங்கலம் பகுதியிலே, மத்திய, மாநில அரசுக்குச் சொந்தமான சுமார் 750 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்திலிருந்து, பேருந்து நிலையம் அமைப்பதற்கு 5 ஏக்கர் நிலமும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு 30 ஏக்கர்

[திரு. தா. பச்சைமால்] [2002 ஏப்ரல் 29

நிலமும் தந்து, ஒதுக்கிட அம்மாவை வேண்டுகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட பல குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு தூர் வாராமல் இருக்கின்றன. விவசாயிகளின் நலன் கருதி, மழை நீரை சேகரிக்கின்ற வண்ணம், எனது தொகுதிக்குட்பட்ட குளங்களை தூர் வாரித் தர வேண்டுகிறேன்.

குமரி மாவட்ட மக்களின் முக்கிய வருமானம், தேங்காய் உற்பத்தி, கயிறு திரித்தல் போன்றவை ஆகும். அவற்றை மேம்படுத்துகிறவண்ணம், அரசு ஓர் ஒன்றியத்தில் ஒரு கோடி ரூபாய் அளவில் தொடங்கக்கூடிய தொழிலாக, தேங்காய் பவுடர், கயிறு திரிகின்ற தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளி, அனந்தநாடார்குடி; அரசு உயர்நிலைப்பள்ளி, கொடுப்பைக்குழி, ஆகிய இரு பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு, மக்கள் பங்குத் தொகையாக ரூ. 2 இலட்சம் கட்டியுள்ளார்கள். மாணவர் விகிதமும், 5 ஏக்கர் நிலமும் உள்ளது. போதிய பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தர வேண்டுகிறேன். மேற்கண்ட இரு

எனது தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. அதைப் போக்குகின்ற வண்ணம், 65 கடற்கரை கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனே நிறைவேற்றித் தந்திட அம்மா அவர்களின் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்கி வேண்டுகிறேன். இராஜாக்கமங்கலம், குளச்சல் சாலையில் உள்ள பாலம், குளச்சல்-கருங்கல் சாலையிலுள்ள பாலம், இரணியல் பாலம் ஆகியவை மிகவும் பழுதடைந்துள்ளன. அவற்றைப் புதியதாக அமைத்துத் தந்திடவும், குளச்சல் நகரமாகி வருவதால்—துறைமுக நகரமாகி வருவதால்—அங்கு ஒரு பயணியர் விடுதியும், நாகர்கோவில் நகராட்சிப் பகுதியிலிருந்து குளச்சல், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி மக்கள் செல்லும் சாலையில் புத்தேரியில் ஓர் இரயில்வே மேம்பாலமும் கட்டித் தந்து உதவுமாறும், தமிழ்நாட்டில் இருக்கின்ற மீனவ சமுதாய மக்களில் 25 சதவிகிதத்தினர் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்வதால், மீனவ சமுதாய மக்களுக்கு ஒதுக்கின்ற வீட்டில், அதிகப்படியான வீடுகளை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கித் தந்திடவும், ஆதிதிராவிட மக்கள் வீடுகளைப் பழுதுபார்க்க நிதி ஒதுக்கீடு தந்திடவும் அம்மா அவர்களின் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, பணியாளர்கள் நிர்வாகம். உள் துறை சிறைச்சாலைகள் ஆகிய மானியங்களின்மீது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான துறைகள் மீது பேசுகிறபோது, தமிழ்நாட்டினுடைய உயிர்நாடியான காவிரிப் பிரச்சினை, ஒரு கவலைக்குரிய பிரச்சினையாக இன்றையதினத்திலே இருந்து கொண்டிருக்கிறது. மேட்டூரிலே; தண்ணீர் அளவுகடந்து குறைந்து, குட்டையைப்போல இன்றைக்குக் காட்சி அளிக்கக்கூடிய நிலைமையால் தஞ்சை மாவட்டத்தினுடைய, ஒன்றுபட்ட அந்தக் காவிரிப் பகுதியினுடைய விவசாயிகளிடத்திலே மிகப் பெரிய கவலை தோன்றியுள்ளது. விவசாயிகளிடத்திலே உள்ள கவலையைவிட, அரசாங்கத்திற்கு இது ஒருபெரிய நெருக்கடியைத் தோற்றுவிக்கின்ற பிரச்சினையாக இன்றையதினத்திலே அமைந்திருக்கிறது. இந்த ஆண்டு குறுவை சாகுபடி செய்ய முடியுமா என்ற ஏக்கம் தமிழகத்திலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிற கவலையான நிலைமையில் அரசு என்ன, உரிய நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்களும், காவிரிப் பாசன விவசாயிகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல. 1991-லே 205 டி.எம்.சி. தண்ணீர், இடைக்காலத் தீர்ப்பின்படி, கர்நாடக அரசு வழங்குவதிலே காலதாமதம் ஏற்பட்டதோடு மட்டுமல்ல, மறுத்தும் வருகிறது. அதிலேயும்கூட இன்றையதினத்திலே, இந்த ஆண்டு மட்டும் நமக்கு 100 டி.எம்.சி.-க்கு மேலே தண்ணீர் வழங்க வேண்டியதை வழங்காமல் இருக்கிறது என்று நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். இதே மாதத்திலே முன்பு 90 அடிக்கு மேலே மேட்டூர் அணையிலே தண்ணீர் நிரம்பி இருந்தது. இந்தத் தடவை 40 அடி, 42 அடியை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இருக்கிற தண்ணீர்கூட ஜுன் மாதத்திற்குள்ளாக பல்வேறு தொழிற்சாலைகள் அங்கு உறிஞ்சி எடுக்கிறபோது இன்னும் குறைந்து கொண்டே இருக்கும். மேட்டூரிலே குறிப்பாக 11 டி.எம்.சி-க்கு மேலே ஆலைகளுக்காகவும் குடிநீருக்காகவும் எடுக்கப்படுகிறது. இது மிகப் பெரிய கவலை அளிக்கக்கூடியதாக இருக்கும். இதில் மத்திய அரசோடு மாநில அரசு கடிதப்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

போக்குவரத்தோடு இருக்கப்போகிறதா அல்லது ஏதாவது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன் வரப் போகிறதா என்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். இல்லையென்று சொன்னால், பாரதப் பிரதமரின் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிற ஆணையத்தை மீண்டும் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப் போகிறதா என்பதை உங்களுடைய பதிலுரையில் தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை ஒரு சாதாரண பிரச்சினையாக நாம் கருதிவிட முடியாது. கர்நாடகத்திலே மேலே மேலே கட்டப்பட்டு இருக்கிற அணைகளிலே, வரக்கூடிய தண்ணீரை கபினிக்கு மேலே எல்லாவற்றையும் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். பல்வேறு உயர்மட்டக் குழுக்கள் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு இருக்கின்றன. எந்த அளவுக்குப் பார்த்து நமது அரசுகளுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரிவதில்லை. காவிரி நதிநீர் பிரச்சினையிலே ஆணையத்தையாவது உடனடியாகக் கூட்டச் சொல்லி பாரதப் பிரதமருக்கு நீங்கள், முதலமைச்சர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-05

அதேபோன்று இந்த ஆறுகள், கால்வாய்களை தூர் வாரும் பணி இருக்கிறது. காவிரிப் படுகையிலே இப்போதுதான் ஆறும் கால்வாயும் காய்ந்து போய் இருக்கும். அந்தப் பணிகளை உடனடியாகத் தொடங்க, நிதியைக் கொடுத்து அந்தப் பணிகளைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஜூன் மாதம் 1 ஆம் தேதி நிதியைக் கொடுத்து, ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது என்று சொன்னால் கொடுத்த நிதியையும் முழுமையாக நிறைவேற பயன்படுத்தப்பட முடியாமல், எந்த நோக்கத்திற்காக அந்தப் பணிகள் கொடுக்கப்பட்டதோ அது நிறைவேறாமல் போகும். அந்தக் கால்வாய்களிலும் ஆறுகளிலும் தூர் எடுக்கும் திட்டங்கள் பாதியிலே துண்டு துண்டாக நின்றதன் விளைவாக முழுமை பெறாத தன்மைகள் அந்த மாவட்டத்திலே இருக்கின்றன. இதை நம்முடைய அதிகாரிகளிடத்திலே பல தடவை சுட்டிக்காட்டினாலும்கூட மார்ச் மாதம் தானே சட்டமன்றம் கூடி முடிகிறது; அதற்குப் பிறகுதானே எங்களுக்கு நிதி வருகிறது; நாங்கள் எப்படிச் செய்ய முடியும் என்கிற ஒரு விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் உடனடியாக இந்த கால்வாய்களை தூர் வாரும் பணிகளை நீங்கள் செய்ய வேண்டும்.



2002 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

அதோடுமட்டுமல்ல. தொடர்ந்து வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க ஆறுகள், கால்வாய்களில் உடைப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு—பொதுப் பணித் துறை என்பது கடந்த காலத்தில் retaining wall கட்டுவது, கரைகள் பலவீனப்பட்டு இருக்கிற இடங்களிலே அடைப்பு செய்து கட்டுவது என்ற போக்கு—அதற்காக நிதி ஒதுக்கம்—இவற்றிற்கு திட்டமே இல்லாமல் போய்விட்டது. பாலம் கட்டுவதிலே கவனம் செலுத்துகிற நாம், கால்வாய்களில் ஏற்படுகிற உடைப்புகளைத் தடுப்பதற்காக எந்த ஒரு சூழ்நிலையிலும், இன்று வரையிலும், எனக்குத் தெரிந்து 30 ஆண்டு காலமாக, அங்கே ஒரு கல் பணிகூடச் செய்யவில்லை. நம் அரசின்மீது மட்டும் குற்றம் சொல்லவில்லை; பொதுப் பணித் துறையிலே இருக்கிற ஷட்டர்கள், பலகைகளை பார்த்தோம் என்று சொன்னால், தண்ணீர் வந்து அதுபாட்டுக்குப் போகும், அதுபாட்டுக்கு வரும்; பொதுப் பணித் துறையில் ஒரு ஷட்டர் பலகைகூட இல்லாத சீரழிவு இன்றைக்கு அங்கே காவிரிப் படுகையில் இருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு அரசுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினால் அந்தப் பகுதியிலே ஒரு மாஸ்டர் பிளானை நீங்கள் கண்டிப்பாக உருவாக்க வேண்டும். அதற்கான பல்வேறு அறிக்கைகள் நம்முடைய அரசுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இன்று வரையும் அதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேபோன்று அந்தப் பணிகள் நடைபெறுகிறபோது, அங்கு இருக்கிற விவசாயிகளைக் கொண்டிருக்கிற உயர்மட்டக் கமிட்டிகளை ரெவின்யூ வட்டத்திலே அமைத்தால், அந்தப் பணிகள் மிகச் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறுவத்றகு வாய்ப்பாக இருக்கும். இல்லையென்று சொன்னால், அரசாங்கத்தினுடைய பணம், அரசாங்கத்தினுடைய கஜானா காலியாகிறது என்று சொன்னால், அது காண்ட்ராக்டரோடு, ஒப்பந்தக்காரரோடு முடிந்து போகிறது. தண்ணீர் வந்த பின்னாலேதான் அதிகாரிகளே அளக்க ஆரம்பிக்கிறார்கள். ஆற்றிலே எந்த இடத்திலே கால்வாய் தோண்டி இருக்கிறார்கள்; எந்த இடத்திலே தோண்டவில்லை என்பது தெரியாமல் போய்விடுகிறது. இதற்கு விவசாயிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைத்துச் செய்ய வேண்டும்.

அதேபோன்று கிராம மராமத்துப் பணி. உள்வாய்க்கால்களைத் தூர் வாரும் பணிகள் முற்றிலுமாக இப்போது நடைபெறுவதே இல்லை. அதற்கு முன்பு விவசாயிகள், ரெவின்யூ அதிகாரிகளைக் கொண்ட குழு கண்காணித்து, அந்தப் பணிகள் சிறப்பான முறையிலே நடைபெறும். விவசாயிகளினுடைய நிலங்கள், பயிர்கள் நீரில் மூழ்கி அழிந்து போனபோது, அரசாங்கம் நிவாரணம் கொடுக்க வேண்டும்,

கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஒரு விவசாயிகூட கோரிக்கை வைத்தது கிடையாது. இந்தக் கண்காணிப்பு இல்லாத பொறுப்பற்ற தன்மை ஏற்பட்டதன் விளைவாக, பணத்தை மட்டும் ஒதுக்கி பணிகள் எப்படி நடப்பது என்று கேட்பாரற்ற நிலைமை வந்ததன் விளைவாக, அரசாங்கத்திற்கு விவசாயிகள் ஆண்டுதோறும் கோரிக்கை வைத்துப் போராட வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. பலகோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறபகல் 6-10

அதோடுமட்டுமல்ல. தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர், சிதம்பரம் போன்ற காவிரி பாய்கின்ற மாவட்டங்களில், ஏதோ கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தது மாதிரி போய்விடுகிறது இப்போது. ஒரு பக்கத்திலே காவிரி நதி நீர்ப் பிரச்சினை நமக்குத் தீரவில்லை; இன்னொரு பக்கத்திலே நமக்கு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்யக்கூடிய மழைநீரைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் இன்றுவரையிலும் எந்த அரசும் எடுக்கவில்லை. அதற்கு நம்முடைய அதிகாரிகள் நீண்டதொரு திட்டத்தை ஏதாவது வகுக்கிறார்களா? எத்தனை டி.எம்.சி மழை பெய்கிறது? எந்தெந்த மாவட்டங்களிலே அதிகமாக மழை பெய்கிறது? எந்த இடத்திலே பாதுகாக்க வேண்டும் என்பதில் கணக்கற்ற முறைகள் இருக்கின்றன, பொதுப் பணித் துறையிலே. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—மிகப் பொருத்தமான அமைச்சர் அவர்கள்—இதற்கான உரிய முயற்சியை எடுத்தார்கள் என்று சொன்னால், கடலில் போய் சேரக்கூடிய ஒருபகுதி தண்ணீரை நாம் பாதுகாக்க முடியும். அப்படிப் பாதுகாத்தோம் என்று சொன்னால், ஓரளவுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறபோது, பயிர்கள் கருகாமல் பாதுகாக்கப்படுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல. அந்த மாவட்டத்திலே கோட்டகம் என்ற பெயரில், பள்ளமான ஏரியாவிலே 100 ஏக்கர், 1000 ஏக்கர் இருக்கின்றன. அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசாங்கமே தூர்வாரி,



கால்வாய்களை உருவாக்கினால், நாம் இப்போது சொல்லியிருக்கிறோமே தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், அந்தத் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு வரமுடியும். பக்கத்திலே இருக்கிற ஆந்திரா, மற்றும் கர்நாடகாவிற்கு ஒரு கமிட்டி அமைத்துப் போய் பாருங்கள்; சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களே போய்ப் பாருங்கள். ஒரு சொட்டுநீர்கூட கர்நாடகத்திலே கடலிலே போய்ச் சேருவது இல்லை. அவ்வளவு தண்ணீரையும் கால்வாய் மூலமாக, குட்டை மூலமாக தேக்கி வைத்து, ஒரு டி.எம்.சி. தண்ணீராக இருந்தால்கூட, அதற்கு ஓர் அணையைக் கட்டி தேக்கி வைத்து, அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். பலன்தரும் மரங்களை நடுகிறார்கள். மீன் வளர்க்கிறார்கள். நீரூற்றுகளைப் பாதுகாக்கிறார்கள். ஒரு மாஸ்டர் பிளானே, கர்நாடக மாநிலத்திலே செய்திருக்கிறார்கள். நமக்கு அருகில் 140 கிலோ மீட்டரில் இருக்கிறது. அதைப் பார்த்தோம் என்றால்—அது ஒரு மாஸ்டர் பிளான்—விவசாயிகள் அத்தனை பேருக்கும் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு மாற்று வேலைத் திட்டம், அதிலே முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை மாண்புமிகு அமைச்சர், முதலமைச்சர் அவர்கள் எண்ணுகிற எண்ணம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற அதனுடைய தொடர்ச்சி நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், காவிரிப் படுகையிலே இத்தகைய ஒரு திட்டத்தை நீங்கள் கையாளுங்கள். ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஏரிகளை நீங்கள் கட்டுங்கள். அதிலே மழைக் காலங்களில் வருகிற தண்ணீரை சேமித்து வையுங்கள்.

சட்டமன்றத்திலே விவாதம் நடந்திருக்கிறது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே. தஞ்சை மாவட்டத்திலே காவிரிப் படுகையிலே குறுவை சாகுபடி வெள்ளத்தால் அழியாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்ற விவாதம் நடந்திருக்கிறது. நம்முடைய அவைக் குறிப்பிலே இருக்கிறது. நான் எடுத்துப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது ஜூன் மாதம் 1 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறந்தால் விவசாயிகளை வெள்ளத்திலே அழியாமல் பாதுகாக்க முடியும் என்று சொல்கிறார்கள். எடுத்திருக்கிற முடிவு அதுதான். ஜூன் மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு எந்தத் தடவையும் ஜூன் மாதம் 12 ஆம் தேதி என்று காலம் கடந்தால் அந்த மாவட்டம் வெள்ளத்திலேதான் அழியும் என்ற நிலை இருக்கிறது. எனவே இதுபோன்ற ஏரிகளை அமைத்தோம் என்று சொன்னால், ஜூன் மாதம் 1 ஆம் தேதியே அதனுடைய விதைகளை உற்பத்தி செய்து, நாற்றுப் பார்த்து, சாகுபடி செய்தோம்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

என்று சொன்னால், வெள்ள பாதிப்பைத் தடுப்பதற்கான நல்ல வாய்ப்புகளை உருவாக்க முடியும். இதற்கு ஒரு மாஸ்டர் பிளான் செய்யுங்கள். அது முடியவில்லை என்றால், 10 ஏக்கர் வைத்திருக்கிற, 5 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு, 2 ஏக்கரில் குளம் வெட்டுவதற்கு நபார்டு வங்கி மூலமாகக் கடன் கொடுங்கள். அவர்கள் குளம் வெட்டிக்கொள்வார்கள்; அதிலே நீரைப் பாதுகாத்து வைப்பார்கள். நீங்கள் சொல்கிற பலன்தரும் மரங்களை நடுவார்கள், மீன் வளர்ப்பார்கள். மாற்றுத் தொழிலைச் செய்வதற்கு வாய்ப்பிருக்கும். அந்த மாவட்டத்தை ஒரு முன்மாதிரியான மாவட்டமாகக் கொண்டு வர முடியும். வேலையில்லாப் பிரச்சினையே இல்லை என்கிற நிலையைக் கொண்டு வந்துவிட முடியும். வறண்ட பிரதேசத்தைப் போய்த் தேடுவதைவிட, கையிலே இருப்பதைச் செய்ய வேண்டியதுதானே? ஆகவே, அந்த மாவட்டத்திலே செய்யலாம். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து, எது சாத்தியப்படுகிறதோ அந்த சாத்தியக்கூறுகளைச் செய்வதற்கு இந்த அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயிரக்கணக்கான கோடைப் பயிர்கள், காய்கறிகள், போன்றவற்றையெல்லாம் உற்பத்தி செய்யலாம்; நிறைய செய்யலாம். இப்போதுகூட, சத்துணவுக்கு நாம் காய்கறிகளைப் போட வேண்டுமென்று சொல்லிவிட்டோம். நிறைய காய்கறிகளை கோடைப் பயிர்களை உற்பத்தி செய்யலாம். அதற்கு நீர் ஆதாரங்களை உருவாக்குவதற்கு நல்ல பணிகளை மேற்கொள்ளலாம். அதையும் நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிப் படுகையிலே இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்ய முடியும்.

பிற்பகல் 6-15

அதுபோன்றுதான் எங்களுடைய மாவட்டத்திலே ஆண்டுதோறும் வெள்ளம் வருவதற்கு என்ன காரணம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். திருச்சி, நாகை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் மிகப் பெரிய அழிவுகள் ஏற்படுகின்றன. ஒன்றைக் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், தஞ்சாவூரிலிருந்து திருச்சி வரை வரக்கூடிய தண்ணீரைச் சேமிக்க வேண்டும்.

அடுத்து ஒரு மிகப்பெரிய ஆறு. நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் அந்த விவசாயிகள். கண்ணன் ஆறு உடைந்தால், பாமினி ஆற்றில் கலக்கிறது. பாமினி ஆறு நேராகக் கடலில் போய்க் கலக்கிற ஆறு. அந்தப் பாமினி ஆறு உடைந்தால், பக்கத்திலே இருக்கிற



2002 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

பழம்பாண்டி, புதுப்பாண்டி, கோதையாறு, வளவனாறு போன்ற பல ஆறுகளை உடைத்து அந்த ஊரே நாசம் ஆகி விடுகிறது. அந்த மாவட்டமே காலியாகிவிடுகிறது. ஆக, இதைத் தடுப்பதற்காக எந்த நடவடிக்கையை இதுவரையில் எடுத்திருக்கின்றோம் என்று சொன்னால், எந்தவொரு நடவடிக்கையும் பொதுப் பணித் துறையால் எடுக்க முடியவில்லை. எது காரணமாக இருக்கிறது? எந்த ஆறு உடைகிறது? எந்த ஆறு நஷ்டத்தை உருவாக்குகிறது? அதைச் சரி செய்ய வேண்டுமா இல்லையா? அதைச் செய்வதே இல்லை. அதற்கான பணியை நீங்கள் செய்ய வேண்டும். அந்த கண்ணன் ஆறைப் பாதுகாக்க வேண்டும். அந்த மாவட்டத்திலே மிகப் பெரிய ஏரி உள்ளது. அந்த ஏரி எல்லாம் இன்றைக்குப் பார்த்தோம் என்று சொன்னால், இப்போது தூர் வாராமல் பயனற்றுப் போய்விட்டது.

இன்னும் ஓர் அபாயம் இருக்கிறது. தமிழக அரசு கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய்க்கு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி, நிவராணம் என ஆண்டுதோறும் வழங்கிக்கொண்டு இருக்கிறது. என்ன காரணத்தினாலே வந்திருக்கிறது. இன்றைக்குக் கடலோரப் பகுதியை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், இறால் பண்ணை, இறால் குட்டை, உப்பளம் போன்றவையிருக்கின்றன. நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய கடைகளை பூராவும் நாசப்படுத்திவிட்டார்கள். அதிகாரிகள் கேட்பாரற்ற நிலை. எனக்குத் தெரிந்து நான் சொல்லக்கூடிய இந்த ஆறுகளிலே பார்த்தோம், என்று சொன்னால், இந்த கோதையாறு, பழம்பாண்டி, புதுப்பாண்டி, தூக்கனாங்குருவி, அடப்பாறு, அரிச்சந்திர நதி, வளவனாறு போன்ற நதிகளையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், 40 கிலோ மீட்டர் தூரத்தில் அப்படியே கானல் நிலத்திலே தண்ணீர் வடியும். தடையே கிடையாது. இன்றைக்குத் தண்ணீரே போகாது. அதிலே ஆயிரக்கணக்கான இறால் குட்டைகள் அமைத்து, உப்பளம் அமைத்து, அவை மூலமாக தண்ணீர் தேங்காமல் வடிகிற இடத்திலே 2 அடி இருக்கும். ஊர் உள்ளே பார்த்தீர்கள் என்றால், 11 அடி தண்ணீர் இருக்கும். எத்தனை மண் குடிசைகள் நாசமாகின்றன. எவ்வளவு நிவாரணம் பொதுப் பணித் துறையிலேயிருந்து நாம் கொடுக்கிறோம். ரெவின்யூ துறையிலிருந்து நாம் கொடுக்கிறோம். எவ்வளவு தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகையால், அந்த இறால் குட்டைகளுக்கு அனுமதியே கொடுக்கக்கூடாது. நமது அரசு இதுவரையிலே கொடுக்கவில்லை. ஏற்கெனவே இருந்த அரசு அப்படி அனுமதி கொடுத்ததன் விளைவாக, கேரளாவிலிருந்து வந்து இறால் குட்டை போட்டு 100 ஏக்கருக்கு அனுமதி வாங்கினால்,

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

1,000 ஏக்கரில் இறால் குட்டை போடுகிறார்கள். ஒரே வருடத்திலே பல கோடி ரூபாயைச் சம்பாதித்து, மறுபடியும் விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். நேரடியாக 10 அடி, 15 அடி வரை உயர்த்தப்பட்டுள்ள தரைகளை சமன்படுத்தாமலே அவர்கள் சென்று விடுகிறார்கள். இது அரசினுடைய கவனத்திற்குத் தொடர்ந்து வந்திருக்கிறது. இதிலும் பொதுப் பணித் துறை கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இடும்பாவனம், முத்துப்பேட்டை பகுதிகளிலே இதுபோன்ற மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, அந்தப் பகுதிகளிலே இருக்கிற விவசாயிகள் எல்லாம் இறால் குட்டைகளை அழிக்க வேண்டும் என்று கிளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தண்ணீர் வளம் உடைய தமிழ்நாட்டில், 15 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படுகிற அபாயம் வந்திருக்கிறது என்று மத்திய அமைச்சகத்தினுடைய நீர் வளத் துறை அறிவித்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. 15 மாவட்டங்களில் குடி தண்ணீருக்கே மிகப் பெரிய வறட்சி வந்திருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொன்னால், தமிழ்நாடு, குஜராத், பஞ்சாப், இராஜஸ்தான், அரியானா போன்ற மாநிலங்களிலே நிலத்தடி நீரை வேகமாகக் குறைத்துக் கொண்டு வருவதினால், இந்த மாநிலங்கள் பாலைவனத்திற்குச் சமமாக மாறிவிடும் என்கிற அபாயம் வந்திருக்கிறது என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. இவை அதிகாரிகளுக்குத் தெரியாது என்று சொல்லமுடியாது. இதை நான் அரசியலுக்காகப் பேசவில்லை. மேடைக்காகப் பேசுவது இல்லை. இவற்றையெல்லாம் அரசாங்க சாட்டிலைட் மூலமாக மேலேயிருந்து எடுத்து, எப்படிப்பட்ட அபாயம் இருக்கிறது என்பதை நம்முடைய அதிகாரிகளுக்கு உணர்த்தி இருக்கிறது மத்தியில் இருக்கக்கூடிய நீர்வளத் துறை. இத்தகைய அபாயத்தில் இருந்து பாதுகாப்பதற்காக உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நாம் பார்க்க வேண்டும். ஏதோ விவசாயத்திற்கு மட்டும் தண்ணீரை நாம் பயன்படுத்துவது இல்லை. தொழிற்சாலைகள், குடிதண்ணீர் மற்றும் அனைத்துப் பணிகளுக்குமே தண்ணீர் ஆதாரம் தேவைப்படும் அவசியம் இருக்கிறது. விவசாயத்திற்கு மட்டுமா பயன்படுத்துகிறோம். விவசாயத்திற்கு 40 சதவிகிதம்தான் தண்ணீரைப் பயன்படுத்துகிறோம். தமிழ்நாட்டில் 60 சதவிகிதம் ஆலைகளுக்கும், குடிப்பதற்கும், மனிதர்களுடைய



2002 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படியானால், நீர் ஆதாரம் என்பது எவ்வளவு பெரிய அவசியமாக இருக்கிறது என்பதை நம்முடைய அதிகாரிகள் உணர வேண்டும். அந்த வகையில் நம்முடைய அமைச்சர் அவர்களும் அதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற ஏரிகள் 40,000. இந்த 40,000 ஏரிகள் இருக்கிற இடமே தெரியாமல் மாறிவிட்டது. அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுங்கள், ஏரிகளை பலப்படுத்துங்கள். 40,000 ஏரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. மிகப் பெரிய ஏரிகள். அந்த ஏரிகளை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் மன்னார்குடியில் இருக்கிற திருமேனி ஏரி. 750 ஏக்கர் இருக்கிறது அந்த ஏரி. அந்த 750 ஏக்கர் ஏரியில் தண்ணீரைச் சேமித்துவைத்தால் நீண்டகாலமாக அந்த மாவட்டத்தில் ஏற்படும் தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும். அங்கே இன்றைக்கு 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். அந்த ஏரியை நம்பித்தான், எரிவாயுத் துறையின் மூலம் செய்கிறோம். அந்த ஏரி வறண்டு போய்விட்டால் அந்தத் திட்டமே வீணாகிப் போய்விடும். தமிழகத்திலே 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாக வேண்டி அந்த இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய கவனத்திற்கு மாநில அரசு கொண்டு வந்திருக்கிறது. அங்குள்ள விவசாயிகளும் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, திருமேனி ஏரியை முற்றிலுமாக இந்த ஆண்டு ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழே—மன்னார்குடி தாலூகாவிலே வருகிறது அது—அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-20

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உங்களுடைய கவனத்திற்குப் பல்வேறு விஷயங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்; பூமாலைத் திட்டம்; மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா இணைப்புத் திட்டம்; மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிகளை கிழக்கே திருப்புவது; தென்னக நதி நீர் இணைப்பு; மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை இவற்றை தாமிரபரணியோடு கொண்டுபோய் இணைக்கின்ற கங்கை-காவிரி திட்டம். இவற்றையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், ஒரு நீண்டகாலத் திட்டம். இதை வலியுறுத்த வேண்டும். மத்திய அரசுக்கு வலியுறுத்தி, காலாகாலத்தில் செய்ய வேண்டும்.

அனேகமாகப் பார்த்தீர்கள் என்றால். பல என்ஜினியர்கள், அமெரிக்காவில் பிறந்த. லண்டனில் பிறந்த என்ஜினியர்கள்—தமிழ்நாட்டிலே அப்போது வெள்ளைக்காரன் ஆட்சியிலே இல்லை என்று சொன்னால், இன்னும் நாம் வீணாகிப் போயிருப்போம். சர்தார் காட்டன். அவர்தான் இதற்கெல்லாம் திட்டம் வகுத்தவர். மேட்டூர் அணை கட்டுவதற்கு அவர்தான் திட்டமே வகுத்துக் கொடுத்திருக்கிறார். அதற்குப் பிறகுதான் மேட்டூர் அணையைக் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட என்ஜினியர்கள்—எல்லாம் பல்வேறு திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பின்பற்ற வேண்டும். அவற்றைப் பின்பற்றாததினுடைய விளைவாக, மேலெழுந்தவாரியான, கவர்ச்சிகரமான திட்டத்தால் பல்வேறு கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நாட்டிலே உருவாக வாய்ப்பிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ரொம்ப அவசியமானது. ஆக, அந்தத் திட்டங்களை—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு விஷயங்களிலே கவனம் செலுத்தக்கூடியவர். பல்வேறு விஷயங்களிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற திட்டங்களை—மத்திய அரசு நீண்டகாலத் திட்டங்களை உருவாக்குவதற்குத் தாங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நெடுஞ்சாலைத் துறை. ஐந்து துறைகள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரம் வேண்டும். நாங்கள் பேசுகின்ற நேரத்தையும் அமைச்சருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்வதனால்தான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நீங்கள் கம்மியாகத்தானே பேசியிருக்கிறீர்கள்? 19 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** அதற்காகத்தான் நம்முடைய துணைத் தலைவர் இருக்கவேண்டும். நெடுஞ்சாலைத் துறை ஒரு பிரதானமான துறை. இதிலேயும் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பார்வையோடு சில நடவடிக்கைகளை எடுத்திருப்பதற்கு நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்கு பெருநகரச் சாலைகளை இணைக்கின்ற திட்டம் ஒரு நல்ல திட்டம். அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே தொழில் வளம் பெருக வேண்டுமென்று சொன்னால்





இந்தத் திட்டம் அவசியமான திட்டம். அந்தத் திட்டத்தை இந்த நேரத்திலே நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதேமாதிரி பூவிருந்தவல்லி-காஞ்சிபுரம், சென்னை-கொல்கத்தா, ஓசூர்-கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி-வாணியம்பாடி, காஷ்மீர்-கன்னியாகுமரி போன்ற திட்டங்கள். அதுமாதிரி, மதுரை-கன்னியாகுமரி, சேலம்-திருச்சி, இவற்றையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், நல்ல திட்டங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட பார்வையோடு நெடுஞ்சாலைத் துறையிலே கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வளவு நல்ல திட்டங்கள். இப்படிப்பட்ட திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால்—ஒரு முன்னுதாரணத்திற்காக மாவட்டத்தை மட்டும் நான் முன்வைக்கவில்லை—அவை இயற்கைச் சீற்றத்திற்கு ஆட்பட்ட மாவட்டமாக காவிரி மாவட்டங்கள் அமைந்து போய்விட்டன. அதுவும் சிதம்பரம் முதல் புதுக்கோட்டை வரையில். பார்த்தீர்கள் என்றால், கடலோரமாக உள்ளது. எந்த ஒரு சாலை போட்டாலும் சரி. அந்தச் சாலை ஓராண்டோடு முடிந்து போய்விடும். மறு ஆண்டு சாலை போடவேண்டும் என்று கோரிக்கைகளை வைப்பார்கள். அந்த அளவுக்கு அதனுடைய தரத்தை உயர்த்தாமல், தரம் இல்லாத சாலைகள் கடந்த காலத்திலே போட்டதினுடைய விளைவாக, அந்தச் சாலைகள் வெள்ளக் காலங்களிலே முற்றிலுமாக வீணாகிப் போய் விடுகின்றன. ஆகவே, ஒரு தரமான சாலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, என்னுடைய தொகுதியிலே, 6 பாலங்களின் பாதைகள் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. ஆறு பாலங்கள். முத்துப்பேட்டை-வாய்மேட்டில் ஒரு பாலம் இடிந்து விழுந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. 3 கி.மீ. போக வேண்டிய மக்கள், பள்ளி மாணவர்கள் 11 கி.மீ. சுற்றித்தான் நகரத்திற்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. நான் எழுதிக் கொடுத்துவிட்டேன். அமைச்சரிடம் முன்கூட்டியே கொடுத்து விட்டேன். இருந்தாலும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுபோன்ற ஒரு பாலம் போய்விட்டது.

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

அதேமாதிரி இன்னும் சொல்ல வேண்டுமானால், கோரையாற்றுப் பாலம் உடைந்து போய்விட்டது. வேதாரண்யம் சாலையில், வளவனார் பாலம். இப்போது உடைந்து போய், அதிலே ஒரு பக்கத்திலே வாகனப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று வேளாங்கன்னி சாலையில் ஓரிடத்திலே மீனாட்சி வாய்க்கால் பாலமே துண்டாக உடைந்து போய்விட்டது. அவற்றையெல்லாம் சரி செய்யவேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி சாலையில் பார்த்தால், கோட்டூர் என்கிற இடத்திலே காந்தி சிலைக்கு நேரே இருக்கிற ஒரு பெரிய பாலம். பல தடவை விபத்து நடந்துவிட்டது. அதிகாரிகளிடத்திலே 10 ஆண்டுகளாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தேவையில்லாமல் சில இடங்களில் திட்டங்களை உருவாக்குகிறார்கள். தேவையான இடங்களை, விபத்து ஏற்படும் இடங்களை அவர்கள் கண்காணிப்பதில்லை. ஆக இந்தப் பாலங்களை எல்லாம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல்: 6-25

அடப்பாறு பாலம். அடப்பாறு பாலத்தில் இருக்கிற குறுக்குப் பாலங்கள். அதுபோன்ற புறவழிச் சாலைகள், மற்ற சாலைகளையெல்லாம் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ரொம்ப நல்லது. இன்றைக்கு இருக்கிற வாகனப் பெருக்கம், அதுபோன்று மக்களுடைய பெருக்கங்கள், காரணமாக போக்குவரத்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் இன்று மத்திய அரசு, தமிழகத்திலே ஏழு பெரிய இரயில்வே திட்டங்களை தடுத்து நிறுத்திவிட்டார்கள். ஆக இன்றைக்கு போக்குவரத்து என்பது, தடைப்பட்டுப் போயிருக்கிறது. மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி, அந்த இரயில்வே திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதைக் கொடுக்காமல் தடுத்து நிறுத்திவிட்டார்கள். அந்த வகையிலே பார்த்தோம் என்று சொன்னால், என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டி ஒரு சிறிய நகரம். நான்கு மாவட்டச்சாலைகளை இணைக்கிற திருத்துறைப்பூண்டி நகரம். அதில் சென்ற அரசு, ஒரு கி.மீ. மாற்று வழிப் பாதையை வேதாரண்யம்-வேளாங்கன்னிக்கு சாலை போட்டுக் கொடுத்தார்கள். வேளாங்கன்னி சாலையிலிருந்து திருவாரூர் சாலை



2002 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

வரையிலும் ஒரு மாற்று வழிப்பாதை. நான் ஒன்றும் 50 கோடி, 100 கோடி திட்டத்தைச் சொல்லவில்லை. அனேகமாக இரண்டு, மூன்று கோடி வரும். மாற்று வழி போட்டால் மிகப் பெரிய விபத்துக்களைத் தடுக்க முடியும். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் உடனடியாகச் செய்யவேண்டும். அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. சென்ற ஆண்டே எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரிப் படுகையிலே 204 பாலங்கள் கட்டுவது என்று அரசு அறிவித்திருக்கிறது. ரொம்ப நல்ல திட்டம், வரவேற்கத் தக்க திட்டம். இவையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்திருக்கிற சிறப்பான திட்டங்கள். இவற்றை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நலல திட்டங்களை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தேசிய நெடுஞ்சாலை, மாவட்ட பெரிய சாலைகள் இவற்றையெல்லாம் பார்த்தோம் என்று சொன்னால், இதுவும் ஒரு நல்ல திட்டம்; நம்முடைய அரசு பரிசீலித்து இருக்கிறது. அவற்றை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றிற்கெல்லாம் முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டும் என்று, அரசின் சிந்தனையில் இருந்ததை, நீண்டகாலம் சொல்லி வந்ததை இன்றையதினம் நம்முடைய அரசு எடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயிரம், ஐநூறு மக்கள் தொகை கொண்டிருக்கிற திட்டம் இதிலே இருக்கிறது. இது தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிற திட்டம். ஆனால் நடைமுறைக்கு சாத்தியமே இல்லை. என்ன சொல்கிறார்கள் என்றால்—'கிராமப்புற சாலை மேம்பாடு' பஞ்சாயத்து யூனியன் சாலை. என்ன சொல்கிறார்கள் என்றால்—1996-1997-ல் அப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ன இருந்ததோ, அந்தக் கணக்கெடுப்புப்படி மனு கொடுத்தால், ரிடர்ன் ஆகிவிடுகிறது. ஒரு பஞ்சாயத்தில் ஆயிரம் பேர் இருந்தாலும், 1200 பேர் இருந்தாலும் பயன்பட வேண்டும். அப்படி திட்டங்களை எடுத்தால்தான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். இல்லை, ஒரே இடத்தில் ஆயிரம் பேர் இருந்தால்தான் அந்தச் சாலையைப் போடுவோம் என்று சொன்னால், அந்தத் திட்டம் நிறைவேற சாத்தியமே இல்லை. அப்படித்தான் இந்தத் திட்டத்தில் இருக்கிறது. தமிழகத்தில் ஒரே இடத்தில் எப்படி ஆயிரம் பேர் குடியிருக்க முடியும்? ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 29

(மணியடிக்கப்பெற்றது) ஒரு பஞ்சாயத்தை இணைப்புக்கு எடுத்துக்கொள்ளுங்கள். அந்த வகையிலே செய்தால்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் சாலைகள் மேம்பாடு செய்வது குறித்து சென்ற ஆண்டு 182 சாலைகள் தேர்வு செய்யப்பட்டதாகவும். 2002-2003 ஆம் ஆண்டில் 53 சாலைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லி, எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டும். இதையும் பார்த்தோம் என்று சொன்னால், இன்னும் கிராமங்களிலே கடைக்கோடியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு ஒரு விடிவுகாலம் ஏற்படுத்துகிற சாலைகள் இவை. அதற்கும் நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அயல்நாட்டு ஒப்பந்தத்தோடு சில சாலைகள் போடுவதற்கு அரசு முயற்சி எடுத்திருப்பது வரவேற்கக்கூடியதுதான். இப்போது இருக்கிற நிதிநிலைமையில் செய்ய முடியாது என்கிறீர்கள். ஆனால் ஒரு கட்டுப்பாடு வேண்டுமா, வேண்டாமா? எத்தனை ஆண்டுக்குத்தான் சுங்க வரி வசூல் பண்ண முடியும்? இவ்வளவு ரூபாயைத்தான் வசூல் செய்ய வேண்டுமென்று அக்ரிமெண்ட் உங்களிடத்தில் இருக்கவேண்டும். அதுவும் இன்று இருக்கிற பாண்டிச்சேரி சாலையில், பிரச்சினை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதில் பார்த்தால், ஒரு சாலையில் போகிற வண்டிகளை அடிக்கிறார்கள். கண்ணாடி எடுத்து அடிக்கிறார்கள். ஏன் அப்படி அடிக்கிறீர்கள் என்றால், காசு கொடுத்துவிட்டுப் போங்கள் என்கிறார்கள். அதிகாரிகள் என்று தெரியவில்லை, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று தெரியவில்லை, சட்டமன்ற உறுப்பினர்கள் என்று தெரியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று தெரியவில்லை. ஆக கொடுக்கிற பணத்தைக் கொடுத்துவிட்டுப் போ என்கிறார்கள். எத்தனை தடவை போனாலும், அத்தனை தடவையும் பணம் கேட்கிறார்கள். அதற்கு ஒரு விதிமுறையை வகுக்கவேண்டும்.

அஃதேபோன்று நீங்கள் அந்நிய நாட்டினுடைய ஒப்பந்தத்தின்படி சாலைகளைப் போடும்போது, அக்ரிமெண்ட் போடவேண்டும். எனக்கு இந்த ஃபோர்டு கார் கம்பெனி மூலம் நல்ல அனுபவம். முன்னாள் முதலமைச்சர் சொன்னார், 12 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்



2002 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

என்று சொன்னார். அதனுடைய உபதொழிலுக்கு ஆறாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னார். எனக்குத் தெரிந்திருக்கிற நிலைமை, 350 பேருக்கு 'கேட்'டில் வாட்ச்மேன் வேலை கிடைத்திருக்கிறது. எவ்வளவு இடத்தைக் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு மின்சாரம் கொடுக்கிறோம், எவ்வளவு சலுகை செய்திருக்கிறோம். எவ்வளவு வாட்டர் சப்ளை கொடுத்திருக்கிறோம். இந்தத் தொழிற்சாலையினாலே என்ன நன்மை இருக்கிறது. வரிச் சலுகை 10 ஆண்டுக்காலத்திற்கு. இதில் எத்தனை பேர் Ford காரில் போகிறார்கள். எம்.எல்.ஏ., எத்தனை பேர் போகிறார்கள் என்று தெரியவில்லை. எல்லோரும் நமது பஸ்ஸிலேதான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதனாலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட நேற்று ஒரு அந்நிய நாட்டினுடைய தொழில் நிறுவனத்தை நிறுவுவதற்காக நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தளர்த்தி உங்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிற காரணத்தினாலே உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படிச் சொல்லி தமிழ்நாட்டினுடைய உரிமையை நாம் இழந்துவிடக்கூடாது. பாதுகாக்கிற முறையிலே அவையெல்லாம் இருக்கவேண்டும். என்ன நன்மை இந்த நாட்டுக்கு, எந்த வரி வந்துகொண்டிருக்கிறது என்று பார்த்து அந்த வகையிலே அதைச் செய்யவேண்டும்.

பிற்பகல் 6-30

அதேபோலத்தான் உங்களுடைய மலேசிய ஒப்பந்தமும். அதிலே குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல சாலையோரங்களிலே மரம் நடுவது ரொம்பத் தேவையானது. அந்தக் காலத்திலே ரொம்பத் தேவையாக இருந்தது. இப்போது அரசு அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. உண்மையிலேயே பாராட்டுக்குரியது. சாலையோரங்களிலே மரக் கன்றுகள் நடுகிறார்கள். சென்ற ஆண்டு, ஓர் இரண்டாண்டுகளுக்கு முன்பு நட்டார்கள். நடப்பட்ட கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு ஆளே கிடையாது. எப்படி முளைக்கும் அது? எப்படி வளரும்? ஆகவே சாலைப் பணியாளர்களை நியமிக்கவேண்டும். நீர் ஆதாரங்களை அந்தக் கன்றுகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சாலையோரங்களிலே உள்ள ஆக்கிரமிப்புகள். எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், செல்வாக்குப் படைத்த மனிதராக இருந்தாலும், சாலைகளை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு முழு முயற்சிகளை

எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கிழக்குக் கடற்கரைச் சாலை. கடலூர் — கன்னியாகுமரி வரையிலும் மற்றும் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி இவற்றையெல்லாம் பார்த்தோமென்றால், இந்தச் சாலை வரும் வரும் என்று நினைக்கும் போது, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை அதிலே இருக்கிற மண்ணைக்கூட அள்ளிப்போடவில்லை. கடுமையான பாதிப்பு வந்தாகியுள்ளது. ஒரு பராமரிப்பு இடைக்காலத்திலே செய்யவேண்டுமென்றால்கூட செய்யவில்லை. இதை நீங்கள் துரிதப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இன்னொன்று கடைசியாக . . . (மணியடிக்கப்பெற்றது) பேசி முடிக்கப்போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசியாக இரண்டு நிமிடம் பேசிவிட்டால், அரை மணி நேரம் ஆகிவிடும்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை, நிறைவு செய்கிறேன். சிறைத் துறை. சிறைத் துறையை எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், ஆயுள் தண்டனைக்கு 14 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை. கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பார்த்தோமென்றால், 10 ஆண்டுகாலம், ஏழு ஆண்டுகாலம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்றவர்களுடைய நினைவு தினங்களிலே இவர்களுக்கு எல்லாம் எட்டு ஆண்டுகாலமாக சிறைத் தண்டனையைக் குறையுங்கள். அதைக் குறைப்பது நல்லது. அதை அரசு பரிசீலிக்கவேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலையில் சில அப்பாவிகள்கூட மாட்டிக்கொள்கிறார்கள். அவரை விடுவிக்க வேண்டுமென்று சொன்னால், எட்டு ஆண்டுக்காலமாகக் குறைக்கவேண்டும். இதற்கு ஏற்கெனவே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கமிட்டிகள் இருக்கின்றன. அங்கே என்ன நடக்கிறது? நாங்கள் பல தவறுகளைச் சொல்கிறோம். சிறையில் நடக்கிற தவறு மாதிரி வேறு எங்குமே நடப்பது இல்லை. ஏனென்றால் நாங்கள் சிறைக்குச் சொந்தக்காரர்கள்; அடிக்கடி உள்ளே போய்விட்டு போய்விட்டு வருகிறோம். ஆனால் அங்கே நடக்கிற கொள்ளை சாதாரண கொள்ளை கிடையாது. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற கண்காணிப்புக் குழுக்களை இங்கு நியமிக்கவேண்டும். எட்டு ஆண்டு என்பதை நிர்ணயிக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரோடு இந்தப் பணிகளைக் குறித்து கலந்து பேசி அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக கடல் போக்குவரத்துபற்றி அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருந்தாலும், நாகப்பட்டினத்தினுடைய துறைமுகத்தை நீங்கள் விரிவுபடுத்தவேண்டும். அதேபோன்று சென்னை—கன்னியாகுமரி வரையில் இருக்கக்கூடிய கடல் போக்குவரத்துப் பணிகள் குறித்த திட்டங்களையும் உருவாக்கவேண்டும் என்பதையும் கேட்டு, இவ்வளவு நேரம் நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் பொறுமையாக இருந்து அனுபவித்திருக்கிறார்கள். ஏனென்றால், மணி அடித்தார்கள் என்றால், என் இதயத்தில் அடிக்கிற மாதிரி இருக்கிறது. அதனால் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள். ஐந்து நிமிடத்திலே பேசி முடித்துவிடுங்கள். (சிரிப்பு)

பிற்பகல் 6-35

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகளிலே உரையாற்றுகிற ஓர் அரிய வாய்ப்பை நல்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை என்று சொன்னாலே, அதிலே காவிரிப் பிரச்சினை வராத பொதுப் பணித் துறையே இல்லை. எனக்கு முன்னாலே உரையாற்றிய நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, காவிரிப் பிரச்சினையிலே கடந்த ஓராண்டு காலத்திலே, சரியான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திலே இருக்கிற பயிர்கள் வாடி வதங்கி பட்டுப்போனதற்குப் பின்னாலே ஒரு குழுவை அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்துக்கொண்டுபோய், மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்திக்கிற ஒரு நிகழ்ச்சியைச் சடங்காக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஆகவே நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், நம்முடைய அருமை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, மேட்டூர் அணை ஜூன் 1ஆம் தேதி திறக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், குறுவைப்

பயிரினுடைய வயது 90 நாட்களிலிருந்து 100 நாட்கள் என்று விவசாயத் துறையிலே கணக்கிட்டிருக்கிறார்கள். ஜூன் 1ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று சொன்னால், குறுவைப் பயிர் மழையினாலே பாதிக்கப்படாமல் விவசாயிகளுடைய வீட்டிற்கு வந்து சேரும் என்பதற்காக ஜூன் 1ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டும்; அதற்கான நடவடிக்கையிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்போதே முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ இன்னும் 30 நாட்கள்தான் இருக்கின்றன. மே மாதம் முடிந்து ஜூன் மாதம் தொடங்குகிறபோது, காவிரி டெல்டா பாசனத்திலே இருக்கின்ற விவசாயிகள் தங்களுடைய குறுவைப் பயிரை விவசாயம் செய்வதற்காக தங்களை ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றபோது, இனிமேல்தான் டெல்லிக்குப் போக வேண்டும், இனிமேல்தான் கர்நாடகாவோடு பேச வேண்டும் என்கிற காரணத்தை தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்வேன். ஏனென்று சொன்னால், காவிரிப் பிரச்சினை என்பது தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சை மாவட்ட மக்களுடைய, அதன் மூலமாக தமிழகத்தில் இருக்கின்ற மக்களுடைய வயிற்றுப் பிரச்சினை. ஒரு காலத்தில், நிறைய மழை பெய்த காலத்தில், காவிரி டெல்டா பாசனம் மூலம் நெல் விளையவில்லை என்று சொன்னாலும், மற்ற இடங்களிலே விளைகிற நெல்லை வைத்துக்கொண்டு தமிழகத்தினுடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்கிற நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு நீர்வளம் வற்றிப்போன காலத்தில், நீர்வள ஆதாரங்கள் குறைந்து போய் இருக்கின்ற இந்தக் காலத்தில், நாம் கர்நாடகாவிலிருந்து நீரைப் பெற்று, காவிரி டெல்டா பாசனத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஜூன் 1ஆம் தேதி குறுவைப் பயிர் பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப் பணித் துறை என்று சொன்னாலே, பொதுவாகவே இந்தப் புத்தகத்திலேகூட தேதியை மாற்றி, வருடத்தை மாற்றிக்கூட வைத்துக்கொள்ளலாம். வழக்கமாக சேது சமுத்திரத் திட்டம், மேற்கு நோக்கி ஓடுகிற ஆற்றுத் தண்ணீரைத் திருப்பிவிடுகிற திட்டம், கால்வாயை நவீனப்படுத்துகிற திட்டம், இப்படி திட்டம், திட்டம் என்று சொல்லி வருடங்கள் மாறுகிறதே தவிர, எண்ணிக்கை மாறுகிறதே



தவிர, இதிலே ஏதாவது பலன் கிடைத்திருக்கிறதா என்று சொன்னால் இதுவரைக்கும் இல்லை. ஏறத்தாழ என்னுடைய வயதிற்குக்கூடச் சொல்ல முடியும். மேற்கு நோக்கி ஓடுகிற ஆற்றுத் தண்ணீரை நம்முடைய தமிழகத்திற்குத் திருப்பிக்கொண்டு வந்து, நம்முடைய மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைப் பயனடையச் செய்ய வேண்டும் என்று சொல்லி 50, 60 ஆண்டு காலமாக சட்டமன்றங்களிலேயும், வெளியிலேயும் பேசிக் கொண்டிருக்கிறோமே அல்லாமல், இதற்கு ஒரு முன்முயற்சி எடுத்து என்றைக்காவது இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்கிற சூழ்நிலையை எந்த அரசாங்கமும் செய்யவில்லை என்பதை ஒரு விவசாயி என்கிற வகையிலே நான் வருத்தத்தோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு முழு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு இந்தப் புத்தகத்திலே வந்திருக்கிறது. சென்ற ஆண்டும் இதேபோல வந்தது. அடுத்த ஆண்டும் இதேபோல வரும் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கக்கூடாது என நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, காவிரியிலே ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலே வடகிழக்குப் பருவ மழை பெய்கிற காலத்தில் காவிரி பெருக்கெடுத்து ஓடுகிறது. காவிரி பெருக்கெடுத்து ஓடி அந்த நீர் கடலிலே வீணாகச் சென்று கலக்கிறது. அவர்கள் சொன்னதைப்போல, ஜூன் மாதத்திலே தண்ணீர் இல்லை என்கிற நிலைமை. ஆனால் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களிலே தண்ணீர் மிக அதிகமாக வந்து பயிர்கள் பாழாகின்ற ஒரு நிலைமை. இவை இரண்டையும் சிந்தித்துப் பார்த்து, ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி திட்டம் தீட்ட வேண்டும் என நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரியிலே வீணாகிற 10 டி.எம்.சி. நீரை எங்களுடைய மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கொள்ளிடத்திலே அந்த மூன்று மாதங்களிலே வீணாகிற நீரை 135 கோடி ரூபாயிலே தயாரிக்கப்பட்டிருக்கிற ஒரு திட்டத்தின் வாயிலாக எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற அத்துணை தாலுகாக்களும், அத்துணை

தொகுதிகளும் பாசனம் பெறுகின்ற அளவுக்குச் செய்கின்ற ஒரு திட்டம், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலே தீட்டப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்ட மக்கள்மீது மிகவும் அன்பு கொண்டவர். எங்கள் மீதும் மிகவும் அன்பு கொண்டவர். ஆகவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறிய தொகையான 135 கோடியிலே தீட்டப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தை அவர்களுடைய மனதிலே ஏற்றி 1¼ இலட்சம் ஏக்கருக்கு பாசன வசதி தருகின்ற அந்தத் திட்டத்தை செயலாக்கித் தரவேண்டுமென நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6-40*

அதேபோல புதுக்கோட்டை மாவட்டத்திலேயே என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலே இருக்கின்ற ஒரு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 7 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். என்னுடைய அறந்தாங்கி தொகுதிதான் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலே இருக்கின்ற பகுதியாகும். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்ததற்குப் பின்னாலே, எங்களை தஞ்சாவூரிலேயும் சேர்க்கமாட்டேன் என்று சொல்கிறார்கள், புதுக்கோட்டை மாவட்டத்திலேயும் எங்களை சரியாக கவனிக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். நான் பணிவன்போடு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், எங்களை தஞ்சாவூரிலே வைத்து, நீங்கள் தஞ்சை மாவட்டத்திற்கு எவ்வளவு சலுகைகளை செய்கின்றீர்களோ அந்தச் சலுகையை எங்களுடைய பகுதிக்கும் என்னுடைய தொகுதிக்கும் செய்து தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.

எங்களுடைய கோரிக்கையின் பேரிலும், ஆலங்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம் அவர்களுடைய கோரிக்கையின் பேரிலும், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூன்று



கோடி ரூபாயிலே சிறப்புத் திட்டத்தைத் தீட்டி, நம்முடைய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு செயல்படுத்தித் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு நல்ல திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். நம்முடைய பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொன்னது போல, 25 ஆண்டு காலமாக Marketing Complex, NREP, RLEGP, RR என்கிற திட்டங்களிலே ஒன்றியச் சாலைகளையெல்லாம் எடுத்து தார்ச் சாலைகளாக மாற்றியிருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்தை மாற்றியிருக்கின்றார்கள். அவ்வாறு மாற்றியதற்குப் பின்னாலே அவை நெடுஞ்சாலைத் துறையினிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. நெடுஞ்சாலைத் துறையும் எடுத்துக்கொள்ளவில்லை. 15 ஆண்டு காலத்திற்கு முன்னாலே செய்யப்பட்ட அந்தச் சாலைகள், 20 ஆண்டு காலத்திற்கு முன்னாலே Marketing Complex என்ற திட்டத்திலே செய்யப்பட்ட அந்தச் சாலைகள், 10 ஆண்டு காலத்திற்கு முன்னாலே RLEGP என்ற திட்டத்திலே செய்யப்பட்ட அந்தச் சாலைகள், Maintenance, Repairs என்று பழுது பார்க்கப்படாமல் உள்ளதால் போக்குவரத்துக்கு மிக இடையூறாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், எந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு சாலை, தார்ச் சாலையானாலும், தார்ச் சாலையான உடனே அது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்புக்கு உட்பட்டு வரவேண்டுமென்கிற உத்தரவினை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் செயலாக்க வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதைப்போல திருச்சி-புதுக்கோட்டை சாலை, இப்போது தேசிய நெடுஞ்சாலையாக ஆகியிருக்கிறது. பல்வேறு பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இராமேஸ்வரத்திற்கு சேலத்திலேயிருந்து செல்கிறவர்கள், தருமபுரியிலேயிருந்து செல்பவர்கள், நாமக்கல்லிலேயிருந்து செல்பவர்கள், திருச்சிக்கு அந்தப் பக்கத்திலேயிருந்து செல்கிறவர்கள் எல்லாம் புதுக்கோட்டை, திருமயம், காரைக்குடி வழியாகத்தான் இராமேஸ்வரம் புண்ணியத் தலத்திற்குச் சென்றாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு குறுக்குப் பாதை அந்தப் பாதை. அந்தப் பாதையிலே இரண்டு Railway Gates இருக்கின்றன.

[திரு. ப. அரசன்] [2002 ஏப்ரல் 29

அவற்றிலே இரயில்வே மேம்பாலங்கள் அமைத்துத் தரவேண்டுமென நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல புதுக்கோட்டையிலிருந்து இராமநாதபுரம் செல்கின்றவர்கள் அல்லது திருச்சியிலிருந்து காரைக்குடி செல்கின்றவர்கள். புதுக்கோட்டை நகருக்குள் வராத அளவிற்கு ஒரு சுற்றுச் சாலை by-pass road அந்தப் பகுதியிலே அமைத்துத் தரவேண்டுமென நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் மற்றும் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம், ஏற்கெனவே நான் சொன்னதைப் போல, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே எப்படி வருடங்கள், எண்ணிக்கைகள் மாறி வருகின்றனவோ அதைப்போல, நெடுஞ்சாலைத் துறையிலேயும் இந்த இரண்டு திட்டங்களும் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்டு எங்களுக்கெல்லாம் தரப்படுகின்றது. ஆனால் இந்தத் திட்டங்கள் குறித்து எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்பதை நான் மிக வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடம். இந்த நாட்டினுடைய பொருளாதாரம் கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டத்திலேயும். சேது சமுத்திரத் திட்டத்திலேயும் இருக்கின்றது என்பதையும், நம்முடைய தமிழகத்தினுடைய பொருளாதாரம் மிக உன்னதமான பொருளாதாரமாக வரவண்டுமென்று சொன்னால், இந்த இரண்டு திட்டங்களையும் சிறந்த முறையிலே செயலாக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினையையெல்லாம் நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே எழுத்து மூலமாகத் தந்துவிடுகிறேன். நிச்சயமாக அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு.

பிற்பகல் 6-45

அடுத்து ஒன்று. Bar இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய நோக்கம். ஏற்கெனவே கொஞ்சம் பயந்து குடித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இப்படி பயத்தைத் தெளிய வைத்து, அரை குடிமகனாக இருப்பவர்களை முழு குடிமகனாக ஆக்குகிறீர்கள். தயவுசெய்து bar இல்லாமல் இருக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இதிலிருந்து வருகின்ற வருமானம் வெறும் 84 கோடி ரூபாய்தான். 24,000, 25,000, 30,000 கோடி ரூபாயைப் போடுகின்ற ஒரு நிதிநிலை அறிக்கையில்



2002 ஏப்ரல் 29] [திரு. ப. அரசன்]

84 கோடி ரூபாய் என்பது ஒரு பெரிய தொகையல்ல. ஆகவே bar இல்லாமல் செய்ய வேண்டும். அப்படி bar கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று சொன்னால், கிராமத்திலே இருக்கின்ற மக்கள் என்ன பாவம் செய்தார்கள். நகரத்திலே இருக்கிறது. கார்ப்பரேஷனிலே இருக்கிறது. பேரூராட்சியிலே இருக்கிறது. கிராமத்திலே இருக்கிற கடையிலே இதிலே 50,000 ரூபாயை Licence fees-ஆகப் பெற்றுக்கொண்டு அங்கேயே bar-களைத் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Bar பற்றிப் பேசுவதால் குழப்பமாக இருக்கிறதா?

**திரு. ப. அரசன்:** கள்ளச் சாராயம் தமிழகத்திலே நிறைய இருக்கிறது என்று பத்திரிகையிலே எல்லாம் வருகிறது. நம்முடைய நண்பர் லோகு அவர்கள் மிகச் சிறப்பாக போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மயிலம் காவல் சரகத்திலேயும் பெரிய தச்சநல்லூர் காவல் சரகத்திலேயும் ஊர்மக்களே சாராயம் காய்ச்சுவதற்கு ஏலம் விட்டு அங்கே சாராயக் கடைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு தினமலர் பத்திரிகையிலே நான் பார்த்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே அனுமதி பெற்று விட்டேன். நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால் நம்முடைய குடிமக்களை குடி மக்களாக இல்லாத அளவுக்குச் செய்ய மதுவிலக்குப் பிரசாரம் எல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மனிதன் மதுவிலக்கிலே இருந்து...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன பாரதிய ஜனதாவினுடைய கொள்கையா? மாண்புமிகு உறுப்பினர் கிராமத்திற்கு ஒரு bar வேண்டுமென்று கேட்கிறாரே, பாரதிய ஜனதா கட்சியினுடைய கொள்கையா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**திரு. ப. அரசன்:** தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே எந்த அரசியல் கட்சிக்கும் கொள்கையே கிடையாது. ஆகவே, bar-களை (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** தான் சார்ந்திருக்கும் கட்சிக்கு கொள்கையே இல்லையென்று ஒத்துக் கொண்டதற்கு நன்றி! (சிரிப்பு)

**திரு. ப. அரசன் :** நம்முடைய அரசியல் கட்சிகளுக்கு ஒரு கொள்கை இருக்கிறது. எப்படியாவது ஆட்சியைப் பிடிப்பது என்பது. ஆகவே இந்தப் பகுதியிலே எல்லாம் எப்படி சாராயம் ஊர் மூலம் ஏலம் விட்டு செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரணை செய்து இவற்றைத் தடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் திடீரென்று பத்திரிகையிலே வரும், விஷச் சாராயத்திற்கு 100 பேர் இறந்து போனார்கள், 50 பேர் இறந்து போனார்கள் என்று. ஆகவே இதில் கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது பதிலுரையை அளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 8 பேர் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை மற்றும் உள் துறை—சிறைச்சாலைகள் ஆகிய துறைகளின்கீழ் தங்களுடைய மேலான கருத்துகளையும் சிலபல விளக்கங்களையும் தங்களுடைய பேச்சிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்க அனைத்துத் துறைகளிலும்—எடுக்கின்ற நல்ல நோக்கோடு தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட தினத்திலிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் அத்தனைத் துறைகளிலும்-தீவிரமான கவனம் செலுத்தி கடந்த காலத்தில் அத்தனை துறைகளிலும் ஏற்பட்டுவிட்ட பின்னடைவினையும், கடந்த காலத்தில் ஏற்பட்டுவிட்ட நிருவாகச் சீர்கேடுகளையும் களைந்து பொருளாதார மறுமலர்ச்சி நாட்டில் ஏற்படுவதற்கும், அத்தனை துறைகளிலும் தமிழகம் முன்னோடி மாநிலமாக அமைவதற்கும் இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற அம்மா அவர்களுடைய சாதனையை இந்த நேரத்திலே சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் நான் பொறுப்பேற்றிருக்கின்ற துறைகளின் மீது பல்வேறு அரிய கருத்துகளையும், எதிர்காலத்தில் அரசினுடைய நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதற்கு பல நல்ல யோசனைகளையும் எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் நன்றி



சொல்லிக்கொண்டு, முதல் கட்டமாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றி சில குறிப்புகளை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 6-50

1976 ஆம் ஆண்டு முதல் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை தனியாகச் செயல்பட்டு வருகிறது. மத்திய நிருவாகச் சீர்திருத்தக் குழு மற்றும் மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படி இத் துறை அமைக்கப்பெற்றது. இதற்குமுன் இத் துறை அரசின் பொதுத் துறையின்கீழ் செயல்பட்டு வந்தது. இதன் நோக்கம், அரசுப் பணியாளர்களுக்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவி செய்வதாகும்.

இத் துறை மூன்று முதல் செயல்பாடுகளைச் செய்து வருகிறது. ஒன்று, அறிவுரைகளை வழங்கும் செயல்பாடு; சட்டப்பூர்வச் செயல்பாடு மற்றும் நிருவாகச் செயல்பாடுகள். பதவி உயர்வு, பணி வரன்முறைப்படுத்துதல், பணியின் முதுநிலை மாற்றியமைத்தல், தகுதிகாண் பருவம் முடித்து உத்தரவிடுதல் முதலிய பல்வேறு பணியாளர்கள் தொடர்புடைய கோப்புகளில் இத் துறை அறிவுரை வழங்குகிறது.

இத் துறையில் 13 விதிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் அனைத்தும் செயலகத் துறைகளில் நிறைவேற்ற இத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இத் துறைக்கு நிருவாகச் செயல்பாடுகள் உண்டு. சட்டம், நிதி மற்றும் சட்டமன்றச் செயலகம் தவிர மற்ற அனைத்துத் துறைகளும் ஓரலகு என்ற முறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு மாநில தீர்ப்பாணையம் ஆகியவற்றுக்கு இத் துறை நிருவாகத் துறையாகச் செயல்பட்டு வருகிறது. நிர்வாகச் சீர்திருத்தத் துறையின்கீழ் கோப்புகளை விரைவாக முடிக்க வேண்டும் என்ற அரசின் ஆர்வத்தைக் கவனத்தில்கொண்டு கோப்புகள் முடிக்கும் வாரம் என்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மனுக்கள் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் முடிவான ஆணை வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் கோப்புகள் முடிக்கும் வாரம் நடத்தி, தேங்கியுள்ள கோப்புகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் சாசனம் தயாரித்து

சட்டமன்றத்தில் வைப்பதற்கும் அரசு இத் துறை மூலம் ஆணையிட்டுள்ளது. உதவிப் பிரிவு அலுவலர், பிரிவு அலுவலர் ஆகிய பதவிகளிலே ஒரே துறையில் பல ஆண்டுகள் பணியாற்றுவதால் வேறு துறைகளின் செயல்பாடுகளை அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுகிறது. எனவே, 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை துறை மாற்றம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நிருவாகச் சீர்திருத்தத்தின் கீழ் கோப்புகளை விரைவாக முடித்து மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழ்நாடு அரசு நிருவாகச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அது பல்வேறு சீர்திருத்தங்களை ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்து வருகிறது. மனிதவள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், அலுவலகத்தை நவீனமாக்குதல், பதவி நிலைகளில் பல்வேறு அதிகாரப் பகிர்வு போன்றவற்றை ஆய்வு செய்து அரசு நடைமுறைப்படுத்த துணை செய்கிறது.

அனைத்துப் பணி விதிகளையும், கணினிமயமாக்கி ஒரு பார்வை வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகள், பார்வை வங்கியில் சேர்க்கப்படுகின்றன. பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணிவிதிகள் போன்றவை தலைமைச் செயலக இணையதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

பிற்பகல் 6-55

சட்டமன்ற வினாக்களுக்கான விவரங்கள் போன்றவையும் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலக கணினியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பல பயனுள்ள விவரங்கள் கணினியில் பதியப்பட்டுள்ளன. இவற்றின் விவரத்தை இங்கே அளித்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே காணலாம்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை இணையதளத்தின் மூலம் பெறுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைக்கேற்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்டர்நெட் மூலம் சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புகளைப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிருவாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் அனைத்தும் உயர் நீதிமன்ற பெஞ்சின் ஆய்வுக்கு உட்பட்டது என்று உச்ச நீதிமன்றம் 1997 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அதற்கு முன்னதாக மாநிலத் தீர்ப்பாயம் தொடங்கப்பட்டபோது அதன் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றம்தான் செல்ல வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் மூன்றடுக்கு



நீதிமன்ற முறை வந்துவிட்டதால் நிருவாகத் தீர்ப்பாயம் தேவையில்லை என்று முடிவு எடுத்து தீர்ப்பாயத்தைக் கலைத்து விடுவதற்கு ஏதுவாக 1985 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப்பாயச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. மேற்படி சட்டத்திற்கு உரிய திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு இத் துறை நிருவாகத் துறையாகச் செயல்பட்டு வருகிறது. அரசுத் துறைகளில் பல்வேறு பணி நியமனங்கள், அரசுப் பணியாளருக்கு வழங்கப்பட்ட தண்டனைக்குரிய மேல் முறையீடு, பல்வேறு சிறப்புப் பணி விதிகளை உருவாக்குதல் மற்றும் அவற்றுக்குரிய திருத்தங்கள் குறித்து செயல்படும். பணியாளருக்குப் பதவி உயர்வு அளிப்பது மற்றும் இதுபோன்ற பணியாளர் தொடர்பான நிகழ்வுகள் குறித்து தேர்வாணையத்தை அரசு கலந்து ஆலோசிக்கிறது.

மாநில விழிப்புப் பணி ஆணையம் 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மாநில நிருவாகப் பிரச்சினைகள்பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குவது, அரசுப் பணியில் ஊழலைத் தடுப்பதற்கு வகை செய்தல் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் தனிப்பட்ட நபர்களின் மீதான ஊழல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவை விழிப்புப் பணி ஆணையத்தின் தலையாய பணிகள் ஆகும்.

துறைத் தலைவர் நிலையில் ஓர் இயக்குநரைக் கொண்டு செயல்பட்டுவரும் ஊழல் தடுப்பு மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநரகத்திற்கு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 165-ஏ-ன்கீழ் கீழ்வரும் குற்றங்களான சதித் திட்டம் அல்லது குற்றம் புரியத் தூண்டுதல் போன்றவற்றை 1988 ஆம் ஆண்டில் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழும் இந்திய குற்ற தண்டனைச் சட்டம் அத்தியாயம் 90-ன்படியும் அமல்படுத்தித் தடுக்க அதிகாரம் உள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற துறைகளான பொதுத் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் தேவைப்படும்?

[2002 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றி சொல்லியாகிவிட்டது. மற்றும் உள் துறை-சிறைச்சாலைகள் ஆகியவற்றுக்கு என்னுடைய பதில் உரையை நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேரம் தேவைப்படும்? நாளை தொடரலாமா? நாளை காலை 10.00 மணி வரை இடைவேளை விட்டுவிடுவோமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைக்கு எனது நன்றியைச் சொல்லி, நாளை என்னுடைய பதிலுரையைத் தொடருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

188. மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை (2001-2002)

189. மானியக் கோரிக்கை எண் 14 — சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

190. சுற்றுச் சூழல் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

191. மானியக் கோரிக்கை எண் 14—2002-2003 ஆம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

192. மானியக் கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

193. மானியக் கோரிக்கை எண் 28—2002-2003 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — சுற்றுலா பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.



2002 ஏப்ரல் 29]

194. மானியக் கோரிக்கை எண் 20 — நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

195. நெடுஞ்சாலைத் துறையின் நிதி நிலை செயலாக்கச் சாதனைகள், 2001-2002 (தமிழ், ஆங்கிலம்)

196. மானியக் கோரிக்கை எண் 20 — 2002-2003 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

197. மானியக் கோரிக்கை எண் 23—உள் துறை — சிறைச்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

198. மானியக் கோரிக்கை எண் 23—2002-2003 ஆம் ஆண்டிற்கான உள் துறை — சிறைச்சாலைகள் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

199. மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

200. பொதுப் பணித் துறையின் திட்டச் சாதனை, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்)

201. மானியக் கோரிக்கை எண் 38—2002-2003 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

202. மானியக் கோரிக்கை எண் 38—2002-2003 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறை - பணிகளின் விவரங்கள் - பொதுப் பணிகள் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

203. வனத் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2002-2003 (தமிழ், ஆங்கிலம்.)

204. மானியக் கோரிக்கை எண் 34— பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்.)

205. மானியக் கோரிக்கை எண் 34—2002-2003 ஆம் ஆண்டிற்கான பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

206. மானியக் கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்.)

207. மானியக் கோரிக்கை எண் 36—2002-2003 ஆம் ஆண்டிற்கான மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

# இணைப்பு I

*(360 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 14, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

**முன்னுரை**

**1.1** எந்தவொரு நாட்டின் நிலைத்தன்மை மற்றும் அதன் வளம், சீரான சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்த வளர்ச்சி தற்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் வருங்கால சந்ததியினரின் நலனைக் காக்கும் வகையில் அமைய வேண்டும். கட்டுப்படுத்த இயலாத மக்கட் தொகைப் பெருக்கம், அதிவேகமான தொழில் மயமாக்கம், நீர், நில, உயிரினச்சூழலைப் பாதுகாப்பதற்கு பெரும் சவாலை ஏற்படுத்தி வருகிறது. பெருகிவரும் மக்கட்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வன வளங்களை மிகையாகப் பயன்படுத்துதல், தரமிழந்த காடுகள் மற்றும் நீர்வளம் குன்றிய வேளாண் நிலங்கள் தோன்ற காரணமாக உள்ளன. அதிவேகமான நகர்ப்புற வளர்ச்சியின் விளைவால், கழிவுநீர் பெருக்கெடுத்து ஓடுதல், குடிசைகளின் பெருக்கம், நன்செய் நிலம் மறைந்து வருதல் ஆகியன நீர் மற்றும் காற்றினை மாசுபடுத்துகிறது. எனவே, சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வளர்ச்சியே தற்போதைய சூழ்நிலைக்கு மிகவும் அவசியமாகும்.

**1.2.** வனம் மற்றும் சுற்றுச்சூழல் அழியாமல் பாதுகாத்து வருவது நம் மாநிலத்தின் தொன்றுதொட்டு வரும் நடைமுறையாகும். இது இயற்கையினை நாம் மதிப்பதற்கு கற்றுக்கொடுத்ததோடு அல்லாமல் உயிரினங்கள் மற்றும் உயிரற்றவைகள் இடையே ஒன்றுக்கொன்று பிணைந்த தொடர்பினை அறிந்து கொள்ள வழிவகை செய்துள்ளது. மனித சமுதாயத்திற்குத் தேவையான உயிர்ச்சூழல் பாதுகாப்பினை அளிப்பதில் அடர்ந்த காடுகள், சுத்தமான நீர், வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பழந்தமிழ்ப் புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ் சுற்றுப்புறச்சூழலின் தன்மையினைப் பாதுகாப்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 48(A) சுற்றுப்புறச் சூழ்நிலை, வனம், வன உயிரினம் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துதல் அரசின் கடமை என்று

அறிவுறுத்துகிறது. வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் மற்றும் அனைத்து உயிர்வாழ் இனங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 51(A)(g) எடுத்துரைக்கிறது.

**1.3.** சுற்றுச்சுழல் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, வாழ்வியல் ஆதார அமைப்புகளைப் பாதுகாத்து மேம்படுத்துதலே இம்மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 15 அம்ச திட்டத்தின் உள்ளடக்கமாகும். இத்திட்டம் அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் நலமான வாழ்விற்கு ஒரு வாய்ப்பினை நல்கும். ஆறுகள் மற்றும் ஏரிகள் மாசுபடுவதைத் தடுத்தல், வனங்களை அழிவிலிருந்து பாதுகாத்தல், தரிசு நிலங்களை மேம்படுத்துதல், திட மற்றும் திரவக்கழிவுகளை மறு சுழற்சி செய்தல் மற்றும் மருத்துவக் கழிவுகளை தக்க முறையில் அகற்றுதல், வாகனங்களின் புகையினை கட்டுப்படுத்தி காற்றின் தன்மையை மேம்படுத்துதல் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட நோக்கங்களுடன் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும் அதனை மேம்படுத்துவதும் வனம் மற்றும் சுற்றுச்சூழல் கொள்கையின் அடிப்படை அம்சமாகத் திகழ்கிறது.

## 2. வனத் துறை

**2.1** வனங்கள், இயற்கை சுற்றுச்சூழலை நிலைப்படுத்தவும், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யவும் இன்றியமையாத மீண்டும் புதுப்பிக்கக்கூடிய இயற்கை வளமாகத் திகழ்கின்றன. இவ்வனங்கள் மண்ணிற்கு உரம் ஊட்டி, புத்துயிர் அளித்து நீரைத் தேக்கும் ஆற்றலைக் கொண்டதாக அமைந்துள்ளன. இது அருகாமையில் உள்ள நிலப் பகுதிகளில் விவசாயத்திற்குப் பயனளித்து வருகிறது. வனமானது உண்மையாகவே விவசாயத்திற்கு வளர்ப்புத் தாயாக விளங்குகிறது. மரங்கள் பூமியிலுள்ள நீரை ஆவியாக்கி காற்று மண்டலத்தில் வெளியிடுவதன் மூலம் நீர்ச்சுழற்சியினை நிலைப்படுத்தும் முக்கிய இணைப்பாக விளங்குகிறது. வனங்கள் நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீர் மற்றும் நில வளத்தினைப் பாதுகாத்து, தட்பவெப்பத்தினைச் சீர்படுத்தி பூமி வெம்மையடையாமலும் வறண்டு போகாமலும் தடுத்து நிறுத்துகின்றன. நமது மாநிலத்தின் வனவளத்தைப் பாதுகாப்பது



அனைத்து நல்நோக்கு மக்களின் கூட்டுப் பொறுப்பாகும். வள ஆதாரங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நிலையான பயன்பாடு, சுற்றுச்சூழல் மாறாத்தன்மையினைப் பாதுகாத்தல், மரபியல் வேறுபாடு ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் வனங்கள் மேலாண்மை செய்யப்படவேண்டும்.

### 2.2 வனங்களின் பரப்பளவு

வனத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 22,865 சதுர கிலோ மீட்டர் வனநிலங்கள் உள்ளன. இது மொத்த நிலப்பரப்பளவில் 17.58 விழுக்காடாகும். இது 1988-ம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உகந்த அளவான 33 விழுக்காட்டிற்கும் மிகவும் குறைவானதாகும். மனிதர்கள் மற்றும் உயிரினத் தலையீடுகளால் ஏறத்தாழ பாதி வனப் பகுதி தரமிழந்து காணப்படுகிறது. பல்வேறு திட்டங்கள் மூலம் தரமிழந்த காடுகளை மீண்டும் வளப்படுத்தவும், வனப் பகுதிகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.3 வனக் கொள்கை

தமிழகத்தின் வனங்கள், தேசிய வனக் கொள்கை, 1988-ன்படி ஆளுமை செய்யப்படுகிறது. இருப்பினும் பெரும்பான்மையான வன மேலாண்மை மாநில அரசின் பொறுப்பிலுள்ளது. தமிழ்நாடு மாநில வனச் சட்டம், 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் வனத் துறையால் செயல்படுத்தப்படுகின்றது. நீதிமன்றங்களினால் வனங்கள் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி வழங்கப்பட்ட பல்வேறு முக்கியத் தீர்ப்புகள் வனக் கொள்கையினைச் சீரிய முறையில் செயலாக்குவதில் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. வனங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் வனப் பரப்பை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாடு, சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல் ஆகியவற்றை அடைவதே 1988-ம் ஆண்டின் தேசிய மற்றும் மாநில வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும். வனங்களிலிருந்து நேரடியான பொருளாதாரப் பலன்களை அடைவது என்பது இந்த முதன்மையான குறிக்கோளுக்குக் கீழ்நிலைப்பட்ட நோக்கமாக அமைந்துள்ளது.

[2002 ஏப்ரல் 29

**2.4. குறிக்கோள்கள்**

தமிழகத்தின் வனங்கள், பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன:—

மாநிலத்தின் வனப் பகுதியையும், மரங்களின் அடர்த்தியையும் அதிகப்படுத்துதல்;

சுற்றுச்சூழலை மீட்டு சுற்றுப்புறத்தின் சமநிலைத் தன்மையினைப் பாதுகாத்தல்;

தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் பயனடையும் வகையில் பல்வேறு வகையான உயரினங்களைப் பாதுகாத்தல்;

வெள்ளப் பெருக்கு, வறட்சி மற்றும் நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதைக் கட்டுப்படுத்த ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் அரிமானத்தைத் தடுத்தல்;

கூட்டு வன நிர்வாக முறையில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான விறகு, கால்நடைத் தீவனம், மரங்களல்லாத வனப் பொருட்கள் மற்றும் சிறுமர அவசியத் தேவைகளை கூடிய அளவு பூர்த்தி செய்தல்;

காப்புக் காடுகளுக்கு வெளிப் பகுதியில், வனப் பொருட்களுக்கு மாறாக வேறு ஆதாரங்களை மேம்படுத்தப்பட்ட வனத் தொழில் நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்தல்;

நுண்ணுயிர்கள், பூச்சிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் வசிக்க உயிரினச் சூழலை மேம்படுத்துதல்;

வனங்களுக்குள் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தொன்றுதொட்டு பெறப்படும் வனப் பொருட்கள் கிடைக்க வழி செய்யவும், அதனை உரிமையாக உபயோகிக்கவும் ஏற்பாடு செய்தல்.

**2.5 செயல்முறை**

கீழே விவரிக்கப்பட்டுள்ள உத்திகளின் அடிப்படையில் முக்கிய குறிக்கோள்களை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 29]

**2.5.1 பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்:**

மத்திய திட்டக் குழுவானது 2007-ல் நாட்டில் வனங்களின் பரப்பினை 25 விழுக்காடுகளாகவும், 2012-ல் அதன் அளவு 33.3 விழுக்காடுகளாகவும் அதிகப்படுத்தப்படவேண்டும் என பரிந்துரைத்துள்ளது. தமிழகத்தின் வனம்/மரத்தின் அளவு 17.58 விழுக்காடாக உள்ளது. மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பளவில் 25 விழுக்காடு பகுதியில் மரங்களின் அளவு/வனங்களை அதிகப்படுத்த காப்புக் காடுகளிலும், அவற்றின் வெளிப்பகுதிகளிலும் மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.5.2. கூட்டு வன நிர்வாகத்தின் மூலம் உயிரின மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலை மீட்டு நிலைப்படுத்துதல்:**

வனங்களை ஒட்டி அமைந்துள்ள சுமார் 3,072 கிராமங்களிலுள்ள கால்நடைகள் மற்றும் மனிதர்களின் அபரிமிதமான பயன்பாடே வனங்கள் தரமிழந்ததற்கு முக்கியக் காரணமாகும். மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் பொருட்டு, கூட்டு வன நிர்வாக முறையில் தரங்குன்றிய வனப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கை உயிரினச்சூழல் மேம்படுத்தப்படும். நமது மாநிலத்தில் ஏறக்குறைய 3,250 சதுர கிலோ மீட்டரில் தரமிழந்த வனங்களின் சுற்றுச்சூழல் மேம்படுத்தி புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

**2.5.3. சிறப்புப் பகுதி நிர்வாகம்:**

எளிதில் மாறக்கூடிய தனித்தன்மை வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி, கடலோர சதுப்புக்காடுகள் மற்றும் கடல் பகுதிகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல் சிறப்புத் திட்டங்களின் மூலம் அவற்றின் தனித்தன்மை மாறாமல் ஒவ்வொரு பகுதியிலும் பாதுகாக்கப்படும்.

**2.5.4. சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் மேலாண்மை:**

தமிழ்நாடு சிறந்த உயிரினப்பரவல்கள் செறிந்துள்ள பகுதியாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் மொத்த வனப் பரப்பில் 2,917 சதுர கிலோ மீட்டர் அல்லது 12.8 விழுக்காடு பகுதியில் ஐந்து தேசிய பூங்காக்கள், ஏழு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பன்னிரண்டு பறவைகள் சரணாலயங்கள் வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. புதிய சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் பாரம்பரிய வனங்களை உருவாக்கி தாவர மற்றும் வன

[2002 ஏப்ரல் 29

உயிரினப் பாதுகாப்பை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உயிரினப்பரவல்களும், இயற்கை வளங்களும், வருங்கால சந்ததியினருக்காக கல்வி மற்றும் பொழுதுபோக்கு அளித்து ஆர்வத்தைத் தூண்டுவதற்காக மேலாண்மை செய்யப்படுகிறது. மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் வன உயிரின நிர்வாகத்தின் கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடளவிற்கு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதிகளில் பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும்.

**2.5.5. *நீர்ப்பிடிப்புப் பகுதி நிர்வாகம்:***

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி குளங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான நீர்ப்பிடிப்பு பகுதிகள் வன நிலங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் வன வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செயல்படுத்துவதால் ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீரோட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டு அதனையடுத்த நிலங்கள் வளம்பெற வகை செய்யப்படுகிறது. இவ்வகையான பணிகளினால் நீர்வளம் பெருகுவதுடன் விவசாயிகள் பொருளாதார ரீதியாகவும் பயனுறுவர்.

**2.5.6. *வனப் பாதுகாப்பு:***

மாநிலத்தின் வன வளங்கள், திருட்டு மர வெட்டுகள், கஞ்சா பயிரிடுதல், தீ விபத்துகள், ஆக்கிரமிப்பு மற்றும் வன உயிரின வேட்டைக்காரர்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகக்கூடியதாக இருக்கிறது. மாநிலத்தின் விலை மதிப்பற்ற வனச் சொத்துக்களான சந்தன மரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப் பொருட்கள் அழிவதிலிருந்து தடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு நவீன ரக துப்பாக்கிகள், வாகனங்கள், கம்பியில்லா தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்குவதன் மூலமாகவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வன வளங்களைத்



2002 ஏப்ரல் 29]

தொடர்ந்து பாதுகாக்க வன உள்கட்டமைப்பு வசதிகள் மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது.

வனங்களுக்கு அருகாமையிலுள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் செய்யப்படும் வனநில ஆக்கிரமிப்பு வன நிர்வாகத்திற்கு மிகுந்த பிரச்சினையாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வனத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**2.5.7. *உற்பத்தி வனவியல்:***

தொழிற்சாலைகள் மற்றும் மக்களின் வீட்டுத் தேவைக்கு ‘தடிமரம்’ ஓர் முக்கிய வனப் பொருளாகும். முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட தேவைக்கு அதிகமான தடிமரங்கள் உபயோகப்படுத்தப்பட்டதாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும், வனங்களில் இதன் இருப்பு குறைந்துள்ளது. உள்ளூர் மக்களின் தடிமர வனப் பொருட்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முதல் தரம் மற்றும் இரண்டாம் தர தடிமரங்களை வன நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், குளக்கரைகள் மற்றும் தனியார் நிலங்களில் மக்களின் உதவியுடன் மரம் நடும் பணிகளை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.5.8. *பழங்குடியினர் மேம்பாட்டிற்கான வனவியல்:***

பழங்குடியினர் வனச்சூழல் அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாவர். இவர்களின் பொருளாதார நிலை வன வளங்களைச் சார்ந்துள்ளது. பழங்குடியினர் தொடர்ந்து நிலையான பயன்களைப் பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளிலும், மரவகை மற்றும் தாவர வகைகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பினை உருவாக்குதல், கிராமப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கல்வி ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

**2.5.9. *வன விரிவாக்கம்:***

கிராம மக்களின் விறகு, தீவனம் மற்றும் இதர தேவைகளுக்காக வனத்தினை சார்ந்திருப்பதைத் தவிர்க்கவும், மொத்தத்தில் பூமியில்

[2002 ஏப்ரல் 29

பசுமைப் பரப்பளவினை விரிவாக்கவும் வன விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் விரிவாக்க வனவியல் மூலம் மரம் வளர்த்தலின் அறிவுத்திறன் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை பரவலாக்கப்படும். பட்டா நிலங்களில் வன விரிவாக்கம் மூலம் சிறு • மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்கள் இடத்திற்கேற்ப தகுந்த வேளாண் காடுகளை குறைந்த செலவில் உற்பத்திச் செய்ய உதவுவதன் மூலம் ஊரக வளர்ச்சிக்கு வன விரிவாக்கம் ஒரு கருவியாக செயல்படும்.

**2.5.10.** *சமூக வனவியல்:*

இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தின் பசுமைப்பகுதியினை அதிகரிக்க தனியார் மற்றும் சமுதாய நிலங்களில் மர வகைகள் நடும் பணி மேற்கொள்ளப்படும். மேலும் இத்திட்டம் மரம் வளர்க்கும் ஆர்வமுள்ள தனிநபர்/நிறுவன நில உரிமையாளர்கள் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். வன வளர்ப்புப் பணிகளை மிகவும் பாதிக்கும் உபயோகமற்ற கால்நடைகளை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களை விட்டு அகற்ற விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

**2.6. முக்கிய பகுதிகள்.**

**2.6.1.** *வன ஆராய்ச்சி:*

உயிரினப்பரவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பல்வேறு வகையான உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல் மற்றும் பல்வேறு உயிரினங்களின் இயக்க ஆற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன மரபியல் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய மர வகைகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்கள், தண்டுகள், மரஇழை தரவல்ல மரங்கள், இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் தடிமரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்திச் செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வன ஆராய்ச்சித் துறையின் மூலம் வீரிய விதைப் பண்ணைகளில் அதிகமாகப் பயன்தரும் கீழ்க்காணும் விதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. சந்தனம், சவுக்கு, யூகலிப்டஸ், புளி, மூங்கில், தடிமரம், இழைமரம், மரஇழை தரவல்ல உற்பத்தித் திறனுள்ள



2002 ஏப்ரல் 29]

மர இனங்கள் மற்றும் எண்ணெய் தரும் மரஇனங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆராய்ச்சி மூலம் சிறப்பான பங்களிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு மரபணுத் தோட்டம் உள்ளது. இத்தோட்டத்தில் அரிதான 4,000 தாவர வகைகள் உள்ளன. அவற்றில் 1,000 தாவர வகைகளை சேகரித்து தோட்டமாக அமைத்து பாதுகாக்க தமிழக வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு இவ்வாண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மரச் சாமான்களின் உற்பத்திக்கு இதுவரை பயன்படுத்தப்படாத மர வகைகளைப் பதப்படுத்தி வீட்டிற்குத் தேவையான மரச்சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தும் வகையில் அறுவடைக்குப்பின் பின்னேர்த்தி செய்யும் தொழில் நுட்பத்தினைத் தமிழக வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**2.6.2.** *மனித வள மேம்பாடு:*

வனத் துறை மாநிலத்தின் பழமையான துறைகளுள் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் திறமை மற்றும் தொழில் நுட்பம் வாய்ந்த மனித வளத்தின் மூலம், மாநிலத்தின் வனப் பாதுகாப்பு, வன வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு தனது முக்கிய பங்களிப்பினை அளித்துள்ளது. இத்திறன் தகுந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் மேலும் மேம்படுத்தப்படும். 2001-2002 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் தென்னக வனச் சரகர் கல்லூரியில் 95 வனச் சரகர்கள், வைகை அணை தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் 202 வனவர்கள் மற்றும் 198 வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**2.6.3.** *மகளிர் பங்கேற்பு:*

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள் குடும்பப் பாதுகாப்பைத் தங்களது முக்கியப் பணியாக மேற்கொண்டுள்ளதால் குடும்பத் தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடை தீவனம், நீர் எடுத்தல் போன்ற அன்றாடப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வன வளங்கள் நலிவடைவது அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. ஆதலால், வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள ஏழ்மை நிலையிலுள்ள பெண்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப்பற்றி முடிவெடுப்பதில் சமமான பங்கேற்று அவற்றை மேலாண்மை செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

[2002 ஏப்ரல் 29

**2.6.4.** வேலை வாய்ப்பு உருவாக்குதல்:

வனநிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 75 விழுக்காடு, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கென செலவிடப்படுகிறது. வனங்களை அடுத்து வாழும் கிராம மக்களின் வேலைத் திறனை அறிந்து உள்ளூர் மக்கள் பங்கேற்று பயன்பெறும் வண்ணம் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடன் கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற நிலைகள் வலுப்படுத்தப்படும்.

**2-7-2001-2002** ஆம் ஆண்டு சாதனைகள்:

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்:** 2001-2002ஆம் ஆண்டு ரூ.98.28 கோடி செலவில் 75,250 ஹெக்டர் நிலப் பரப்பளவில் தோட்டங்கள் வளர்த்தும், 300 கிலோமீட்டர் நீளத்தில் நீள்வரிசைத் தோட்டங்கள் உருவாக்கியும் மற்றும் 200 கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்தும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 200 கிராம வனக் குழுக்கள் மற்றும் 351 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 5085 பெண்கள் பயனுற்றுள்ளனர். 82.23 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம்:** 1994-95 முதல் 2001 வரை உலக வங்கி உதவியுடன் இத்திட்டம் நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தை ஒட்டி அமைந்துள்ள கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-12-2001 வரை மொத்தம் ரூ.1084.17 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

வனத் துறையில் வருவாயினை அதிகரிக்க சீரான இடைவெளிகளில் சந்தன மர ஏலம் நடத்தப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டில் 890 மெட்ரிக் டன் சந்தன மரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. வனத்திற்கு வெளியே குறிப்பாக மழை வளங்குறைவான பகுதிகளிலும், தரிசு நிலங்களிலும், மரங்களை வளர்க்கும் பணியினை மேற்கொள்ள 2001-2002ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 20 மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களில் பசுமை வேலி தோட்டங்கள் உருவாக்க அறிவிக்கப்பட்டுள்ளது. 400 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் இத்தோட்டங்களை உருவாக்க ரூ.60.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது திருநெல்வேலி, மதுரை,



2002 ஏப்ரல் 29]

திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் மத்திய அரசு உதவித் திட்டமான கடலோர தடுப்புக் காடுகள் திட்டத்தினை செயல்படுத்த ரூ.308.70 லட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 வரை ரூ185.64 இலட்சம் செலவு செய்யப்பட்டு 1000 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் காடு வளர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 16.30 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள ரூ.2.29 கோடி மதிப்புள்ள கஞ்சாப் பயிர்ச் செடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

**2.8. வன வருவாய் மற்றும் செலவுகள்**

**2.8.1.** வருவாய்:

2001-2002 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் ரூ.8890.23 இலட்சங்கள் விவரம் கீழ்வருமாறு:—

| வ. எண் | வருவாய்-இனங்கள் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| அ. | சந்தன மரம் | 6000.00 |
| ஆ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 312.48 |
| இ. | மரங்களல்லாத வனப் பொருட்கள் (சிறுவனப் பொருட்கள்) | 180.00 |
| ஈ. | தடிமரம், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம், வனப் பண்ணைத் தோட்டங்கள் மற்றவைகள் மூலமாக | 2397.75 |
| | மொத்தம் | **8890.23** |

2002-2003 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ.11,018.56 இலட்சங்களாகும்.

[2002 ஏப்ரல் 29

**2.8.2.** *செலவினங்கள்:*

2001-2002 ஆம் ஆண்டில் வனத் திட்டப்பணிகளுக்கான செலவு ரூ.14,946.75 இலட்சங்களாகும். 2001-2002 ஆம் ஆண்டில் திட்டம் சாரா இனங்களுக்கான செலவு ரூ.5,854.30 லட்சங்களாகும். 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டு பல்வேறு திட்டங்களின்கீழ் செலவுத் தொகை பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | 2000-2001ஆம் ஆண்டின் செலவினம் | 2001-2002ஆம் ஆண்டின் செலவினம் |
|---|---|---|
| மாநில வனத் திட்டங்கள் | 13949.04 | 14057.92 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 376.78 | 585.64 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் (50:50) | 347.82 | 209.15 |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் | 135.84 | 94.04 |
| **மொத்தம்** | **14809.48** | **14946.75** |

**2.9. 2002-2003 ஆம் ஆண்டின் முக்கிய திட்டப் பணிகள்-தொடர் திட்டப் பணிகள்.**

**2.9.1 தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட நீட்டிப்பு:**

நமது அரசு ஜப்பான சர்வதேச கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்னும் தனித்தன்மை வாய்ந்த வன வளர்ப்புத் திட்டத்தினை 1994-95 ஆம் ஆண்டு தயார் செய்து 1997-98ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தும் வகையில் தொடங்கியது. இத்திட்ட நடவடிக்கைகள் அனைத்தும் 31-03-2002 உடன் முடிவுற்றது. இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் செயல்படுத்தியதைத் தொடர்ந்து மேலும் இரண்டு ஆண்டுகள் 2002-2003, 2003-2004ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத்



2002 ஏப்ரல் 29]

திட்டத்தை ரூ.172 கோடி செலவில் நடைமுறைப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச கூட்டு வங்கி, கொள்கை ரீதியாக இத்திட்டப் பணிக்கு இரண்டாண்டுகள் நீட்டிப்பு வழங்கியுள்ளது. இவ்வங்கியின் விதிமுறைக்குரிய ஒப்புதலைப்பெற இந்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. திட்டத்தின் முக்கியப் பணிகளாவன:

| வ. எண். | பணிகள் | 2002-2003 |
|---|---|---|
| 1. | எடுத்துக்கொள்ளப்படும் கிராமங்களின் எண்ணிக்கை | 108 |
| 2. | மீட்பு நிலைப்படுத்தப்படும் தரங்குன்றிய காடுகள் | 27,000 ஹெக்டேர்கள் |
| 3. | நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள் | 5,400 ஹெக்டேர்கள் |
| 4. | சமுதாய நிலங்களை பசுமையாக்குதல் | 2,500 ஹெக்டேர்கள் |
| 5. | 2002-2003 ஆம் ஆண்டின் திட்ட கிராமங்களில் இடைதாங்கு மண்டலப் பணிகள் | 108 கிராமங்கள் |
| 6. | 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டு திட்ட கிராமங்களில் இடைதாங்கு மண்டலப்பணிகள் | 400 கிராமங்கள். |

இவை தவிர 2002-2003 ஆம் ஆண்டில் பழைய தோட்டங்களைப் பராமரித்தல், மனித வளத்தினை உயிரினப் பாதுகாப்பிற்கு விரிவாக்குதல்; வாகனங்கள் மற்றும் கருவிகள், நிர்வாகம், வெளிநாட்டில் பயிற்சி போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.82.99 கோடிகளாகும்.

**2.9.2 வன உயிரினத் திட்டங்கள்:**

தமிழகத்தின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலுள்ள தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு வன உயிரினத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்வாழ் காப்பிடங்களில் உயிரினச்சூழலை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வன உயிரினக் கணக்கெடுப்பு, கல்வி விழிப்புணர்வு முகாம், பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல், வேட்டையாடுதல் தடுப்பு முகாம்கள்

நடத்துதல், தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கிராமப்புற மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல், மருத்துவ முகாம்கள், விளம்பரப் பலகைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இந்தியாவிலேயே மிகப்பெரிய மற்றும் நவீன. அறிவியல் தொழில் நுட்பத்துடன் மேலாண்மை செய்யப்படும் ஓர் உயிரியல் பூங்காவாகும். இப்பூங்காவில் அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், உயிரினச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் பொது மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

2001-2002 ஆம் ஆண்டில் வன உயிரினத் திட்ட செயல்பாட்டிற்கென ரூ.908.59 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.674.27 இலட்சங்கள் வன உயிரினத் திட்ட செயல்பாட்டிற்கென செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.9.3.** மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தர பசுமைப்பரப்பினை விரிவாக்கவும், இயற்கை மீதான உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தவும், காடு வளர்ப்பு, மண்வளப்பாதுகாப்பு மற்றும் இதர பணிகளின் மூலம் காடுகளை பாதுகாத்து, சுற்றுச்சூழலின் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரங்குன்றிய காடுகளில் மரங்களை நடுதல், சோலை, வனங்களைச் சுற்றி கம்பிவேலி நிறுவுதல், நீர்ப்பாதுகாப்புப் பணிகள், வனத்தீயினை தடுக்க தீத்தடுப்புக் கோடுகளை வெட்டுதல், பராமரித்தல், மண்வளப்பாதுகாப்பு மூலம் தரமிழந்த சோலைக்காடுகளை வளமாக்குதல் போன்ற பணிகள், இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.350.56 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.428.21 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**2.9.4.** மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்:

தமிழகத்தின் மொத்த 22,865 சதுர கிலோமீட்டர் வனப்பரப்பில், 5,596 சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பினை மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளடக்கியுள்ளது. வனச்சுற்றுச்சூழல் தரமிழந்து வரும் நிலையைத் தடுக்கவும். தற்போதுள்ள வனங்களையும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனத்தை அதிகமாக்கவும்,





இடைவெளி மர நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறு வனப்பொருட்கள் தோட்ட உற்பத்தி மற்றும் உயிரினங்களுக்காக இயற்கைச் சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் அன்னைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.359.73 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.346.46 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.9.5.** கடலோர தொடர் தடுப்புக்காடுகள் தோட்டங்கள்:

தமிழகத்தின் கடற்கரையோரங்களில் தொடர் தடுப்புக் காடுகள் தோட்டங்கள் திட்டம், புயல் மற்றும் அதிவேகக் காற்றினால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படும் அழிவிலிருந்து பாதுகாக்கவும், கடலோரப் பகுதி கிராம மக்களின் வாழ்க்கைக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஏழை மக்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளித்தல் ஆகியவற்றினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டம் நடப்பாண்டிலேயே ரூ.214.15 இலட்சங்கள் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.9.6.** ஊரக விறகு மரத்தீவன உற்பத்தித் திட்டம்:

தமிழகத்தில் தரமிழந்த வனப்பகுதிகள் மற்றும் அதனையடுத்த நிலங்களிலும் விறகு மர மற்றும் தீவன உற்பத்தியினைப் பெருக்கவும், திட்ட மேலாண்மை, செயலாக்கம், திட்டமிடுதல் ஆகிய பணிகளில் மக்கள் பங்கேற்பினை ஊக்குவித்தல் ஆகியவை இத்திட்டத்தின் பணிகளாகும். 2001-2002 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.131.21 இலட்சங்கள் செலவில் செயலாக்கப்பட்டு வருகிறது. மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.146.20 இலட்சங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.9.7.** காட்டுத்தீ கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை:

தமிழகத்தில் வனங்களில் ஏற்படும் தீயினைக் கட்டுப்படுத்துதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கூட்டு வன நிர்வாக முறையில் ஏற்படுத்தப்பட்ட குழுக்களுக்கு உதவி செய்தல், நீர்ப்பிடிப்புக்குழிகள் ஏற்படுத்துதல், தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குதல், தீத்தடுப்புக் கருவிகள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக, ரூ.77.95 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவியுடன் ரூ10.00 கோடி இத்திட்டத்திற்காக செலவிட திர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.9.8.** *வன ஆராய்ச்சி:*

தமிழகத்தின் வன ஆராய்ச்சிப் பிரிவு, உயிரினப்பரவல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தேவையினை உறுதி செய்தல் மற்றும் உயிரியல் உற்பத்தியினை மேம்படுத்துதல் ஆகியவற்றினை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.140 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் நடப்பு ஆண்டில் ரூ.120.00 இலட்சங்கள் செலவில் தொடரும்.

**2.9.9.** *ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.*

இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினர் பகுதிகளில் தோட்டங்கள் உருவாக்குதல், பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், பழங்குடியினர் பகுதிகளில் சாலைகள் அமைத்தல், சந்தனப் பண்ணைகளில் துறை நடவடிக்கைகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.10. புதிய திட்டங்கள்**

**2.10.1.** *தமிழ்நாடு இயற்கை வள மேம்பாட்டுத் திட்டம்.*

*[தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (நிலை-II)]*

தமிழகத்திலுள்ள காடுகள் பெரும்பாலும், மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தக்காண பீடபூமி ஆகியவைகளில் அடங்கும். அதிகமான மேய்ச்சல், காட்டுத் தீ மற்றும் இவ்வனங்களிலிருந்து தலைச்சுமையால் எடுத்துச் செல்லப்படும் அதிக பாதிப்பினாலும் தொடர்ந்து பெருவாரியான காடுகள் தரங்குன்றிப் போயின. கிராம மக்களின் வறுமையின் காரணமாகவும், தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. 2,50,000 ஹெக்டேர் தரங்குன்றிய காடுகளைச் சார்ந்த 1,000 கிராமங்களை பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II ரூ.779 கோடி நிதி இலக்குடன் "தமிழநாடு இயற்கை வளநிர்வாகத் திட்டம்" என்ற பெயரில் ஐந்தாண்டுகளில் 1000 கிராமங்களில் நடைமுறைப்படுத்த கருத்துரு





தீட்டப்பட்டு, ஜப்பான் பன்னாட்டு உலக வங்கி நிறுவனத்தின் நிதி உதவிக்காக இந்திய அரசின் ஒப்புதலுக்கு தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**2.10.2.** *மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு:*

மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக சுற்றுச்சூழல் நிறுவனம் (GEF) மற்றும் ஐக்கியநாடு சபை வளர்ச்சித் திட்டம் நிதி ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடலோர உயிரினப்பரவல்களைப் பாதுகாத்தல், கடலோரப்பகுதி மேலாண்மையினை நிலைநிறுத்தல் மற்றும் வாழ்வியல் மேம்பாட்டினை விவரித்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 26,735,000 அமெரிக்க டாலருடன் இத்துறையினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளை மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்,

**2.10.3.** *வெளிநாட்டு நிதியுதவிக்காக அனுப்பப்பட்ட திட்டக் கருத்துருக்கள்:*

ரூ.154.58 கோடி வெளிநாட்டு நிதியுதவிக்கான திட்டங்களுக்காக கீழ்க்கண்ட கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டத்தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | உயிரியல் உர உற்பத்தி, மரம் வளர்ப்பு மற்றும் அறுவடைக்குப் பின் தொழில் நுட்பம் முதலிய மாற்றுத் தொழில் நுட்பங்கள் மூலம் தமிழகத்தின் கிராமப்புற மக்களின் மனிதவள மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம். | 20.00 |
| 2. | தடிமர மேலாண்மைத் திட்டம்-ஆற்றுப்படுகைகளில் தேக்கு மரம் வளர்த்தல் | 13.83 |
| 3. | பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல் | 13.78 |
| 4. | தமிழகத்தின் குளக்கரைகள் மற்றும் தரமிழந்த மலைப்பகுதியினை பசுமையாக்குதல் | 100.48 |
| 5. | நாடுகாணி ஜீன்பூல் தோட்டத்தில் உயிரினப் பரவல்களை பாதுகாக்கும் திட்டம் | 6.49 |
| | மொத்தம் .. | **154.58** |

[2002 ஏப்ரல் 29

**2.10.4. ஒருங்கிணைந்த வனவளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தித் திட்டம்:**

ஊரக வளர்ச்சி, உறுதியளிக்கப்பட்ட ஊரக வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் வனப்பாதுகாப்பு ஆகியவற்றிற்கிடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்த மத்திய அரசு இப்பணிகளை ஒரே குடையின் கீழ்கொண்டு வரும் பொருட்டு வன அபிவிருத்தி நிறுவனம் மூலம் செயல்படுத்த திட்டமொன்றினைத் தீட்டியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு உதவி வனவளர்ப்புத் திட்டங்கள் யாவும் வன அபிவிருத்தி நிறுவனம் மூலம், கூட்டு வன நிர்வாக முறையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென வன அபிவிருத்தி நிறுவனங்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.10.5. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்:**

தமிழகத்திலுள்ள பயன்படாத தரிசு நிலங்களை பயன்படும் நிலமாக மாற்றும் குறிக்கோளுடன், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலை, வேலூர், தேனி, சேலம், நாமக்கல், திருச்சி, திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய 11 மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களில், 54 இலட்சங்கள் தரமான மரச்செடிகளை உருவாக்கும் பணி வனத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மரச்செடிகளை உருவாக்குவதற்கும், கரிம உரங்கள் (Organic Fertilizer) மற்றும் நுண்ணுயிர் உரம் உருவாக்குவதற்கும் ரூ.3.62 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.10.6. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:**

பழங்குடியினர் மற்றும் வனங்களிடையே உள்ள தொன்றுதொட்ட பிணைப்புகளை உறுதி செய்யும் வகையில் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று ரூ.70.00 கோடி செலவில் தயார் செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகள் செயல்படுத்தப் படவுள்ள இத்திட்டத்திற்காக நிதி வேண்டி மத்திய அரசின் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட உள்ளது.

**2.11. வன உயிரினச் சரணாலயங்கள்:**

கீழ்க்கண்ட பகுதிகளில் வன உயிரினச் சரணாலயங்கள் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது:



2002 ஏப்ரல் 29]

| வ. எண் | உத்தேசிக்கப்பட்டுள்ள வன உயிரினச் சரணாலயங்களின் பெயர்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | காவேரி வன உயிரினச் சரணாலயம் | தருமபுரி |
| 2. | கிருஷ்ணாபுரம் வன உயிரினச் சரணாலயம் | விழுப்புரம் |
| 3. | சுஜால்குட்டை வன உயிரினச் சரணாலயம் (பவானிசாகர்) | ஈரோடு |
| 4. | கன்னியாகுமரி வன உயிரினச் சரணாலயம் | கன்னியாகுமரி |
| 5. | பிச்சாவரம் மாங்குரோவ் சரணாலயம் | கடலூர் |
| 6. | கோடியக்கரை வன உயிரினச் சரணாலயம் | நாகப்பட்டினம் |
| 7. | கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம் | திண்டுக்கல் |
| 8. | குஞ்சிராமலை வன உயிரினச் சரணாலயம் (போலம்பட்டி) | கோயம்புத்தூர் |
| 9. | நெல்லை வன உயிரினச் சரணாலயம் | திருநெல்வேலி |
| 10. | மேகமலை வன உயிரினச் சரணாலயம் | தேனி |
| 11. | சுசீந்தரம் தேரூர் பறவைகள் சரணாலயம் | கன்னியாகுமரி |

**2.12. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்.**

தொழிற்சாலைகளின் தேவைக்காக கூழ்மரங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் ஆகியவை இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின்கீழ் 71,013 ஹெக்டேர் காப்புக்காடுகள் வனத்துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடியாகும் மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3 கோடியாகும்.

### 2.12.1 சாதனைகள்

2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ஹெக்டேரில்)

| | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 1214 | 1335 |
| முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 1351 | 1332 |
| சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 111 | 132 |

### 2.12.2. கூழ்மர விநியோகம்:

2001-2002 ஆம் ஆண்டில் இக்கழகம் 90,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை அறுவடை செய்துள்ளது. அவ்வாறு அறுவடை செய்த கூழ்மரங்களில் 50,000 மெட்ரிக் டன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கும் 10,000 மெட்ரிக் டன் சேஷசாயி காகித மற்றும் ஆலை நிறுவனத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டது. எஞ்சியுள்ளவற்றை விற்க கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 2.12.3 சந்தன எண்ணெய் தொழிற்சாலை:

2000-2001 ஆம் ஆண்டில் இக்கழகம் 5644 கிலோ கிராம் சந்தன எண்ணெய் மற்றும் பிற இதர பொருட்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தால் 3813.123 கிலோ கிராம் சந்தன எண்ணையும், மற்றும் பிற இதர பொருட்களும் விற்கப்பட்டுள்ளன. சந்தன மரப்பொருட்களின் தரமுத்திரையினை உள்ளூர் மற்றும் உலகச் சந்தைகளில் நிலைநிறுத்தும் தீவிர முயற்சியில் வனத்தோட்டக் கழகம் ஈடுபட்டுள்ளது.

### 2.12.4. 2002-2003 ஆம் ஆண்டின் திட்டங்கள்:

2002-2003 ஆம் ஆண்டில் இக்கழகம் 1650 ஹெக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும் மற்றும் 1000 ஹெக்டேரில் முந்திரித் தோட்டங்களையும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருத்துவச் செடிகளை 15 ஹெக்டேரிலும், மரவகைகளை 11.50 ஹெக்டேர் பரப்பளவிலும் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நுட்பவியல் ஒட்டு மூலம் 100 ஹெக்டேர்



பரப்பளவில் சவுக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் 2000-2001(உள்ளபடி), 2001-2002 (திருத்திய மதிப்பீடு) மற்றும் 2002-2003 ஆம் ஆண்டின் (திட்ட மதிப்பீடு) நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவுகள் | இலாபம்(+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 2000-2001 (உள்ளபடி) | 2143.53 | 2068.50 | (+)75.03 |
| 2001-2002 (திருத்திய மதிப்பீடு) | 1960.54 | 1535.65 | (+)424.59 |
| 2002-2003 (திட்ட மதிப்பீடு) | 3296.52 | 2651.28 | (+)645.24 |

## 2.13. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம், குன்னூர்:-

தற்போதுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது ஏற்கெனவே அரசால் நடத்தப்பட்டு வந்த தேயிலைத் திட்டத்தின் வழித் தோன்றலாகும். இக்கழகம் 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின் கீழ் 22-08-1975-ல் பதிவு செய்யப்பட்டு 01-04-1976-லிருந்து ஒரு கழகமாக செயல்படத் தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து வெளிநாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து, மறுவாழ்வு கொடுப்பதை, இதன் முதல் மற்றும் முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும்.

### 2.13.1. பசுந்தேயிலை உற்பத்தி:

(இலட்சம் கிலோவில்)

| 2000-2001. (உற்பத்தி) | 2001-2002 (உற்பத்தி) | 2002-2003 (மதிப்பீடு) |
|---|---|---|
| 422.83 | 475.00 | 525.00 |

[2002 ஏப்ரல் 29

**2.13.2. பதப்படுத்தப்பட்ட தேயிலை:**

(இலட்சம் கிலோவில்)

| 2000-2001 (உற்பத்தி) | 2001-2002 (உற்பத்தி) | 2002-2003 (மதிப்பீடு) |
|---|---|---|
| 101.35 | 114.00 | 126.00 |

**2.13.3 தொழிலாளர் நலன்:**

இக்கழகம் இதுவரை 2445 குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து 6754 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அதேஅளவு தொழிலாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வேலை வாய்ப்பும் வழங்கி வருகிறது. தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அவர்களின் அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறைகள் மற்றும் விடுப்பு ஊதியம், மகப்பேறு விடுப்புக் கடன்கள், தொழிலாளர் நலநிதி போன்ற நிதிப் பலன்களை வழங்கி வருகின்றது. மேலும், தோட்டப்பகுதிகளில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நவீன வசதிகளைக்கொண்ட இரண்டு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக தொழிலாளர்களின் நலனுக்காகக் கழகம் பள்ளியினை தனியே இயக்கி வருகின்றது.

**2.13.4. வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றிய விவரங்கள்:**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர லாபம் (+) நட்டம்(-) |
|---|---|---|---|
| 2000-2001 (உள்ளபடி) | 5005 | 5573 | (-)568 |
| 2001-2002 (திருத்திய மதிப்பீடு) | 5220 | 5657 | (-)437 |
| 2002-2003 (திட்ட மதிப்பீடு) | 6037 | 6218 | (-)181 |

இக்கழகம், தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிகச் செலவினாலும், தேயிலை இறக்குமதிக் கொள்கை, தாராளமயமாக்கத்தினால் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியினாலும் நட்டத்தில் இயங்கி வருகிறது.



2002 ஏப்ரல் 29]

உற்பத்தித் திறனை பெருக்குவது மற்றும் சிக்கன நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் இக்கழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பினைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.14 அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில்:**

அரசு இரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4279.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள இரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இரப்பர் பயிரிட மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின்கீழ் 20-08-1984 அன்று, அரசு இரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.2 கோடியாகும்.

**2.14.1 உற்பத்தி மற்றும் விற்பனை:**

| வருடம் | இரப்பர் உற்பத்தி அளவு மெட்ரிக் டன்னில்) | விற்பனை (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 2000-2001 (உள்ளபடி) | 2813.00 | 2840.16 | 949.10 |
| 2001-2002 (திருத்திய மதிப்பீடு) | 2934.00 | 3100.00 | 1053.34 |
| 2002-2003 (திட்ட மதிப்பீடு) | 3330.00 | 3374.00 | 1137.29 |

**2.14.2 வருவாய் மற்றும் செலவுகள்:**

(ரூபாய் இலட்சங்களில்)

| வருடம் | இரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவுகள் | லாபம்(+) நட்டம்(-) |
|---|---|---|---|
| 2000-2001 (உள்ளபடி) | 1048.76 | 1584.07 | (-)535.31 |
| 2001-2002 (திருத்திய மதிப்பீடு) | 1112.84 | 1438.35 | (-)325.51 |
| 2002-2003 (திட்ட மதிப்பீடு) | 1194.20 | 1463.51 | (-)269.31 |

அரசு இரப்பர் கழகம், கடந்த சில ஆண்டுகளாக இறக்குமதி செய்யப்பட்ட இரப்பர் மலிவான விலையில் கிடைப்பதால், சந்தையில் ஏற்பட்ட இரப்பர் விலை வீழ்ச்சியால், நிதிநிலை திருப்திகரமாக இல்லாமல் நட்டத்தில் இயங்கி வருகிறது. இக்கழகத்தில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு நிதி நிலைமையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3. சுற்றுச்சூழல் துறை**

3.1. சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது பொருளாதார வளர்ச்சியில் இரண்டறக் கலந்த ஒன்றாகும். சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் சூழல் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தவும், நீடித்து நிலைக்கும் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு இந்த அரசு, மாநிலத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**3.2. சுற்றுச்சூழல் துறையின் நோக்கம்:**

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேம்படுத்தும் பொருட்டு தனியே "சுற்றுச்சூழல் துறை" தமிழக அரசால் 1995-96-ல் உருவாக்கப்பட்டது. இத்துறை, பெரிய திட்டங்களான காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளின் மாசு களைதல், சென்னை நகரின் நீர்வழிகளில் மாசு தடுப்புப்பணிகள் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தவும்-இவையன்றி-தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினால் மேற்கொள்ளப்படாத சுற்றுச்சூழல் குறித்த பிற பணிகளையும் இத்துறை செய்து வருகிறது. இத்துறை 22-03-1996 முதல் சென்னையில் இயங்கி வருகிறது.

**3.3. தொடரப்படும் திட்டங்கள்:**

**3.3.1 தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்.**

(அ) இத்துறை, மத்திய அரசு ஒப்பளித்துள்ள தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில், காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஐந்து நகரங்களில் ரூ.3820 இலட்சங்கள் மொத்த நிதி இலக்கில் 1996-97 முதல் "மாசு தடுப்புப் பணிகளை" செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் காவிரி நதிக்கரை நகரங்களான ஈரோடு, திருச்சி, குமாரபாளையம், பவானி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகியவற்றில் 10 ஆண்டு காலத்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.1230.943 இலட்சங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும்





உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கழிவுநீரை ஆற்றில் கலக்காதவாறு தடுத்து மாற்றுவழிப்படுத்தும் பணிகள் ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், திருச்சி ஆகிய நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்சியில் இரண்டு இடங்களில் இப்பணி முடிவடைந்துள்ளது. குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் 90 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. இதர இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. குறைந்த செலவில் சுகாதார வசதி, ஆற்றங்கரையோரப் பகுதி அபிவிருத்தி, குளிக்கும் வசதி மற்றும் விறகினால் எரிக்கும் மயானம் அமைத்தல் ஆகிய சிறு பணிகளில் 95 விழுக்காடுகள் இந்த 5 நகரங்களில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளினால் முடிக்கப்பட்டுள்ளன.

**3.3.2. சென்னைப் பெருநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்:**

சென்னை நகரத்தின் நீர்வழித்தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி ஓடை, கேப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் மாசுத்தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புகை வழங்கியுள்ளது. மேற்காண் நீர்வழித்தடங்களில் வந்து சேரும் 400-க்கும் மேலான கழிவுநீர் சாக்கடைகளைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் 12 தொழில் நுட்ப கட்டங்களில் மேற்கொள்ளப்படும். மாற்று வழியில் அனுப்பப்படும் கழிவுநீர், இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் 4 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படும். இத்திட்டம் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாக செயல்படுத்தப்படுகின்றது. ரூ.491 கோடிக்கான இந்திய அரசின் மானியத்துடன் ரூ.1700 கோடி செலவில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், நடைமுறையிலுள்ள பிறதுறை திட்டங்களுடன் சேர்த்துச் செயல்படுத்தப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் முடிவுற்றதும் சென்னை நகர நதிநீர் வழிகளின் "சூழலை மீளப்பெறுவது" மட்டுமின்றி நகரவாசிகள் அனைவருக்கும் நலவாழ்வுக்கான சூழல் அமையும்.

[2002 ஏப்ரல் 29

**3.3.3 தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம்-புதிய ஒருங்கிணைந்த திட்டங்கள்.**

(அ) காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மயிலாடுதுறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆற்றுநீரை தூய்மைப்படுத்த மத்திய அரசு ரூ.575.30 கோடிக்கான திட்டத்திற்கு ஏற்பளித்துள்ளது. இதில் 282.15 கோடியினை மத்திய அரசும், மீதமுள்ள தொகை தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மக்கள் பங்களிப்பு மூலம் பெறப்படும். இப்புண்ணிய நதிகளை தூய்மைப்படுத்தி அவற்றை மாசற்றதாக ஆக்கும் வகையில் இத்திட்டத்தில் பாதாள சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், குறைந்த செலவில் சுகாதார அடிப்படைக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்கான பணிகள் அடங்கியுள்ளன.

(ஆ) மதுரை, கும்பகோணம் தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் மயிலாடுதுறை ஆகிய ஐந்து நகரங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை இந்த அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இதில் முதல் இரண்டு நகரங்களில் பணிகள் ஏற்கெனவே முன்னேற்றத்தில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் ஆகியன இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்புகளாகும்.

(இ) மேலும் கடற்கரையில் அமைந்துள்ள கோயில் நகரங்களான இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய நகரங்களில் சுற்றுச்சூழல் மாசினைத் தடுக்க, பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ.9 கோடிக்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**3.3.4. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்:**

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1228 இலட்சம் மதிப்பீட்டில் உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகளை நுண் உயிரக முறையில் தூய்மைப்படுத்தி அவற்றின் சூழலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தி வருகின்றன.



2002 ஏப்ரல் 29]

**3.3.5 சுற்றுச்சூழல் விருதுகள்:**

சுற்றுச்சூழல் குறித்து சிறப்புற பணியாற்றிய தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களை தேர்வு செய்து உலக சுற்றுச்சூழல் தினமான 2002 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாள் "சுற்றுச்சூழல் விருதுகள்" வழங்கப்படவுள்ளன.

**3.4. 2001-2002ம் ஆண்டில் சாதனைகள்:**

14 மாவட்டங்களில் 560 பள்ளிகளில் ரூ.3.50 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, 16 மாவட்டங்களில் ஏற்கெனவே தொடங்கப்பட்ட 700 சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டது. இம்மன்றங்களின் வாயிலாக மரக்கன்றுகள் நடுதல், பள்ளி வளாகத்தை சுத்தப்படுத்துதல், விழிப்புணர்வு பேரணிகள், இயற்கை முகாம், மண் புழு உரக்குழி அமைத்தல், பள்ளி மாணாக்கர்களுக்கு போட்டிகள் நடத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உலக சுற்றுச்சூழல் தினம், உலக ஓசோன் தினம் ஆகியவை சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்களின் பேரார்வத்துடன் கொண்டாடப்பட்டது.

* சுற்றுச்சூழல் குறித்த கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள் நடத்திட தன்னார்வ நிறுவனங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் 12-க்கு ரூ.1.70 லட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டது.

* தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் நிகழ்வுகளைத் தொகுத்து வெளியிடும் பணியினை ரூ.1.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள சுற்றுச்சூழல் கல்வி மையம், திருப்பூருக்கு வழங்கப்பட்டுள்ளது.

* சுற்றுச்சூழல் துறைக்கென தனியே ஒரு "இணையதளம்" அமைக்கும் பணி தேசிய தகவல் மையம், சென்னையிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான வன்பொருட்களை (Hardware) தமிழக மின்னணுக் கழகம், சென்னை ரூ.2.00 இலட்சம் செலவில் வாங்கியுள்ளது.

* சுற்றுச்சூழல் துறையின் நூலகத்திற்கென தொழில்நுட்ப நூல்கள் ரூ.1.00 இலட்சம் செலவில் வாங்கி வலுப்படுத்தப்பட்டுள்ளது.

* தூத்துக்குடி நகரத்தின் "தாங்கும் திறனை" கண்டறியும் பணி ஆறு மாத காலத்தில் ரூ.5.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியினை "வாட்டர் அண்டு பவர்

[2002 ஏப்ரல் 29

கன்சல்டன்ஸி சர்வீஸஸ்'', புதுடெல்லி என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தொழில் மயமாக்குவதால் தூத்துக்குடி நகரத்தின் "தாங்கும் திறன்" கண்டறியப்பட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இப்பணி உதவும்.

**3.5. புதிய திட்டங்கள்:**

**3.5.1 ஆம்பூரில் பாலாற்று நதிநீர் பாதுகாப்புத் திட்டம்:**

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரில் காணப்படும் அதிகமான மொத்த உப்பின் அளவினைக் குறைப்பது கடினமாக உள்ளது. இதற்கு புதுமையான தீர்வாக சுத்திகரிக்கப்பட்ட நகராட்சிக் கழிவுநீருடன் கலந்து உப்பின் அளவை தேவையான அளவு குறைக்கும் பொருட்டு, ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக ஆம்பூர் நகராட்சியில் செயல்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்ட முன்னோடி அறிக்கை, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் மொத்த உப்பின் அளவினைக் குறைத்து, பாலாறு மாசுபடுவதைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், ஆம்பூர் நகர மக்களுக்கு புதைசாக்கடைத் திட்ட வசதியினையும் அளிக்கும். இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடனும் தொழிற்சாலைகள் மற்றும் நகராட்சி நிதி பங்கேற்பின் மூலமாகவும் செயல்படுத்தப்படும்.

**3.5.2. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி:**

சூழலுக்கு உகந்த நகரங்களை உருவாக்கும் முன்மாதிரி திட்டம் காஞ்சிபுரம் நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை, தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி மையம் (NEERI), சென்னை தயாரிக்கும். இதுவன்றி, சுற்றுச்சூழல் குறித்த முக்கிய ஆராய்ச்சித் திட்டங்கள், கருத்துப்பட்டரைகள் ஆகியவற்றுக்கு ஆதரவு அளிக்கப்படும்.

**3.5.3. தேசிய பசுமைப் படை:**

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரிடம் ஏற்படுத்துவதற்காக 30 மாவட்டங்களில் 1260 சுற்றுச்சூழல் மன்றங்கள், இத்துறையால் கல்வி நிறுவனங்கள் மற்றும்



2002 ஏப்ரல் 29]

அரசு சாரா நிறுவனங்கள் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு, அனைத்து 30 மாவட்டங்களிலும் மாநில நிதியின் மூலம் சுற்றுச்சூழல் மன்றங்களைத் தொடங்கி பெருமை கொண்டுள்ளது. இது 2002-2003ஆம் ஆண்டிலும் தொடரப்படும். மாணவர்களிடையிலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வலுப்படுத்தும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 பள்ளிகள் என 3000 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.1000 வீதம் ரூ.30.00 இலட்சம் நிதி உதவி வழங்க மைய அரசு இசைந்துள்ளது. இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும், தலைமைப் பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும். இத்திட்டத்தின் செயல்முறையினை கண்காணிக்க மாநில அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலை சீராக்கும் முகத்தான், மழைநீர் சேமிப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்றவை பள்ளி/கல்லூரி, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படும்.

**3.5.4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் திட்டம்:**

சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் இரண்டு மலைவாழ்விடங்களான உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகியவற்றின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, அரசு சாரா நிறுவனங்கள் மூலம் சுற்றுச்சூழல், விழிப்புணர்வு திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படும். பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகத்தான் உலக சுற்றுச்சூழல் தினம், ஓசோன் தினம், போகிப் பண்டிகை தினம் ஆகியவற்றின்போது விரிவான முறையில் விளம்பரங்கள் அளிக்கப்படுகின்றன.

**3.6. கடற்கரைப் பகுதி மேலாண்மை:**

கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கும் மைய அரசு "கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 1991" வெளியிட்டுள்ளது. இதனை செயல்படுத்துவதற்காக சுற்றுச்சூழல்-வனத் துறைச் செயலரை தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் கொண்ட மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கைகளின்கீழ், பல்வேறு கருத்துருக்கள் இந்தக் குழுமத்தால் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல, அரசு நியமித்துள்ள அனல் மின் திட்டங்களுக்கு

சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக வல்லுநர் குழுவினையும் ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது.

**4. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்**

4.1.1. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 1982-ல் அமைக்கப்பட்டு, மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கீழ்க்காணும் சட்டங்கள் மற்றும் விதிகளைச் செயல்படுத்தி வருகின்றது.

i. 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.

ii. 1991 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1977 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்.

iii. 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.

iv. 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதிச் சட்டம்.

v. 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.

vi. 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.

vii. 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களைத் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

viii. 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

ix. 1999 ஆம் ஆண்டு மறுசுழற்சி பிளாஸ்டிக் தயாரிப்பு மற்றும் பயன்பாடு விதிகள்.

x. 2000 ஆம் ஆண்டு நகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

xi. 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.



4.1.2. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஒசூர், கடலூர் தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. மீதமுள்ள மாவட்டங்களில் புதிய மாவட்ட அலுவலகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4.1.3. சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஒசூர் மற்றும் ஈரோடு ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், மற்றும் மணலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 2 இடங்களில் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

**4.2. மற்ற நிறுவனங்களுடனான தொடர்பு:**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக தொடர்புடைய பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்கிறது. வாரியம், நகர திடக்கழிவு மேலாண்மைக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவி ஆகியவற்றை அளித்து உதவி வருகிறது.

**4.3. தொழிற்சாலை மாசு கண்காணிப்பு:**

எல்லாத் தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்காக தேவையான மாசுத் தடுப்புச் சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் பல்வேறு நெறிமுறைகளை செயல்படுத்த கால முறைதோறும் ஆய்வு செய்கின்றனர். வாரியம், சீரியமுறையில் கண்காணிப்பதற்காக தொழிற்சாலைகளை அவற்றின் மாசுத் தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என பிரிவுகளாக பிரித்துள்ளது.

## 4.4. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை:

4.4.1. வாரியம், கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புறக் காற்று தரம் மற்றும் புகை வெளியேற்ற தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்குமுன் வழங்கப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலை உற்பத்தியை தொடங்கும் முன், தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. வாரியம், இசைவாணை வழங்கும்போது தொழிற்சாலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது.

4.4.2. 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 தொழிற்சாலைகள் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெறவேண்டும். 10-4-1997-இல் வெளியிடப்பட்டுள்ள திருத்தத்தின்படி, குறிப்பிட்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் முன், பொது மக்கள் கேட்புக்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.4.3. 1982 ஆம் ஆண்டு முதல் 31-01-2002 வரை 2,989 இசைவாணையினை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நீர்ச் சட்டத்தின், கீழும் 2,929 இசைவாணையினை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு காற்றுச்சட்டத்தின் கீழும், 19,455 இசைவாணையினை தொழிற்சாலைகள் இயக்குவதற்கு நீர்ச் சட்டத்தின் கீழும், 16,666 இசைவாணையினை தொழிற்சாலைகள் இயக்குவதற்கு காற்றுச் சட்டத்தின் கீழும் வாரியம் வழங்கியுள்ளது.

## 4.5. அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்:

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு ஒரு சிறப்பு கண்காணிப்புப் பிரிவினை வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசுபடுத்தும் 17





வகையான தொழிற்சாலைகளின்கீழ், 175 பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

## 4.6. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்:

4.6.1. கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகளுக்காக 52 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 32 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. மீதமுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகை | உருவாக்கப் பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 23 திட்டங்கள் | 12 திட்டங்கள் |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 27 திட்டங்கள் | 18 திட்டங்கள் |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் | 1 திட்டம் |
| 4 | மருத்துவமனைகள் (பொது நிலையம்) | 1 திட்டம் | 1 திட்டம் |
| | மொத்தம் | 52 திட்டங்கள் | 32 திட்டங்கள் |

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், தமிழக அரசு வழங்கும் திட்ட மதிப்பில் 25 சதவிகிதம் வரையிலான, மாநில அரசு மானியத்தையும், மைய அரசு வழங்கும் திட்ட மதிப்பில் 25 சதவிகிதம் வரையிலான மைய அரசு மானியத்தையும் பெறத் தகுதியுடையன.

4.6.2. வாரியம், இதுவரை 39 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூபாய் 19.63 கோடியினை மாநில அரசிடமிருந்து மானியத் தொகையாகப் பெற்று, அதில் 31-01-2002 வரையிலும் 30 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 15.89 கோடியினை வழங்கியுள்ளது தமிழக அரசு டால்கோ மூலமாக மேலும் 9 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 6.77 கோடியினை மாநில அரசு மானியமாக திட்டமதிப்பில் 25 சதவிகிதம் வரை வழங்கியுள்ளது.

[2002 ஏப்ரல் 29

4.6.3. மைய அரசு இதுவரை ரூபாய் 21.09 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 42 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், டால்கோ மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (ஐ.டி.பி.ஐ.) மூலமாக வழங்கியுள்ளது. வாரியம், இதுவரை ரூபாய் 13.23 கோடியினை மைய அரசு மானியத்தொகையாகப் பெற்று அதில் ரூபாய் 11.39 கோடியினை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. மைய அரசு, ரூபாய் 4.29 கோடியினை டால்கோ மூலமாகவும், ரூபாய் 3.47 கோடியினை ஐ.டி.பி.ஐ. மூலமாகவும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

**4.7. தூய்மையான தொழில் நுட்பங்கள்:**

4.7.1. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன், காஸ்டிக் சோடா, சிமெண்ட், கந்தக அமிலம் மற்றும் பிற கரியமற்ற இரசாயனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மேலும் அனல் மின் நிலையங்கள் மற்றும் வெப்பக் கடினப்படுத்தும் நிலையங்கள் ஆகியன தூய்மையான தொழில் நுட்பத்திற்கு மாறியுள்ளன. கழிவுகளிலிருந்து பொருட்களை மீட்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரிலிருந்து குரோமியத்தையும், இலுமினைடிலிருந்து அமிலத்தையும், உரத் தொழிற்சாலையிலிருந்து அம்மோனியாவினையும் மீட்பு செய்வது அடங்கும். தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றாத நிலையினை அடைவதற்காக, 15 எரிசாராயத் தொழிற்சாலைகளில், 12 எரிசாராயத் தொழிற்சாலைகள், அவற்றின் கழிவுநீரை சர்க்கரைத் தொழிற்சாலைகளின் கழிவு மண்ணுடன் சேர்த்து உயிர் உரமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. இதுபோன்ற நடவடிக்கையினை மற்ற 3 எரிசாராயத் தொழிற்சாலைகளும் எடுக்க உள்ளன. எரிசாராயத் தொழிற்சாலையில் ஏற்படும் துர்வாடை பிரச்சினை உட்பட சுற்றுச்சூழல் மாசினைக் கையாள அது ஒரு பெரிய சாதனை ஆகும். இருக்கின்ற 15 பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகள் தூசியினைக் கட்டுப்படுத்த எலக்டிரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர் மற்றும் பை வடிப்பான்களைப் பொருத்தியுள்ளன. இதுபோன்றே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள், மாசுத் தடுப்பு சாதனங்களை நிறுவியுள்ளது.



2002 ஏப்ரல் 29]

4.7.2. மாசு உருவாவது மற்றும் அதன் பாதிப்பினைக் குறைக்கும் வகையில் தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதில் வாரியம் ஈடுபட்டுள்ளது. இதில் விளக்கத் திட்டமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு கல் உடைக்கும் தொழிற்சாலையில் தூசியினைக் கட்டுப்படுத்தும் மாதிரி அமைப்பும், சேலம் மாவட்டத்தில் ஒரு சவ்வரிசி தொழிற்சாலையில் மாதிரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வாரியம், தேசிய உற்பத்திக் குழுமத்துடன் இணைந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளில் காற்று மாசுத் தடுப்பு சாதனங்களுக்கான, நம்பகமான மற்றும் சிக்கனமான வழிமுறைகளை உருவாக்குவதற்கான திட்டத்தினை ரூபாய் 1.455 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது.

**4.8. அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்:**

4.8.1. அபாயகரமான கழிவுகளின் சேகரித்தல், எடுத்துச் செல்லுதல், சேமித்தல், பெறுதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றல் ஆகியவற்றின் செயல்பாட்டினை வாரியம் திறம்படக் கண்காணித்து வருகின்றது. 31-01-2002 வரை 1,180 தொழிற்சாலைகள், அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி, 1989-இன்கீழ் கண்டறியப்பட்டு 1,168 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியம், அபாயகரமான கழிவுப்பொருட்களைச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்காக 7 இடங்களைத் தெரிவு செய்துள்ளது.

4.8.2. 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளபடி வாரியம், 25 அபாயகரமான இரசாயனப் பொருட்களின் தனிப்பட்ட சேமிப்புக் கிடங்குகளைக் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பினால் 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதிச் சட்டத்தின்கீழ், 104 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன.

**4.9. காற்றுத் தன்மை கண்காணிப்பு:**

4.9.1. காற்றுச் சட்டத்தின்படி தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புற காற்றின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின்கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் வாரியம் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை

கண்காணித்து வருகின்றது. சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புற காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளியில் 5 இடங்களில் சுற்றுப்புற காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது.

4.9.2. முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைக் குழுமங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், மாசு பொருட்களை அளவிட 6 தொடர் காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களை தலா ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி-சென்னை, இராயபுரம்-சென்னை மற்றும் கத்திவாக்கம் - திருவள்ளூர் ஆகிய இடங்களில் அமைத்துள்ளது.

**4.10. வாகனப் புகை கண்காணிப்பு:**

4.10.1. நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் வாயுக்கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப்புகை சோதனை செய்யும் மையங்கள் சென்னை மாநகரில் கிண்டி, அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு 01-05-1992 முதல் செயல்பட்டு வருகின்றன. இவற்றைத்தவிர 105 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப் புகையினை சோதனை செய்ய போக்குவரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், வாரியம் திண்டுக்கல், பழனி, உதகமண்டலம், காட்டேரி, செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.

4.10.2. 2001-2002 ஆம் ஆண்டில் 31-01-2002 வரை 43,305 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 13,174 வாகனங்கள் முதல் ஆய்வில், நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குட்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றில் 2,319 வாகனங்கள் சீரமைப்பு மேற்கொண்ட பிறகும் தரத்திற்குட்படவில்லை. சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் வாகனங்களின் புகை அளவிற்கான சோதனையினை வாரியம் மேற்கொண்டுள்ளது.

4.10.3. புகை அளவினைக் கட்டுப்படுத்த சென்னையில் காரீயம் இல்லாத பெட்ரோல் போன்ற தூய்மையான எரிபொருள்கள், 3 சதவிகித பென்சின் அளவு, குறைந்த சல்பர் உள்ள எரிபொருள்கள்



விநியோகம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாரத் நிலை II தரத்தினை பூர்த்தி செய்யும் பயணிகள் கார்கள் மட்டுமே 01-07-2001-லிருந்து பதிவு செய்யப்படுகின்றன. எல்.பி.ஜி-யினை தூய எரிபொருளாக சென்னையில் அறிமுகம் செய்ய உரிய நிறுவனங்களுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4.11. நீரின் தன்மை கண்காணிப்பு:**

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றிலும் மற்றும் ஆற்றுப் படுகையிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய 3 முக்கிய ஏரிகள் வாரியத்தால் கண்காணிக்கப்படுகின்றன.

**4.12 கடற்கரைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் கண்காணிப்பு:**

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீ. தொலைவிற்கு கடற்கரையைக் கொண்டுள்ளது. அளவிற்கதிகமாக அவற்றை பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் வகையில், ஆறுகள் சேரும் இடம் மற்றும் 7 அதிமுக்கிய இடங்களை கடலோரப் பகுதிகளில் வாரியம் கண்டறிந்துள்ளது. இந்த அதிமுக்கிய இடங்கள், தொடர்ந்து சீரிய முறையில் கண்காணிக்கப்படுகின்றன.,

**4.13 கழிவுகள் மேலாண்மை:**

**4.13.1** *பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை:*

4.13.1.1 மக்கும் தன்மையற்றதாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுவதால் விளையும் அதிக தீமைகளை உணர்ந்து முன்னேறிய நாடுகள் பிளாஸ்டிக் பொருட்களில் சில வகையின் தயாரிப்பை தடைசெய்ததோடு மற்ற வகையின் பயன்பாட்டினையும் கட்டுப்படுத்தியுள்ளன. வாரியம், 1999 ஆம் ஆண்டு மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் பயன்பாடு விதிகளை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் பெரும் மாநகராட்சிகள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட நகராட்சிகள் மற்றும்

[2002 ஏப்ரல் 29

பேரூராட்சிகளில் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கைப்பைகள், தட்டுகள், கோப்பைகள் மற்றும் மெல்லிய மேசை விரிப்புகள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்த மன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

4.13.1.2. அன்றாட வாழ்க்கையில் உபயோகித்து வீசியெறியும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டிற்கு மாறாக வாரியம் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை வெளிப்படுத்தும் ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 03-08-2001 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்ட அளவிலான, 'பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்' என்னும் திட்டம் 15-09-2001 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட அளவில் நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு தலா ரூபாய் 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**4.13.2. மருத்துவ நுண்ணுயிர் கழிவுகள் மேலாண்மை:**

(அ) வாரியம், 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை செயல்படுத்தி வருகிறது. வாரியம், இதுவரை 242 அரசு மருத்துவமனைகளையும், 1,405 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவச் சங்கத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும் உரியகால நடவடிக்கையினை மேற்கொண்டு மருத்துவக் கழிவுகளைக் கையாள பொது அமைப்புகள் ஏற்படுத்த இடம் கண்டறிய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. வாரியம், மருத்துவக் கழிவுகளைக் கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய மருத்துவ சங்க உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது.

(ஆ) மனித உறுப்புகள், திசுக்கள் நீங்கலாக மற்ற மருத்துவக் கழிவுகளை எரிக்கக்கூடாது என வாரியம் கண்டிப்பாக அறிவித்துள்ளது. மருத்துவக் கழிவுகளை வெளியேற்ற அதிக அழுத்த கொதிப்பானைப் (autoclave) பயன்படுத்தியோ அல்லது நிலத்தில் புதைத்தல் முறையிலோ வெளியேற்றுவதை வாரியம் ஊக்குவிக்கிறது. விதிகளை பூர்த்தி செய்வதினை விளக்கும் வகையிலான மாதிரி மருத்துவமனைகள்



2002 ஏப்ரல் 29]

சென்னை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**4.13.3. நகர திடக்கழிவுகள் மேலாண்மை:**

(அ) தமிழகத்தில் சுற்றுலா மற்றும் யாத்திரிகத் தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் மற்றும் குற்றாலம் ஆகிய பகுதிகளுக்கான நகர திடக்கழிவுகள் மேலாண்மைக்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்தளிக்கும் திட்டத்தினை வாரியம் தனது நிதியிலிருந்து ரூபாய் 23.60 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது.

(ஆ) நகர திடக்கழிவுகளைக் கையாள வாரியம் மற்ற சில முனைப்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. பொது மக்களிடையேயும் உள்ளாட்சி நிறுவனங்களிடமும் 2000 ஆம் ஆண்டு நகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் பற்றிய விழிப்புணர்வை வாரியம் ஏற்படுத்தி வருகிறது. அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும், பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் நகர திடக்கழிவுகள் மேலாண்மைக்கான செயல்முறை கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

**4.14 வாரியத்தின் பிற பணிகள்:**

**4.14.1 சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி:**

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில் நுட்பத்தினை வளர்ச்சி செய்யும் பணியில் ஈடுபடும் பொருட்டு, வாரியம் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப்பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு, தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரில் உள்ள கனிம, கரிம, டேனின் ஆகியவற்றைக் குறைப்பதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடன், "நுண்ணுயிரிகளைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வது" பற்றிய ஆய்வறிக்கையினைத் தயாரித்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் மாசுத் தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாட்டு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம் தனது நீர் மேல்வரி நிதியிலிருந்து ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகின்றது. இதுவரை ரூபாய் 45.38 இலட்சம் மதிப்பில் 9 திட்டங்களுக்கு வாரியம் அனுமதியளித்துள்ளது.

[2002 ஏப்ரல் 29

**4.14.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்:**

தொழிற்சாலைப் பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு தேவைக்கேற்ப மாசுத் தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுப்படுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் வாரியம் அமைத்துள்ளது. 1995 டிசம்பர் மாதத்திலிருந்து 31-01-2002 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 141 பயிற்சிகளையும் 3,739 நபர்களுக்கு பயிற்சியினையும் அளித்துள்ளது. மேலும், சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 43 சிறப்புப் பயிற்சிகள், கருத்தரங்குகள், மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சுமார் 15,000 மாணவர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்களுடன் நடத்தியுள்ளது.

**4.14.3. அரசு சாரா அமைப்புகளின் குழு:**

சென்னையில் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு சாரா அமைப்புகளின் குழு, மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் அரசு சாரா அமைப்புகளிடையே ஒரு தொடர்பினையும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் ஓர் அமைப்பாகவும் செயல்படுகிறது.

**4.14.4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு:**

வாரியம், தனது தலைமை அலுவலகத்தில் ஒரு மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், வாகனப்புகை மாசுத் தடுப்பு, ஒலி மாசுத் தடுப்பு, அபாயகரமான கழிவு மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை, மருத்துவக் கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, ஓசோன் மண்டலப் பாதுகாப்பு முதலியவை தொடர்பான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக்காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன.



2002 ஏப்ரல் 29]

**4.15. திட்டங்கள்:**

**4.15.1. பசுமை போர்வைத் திட்டம்:**

நகரப்பகுதிகளில் காற்று மற்றும் ஒலி மாசினைத் தணிப்பதற்காக ஒரு பெரிய பசுமை போர்வைத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் மத்திய அரசின் ரூபாய் 400 இலட்சம் உதவி அடங்கிய ரூ.455.70 இலட்சம் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,94,000 மரக்கன்றுகள் உத்தேசிக்கப்பட்டு 31-03-2001 வரை 2,39,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இந்தத் திட்டமானது அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசின் உதவியோடும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பங்களிப்பான ரூபாய் 25.50 இலட்சம் நிதியுடனும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் பிற அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**4.15.2. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்:**

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டத்தினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதல் கட்டமாக ரூபாய் 6 இலட்சம் மதிப்பில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான மண்டல நிலப்படத் தொகுதி உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 8.25 இலட்சம் மதிப்பில் தூத்துக்குடி, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மண்டல நிலப்படத் தொகுதி உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு சென்னைக்கான நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை பரிசீலனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

**4.16. அயல்நாட்டு உதவித் திட்டங்கள்:**

(1) வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் உபயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் வாரியம் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு 1,80,100 அமெரிக்க டாலர் (சுமார் ரூபாய் 81 இலட்சம்) ஆகும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

(2) இத்தாலி மற்றும் ஸ்பெயின் நகர நிறுவனங்களின் பங்கேற்புடன் வாரியம், ஆசிய நகரங்கள் உயிரனச்சூழல் திட்டத்தினை வேலூர் மாவட்டம் மற்றும் சென்னையில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 4,95,040 யூரோ (சுமார் ரூபாய் 214 இலட்சம்) ஆகும். தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் நகர திடக்கழிவுகளைப்பற்றி தொழில்நுட்ப மற்றும் அனுபவ பரிமாற்றங்களை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தின் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(3) கனடா பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன், திருப்பூர், ஒரத்தப்பாளையம் அணை மற்றும் அணைக்கு அருகாமையில் உள்ள கிராமங்கள் ஆகிய இடங்களில் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான தூய தொழில்நுட்ப மேம்பாடு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**4.17. பசுமை விருதுகள்:**

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினை தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு பசுமை விருதுகளை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் தங்களது தனி ஆர்வப்பங்களிப்பாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு இவ்விருது வழங்கப்படும்.



2002 ஏப்ரல் 29]

## இணைப்பு II

*(366 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

நமது நாட்டின் சமுதாயப் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு மிக முக்கியமானது. அந்நியச் செலாவணி ஈட்டும் முக்கிய ஆதாரங்களில் சுற்றுலாவும் ஒன்று. சுற்றுலாத் தலங்களில் உள்ள அடிப்படை வசதிகளை மேலும் அதிகப்படுத்துவதன் மூலம் சுற்றுலாவை வளர்ப்பது மட்டுமல்லாமல், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உதவி செய்யவும் முடிகிறது. சுற்றுலாவின் வளர்ச்சியால் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் குடி பெயர்ந்து செல்வதும் தடுக்கப்படுகிறது. அதனால் நகர்ப்புறங்களில் பெருமளவில் குடிசைப் பகுதிகள் உருவாகும் நிலையும் தடுக்கப்படுகிறது.

வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் கண்கவரும் மலைகள், கடற்கரைகள், வனவிலங்குச் சரணாலயங்கள், காலத்தால் அழியாத கோயில்கள், பழமையான தொல்பொருள் சின்னங்கள், பல்வேறு மதத்தினரும் வணங்கும் வழிபாட்டுத் தலங்கள், கலை மற்றும் பண்பாடு வளர்க்கும் மையங்கள் ஆகியவை மட்டுமின்றி, தமிழருக்கே உரித்தான பல சிறப்பிடங்கள் உள்ளன. தமிழ்நாடு அரசு, பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளும் எதிர்நோக்கும் பல வசதிகளைச் சுற்றுலாத் தலங்களில் உருவாக்கியும் மேம்படுத்தியும் வருகிறது. அத்துடன் புதிய சுற்றுலாத் தலங்களில் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான குறிக்கோள்:**

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான குறிக்கோள்கள்:—

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான குறிக்கோள்கள்:—

(1) சுற்றுலாப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்துதல்.

(2) உள்ளூர் சுற்றுலாப் பகுதிகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு, அத்துடன் புதிய சுற்றுலாப் பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துதல்.

[2002 ஏப்ரல் 29

(3) விளம்பரத்திற்கான புதிய உத்திகளை மேற்கொண்டு, திரைப்படங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெப்சைட், இண்டர்நெட் மற்றும் ஆன்லைன் மூலம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சுற்றுலா பற்றிய விவரங்களை விளம்பரப்படுத்துதல்.

(4) பிற மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றுலாப் பகுதிகளில் பொழுதுபோக்கு மற்றும் சாகச விளையாட்டுகளை ஏற்படுத்துதல்.

(5) தங்கும் வசதி, பொழுதுபோக்கு பூங்காக்கள், தீம் பார்க் மற்றும் சுற்றுலாப்பயண ஏற்பாடுகள் முதலியவற்றில் முதலீடு செய்யுமாறு தனியார் துறையினை ஊக்கப்படுத்துதல். (இது தொடர்பாக மாநில அரசு ஊக்கத் தொகையினையும் வழங்கி வருகிறது.)

(6) தமிழ்நாட்டிலும் மற்றும் பிற பகுதிகளிலும் விழாக்கள் மற்றும் கண்காட்சிகளை நடத்துதல்.

(7) சுற்றுலா வளர்ச்சியை துரிதப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், மற்றும் வெளிநாட்டிலும் விற்பனை முகவர்களை நியமித்தல்.

(8) அண்டை மாநிலங்களை உள்ளடக்கிய பயணத்திட்டங்களை அதிகமாக உருவாக்குதல்.

(9) கடற்கரைச் சுற்றுலாவை ஊக்கப்படுத்தி கடற்கரைகளை மேம்படுத்துதல்.

(10) சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை தொழில் நுட்பப் பயிற்சி மையம் மூலம் திறமை வாய்ந்த வழிகாட்டிகளை உருவாக்குதல்.

**இந்தியச் சுற்றுலா:**

இந்தியாவிற்கு 1999 ஆம் ஆண்டில் 24,81,928 வெளிநாட்டுப் பயணிகள் வருகை தந்துள்ளனர். 2000 ஆண்டில் இப்பயணிகளின் எண்ணிக்கை 26,41,157-ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 6.4 விழுக்காடு அதிகமாகும்.

சுற்றுலா, அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் ஆபரணங்கள் மற்றும் ஆயத்த ஆடைகளுக்கு அடுத்த நிலையில் உள்ளது.



2002 ஏப்ரல் 29]

2000-2001ஆம் ஆண்டில் சுற்றுலா ரூ.14,238.00 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளது.

சுற்றுலாத் தொழிலில் ரூ.10.0 இலட்சம் முதலீடு செய்தால் 47.5 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது எனவும், ஆனால் வேளாண்மைத் துறையில் இந்த முதலீட்டின் மூலம் 44.7 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளும், பிற உற்பத்தித் துறையில் 12.6 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் மட்டுமே கிடைக்கின்றன எனவும் மத்திய சுற்றுலாத் துறை மதிப்பீடு செய்துள்ளது. இன்று சுற்றுலாத் துறையின் மூலம் 164.5 இலட்சம் நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மறைமுகமாக ஏற்பட்ட வேலைவாய்ப்பு 223.7 இலட்சம் ஆகும். உலக சுற்றுலாக் குழுமம் தனது கணக்கீடான Tourism Satellite Account-ன்படி, சுற்றுலாவின் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்பு வசதி தற்போதுள்ள 2.4 விழுக்காட்டிலிருந்து 6.8 விழுக்காடாக பத்தாண்டுகளில் உயரும் என கணித்துள்ளது. இதன் மூலம் 80 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். ஓட்டல் தொழிலில் ரூபாய் பத்து இலட்சம் முதலீடு செய்தால் 12 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது . மேலும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில், ஐந்து அறைகளுக்கு, எட்டு நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா:**

கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| ஆண்டு | உள்நாட்டுப் பயணிகளின் வருகை. (இலட்சத்தில்) | வெளிநாட்டுப் பயணிகளின் வருகை (இலட்சத்தில்) | கூடுதல் (இலட்சத்தில்) | விழுக்காடு (உயர்வு) |
|---|---|---|---|---|
| 1997 | 189.28 | 6.37 | 195.65 | 4.0 |
| 1998 | 204.13 | 6.36 | 210.49 | 7.6 |
| 1999 | 211.37 | 7.22 | 218.59 | 3.8 |
| 2000 | 229.82 | 7.86 | 237.68 | 8.7 |
| 2001 | 238.12 | 7.73 | 245.85 | 3.4 |

[2002 ஏப்ரல் 29

**சுற்றுலா இயக்குநரகம்:**

சுற்றுலா ஆணையருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய ஒரு இணை இயக்குநர், நான்கு துணை இயக்குநர்கள், ஒரு உதவி இயக்குநர், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர்.

**சுற்றுலா அலுவலகங்கள்:**

மாநில அளவில் சுற்றுலாத் திட்டங்களை உருவாக்கி, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, செயலாக்கத்தைக் கண்காணிப்பது சென்னையில் இயங்கிவரும் சுற்றுலா இயக்குநரகத்தின் பணியாகும். தமிழ்நாட்டில் 14 இடங்களிலும், பிற மாநிலங்களில் நான்கு இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் பின் வருமாறு:—

(1) சுற்றுலா அலுவலகம், கன்னியாகுமரி

(2) சுற்றுலா அலுவலகம், திருநெல்வேலி

(3) சுற்றுலா அலுவலகம், இராமேஸ்வரம்

(4) சுற்றுலா அலுவலகம், தருமபுரி

(5) சுற்றுலா அலுவலகம், கொடைக்கானல்

(6) சுற்றுலா அலுவலகம், மதுரை

(7) சுற்றுலா அலுவலகம், உதகமண்டலம்

(8) சுற்றுலா அலுவலகம், சேலம்

(9) சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி

(10) சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர்

(11) சுற்றுலா அலுவலகம், பூம்புகார்

(12) சுற்றுலா அலுவலகம், சிதம்பரம்

(13) சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம்

(14) சுற்றுலா அலுவலகம், சென்னை



2002 ஏப்ரல் 29]

(15) சுற்றுலா அலுவலகம், மும்பை
(16) சுற்றுலா அலுவலகம், கொல்கத்தா
(17) சுற்றுலா அலுவலகம், பனாஜி-கோவா
(18) சுற்றுலா அலுவலகம், புது தில்லி.
} பிற மாநிலங்கள்

**புதிய சுற்றுலா அலுவலகங்கள்:**

பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளிடம் சுற்றுலாவின் முக்கியத்துவத்தையும், சுற்றுலா பற்றிய தகவல்களையும் வழங்கி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம்தான் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியும்., எனவே, 2001-2002 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**சுற்றுலாத் தகவல் மையங்கள்:**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளையும் அப்பகுதிகளிலுள்ள வசதிகளையும் சுற்றுலாப் பயணிகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கோடு மாநிலத்தின் பல்வேறு இரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களில் 16 சுற்றுலாத் தகவல் மையங்களும் பிற மாநிலங்களில் மூன்று தகவல் மையங்களும் என்ற வகையில் மொத்தம் 19 மையங்கள் இயங்கி வருகின்றன. அவை பின்வருமாறு:—

(1) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருநெல்வேலி

(2) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், இராமேஸ்வரம்

(3) சுற்றுலாத் தகவல் மையம், பேருந்து நிலையம், இராமேஸ்வரம்

(4) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், மதுரை

(5) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், மதுரை

(6) சுற்றுலாத் தகவல் மையம், கூடலூர் (நீலகிரி மாவட்டம்)

(7) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், கோயம்புத்தூர்

(8) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி

(9) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், திருச்சிராப்பள்ளி

[2002 ஏப்ரல் 29

(10) சுற்றுலாத் தகவல் மையம், ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்

(11) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (சென்ட்ரல்)

(12) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (எழும்பூர்)

(13) சுற்றுலாத் தகவல் மையம், காமராசர் உள்நாட்டு விமான நிலையம், சென்னை.

(14) சுற்றுலாத் தகவல் மையம், அண்ணா பன்னாட்டு விமான நிலையம், சென்னை

(15) சுற்றுலாத் தகவல் மையம், பாஞ்சாலங்குறிச்சி

(16) சுற்றுலாத் தகவல் மையம், தரங்கம்பாடி

(17) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், பெங்களூர்

(18) சுற்றுலாத் தகவல் மையம், ஐதராபாத்

(19) சுற்றுலாத் தகவல் மையம், திருவனந்தபுரம்

**சுற்றுலா ஒரு தொழில்:**

சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சியில் தனியார் பங்கினை உணர்ந்து, தமிழ்நாடு அரசு கீழ்க்கண்டவாறு மூலதன உதவித் தொகை மற்றும் மின்னாக்கி (ஜெனரேட்டர்) உதவித் தொகையினை வழங்கி வருகிறது.

**மூலதன உதவித் தொகை:**

(1) சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் நில மதிப்பு நீங்கலாக ரூபாய் ஒரு கோடிக்கு மிகாத கட்டி முடிக்கப்பட்ட ஒன்று முதல் மூன்று நட்சத்திரத் தரம் வாய்ந்த ஓட்டல்களுக்கு உதவித்தொகை வழங்குதல், (அதிகபட்சம் ரூ.10 இலட்சம்)

(2) பொழுதுபோக்கு பூங்காக்கள்

(3) கோல்ஃப் விளையாட்டு மைதானம்



2002 ஏப்ரல் 29]

(4) அரசு ஒப்புதல் பெற்ற சிற்றுண்டிச் சாலைகள்

(5) அங்கீகாரம் பெற்ற சுற்றுலாப்பயணம் நடத்துவோர் இயக்கும் குளிர் சாதன வசதிப் (சீர்வளி) பேருந்துகள்

**மின்னாக்கி மூலதன மானியத் தொகை:**

சுற்றுலா வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சுற்றுலாத் திட்டங்களுக்கு மின்னாக்கி வாங்க 15 விழுக்காடு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இச்சலுகையின்கீழ் வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகை ரூபாய் ஐந்து இலட்சம் ஆகும்.

**மைய அரசின் (நிதியுதவி) உதவித் திட்டங்கள்:**

மாநில அரசு பரிந்துரைக்கும் சுற்றுலாத் திட்டங்களுக்கு, மைய அரசின் சுற்றுலாத் துறை வகுத்துள்ள நிதியுதவிக்கான வழிமுறைகளின் அடிப்படையில், தகுதி மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் முன்னுரிமைப்படுத்தப்பட்டு, அத்திட்டங்களுக்கு மைய அரசின் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் தேவையைப் பொறுத்து மாநில அரசும் தமது பங்குத் தொகையை அளிக்கிறது. இந்த வகையில் மைய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.800.50 இலட்சம் (மைய அரசின் பங்கு ரூ.519 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.281.50 இலட்சம்) மதிப்பீட்டிலான முப்பது திட்டங்களை மைய அரசு முன்னுரிமைப்படுத்தியது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.126.43 இலட்சத்திற்கு ஒன்பது திட்டங்களுக்கு மட்டும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்துறை மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளின் காரணமாக ரூ.357.55 இலட்சத்தை மைய அரசு வழங்கியுள்ளது. இத்தொகை இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான முதல்/ இரண்டாவது/ இறுதித் தவணையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 1985 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களாகும். வழங்கப்பட்ட மொத்தத் தொகையில், 2002 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மைய அரசு ரூ.212.79 இலட்சத்தை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[2002 ஏப்ரல் 29

மைய அரசு நிதி உதவித் தொகையைப்பெற்று 2002-2003 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள திட்டங்களின் விவரம் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மைய அரசு நிதியுதவியுடன் 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவு பெறும் நிலையில் உள்ள திட்டங்களின் விவரம் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

2002-2003 ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து சுற்றுலாத் திட்டங்களுக்கு அதிக நிதியுதவியைப் பெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். சுற்றுச்சூழல் மேம்பாடு, கிராமியச் சுற்றுலா வளர்ச்சி, சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், ஒளி மிளிரும் வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சி மற்றும் இதர திட்டங்களுக்கு மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சிக்கு ரூ.55.50 இலட்சம் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| (1) | ஊட்டி ஏரிப் பகுதியில் கூடுதலாக படகு இல்லம் அமைத்தல் | |
| (2) | பைக்காரா படகு இல்லப் பகுதியில் கான்கிரீட் நடைபாதை அமைத்தல், கைப்பிடிச் சுவர், இருக்கைகள் போன்ற வசதிகளுக்காக | ரூ.30.00 இலட்சம் |
| | | ரூ.5.00 இலட்சம் |
| (3) | ஊட்டி ஏரிப்பகுதியில் செயற்கை நீர்ஊற்று அமைத்தல் | ரூ.2.50 இலட்சம் |
| (4) | கொடநாடு காட்சி முனைப் பகுதியில் கூடுதல் வசதிகள் | ரூ.2.00 இலட்சம் |
| (5) | டால்பின் முனைப் பகுதியில் கூடுதல் வசதிகள் | ரூ.3.00 இலட்சம் |
| (6) | லாம்ஸ் ராக் பகுதியில் கூடுதல் வசதிகள் | ரூ.3.00 இலட்சம் |



2002 ஏப்ரல் 29]

| | | |
|---|---|---|
| (7) | பர்லியார் பகுதியில் கழிப்பிட வசதிகள் | ரூ.3.00 இலட்சம் |
| (8) | ஊட்டியிலுள்ள மத்திய பேருந்து நிலையம் அருகில் வடிகால் வசதி மேம்படுத்தல் | ரூ.5.00 இலட்சம் |
| (9) | தொட்டபெட்டா காட்சி முனை மற்றும் லேடி கேனிங் சீட் ஆகிய இடங்களை மேம்படுத்துதல் | ரூ.2.00 இலட்சம் |
| | மொத்தம் | 55.50 இலட்சம் |

**சுற்றுலாவும் தனியார் முதலீடும் :**

சுற்றுலா மேம்பாட்டில் தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்துவது தமிழ்நாடு அரசின் குறிக்கோள்களில் ஒன்றாகும். சுற்றுலாப் பகுதிகளில் சிறப்பான தங்கும் வசதிகளை உருவாக்குதல் சுற்றுலா வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே, தனியார் மற்றும் அரசு நிலங்களில் புதிய ஓட்டல்களைக் கட்டுவதற்கு தனியாரை ஊக்கப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு நிலங்கள் நியாயமான குத்தகை அடிப்படையில் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஒரு புதிய புத்துணர்வை உருவாக்கும். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்திற்காக 31 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தைத் தேர்வு செய்துள்ளார்.

இந்த ஆண்டு நாகூர், வேளாங்கன்னி, திருவண்ணாமலை, பழனி ஆகிய இடங்களில் தனியார் ஒத்துழைப்புடன் மூன்று நட்சத்திர ஓட்டல்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றிற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**கட்டமைப்பு வசதிகள்:**

2001-2002 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் சுற்றுலாப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் இதர மாவட்டங்களில் உள்ள சுற்றுலாப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2002 ஏப்ரல் 29

**தொலைநோக்குத் திட்டம்:**

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அதன் வளர்ச்சிக்கு ஒரு தொலைநோக்குத் திட்டம் தேவை.

எனவே தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சிக்கு தொலைநோக்குத் திட்டம் மத்திய அரசு நிதியுதவியுடன் தயாரிக்கப்படும். இத்திட்டம் எதிர்வரும் இருபது ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக அமையும் (2002-2022). இத்திட்டத்தை தயாரிப்பதற்கான நிறுவனத்தை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது. இத்திட்டம் தொடர்பான விவரங்கள் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

**காஞ்சிபுரம் அருள்மிகு கைலாசநாதர் ஆலயப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்:**

காஞ்சிபுரத்தின் முக்கியத்துவத்தையும் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தையும் கருத்தில் கொண்டு இந்த அரசு காஞ்சிபுரத்தை முக்கிய சுற்றுலாத் தலமாகவும்/புனிதத் தலமாகவும் மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின்படி, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தைச் சுற்றி ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மைய அரசு நிதியுதவியுடன் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதுபோன்று புனிதத் தலங்கள் கண்டறியப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

**செஞ்சி மேம்பாடு:**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியிலுள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் மிகவும் புகழ் பெற்றவையாகும். 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் மைய அரசு நிதியுதவியுடன் செஞ்சியில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

**படகு இல்லங்கள்:**

படகு இல்லங்கள் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் முக்கியமான சுற்றுலா மையங்களில் 10 படகு இல்லங்களை நடத்தி



2002 ஏப்ரல் 29]

வருகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் படகு இல்லங்களின் மேம்பாட்டிற்காக கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:—

**மைய அரசு நிதியுதவி**

| | | |
|---|---|---|
| (1) | முட்டுக்காடு | ரூ.20.00 இலட்சம் |
| (2) | கொடைக்கானல் (மேற்கு மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ்) | ரூ4.00 இலட்சம் |

**மாநில அரசு நிதியுதவி**

| | | |
|---|---|---|
| (1) | கொளவாய் ஏரி | ரூ.15.00 இலட்சம் |
| (2) | முதலியார் குப்பம் (இடைக்கழி நாடு) | ரூ.16.00 இலட்சம் |
| (3) | முட்டுக்காடு | ரூ.4.00 இலட்சம் |

இந்த ஆண்டு கிழக்குக் கடற்கரைச் சாலையில் பாண்டிச்சேரி செல்லும் வழியில் ஆலம்பறைகோட்டை மற்றும் இடைக்கழி நாட்டிலும், சென்னை அடையாறில் கோட்டூர்புரம் பாலம் அருகிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் நைனார் குளத்திலும் புதிய படகு இல்லங்கள் ஏற்படுத்தப்படும். செங்கற்பட்டு கொளவாய் ஏரிப் பகுதியில் உள்ள படகு இல்லம் 2001ஆம் ஆண்டு டிசம்பரில் முற்றிலும் சீரமைக்கப்பட்டது. இதன் காரணமாக மாத வருவாய் ரூ.5,000/-லிருந்து ரூ.40.000/-ஆக உயர்ந்துள்ளது.

**படகு வீடுகள்:**

கேரளாவில் படகு வீடுகள் சிறந்த வரவேற்பினைப் பெற்றுள்ளன. எனவே பைக்காரா, முட்டுக்காடு, கொடைக்கானல் ஆகிய இடங்களில் இதுபோன்ற படகு வீடுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதன்முறையாக தமிழ்நாட்டில் இந்த இடங்களில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திற்கு அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க இயலும்.

**ஒலி-ஒளிக் காட்சி:**

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒலி-ஒளிக் காட்சி 14-8-1999 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இக்காட்சியை மீண்டும் நடத்த

[2002 ஏப்ரல் 29

தீவிர முயற்சி மேற்கொண்டதன் காரணமாக 3-12-2001 அன்று முதல் இந்நிகழ்ச்சி மீண்டும் நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் (அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயில் வளாகம்), மாமல்லபுரம் போன்ற சிறப்புப் பெற்ற இடங்களில் ஒலி-ஒளிக் காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒலி-ஒளிக் காட்சி அமைப்பதற்குத் தேவையான கதை வசனம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**கடற்கரை மேம்பாடு:**

உலகளவில் கடற்கரைச் சுற்றுலா மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகின்றது. அதன்படி, 1000 கி.மீ. நீளமுள்ள அழகிய கடற்கரையை எழில்மிக்கதாக மேலும் அழகுபடுத்தி, முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இதன் அடிப்படையில் 2001-2002ஆம் ஆண்டில் தூத்துக்குடி கடற்கரையை அழகுபடுத்த ரூ.10.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் கடற்கரையை மேம்படுத்த மைய அரசு ரூ.15.00 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணி இந்த ஆண்டு தொடங்கப்படும். மெரீனா மற்றும் எலியட்ஸ் கடற்கரைகளைத் தூய்மைப்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதேபோன்று 2002-2003ஆம் ஆண்டில் கடற்கரைப் பகுதிகள் மேம்படுத்தப்படும். அரசு சாரா நிறுவனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படும்.

**சுற்றுலா வழிகாட்டிகள் (கைடு) பயிற்சி:**

சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுவதற்கான சரியான தகவல்களை வழங்கும்பொருட்டு, தகுதி வாய்ந்த சுற்றுலா வழிகாட்டிகளைப் பயன்படுத்த சுமார் 60 வழிகாட்டிப் பணியாளர்களைத் தேர்வு செய்து, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மூலம் இந்த ஆண்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கிராமியச் சுற்றுலா மேம்பாடு:**

முதன்முதலாக இத்திட்டம் சுற்றுலாத் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. " கிராமங்களின் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சி" என மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார். தமிழக கிராமங்களின் அரிய செல்வங்களாக, கலை, பண்பாடு, கிராமிய விளையாட்டுகள், கைத்தொழில், மூலிகை மருத்துவம் போன்றவை திகழ்கின்றன. இந்தியக் கிராமங்களில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளதால் நமது மாநிலத்தில் உள்ள முக்கிய கிராமங்களை மேம்பாடு செய்து வெளிநாட்டு, உள்நாட்டு



2002 ஏப்ரல் 29]

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் "கிராமியச் சுற்றுலாவை" மேம்படுத்துதல் அவசியம். முதன்முதலாக கீழ்க்காணும் ஆறு கிராமங்கள் 2002-2003 ஆம் நிதியாண்டில் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது:—

(1) திருவாதவூர்—மதுரை மாவட்டம்

(2) புரிசை—திருவண்ணாமலை மாவட்டம்

(3) சிறுங்குன்றம்—காஞ்சிபுரம் மாவட்டம்

(4) சுத்தமல்லி—திருநெல்வேலி மாவட்டம்

(5) திருமலைக்கேணி—திண்டுக்கல் மாவட்டம்

(6) தெய்வச்செயல்புரம்—தூத்துக்குடி மாவட்டம்

மேலும் 2002-2003 ஆம் நிதியாண்டில் மேலும் பல கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு சுற்றுலா மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வனக்குடில்கள்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தில் ரூ.34.45 இலட்சம் மதிப்பீட்டில் பயணிகள் தங்க வனக்குடில்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்று மேலும் சில இடங்களில் வனக்குடில்கள் அமைப்பது தொடர்பாக இந்நிதியாண்டில் விரிவாக ஆராயப்படும்.

*அதிகமாக பிரபலமாகாத மலைத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு:*

கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் அதிக விளம்பரமில்லாமல் வளர்ச்சியடையாத கீழ்க்காணும் மலைத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டிற்காக பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| (1) | ஜவ்வாது மலை<br>திருவண்ணாமலை மாவட்டம் | ரூ.20.00 இலட்சம் |
| (2) | கங்கைகொண்ட சோழபுரம்<br>அரியலூர் மாவட்டம் | ரூ.35.00 இலட்சம் |
| (3) | பிளவக்கல் அணை<br>விருதுநகர் மாவட்டம் | ரூ.20.00 இலட்சம் |

[2002 ஏப்ரல் 29

(4) கொல்லி மலை
நாமக்கல் மாவட்டம் — ரூ.20.00 இலட்சம்

(5) சுருளி நீர்வீழ்ச்சி
தேனி மாவட்டம் — ரூ.12.00 இலட்சம்

(6) கும்பக்கரை நீர்வீழ்ச்சி
தேனி மாவட்டம் — ரூ.15.00 இலட்சம்

(7) பாம்பாறு அணை
தருமபுரி மாவட்டம் — ரூ.20.00 இலட்சம்

(8) கெளவரப்பள்ளி நீர்த்தேக்கம்
தருமபுரி மாவட்டம் — ரூ.20.00 இலட்சம்

(9) கிருட்டிணகிரி நீர்த்தேக்கம்
தருமபுரி மாவட்டம் — ரூ.20.00 இலட்சம்

**மைய அரசு நிதியுதவி**

(10) புளியஞ்சோலை
திருச்சிராப்பள்ளி மாவட்டம் — ரூ.35.00 இலட்சம்

(11) ஏலகிரி
வேலூர் மாவட்டம் — ரூ.40.00 இலட்சம்

இந்நிதியாண்டில் (2002-2003) மேலும் இதுபோன்ற மலைத்தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும்.

**சாகச புனல் விளையாட்டுகள் (நீர் விளையாட்டுகள்)**

சுமார் 1000 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதியினையும் மிக அதிகமான நீர்ப்பரப்பினையும் கொண்ட தமிழ்நாட்டில் சாகச நீர் விளையாட்டுகள் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பெருமளவில் உள்ளன.

இதைப்பயன்படுத்தி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்னோடியாகச் செயல்பட்டு, தனியாருடன் இணைந்து முட்டுக்காட்டில் கடந்த 27-9-2001 முதல் சாகச நீர்விளையாட்டுகளை நடத்தி வருகிறது. இதில் கீழ்க்காணும் எட்டு விதமான நீர்



2002 ஏப்ரல் 29]

விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டு பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது:—

1. வாட்டர் ஸ்கீ (Water Ski)
2. வேக் போர்ட் (Wake Board)
3. னீ போர்ட் (Knee Board)
4. ஜெட் ஸ்கீ (Jet Ski)
5. வாட்டர் ஸ்கூட்டர் (Water Scooter)
6. பனானா போட் (Banana Boat)
7. விண்ட் சர்பிங் (Wind Surfing)
8. டியூப் ரைட் (Tube Ride)

மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் இதுபோன்ற சாகச விளையாட்டுகள் செங்கற்பட்டில் கொளவாய் ஏரி, உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. மெரீனா கடற்கரையில் பாரா செயிலிங் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு மே மாதம் முதல் சென்னை புனித தோமையார் மலையில் (St. Thomas Mount) ஹேங் கிளைடிங் (Hang gliding) என்னும் சாகச விளையாட்டு அறிமுகப்படுத்தப்படும்.

**பண்பாட்டுக் கிராமம் (Ethnic Village)**

இந்தியத் துணைக்கண்டத்தை பிரதிபலிக்கும் வகையில் அனைத்து மாநிலங்களை சிறிய அளவில் (Miniature form) எடுத்துக்காட்டுவது போன்று பண்பாடு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில், "பண்பாட்டுக் கிராமம்" (Ethnic Village) அமைக்கும் பெருந்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் கருத்தரங்கு மையம், விற்பனைக் கூடங்கள், டிஸ்னி லேண்ட், அனைத்து மாநிலங்களின் கைவினைப் பொருட்கள் அங்காடிகள், கலைக்கூடம், யோகா மையம், ஆன்மீக மையம், உணவுக்கூடம், சுற்றுலாத் தகவல் மையம், கோல்ஃப் மைதானம் மற்றும் ஹெலிக்காப்டர் தளம் போன்றவை இடம் பெறும்.

[2002 ஏப்ரல் 29

இவற்றிற்காக முட்டுக்காடு மற்றும் மாமல்லபுரத்திற்கு இடையில் கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டி அமைந்துள்ள சுமார் 632 ஹெக்டேர் நிலம் சுற்றுலாத் துறையால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலங்கள் இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான பட்டா நிலங்களாகும். இந்நிலங்களை நீண்டகால குத்தகைக்கு (35 வருடங்கள்) சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**அமைதிப் பூங்கா**

மேதகு ஆளுநர் உரையில் அறிவித்தபடி அமெரிக்க நாட்டு மக்களின் சுதந்திர-மக்களாட்சி உணர்வுகளை அங்குள்ள சுதந்திர தேவி சிலை பிரதிபலிப்பதுபோல, சாதி, மதம், பண்பாடு, ஒற்றுமையைச் சித்தரிக்கும் சிலையுடன் கூடிய "அமைதிப் பூங்கா" ஒன்று சென்னைக்கு அருகில் அமைக்க இத்துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வளாகத்தில் பிரமாண்டமானதொரு கருத்தரங்குக்கூடம், அனைத்து சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட பெரியதொரு தியான மண்டபம், பல்வேறு சமயங்கள் பற்றிய புத்தகங்களைக் கொண்ட தனியொரு நூலகம் மற்றும் புத்தக மையம் ஆகியன இடம் பெற்றிருக்கும். இத்திட்டம், உலக அமைதியை எடுத்துரைக்கும் கருத்துக்கூடமாகவும், இந்தியர்களும் வெளிநாட்டவரும் வருகை தரக்கூடிய ஒரு சுற்றுலா மையமாகவும் இருக்கும்.

சிறந்த வடிவமைப்பாளர்/ சிற்பக் கலைஞர்களிடமிருந்து மாதிரி வடிவம் பெறப்பட்டபின் சிலைக்கான வடிவம் முடிவு செய்யப்படும்.

**சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம்**

சுற்றுலாவின் வளர்ச்சிக்கும், விளம்பரத்திற்கும் அச்சு மற்றும் மின்னணு சாதனம் இன்று பெரிதும் உதவுகிறது. மிகச் சிறந்த விளம்பரமும், சுற்றுலாவிற்கென ஒரு தனி சின்னத்தை ஏற்படுத்துவதும் சுற்றுலாவை வளர்க்க இன்றியமையாததாகும். விளம்பரப் பிரதிகள், சுவரொட்டிகள் முதலியன மாற்றி அமைக்கப்பட்டு அவற்றின் தரம் சர்வதேச அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பிரதிகள் சுற்றுலாத் துறையின் சுற்றுலா அலுவலகங்கள்/சுற்றுலாத் தகவல் மையங்கள்/ மைய அரசின் சுற்றுலா அலுவலங்கள் (இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ளவை), சர்வதேச விளம்பர முகாம்கள் ஆகியவை மூலம் விநியோகிக்கப்படுகின்றன.



2002 ஏப்ரல் 29]

தீவிர விளம்பர முகாம்கள் இந்தியாவின் பல முக்கியமான நகரங்களிலும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளிலும் நடத்தப்படும். பத்திரிகைகள், வார / திங்கள் இதழ்கள், தொலைக்காட்சி மற்றும் இணையம் (Internet) மூலமாக தீவிர விளம்பரப் பணி மேற்கொள்ளப்படும்.

**சிறப்பு மடிப்பேடுகள்**

சுற்றுலா மடிப்பேடுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு மிகவும் தரமுள்ளவையாக வெளியிடப்பட்டுள்ளன. இம்மடிப்பேடுகள் இலண்டனில் டிசம்பர் 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகச் சுற்றுலாச் சந்தையிலும், 2002 மார்ச் திங்கள் பெர்லின் நகரத்தில் நடைபெற்ற ஐ.டி.பி. நிகழ்ச்சியிலும் வழங்கப்பட்டன. இதுபோன்று சர்வதேச தரம் வாய்ந்த மடிப்பேடுகள் தொடர்ந்து 2002-2003 ஆம் ஆண்டிலும் வெளியிடப்படும்.

**அன்னிய/ பிற மாநில மொழிகளில் சுற்றுலா மடிப்பேடுகள் அச்சிடுதல்**

மென்மேலும் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் சுற்றுலா மடிப்பேடுகள், பிரெஞ்சு, ஜப்பான், ஜெர்மன், வங்காளம், இந்தி, தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பற்றிய வழிகாட்டி நூல்**

தமிழ்நாடு பற்றிய விரிவான விளக்கங்களுடன் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் வழிகாட்டி நூல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

**விளம்பர முகாம்**

தமிழ்நாடு சுற்றுலா பற்றி எடுத்துரைக்க, ஏழு வெளி மாநிலங்களில் தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் தகவல் மையங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாச் சிறப்புகளை மற்ற மாநிலங்களில் விளம்பரப்படுத்தும் நோக்கத்துடன் 2002-2003 ஆம் ஆண்டில் புவனேஷ்வர், அகமதாபாத், போபால், அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகியவற்றில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

**சுற்றுலாச் சந்தைகள்** [2002 ஏப்ரல் 29

மிகுந்த அளவில் செலவிடும் சுற்றுலாப் பயணிகள் மூலம்தான் சுற்றுலாத் துறைக்கு அந்நியச் செலாவணி அதிக அளவில் கிடைக்கிறது என புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அவ்வாறு அதிக அளவில் செலவிடும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க பன்னாட்டுச் சுற்றுலாச் சந்தைகளில் தொடர்ந்து பங்குகொள்வது இன்றியமையாததாகும். இச்சந்தைகள் பன்னாட்டில் உள்ள சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒரே இடத்தில் நேரிடையாகச் சந்திக்க வழிவகை செய்கின்றன. இத்துறை 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இலண்டனில் நடைபெற்ற W.T.M. நிகழ்ச்சியிலும், 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் பெர்லின் நகரில் நடைபெற்ற ஐ.டி.பி. நிகழ்ச்சியிலும் பங்கு பெற்றது. ஒவ்வொரு வருடமும் கீழ்க்கண்ட ஒன்பது முக்கிய பன்னாட்டுச் சந்தைகள் பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றன:—

(1) உலக சுற்றுலாச் சந்தை (ஐ.டி.பி.) —பெர்லின்

(2) உலக சுற்றுலாச் சந்தை (டபிள்யு.டி.எம்) —லண்டன்

(3) பசிபிக் ஆசிய சுற்றுலாச் சங்கம் (பிஏடிஏ) —சிங்கப்பூர்

(4) மொரீசியஸ் சுற்றுலாச் சந்தை —மொரீசியஸ்

(5) தென் ஆப்பிரிக்க சுற்றுலாச் சந்தை —தென் ஆப்பிரிக்கா

(6) மலேசிய சுற்றுலாச் சந்தை/ஜப்பான் மலேசியா சுற்றுலா முகவர்களின் கூட்டமைப்பு —மலேசியா

(7) குவைத் சுற்றுலாச் சந்தை —குவைத்

(8) அமெரிக்க முகவர்களின் கூட்டமைப்பு —அமெரிக்கா

(9) சுவிஸ் சுற்றுலாச் சந்தை —சுவிட்சர்லாந்து

பல மாநிலங்கள் இச்சந்தைகளில் ஆண்டுதோறும் கலந்துகொண்டு தங்கள் மாநிலத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை விளம்பரப்படுத்துவதால், தமிழகமும் தொடர்ந்து 2002-2003 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ஐந்து சந்தைகளில் பங்கு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 29]

**பயண எழுத்தாளர்களுக்கான சுற்றுலா ஏற்பாடு**

பயண எழுத்தாளர்கள், தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளை அறிந்துகொள்ள ஏதுவாக பயண எழுத்தாளர்களுக்கான சுற்றுலா ஏற்பாடு செய்ய 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.6.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இப்பயணம் முதல்முறையாக பிப்ரவரி 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இதில் ஆறு மாநிலங்களைச் (ஒரிசா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், இமாச்சலப் பிரதேசம், குஜராத் மற்றும் மேற்கு வங்காளம்) சார்ந்த 11 சுற்றுலாப் பயண எழுத்தாளர்கள், 14 நாட்கள் நடத்தப்பட்ட சுற்றுலாவில் பங்குபெற்றனர். அவர்கள் தாங்கள் கண்டுகளித்த அனைத்தையும் தங்கள் மாநிலங்களில், தங்களின் மொழிகளில் பயணக் கட்டுரைகளாக வெளியிட முன்வந்துள்ளனர். இதில் சிலர் எழுதிய பயணக் கட்டுரைகள், பிரபலமான நாளிதழ்கள் / பருவ இதழ்களில் வெளிவந்துள்ளன. இவ்வருடம் மேலும் பல எழுத்தாளர்கள் பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளிலிருந்தும் அழைக்கப்படுவர்.

**சி.டி. ரோம் (மென்தட்டு)**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய மென்தட்டு முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மென்தட்டு அனைத்துச் சுற்றுலா அலுவலகங்கள், பயண முகவர்கள், பயண எழுத்தாளர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த மென்தட்டு அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

**விளக்கப் படங்கள்/ விளம்பரப் படங்கள்**

நேஷனல் ஜியாகிரபி, டிஸ்கவரி, பிபிசி சேனல்களில் ஒளிபரப்ப, தமிழ்நாடு பற்றிய குறு விளம்பரப்படம் ஒன்று தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும் இம்முயற்சி தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாட்டிற்கு பெரிதும் உறுதுணை புரியும் எனக் கருதப்படுகிறது.

[2002 ஏப்ரல் 29

**தகவல் தளம் (Web site)**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது "http://www.tamilnadutourism. org" என்ற தகவல் தளத்தைக் கொண்டுள்ளது. இதில் முக்கிய சுற்றுலாத் தலங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் மற்றும் பயணத் திட்டங்கள் போன்ற விவரங்கள் இடம் பெற்றுள்ளன. சுற்றுலாத் துறைக்கென செலவினம் ஏதும் இல்லாமல் பிரத்யேகமாக மற்றொரு தகவல் தளத்தை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தொடுதிரை கணினி (Touch Screen)**

சுற்றுலாப் பயணிகள், கணினி திரையினைத் தொட்டவுடன், தமிழ்நாடு சுற்றுலா பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் "தொடுதிரை கணினி" உருவாக்கப்பட்டுள்ளது. ரூபாய் மூன்று இலட்சம் விலையுள்ள, இக்கருவி சென்னையில் உள்ள சுற்றுலாத் தகவல் மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் பல "தொடுதிரை கணினிகளை" அனைத்துச் சுற்றுலா அலுவலகங்கள்/ சுற்றுலாத் தகவல் மையங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஒளி மிளிரும் விளம்பரப் பலகைகள் (Glow sign boards)**

சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத் தலங்களைக் கண்டுகளிக்க வசதியாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் முக்கியமான இடங்களில் "ஒளி மிளிரும்" விளம்பரப் பலகைகள் இவ்வாண்டு அமைக்கப்படும்.

**விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்**

பாரம்பரியமிக்க மரபுச் சின்னங்கள், வரலாற்றுக் கோட்டைகள், பழமையான கலைச் சிற்பங்கள், தொன்மை வாய்ந்த ஆலயங்கள் (பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர் மற்றும் நாயக்கர் கால) போன்றவை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றன. தமிழ்நாட்டின் சிறப்பு அம்சங்களில் இசை, நடனம் மற்றும் நாடகம் போன்றவை குறிப்பிடத்தக்கது. கால ஓட்டத்தால் பாதிப்பு அடையாமல் நிலைத்திருக்கும் பரதநாட்டியத்தினைக் காணும் வாய்ப்பினை எந்த ஒரு சுற்றுலாப் பயணியும் இழக்க முன்வரமாட்டார்.



2002 ஏப்ரல் 29]

எனவே தமிழக பண்பாட்டுச் சுற்றுலாவை வளர்க்கும் வகையில் கீழ்வரும் விழாக்கள் வருடாந்திர விழாக்களாக நடத்தப்படுகின்றன. இதன் மூலம் வெளிநாட்டுப் பயண நிறுவனங்கள், தங்கள் பயணத் திட்டங்களை முன் கூட்டியே திட்டமிட வசதியாக உள்ளது:—

| விழா | நடைபெறும் இடம் | மாதம் |
|---|---|---|
| (1) சந்தனக்கூடு | -ஏர்வாடி | -மார்ச் |
| (2) சித்திரை முழுநிலவு விழா | -மனோரா | -மே |
| (3) சித்திரை முழுநிலவு விழா | -பூம்புகார் | -மே |
| (4) தேர்த் திருவிழா | -திருவாரூர் | -மே |
| (5) சித்திரை விசு விழா | -திருநெல்வேலி | -மே |
| (6) கட்டபொம்மன் விழா | -பாஞ்சாலங்குறிச்சி | -ஜூலை |
| (7) ஆடிப்பெருக்கு | -பவானிகூடுதுறை | -ஜூலை/ஆக. |
| (8) ஆடிப்பெருக்கு | -ஒகேனக்கல் | -ஜூலை/ஆக. |
| (9) ஆடிப்பூரம் | -மேல்மருவத்தூர் | -ஜூலை |
| (10) சாரல் விழா | -குற்றாலம்/பாலமதி | -ஜூலை |
| (11) கந்தூரி விழா | -நாகூர் | -ஆக./செப். |
| (12) வேளாங்கன்னி மாதா திருவிழா | -வேளாங்கன்னி | -ஆக./செப். |
| **அறுவடைத் திருவிழாக்கள்** | | |
| (1) பொங்கல் | அனைத்துச் சுற்றுலாத் -தலங்களிலும் | -ஜனவரி |
| (2) தேயிலை (ம) சுற்றுலா | -உதகமண்டலம் /குன்னூர் | -ஜனவரி |
| (3) மாங்கனி விழா | -கிருட்டிணகிரி | -ஜூலை |
| **கலைத் திருவிழா** | | |
| (1) நாட்டிய விழா | -மாமல்லபுரம் | -ஜனவரி/ பிப்ரவரி |
| (2) நாட்டியாஞ்சலி விழா | -சிதம்பரம் | -பிப்ரவரி/ மார்ச் |

| கலைத் திருவிழா | நடைபெறும் இடம் | மாதம் |
|---|---|---|
| (3) சித்திரை விழா | -மதுரை | -ஏப்ரல்/மே |
| (4) கோடை விழா | -உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு | -மே |
| | கொல்லி மலை, பச்சமலை, ஏலகிரி | -ஜுன் |

**2001-2002 ஆம் ஆண்டில் நிரந்தர முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விழாக்கள்**

| | | |
|---|---|---|
| (1) நாட்டிய விழா | மதுரை | ஜனவரி |
| (2) அருணாஞ்சலி விழா | திருவண்ணாமலை | மார்ச் |
| (3) இந்திய நடனங்களின் திருவிழா | சென்னை | மார்ச் |
| (4) பட்டுவிழா | காஞ்சிபுரம் | அக்டோபர் |

சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதியும், விழாக்கள் நடைபெறும் நாட்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கேற்ப தங்களது பயணத் திட்டத்தை வகுத்துக்கொள்ளவும், வகை செய்யவும், விழாக்கள் நடைபெறும் காலங்களைக் குறிப்பிடும் கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

**படுக்கை மற்றும் காலைச் சிற்றுண்டித் திட்டம் (Bed and Breakfast)**

சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டில் கிடைக்கும் தங்கும் வசதியை மேலும் அதிகப்படுத்தும் வகையில் "பணம் செலுத்தும் விருந்தினராக தங்குமிட வசதி" (Paying Guest Accommodation) பெறும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்தகைய வசதிகள் செய்து தரக் கூடியவர்களைக் கண்டறிய நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்த தங்குமிடங்களில் இன்றியமையாத வசதிகள் உள்ளனவா என்று உறுதி செய்யப்பட்டு வசதிக்கு ஏற்ப கட்டண விகிதம் நிர்ணயிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், இப்போது பயன்படுத்தப்படாத கட்டமைப்பு வசதிகள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும். இந்த "படுக்கை மற்றும் காலைச் சிற்றுண்டித் திட்டம்" சுற்றுலாப் பயணிகளுக்கும், உள்ளூர் மக்களுக்கும் ஒரு புதிய அனுபவமாக இருக்கும்.



**வழிகாட்டிப் பிரிவு/ உயர்நிலைக் குழு. (Guidance Cell / High Level Committee)**

சுற்றுலாப் பயணத்தின்போது மிகுந்த அளவில் செலவு செய்யக்கூடிய சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத் துறையிடமிருந்து நல்ல தரம் வாய்ந்த வசதிகளை எதிர்பார்க்கிறார்கள். இதற்கு சுற்றுலாத் துறையில் தனியார் துறையின் ஈடுபாடு அவசியமாகிறது. தனியார் துறை, நிறுவன குழுமங்கள், அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் 'ஆகியோரை ஈர்க்க சுற்றுலாத் துறை முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

(அ) முதலீட்டு வழிகாட்டிப் பிரிவு

இத்துறையில் தனியார் முதலீட்டு வழிகாட்டிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு தனியார் முதலீட்டை ஈர்க்க முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து வருகிறது.

**(ஆ) தனியார் சுற்றுலாத் திட்டங்களுக்கு உயர் நிலைக் குழு மூலம் ஒப்புதல் வழங்குதல்**

தனியாரிடமிருந்து பெறப்பட்ட சுற்றுலாத் திட்டங்கள் "தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவிற்கு'' அனுப்பிவைக்கப்படும். இப்பிரிவு தலைமையிடங்களின்கீழ் செயல்படக்கூடிய உயர் நிலைக் குழுவின் ஒப்புதலைத் திட்டங்களாக அளிக்கும். இவ்வாறு தனியார் முதலீட்டாளர்கள்/அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் ஆகியோருடன் நல்லதொரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தமிழ்நாட்டில் சர்வதேசத் தரத்துடன் ஒப்பிடும் அளவிற்குக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இயலும். இதன் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழவைக்க இயலும்.

**சுற்றுலாக் காவலர்கள்**

சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதோடு அல்லாமல், அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதும் சுற்றுலாத் துறையின் முக்கியக் கடமையாகும். சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இனிய பயணங்களின்

நினைவுகளைத் தங்களுடன் ஏந்திச்சென்று தமிழ்நாட்டினைப் பற்றிய நல்ல கருத்துகளைத் தங்கள் நாடுகளில் அனைவருக்கும் எடுத்துச் சொல்லும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு சுற்றுலா இடங்களில் சுற்றுலாக் காவலர் திட்டத்தை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதன் முறையாக மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரியில் சுற்றுலாக் காவலர் திட்டம் சோதனை அடிப்படையில் உருவாக்கப்பட்டு, பின்னர் அனைத்து இடங்களுக்கும் விரிவாக்கப்படும்.

### ஹெலி டாக்ஸி (Heli Taxi)

பெரிய நிறுவனங்களின் செயல் அலுவலர்கள் மற்றும் மிகுதியாக செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் குறுகிய காலத்தில் தமிழ்நாட்டினைச் சுற்றிப்பார்க்க விருப்பம் தெரிவிக்கின்றனர். எனவே அவர்களின் விருப்பத்தினை ஈடு செய்யும் வகையில் "டெக்கான் ஏர்வேஸ்" நிறுவனம் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப ஹெலி டாக்ஸி போக்குவரத்துச் சேவையை மேற்கொண்டு வருகிறது.

### இரயில்வேயுடன் இணைந்து செயல்படுதல்

மும்பை, புது தில்லி, கொல்கத்தா, ஐதராபாத் ஆகிய நகரங்களில் இருந்து சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இரயில்களில் பயணம் செய்ய இடம் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கின்றனர். எனவே, அத்தகைய சுற்றுலாப் பயணிகளுக்கு சென்னைக்கு வரும் இரயில்களில் 15 படுக்கைகள் ஒதுக்கீடு செய்து தருமாறு இரயில்வே நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் சென்னை வந்து சேர்ந்தவுடன் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பயணங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்யும். சுற்றுலாப் பயணிகள் சென்னையிலிருந்து திரும்பச் செல்லவும், உரிய படுக்கைகளை ஒதுக்கித் தருமாறும் இரயில்வே நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தென் மாநிலங்களை உள்ளடக்கிய "அரண்மனை இரயில்" திட்டத்தினைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### வரி சீரமைப்பு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலா பெரும் பங்கு வகிப்பதால், நம் மாநிலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அவர்கள் தங்கும் நாட்களை





அதிகப்படுத்தவும் இத்துறை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலோர் வயது முதிர்ந்த யாத்ரிகர்களாவர். அவர்கள் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் வகையிலும், எதிர்காலத்தில் சுற்றுலா வளர்ச்சியின் மூலம் கிடைக்கும் பயனைக் கருத்தில் கொண்டும், சொகுசு வரி, விற்பனை வரி, கேளிக்கை வரி ஆகியவற்றை சீர் செய்யும் பொருட்டு பிற துறைகளுடன் கலந்து முடிவெடுக்க இத்துறை நடவடிக்கை எடுக்கும்.

### சுற்றுலாக் கொள்கை

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான வழிகாட்டுதல்களை உள்ளடக்கியதாக சுற்றுலாக் கொள்கை விரைவில் வெளியிடப்பட உள்ளது. இச்சுற்றுலாக் கொள்கை இதற்கு முந்தைய பத்திகளில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

### மாநில விடுதி மேலாண்மை மற்றும் உணவுக் கலை பயிற்சி நிறுவனம், துவாக்குடி, திருச்சி

அண்மைக்காலமாக ஓட்டல் நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அங்கு வழங்கப்படும் உணவு வகைகளின் தரமும் உயர்ந்து காணப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் புதிய ஓட்டல்களும், உணவகங்களும் தொடங்கப்படுகின்றன. தொழில் முன்னேற்றமும், அத்துடன் கூடிய சுற்றுலா வளர்ச்சியும் ஓட்டல் தொழிலுக்கு ஓர் ஊக்கத்தை அளித்து வருகிறது. ஓட்டல் தொழிலுக்கு பல்வேறு பிரிவுகளில் தகுதி படைத்த பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். தரம் வாய்ந்த ஓட்டல் என்பது ஓட்டல் வரவேற்பு, உணவு தயாரிப்பு, உபசரிப்பு, மனைக்காப்பு ஆகியவற்றில் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஓட்டல் தொழிலுக்குத் தேவையான பல பிரிவுகளில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கோடு, "மாநில ஓட்டல் நிர்வாகம்-உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்" 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு வரை இந்த நிறுவனத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளித்து வந்தது. அதற்குப் பிறகு தமிழக அரசே இந்த நிறுவனத்துக்கு முழு நிதி உதவியையும் அளித்து வருகிறது. இந்த

[2002 ஏப்ரல் 29

நிறுவனம் தற்போது சுற்றுலாத் துறையோடு இணைந்து செயல்பட்டு வருகிறது. மூன்றாண்டுப் பட்டயப் படிப்புடன் ஓராண்டு சான்றிதழ் பயிற்சி வகுப்புகளையும் பின்வரும் பிரிவுகளில் இந்நிறுவனம் நடத்தி வருகிறது:—

(1) ஓட்டல் வரவேற்பு மற்றும் கணக்குப் பிரிவு

(2) உணவு தயாரிப்பு

(3) ரொட்டி மற்றும் கேக் தயாரித்தல்

(4) உணவு பரிமாறுதல்

(5) மனைக்காப்பு

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு ரூ.11.00 இலட்சம் மானியமாக வழங்கி வருகிறது.

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் பல்வேறு பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். தற்போது 352 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பயிற்சி நிறைவுற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு "வளாக நேர்காணல்" வாயிலாக வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

வழக்கமாக நடத்தப்படும் வகுப்புகள் தவிர, இல்லத்தரசிகள் தமது ஓய்வு நேரத்தைப் பயன் தரும் முறையில் ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்கு பேக்கரி, சமையல் கலை முதலியவற்றில் பகுதி நேரப் பயிற்சியும் இந்நிறுவனத்தால் அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டில் இரண்டு சொகுசுப் பேருந்துகள் மற்றும் ஐந்து சுற்றுலா விடுதிகளுடன் தொடங்கப்பட்டது. பின்னர் நாளடைவில் தென்னிந்தியாவிலேயே அதிக அளவில் 54 விடுதிகளைக் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. அதேபோன்று சொகுசுப் பேருந்துகளின் எண்ணிக்கையும் 27-ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய இயக்குநர் குழுமம் ஒன்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அன்றாட நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு ஒரு நிர்வாக இயக்குநரும், அவருக்கு



2002 ஏப்ரல் 29]

உதவி புரிவதற்கு தொழில் நுட்பம்/தொழில் நுட்பமில்லாத அதிகாரிகள் மற்றும் நிதித் துறை வல்லுநர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்வரும் வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி வருகின்றது

* விடுதிகள்
* இளைஞர் விடுதிகள்
* படகு இல்லங்கள்
* உணவகங்கள்
* தொலைநோக்கு இல்லம் மற்றும்
* பெட்ரோல் பங்க்

பெரிய சுற்றுலாத் தலங்களில், குறைந்த வருவாய் கொண்ட பயணிகளின் நன்மையைக் கருதி இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. பலர் தங்கும் வசதியும் இவற்றில் உள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரும்பாலான ஓட்டல்களையும், ஏழு உணவகங்களையும் குத்தகை அடிப்படையில் (Franchise) தனியார் மூலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பத்தொன்பது ஓட்டல்களை (மண்டபம், ஸ்ரீபெரும்புதூர், வைகை அணை, விருதுநகர், கோத்தகிரி, குன்னூர், மேட்டுப்பாளையம், மேட்டூர் அணை, சாத்தனூர் அணை, நாமக்கல், திருக்கழுக்குன்றம், உத்திரகோசமங்கை, கொடை ரோடு, வேடந்தாங்கல், இராணிப்பேட்டை, திருநெல்வேலி, சாத்தூர், புதுக்கோட்டை, கூடலூர்) தனியார் மூலம் நடத்த அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் தற்போது பத்து ஓட்டல்கள் மட்டும் (ஸ்ரீபெரும்புதூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, திருநெல்வேலி, குன்னூர், மேட்டுப்பாளையம், கோத்தகிரி, மேட்டூர் அணை, விருதுநகர், சாத்தனூர் அணை) தனியார் மூலம் குத்தகை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய ஓட்டல்களையும் தனியார் மூலம் குத்தகை அடிப்படையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

[2002 ஏப்ரல் 29

(1) முதன் முறையாக 30 ஆண்டுகளுக்குப் பிறகு, திருப்பதி-திருமலை தேவஸ்தான அலுவலக ஒத்துழைப்புடன், நாள்தோறும் 100 சிறப்பு நுழைவுச் சீட்டுகள் (வைகுண்ட செல்லார் நுழைவுச் சீட்டுகள்-ரூ.100 விலையிலானது). தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாட்டால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்து மூலம் திருப்பதிக்கு, நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் சென்று எளிதில் தரிசனம் செய்ய முடிகிறது. இத்திட்டம் 26-10-2001 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் பயணம் சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. திருப்பதி சுற்றுலா மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ.35.00 இலட்சம் வருவாயை கூடுதலாக ஈட்டியுள்ளது. தொடர்ந்து இச்சிறப்பு சுற்றுலாவின் மூலம் ஆண்டுதோறும் ரூ.112.00 இலட்சம் கூடுதலாக வருவாய் கிடைக்கும்.

(2) "சென்னை பெட்ரோலியம் கெமிக்கல்ஸ்" நிறுவனத்துடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இணைந்து சிறப்பு சுற்றுலாக்களை நடத்தியுள்ளது. அந்நிறுவனத்தில் பணிபுரியும் 2000 பணியாளர்களுக்கு சிறப்புப் பயணம் ஏற்பாடு செய்ததன் விளைவாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கூடுதலாக ரூ.20.00 இலட்சம் வருவாய் கிட்டியுள்ளது.

(3) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கர்நாடக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தோடு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் கர்நாடக மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பயணிகளுக்கு ஊட்டி மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் வசதி அளிக்கப்படும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் கூடுதலாக வருவாய் கிடைக்கும். இதுபோன்ற ஒப்பந்தம் ஆந்திரப் பிரதேச சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் உத்தரப் பிரதேச சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் செய்யப்பட்டுள்ளது. ராஜஸ்தான், கேரளா, ஒரிஸ்ஸா, மஹாராட்டிரம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் போன்ற மாநிலங்களோடும் இதுபோன்ற ஒப்பந்தம் விரைவில் செய்து கொள்ளப்படும்.

(4) தமிழ்நாட்டின் சுற்றுலா வளம், வெளி நாடுகளில், எதிர்வரும் காலங்களில் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படும். லண்டனிலுள்ள கோல்டன் லிங்க் பீச் டூர்ஸ் என்ற நிறுவனம், லண்டனில், தமிழ்நாடு



2002 ஏப்ரல் 29]

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 15 சுற்றுலாக் குழுக்களை அனுப்பிவைப்பதாகத் தெரிவித்துள்ளது. இதே போன்று திரு. பக்ருதின் என்பவர் மலேசியா நாட்டில் விற்பனை முகவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2001-2002 ஆம் ஆண்டில் 15 சுற்றுலாக் குழுக்களை மலேசியாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்தார். 2002-2003 ஆம் ஆண்டில் மேலும் 30 சுற்றுலாக் குழுக்களை மலேசியாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதாக உறுதி அளித்துள்ளார். இத்தாலியிலுள்ள திருவாளர்கள் கிராப்க்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. சர்கார் அண்மையில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார். இவர் குறைந்தபட்சம் 15 சுற்றுலாக் குழுக்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பயணத் திட்டத்தில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளார். அதன்படி முதற்கட்டமாக 40 பயணிகளைக் கொண்ட இரு குழுக்களுக்கான பயணத் திட்டத்தை அனுப்பியுள்ளார். வெளிநாட்டில் பயண முகவர் நியமனம் செய்ததின் விளைவாக 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.30.00 இலட்சம் கூடுதலாக வருமானம் கிடைத்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் வெளிநாட்டு விற்பனை முகவர்கள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைக்கவிருக்கும் இலாபம் சுமார் ரூ.75.00 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாங்காக்கில் ஒரு விற்பனை முகவரை நியமனம் செய்வது பரிசீலனையில் உள்ளது.

(5) இவ்வாண்டு நடைபெற்ற இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் பல புதிய நிகழ்ச்சிகள், விளையாட்டுச் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. "கோ-கார்ட்" சிறிய அளவிலான பந்தயக்கார், பிரமிடுடன் கூடிய "சென்னையில் எகிப்து" போன்றவை இந்த ஆண்டு பொருட்காட்சியில் இடம் பெற்ற சிறப்பு அம்சங்கள். இதுவரை கண்டிராத அளவிற்கு இவ்வாண்டு ரூ.80.00 இலட்சம் லாபத்தை இப்பொருட்காட்சி ஈட்டியுள்ளது.

(6) மூன்று புதிய ஹை-டெக் சொகுசுப் பேருந்துகளை ரூ.45.00 இலட்சம் செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாங்கியுள்ளது. இதில் ஒன்று சீர்வளி வசதி செய்யப்பட்டுள்ளது.

(7) ரூ.5.00 இலட்சம் செலவில் முக்கிய ஓட்டல்களுக்கு 50 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க ஆணை வெளியிடப்படவுள்ளது.

[2002 ஏப்ரல் 29

(8) ஊட்டி ஏரியில் புதிய பத்து அக்குவா பைக் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

(9) ஐந்து சிறப்பு புதிய படகுகள் வாங்கப்பட்டு ஊட்டி ஏரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டிற்கு ரூ.7.50 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்து வருகிறது.

(10) பிச்சாவரம், கொளவாய் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் உள்ள படகு இல்லங்களுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் புதிய படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

(11) கன்னியாகுமரி, மாமல்லபுரம், மதுரை, கொடைக்கானல், இராமேஸ்வரம் மற்றும் ஊட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஓட்டல்கள் ரூ.100.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

(12) ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களுக்கு புதிய தொலைநோக்குக் கருவிகள் (டெலஸ்கோப்) வாங்கப்பட்டுள்ளன.

(13) ஏற்காட்டில் உள்ள ஓட்டலுக்கு தொலைபேசி இணைப்புப் பெட்டி (EPABX) வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(14) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் பயணங்களுக்கு ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்ய பெங்களூரிலுள்ள "திருவாளர்கள் நெட்டி சன்சார் டெக்னாலஜி" நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ஆன்லைன் வசதி மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்குமிடம் மற்றும் பயணங்களுக்கு முன்பதிவு செய்யலாம்.

(15) கொளவாய் ஏரியில் உள்ள படகு இல்லம் 2001-2002 ஆம் ஆண்டில் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.5,000 மட்டுமே கிடைத்து வந்த மாத வருவாய் ரூ.40,000 ஆக உயர்ந்துள்ளது.

**2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிக்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்**

(1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் குழுமம் 30 ஓட்டல்களை தனியார் மூலம் குத்தகை அடிப்படையில் நடத்த



2002 ஏப்ரல் 29]

ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது 9 ஓட்டல்கள் மட்டுமே தனியார் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிக்க எஞ்சியுள்ள ஓட்டல்களையும் தனியார் மூலம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஓட்டல்களைத் தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரிய ஓட்டல்களை மேம்படுத்தி சீர்செய்ய இயலும்.

(2) ஊட்டியில் ரூ.30.00 இலட்சம் செலவில் கூடுதலாக ஒரு படகு இல்லம் அமைக்கப்படும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.100.00 இலட்சம் கூடுதலாக வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய படகுகள் வாங்கப்படும்.

(4) தீவுத்திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொருட்காட்சி நடைபெறும் நாட்களைத் தவிர, இதர காலங்களில் தொழில் தொடர்பான கண்காட்சிகள் நடத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(5) கொடைக்கானலில் கூடுதலாக ஒரு படகு இல்லம் தொடங்கப்படும். இதன் மூலம் வருவாய் அதிகரிக்கும்.

(6) பைக்காரா படகு இல்லத்திற்கு வருகை புரியும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம் விரிவுபடுத்தப்படும்.

(7) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கோடு மாமல்லபுரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் "கோ-கார்ட்" போன்ற நவீன பொழுதுபோக்குக் கருவிகள் இயக்கப்படுவதற்கான கருத்துரு பரிசீலிக்கப்படும்.

(8) திருச்செந்தூர், கிருட்டிணகிரி, இராமேசுவரம், ஓசூர் ஆகிய இடங்களில் ரூ.18 இலட்சம் செலவில் EPABX வசதிகள் செய்யப்படும்.

(9) திருச்செந்தூர் ஓட்டலுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் மின் ஆக்கி வழங்கப்படும்.

(10) மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு ஓட்டல்கள் ரூ.50.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டு 'வான் இணைப்பு' (Wan Connectivity) செய்யப்படும்.

விற்பனைப் பிரிவு [2002 ஏப்ரல் 29

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் பயணத் திட்டங்களை தனியார் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள, அந்த நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அந்த நிறுவனங்களை ஊக்குவிக்க ஒரு விற்பனைப் பிரிவு 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுவரை ஓட்டல்களில் பணிபுரிந்து வந்த பயிற்சி மேலாளர்கள் இந்த விற்பனைப் பிரிவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால், நான்கு மாதங்களில் (நவம்பர், டிசம்பர் 2001 மற்றும் ஜனவரி, பிப்ரவரி 2002) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.9.00 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஒருநாள் முதல் 14 நாட்கள் வரையிலான பல்வகை சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகின்றது. இப்பயணத் திட்டங்கள் தென் மாநிலங்களை மட்டும் உள்ளடக்கியதோடல்லாமல், உத்தரப் பிரதேசம், ஒரிஸா மற்றும் மஹாராட்டிரம் ஆகிய மாநிலங்களும் இத்திட்டத்தில் இடம் பெறுகின்றன. அணைப் பகுதிகள், புனித ஸ்தலங்கள், பாரம்பரியமிக்க நகரங்கள், திருக்கோயில்கள், நீர்வீழ்ச்சிகள், நல்வாழ்வு மையங்கள், கடற்கரைப் பகுதிகள் மற்றும் சரணாலயங்கள் முதலிய இடங்களுக்கு செல்லத்தக்க வகையில் புதியதாக பயணத் திட்டங்கள் 11-1-2002 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சுற்றுலாப் பயணத் திட்ட விவரங்கள் பின்வருமாறு:—

(1) திருத்தணி-காளஹஸ்தி-ஒருநாள் சுற்றுலா

திருத்தணி-நல்லாத்தூர் (ஆஞ்சநேயர்)-மாத்தூர் (மகிசாசுரமர்த்தினி)-காளஹஸ்தி (ராகு கால பூஜை)

(2) ஹைதராபாத்-விஜயவாடா-ஐந்து நாட்கள் சுற்றுலா

நந்தியால்-மகாநந்தி-ஹைதராபாத்.**-விஜயவாடா*

(3) பஞ்சபூத ஸ்தலங்கள்-மூன்று நாட்கள் சுற்றுலா

காளஹஸ்தி-மாத்தூர்-நல்லாத்தூர் (ஆஞ்சநேயர்)- காஞ்சிபுரம்* (ஏகாம்பரேஸ்வரர்)-திருவண்ணாமலை (இரமணாஸ்ரமம்)-திருச்சி*-திருவானைக்காவல்-சிதம்பரம்-பாண்டிச்சேரி



2002 ஏப்ரல் 29]

(4) ஆந்திரா-ஏழுநாட்கள் சுற்றுலா

நெல்லூர்*-விஜயவாடா*-ஹைதராபாத்**—நாகர்ஜுனா சாகர் அணை*-ஸ்ரீசைலம்-நந்தியால்*

(5) கோவா-மந்திராலயம்-புட்டபர்த்தி-ஏழு நாட்கள் சுற்றுலா பெங்களூர்-தும்கூர்-கோவா**-ஹம்பி-ஹோஸ்பேட்*- மந்திராலயம்*-லெபாக்சி-புட்டபர்த்தி*

(6) கன்னியாகுமரி-திருச்சி-மதுரை-நான்கு நாட்கள் சுற்றுலா குற்றாலம்*-பாபநாசம்-அகஸ்தியர் நீர்வீழ்ச்சி-மணிமுத்தாறு-பத்மநாபபுரம் அரண்மனை-திற்பரப்பு நீர்வீழ்ச்சி-பேச்சிப்பாறை-கன்னியாகுமரி*—வட்டக்கோட்டை-கிருட்டிணாபுரம்-மதுரை*-முக்கொம்பு திருச்சி

(7) தேக்கடி-குமுளி-கொடைக்கானல்-மூன்று நாட்கள் சுற்றுலா குமுளி-தேக்கடி-குமுளி*-கொடைக்கானல்*

(8) நான்கு நாட்கள்-மூணார்-தேக்கடி-திருச்சி சுற்றுலா

பழனி-மூணார்*-தேக்கடி-குமுளி*-சுருளி அருவி- திருச்சி-ஸ்ரீரங்கம்-மலைக்கோட்டை-முக்கொம்பு

(9) நான்கு நாட்கள்-டாப்சிலிப் மற்றும் கோயம்புத்தூர் சுற்றுலா பொள்ளாச்சி-டாப்சிலிப்-கோயம்புத்தூர்*-ஆளியார் அணை-குரங்கு நீர்வீழ்ச்சி-பேரூர்-கோயம்புத்தூர்*-பிளாக்தண்டர்-மருதமலை.

(10) ஐந்து நாட்கள்-பெங்களூர்-ஹம்பி-ஹோஸ்பேட்-கோவா சுற்றுலா பெங்களூர்-ஹம்பி-ஹோஸ்பேட்-கோவா**-ஓசூர்*

(11) நான்கு நாட்கள்-பெங்களூர்-மைசூர்-உதகமண்டலம் சுற்றுலா உதகமண்டலம்-மைசூர்-பெங்களூர்

* இரவு தங்குதல்

மைய அரசு, தனது பணியாளர்களுக்கு அளித்து வந்த விடுப்பு பயணச் சலுகை வசதிகளை விலக்கிக்கொண்டதால், போக்குவரத்துப் பிரிவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த இழப்புக்களை ஈடுகட்ட புதிதாக தொடங்கப்பட்டுள்ள விற்பனைப் பிரிவு மூலம் முக்கிய தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அந்த நிறுவன பணியாளர்களுக்கான சிறப்பு சுற்றுலாப் பயணத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்கள் தங்களது விடுப்பு பயணச் சலுகையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பயணத் திட்டங்கள் மூலம்தான் பயன்படுத்திக்கொள்ள

[2002 ஏப்ரல் 29

வேண்டும் என்பதை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிதி நிலை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.3361.36 இலட்சம் வருவாயையும், ரூ.2.95 இலட்சம் நிகர லாபத்தையும் ஈட்டியுள்ளது. 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ.3453.62 இலட்சம் வருமானத்தையும், ரூ.20 இலட்சத்திற்கும் அதிகமாக நிகர இலாபத்தையும் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு-1

**2002-2003 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள மைய அரசு நிதியுதவித் திட்டங்கள்**

(ரூ. இலட்சத்தில்)

| | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதியுதவி | மொத்த திட்டத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலையில் "யாத்ரி நிவாஸ்" (பயணிகள் விடுதி) கட்டுதல் | 39.10 | 5.00 | — | 44.10 |
| 2. | விழுப்புரத்தில் சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்டுதல் | 18.78 | 4.75 | — | 23.53 |
| 3. | காஞ்சிபுரத்தில் சுற்றுலா வளாகம் கட்டுதல் | 24.60 | 6.15 | — | 30.75 |
| 4. | மதுரையில் அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலய சுற்றுப்பகுதிகளில் சுற்றுச் சூழல் மேம்பாடு (பகுதி-2) | 9.00 | — | 3.00 | 12.00 |
| 5. | மாமல்லபுரத்தில் ஐந்து ரதம் மற்றும் கடற்கரை கோயில் பகுதிகளில் சுற்றுச்சூழல் மேம்பாடு | 15.00 | 7.50 | 5.33 | 27.83 |
| 6. | இராமேசுவரத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 28.50 | 28.50 | — | 57.00 |



2002 ஏப்ரல் 29]

(ரூ. இலட்சத்தில்)

| | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதியுதவி | மொத்த திட்டத் தொகை |
|---|---|---|---|---|---|
| 7. | மண்டபம் அருகில் உள்ள குருசடைத் தீவிற்கு கண்ணாடி அடித்தளப் படகுகள் வாங்குதல் | 18.90 | — | — | 18.90 |
| 8. | கன்னியாகுமரியில் பொதுக் கழிப்பிடங்கள் | 12.00 | 4.35 | — | 16.35 |
| 9. | காஞ்சிபுரத்தில் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அருகில் கழிப்பிட வசதிகள் | 12.00 | — | 4.00 | 16.00 |
| 10. | கிண்டி பூங்காவில் கழிப்பிட வசதிகள் | 9.00 | — | 3.00 | 12.00 |
| 11. | திருச்செந்தூரில் கழிப்பிட வசதிகள் | 16.00 | — | 8.00 | 24.00 |
| 12. | திருவேற்காட்டில் கழிப்பிட வசதிகள் (திருவள்ளூர் மாவட்டம்) | 12.00 | 4.00 | — | 16.00 |
| 13. | கன்னியாகுமரியில் குடிநீர் வசதி | 15.00 | — | 15.00 | 30.00 |
| 14. | கன்னியாகுமரியில் ஒருங்கிணைந்த மின்வசதி | 25.00 | — | 5.00 | 30.00 |
| 15. | கொடைக்கானலில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம் | 20.00 | — | 10.00 | 30.00 |
| 16. | திருத்தணியில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம் | 20.00 | — | 5.00 | 25.00 |
| 17. | கன்னியாகுமரியில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம் | 50.00 | — | 50.00 | 100.00 |
| 18. | மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருகில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம் | 16.00 | — | 4.00 | 20.00 |

[2002 ஏப்ரல் 29

(ரூ. இலட்சத்தில்)

| | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு. | மாநில அரசு பங்கு. | இதர வகை நிதியுதவி. | மொத்த திட்டத் தொகை. |
|---|---|---|---|---|---|
| 19. | மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்துமிடம். | 16.00 | - | 8.00 | 24.00 |
| 20. | பிச்சாவரத்தில் சுற்றுச்சூழல் மேம்பாடு. | 50.00 | - | 5.55 | 55.55 |
| 21. | கோடியக்கரையில் வனக் குடில்கள் அமைத்தல். | 25.00 | 4.45 | 5.00 | 34.45 |
| 22. | வேலூர் கோட்டையை சீரமைத்தல். | 15.00 | 7.50 | - | 22.50 |
| 23. | திருமலை நாயக்கர் மஹால் ஒலி-ஒளிக்காட்சி அமைப்பை நவீன மயமாக்குதல். | 54.65 | 41.53 | - | 96.18 |
| 24. | தஞ்சாவூரில் உயர் கம்ப மின் விளக்கு அமைத்தல். | 20.00 | - | 1.50 | 21.50 |
| 25. | மதுரையில் "யாத்ரி நிவாஸ்" (பயணிகள் விடுதி) கட்டுதல். | 38.10 | - | 14.00 | 52.10 |
| 26. | சென்னை எலியட்ஸ் கடற்கரையை மேம்படுத்துதல். | 15.00 | - | 23.53 | 38.53 |
| 27. | நாகப்பட்டினம் கடற்கரையை மேம்படுத்துதல். | 9.00 | - | 9.00 | 18.00 |
| 28. | ஏலகிரியில் "யாத்ரி நிவாஸ்" கட்டுதல். | 30.00 | - | 10.00 | 40.00 |
| 29. | ஏற்காடு ஏரிப் பகுதியினை மேம்படுத்துதல். | 7.50 | - | 7.50 | 15.00 |
| 30. | திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லியில் கிராமியச் சுற்றுலா. | 10.00 | - | 10.00 | 20.00 |
| 31. | மாமல்லபுரத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 13.33 | 6.66 | - | 19.99 |



2002 ஏப்ரல் 29]

(ரூ. இலட்சத்தில்)

| | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு. | மாநில அரசு பங்கு. | இதர வகை நிதியுதவி. | மொத்த திட்டத் தொகை. |
|---|---|---|---|---|---|
| 32. | சுற்றுலா பற்றிய புதிய மென்தட்டு (C.D.Rom). | 1.60 | - | - | 1.60 |
| 33. | சுற்றுலா பற்றிய தொடுதிரை (Touch Screen). | 23.50 | - | - | 23.50 |
| 34. | பெருந்துறையில் வழித்தட வசதிகள் ஏற்படுத்துதல். | 10.00 | - | 10.00 | 20.00 |
| 35. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் புளியஞ் சோலையில் சுற்றுலாப்பகுதி மேம்படுத்துதல். | 17.50 | 17.50 | - | 35.00 |
| 36. | காஞ்சிபுரம் மாவட்டம் சிறுங்குன்றத்தில் கிராமியச் சுற்றுலா மேம்பாடு. | 10.00 | 10.00 | - | 20.00 |
| 37. | மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசு பகுதியை மேம்படுத்துதல். | 11.25 | 11.25 | - | 22.50 |
| 38. | விழுப்புரம் மாவட்ட வீடூர் அணைப் பகுதியை மேம்படுத்துதல். | 5.00 | 5.00 | - | 10.00 |
| 39. | கன்னியாகுமரியில் சுற்றுலா வரவேற்பு மையம் அமைத்தல். | 45.00 | 15.00 | - | 60.00 |
| 40. | முட்டுக்காடு பகுதிக்கு புதிய படகுகள் வாங்குதல் (சிறப்பு சுற்றுலாப் பகுதி). | 20.00 | - | - | 20.00 |
| 41. | திருத்தணியில் உயர் கம்ப மின் விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |
| 42. | திருக்கழுக்குன்றத்தில் உயர் கம்ப மின் விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |
| 43. | திருவண்ணாமலையில் உயர் கம்ப மின் விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |

[2002 ஏப்ரல் 29

# இணைப்பு-2

## 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவு பெறும் நிலையில் உள்ள மைய அரசு நிதியுதவித் திட்டங்கள்

(ரூ. இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு. | மாநில அரசு பங்கு. | இதர வகை நிதியுதவி. | மொத்த திட்டத் தொகை. |
|---|---|---|---|---|
| 1. ஒகேனக்கல்லில் கழிப்பிட வசதிகள். | 12.00 | 4.35 | - | 16.35 |
| 2. நாகூரில் கழிப்பிட வசதிகள் | 12.00 | 4.00 | - | 16.00 |
| 3. வேளாங்கன்னியில் கழிப்பிட வசதிகள். | 12.00 | - | 4.35 | 16.35 |
| 4. கன்னியாகுமரியில் காந்தி மண்டபம் மற்றும் நீச்சல் குளப்பகுதியில் நடைபாதை மேம்பாடு. | 25.00 | 25.00 | - | 50.00 |
| 5. திருச்சிராப்பள்ளியில் உயர் கம்ப மின் விளக்கு. | 11.35 | - | 2.90 | 14.25 |
| 6. ஒகேனக்கல்லில் சுற்றுச் சூழல் மேம்பாடு. | 13.40 | - | 6.60 | 20.00 |
| 7. தஞ்சாவூர் அரண்மனையைப் புனரமைத்தல். | 15.00 | 7.50 | - | 22.50 |
| 8. தஞ்சாவூர் பெரிய கோயில் சுற்றுச்சூழல் மேம்படுத்துதல். | 15.00 | - | 7.50 | 22.50 |
| 9. வட்டக்கோட்டையில் வழித்தட வசதிகள். | 20.00 | 5.00 | - | 25.00 |
| 10. கன்னியாகுமரியில் காட்சிகோபுரம் அமைத்தல். | 30.00 | 5.00 | - | 35.00 |
| 11. திருத்தணியில் கூடுதல் அறைகள் அமைத்தல். | 20.00 | 5.00 | - | 25.00 |
| 12. வேலூர் கோட்டையில் ஒருங்கிணைந்த மேம்பாடு. | 26.60 | 13.40 | - | 40.00 |
| 13. ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்காவல் ஆலயப் பகுதியில் சுற்றுச்சூழல் மேம்பாடு. | 15.00 | 6.65 | - | 21.65 |
| 14. ஏற்காடு மற்றும் ஏலகிரி மலைப்பாதை மேம்பாடு. | 4.00 | - | - | 4.00 |
| 15. மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றி சுற்றுச்சூழல் மேம்பாடு (பகுதி-1). | 15.00 | 7.50 | - | 22.50 |
| 16. மதுரை இராணி மங்கம்மாள் சத்திரம் சீரமைத்தல். | 10.00 | 5.00 | - | 15.00 |
| 17. காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் ஆலய சுற்றுச்சூழல் மேம்படுத்துதல். | 15.00 | 7.50 | - | 22.50 |



2002 ஏப்ரல் 29]

(ரூ. இலட்சத்தில்)

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு-3

### 2001-2002 ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள்.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | திட்டங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | அ. திருச்செந்தூரில் கட்டமைப்பு வசதிகள். | 23.00 |
| | | ஆ. தூத்துக்குடி கடற்கரையை அழகுபடுத்துதல். | 10.25 |
| 2. | திருநெல்வேலி | அ. குற்றாலத்தில் சுற்றுச்சூழல் மேம்பாடு. | 39.00 |
| 3. | தேனி | அ. சுருளி அருவியில் ஓய்வறை, பூங்கா மற்றும் விளக்குகள் அமைத்தல். | 12.00 |
| | | ஆ. கும்பக்கரை அருவியில் அடிப்படை வசதிகள். | 15.00 |
| 4. | கரூர் | அ. கட்டளை அணையில் அடிப்படை வசதிகள். | 13.00 |
| | | ஆ. செட்டிபாளையம் குளத்தில் அடிப்படை வசதிகள். | 10.00 |
| | | இ. நேரூரில் அடிப்படை வசதிகள் | 10.00 |
| 5. | அரியலூர் | அ. கங்கைகொண்ட சோழபுரத்தில் அடிப்படை வசதிகள். | 35.00 |
| 6. | விருதுநகர் | அ. பிளவக்கல் அணையில் மேம்பாட்டுப் பணிகள். | 20.00 |
| 7. | ஈரோடு | அ. பவானி கூடுதுறையில் கட்டமைப்பு வசதிகள். | 39.00 |
| 8. | நாமக்கல் | அ. கொல்லி மலையில் கட்டமைப்பு வசதிகள். | 20.00 |



2002 ஏப்ரல் 29]

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | திட்டங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 9. | நாகப்பட்டினம் | அ. கோடியக்கரையில் உள்ள ராமர்பாதம் பகுதியில் கட்டமைப்பு வசதிகள். | 15.00 |
| 10. | தருமபுரி | அ. பாம்பாறு அணை பூங்கா மேம்பாடு | 20.00 |
| | | ஆ. ஓசூரில் உள்ள கெளவரப்பள்ளி அணைக்கட்டுத்திட்டம்-பூங்கா மேம்பாடு. | 20.00 |
| | | இ. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் உள்ள பூங்காவை அழகுபடுத்துதல். | 20.00 |
| 11. | மதுரை | அ. திருப்பரங்குன்றத்தில் நடைபாதை, ஓய்வறை மற்றும் கழிப்பறை. | 36.00 |
| 12. | சிவகங்கை | காரைக்குடி நகராட்சி (பாரம்பரிய மிக்க நகரப் பகுதி)— | |
| | | அ. கல்லுக்கட்டியில் நவீன கழிப்பறை | 1.00 |
| | | ஆ. கல்லுக்கட்டியில் வாடகை சிருந்து நிறுத்துமிட மேம்பாடு. | 3.00 |
| | | இ. கல்லுக்கட்டியில் வாகனம் நிறுத்துமிடம். | 1.00 |
| | | ஈ. மகரநோம்பு பொட்டலில் கழிப்பறை. | 15.00 |
| | | உ. மகரநோம்பு பொட்டலில் சுற்றுச்சுவர். | 15.00 |
| | | ஊ. முத்துப்பட்டினம் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மோட்டார். | 5.00 |

[2002 ஏப்ரல் 29

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | திட்டங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 13. | காஞ்சிபுரம் | அ. சிறுங்குன்றத்தில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வுக் கூடம். | 6.00 |
| | | ஆ. முட்டுக்காடு படகு குழாம் மேம்பாடு. | 4.00 |
| | | இ. முதலியார் குப்பம் மேம்பாடு | 16.00 |
| | | ஈ. கொளவாய் ஏரி மேம்பாடு | 15.00 |
| 14. | சேலம் | அ. ஏற்காடு ஏரி மேம்பாடு (முதற்கட்டம்). | 10.00 |
| 15. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை— | |
| | | அ. சோடியம் ஆவி விளக்குகள் | 2.07 |
| | | ஆ. குடிநீர் வசதி | 14.08 |
| | | இ. கழிப்பறை | 10.00 |
| | | ஈ. சாலை மேம்பாடு | 5.60 |
| | | ஜவ்வாது மலை— | |
| | | அ. கொமுட்டேரியில் கரைகள் பலப்படுத்துதல். | |
| | | ஆ. கொமுட்டேரி குளக்கரையில் காங்கிரீட் நடைபாதை. | 20.00 |
| | | இ. கொமுட்டேரி குளக்கரைச் சாலை சீரமைப்பு. | |
| | | மொத்தம் | **500.00** |



2002 ஏப்ரல் 29]

# இணைப்பு III

***(468 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)***

**மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003.**

**முன்னுரை**

பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன்வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப் பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும், மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டட அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களை சிறந்த தொழில்நுட்ப உதவிகள் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

## பாசனம்

**பாசன நிலை**

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பு, அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது:—

[2002 ஏப்ரல் 29

(1) கால்வாய்கள் : 8.67 இலட்சம் எக்டேர்

(2) ஏரிகள் : 6.33 இலட்சம் எக்டேர்

(3) கிணறுகள், குழாய்க் கிணறுகள் மற்றும் இதர ஆதாரங்கள். : 14.72 இலட்சம் எக்டேர்

**தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி**

தமிழ்நாட்டில் பெரியது மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்ட தொடக்கத்தில் 23 பெரியது மற்றும் நடுத்தர திட்டங்களின் மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்டக் காலத்தில் 2001-2002 முடிய பாசனம் பெறும் பகுதி 29.72 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

2002-2003 ஆம் ஆண்டில் 2000 எக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை மாநில நதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்.

தமிழ்நாடு, அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை தமிழ்நாட்டுக்கு திருப்பி விடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையை தமிழ்நாடு அணுகியுள்ளது.

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையானது இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.



2002 ஏப்ரல் 29]

மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி-வைகை இணைப்புகளில் மிகுதியான நீரை திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக் கூறுகள் பற்றிய முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதனையன்றி பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழு மூச்சாக தொடர்புகொள்ளப்பட்டு வருகிறது.

**நீர்வள ஆதார அமைப்பு**

நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தைச் செயலாக்குவதில் முதற்படியாகவும், அதனைத் திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும், பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பு 1995 டிசம்பர் முதல் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநிலவாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.

நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது:—

(1) முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை.

(2) தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை.

(3) தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை.

(4) தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை

(5) தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம். சென்னை

(6) தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை.

(7) தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி.

(8) தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், கோயம்புத்தூர்.

(9) தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை.

(10) இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை.

(11) இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.

**பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்**

மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பெரியது மற்றும் நடுத்தரப் பாசன திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாக உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப் பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரை சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக சாகுபடி செய்யவும் இயலும்.

இந்நோக்கத்துடன் பெரியாறு-வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளதாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல் திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களை புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் விநியோக அளவை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாக பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மை திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டமானது 1995-96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி இத்திட்டப் பணிகளில் எஞ்சியுள்ளவற்றை முடிக்க 31-3-2003 வரை கால நீட்டிப்பு வழங்கியுள்ளது.





**நிதி ஒதுக்கீடு**

2002-2003 ஆம் நிதியாண்டு திட்ட மதிப்பீடு ரூ.280.70 கோடியாகும். இதில் ரூ.158.85 கோடி நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் சார்ந்ததாகும்.

**பெரிய நீர்பாசனத் திட்டங்கள்**

மாநிலத்தில், மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

*மாநில திட்டப் பணிகள்*

*நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள்*

2002-2003 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன:—

(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்).

(2) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்).

(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்).

(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்).

(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்).

(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்).

(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்).

(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்).

[2002 ஏப்ரல் 29

(9) வரட்டாறு-குப்பத்து ஓடை நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்).

(10) பத்தலபள்ளி-மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்).

(11) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்).

(12) வரட்டாறு-வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தருமபுரி மாவட்டம்).

(13) கால்வாய்-சடையநேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்).

(14) நாராயண காவேரி வாய்க்கால் (இராமநாதபுரம் மாவட்டம்).

(15) உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

(16) முதலை முத்துவாரியின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்).

(17) சுடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்).

(18) நாயோடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்).

(19) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்).

(20) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (ஈரோடு மாவட்டம்).

(21) ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

(22) சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்).

(23) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்).

(24) சிறுமலையாற்றின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்).



2002 ஏப்ரல் 29]

(25) கொடகனார் நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு பாசன வசதி அளித்தல்.

(26) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகு படுத்துதல்.

(27) வண்டியூர் குளத்தை தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்).

(28) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்.

(29) திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்.

(30) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்.

(31) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்).

(32) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்).

(33) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்).

(34) கீழ்பவானி பாசன அமைப்பை புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்.

(35) கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களை புனரமைத்தல்.

(36) உய்யகொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர்வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ள சேதத்தைப் பாதுகாக்க கரைகளை வலுப்படுத்துதல்.

(37) திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்.

(38) மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரை திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்.

[2002 ஏப்ரல் 29

(39) கரூர் மாவட்டம் பள்ளபட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல்.

(40) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல்.

(41) சென்னம்பட்டி அணைக்கட்டு திட்ட கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்.

(42) மேலூரிலிருந்து மரவன்மங்கலம் குளம் வரை பெரியார் பிரதான கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்.

(43) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்பு திட்டம்.

(44) குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசன திட்டத்தை புனரமைத்தல் (நீ.ஆ.தொ.தி.).

(45) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்).

(46) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்).

(47) இராஜாதோப்பு கானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்).

(48) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்).

(49) அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்).

(50) அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி) (விருதுநகர் மாவட்டம்).

(51) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்).

(52) கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்).

(53) (வராகநதி) சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) (நீ.ஆ.தொ.தி).



2002 ஏப்ரல் 29]

குறிப்பு: மொத்தம் 53 திட்டங்களில் 9 திட்டங்கள், (வரிசை எண் 45 முதல் 53 வரை) நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் "நடைபெறும் நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் முடிவாக்கம்" என்ற தலைப்பின்கீழ் செயலாக்கப்படுகின்றன.

*நடைபெற்று வரும் நடுத்தர பாசன திட்டப் பணிகளின் செயலாக்க நிலை:*

**(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல்**

பெரியாறு நீர்த் தேக்கத் திட்டமானது ஒரு வடிநிலப் பரப்பிலிருந்து மற்றொரு வடிநிலப் பரப்பிற்கு நீரைத் திருப்புவதற்காக மேற்கொண்ட துணிவான முயற்சியாகும். இம்முயற்சியானது மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு நீரை கிழக்கு நோக்கித் திருப்பி, வைகை வடிநிலப் பரப்பின் பாசனத்திற்காக திரு. கர்னல் பென்னி குவிக் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் 1895 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

திருவிதாங்கூர் அரசிற்கும் முன்னாள் சென்னை மாகாணத்திற்கும் இடையே ஏற்பட்ட நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த குத்தகை ஒப்பந்தம் 1886 ஆம் ஆண்டு உருவாகியது. இதற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு-கேரள அரசுகளுக்கிடையே பெரியாறு நீரைக் கொண்டு மின் உற்பத்தி செய்வது பற்றி ஓர் ஒப்பந்தம் உருவாகியது. பெரியாறு அணையில் நான்கு பகுதிகளில் அதாவது (1) பிரதான அணை (2) சிற்றணை (3) மண் அணை மற்றும் (4) உபரி நீர் வழிந்தோடி மதகு ஆகியவை உள்ளன.

பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த கவலையை 1979 ஆம் ஆண்டில் கேரள அரசு எழுப்பியது. மத்திய அரசின் அறிவுரைகளுக்கிணங்க மத்திய நீர் குழுமத்தின் தலைவரான திரு. கே.சி தாமஸ், அக்குழுமத்தின் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு-கேரள அரசுப் பொறியாளர்கள் பெரியாறு அணையை 23-11-1979 அன்று ஆய்வு செய்தனர். 25-11-1979 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நவீன வடிவமைப்புப்படி அணையை பலப்படுத்துதல், அணையில் ஏற்படக்கூடிய அழுத்தம் மற்றும் நில நடுக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டன. மத்திய நீர் குழுமத்தின் தலைவர் ஒரு சில பலப்படுத்துதல் பணிகளை மேற்கொள்ளலாமென்று தெரிவித்தார். இதற்கிடையில் பெரியாறு

[2002 ஏப்ரல் 29

அணையின் பிரதான அணையை பலப்படுத்துவதன் பொருட்டு அணையின் முழு நீர் மட்டமான 152 அடியிலிருந்து 136 அடிக்கு தற்காலிகமாகக் குறைக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டது. மத்திய நீர் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு. அரசு பணிகளை செய்து முடித்துள்ளது. பின்னர் மத்திய நீர் குழுமம் கீழ்க்கண்ட பலப்படுத்தும் பணிகளைச் செய்து முடிக்கலாமென்றும், அவ்வாறு பணிகள் செய்து முடிக்கப்பட்டவுடன் அணையில் நீரை 152 அடி வரையில் தேக்கி வைக்க முடியுமென்றும் தெரிவித்தது.

(அ) சிற்றணையின் கைப்பிடிச் சுவர் 160 அடிக்கு உயர்த்தப்படலாம்.

(ஆ) பிரதான அணை மற்றும் சிற்றணையின் கைப்பிடிச் சுவர் ஆகியவை இணைக்கப்பட வேண்டும்.

(இ) பிரதான அணை மற்றும் சிற்றணைக்கு மேற்பகுதியில் உள்ள தீவு, பிரதான அணை மற்றும் உபரி நீர் வழிந்தோடி மற்றும் நீர்த் தேக்கத்தின் விளிம்பு ஆகியவற்றின் இரு பக்கங்களிலும் 165 அடி வரையில் உயர்த்தப்பட வேண்டும்.

(ஈ) புதிய மூன்று கூடுதல் மதகின்கீழ் நீர் சக்தி வெளியேற்றும் பணி மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் பணி.

கேரள அரசு கைப்பிடிச் சுவரை உயர்த்துவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதால், இந்தப் பணி முடிக்கப்படவில்லை. நீர் சக்தி வெளியேற்றும் பணியை முடிப்பதற்கு காலதாமதமாகிறது. குத்தகைக்கு அளிக்கப்பட்ட இடத்திலிருந்து கற்களை வெட்டி பணிகளை நிறைவேற்றி வந்துகொண்டிருந்த நிலையில், வன விலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 மற்றும் பிற சட்டங்களை சுட்டிக்காட்டி, நீர் சக்தி வெளியேற்றும் பணியை நிறைவேற்ற கேரள அரசு மறுப்புகளை தெரிவித்ததினால் இப்பணியை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆகியது. கேரள உயர்நீதி மன்றத்தின் தலையீட்டினால், இப்பணி மீண்டும் தொடங்கப்பட்டு பணிக்கான கற்கள் வேறு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, இப்பணி தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.

மத்திய நீர் குழுமம் பரிந்துரைத்துள்ளவாறு சிற்றணையை காங்கிரீட் பூச்சு பூசி பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிற்றணையை பலப்படுத்த கேரள அரசு அதன் இசைவை அளிக்க முன்வரவில்லை. எனினும் இந்த பலப்படுத்தும் பணியை தொடங்குவதைத் தவிர



2002 ஏப்ரல் 29]

தமிழ்நாட்டிற்கு வேறு வழி இல்லை. இந்தப் பணி தொடங்கவிருந்தபொழுது, 5-8-1999 அன்று கேரள அரசின் வனத் துறை அதிகாரிகள் எந்தவிதமான காரணத்தையும் தெரிவிக்காமல், இந்த பணி தொடங்குவதைத் தடை செய்தனர். இந்தப் பணிக்கான ஒப்பந்தக்காரர் கேரள உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கில், இந்தப் பணியை நிறைவேற்ற கேரள அரசு அனுமதிக்க வேண்டுமென்று முறையீடு செய்துள்ளார். இந்த வழக்கு கேரள உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பெரியாறு அணையில் நீரைத் தேக்கி வைப்பது குறித்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்ட நீதிப் பேராணைகள் கேரள மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. தமிழ்நாடு அரசு 14-12-1998-ல் இவ்விரு நீதிமன்றங்களில் உள்ள நீதிப் பேராணைகளை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டி மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. தமிழ்நாடு அரசு மற்றும் பிறர் தாக்கல் செய்த மாற்றல் மனுவை 1-2-1999 அன்று விசாரித்தபொழுது தமிழ்நாடு அரசு முறையீடு செய்தவாறு இவ்விரு நீதிமன்றங்களின் முன் நிலுவையில் உள்ள வழக்குகளை மேற்கொண்டு விசாரிக்கத் தடையாணை வழங்கியது. இந்த மாற்றல் மனு 13-12-1999 அன்று மீண்டும் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது, இவ்வழக்கை எட்டு வார காலத்திற்கு தள்ளிவைத்து இந்த இடைப்பட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட மாநிலங்களிடையே ஓர் ஒருமித்த கருத்து ஏற்படக் கூடுமென்று நம்பிக்கை தெரிவித்தது.

உச்ச நீதிமன்றத்தின் கருத்திற்கேற்ப, 5-4-2000 அன்று தமிழ்நாடு-கேரள முதலமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஒருமித்த கருத்து ஏதும் ஏற்படவில்லை. உச்ச நீதிமன்றம் 28-4-2000 அன்று விழைந்ததற்கிணங்க, 19-5-2000 அன்று மத்திய நீர் ஆதார அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு-கேரள அரசுகளின் முதலமைச்சர்களது கூட்டத்தினை கூட்டினார். மத்திய நீர் ஆதார அமைச்சர் அவர்கள் இரு மாநிலங்களின் கருத்துகள் மற்றும் வல்லுநர்களின் கருத்துகளை கேட்டறிந்த பின்னர் இரண்டு மாநிலங்களை கலந்தாலோசித்து, பெரியாறு அணையை ஆய்வு செய்து அவ்வணையில் நீரை படிப்படியாக உயர்த்துவதற்கு பரிந்துரை செய்வதற்காக சிறந்த பொறியாளர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்படுமென்று முடிவு செய்தார். இம்முடிவிற்கிணங்க ஜூன் 2000-ல் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது.

இந்த வல்லுநர் குழு அதன் இறுதி அறிக்கையை மார்ச்சு 2001-ல் மத்திய நீர் ஆதார அமைச்சகத்திற்கு அளித்துள்ளது. அதன்மீது இவ்வரசின் கருத்துகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மத்திய நீர்வளத் துறை வல்லுநர் குழுவின் இறுதி அறிக்கையை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றம் இரு மாநிலங்களிடம் இறுதி அறிக்கைமீதான அனைத்து பதில்களை தாக்கல் செய்யுமாறு கோரியுள்ளது. தமிழக அரசு வல்லுநர் குழுவின் இறுதி அறிக்கைக்கு பதிலினை தயாரித்து 6-2-2002 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. மேலும் கேரள அரசு கொடுத்த இறுதி அறிக்கைக்கான பதில் மனுவிற்கான பதிலினை 25-02-2002-ல் தாக்கல் செய்துள்ளது.

இந்த மாற்றல் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் இன்னமும் உள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.30.00 இலட்சம்.

**(2) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயப்பட்டி, சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2,530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையில்லா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை மற்றும் வழிந்தோடி அமைக்கும் பணியும் பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டுக்கு ரூ.37.36 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அநேக பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 80 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.125.00 இலட்சம்.

**(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில்



இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி, சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுக்குறிச்சி, மேல்கரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை. வடமலபுரம், வெளவால் தொத்தி, வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், கிடைக்க வழிவகை செய்கிறது.

அர்ஜுனா மற்றும் வைப்பாறு நதிகளின் குறுக்கே கல்லணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. கால்வாய் கட்டும் பணி 75 விழுக்காடும் கிளைக் கால்வாய் பணிகளில் 95 விழுக்காடும் முடிவடைந்துள்ளது. கால்வாயில் குறுக்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண் அணை (வலது புறம் 1300 மீ-1850 மீ) அமைக்கும் பணி தரைமட்டம் அளவுக்கு முடிவுற்றது. ஆழமற்ற பகுதி மண் அணை அமைக்கும் பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். எல்லாப் பணிகளும் மார்ச் 2003-ல் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நபார்டு வங்கி கடனுதவி தர ஒப்புதல் அளித்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.160.00 இலட்சம்.

**(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வரட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்ன ஓவலாபுரம், இரசக்கநாய்க்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கப்படும்.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.6.95 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை, வழிந்தோடா பிரிவு, தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன் கூடிய கால்வாய்கள் அடங்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி பெரும்பகுதி முடிவடைந்துள்ளது. கல்லணை கட்டுமானப் பணி 90 விழுக்காடும்,

[2002 ஏப்ரல் 29

குறுக்கு கட்டுமானப் பணிகள் 95 விழுக்காடும், காரை பூசுதல் 95 விழுக்காடும் முடிவுற்றுள்ளன. தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு கட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசு இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. 2002-2003 நிதியாண்டில் எல்லாப் பணிகளும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.85.00 இலட்சம்.

**(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகாமையில், கமுதி நீர் கட்டுப்பாட்டு மதகிற்கு கீழ்ப்புறமாக கிருதமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாற்றுடன் சங்கமிக்கும் இடத்திற்குக் கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள ஓ.கரிசல்குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்), மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகுசந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன் கூடிய வலது மற்றும் இடது பிரதான கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இத்திட்டத்தில் எல்.எஸ்.0 மீ. முதல் 200. மீ மற்றும் 200 மீ. முதல் 385 மீ வரை அணை தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது. வலதுபுற தலைமதகு கட்டும் பணி மற்றும் மணல்போக்கி மதகு கட்டும் பணி, மண் அணை அமைத்தல், மற்றும் இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 50 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. அனைத்துப் பணிகளும் 2002-2003-ல் முடிக்கப்படும். 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ. 100.00 இலட்சம்.



2002 ஏப்ரல் 29]

**(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)**

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கோடியில் ஓர் உயர்மட்டக் கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. சுற்காரை பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவுநீர்க் குட்டைகள், 29 கண்மாய்களின்கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பதினான்கு பணிகளில் 12 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 9 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. கட்டடப் பணிகள் முடிவடைந்தன. 3 பணிகள் நிலச் சொந்தக்காரர்களின் ஆட்சேபத்தால் தாமதமாகின்றன. இரண்டு பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட உள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.150.00 இலட்சம்.

**(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.18.28 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ரூ. 27.38 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருனாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

[2002 ஏப்ரல் 29

இத்திட்டத்திற்கு 36.69 எக்டேர் வனத் துறை நிலம் பொதுப் பணித் துறைக்கு மாற்றவும், 15 எக்டேர் புறம்போக்கு நிலம் மற்றும் 100.245 எக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தவும் வேண்டியுள்ளது.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. முதற் கட்டப் பணிகளான அணுகுசாலை அமைத்தல் மற்றும் முகாம் காலனி பணிகள் முடிவுற்றன. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 30 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. நபார்டு வங்கி கடனுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.100.00 இலட்சம்.

**(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தை ரூ.21.33 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ.34.00 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர் கங்காரமந்தல், சந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், எந்தவம்பாடி கிராமங்களிலும், ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முள்ளிப்பட்டு, பையூர், கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அரூர், சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுகப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல் சேவுமங்கலம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் இந்த பிற்பட்ட பகுதியின் பாசன வசதிக்கான நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும்.

முதற்கட்டப் பணிகளான சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி, அலியாபாத்தில் வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட இதர பணிகள் முடிவுற்றன.

இத்திட்டத்திற்கு 99.62 எக்டேர் வனத் துறை நிலமும், 21.50 எக்டேர் தனியார் பட்டா நிலமும் மற்றும் 3.25 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன.



2002 ஏப்ரல் 29]

ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் வனத் துறை நிலங்கள் பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட வேண்டிய பணி முன்னேற்றத்தில் உள்ளன. நபார்டு வங்கி கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.50.00 இலட்சம்.

**(9) வரட்டாறு - குப்பத்து ஓடை குறுக்கே நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ரூ.8.78 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் சொக்கம்பட்டி கிராமங்கள் மற்றும் வி.கே. புதூர் வட்டத்தில் மடத்துப்பட்டி கிராமம் ஆகியவற்றில் 165 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும், 77 எக்டேர் நிலம் பாசன உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப்பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.

இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள சிலர் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு அரசுக்கு சாதகமாக அமைந்த போதிலும் உள்ளூர் ஆயக்கட்டுதாரர்கள் மீண்டும் வழக்குத் தொடர்ந்துள்ளதால் பணி மேற்கொள்ளுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**(10) பத்தலப்பள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)**

இத்திட்டமானது வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம், பத்தலபள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.29.55 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர், மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமான்குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு, சாதம்பாக்கம், ராஜக்கால், ஆனியங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்ன தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஒகடசி மற்றும் சிட்லூத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட

பாசன நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, ஆற்று மதகு, அபிவிருத்தி அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 36.98 எக்டேர் பட்டா நிலமும், 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 11.32 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் திட்ட செயலாக்கத்தின் தொடக்கப் பணிகள் பெரும்பாலானவை முடிவுற்றன. வழிந்தோடி அமைக்கும் பணி முடிவு பெற்றுள்ளது. மற்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

**(11) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ரூ.35.46 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடிக் கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வளையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல்புழுதியூர், பெரும்பட்டம், பக்கிரிபாளையம், துக்கப்பேட்டை, மேமலூர், காயம்பட்டு கங்காரவரன், சென்னசமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர்மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அன்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம், மற்றும் அரிதாரைமங்கலம் கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர்மங்கலம், கரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன்பட்டு, மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும், போளூர் வட்டத்தில் கடலாடி, குணத்தூர், கீழத்தூர் கிராமங்களிலும், மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்கு





பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர் வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 190.42 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 103.75 எக்டேர் புறம்போக்கு நிலமும், 13.34 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நியமப்படி மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

தொடக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ10.00 இலட்சம்

**(12) வரட்டாறு - வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தருமபுரி மாவட்டம்)**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.19.20 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.35.95 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளி மதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம்புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்கு பாசன உறுதி, மற்றும் 1047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கான பாசன வசதியும் கிடைக்கப் பெறும்.

இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்போக்கி, தலை மதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்திற்கு 94.31 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 24.87 எக்டேர் வனத் துறை நிலமும், மற்றும் 23.82 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மைய அரசு 22-12-2000-ல் வனத் துறை நில மாற்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பணிகளுக்கான

ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 'நபார்டு' வங்கி கடனுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ60.00 இலட்சம்.

**(13) கால்வாய் சடையனேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)**

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு 12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ஏற்கெனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரை அகலப் படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி நீட்டிப்பு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன்தருவை வரையில் ஏற்கெனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரைவன்தருவை முதல் புத்தன்தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரி கால்வாயின் கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தஞ்சைச் குளத்தின்கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு ஏரிகளை நிரப்புவதன் மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார் குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவாரிமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திருப்பணிபுத்தன்தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

இத்திட்டம், மாநில நிதித் தொகுப்பின்கீழ் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகளில் 70 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிக்கு "நபார்டு" வங்கி கடன் உதவி செய்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.179.84 இலட்சம்.

**(14) நாராயண காவேரி வாய்க்காலை புனரமைத்து சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயண காவேரி வாய்க்கால் மற்றும் அதன்கீழ் உள்ள சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும் மண்டலமாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்து சீர்செய்ய ரூ.5.75 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தது.





இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே. நெடுங்குளம், சீமானேந்தல், குண்டுக்குளம், கே. வேப்பங்குளம், ஓ. கரிசல்குளம், கோவிலங்குளம், கூம்பூதி, எம்.புதுக்குளம் மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம்.கரிசல்குளம், என்.கரிசல்குளம், ஏ. உசிலங்குளம், எஸ். வாகைகுளம், பிள்ளையார்குளம், எஸ். கீரண்டை மற்றும் கீழ அல்லிக்குளம் ஆகிய கிராமங்களிலும் 1942.97 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

90 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.35.00 இலட்சம்.

**(15) உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கானக்கிளிய நல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவயலூர் அருகே உப்பாறு ஓடை நந்தியாற்றுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கானக்கிளிய நல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.

மண் அணை, உபரி நீர் போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 60 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

**(16) முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே ரூ.9.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி, வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள

கரும்பூண்டி கிராமம் இவற்றின் 110 எக்டேர் நிலங்களுக்கு நிலையான [2002 ஏப்ரல் 29
பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன
வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன
வசதியும் கிடைக்கும்.

2,300 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி
மற்றும் 4 மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 40
விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 நிதி
ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

### (17) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கெனவே
உள்ள கடானா அணையின் வலதுபுறத்தில் ரூ.18.82 கோடி மதிப்பீட்டில்
ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அரசு அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல்
ஆம்பூர், கீழ் ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511
எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட
நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்குப்
புதிய பாசன வசதியும் அளிக்கும்.

930 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, ஒரு பாசன தலைமதகு, 18.71
கி.மீ. நீளத்தில் 3 கிளைக் கால்வாய்களுடன் பிரதான கால்வாய், உபரி
நீர் வழிந்தோடியிலிருந்து 120 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு நீர்வழி
ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டப் பணிகளில் 20 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள்
நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி
செய்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.600.00 இலட்சம்.

### (18) நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி
கிராமத்தில் மங்கரியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே
ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அரசு
அனுமதி அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.7.20 கோடிக்கு அரசு ஒப்புதல்
வழங்கியுள்ளது.



2002 ஏப்ரல் 29]

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலந்தூரான்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுபட்டி கிராமங்களிலுள்ள 148 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதி கிடைக்கும்.

620 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, 30 அடி நீள அதிவேக நீர்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 4,120 மீட்டர் நீளம் கண்ணி வாய்க்கால் இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மண் அணை மற்றும் உபரிநீர் போக்கி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

### (19) இராமக்கல் ஓடை மற்றும் ஆணைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ. வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கால் ஓடை மற்றும் ஆணைவிழுந்தான் ஓடை இவற்றின் குறுக்கே ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.5.65 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ. வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் 107.[illegible] எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

480 மீ. நீளத்திற்கு மண் கரை, இராமக்கல் ஓடையில் உள்ள உபரிநீர் போக்கியுடன் இணைக்க உபரிநீர் கால்வாயுடன் ஓர் உபரி நீர் போக்கி தலை மதகு, ஆற்று நீர் போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

### (20) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ.31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.42.70 கோடிக்கு அரசு ஒப்புதல்

பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம்தூரம்பாடி, மூலனூர் மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

3450 மீ. நீளம் மண்கரை, தடையில்லா நீர்வழிந்தோடி, தலை மதகு மற்றும் ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

குடியிருப்பு கட்டடங்கள், உபகோட்ட அலுவலகக் கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மண் அணை மற்றும் மிகை நீர் வழிந்தோடி பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

**(21) ஆண்டி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ.1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவற்றில் 82 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதியும் 84 எக்டேர் புன்செய் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் அளிக்கும்.

36 மீட்டர் நீளம் கல்லணை, தலை மதகு, 3350 மீட்டர் நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் பிரதான வாய்க்கால் (இடதுபுறம்) மற்றும் 700 மீட்டர் நீளம் வெள்ளத் தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

அனைத்துப் பணிகளும் முடிவு பெற்றன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.0.01 இலட்சம்

**(22) சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சாஸ்தா கோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே ரூபாய் 7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



இத்திட்டம் இராஜபாளையம் வட்டத்திலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின் மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.

1600 மீட்டர் நீள மண்கரை, தடையில்லா நீர்வழிந்தோடி, ஆற்று மதகு மற்றும் உபரிநீர் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

மண்கரை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி அளித்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.228.95 இலட்சம்.

**(23) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரின்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர், சாமளாபுரம், கருண்வரம், வடபுதுப்பட்டு, கீழ்மருகி, தொட்டலாம் மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

320 மீட்டர் நீளம் மண் அணை, 40 மீட்டர் நீள உபரிநீர் போக்கி, ஆற்று மதகு ஆகியன இப்பணியின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 35.82 எக்டேர் வனத் துறை நிலம் தேவைப்படுகிறது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வன நிலம் கையகப்படுத்தும் பணிக்கு மத்திய அரசின் முதல்நிலை அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் பணி தொடங்கப்படும். 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

[2002 ஏப்ரல் 29

**(24) சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.8.87 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

975 மீட்டர் மண்கரை, 40 மீட்டர் நீளம் உபரிநீர்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 60 மீ. நீளம் உபரிநீர் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும். இதுவரை 60 விழுக்காடு பணி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.10.00 இலட்சம்.

**(25) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)**

குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன் புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 11 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதானக் கால்வாயை புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள குறுக்கு கட்டுமானப் பணிகளை பழுதுபார்த்தல், மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணிகள் 80 விழுக்காடு முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.



2002 ஏப்ரல் 29]

**(26) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்**

நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துவதற்கான திட்டத்தை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, சாத்தனூர், அமராவதி, வைகை, ஆழியாறு, பவானிசாகர், மணிமுத்தாறு, வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப்பகுதிகளில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை, வீடூர், அமராவதி, பவானிசாகர், ஆழியாறு, முக்கொம்பு மற்றும் மணிமுத்தாறு ஆகிய அணைப்பகுதிகளின் பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்தும் பணி முடிவடைந்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.0.01 இலட்சம்.

**(27) வண்டியூர் குளத்தை தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)**

வண்டியூர் குளத்தை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தூர் எடுத்து நவீனப்படுத்தி பூங்கா அமைத்து அழகுபடுத்தும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது. தூர்வாரும் பணி முடிவடைந்துள்ளது.

**(28) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டம், தெம்புச்சேரி, டி.சிந்தளச்சேரி, பண்ணைபுரம், கோம்பை, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, போத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர், மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகு கட்டுதல், 38.90 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வெட்டுதல் மற்றும் 4 புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதற்கான மதிப்பீடு ரூ. 26.52 கோடியாகும்.

இப்பணி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.66.00 இலட்சம்.

[2002 ஏப்ரல் 29

**(29) திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்களை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

பணிகள் முடிவடைந்தன.

**(30) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்.**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குரி கிராமத்தின் அருகே மாம்பழத்துறையாற்றின் குறுக்கே ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் கல்குளம் வட்டம், கல்குளம் மற்றும் வில்லுக்குரி கிராமங்களில் 3.57 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒரு போக பயிர் மற்றும் 18.14 எக்டேர் இருபோக பயிர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் ஏற்படும்.

295 மீ. நீளம் மண் அணை, 50 மீ. நீளம் உபரி நீர் வழிந்தோடி, மதகு கட்டுதல் மற்றும் வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்கள் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மறு மதிப்பீடு ரூ. 25.80 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு—ரூ. 0.01 இலட்சம்.

**(31) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்).**

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள கம்பிக்குடி கண்மாய் தொடர்குளங்களுக்கு நீர் வழங்க ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி மேல்ஓடையிலிருந்து நிலையூர் கால்வாய் நீட்டிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் மதுரை தெற்கு வட்டம், வலையப்பட்டி, தோதியப்பட்டி, சின்ன உலகானி, வளையன்குளம், நெடுமதுரை, குடகோவில், வெள்ளாரகுளம், பெரிய ஆலங்குளம், சம்பாகுளம், கொம்பாடி, அய்யம்பட்டி, எலியார்பட்டி, மொச்சிபட்டி, பாறைபட்டி,



2002 ஏப்ரல் 29]

புளிச்சங்குளம், ஆனைக்குளம், சங்குமடை, சல்லாங்குரினி, நல்லூர், வடக்கு பீரிக்குளம், பாப்பானோடை, இராமன்குளம், கலுவன்குளம், விரதனூர், முத்தான்குளம், பனைக்குளம், எம். ஆலங்குளம், நெடுங்குளம், சாத்தான்குளம், சகடதட்டி, சின்னஉடப்பு, குதிரைகுட்டி, கோடல்செங்குளம், கொசரன்குண்டு, உடைக்குளம், கொசரபட்டி மற்றும் கொன்தாகுளம் கிராமங்களிலும், திருமங்கலம் வட்டம், சின்ன உலகானி, விருசன்குளம், விடாதகுளம் மற்றும் கீலஉப்பலிகுண்டு கிராமங்களிலும், கரியபட்டி வட்டம், கடம்பன்குளம், ஆவியூர், பூலப்பட்டி, மாங்குளம், குராதி, உடைக்குளம், அரசகுளம், இராயர்பட்டி, கம்பிகுடி, பாப்பன்குளம், எஸ். ஆலங்குளம், அன்மால்பெருக்கி சத்திரம்பூலம்குளம், பண்ணைவளத்தான்பட்டி, வெற்றிலைமுறிச்சான்பட்டி மற்றும் அல்லாலப்பேரி கிராமங்களிலும், மானாமதுரை வட்டம், கன்சரன்குளம், வலையன்குளம், சூரம்பட்டி, திரவியார், முக்குடி, இலந்தைகுளம், வதுரன்குளம், கரன்கலகுடி, இராக்கன்குளம், செங்குளம், வடக்கூர், பரையன்குளம் மற்றும் உசலன்குளம் கிராமங்களிலுள்ள 2,686.53 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 1,126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகுடன் கூடிய ரெகுலேட்டர், 7.850 கி.மீ. நீளம் பிரதான கால்வாய் வெட்டுதல், குறுக்கு கட்டுமானங்கள் உட்பட 3.00 கி.மீ. நீளம் கிளைக் கால்வாய் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

பிரதான கால்வாயில் 0 முதல் 550 மீட்டர் வரை பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. நபார்டு வங்கி கடனுதவி தர ஒப்புதல் அளித்துள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ. 30.00 இலட்சம்.

**(32) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு, நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் மற்றும் கிராமத்தின் அருகே பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே ரூ. 39.20 கோடி மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் சிவகிரி வட்டம், இராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமேலபுரம், நாரணபுரம், கோட்டையார், சிந்தாமணிப்பேரி, கூடலூர் மற்றும் இராமநாதபுரம் கிராமங்களிலும், சங்கரன்கோயில்

[2002 ஏப்ரல் 29

வட்டம், பனையூர், வயலி, மரதோணி, திருவேங்கடம், சத்திரப்பட்டி மற்றும் கரிசாத்தான் கிராமங்களிலும் 971.95 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 595.18 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

மண் அணை, நீர் வழிந்தோடி, இரண்டு மதகுகள் கட்டுதல், இராசிங்க பெரியாறு மற்றும் குலசேகர பெரியாறு பகுதிகளாக பிரிக்கும் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாய்கள், அணைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 2002-2003 நிதி ஒதுக்கீடு—ரூ. 10.00 இலட்சம்.

**(33) மிருகண்டாநதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம் கிராமம் அருகே மிருகண்டா நதியின் குறுக்கே ரூ. 16.79 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம், கங்காவரம், சேனேந்தல், நல்லான்பிள்ளைபெற்றாள், கங்கமலதேவி, கேட்டவரம்பாளையம், சிறுவல்லூர், எர்ணாமங்கலம் மற்றும் சோளவரம் கிராமங்களிலுள்ள 778.05 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

6.70 மீ. நீளம் மண் அணை, கட்டுப்பாடில்லா உபரிநீர் வழிந்தோடி, ஒரு தலைப்பு மதகு மற்றும் ஓர் ஆற்று மதகு கட்டுதல் ஆகியவை இத் திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 80.82 எக்டேர் பட்டா நிலமும் மற்றும் 23.37 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த தேவைப்படுகிறது.

தனியார் நிலம் கையகப்படுத்தும் பணிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்படும். நபார்டு வங்கி மூலம் கடனுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2002-2003 நிதி ஒதுக்கீடு—ரூ. 10.50 இலட்சம்.

**(34) கீழ்பவானி பாசன அமைப்பை புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்—மதிப்பீடு ரூ. 55.00 கோடி.**



2002 ஏப்ரல் 29]

கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலத்தினைச் சேர்க்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

1999-2000-ல் ரூ.6.84 கோடி செலவில் கீழ்பவானி திட்ட கால்வாய்களில் 313 கி.மீ. நீளத்திற்கு தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது. 2000-2001-ல் ரூ. 6.27 கோடி செலவில் கீழ்பவானி திட்ட கால்வாய்களில் தூர்வாரும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2001-2002 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 1.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமுள்ள 800 கி.மீ. நீளத்தில் 280 கி.மீ. நீளம் தூர்வாரும் பணி முடிவடைந்துள்ளது. நடப்பு ஆண்டில் 4 மாதங்கள் கால்வாய்களில் நீர்வரத்து இல்லாத நிலையில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். எஞ்சிய பணிகள் இரண்டு ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

**(35) கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களை புனரமைத்தல் — மதிப்பீடு ரூ.1.91 கோடி.**

பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**(36) உய்யக்கொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர் வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ளச் சேதத்தைப் பாதுகாக்க கரைகளை வலுப்படுத்துதல் — மதிப்பீடு ரூ.2.50 கோடி.**

பணிகள் முடிவடைந்தன.

**(37) திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்—மதிப்பீடு ரூ. 10 இலட்சம்.**

பணிகள் முடிவுற்றன.

**(38) மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்—மதிப்பீடு ரூ. 35 இலட்சம்.**

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும் இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளதால், பணி தொடங்கப்பட இயலவில்லை.

**(39) கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல் — மதிப்பீடு ரூ. 33 இலட்சம்.**

65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

(40) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல் - மதிப்பீடு ரூ.50 இலட்சம். 40 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

(41) சென்னம்பட்டி அணைக்கட்டு திட்ட கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்-மதிப்பீடு ரூ.15 இலட்சம். பணி முடிவுற்றது.

(42) மேலூரிலிருந்து மரவன்மங்கலம் குளம் வரை பெரியார் பிரதான கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்—மதிப்பீடு ரூ.1.00 கோடி. 30 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

(43) குழித்துறை ஆற்றின் விளாத்துறை நிரேற்றுப் பாசன திட்டத்தை புனரமைத்தல்-மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது).

பணி முடிவடைந்தது.

**(44) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்பு திட்டம்**

திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் 1999 நவம்பர் மாதத்தில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதம் மீண்டும் ஏற்படாமல் தவிர்க்க ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்பு திட்டத்தினை செயல்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

குடமுருட்டியாறு காவிரி நதியில் சேரும் பகுதியில் உள்ள தடைகளை நீக்குதல், ஆரியாறு, கோரையாறு, கொடிங்கல் வடிகால் கால்வாய்களை அகலப்படுத்துதல் மற்றும் உய்யகொண்டான் கால்வாயின் கரைகளை பலப்படுத்துதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டப் பணிகள் ஹட்கோ நிதியுதவியுடன் 2002-2003-ல் மேற்கொள்ளப்படும்.

**1999-2000 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்:**

**(1) ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ளநீரை திருப்பிவிடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)**

அரசு, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள 15 இதர



ஏரிகளும் ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரை திருப்பி விடும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள எம்.கரிசல்குளம், சின்னக்கண்ணனூர், ராஜகம்பீரம், கிளங்காட்டூர், அன்னவாசல் மற்றும் அரிமண்டபம் ஆகிய கிராமங்கள் மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள வேலனேரி, கள்ளிக்குடி மற்றும் பிடாரிசேரி கிராமங்களில் 1039.61 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 8.25 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

வைகையாற்றின் எல்.எஸ்.32.050 கி.மீட்டரில் தலைப்பு ரெகுலேட்டர் கட்டுதல், வலது பிரதான கால்வாய் எல்.எஸ்.32,050 மீ. முதல் 33,900 மீ. வரை அடித்தளம் மற்றும் பக்கங்களுக்கு அகவுறை செய்தல், எல்.எஸ்.33,885 மீட்டரில் ரெகுலேட்டர் கட்டுதல் மற்றும் வலது பிரதான கால்வாய் எல்.எஸ்.33,870 மீட்டரில் தலைப்பு மதகு கட்டுதல், வழங்கு வாய்க்கால் 2.20 கி.மீ. வெட்டுதல் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

15 குளங்களின் கரைகள் சீரமைக்கப்பட்டன. எஞ்சிய பணி நடைபெற்று வருகிறது.

**(2) வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு நீர் வசதி அளித்தல் (புதுக்கோட்டை மாவட்டம்)**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு ரூ.141.00 இலட்சம் மதிப்பீட்டில் நீர் வசதி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் பஞ்சாத்தி, அமான்ஜி, குண்டகவயல், கீழச்சேரி, சிவந்தன்காடு மற்றும் பெருநாவலூர் கிராமங்களில் 672.14 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 35.11 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

அணை கட்டுதல், வழங்கு கால்வாய் வெட்டுதல், வெள்ளக்கரை அமைத்தல் மற்றும் கண்மாய்கள் மேம்பாடு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

[2002 ஏப்ரல் 29

பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடன் உதவி செய்துள்ளது.

### 2001-2002 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரம் (பகுதி II திட்டங்கள்)

#### (1) சிறுபாசனத் திட்டங்கள்

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | விவரம் | |
|---|---|---|---|
| 1 | தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தாலுகா ராமகொண்டஹள்ளி அருகே மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே ஒரு கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.1415 இலட்சம் பயனடையும் பாசனப்பரப்பு முதல் பயிர் - 700 ஏக்கர் இரண்டாவது பயிர் - 400 ஏக்கர் | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 2 | கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுகா பெரும்பட்டு கிராமம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு ரூ.162 இலட்சம் புதிய பாசனப்பரப்பு 460 ஏக்கர் | ஒப்பந்தப்புள்ளி பெறப் பட்டு பரிசீலனையில் உள்ளது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 3 | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுகா பட்டதலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு கால்வாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.700 இலட்சம் ஆயக்கட்டு இடைவெளி - 840.74 ஏக்கர் புதிய ஆயக்கட்டு 500 ஏக்கர | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கடஞ்சேரி (புதுக்கடை) இறவைப்பாசனத் திட்டம் | மதிப்பீடு ரூ.219 இலட்சம் புதிய ஆயக்கட்டு 572.50 ஏக்கர் | ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |



2002 ஏப்ரல் 29]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | விவரம் | |
|---|---|---|---|
| 5 | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுக்கா தெப்பம்பட்டி கிராமம் வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.119 இலட்சம் புதிய ஆயக்கட்டு -104.28 ஏக்கர் | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. பணிகள் துவங்கப்பட உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு - ரூ.20.00 இலட்சம் |

#### (2) சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| (1) | வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சூர் கிராமத்தைச் சார்ந்த பாயப்ப நாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.12.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு -19.88. ஏக்கர். கூடுதல் உற்பத்தி 17.36 டன் | பணிகள் தொடங்கப் பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. |
| (2) | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சேமபள்ளி கிராமத்தில் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.13.00 இலட்சம். பயனடையும் புதிய பாசன பரப்பு 33.39 ஏக்கர். இருபோகம் கூடுதல் உற்பத்தி - 30.88 டன் | பணிகள் தொடங்கப் பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. |
| (3) | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், உனன்தங்கல் கிராமத்தில் சர்வே எண் 123-ல் குட்டை அமைத்தல் | மதிப்பீடு ரூ.25.00 இலட்சம். பயனடையும் புதிய பாசன பரப்பு 37.35 ஏக்கர் பாசன உறுதி - 19.19 ஏக்கர் கூடுதல் உற்பத்தி - 21.07 டன் | நிலம் கையகப்படுத்து வதை மலைவாழ் மக்கள் எதிர்ப்பதால் இத்திட்டத்தைக் கைவிட கருத்துரு பரிசீலனையில் உள்ளது. |
| (4) | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பெரிய பனமுட்லு கிராமத்தில் புது ஏரியினை புனரமைத்தல் | மதிப்பீடு - ரூ.15.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு 65.10 ஏக்கர் கூடுதல் உற்பத்தி - 32.55 டன் | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும். |
| (5) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் பிள்ளைபாளையம் கிராமத்தில் சர்வே எண் 724-ல் புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.23.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு- 51,000 ஏக்கர் கூடுதல் உற்பத்தி-23.93 டன் | ஒப்பந்தப்புள்ளி பெறப் பட்டு பரிசீலனையில் உள்ளது. |

[2002 ஏப்ரல் 29

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | விவரம் | |
|---|---|---|---|
| (6) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில் முல்லப்பாடி கால்வாய் மூலம் முல்லப்பாடி ஏரிக்கு நீர் வழங்க ஆகாச குமுளியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு-ரூ.32.00 இலட்சம். பாசன உறுதி-58.95 ஏக்கர் பழைய பாசனப்பரப்பு -244.74 (இடைவெளி) கூடுதல் உற்பத்தி -342.42 டன் | ஒப்பந்தப்புள்ளி பெறப் பட்டு பரிசீலனையில் உள்ளது. |
| (7) | கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம், மேல் முனாயனூர் கிராமத்தில் வாரியின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீடு-ரூ.13.00 இலட்சம். பழைய பாசனப்பரப்பு-103.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி -44.00 டன் | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. |
| (8) | புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ராஜகிரி கிராமத்தில் நல்ல மங்கான்குளம் மற்றும் நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்க கோரையாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | மதிப்பீடு-ரூ.47.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு 33.11 ஏக்கர். பழைய பாசனப் பரப்பு -87.29+7.83. ஏக்கர் கூடுதல் உற்பத்தி -109.06 டன் | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. |
| (9) | திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், சுக்கம்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு-ரூ.38.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு -37.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி-43.42 டன் | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| (10) | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வாடிப்பாடி கிராமத்தில் சர்வே எண் 73, 74 மற்றும் 75-ல் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு-ரூ.14.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு -37.50 ஏக்கர் (இருபோகம்) கூடுதல் உற்பத்தி-35.82 டன் | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |

### (3) கடலரிப்பு தடுப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| வட சென்னையில் கடல் ஓரப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டுதல் | மதிப்பீடு ரூ.283.00 இலட்சம் | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம். |



2002 ஏப்ரல் 29]

**கூடுதல் பாசன வசதி**

2002-2003 ஆம் ஆண்டில் நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்களால் (அணைக்கட்டுகள்/நீர்த்தேக்கங்கள்) சிறுபாசனக் குளங்கள் மூலம் 2000 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் (நீ.வ.ஆ.தொ.தி.)

(i) தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ.840.84 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 1995 செப்டம்பர் திங்களில் அடிப்படை விலையின்படி ரூ.807.49 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 31-3-2002-ல் முடிவடையும் நிலையில் இருந்தது. ஆனால், மாநில அரசின் வேண்டுகோளின்படி உலக வங்கி 31-3-2003 வரை நீட்டிப்பு வழங்கியுள்ளது.

(ii) இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சி மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களை பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள மேம்பாடு, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

(iii) இத்திட்டம் 40 இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடி பயனளிக்கும். இத்திட்டம் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின் பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்.) பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன் மூலமும் மேம்பட்ட பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

(iv) இத்திட்டம் காவிரி வடிநிலப் பாசன வடிநிலப் பகுதியைத் தவிர்த்து 16 பாசனத் திட்டங்கள் மற்றும் 25 சிறிய பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கும் வழிகோலும். மேலும், செயலாக்கத்திலுள்ள 9 பாசனத் திட்டங்களான பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராஜாதோப்புகானாறு,

[2002 ஏப்ரல் 29

கொடுமுடியாறு, வடக்குப்பச்சையாறு, அடவிநயினார் கோயில், கிருதுமால் ஆகிய, நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

(v) அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஒப்புதல் வழங்கியதில் மார்ச் 2002 முடிய ரூ.1062 கோடி மதிப்பீட்டில் 2347 பணிகளுக்கு (சிப்பங்கள் உட்பட) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட சிப்பங்கள் (Packages)-ன் எண்ணிக்கை (சிப்பங்கள் உட்பட) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | (அ) பாசன ஏற்பாடுகளின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு, வேளாண் பெருமக்களுக்கு பயிற்சி அளித்தல், திட்டங்களை முடித்தல் உள்பட | 343 | 722.50 |
| | (ஆ) குறைந்த அளவு புனரமைப்புப் பணிகள் | 946 | |
| 2 | விவசாயச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 15 | 5.30 |
| 3 | இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள் | 3 | 30.00 |
| 4 | பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் | 14 | 6.90 |
| 5 | நீர்திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி | 68 | 44.70 |
| 6 | சுற்றுப்புறச் சூழல் நிர்வாகம் | 12 | 10.00 |
| 7 | நில எடுப்பு மற்றும் பொருளாதார புனர்வாழ்வு | 4 | 12.60 |
| 8 | நிறுவனங்கள் வலுப்படுத்துதல், மற்றும் கட்டடங்கள், கணிப்பொறிகள், வாகனங்கள், அலுவலகத் தளவாடங்கள், தொலைபேசிகள் முதலியன மற்றும் பிணைப்பு ஆலோசனை போன்ற பொதுவானவைகள் | 311 | 73.00 |



2002 ஏப்ரல் 29]

| வரிசை எண் | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட சிப்பங்கள் (Packages)-ன் எண்ணிக்கை (சிப்பங்கள் உட்பட) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 9 | கூடுதல் திட்டப் பணிகள் | | |
| | (அ) முறையில்லா பாசன கண்மாய்கள் புனரமைத்தல் | 620 | 106.26 |
| | (ஆ) அணை பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மீதமுள்ள பணிகள் (கோமுகி, சாத்தனூர், வெலிங்டன், வீடூர், சேத்தியாத்தோப்பு) | 5 | 35.74 |
| | (இ) இந்நிறுவனங்களை வலுப்படுத்துதல் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்புப் பணிகள் கணினி மயமாக்குதல் | 6 | 15.00 |
| | மொத்தம் .. | **2,347** | **1062.00** |

(vi) 2002-2003 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.158.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**(45) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)**

இந்நீர்த்தேக்கம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி கிராமங்களிலும், இராதாபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக 202 எக்டேர் புதிய புன்செய் நிலம் பாசன வசதியும் 192 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும். இதுதவிர தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் 4 கிராமங்களுக்கு குடிநீர்த் தேவைக்காக 20 மி.கன அடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

மண் அணையின் ஒரு பகுதி மாநில நிதியுடன் செயலாக்கப்பட்டது. மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்கு கட்டுமானப் பணிகள் உட்பட புதிய பிரதான கால்வாய், உபரி நீர்க் கால்வாய், இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள், சாலை அமைத்தல், கைப்பிடிச்சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்றின் மதகு, உபரி நீர்ப்பாதையில் மட்டம் தாழ்த்தும் மதகுகளில் முதல் நான்கு பணிகள் முடிவுற்றன. புதிய பிரதான கால்வாய் வெட்டுதல் மற்றும் கற்காரை பூசுதல், குறுக்குக் கட்டுமானப் பணிகள், அணுகு சாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டுதல் ஆகியவை முடிவுற்றன. நீர்வழிந்தோடி மற்றும் சுங்கன் ஓடை பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2002-2003-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு 2002-2003 - ரூ.103.83 இலட்சம்.

**(46) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரைசிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்கபுரம், குமாரபுரம், முத்து மோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்குப் பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும் கிடைக்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைத்தல், வலதுபுறக் கால்வாய் மதகு கட்டுதல் மற்றும் வலதுபுற பிரதான கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியபணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.14.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மணல் போக்கியுடன் கூடிய தடையிலா நீர்வழிந்தோடி, இடதுபுற பிரதானக் கால்வாய் மதகு கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்றன. மண் அணை அமைத்தல், தடையிலா நீர்வழிந்தோடி, இடதுபுற பிரதானக் கால்வாய் வெட்டும் பணி, அதன்



2002 ஏப்ரல் 29]

குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள், வலதுபுற பிரதானக் கால்வாய் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள், கிளைக் கால்வாய் மற்றும் அதனுடைய பிரிவுக் கால்வாய்கள், வெட்டும் பணிகள், அகவுரை செய்யும் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2002-2003-ல் முடிக்கப்படும். நிதி ஒதுக்கீடு - 2002-2003 ரூ.45.50 இலட்சம்.

**(47) இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாத்தோப்புகானாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் மற்றும் சேனூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப் பரப்பிற்கு பாசன உறுதியும் 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர்போக்கி, உபரி நீர்பாதை, கால்வாய் மதகு 0 மீ. முதல் 5000 மீ. வரை குறுக்கு வடிகால், கட்டுமானப் பணி உட்பட கால்வாயில் கற்காரை பூசும் பணி மாநில நிதியில் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன.

நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 5,000 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டப் பணிகள் அனைத்தும் 31-7-2000-ல் முடிவடைந்துள்ளன. நிதி ஒதுக்கீடு - 2002-2003 ரூ.5.00 இலட்சம்.

**(48) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர்

[2002 ஏப்ரல் 29

வட்டங்களில் 34 கிராமங்களில் 1152 எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன், 2,585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

1990-91-ல் கல் அணையாகக் கட்ட திட்டமிடப்பட்டது. பிறகு 1-7-1994-ல் திட்டம் நிறைவேற்றுதலின்கீழ் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, திட்டத்தில் புதிய வலது மற்றும் இடது புறக் கால்வாய் வெட்டும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பணிகள் முடிவடைந்தன.

எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2002-2003-ம் ஆண்டில் முடிவடையும். நிதி ஒதுக்கீடு—2002-2003 ரூ.1,586.27 இலட்சம்.

**(49) அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ் பிடாகை, வடகரை மேல் பிடாகை, பண்பொழி, அச்சன் புதூர், நெடுவயல், கொடிக்குறிச்சி, நயினார் அகரம், கீழங்காடு, மற்றும் ஆயக்குடி கிராமங்களில் 1562 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 93 எக்டேர் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

கல்லணை, கால்வாய்ப் பணிகள், குடியிருப்புகள் மற்றும் சாலை அமைக்கும் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.61.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கல்லணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கால்வாய் வெட்டும் பணி மற்றும் கட்டடங்கள் கட்டும் பணி முடிந்துள்ளன. அணுகுசாலை அமைக்கும் பணி முக்கிய பணிகள் முடிந்ததும் எடுத்துக் கொள்ளப்படும். அனைத்துப் பணிகளும் 2002-2003-ம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு - 2002-2003 ரூ.780.00 இலட்சம்.



2002 ஏப்ரல் 29]

**(50) அத்திக்குளம் கிராமத்தில் கிருதுமால் ஆற்றின் குறுக்கே அணைகட்டுதல் (நீ.ஆ.தொ.தி.) (விருதுநகர் மாவட்டம்)**

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம் அத்திக்குளம் கிராமத்தின் அருகில் உள்ள கிருதுமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் அணை கட்டி இடது, வலது புறக் கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் இதர ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன் மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி, இருஞ்சிறை, ஆதித்தனேந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

அனைத்துப் பணிகளும் முடிவுற்றன. நிதி ஒதுக்கீடு 2002-2003 ரூ.0.25 இலட்சம்.

**(51) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது ஆகும்.

இத்திட்டத்தினால் நாங்குநேரி வட்டத்தில் உள்ள களக்காடு, நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம், மற்றும் புறப்பாடி கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின் கீழ் உள்ள 769 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு போகமே விளையும் 1568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும்.

பச்சையாற்றின் குறுக்கே திருப்பு மதகு, நீர் ஊட்டுக் கால்வாய், மண் அணை, தடையில்லா நீர் வழிந்தோடி, உபரி நீர் பாதை, கால்வாய் மதகு, ஆற்றைக் கடக்கும் ஏற்பாடு உட்பட இணைப்புக் கால்வாய் இவைகளுடன் நாங்குநேரிகால், சீவலப்பேரிகால், பாதனேரிகால், தேவநல்லூர் கால்வாய் இவைகளைச் செப்பனிட்டு சீரமைத்தல், மடத்து அணைக் கால்வாயிலிருந்து இணைப்புக் கால்வாய்

[2002 ஏப்ரல் 29

அமைத்தல், தேவநல்லூருக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல், 45 ஏரிகளுக்கு நீர் வழங்க நாங்குநேரி ஏரிக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல், இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் கட்டடங்கள் கட்டும் பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 56 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

பச்சையாற்றின் குறுக்கே திருப்பு மதகு அமைக்கும் பணி மற்றும் ஊட்டுக் கால்வாய் வெட்டும் பணி, இணைப்புச் சாலை, கட்டடங்கள் கட்டும் பணி, பாதனேரி கால்வாய், தேவநல்லூர் கால்வாய், பாலம்பத்து கால்வாய் இவைகளைச் செப்பனிட்டுச் சீரமைத்தல், மடத்து அணைக்கட்டு கால்வாய் கடைக்கோடியிலிருந்து பீச்சாலம்குளம் கால்வாய் பிரியும் இடம் வரை இணைப்புக் கால்வாய் வெட்டும் பணிகள் முடிவுற்றன. இணைப்புச் சாலை, களப்பணி அலுவலகக் கட்டடம், தரக் கட்டுப்பாடு ஆய்வு மையக் கட்டடப் பணிகள் முடிவுற்றன.

தலை மதகு கட்டுதல், மண் அணை அமைத்தல், நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, இணைப்புக கால்வாய் மற்றும் குறுக்குக் கட்டுமானம் தேவநல்லூருக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாங்குநேரிக் கால்வாய், சீவலப்பேரி கால்வாய், மடத்தூர் அணைக்கட்டு கால்வாய்கள் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் அனைத்துப் பணிகளையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு - 2002-2003. ரூ. 98.30 இலட்சம்.

**(52) கொடுமுடியாறு திட்டம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் திருக்குறுங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குநேரி வட்டங்களில் உள்ள மயிலாடி, எருவாடி, நம்பித் தலைவன் பட்டியம், வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், இராஜக்கமங்கலம், அச்சம்பாடு, தலைக்குளம், ஆனைக்குளம், தெற்கு களிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழங்கிணறு, திருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட



2002 ஏப்ரல் 29]

நிலங்களுக்குப் பாசனமும் 193 எக்டேர் ஒரு போக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழி செய்யப்பட்டுள்ளது.

மண் அணை அமைத்தல், தடையில்லா நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்று மதகு, உபரி நீர் பாதை, தாமரை அணைக்கட்டை மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள அலுவலர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்தல், ஆனையடி கோயிலை இடப் பெயர்ச்சி செய்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.24.60 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் அக்குயுடக்ட் மற்றும் மிகை நீர்போக்கிப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மண் அணை கட்டுதல் தடையிலா உபரிநீர் வழிந்தோடி, கால்வாய் தலைப்பு மதகு மற்றும் ஆற்றின் தலைப்பு மதகு, தாமரை அணை மேம்படுத்தும் பணி, ஆனையடி கோயிலை அப்புறப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு 2002-2003 ரூ. 1448.00 இலட்சம்.

**(53) வராக நதி-சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரைக்குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசனமும், 405 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் மாநில நிதித் தொகுப்பின் கீழ் கல்லணை கட்டும் பணி ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. கல்லணையில் எஞ்சிய பணிகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், கட்டடப் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 30.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டடப் பணிகளும், இணைப்புச் சாலைப் பணிகளும் முடிவுற்றன.

கல்லணை கட்டும் பணி, கால்வாய் வெட்டும் பணி, குறுக்கு கட்டுமானப் பணிகள், கிளைக் கால்வாய்கள் வெட்டும் பணி ஆகியவை முடிவு பெற்றன. நிதி ஒதுக்கீடு 2002-2003 ரூ. 0.01 இலட்சம்.

[2002 ஏப்ரல் 29

**நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு முக்கியப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள்**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப் பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை. | எடுத்துக் கொள்ளப் பட வேண்டியவை |
|---|---|---|---|---|---|---|
| | சென்னை மண்டலம் | | | | | |
| 1 | செய்யார் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 597 | 7 | 6 | - | 1 |
| 2 | பாலார் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 1,866 | 18 | 17 | 1 | - |
| 3 | பொய்னி அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 619 | 8 | 8 | - | - |
| 4 | திருக்கோவிலூர் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணி | 937 | 7 | 6 | 1 | - |
| 5 | தொழுதூர் மற்றும் பெலாந்துரை அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணி | 469 | 9 | 9 | - | - |
| 6 | சிறு பணிகள் | 2,398 | 14 | 14 | - | - |
| 7 | சாத்தனூர் சிஸ்டம் புனரமைப்புப் பணிகள் | 1,890 | 19 | 18 | 1 | - |
| 8 | சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 989 | 10 | 6 | 3 | 1 |
| 9 | மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம் | 8080 | 11 | 5 | 6 | - |
| 10 | இராஜாதோப்பு கானாறு நீர்த்தேக்கத் திட்டம் | 133 | 3 | 3 | - | - |
| | பொள்ளாச்சி மண்டலம் | | | | | |
| | பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் | 15,214 | 61 | 53 | 4 | 4 |



2002 ஏப்ரல் 29]

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப் பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை | எடுத்துக் கொள்ளப் பட வேண்டியவை |
|---|---|---|---|---|---|---|
| | மதுரை மண்டலம் | | | | | |
| 1 | சித்தார் அணைக்கட்டு ஏற்பாடு மேம்பாட்டுப் பணிகள் | 705 | 10 | 7 | 3 | - |
| 2 | மஞ்சளாறு நீர்த்தேக்கத் திட்டம் புனரமைப்புப் பணிகள் | 102 | 5 | 5 | - | - |
| 3 | வைகை பழைய ஆயக்கட்டு புனரமைப்புப் பணிகள் | 5,867 | 21 | 18 | 2 | 1 |
| 4 | சிறிய பணிகள் | 1,188 | 15 | 12 | 3 | - |
| 5 | கம்பம் பள்ளத்தாக்கு ஏற்பாடு | 468 | 11 | 10 | - | 1 |
| 6 | கோதையாறு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 3,121 | 36 | 32 | 4 | - |
| 7 | மருதாநதி நீர்த்தேக்கத் திட்ட புனரமைப்புப் பணிகள் | 115 | 3 | 3 | - | - |
| 8 | தாமிரபரணி ஏற்பாடு புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் | 3,474 | 23 | 15 | 8 | - |
| 9 | பெரியார்-வைகை ஏற்பாடு புனரமைப்பு | 2,758 | 8 | 5 | 3 | - |
| 10 | அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்ட மீதமுள்ள முடிக்க வேண்டிய பணிகள் | 6,103 | 4 | 2 | 1 | 1 |
| 11 | கிருதுமால் அணைக்கட்டு ஏற்பாடு கட்டுமானப் பணிகள் | 347 | 3 | 3 | - | - |
| 12 | கொடுமுடியார் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் | 3,050 | 5 | 3 | 2 | - |

[2002 ஏப்ரல் 29

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப் பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை | எடுத்துக் கொள்ளப் படவேண்டியவை |
|---|---|---|---|---|---|---|
| 13 | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 2050 | 9 | 6 | 2 | 1 |
| 14 | பொய்கையாறு நீர்த் தேக்கத் திட்டம் (முடிக்கப் படவேண்டிய மீதமுள்ள பணிகள் | 1175 | 10 | 7 | 2 | 1 |
| 15 | சோத்துப்பாறை நீர்த்தேக்க திட்ட மீதமுள்ள பணிகள் | 3285 | 4 | 4 | - | - |
| 16 | வடக்குப் பசசையாறு நீர்த்தேககத் திட்டப் பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 3061 | 9 | 6 | 3 | - |
| | | **70061** | **343** | **283** | **49** | **11** |

## நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் - இரண்டாம் கட்டம்

நம் மாநிலத்தின் குறைவான நீர் ஆதாரங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை அதிகரிக்கவும், கொள்ளளவை மேம்படுத்தவும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் தொடர் திட்டமாக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் - II-ஐ ரூ.2900.00 கோடி மதிப்பில் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் சேர்க்கப்படாத சில பணிகள், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா ஏரிகளின் புனரமைப்பு, புதிய மற்றும் நடைபெற்றுவரும் பாசனத் திட்டங்கள் ஆகியவை இந்த புதியத் திட்டக் கருத்துருவில் இடம் பெற்றுள்ளன. இதில் சுற்றுப்புறச் சூழல் நிலைநிறுத்தும் பணிகளும் அடங்கியுள்ளன.

வடிநிலங்களில் பாசனதாரர்களின் தேவைகளை எல்லாம் ஒருங்கிணைத்து வடிநில வாரியாக பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வடிநிலங்களில் தண்ணீர் அளவை ஆய்வுகளின் அடிப்படையில் ஆதார ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 29]

இத்திட்டக் கருத்துருக்கள் மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு 13-3-2002 அன்று உலக வங்கிக்கு பரிந்துரை செய்யும்பொருட்டு அனுப்பப்பட்டுவிட்டது. இத்திட்டம் 2003-2010-ல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் பாசன அமைப்புகளும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்புகளை ஒப்படைத்தலும்

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள ஆதாரங்களின் ஒருங்கிணைப்பு திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 52 நீர்ப்பாசன அமைப்புகளின் மூலமாக சுமார் 6 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பிற்கு பாசன உறுதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மிக முக்கிய அம்சம் பாசன அமைப்புகளை மேம்பாடு செய்து பயன்பெறும் விவசாயிகளினால் அமைக்கப்பட்டுள்ள சங்கங்களிடம் மேலாண்மைப் பணிகளின் பொறுப்புகளை ஒப்படைத்தலாகும். மேம்பாட்டுப் பணிகளுக்கான பணிகள் யாவும் முடியும் தருவாயில் உள்ளன. இதற்கான விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பாசன மேலாண்மைப் பணிகளின் பொறுப்புகளை விவசாயச் சங்கங்களிடம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக வகை செய்யும் பொருட்டு, "தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் - 2000" என்கிற மசோதா மாநில சட்டசபையினால் 18-05-2000 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாட்சிமை பொருந்திய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சட்டம், பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மேலாண்மையின்கீழ் தற்போதுள்ள சுமார் 15.00 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்புகளிலும் அமல்படுத்தப்படும். இச்சட்டத்தின்கீழ் விதிகள் வரைவு செய்யப்பட்டு வருகின்றன.

இன்றைய நிலையில் நீர்வள ஆதார அமைப்பு திட்டத்தில் 1267 விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 88 விவசாயச் சங்கங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2002 ஏப்ரல் 29

இதுவரையில் நீர்வள ஆதார அமைப்பு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயச் சங்கங்களும் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பும், இணைந்து இயக்கம் மற்றும் மேலாண்மைப் பணிகளைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இணை இயக்கத்தின் ஒரு முக்கியப் பணியாக பகிர்மான வாய்க்கால்களின் மேம்பாட்டுப் பணிகள் பற்றிய முடிவுகளை எடுப்பதில், விவசாயிகளும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்களும் ஒன்றிணைந்து செயல்பட்ட நடவடிக்கையாகும். இந்த மேம்பாட்டுப் பணிகளின் செயலாக்கத்தில் சங்கப் பொறுப்பாளர்கள் ஈடுபட்டு, பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் பங்கு கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

பகிர்மான வாய்க்கால்களின் அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் முடிவடைந்த நிலையில் அக்டோபர் 2000 மாதத்தில் தொடங்கப்பட்டு இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளின் பொறுப்புக்களை விவசாயச் சங்கங்களிடம் ஒப்படைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் முடியும் நிலையில் உள்ளன.

"தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தினை" அமலாக்கம் செய்வதற்கான முதல் பணியான அரசின் அறிவிக்கை ஒன்று வெளியிடப்படும். மேலும், இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றிய செய்திகள் அனைத்து விவசாயிகளையும் பொதுமக்களையும் சென்றடையும் வண்ணம், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி செய்திப்படங்கள், சுவரொட்டிகள், மாவட்ட அளவிலான பிரச்சாரங்கள் ஆகிய நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த மேலாண்மைச் சட்டத்தினை செயல்படுத்தத் தேவையான வரைபடங்கள், ஆவணங்கள், ஆயக்கட்டுதாரர்கள் பட்டியல் ஆகியவை வெகு அதிக அளவில் தயாரிக்க வேண்டியுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சட்ட அமலாக்கத்திற்கான தமிழ்நாடு அரசின் அறிவிக்கை வெளிவந்தவுடன், மாவட்ட அளவிலான தேர்தல்களை



2002 ஏப்ரல் 29]

இரகசிய ஓட்டெடுப்பின் மூலமாக நடத்தி, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக் குழு மற்றும் திட்டக் குழு ஆகிய பல மட்ட விவசாயச் சங்கங்களின் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பொறுப்பாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டு 2002-2003-க்குத் தேவையான நிதி

| | | |
|---|---|---|
| 1. | ஆலோசகர்களுக்குத் தேவையான நிதி | ரூ.5491 இலட்சம் (1–4) |
| 2. | விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த | |
| 3. | அரசுசாரா நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகை | |
| 4. | நீர்வள ஆதார அமைப்பு மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான பயிற்சிக்காக | |
| 5 | ஆவணங்கள் தயாரித்தல் | |
| | நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை | ரூ.102.22 இலட்சம் |

தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 2000-ஐ நிறைவேற்றுவதற்காக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் எந்தவித நிதி ஆதாரமும் கொடுக்கப்படவில்லை. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக தனி நிதி ஆதாரம் தேவைப்படுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக விதிகள் நிர்ணயிக்கப்பட்டபின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மந்தன வாக்கெடுப்பு முறையில் தேர்தல்கள் நடத்தப்படும். இந்த நடப்பாண்டின் மூன்றாவது அல்லது நான்காவது காலாண்டில் தேர்தல்கள் நடைபெறுவதை எதிர்நோக்கி தோராயமாக ரூ.600.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது.

[2002 ஏப்ரல் 29

### பாசன மேலாண்மைப் பணிகளில் பங்கு கொள்ளுதல்

தற்பொழுது 7.00 இலட்சம் எக்டேர் நிலங்களில் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் மற்றும் பாசனப் பரப்பு மேம்பாடு திட்டம் மூலம் மேலாண்மைப் பணிகளில் விவசாயிகள் பங்குகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 10-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மீதமுள்ள 10.00 இலட்சம் எக்டேர் நிலங்களில் இந்தப் பணிகள் விரிவுபடுத்தப்படும்.

### தண்ணீர் தீர்வைக் குழு

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நீருக்கான வரியினை நில வரியிலிருந்து பிரித்து சீரமைப்பு செய்து, பராமரிப்புப் பணிக்கான செலவினத்தை உபயோகிப்பாளரிடமிருந்து முழுவதும் பெறுவதற்கு ஏற்றவகையில் உலக வங்கியின் வேண்டுகோளின்படி ஒரு குழு 1996-ல் அமைக்கப்பட்டது. இந்தக் குழு நில நிர்வாகத் துறை கமிஷனரைத் தலைவராகவும், அரசின் மற்ற துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் விவசாயம் சார்ந்த பொருளாதாரத் துறை நிபுணரைக் கலந்தாலோசகராகவும் கொண்டு பரிசீலித்து வருகின்றது. இதில் முக்கியமாக பாசன வரியை, நில வருவாயிலிருந்து பிரித்து நடவடிக்கை எடுக்க குழு பரிசீலித்து வருகின்றது. இந்தக் குழுவின் முடிவான அறிக்கை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### நதிப்படுகை மேலாண்மை மற்றும் வளர்ச்சி வாரியம்

தமிழக அரசு ஆணை எண் 31, பொபது (டபிள்யூ 2) துறை, 12-01-2001-ன்படி, நதிப்படுகை மேலாண்மை மற்றும் வளர்ச்சி வாரியம் பாலாறு மற்றும் தாமிரபரணி நதிப் படுகைகளுக்கு அமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் திட்ட அமைப்பு, கண்காணித்தல், மேலாண்மை மற்றும் நீர்வளம், நிலவளம் குறித்த அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது ஆகும். இவ்விரு வாரியங்களில் அலுவல் சாரா தலைவராக மாநில நீர்வளத் துறை அமைச்சரும் மற்றும் சுமார் 500 உறுப்பினர்கள் பல துறைகளிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர்.

மேற்கண்ட இரு நதிப் படுகைகளிலும் தனித்தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த நதிப் படுகைகளின் நீர்வள ஆதாரத்தின்



2002 ஏப்ரல் 29]

அடிப்படையில் வளர்ச்சி மற்றும் மேலாண்மை குறித்து முடிவு எடுக்கப்படும்.

இந்தக் குழு மாநில நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் பல துறைகளின் 15 வல்லுநர்களைக் கொண்டுள்ளது. இதைத்தவிர, பல துறைகளைச் சார்ந்த சுமார் 12 வல்லுநர்கள் அடங்கிய ஒரு தொழில்நுட்பச் செயலகம், மேற்கண்ட குழுவிற்கு உதவி செய்யும்.

பாலாறு நதிநீர்ப் படுகையின் முதல் கூட்டம், 26-9-2001-லும், தாமிரபரணி நதிநீர்ப் படுகைக் கூட்டம் 07-11-2001-லும் நடைபெற்றது. பாலாறு நதிநீர் மேலாண்மை மற்றும் வளர்ச்சி வாரியத்தின் முதல் கூட்டம் 14-12-2001-ல் நடைபெற்றது.

மேற்கண்ட 3 கூட்டங்களிலும் பல துறைகளிலிருந்து கருத்துருக்கள் கோரப்பட்டுள்ளன. அவை பெறப்பட்டவுடன் குழு/வாரியம் மூலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 620 மானாவாரி சிறுபாசன ஏரிகளை ரூ.106.26 கோடி செலவில் புனரமைக்கும் திட்டம்.**

உலக வங்கியின் பத்தாவது மேற்பார்வைக் குழு, 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதியிலிருந்து 24-ம் தேதி வரை சென்னை மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களில் நேரடி ஆய்வு செய்து, ரூபாய் மதிப்புக் குறைவினால் நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தில் கிடைத்த சேமிப்பிலிருந்து கூடுதல் திட்டப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொண்டது.

மனித உழைப்பின் பயனைக் கருத்தில் கொண்டும், நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், ஓரளவிற்கு குடிநீர்ப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கும், உலக வங்கிக் குழு, மானாவாரி சிறுபாசன ஏரிகளை மேம்படுத்தும் திட்டத்தினைப் பரிசீலித்தது. இத்திட்டத்தின்கீழ் பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள 63002 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 462 மானாவாரி சிறுபாசன ஏரிகள் ரூ.81.90 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி வடிநிலப் பகுதியில் உள்ள 10,140 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 77 ஏரிகள் ரூ.13.18 கோடி மதிப்பீட்டிலும், வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 7678

[2002 ஏப்ரல் 29

எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 81 ஏரிகள் ரூ.11.18 கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் 620 ஏரிகள் ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன.

ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் 620 ஏரிகள் புனரமைப்புப் பணிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

உலக வங்கி தனது 6-6-2001 கடிதத்தில் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது.

594 கண்மாய்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 26 கண்மாய்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட புனரமைப்புப் பணிகள் மார்ச் 2002-2003-ல் முடிவடையும். 2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.4339.41 இலட்சம்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 'நபார்டு' வங்கி) நிதி உதவியின் மூலம் சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மைப் பணிகளுக்கான திட்டம்-ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (ஆர்.ஐ.டி.எப்.) - V

**நபார்டு ஆர்.ஐ.டி.எப்.V - முதல் கட்டம்**

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் உள்ள 44 சிறுபாசன ஏரிகளை ரூ.14.66 கோடி மதிப்பீட்டில் 5054 எக்டேர் நிலங்கள் பயன்பெறும் நபார்டு வங்கி நிதி உதவியின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் குறிக்கோளானது ஏரிகளை நவீனப்படுத்தி, தரத்தை உயர்த்தி, நீர்ப்பாசனத் திறனை உயர்த்துவதன் மூலம், வாய்க்கால்களுக்கு அகவுறை அமைத்தல், மதகுகளை மேம்பாடு செய்து, கலிங்குகளை மேம்படுத்துதல், மற்றும் உள் வரத்து வாய்க்கால்களைச் சீரமைத்தல் போன்றவைகள் ஆகும்.

அரசு, ரூ.14.66 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, இப்பணியினை, நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்த மண்டலங்கள் மூலம் செயல்படுத்த ஆணை வழங்கியது.

மேலும் அரசு ஆணை (நிலை) எண் 516, பொபது, நாள் 24-12-2001-ல் இப்பணிகளை நீர் உபயோகிப்போர் சங்கங்களின்மூலம் அரசுசாரா அமைப்பின் பங்கேற்புடன் செயல்படுத்த உத்தரவிடப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன.



2002 ஏப்ரல் 29]

மேலும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 2 சிறுபாசன மானாவாரிக் கண்மாய்கள் புனரமைப்பு செய்ய ஒரு திட்டம் தயாரித்து நபார்டு வங்கியிடம் பண உதவி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் 160 பாசனக் கண்மாய்களை ரூ.31.52 கோடி செலவில் புதுப்பிக்க ஒரு திட்டம் நபார்டு வங்கிக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம்மூலம் 17421 எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும்.

மேலும் 13 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள் ரூ. 19.95 கோடிக்கு நபார்டு வங்கி மூலம் கடன் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.702.74 இலட்சம்.

**நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்பு சிறுபாசனத் திட்டம்**

நபார்டு வங்கி, 45 திட்டங்களுக்கு (5 சிறுபாசனத் திட்டங்கள், 40 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள்) ரூ.59.67 கோடி அனுமதியளித்துள்ளது. இப்பணிகள் பல கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. (ஆர்.ஐ.டி.எப்.II, ஆர்.ஐ.டி.எப்.V பகுதி I, ஆர்.ஐ.டி.எப். VI பகுதி எண்.I மற்றும் II)-ல் ஆர்.ஐ.டி.எப்.II-ல் உள்ள திட்டப்பணிகள் முடிவு பெற்றன. ஆர்.ஐ.டி.எப். V பகுதி எண்.I-ல் உள்ள பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. ஆர்.ஐ.டி.எப்.VI / பகுதி எண்.II-ல் இரண்டு நடுத்தர பாசனப் பணிகள் அடங்கும்.

2001-2002 ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை, ரூ.13.83 கோடி. (ரூ.3.83 கோடி மாநில திட்ட ஒதுக்கீடு மற்றும் 10.00 கோடி 'நபார்டு' உதவி)

2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.10.00 கோடி.

**ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழு நிதி உதவியுடன் சிறுபாசன ஏரிகளை மேம்படுத்தும் திட்டம்**

ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழு விதிமுறைகளின்படி சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துரு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழுவின் உதவி பெற டெல்லியில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பி வைக்க, மைய அரசு நிதி அமைச்சகத்தைச் சார்ந்த பொருளாதாரத் துறைக்கு ஜூன் 1995-ல் அனுப்பி வைக்கப்பட்டது.

[2002 ஏப்ரல் 29

தொழிலநுட்ப ஒத்துழைப்புடன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக உள்ள "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜென்ஸி" (ஜெபிக்) ஜூலை 1996-ல் தனது பார்வையாளர்கள் குழுவை அனுப்பி வைத்தது. அக்குழு இத்திட்டத்தின் நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது. மைய அரசு மற்றும் "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜென்ஸி" ஆகஸ்டு 1996-ல் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. ஜப்பான் ஆய்வுக் குழுவானது முதல் கட்ட ஆய்வினை டிசம்பர் 1996-ல் தொடங்கி பிப்ரவரி 1997-ல் முடித்தது. இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை எண்-1-ஐ பிப்ரவரி 1997-ல் அளித்தது. ஆய்வுக் குழு இரண்டாம்கட்ட ஆய்வினை நடத்தி முன்னேற்ற அறிக்கை எண் 2-ஐ ஜூலை 1997-ல் அளித்தது.

ஜப்பானிய ஆய்வுக் குழு தல ஆய்வுகளை முடித்து, காஞ்சிபுரம், திருவள்ளூர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில், 2093 ஏரிகளை சீரமைப்பு செய்ய ரூ.890 கோடிக்கு திட்டக் கருத்துருவினைத் தயாரித்து அனுப்பியுள்ளது. மேற்கண்ட கருத்துருவினை பன்னாட்டு பொருளாதாரக் கூட்டு நிதி (ஜப்பான்) உதவிபெற தமிழக அரசு நிதித் துறை செப்டம்பர் 1997-ல் மைய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பி உள்ளது. ஆனால் மே 1998-இல் ஜப்பான் பொருளாதார நடவடிக்கைகளை அமல்படுத்தியதால் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அக்டோபர் 2001-ல் ஜப்பான் இந்த பொருளாதார நடவடிக்கையை விலக்கிக் கொண்டது. ஜே.பி.ஐ.சி.யின் வேண்டுகோளின்படி 1,71,000 எக்டேர் பாசனப் பரப்புடைய 1798 மானாவாரி ஏரிகளை ரூ.957.30 கோடியில் புனரமைக்கும் திட்ட மதிப்பீடு நவம்பர் 2001-இல் ஜே.பி.ஐ.சி.யின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜப்பான் வங்கியிடமிருந்து இதற்கான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது.

**மாநில ஏரிப்பாசனத் திட்டம்**

தமிழ்நாட்டில் 8939 பொதுப் பணித் துறை ஏரிகளும், 9850 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995-96-ல் இத்திட்டத்தினை அமல்படுத்தியது.

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு, முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு, பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்ற ஏரிகளை



2002 ஏப்ரல் 29]

தரப்படுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் ஜமீன் ஏரிகளையும் தரப்படுத்தி, பிறகு, தொடர் பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப் பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்குத் தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு 2002-2003-ம் ஆண்டு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது:-

மாநில ஏரிப்பாசனத் திட்டம் .. ரூ.0.61 கோடி
முன்னாள் ஜமீன் ஏரிகள்

மாநில ஏரிப்பாசனத் திட்டம் .. ரூ.0.45 கோடி
பொதுப் பணித் துறை ஏரிகள்

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக" கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

1999-2000 ஆண்டில் ரூ.67.90 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் 14 பணிகள் செயலாக்கத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதில், 12 பணிகள் முடிக்கப்பட்டன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.45.30 இலட்சம் மதிப்பீட்டில் 12 பணிகள் ஒப்பளிக்கப்பட்டு தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

[2002 ஏப்ரல் 29

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 24 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், புதிய குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

## தமிழ்நாட்டில் கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைத் தூர்எடுத்து புனரமைத்தல்

நமது மாநிலத்தில் கண்மாய்கள், முக்கியமாக நீர்வள ஆதாரத்தைப் பெருக்கவும், கிராமப்புற மக்களுக்குப் பயன்பெறும் வகையிலும் உள்ளன. முக்கியமாக நதிகள் இல்லாத பகுதியில் பல கண்மாய்கள் அமைந்துள்ளன. இந்த நீர் சேகரிப்பு கண்மாய்கள் நமது முன்னோர்களால் அமைக்கப்பட்டு உள்ளூர் மக்களால் பல காலங்களாக மேலாண்மை செய்யப்பட்டு வந்துள்ளன.

கடந்த சில காலங்களில் கண்மாய்களினால் பயன் பெறக்கூடிய விவசாயப் பரப்பு குறைந்து வருகிறது. இதன் முக்கிய காரணம் படுகையில் வண்டல் மண் படிதல், வரத்துக் கால்வாயில் மண் படிதல், ஆக்கிரமிப்புகள் கண்மாய் கரைகளிலும், உள் வாயிலிலும் மற்றும் நீர் நிரம்பும் பகுதிகள் மற்றும் வழங்கு கால்வாயிலும் இருத்தல், மடைகள், கலுங்கு மற்றும் கரைகளில் பழுது காணப்படுதல் ஆகும்.

இந்த மாநிலத்தில் கண்மாய்கள் அழிந்து வரும் நிலையிலும் பருவமழை சரியாகப் பெய்யாததாலும் நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் துன்பப்பட்டு கடனாளிகளாக மாறிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையைப் போக்கவும், கண்மாய்களின் நீர் கொள்ளளவுத் திறனை அதிகரிக்கவும் இந்த அரசு இருக்கின்ற நீர்வளத்தை நன்கு பயன்படுத்த அக்கறை கொண்டுள்ளது. இந்த நீர் கொள்ளளவுத் திறன் அதிகரிப்பினால் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் கிராம மக்களுக்குப் பெரும்பாலும் பயனுள்ளதாக அமையும்.

இதனைக் கருத்தில்கொண்டு பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முறைபாசன ஏற்பாடு இல்லாத மழைநீர் சேகரிப்பு கண்மாய்களின் நிலையைச் சரிசெய்து உள்ளூர் மக்களின்



2002 ஏப்ரல் 29]

வாழ்க்கைத்தரம் உயர திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.53.84 கோடி மதிப்பில் 482 கண்மாய்களைப் புனரமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டு "ஹட்கோ" நிதியுதவி பெற்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் மற்ற மாவட்டங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கண்மாய்களின் நிலையினைக் கருத்தில்கொண்டு மற்ற நிதி நிறுவனங்களிடம் கடன்பெற்று புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## காவிரி டெல்டா பகுதிகளில் கனரக இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணி

காவிரியாற்றின் டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் அவ்வப்போதைய வெள்ள நீர்வரத்து காரணமாக தூர் சேர்ந்து விடுகிறது. மேலும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும் நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும், வெள்ளக்கட்டுப்பாட்டுப் பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்தத் தடங்கல்களினால் பாசனக் காலங்களில் கடைகோடிப் பகுதிக்கு பாசன நீர் கிடைப்பதில் குறைவும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைமையும் இருந்து வருகிறது.

எனவே ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் புல்டோசர்களை வாடகை அடிப்படையில் தருவித்து தூர்வாருவதும், காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதும் வாடிக்கையாய் உள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு ஆகும் செலவினை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் பராமரிப்பு நிதியில் செய்ய இயலாததால் 1997-98 ஆம் ஆண்டு முதல் அரசால் இதற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகளைத் தூர்வாரவும் அவற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும், அரசு ரூ.12.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அப்பணிகள் 1997-98-லேயே முடிக்கப்பட்டன.

காவிரி வடிநிலப் பகுதியைத் தூர்வாரும் பணிக்கு ரூ.119.74 கோடி 1997-98 முதல் 2001-2002 வரை ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.111.97 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

பணிகள் பல கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன.

## காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்படச் செயல்படும். முதன்முதலில் 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கு மாஸ்டர் பிளான் தயாரித்தது. இருப்பினும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டாப் பகுதிகளில் சிறு பணிகள் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும் காவிரி டெல்டா பாசனத் திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியவில்லை.

எனவே காவிரி டெல்டா பாசனப் பகுதி நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற் பகுதியாக 460 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக அனுப்பும்பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன:

1. காவிரி டெல்டா பாசனப் பகுதியில் 70,000 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளைப் புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்.

2. 323 கால்வாய்களை புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்.

3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்.

4. ரூ.23.02 கோடி மதிப்பில் வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.

5. பிற பணிகளை நிறைவேற்றுதல்.



2002 ஏப்ரல் 29]

## காவிரி நதிநீர் தாவா

காவிரி நடுவர் மன்றம் 25-6-1991 அன்று இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. அவ்வாணையின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. நீரை மாதாந்திர அடிப்படையில் கர்நாடகா அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து அளிக்க உறுதி செய்ய வேண்டும். இந்த ஆணையின்படி ஜூன் முதல் செப்டம்பர் வரை மாதாந்திர அடிப்படையில் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு 137 டி.எம்.சி. நீர் கிடைக்கப் பெற வேண்டும். ஆனால், துரதிருஷ்டவசமாக அநேக ஆண்டுகளில் குறுவைப் பயிர் சாகுபடி செய்யும் முக்கிய மாதங்களான ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்டு, அதாவது தென்மேற்குப் பருவ மழைக் காலங்களில் மேட்டூருக்கு வரவேண்டிய நீரில் குறைவு ஏற்பட்ட காரணத்தால் குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக செப்டம்பர் மாத இறுதியிலும், கர்நாடகா நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பி விட்ட நிலையில்தான் கர்நாடகா அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விடுவித்து வருகிறது. ஆனால் அதன் விவசாயத் தேவைகளுக்கு ஜூன் மாதம் முதற்கொண்டே நீரைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறது.

மே 1992-ல் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கைத் தொடர்ந்ததின் அடிப்படையிலும், மத்திய அரசு உச்ச நீதி மன்றத்திற்கு மே 1997-ல் உறுதிமொழி அளித்ததின் அடிப்படையிலும், நடுவர் மன்ற இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்கான ஓர் வரைவுத் திட்டத்தைத் தீட்டி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை அனுப்பும்படி மே 1997-ல் மத்திய அரசு கேட்டுக் கொண்டது. நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைக் கண்காணிக்கும் பொருட்டு மத்திய நீர்வள ஆதார அமைச்சகச் செயலரை தலைவராகக் கொண்ட ஓர் ஆணையம் ஏற்படுத்தவும், ஒழுங்குமுறைக் குழு ஒன்றை ஏற்படுத்தவும், இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. அதில், நீர்த்தேக்கங்கள் மற்றும் அதன் கட்டுமானங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளைக் கண்காணிக்கும்பொருட்டு களப்பணி அமைப்புகளை நியமிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு உண்டு. எந்த மாநிலமாவது ஆணையத்தின் அறிவுரைகளைச் செயல்படுத்த மறுத்தால் நீர்த்தேக்கங்கள் மற்றும் கட்டுமானங்களை ஆணையம் அதன்வசம் எடுத்துக் கொண்டு ஆணையத்தின் அலுவலர்கள் மூலமாகவோ அல்லது மத்திய அரசு அலுவலர்கள் மூலமாகவோ இயக்குவதற்கு இவ்வாணையத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த வரைவுத் திட்டத்தை 29-7-1998 அன்று மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமையில்,

சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் கூடி விவாதித்தார்கள். விவாதத்தின் அடிப்படையில் ஒரு திருத்திய வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மாநிலங்களின் கருத்துகளை கோருவதற்காக அனுப்பப்பட்டது. எந்த மாநிலமாவது ஆணையத்தின் அறிவுரைகளைச் செயல்படுத்த மறுத்தால், நீர்த்தேக்கங்கள் மற்றும் கட்டுமானங்களை ஆணையம் அதன் வசம் எடுத்துக் கொண்டு இயக்குவதற்குண்டான அதிகாரம் மே 1997-ல் தயாரிக்கப்பட்ட வரைவு திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. ஆனால் ஜூலை 1998-ல் தயாரிக்கப்பட்ட திருத்திய வரைவு திட்டத்தில் இடம் பெறவில்லை. அதற்கு பதில் ஆணையத்தின் முடிவை மறுபரிசீலனை செய்வதற்கு ஏதுவாக மத்திய நீர் ஆதார அமைச்சரின் தலைமையில், படுகை மாநிலங்களின் முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மறுபரிசீலனைக் குழு அமைப்பதற்கு இந்த திருத்திய வரைவு திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. மேற்கூறிய இரண்டு வரைவு திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஷரத்துக்களை கர்நாடகா ஏற்காத நிலையில், திருத்திய வரைவுத் திட்டத்திற்கும் ஒப்புதல் வழங்கப்படவில்லை. நீண்ட பேச்சு வார்த்தைக்குப் பிறகு தற்போதுள்ள காவிரி நதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

காவிரி நதிநீர் (நடுவர் மன்றத்தின் 1991 ஆண்டைய ஆணை மற்றும் அதன் தொடர்பாக பின்னர் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் செயலாக்க) திட்டம், 1998 என்ற திட்டமானது ஆகஸ்டு 1998-ல் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட நாள் முதல் பிரதமரை தலைவராகக் கொண்டு காவிரி நதி ஆணையம் இயங்கி வருகிறது. இந்த ஆணையத்தில் காவிரிப் படுகை மாநிலங்களின் முதலமைச்சர்கள் உறுப்பினர்களாவார்கள். அதே அறிவிக்கையின்கீழ் மத்திய நீர் ஆதார அமைச்சகச் செயலரை தலைவராகக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. காவிரிப் படுகை மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் நபர், காவிரிப் படுகை மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள், மத்திய நீர்க் குழுமத்தின தலைவர் ஆகியோர் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள். ஆணையம் மற்றும் கண்காணிப்புக் குழுவின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் ஆகியவை இந்தத் திட்டம் அறிவித்த அறிவிக்கையிலேயே இடம் பெற்றுள்ளது.

நடுவர் மன்றத்தின் ஆணையைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக 1998-ல் ஏற்படுத்தப்பட்ட காவிரி நதி ஆணையத்தால், நடுவர் மன்றத்தினால் 25-6-1991 அன்று பிறப்பித்த ஆணைகளைத் திறம்படச் செயல்படுத்த இயலவில்லை. இந்த ஆணையம் நிறுவப்பட்ட நாள்



முதல் மூன்று முறைதான் கூடியுள்ளது. 1998-1999-ம் பாசன ஆண்டில், 28-10-1998 அன்று முதல் கூட்டமும், 2000-2001-ம் பாசன ஆண்டில் 14-7-2000 அன்று இரண்டாவது கூட்டமும், 2001-2002-ம் பாசன ஆண்டில் 10-10-2001 அன்று மூன்றாவது கூட்டமும் நடைபெற்றது.

10-10-2001 அன்று நடைபெற்ற ஆணையத்தின் மூன்றாவது கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படவேண்டிய நீர்வரத்தில் குறைபாடு ஏற்பட்டதை ஈடுசெய்ய வேண்டும் என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. இதற்கு மாறாக, பற்றாக்குறை ஆண்டுகளில் துயரம் ஏற்படும்போது அதனைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மற்றும் பாரபட்சமற்ற முறையிலான நடைமுறையினை வகுத்திடப் பரிந்துரைக்கப்பட்டது. இதற்கிணங்க, படுகை மாநிலங்கள் அவற்றின் கருத்துகளைத் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு அளிக்கப்படும் கருத்துக்கள் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவை எடுக்க ஏதுவாக இருக்கும். துயரம் ஏற்பட்டுள்ளது என்பதை நிர்ணயம் செய்வதற்கு காவிரி கண்காணிப்புக் குழுவிற்கோ அல்லது காவிரி நதி ஆணையத்திற்கோ அதிகாரம் இல்லை என்பது தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு ஆகும். மேலும் துயரம் ஏற்பட்டுள்ளது என்பதற்காக சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்கள் காவிரி நடுவர் மன்றத்தை அணுகினால், அந்நடுவர் மன்றம் மட்டுமே இதனை முடிவு செய்யமுடியும்.

காவிரி நதி ஆணையத்திற்கு உதவி செய்யும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்புக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது தேவை ஏற்படும்போதெல்லாம் கூட்டப்பட வேண்டும். 1998 ஆகஸ்டில் இத்திட்டம் தீட்டப்பட்ட பிறகு, இக்குழுவின் கூட்டம் 11 முறை கீழ்க்கண்ட தேதிகளில் கூட்டப்பட்டுள்ளது:-

| பாசன ஆண்டு | கூட்டம் நடைபெற்ற நாள் |
|---|---|
| 1998-99 | 7-10-1998, 4-3-1999 |
| 1999-2000 | 5-7-1999, 24-9-1999(அவசரக் கூட்டம்), 16-2-2000 |
| 2000-2001 | 18-9-2000, 30-1-2001 |
| 2001-2002 | 7-6-2001, 6-9-2001 (அவசரக் கூட்டம்), 28-12-2001, 12-02-2002 |

[2002 ஏப்ரல் 29

மேட்டூர் நீர்வரத்தில் ஏற்பட்ட மோசமான சூழ்நிலையில் தமிழ்நாடு கேட்டுக்கொண்டதற்கிணங்க இரண்டு அவசரக் காலக் கூட்டம் கூட்டப்பட்டது. இதுதவிர, கடந்த நான்கு ஆண்டுகளில் கண்காணிப்புக் குழுக் கூட்டம், ஒன்பது முறை கூட்டப்பட்டுள்ளது.

மார்ச் 2002-ம் ஆண்டு இறுதியில் மேட்டூருக்கு வரவேண்டிய நீரில் சுமார் 43 டி.எம்.சி. நீர் குறைபாடு ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் மிகக் குறைவான நீர் இருந்ததனால் காலம் கடந்து பயிரிடப்பட்ட சம்பாப் பயிரினைக் காப்பாற்றுவதற்காக வழக்கமாக 28-01-2002 அன்று மேட்டூர் நீர்த்தேக்கத்தினை மூடாமல் 15 நாட்களுக்கு நீர் வழங்குவது நீட்டிக்கப்பட்டது.

10 ஆண்டுகள் முடிவுற்ற பின்னரும் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்கு எந்தவொரு திருப்தி அளிக்கக்கூடிய ஏற்பாடுகளும் இல்லை என்று இவ்வரசு தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகிறது. ஆணையத்தாலோ, அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவாலோ நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த இயலவில்லை. நடுவர் மன்றம் ஏற்படுத்தப்பட்ட உடனேயே தமிழ்நாடு கடினமான முயற்சிக்குப் பின்னர், இடைக்கால ஆணையைப் பெற்றபோதிலும், அவ்வாணை செயல்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. கர்நாடகா இந்த ஆணையை, குறிப்பாக குறுவைப் பயிருக்குத் தேவையான மாதமாகிய ஜூன் முதல் ஆகஸ்டு வரை ஏதாவது ஒரு காரணம் கூறி செயல்படுத்தாமல் இருந்து வருகிறது. தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள காவிரி நதி ஆணையம் அதன் கடமையைச் சரிவர செய்யவில்லை. காவிரி கழிமுகப் பகுதிக்குத் தேவையான பாசனத்தை மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் இருப்பு மிக மோசமாக இருந்தபோதிலும் எதிர்பாராத விதமாக பெய்த மழையினால் காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள பயிர்கள் பாதுகாக்கப்பட்டன.

எனவே தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள காவிரி நதி ஆணையம் சரிவர இயங்குவதற்குத் தேவையான மாற்றங்களை வெளியிடுவதற்கு மத்திய அரசு முன்னார் தயாரித்த வரைவு திட்டத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தி வருகிறது. இதன்பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சிவில் வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

காவிரி நடுவர் மன்றம், காவிரி நதிநீர் தாவா குறித்து அதன் விசாரணையைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அனைத்து



2002 ஏப்ரல் 29]

மாநிலங்களின் சாட்சிகள் (20 சாட்சிகள்) மீதான குறுக்கு விசாரணை முடிந்துள்ளது. இவ்வழக்கின் மீதான வாத, பிரதிவாதங்கள் 29-1-2002 அன்று தொடங்கி நடைபெற்றுவருகிறது. வாத, பிரதிவாதங்கள் முடிவுற்றபின் காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையைப் பிறப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்

1983-ம் ஆண்டு ஏப்ரல் 18-ம் நாள் தமிழக அரசு ஆந்திரப் பிரதேச அரசிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஓராண்டில் 8 மாத காலங்களில் வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்சி. போக 12 டி.எம்சி. நீர் ஆந்திர அரசால் தமிழ்நாடு - ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்" என்றும், ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.44 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை 1996-97 ஆண்டுக்குரிய விலைப் பட்டியலின்படி ரூ.196.04 கோடியாகும். மார்ச் 2002 வரை ரூ.189.00 கோடி இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கை திட்டப் பணிகளின் மொத்த மதிப்பீடு 9/97 திட்ட அறிக்கையின்படி ரூ.2345.00 கோடியாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.639.40 கோடியாகும். இதுவரை ஆந்திரப் பிரதேச அரசு ரூ.1820 கோடி செலவு செய்துள்ளது. தமிழக அரசு தன் பங்காக ரூ.512 கோடி ஆந்திரப் பிரதேச அரசுக்குக் கொடுத்துள்ளது.

கண்டலேறு அணையிலிருந்து 29-9-1996 அன்று முதன்முதலாக ஆந்திர மாநிலம் தண்ணீர் திறந்து விட்டது.

கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவும் மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

[2002 ஏப்ரல் 29

| ஆண்டு | கண்டலேறு அணையிலிருந்து கே.பி. கால்வாயில் திறந்து விடப்பட்ட நீரின் அளவு | தமிழ்நாட்டின் எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு | பெறப்பட்ட நீர் அளவின் விழுக்காடு |
|---|---|---|---|
| | டி.எம்.சி. | | |
| 1996-1997 | 0.610 | 0.076 | 12.5% |
| 1997-1998 | 4.339 | 2.290 | 52.80% |
| 1998-1999 | 4.077 | 2.810 | 69.00% |
| 1999-2000 | 3.990 | 1.830 | 45.86% |
| 2000-2001 | 17.790 | 6.688 | 37.59% |
| 2001-2002 | 1.108 | 0.400 | 36.10% |

சென்ற ஆண்டைக்காட்டிலும் நடப்பு ஆண்டில் நீர் இருப்பு அதிகரித்துள்ளது. சென்னை நகருக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைக்க கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீரினைத் திறந்துவிட ஆந்திர மாநில அரசிடம் கேட்கப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் அக்டோபர் 2001 மற்றும் நவம்பர் 2001-ல் பெய்த பெரு மழையினால் பூண்டிக்கு நீர் கொண்டுவரும் கால்வாய் பழுதானது. அதனால் 1-1-2002-ல் ஏற்கெனவே உள்ள ஒப்பந்தப்படி, கண்டலேறு அணையிலிருந்து நீர் திறந்துவிட முடியவில்லை. 5-2-2002-ல் நடைபெற்ற 38-வது கூட்டுக் குழுக் கூட்டத்தில், ஆந்திர அரசிடம் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு நீரினைத் திறந்துவிட கேட்டுக் கொள்ளப்பட்டது. தற்போது பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, 27-02-2002-ல் ஒரு வினாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மேலும் இதன் அளவு 7-3-2002-ல் ஒரு விநாடிக்கு 500 கன அடியாகவும் உயர்த்தப்பட்டது. மேலும் 21-3-2002-லிருந்து ஒரு வினாடிக்கு 700 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

அக்டோபர் 2001 மற்றும் நவம்பர் 2001-ல் தமிழ்நாட்டில் பெய்த பெருமழையினால் தமிழ்நாட்டின் எல்லையில் 0 மீட்டர் முதல் 4-வது கிலோ மீட்டர் வரை கால்வாயில் பழுது ஏற்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 29]

இதனை சரிசெய்ய ரூ.72.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1991-ம் ஆண்டு புதிதாக இரண்டு நீர்த்தேக்கங்கள் ராமன்சேரி மற்றும் திருக்கண்டலத்தில் அமைத்து கிருஷ்ணா நதி மற்றும் வெள்ளநீரை சேமித்து வைக்க ஒரு திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி ராமன்சேரி நீர்த்தேக்கத்திற்கு ரூ300 கோடியும், திருக்கண்டலம் நீர்த்தேக்கத்திற்கு ரூ.400 கோடியும் உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

ஆனால் மேற்கண்ட நீர்த்தேக்கம் அமையவிருக்கும் கிராமங்களில் உள்ள நில உரிமையாளர்களின் தீவிர எதிர்ப்பினால் தொடர் நடவடிக்கை எடுக்க இயலாமல் போனது. இதற்குப் பதிலாக, கீழ்க்கண்ட இடங்களில் நீர்த்தேக்கங்கள் புதிதாக அமைக்க 2001-2002-ல் பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டது:

| வ. எண் | வேலையின் பெயர் | கொள்ளளவு | இறுதிநிலை செலவு |
|---|---|---|---|
| 1. | வயலூர் படுகைப் பாலம் பாலாற்றுக்குக் குறுக்கே பொறி மதகு அமைத்தல் | 0.500 டி.எம்.சி. | ரூ.77.00 கோடி 2002-2003 திட்ட ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 2. | கூவம் ஜமீன் கொரட்டாற்றுக்கு குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 0.200 டி.எம்.சி. | ரூ.22.00 கோடி 2002-2003 திட்ட ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 3. | பள்ளிக்கரணை சதுப்பு நிலம் | 0.500 டி.எம்.சி. | ரூ.55.00 கோடி 2002-2003 திட்ட ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம் |
| 4. | திருநீர்மலையில் அடையாறுக்கு குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | .. | .. |

திருநீர்மலையில் நீர்த்தேக்கம் அமைக்கும் பணியினை விரைவாகச் செயல்படுத்தும் பொருட்டு, இத்திட்ட சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணியிலும் மற்றும் திட்டப் பணிகள் செயல்படுத்தும்

[2002 ஏப்ரல் 29

பணியிலும் கலந்தறி நிறுவனத்தை ஈடுபடுத்தலாம் என சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் கருத்து தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அரசு மேல் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் காவிரிப் படுகையிலிருந்து சென்னை மாநகர குடிநீர் தேவைக்கு தண்ணீர் கொண்டுவர சாத்தியக்கூறுகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

**புதிய வீராணம் திட்டம்**

புதிய வீராணம் திட்டம் ஆகஸ்டு 1993-ம் ஆண்டு உலக வங்கித் திட்டமாக "இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டம் புதிய வீராணம்" என்ற பெயரில் ரூ.464.00 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சென்னைக்கு ஒரு நாளைக்கு 190 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வொப்பளிப்பில் ரூ.60 கோடி, கீழ்க்கண்ட நீர் ஆதார மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்கியது:—

(1) கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்துச் செல்லும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல்

(2) வீராணம் ஏரியில் உள்ள திட்டுக்களை அகற்றுதல்; ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1485 மி.கன அடியாக அதிகப்படுத்துதல்

(3) ஏரியின் மேற்கரையினைப் பலப்படுத்துதல்

திருத்திய நிர்வாக ஒப்பளிப்பில் வடவாறு (1996 ஏப்ரல்) கால்வாயிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் மற்ற கால்வாய்களை நவீனப்படுத்தும் உறுப்பும் இணைக்கப்பட்டு ரூ.110.95 கோடி நீர்வள ஆதார மேம்பாட்டு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 56,034 ஏக்கர் (வடவாற்றின் 11,178 ஏக்கரும், வீராணம் ஏரியின் 44,856 ஏக்கரும் உள்ளடக்கியது) நிலத்திற்குத் தடையின்றி பாசன வசதி செய்திட எதிர்நோக்கப்பட்டது.

முதலில் இப்பணி உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால் ஏரியிலிருந்து சென்னைக்கு நீர் எடுத்து வர ஆகும் செலவு மிகவும் அதிகமாக இருந்ததாலும், சென்னை



2002 ஏப்ரல் 29]

நகருக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்மூலம் 12 டி.எம்.சி. (12.00 மி.கன அடி) எதிர்நோக்கப்பட்டதாலும், அரசு இத்திட்டத்தின் நோக்கத்தினை மாற்றி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள வீராணம் ஏரியின் சார் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டமாகச் செய்து மாநில நிதியிலிருந்தே செயல்படுத்திட 1996 செப்டம்பரில் முடிவு செய்தது. இத்திட்டத்தில் 25 தொகுப்புகள் உள்ளன. அவற்றின் மதிப்பீடுகளும் தற்போதைய நிலையும் கீழே தரப்பட்டுள்ளன:—

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்பு களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | வடவாறு கால்வாயினை மேம்படுத்துதல் | 6 | 26.39 | 3 தொகுப்பு களிலுள்ள வேலை கள் முடிவுற்றன. மீதமுள்ள 3 தொகுப்புகளிலுள்ள பணிகளில் 90 விழுக்காடு முடிவுற்றன. |
| 2. | வீராணம் ஏரியின் முழு நீர்த்தேக்க மட்டத்தினை 2 அடி உயர்த்தி அதன் முக்கிய கரையினை பலப்படுத்துதல் | 4 | 10.68 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3. | தற்போதைய மேல்புறக் கரையினை பலப்படுத்துதல் மற்றும் புதிய மேற்புறக் கரை அமைத்தல் | 4 | 10.31 | அனைத்துத் தொகுப்புகளிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4. | பாசனநீர் எடுத்துச் செல்லும் வடவாற்றின் 24 கால்வாய்களையும் வீராணம் ஏரியின் 34 கால்வாய்களையும் நவீனப்படுத்துதல் | 2 | 25.00 | 25 சதவிகிதப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் வேலைகள் தொடங்கப் பட உள்ளது. |
| 5. | வீராணத்தின் முக்கிய கரையின் மேல் தார்ச் சாலை அமைத்தல் | 2 | 1.50 | இதர நிதி நிறுவனங்கள்மூலம் உதவி பெற்று தொடங்கப்படும். |

[2002 ஏப்ரல் 29

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 6. | கீழ் அணைக்கட்டு மதகுகளைச் சீர் செய்தல் | 1 | 1.08 | 17 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7. | வீராணத்தின் கீழ்மட்ட கலுங்கு, கோதாவரி வடிகால் மற்றும் உபரி நீர்போக்கி மதகு மற்றும் யு.என்.எஸ்.எஸ். மதகுகளை மேம்படுத்துதல், வடவாற்றின் குறுக்கே புதிய மதகினை அமைத்தல் | 4 | 5.37 | கோதாவரி வடிகால் நீங்கலாக இதர பணிகள் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட உள்ளன. |
| 8. | பணியாளர் குடியிருப்புகளை பழுது பார்த்தல் மற்றும் புதிய திட்ட இல்லம் கட்டுதல் | 2 | 0.55 | பணியாளர் குடியிருப்புகள் பழுது பார்க்கும் பணிகள் முடிவுற்றன. |
| 9. | இதர இனங்கள், விலையேற்றம் உட்பட | | 30.07 | |
| | மொத்தம் | 25 | 110.95 | |

கட்டுமானப் பொருட்கள் மற்றும் வேலையாட்களின் கூலி போன்ற விலை மதிப்பீடு ரூ.150 கோடிக்கு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.51.03 கோடி செலவிடப்பட்டது. 2002-2003-ல் நிதி ஒதுக்கீடு ரூ.5.00 கோடி.

**பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் - ஒப்பந்தம் புதுப்பித்தல்**

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், நல்லாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும் பாசனத்திற்கும் குடிநீர் விநியோகத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கும் இடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29-05-1970-ல்



2002 ஏப்ரல் 29]

கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி 9-11-1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரர் ஒப்புதலின்பேரில் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்பட்டது. இந்த ஒப்பந்தம் 9-11-1988-ல் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி இரு அரசுகளும் 21-9-1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு அமைச்சர்கள் மட்டத்தில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம்—ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இரு மாநில அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுமம் அமைக்கப்பட்டது. இக்குழுமம் திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடி பேசியபோதிலும் எந்த முடிவிற்கும் வர இயலவில்லை. கேரள அரசு பரிசீலிக்க வேண்டியவை:-

(1) இடமலையாறு புனல் மின் திட்டத்தினை செயலாக்கியதின் மூலமாக, ஒப்புக்கொண்டபடி 2.5 டி.எம்.சி. தண்ணீரை ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்—ஆழியாறு பாசன அமைப்பிற்கு திருப்பி விடுவதை ஏற்க வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின்படி இடமலையாறு மற்றும் இடுக்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் மேல் நீராறு தண்ணீர் முழுவதையும் எவ்விதத் தடையுமின்றி அக்டோபர் முதல் ஜனவரி முடிய தமிழகத்தில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

(3) மனக்கடவு மதகிற்கு சேமித்து பாசன உறுதி செய்திடும் வகையில் ஒரு சமநிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரளம் இசைவு அளிக்க வேண்டும்.

(4) மேல் நீராறு நீரை ஒரு குகைப் பாதை வழியாக நல்லாறுக்கு கொண்டுவந்து அங்கு ஒரு புனல் மின்நிலையம் அமைத்து வெளிவரும் நீரை திருமூர்த்தி அணைக்குத் திருப்புவதற்கான புதிய திட்டத்திற்கு இசைவு அளிக்க வேண்டும்.

(5) கேரளத்தில் சித்தூர்புழா வடிநிலத்தின் தேவைக்கு தமிழகத்திற்குரிய 2.5 டி.எம்.சிக்கு மேல் உள்ள நீரை ஆனமலையாற்றிலிருந்தோ அல்லது தேக்கடியாறிலிருந்தோ திருப்பிக் கொள்ளவேண்டும்.

[2002 ஏப்ரல் 29

கடந்த 28-11-1996-ல் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின்மீது எந்த முடிவும் எடுக்கப்படாததால் மீண்டும் கூடிப் பேச தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு முன்னர், இரு தரப்பு அதிகாரிகள் மட்டத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

**பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்**

மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியான பாண்டியாறு—புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு - புன்னம்புழா நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ. மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குக் கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக் கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965-ம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின் திட்டம் மேற்குநோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 ச.கி.மீ. (66.20 ச.மைல்) பரப்புடைய நீர்பிடிப்புப் பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.60 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெ.வா. (2 x 50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. இதனால் 409 மி.யூ ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1969-ல் ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும் வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக்கொண்டதின்பேரில், பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு



2002 ஏப்ரல் 29]

குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்கு திருப்பிவிட விரும்பியது.

கடந்த 28-11-1996-ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தையின்போது, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தில் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் கோயம்புத்தூர் - ஈரோடு மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரை எதிர்நோக்கி குறைந்தது 7 டி.எம்.சி.-யாவது தமிழ்நாட்டுக்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. திட்டத்திற்கான அறிக்கையைப் பரிசீலித்த பிறகு அதன்மீது கருத்து தெரிவிப்பதாக கேரளா தெரிவித்தது.

பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தை தமிழ்நாடு மின்வாரியம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற தயாரித்துள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி. நீரில் 50 விழுக்காடான 7 டி.எம்.சியை பயன்படுத்தி 2 x 50 மெகாவாட் மின்சாரம் தயாரித்தபின் அந்த நீரை கேரளத்திற்குத் திருப்பிவிடுவது. அப்போதே 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் பணி தொடங்கப்படும். இரண்டாவது கட்டத்தில் திருப்பிவிடப்பட்ட 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டில் சிகூர் வடிநிலத்தில் 2 x 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் தமிழ்நாட்டில் மோயார் ஆற்றில் கலக்கும். இத்திட்டத்திற்கான செலவு 1998ஆம் ஆண்டு விலைப்படி ரூ.904 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து, இத்திட்டச் செயலாக்கத்திற்கு கேரள அரசின் ஒத்திசைவிற்காக 1998 செப்டம்பரில் அனுப்பியது. கேரள அரசு தனது இசைவினை தெரிவிக்காததோடு கிழக்கு நோக்கி 7 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

தமிழக அரசு ஏப்ரல் 1998-ல் மேற்படி பணியினை தேசிய நீர்மின்சக்திக் கழகம் (என்.எச்.பி.சி.) மூலம் செய்ய கேட்டுக் கொண்டுள்ளது. இந்தப் பொருள் பற்றிய இரு மாநில அரசு செயலர்கள் மீண்டும் கூடிப் பேச தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டம்

மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணாறு - காவிரி - வைப்பார் இணைப்புகள்

தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு நதிகளை இணைக்கும் கருத்து மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இவ்விணைப்புப் பணிகளுக்கான ஆய்வு அறிக்கைகளை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்து வருகின்றது.

இதுவரை மகாநதி - கோதாவரி, கோதாவரி - கிருஷ்ணா, கிருஷ்ணா-பெண்ணாறு, பெண்ணாறு-காவிரி இணைப்புகளுக்கான முதல்நிலை அறிக்கையினை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறை படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி மற்றும் வைகை படுகைகளுக்குத் திருப்பிவிடலாம் என்று தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, மகாநதி மற்றும் கோதாவரி நதிகளின் உபரி நீர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பெண்ணாற்றுக்குத் திருப்பி விடப்படும். பெண்ணாற்றிலிருந்து காவிரிக்குத் திருப்பி விடப்படும் நீர் சுமார் 534 கி.ம். நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சோமசீலா அணைக்கட்டிலிருந்து சுமார் 9455 மி.க.மீ. (334 டி.எம்.சி.) பெண்ணாற்றின் உபரி நீர் காவிரி நதியின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை வரை திருப்பப்படும். இணைப்புக் கால்வாய் ஆரம்பிக்கும் சோமசீலா அணை முதல் தமிழகத்தின் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டு பகுதிகளின் பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும் சுமார் 3855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப்பகுதி மற்றும் காவிரி படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி - வைகை-குண்டாறு இணைப்பானது இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில் கிடைக்கப்பெறும் 3,855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) அளவு



2002 ஏப்ரல் 29]

நீரில் 2,252 மி.க.மீ. (79.5 டி.எம்.சி.) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காக திருப்புவதே ஆகும்.

தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டம் விரைவில் செயலாக்கப்பட வேண்டுமென்பதில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த தமிழக அரசு மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புதல்**

நீர்வள மேம்பாட்டுக்காக மைய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகளை இணைத்தல் என்பது ஓர் அங்கமாக உள்ளது. அதில் மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டமும் அடங்கியுள்ளது. தீபகற்ப ஆறுகளை இணைக்கும் பணிக்காக திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர் மேம்பாட்டு முகமையை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதன்படி தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஆறுகள் அனைத்திலும் ஆய்வினை மேற்கொண்டு இணைப்புத் திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் கேரளத்தில் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளில் உபரி நீர் வளத்தை தமிழ்நாட்டுக்குத் திருப்பும் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது.

பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தின்படி இரண்டு இயல்பான நீர்த்தேக்கங்கள், ஒரு விசை இறைப்பானால் நிரப்பப்படும் நீர்த்தேக்கம், மின்உற்பத்திக் கேந்திரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு நீரைக்கொண்டு வருவதற்கு சுமார் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாய் ஆகியவை அமைக்கப்படும். திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி. அளவு நீர் தமிழ்நாட்டிற்கு திருப்பப்பட்டு அதனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், சிவகிரி, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91400 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும். தமிழ்நாட்டிற்கு பாசன வசதியுடன் ஆண்டுக்கு சுமார் 1114 மில்லியன் யூனிட் மின்உற்பத்தியும்

கேரளத்திலுள்ள வெம்பாடு ஏரியின் உப்புத்தன்மையைப் போக்கவும் மற்றும் கேரளத்தில் குடிநீர் வசதியும் இத்திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கப்பெறும். இத்திட்டத்திற்கு 1992-ஆம் ஆண்டின் விலைவிகிதப்படி சுமார் ரூ.1398 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது.

கேரள அரசு இத்திட்டம் குறித்து தேசிய நீர்மேம்பாட்டு முகமைக்கு அதனுடைய அதிருப்தியை தெரியப்படுத்தியுள்ளது. மேலும் கேரள அரசு தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் அறிக்கையில் உயிரின வாழ்க்கை, சுற்றுசூழல் மாசுபடுதல் பற்றிய விவரங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை எனவும் தெரியப்படுத்தியுள்ளது. மேலும், 2051ஆம் ஆண்டு வாக்கில் பம்பா அச்சன்கோயில் - வைப்பார் இணைப்பு வாயிலாக தமிழகத்திற்கு நீரைத் திருப்ப உபரி நீர் இருக்காது எனவும் கேரள அரசு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கு தமிழக அரசு தேசிய நீர் மேம்பாட்டு முகமையை வலியுறுத்தி வருகிறது.

**மாநில நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

நிலநீர் வளத்தினை பல்வேறு வகைகளில் பெருக்குகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின்கீழ், முறையான மற்றும் அறிவியல் பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இம்மையம் விரிவான அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தினை தொடர்ந்து கணித்து வருகின்றது. இவ்வகையில் ஜூலை 1997 வரை சுமார் 63 விழுக்காடு நிலநீர் வளம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப் பணித் துறையின்கீழ் இயங்கும் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நிலத்தடி நீர் வளங்களை அவ்வப்போது மதிப்பிடவும் பயன்படுத்தவும் நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்கான ஆய்வுப் பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் பலவகைப்பட்ட பணிகள் உள்ளடக்கிய நிலநீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:



(1) தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1671 கிணறுகளில் நீர் மட்ட அளவுகள் எடுக்கப்பட்டு நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகள் டீ.எச்.வி. கன்சல்டன்ஸி உதவியுடன் தயாரித்தல். தமிழகத்தில் நில நீரின் நிலைமை மற்றும் நீரின் தன்மை அறிவதற்காகவும், தொழிற்சாலைக் கழிவுநீர் மற்றும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் உரம், பூச்சி மருந்து ஆகியவற்றால் நிலநீர் பாதிப்படைவதைக் கண்டறியவும், ஒட்டுமொத்த நிலநீர் தன்மை கண்டறியும் அமைப்பான "டெல்மட் ஐட்ராலிக்ஸ் வோன் கன்சல்டண்ட்"-ன் கலந்தாலோசனையுடன் இறுதி செய்யப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்விற்கு வருடத்திற்கு ஒரு முறையும், நிலநீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறையும் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

(2) தமிழகத்தில் நில நீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளை (3400 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

(3) தமிழகத்தில் மண் பரிமாணத்திற்கு ஏற்ப 15 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரி முகடுகளில் இருந்து நீரியியல் மற்றும் வானிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

(4) மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 400 மழையளவு நிலையங்களில் இருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து, மழை நீர் வரத்திற்கும் பூமியில் நீர் இழப்பிற்கும் உள்ள தொடர்பினைக் கண்டறிதல்.

(5) புவியியல், புவிபௌதிகம் மற்றும் புவி மேற்பரப்பியல் ஆய்வுகளின் மூலமாக நிலநீர் வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிதல். (தீவிர ஆய்வு 85 ஒன்றியங்களில்)

(6) வேளாண் மக்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நிலநீர் எடுப்பதற்கான அமைப்புகளை கட்டுமானம் செய்யத் தகுந்த ஆலோசனைகள் வழங்குதல்.

(7) சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற நிலநீர் அனுமதிச் சான்று வழங்கல்.

(8) கடலோரப் பகுதிகளில் உள்ள நீர் படிவங்களில் (920 கி.மீ. அளவிற்கு) கடல் நீர் ஊடுருவலை சிறப்பாய்வு மூலம் கண்காணித்தல்.

[2002 ஏப்ரல் 29

(9) நிலநீர் ஆய்விற்கான ஆழ் துளைக் கிணறுகள் (110 எண்கள்) துளையிடுதல்.

(10) தமிழகத்திலுள்ள சுமார் 17,000 கிராமங்களில் நிலநீர் வளத்தினை மதிப்பீடும் பணியை தொடர்பணியாகச் செய்தல்.

இவை தவிர விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளமைப்பு மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள், நிலத்தடி நீர்வள உபயோகிப்பு குறித்த பயிற்சி, செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆராய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2002-2003 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூபாய் 0.4648 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் "நீரியியல் திட்டம்"**

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து இந்திய அரசு நிறுவனங்களுக்கு நீரியியல் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த 1995 ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவ முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்கு பெறும் மாநிலங்களில் உள்ள நீரியியல் சுழற்சி சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தன்மை பற்றிய விவரங்களையும் சேர்த்து விஞ்ஞானபூர்வமான எல்லா விவரக் குறிப்புகளையும் மேம்படுத்தி பயன்படுத்துவோர்க்கு பயன்பெறும் வகையில் கிடைக்கச் செய்வதாகும். உலக வங்கியுடன் நடத்தப்பட்ட விரிவான பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு தமிழ்நாடு அரசுக்கும் உலக வங்கிக்குமிடையே ஓர் ஒப்பந்தம் 22-9-1995 அன்று கையெழுத்தானது. 21-12-1995 முதல் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டப் பணிகளை முடிக்க 31-3-2003 வரை கால நீட்டிப்பு வழங்கி உலக வங்கி அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.51.149 கோடிக்கு அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் (1) மேற்பரப்பு நீர்ப் பகுதி (2) நிலத்தடி நீர்ப் பகுதி என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**மேற்பரப்பு நீர்ப் பகுதி**

தமிழகத்தில் உள்ள ஆற்றுப் படுகைகளில் நீர் போக்கு விவரங்களைச் சேகரிக்க 112 நீரளவு நிலையங்கள் அமைத்தல், 110 பெரிய ஏரிகளில் கொள்ளளவு மற்றும் நீரளவு அறிய தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தல், வானியல் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க



2002 ஏப்ரல் 29]

22 வானிலை தட்ப வெப்ப நிலையங்கள், 57 மழை அளவு நிலையங்கள், 6 தானியங்கி வானிலை நிலையங்கள் ஆகியவை அமைத்தல், நீரின் தன்மையினை சோதனை செய்ய 15 நீர்த் தன்மை பரிசோதனைச் சாலைகள் மற்றும் 17 வண்டல் மண் ஆய்வு நிலையங்கள் அமைத்தல். மேற்பரப்பு நீர் ஆய்வு செய்ய 71 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு நீர் மாதிரிகள் மாதம் ஒரு முறை ஆற்று நீர் பாயும் காலங்களில் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்தல், அலுவலகக் கட்டடங்கள் (4 கோட்டங்கள், 12 உப கோட்டங்கள் மற்றும் 60 பிரிவு அலுவலகங்கள்) கட்டுதல், 44 தள கருவி பண்டகசாலை கட்டடங்கள் கட்டுதல், 25 வாகனங்கள் வாங்குதல் மற்றும் 4 செயற் பொறியாளர்களுக்கான குடியிருப்பு கட்டுதல் போன்றவை நீரியியல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

**நிலத்தடி நீர்ப் பகுதி**

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள ஆய்வுக் கிணறுகளில் நீர் மட்ட அளவுகளைச் சேகரிப்பது மற்றும் புதிதாக கடினப் பாறைப் பகுதிகளில் 690 ஆழ்துளைக் கிணறுகள், படிவப் பாறைப் பகுதியில் 162 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், 10 தட்ப வெப்ப நிலையங்களை மேம்படுத்தி நீர் நிலை மாற்றங்களில் விவரம் சேகரித்தல், 4 ஆற்றுப் படுகைகளில் தட்ப வெப்ப நிலையங்கள் ஏற்படுத்துதல், நீரின் தன்மையை அறிய 4 புவிவேதியியல் ஆய்வகக் கட்டடங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த புள்ளி விவர மையக் கட்டடம் அமைத்தல், 31 வாகனங்கள் வாங்குதல் போன்றவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

**சாதனை விவரம்**

*மேற்பரப்பு நீர்ப் பகுதி*

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 112 நீரளவு நிலையங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 110 ஏரிகள் நீர்மட்டம் கொள்ளளவு விவரம் சேகரிக்க ஏரிகளில் தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து மழையளவு நிலையங்கள், தட்ப வெப்ப நிலையங்கள், 65 தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 20 வானிலை நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. நீரியியல் திட்டத்தின்கீழ் எல்லா (15) நீரின் தன்மை மற்றும் (15) வண்டல் மண் ஆய்வு நிலையங்களும், 44 தள பண்டகசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நீரியியல் திட்டத்தின் கீழ் இதுவரை 4 கோட்ட அலுவலகங்கள், 12 உப கோட்டங்கள். 60 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பூண்டி நீரியியல் ஆய்வு மையத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 25 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 4 செயற் பொறியாளர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. வெள்ளக்கணிப்பு ஆய்வுப்பணி வேப்கோஸ் (WAPCOS) அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நிலநீர்ப் பகுதி**

கடினப் பாறைப் பகுதியில் 690 ஆழ்துளைக் கிணறுகளில் 690 பணிகள், படிவப் பாறை பகுதிகளில் 162 ஆழ்துளைக் கிணறுகளில் 156 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, எஞ்சிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டத்தைக் கவனிப்பதற்காக 723 தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் 645 ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ளன. மீதி 78 கருவிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீரியியல் திட்டத்தின்கீழ் 4 புவிவேதியியல் பரிசோதனைச் சாலைக் கட்டடங்கள் முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பரிசோதனைச் சாலைகளில் தூய்மைக் கேடு பற்றி ஆராய உரிய கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

**2002-2003 திட்டம்**

நீரியியல் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள பணிகள் நிலநீர் தொகுதி மற்றும் மேற்பரப்பு நீர்ப் பகுதிகளுக்கும் மேற்கொள்ளப்படும்:—

**நிலநீர்ப் பகுதி**

27 ஆழ்துளைக் கிணறுகள் கடினப் பாறைப் பகுதிகளிலும் மற்றும் மணற்பாங்கான பகுதிகளிலும் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளபபடவுள்ளது. செயற் பொறியாளர் அலுவலகம், 13 செயற் பொறியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் 30 உதவி செயற் பொறியாளர் அலுவலகக் கட்டடங்கள் நடப்பு ஆண்டில் ரூ.3.92 கோடி மதிப்பில் கட்டப்படும்.



**மேற்பரப்பு நீர்ப் பகுதி**

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின்கீழ் அணைகளின் வண்டல் தன்மை, வெள்ளத்தை முன் கணிப்பது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கொள்முதல் (நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்ப் பகுதி)**

'டி' பிரிவு கணினிகள் 26 எண்கள், ஒரு 'பி' பிரிவு கணினி, ஓர் ஆராய்ச்சிக் கருவி வாங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கருவிகள் வாங்கியதில் மீதத் தொகை பட்டுவாடா செய்ய வேண்டியுள்ளது.

உலக வங்கிக் கடிதம் நாள் 26-6-2001-ல் மேற்கண்ட கொள்முதலை இத்திட்டம் முடிவடைகின்ற நாள் 31-3-2002-க்குள் நிறைவேற்ற வேண்டுமென தமிழக அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. இதன்பின் காலதாமதமானால் மாநில அரசு நிதியில்தான் இது மேற்கொள்ளப்பட வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. இருப்பினும் 31-3-2003 வரை நீட்டிக்க உலக வங்கியிடம் கேட்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ.5.1993 கோடி 2002-2003 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | ரூ. கோடியில் |
|---|---|
| 1. சிவில் பணிகள் (மேற்பரப்பு நீர்ப் பகுதி) | 0.2500 |
| 2. சிவில் பணிகள் (நிலநீர்ப் பகுதி) | 0.8500 |
| 3. கொள்முதல் (மேற்பரப்பு, நிலநீர்ப் பகுதி) | 1.2937 |
| 4. தொடர் செலவினம் | 2.8056 |
| மொத்தம் | **5.1993** |

மேலும் நிலத்தடி நீர்ப் பிரிவினை பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்திய பணிகளுக்கு ரூ.2.00 கோடி உலக வங்கியிடம் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது.

**அணை பாதுகாப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் அணை பாதுகாப்புத் திட்டம், 1991 ஆம் ஆண்டு கட்டுமான விதிமுறைகளுக்கு ஏற்ப அணைகளின் தரத்தை உயர்த்தும்

[2002 ஏப்ரல் 29

நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்தும்பொருட்டு அணை பாதுகாப்பு இயக்குநரகம் பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் ஓர் இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது.

அணைகளின் பாதுகாப்பினைக் கருதி மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் ஒவ்வோர் ஆண்டும் வருடத்திற்கு நான்கு முறை மழைக்காலத்திற்கு முன்பாகவும் மழைக்காலத்தில் முதற்காலம், இரண்டாம் காலம் மற்றும் பிற்பகுதி என்ற ரீதியில் பார்வையிட்டு அதன் விரிவான ஆய்வுக் குறிப்பினை இயக்குநருக்கு அனுப்பி வருகின்றனர். இதன் பின்பு ஒருமித்த அறிக்கையினைத் தயார் செய்து அதன்மீது எடுக்க வேண்டிய பின்நடவடிக்கை குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டு வருகிறது.

இதைத்தவிர இயக்குநர் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உறுப்பினர்கள் முறையே (1) கண்காணிப்புப் பொறியாளர் (வடிவமைப்பு), (2) செயற் பொறியாளர் (மண் ஆய்வு) (3) பொது கண்காணிப்பாளர், பொதுப் பணித் துறை (பணிமனை) (4) இந்திய புவியியல் ஆய்வுத் துறையில் புவியியலாளர் ஆகும். இந்த உறுப்பினர்கள் 5 வருடத்திற்கு ஒரு முறை 64 பொதுப் பணித் துறைக்கு பாத்தியப்பட்ட அணைகளையும் மின்சாரத் துறைக்கு பாத்தியப்பட்ட 38 அணைகளையும் பார்வையிடுகின்றனர். தேவைப்படின் அணைகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய அறிக்கை சமர்ப்பிக்கும்.

பெரிய அளவில் அணையில் ஏற்படும் பழுதுகள் இருப்பின் அதனை அணைக்கட்டுமானப் பணி சம்பந்தப்பட்ட வல்லுநர் குழுவிடம் அனுப்பி அந்த அணைகள் பாதுகாப்பு ஆய்வுக் குழு முடிவு செய்கிறது. இந்த வல்லுநர் குழு கொண்ட அணைகள் பாதுகாப்பு ஆய்வுக் குழு அறிக்கையின் பெயரில் அணைகள் பாதுகாப்புத் திட்ட முதற்பகுதி உலக வங்கி உதவியுடன் ரூ.22.82 கோடி மதிப்பீட்டில் 8 அணைகளில் மேற்கொள்ளப்பட்டது. இந்த உலக வங்கி உதவி 30-09-1998-ல் நிறுத்தப்பட்டது.

மீதமுள்ள அணைகள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முதற்பகுதி பணிகள் கீழ்க்கண்ட அணைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

(1) சாத்தனூர் அணை



2002 ஏப்ரல் 29]

(2) வீடூர் அணை

(3) கோமுகி அணை

(4) வில்லிங்டன் அணை

(5) சேத்தியாத்தோப்பு அணை

இந்தப் பணிகளை மேற்கொள்ள உலக வங்கி ரூ.35.70 கோடி கொடுத்துள்ளது. இதற்கு அரசின் நிர்வாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அணை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இரண்டாவது கட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ.118.50 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய நீர்வள அமைப்புக்கு உரிய அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.1399.20 இலட்சம்

**சென்னைப் பெருநகர நீர் வழிகளை செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்**

**1. சென்னைப் பெருநகர நீர் வழிகளை ஹட்கோ நிதியுதவியுடன் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்.**

சென்னை நகரம் வருடாவருடம் வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் வெள்ளத்தினால் பாதிப்பு அடைந்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கி மக்களின் இயல்பு வாழ்க்கையும், சாலைப் போக்குவரத்தும் பாதிப்பு அடைகின்றன. எனவே சென்னை நகரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மேட் மெக்டொனால்டு என்ற பன்னாட்டு ஆலோசனை நிறுவனம் வழங்கிய திட்டத்தின் அடிப்படையில் ஹட்கோ நிறுவனத்திடம் கடனுதவி பெற்று "புத்தாயிரமாண்டுத் திட்டமாக" தமிழக அரசால் 1998 ஆம் ஆண்டு ரூ.300 கோடிக்கு ஆணை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே சென்னை நகரில் ஓடும் அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரிநல்லா, கேப்டன் குக் கால்வாய் மற்றும் சென்னைப் பெருநகர எல்லைக்குள் இருக்கும் ஏனைய பெரிய வடிகால்களில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் சேற்றினை அகற்றி வடிகால்களை புனர் வடிவமைத்து வெள்ள நீர் விரைந்து கடலில் கலக்க வழிவகை செய்வதே ஆகும். மேலும் ஆற்றுக் கரைகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடியிருப்போரை அகற்றி அவர்களை வேறு

[2002 ஏப்ரல் 29

இடத்திற்கு மறுகுடியமர்வு செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் கீழ்க்காணும் நான்கு சிப்பங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது:-

*சிப்பம்* **- 1:** சென்னை நகரின் உள்ளே ஓடும் கூவம் ஆற்றில் உள்ள மணற்படிமங்கள் மற்றும் சேற்றினை அகற்றி வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், விருகம்பாக்கம், அரும்பாக்கம் வடிகால் புனரமைத்தல், ஓட்டேரிநல்லாவினை தூர்வாரி தடுப்புச் சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவற்றில் 19-10-1999 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் கூவம் ஆற்றில் பணிகளை 18 மாதங்கள் கழித்து மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆற்றின் கரைகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடிசையாளர்களுக்கு மறுகுடியமர்வு செய்த பிறகே பணிகள் தொடங்கப்பெற வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. மறுகுடியமர்வுப் பணிகள் முழுமையாக முடிவடையாததால் கூவம் ஆற்றில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மறுகுடியமர்வு முடிந்த பின்னர் 2003ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும். விருகம்பாக்கம், அரும்பாக்கம் வடிகால் மற்றும் ஓட்டேரி நல்லாவில் பணிகள் 2002-2003-ல் முடிவுறும்.

*சிப்பம்***-2:** எண்ணூர் முதல் முட்டுக்காடு வரை உள்ள பக்கிங்காம் கால்வாயினை தூர்வாரி புனரமைத்தல்.

இச்சிப்பத்தில் சுமார் 85% பணிகள் முடிவடைந்து விட்டன. தெற்கு பக்கிங்காம் கால்வாயில் 4.6 கி.மீ நீளத்திற்கு கால்வாயின் இருபுறமும் ஆக்கிரமிப்பு உள்ளதால் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடத்தில் மாற்று முறையில் பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்பத் தீர்வுகள் ஆய்வில் உள்ளன. பணிகள் 2002-2003 ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சிப்பம்***-3:** அடையாறு ஆற்றில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் திட்டுக்களை அகற்றி வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக்கரை அமைத்தல், வேளச்சேரி ஏரி வடிகாலில் சிறிய பாலங்கள் அமைத்தல்.



2002 ஏப்ரல் 29]

இச்சிப்பத்தில் சுமார் 40% பணிகள் முடிவுற்று விட்டன. வேளச்சேரி வடிகாலில் சிறிய பாலங்களும், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக்கரை அமைக்கும் பணிகளும் முடிவுற்று விட்டன. அடையாறு ஆற்றில் நந்தம்பாக்கம் பாலம் மேல்புறம் முதல் ஆதனூர் ஏரி வரை பணிகள் முடிவுற்று விட்டன. தற்போது பணிகள் நந்தம்பாக்கம் பாலம் கீழ்புறம் நடைபெற்று வருகின்றன. பணிகள் 2002-2003-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சிப்பம்***-4:** சென்னைப் பெருநகரின் எல்லைக்குள் உள்ள மற்ற பெரிய வடிகால்களில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

இச்சிப்பத்தின்கீழ் வடசென்னையில் உள்ள தணிகாசலம் நகர், மற்றும் அம்பத்தூர், மாதவரம், கொரட்டூர் ஆகிய ஏரிகளின் மிகை நீரினை வெளியேற்ற புதிய கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளதால் பணிகளில் முன்னேற்றம் தாமதப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் கால்வாய் தோண்டும் வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும். தற்போது தணிகாசலம் வெள்ளத் தடுப்பு பணியும் அம்பத்தூர் ஏரி மிகைப்போக்கி வடிகால் பணியும் முடிவடைந்துள்ளன. அனைத்துப் பணிகளும் 6/2003-க்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நான்கு சிப்பங்களில் இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.48.38 கோடியாகும்.

**2. அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள மணல் மேடுகளை அகற்றி மீண்டும் மணல் மேடு ஏற்படா வண்ணம் செய்தல்**

சென்னையைச் சேர்ந்த இந்திய அரசு அமைப்பாகிய தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் கூவம் முகத்துவாரத்தில் மணல்மேடு ஏற்படாமல் தடுக்க கிராயின் கட்டும் திட்டத்தை அளித்தது. இதனடிப்படையில் ரூ.78 இலட்சம் செலவில் 170மீ. நீளத்திற்கு கிராயின் கடலின் உள்ளே கட்டப்பட்டுள்ளது. ஆனால் 2000-2001 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையின் காரணமாக கிராயின் பாதிப்படைந்தது. இதனை சரிசெய்ய கூடுதல் செலவில் கிராயின் உயரத்தை 1.5 மீ. உயர்த்தி கடல் தொழில்நுட்ப நிறுவனம் கருத்துரு அளித்துள்ளது.

[2002 ஏப்ரல் 29

இதற்கு அரசு ஒப்புதல் அளித்தவுடன் பணிகள் தொடங்கப்பெறும். இப்பணி 9/2003-க்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூவம் முகத்துவாரத்தில் கட்டப்பட்டுள்ள கிராயினின் செயலாக்கத்தை சோதித்தறிந்த பின்னரே அடையாறு முகத்துவாரத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

2002-2003 நிதி ஒதுக்கீடு ரூ.4654 இலட்சம்.

**கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்**

தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் சுமார் 960 கி.மீ. ஆகும். இதில் 900 கி.மீ. வங்காள விரிகுடா கரையோரமாகவும், 60 கி.மீ. அரபிக் கடலோரமாகவும் அமைந்துள்ளது. கிழக்குக் கடற்கரை தொடர்ந்து கடலரிப்பிற்கு உள்ளாகிறது. சமீப ஆண்டுகளில் கடலரிப்பின் தாக்கம் அச்சம் தரும் விதமாக உள்ளது. இப்பிரச்சினையினைத் தீர்க்க அரசு பல பாதுகாப்பு முறைகளை அமல்படுத்தி வருகிறது.

மீன்பிடித் துறைமுகத்திலிருந்து எண்ணூர் வரை செல்லும் எண்ணூர் விரைவுப் பாதை சுமார் 9.20 கி.மீ. நீளத்திற்கு கடுமையாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விரைவுச் சாலையில் ஏற்படும் கடலரிப்பைத் தவிர்க்க பெருங்கற்களைக் கொண்டு கற்சுவர் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மற்றும் சென்னையில் மேற்கொள்ளப்பட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள் முடிவு பெற்றுவிட்டன. 2001-2002-ல் ரூ.5.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

ரூ.169.39 கோடிக்கான "கடலரிப்புத் தடுப்புப் பணிகள்" திட்டக் கருத்துரு அரசினால் தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தில் இணைப்பதற்காக மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வெளிப்புற நிதி உதவிக்காக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுக்க ஒரு நிரந்தரத் தீர்வு காண நெதர்லாந்து அரசிடமிருந்து தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி பெறுவதற்கான ஒரு திட்டக் கருத்துரு நெதர்லாந்து அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது. கன்னியாகுமரி, தூத்துக்குடி,



2002 ஏப்ரல் 29]

திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.57.69 கோடி மதிப்பீடு செலவில் கடற்கரை பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 21-3-2002 ஆம் நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை நிலை எண் 120-ல் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.46.00 கோடியினை கடனாக வழங்க ஹட்கோ ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சிய ரூ.11.69 கோடி செலவினை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும்.

**பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்**

திருச்சி துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், இந்நாட்டிலுள்ள பதினோரு பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் 1984-ல் பன்னாட்டு நிதி உதவியுடன் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் விவசாயிகள், நீர்வளத் துறை, விவசாயப் பொறியியல் துறை மற்றும் விவசாயத் துறையைச் சார்ந்த களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**(1) பயிற்சிகள்**

உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதார அமைப்பினால் செயல்படுத்தப்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்தப் பயிற்சி நிலையம் முனைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. உலக வங்கியின் ஆலோசனையின்படி, தற்சமயம் இந்நிலையம் நீர்வள ஆதார நிறுவன அலுவலர்க[illegible] களப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பாசன மேல[illegible]ண்மை குறித்த சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

நடப்பு ஆண்டில் 180 உள்நாட்டுப் பயிற்சிகளும், 12 அயல்நாட்டுப் பயிற்சிகளும் 5 கல்விப் பயணங்களும் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டங்களினால் 2,500 விவசாயப் பெருமக்களும் 2,080 நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களும் பயன் பெற உள்ளார்கள்.

**(2) நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டம்**

பாசன நீர் தேவை ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நீர் உபயோகத் திறனை அதிகரிப்பதன் மூலம் நிலையான அதிகப்படி உற்பத்திக்கு வழிவகுக்கும் குறிக்கோளை அடைவதற்கு விவசாயிகளுக்கு நீரை சிக்கனமாகவும் திறமையாகவும் பயன்படுத்த உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

[2002 ஏப்ரல் 29

இந்தக் குறிக்கோளை கருத்தில்கொண்டு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டத்திற்காக அரசு ரூ.555 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தினால் மாநில அளவில் 400 செயல் விளக்கப் பண்ணைகள் தெரிவு செய்யப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கு சிக்கன நீர் உபயோகத்தின் மூலம் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் நீர்வள ஆதார அமைப்பு, விவசாயப் பொறியியல் துறை, விவசாயத் துறை, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன.

**(3) நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சிகள்**

| வரிசை எண் | பயிற்சி விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| I | 1. தேசிய அளவிலான பயிற்சி | 180 |
| | 2. பயிற்சி பயணத்துடன் கூடிய அயல்நாட்டுப் பயிற்சிகள் | 12 + 5 = 17 |
| | 3. நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டம் பயிற்சி செயல் விளக்கம் | — |
| II | பயிற்சி நிறுவன மேம்பாடு | — |
| III | புத்தக வெளியீடுகள் | — |
| IV | தள ஆராய்ச்சி | |
| | (அ) ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள் | 2 |
| | (ஆ) மத்திய நீர்வளக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு | 2 |
| V | எம்.ஐ.எஸ். மென்பொருள் மேம்படுத்துதல் | 2 |

மேற்கண்ட பயிற்சிகளுக்கு 2002-2003 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.253.46 இலட்சம்.



2002 ஏப்ரல் 29]

**நீர் ஆய்வு நிறுவனம்**

**(1) நீர்வள ஆதாரங்கள் கண்டறிதல் ஆய்வு**

சென்னை தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனம் தமிழகத்தின் நீர்வளத்தினை திட்டமிடும் பணிக்கு மையமாக அமையும் நிறுவனம் ஆகும். மேலும் இந்நிறுவனம் தமிழக அரசின் நீர்வள ஆதார அமைப்பின் தொழில்நுட்பச் செயலகமாகவும் விளங்குகிறது. நீர்வளத்தை விஞ்ஞான முறையிலே திட்டமிடவும், மதிப்பிடவும், மேலாண்மைக்கு வழிவகுக்கவும் இந்நிறுவனம் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஆற்று வடிநிலங்கள் 17 ஆற்றுப் படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. காவிரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப் படுகைகளுக்கு பரந்த அளவிலே நீர்வளத் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மாநில நீர்வள திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இத்திட்ட அறிக்கையுடன் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளின் இணை அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. இவ்வறிக்கைகளில் தமிழ்நாட்டில் ஓடும் அனைத்து ஆற்றுப்படுகையிலும் கிடைக்கக்கூடிய நில மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவை கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் குடிநீர், விவசாயம், தொழிற்சாலைகள், கால்நடைகள், மின் உற்பத்தி போன்ற உபயோகத்திற்கு 1999 ஆம் ஆண்டில் நீர்த்தேவை மற்றும் 2004, 2019, 2025, 2044, 2050 ஆகிய ஆண்டுகளில் தேவைப்படும் நீரின் அளவு ஆகியவை கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு கணிக்கப்பட்டு கிடைக்கின்ற நீர் மற்றும் நீர் தேவை ஆகியவை ஒப்புநோக்கப்பட்டு, நீர் குறை ஆற்றுப்படுகைகள் அல்லது நீர்மிகு ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டு, இப்படுகைகளில் நீரைச் சிக்கனமாக சேமிப்பது பற்றியும், நீர் மேலாண்மை பற்றியும் எடுக்க வேண்டிய கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆற்றுப்படுகையிலும் உள்ள முக்கிய நகரங்களில் நீர் உரிமையாளர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தி, அவர்களின் கருத்துகளையும், நீர் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இத்திட்ட அறிக்கையில் தேவையான மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசு சாரா நிறுவனங்களும், அரசுத் துறை உள்ளூர் அதிகாரிகளும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு கூறிய கருத்துகளும் இவ்வறிக்கைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற 16 கூட்டங்கள் மொத்தத்தில் வெவ்வேறு ஆற்றுப்படுகைகளில்

[2002 ஏப்ரல் 29

நடத்தப்பட்டுள்ளன. மேலும் நீர் உபயோகம் மற்றும் மேலாண்மை சம்பந்தப்பட்ட பிற அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை அழைத்து ஒருநாள் கருத்தரங்கு இரண்டு தடவை நடத்தி அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்து இவ்வறிக்கை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்தரங்கில் உலக வங்கி வல்லுநர்கள் கலந்து கொண்டு கூறிய ஆலோசனைகளின்படி தேவையான மற்ற விவரங்களும் சேகரிக்கப்பட்டு இவ்வறிக்கை மேம்படுத்தப்பட்டிருக்கின்றது.

உலக வங்கி குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க துல்லிய அளவிலே ஒவ்வோர் ஆற்றுப்படுகையிலும் நீரின் இருப்பு, தேவை போன்றவற்றை அறிய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பாலாறு மற்றும் வைகை ஆற்றுப்படுகைகளுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில், கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் விஞ்ஞான முறையிலே கணக்கிடப்பட்டிருக்கின்றது. குடிநீர், விவசாயம், கால்நடைகள், தொழிற்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி ஆகியவற்றிற்கு 1995-96 ஆம் ஆண்டிற்கு தேவைகளையும் மேலும் வருங்கால ஆண்டுகள் 2005, 2020, 2045 ஆகிய ஆண்டுகளில் தேவையான நீரும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளில் நீர் மிகுதியும், நீர் பற்றாக்குறையும் கொண்ட ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனால் வருங்காலத் திட்டங்கள் வகுக்க வழிவகைகள் ஏற்படுகின்றன. நீர் பற்றாக்குறையான ஆற்றுப்படுகைகளில் நீரைச் சேமிக்கவும், மாற்று வழிகளில் நீரைக் கொண்டுவரவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பாலாறு ஆற்றுப்படுகையின் துல்லிய அளவிலான நீர் இருப்பு அறிக்கை இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த "தகால் கன்சல்டண்ட்"—உடன் கலந்தாலோசித்து மேலும் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. இதேபோன்ற அறிக்கை வைப்பாறு ஆற்றுப்படுகைக்கும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

நீர்வள ஆதாரத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு நீர்வள ஆய்வு மேற்கொள்வதற்காக இஸ்ரேல் நாட்டில் "திருவாளர்கள் தகால் கன்சல்டண்ட்" என்ற ஒரு வல்லுநர் குழுவினர் நிறுவனத்திற்கு ரூ.26.83 கோடிக்கு அனுமதித்துள்ளது. அந்த வல்லுநர் குழு பாலாறு ஆற்றுப் படுகைக்கான விரிவான ஆய்வு மேற்கொள்ள உதவுகிறது. இதனைத் தொடர்ந்து வைப்பாறு மற்றும் கோதையாறு ஆற்றுப்படுகைகளுக்கும் இவ்வல்லுநர் குழுவின் உதவியுடன் நீர்வள ஆதாரத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 29]

**(2) சுற்றுச்சூழல் பிரிவு**

நீர்வள ஆதாரங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்கவும், மத்திய மற்றும் மாநில அமைப்புகளுடன் இணைப்பாகச் செயல்படவும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை கணிக்கவும், நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு சுற்றுச்சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.317.61 இலட்சம்.

**(3) நீர்வள ஆராய்ச்சி நிதி**

நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர்வளப் பிரிவிற்குத் தேவையான நடைமுறை சீர்திருத்தங்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காக நீர்வள ஆராய்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓர் ஆராய்ச்சி ஆலோசனைக் குழு ஆராய்ச்சிக்கான தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

நீர் சார்ந்த தலைப்புகளில் 16 ஆராய்ச்சிப் பணிகள், ரூ.202.4 இலட்சத்துக்கு மேற்கொள்ளப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம், விவசாயப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி. போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இப்பணிகள் வழங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2002-2003 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.230.21 இலட்சம்.

**(4) மழைநீர் சேமிப்பு மற்றும் நிலத்தடிநீர் மாசுபடாமல் பாதுகாத்தலுக்கான வல்லுநர் குழு**

நீர்வளத்தினைப் பெருக்கவும், வருங்கால நீர்த்தேவைக்காக நீரைச் சேமிக்கவும் தக்க திட்டங்கள் மேற்கொள்ள ஏற்ற ஆலோசனைகள் வழங்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இக்குழுவிற்கு, நீர் ஆய்வு நிலையத்தின் இயக்குநர், உறுப்பினர் - செயலாளராக உள்ளார். இக்குழு இதுவரை பதினொரு முறைகள் கூடி கலந்தாய்ந்து தேவையான விவரங்களை வெவ்வேறு துறைகளிடமிருந்தும் சேகரித்து வருகின்றது. சென்னை நகரத்தின் குடிநீர் விநியோகத்திற்குத் தேவையான நீர்வளத்தைப் பெருக்குவதற்கான பல திட்டங்களை இக்குழு அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. மேலும் இக்குழுவால் பாசனத் திறனை மேம்படுத்துதல் குறித்த ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

[2002 ஏப்ரல் 29

### (5) நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை

தமிழ்நாட்டின் கிடைத்தற்கரிய நீர் வளத்தை அனைத்துத் துறைகளின் நீர் உபயோகத்தை கணக்கில்கொண்டு பகிர்ந்தளிக்க நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை ஒன்று மாண்புமிகு தமிழக முதல்வரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 5 உப அமைப்புகள் விவசாயம், நிலத்தடி நீர், குடிநீர், சுற்றுச்சூழல் முதலிய பிரிவுகளில் அமைக்கப்பட்டு தேவையான கருத்துரைகள் இவ்வாய்வு அவைக்கு வழங்க ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவையின் இரண்டாவது கூட்டம் 20-12-2001-ல் நடைபெற்றது. இதில் விவசாய பம்பு செட்டுகளின் திறன் ஆய்வு செய்தல், தமிழ்நாடு விவசாயிகள் பாசன மேலாண்மை விதிகள் செயல்படுத்துதல், ஆற்றுப்படுகை மேலாண்மை, வாரிய செயல்பாடு, தண்ணீருக்கான கட்டணம், நிலத்தடி நீர் எடுப்பை வரைமுறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டன.

### (6) நீர் ஆய்வு நிறுவனத்தினை மேம்படுத்துதல்

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நீர் ஆய்வு மையத்திற்குத் தேவையான கணிப்பொறிகள் மற்றும் அதனைச் சார்ந்த சாதனங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

நீர் ஆய்வு நிறுவனத்தில் இயங்கிவரும் தொலையுணர்வுப் பிரிவு, நவீன தொலையுணர்வு மற்றும் நிலவியற்பியல் தகவல் அமைப்பு மென்பொருள்களான. எர்டாஸ், எல்விஸ், இன்டர்கிராப், ஆர்க்கின்போ மென்பொருள்களை பெற்றதன் மூலம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நீர் ஆய்வு நிறுவனத்தின் தொலையுணர்வுப் பிரிவு தமிழ்நாட்டின் தொலையுணர்வு செயல்பாட்டு மையம் என 18-03-2002 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை நிலை எண் 117-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தகவல் திரட்டுதல், அடிப்படை வசதிகள் மற்றும் கிடைக்கப்பெறும் தொலையுணர்வு தகவல்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் அரசுத் துறைகளிடையே நல்ல ஒருங்கிணைப்பினை உறுதி செய்ய தமிழ்நாட்டின் தொலையுணர்வு செயல்பாட்டு மையத்தினால் இயலும். தொலையுணர்வுப் பிரிவு, மாநில திட்டக் குழுவின் மாநில நில உபயோக வாரியத்தினால் வழங்கப்பட்ட



2002 ஏப்ரல் 29]

நிதி மூலம், தொலையுணர்வு நுணுக்கங்களைப் பயன்படுத்தி, மேல் பாலாற்றில், நில நீரின் தூய்மைக் கேடு மற்றும் மாசுபட்டதால் விவசாயத்திற்குப் பயனின்று வீணாய்ப்போன விளைநிலங்கள் கண்டறியப்பட்டன. அதைச் சீராக்க ஆலோசனைகள் வழங்க அரசு ஆணை மூலம் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் அனைத்து ஆற்றுப்படுகைகளுக்கான, விண் செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட சமீபத்திய வண்ணப்படங்களை தேசியத் தொலையுணர்வு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, நிலவியல், நிலவியற்பியல், நிலவள மாறுபாடுகள் குறித்து ஆய்வு. மேற்கொள்ளப்படுகிறது. மாநில திட்டக் குழு அளித்த நிதி மூலம், செங்கம் கருமை ஒன்றியத்தில், நில நீர் தேக்க தகுதியான இடங்களைத் தேர்வு செய்யும் பணியை, இப்பிரிவு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தென்னகப் பகுதியில் ஹைதராபாத் தொலையுணர்வுப் பிரிவின் ஒத்துழைப்புடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பொன்னையாறு வடிநிலப்பகுதியில் அகமதாபாத் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் உதவியுடன் ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

### பொறியியல் சீர்திருத்தக் குழு

நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பொதுப் பணித் துறை சிறப்பாக அரசுப் பொறியியல் சீர்திருத்தக் குழுவினை அமைத்துள்ளது. இந்தக் குழுவின் தலைவராக திரு. சி.ஏ. சீனிவாசன், முன்னாள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) மற்றும் பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளனர்.

இக்குழுவானது நடப்புக்கால தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் சீர் செய்தல் மற்றும் தற்போது மேற்கொள்ளும் நடைமுறைகளைச் சீர் செய்தல், பணிகளைச் செயல்படுத்துவதில் உள்ள நடைமுறைகளில் மாற்றங்கள் செய்தல், துறையின் பணியாளர்களின் செயல்பாடுகள், பொறியாளர்களின் பணிநிலை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பினை மாற்றியமைத்தல் போன்றவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்தக் குழுவின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்

இந்தியக் கொதிகலன்கள் சட்டம், 1923-ஐ மாநில அரசுகளால் இணைப் பொறுப்பின்கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதையொட்டி.

மேற்படி சட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் முக்கியமான பொறுப்பாக மேற்கொண்டு இயங்கி வருகின்றது. கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதையும் பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கும் இழப்பு நேரா வண்ணம், இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன்படி பாதுகாப்பு விதி நெறிமுறைகளைச் செயல்படுத்தும் முக்கிய பொறுப்பும் இக்கொதிகல ஆய்வகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

இந்தியாவிலேயே உயர் அழுத்தக் கொதிகலன்கள் உள்ளிட்ட கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களுக்குத் தேவையான உயர் அழுத்த உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகம் முதல்நிலையில் இருந்து வருகின்றது. இந்த மாபெரும் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், தனது சிறப்பான செயல் திறப்பாட்டினால் மிகவும் உறுதுணையாக இருந்து வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள், கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் எக்னாமைசர்கள், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950-ல் வரையறுத்துள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதும், இக்கொதிகலன்கள் ஆய்வகத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். இதன் பணி சட்டரீதியான மற்றும் தொழில் நுட்ப வகையினைச் சார்ந்ததாகும்.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறைகளின்படி தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு கொதிகலன்கள் பணியாளர்கள் விதி, 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகியவற்றின் விதிகளைச் செயல்படுத்தும் அமைப்பாகவும் இவ்வாய்வகம் செயல்பட்டு வருகின்றது. இதற்காக இந்த ஆய்வகம் கொதிகலப் பணியாளர்களுக்கெனவும் (நிலை-1, நிலை-2 மற்றும் நிலை-3), கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்களுக்கெனவும் தேர்வுகள் நடத்தி,



தேர்ச்சி பெறும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கும் தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல்மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர் அழுத்த பற்றவைப்பாளர்கள் உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பற்றவைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. இதன்படி 2001-2002 ஆம் வருடத்தில் சுமார் 940 பற்றவைப்பாளர்களுக்குத் தேர்வுகள் நடத்தி அதில் தேர்ச்சி பெற்ற 860 பற்றவைப்பாளர்களுக்கு தரம் வாரியாக (பைப், ட்யூப் மற்றும் பிளேட் ஆகியவற்றில் அலாய் ஸ்டீல் மற்றும் கார்பன் ஸ்டீல்) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும், உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும் தயாரிக்கப்படும் பொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும்போது, அவற்றின் பல்வேறு பாகங்களும் தரமான பொருட்களைக் கொண்டும், தரமான வேலைத்திறன் கொண்ட பணியாளர்களைக் கொண்டும், நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950, அடிப்படையாக அமைகின்றது. இவ்விதிமுறைகளின்படி, கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் வடிவமைத்து தயாரிக்கப்படுவதை உறுதிசெய்யும் விதமாக, இவ்வாய்வகம், கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் வடிவமைப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதுடன், தயாரிப்பில் ஒவ்வொரு நிலையிலும், நிலை ஆய்வுகள், மேற்கொண்டு அவற்றின் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இத்தகைய நிலை ஆய்வுகள், ஒவ்வொரு தயாரிப்பிலும் வடிவமைப்பு வரைபட ஒப்புதல் மற்றும் கச்சாப் பொருள் நிலையிலிருந்து, இறுதி வடிவம் பெறும் நிலை வரையிலும், பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் இவ்வாய்வகத்தினால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தரத்திற்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.

இவ்வகையில் ஆசியாவிலேயே மிகப்பெரிய அளவில் கொதிகலன்களைத் தயாரிக்கும் பாரத மிகுமின் நிறுவனம், தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் விளங்குகின்றது. திருச்சிராப்பள்ளி மற்றும் மாத்தூரில் கொதிகலன்கள் தயாரிப்பில் சிறந்து விளங்கும்

தி/ள். சிதார் வெசல்ஸ் லிமிடெட், தி/ள். வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், தி/ள். ஜி.பி. இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், தி/ள். பிரிமியர் இன்டஸ்ட்ரீஸ், தி/ள். ரஜினிபேப், தி/ள். பைப்லைன்ஸ் அண்டு புராசஸ் எக்யூப்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் போன்ற நிறுவனங்களும் உள்ளன. இதேபோன்று சென்னையில் தி/ள். ஐஏஇசி இன்டஸ்ட்ரீஸ் (மெட்ராஸ்) லிமிடெட், தி/ள். பாப்காக் போர்சிக் எனர்ஜி லிமிடெட், பூந்தமல்லி போன்ற நிறுவனங்களும், மேலும் கோயம்புத்தூரில் தி/ள். ஜெயா அண்டு கம்பெனி, தி/ள். ஜெயா பாய்லர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், தி/ள். ஸ்ரீவெங்கடேஸ்வரா இன்ஜினியர்ஸ் கார்ப்பரேசன், கோயம்புத்தூர் முதலிய தயாரிப்பு நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ 485 கொதிகலன்களை. அனைத்து நிலைகளிலும் ஆய்வு செய்து, அவற்றிற்கு தரச் சான்றிதழ்களை வழங்கி இந்தியாவிலேயே கொதிகலன்கள் தயாரிப்பினில் தமிழகம் தொடர்ந்து முதல்நிலை வகிக்க வழிகோலியுள்ளது.

அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான சர்வதேச அளவில் தயாரிக்கப்படும் கொதிகலன்களுக்கு ஈடாக 500 மெகாவாட் வரை மின்சாரம் தயாரிப்பதற்கு உகந்த பாரத மிகுமின் நிறுவனம், திருச்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பிரம்மாண்டமான உயர் அழுத்த கொதிகலன்களையும், இவ்வாய்வகம் வடிவமைப்புக்கு ஒப்புதல் அளிப்பதுடன், ஒவ்வொரு நிலையிலும் ஆய்வு செய்து தரச் சான்றிதழ்களையும் வழங்கி மேற்படி கொதிகலன்கள் எந்த ஒரு தயாரிப்பு குறையும் சுட்டிக்காட்ட இயலாதவாறு நம் நாட்டில் பல்வேறு மின் நிலையங்களில் மிகத் திறம்படச் செயல்பட்டு வருவது சர்வதேச நிறுவனங்களுக்கு இணையாக தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் செயல்படுவதை உறுதி செய்கின்றது. மேலும் தமிழகத்திலிருந்து தயாரிக்கப்படும் உயர் அழுத்தக் கொதிகலன்கள் ஒருசில அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்போதும் அந்தந்த நாடுகளில் உள்ள தரக்கட்டுப்பாட்டிற்கிணங்க அவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதையும் இவ்வாய்வகம் உறுதி செய்கின்றது.

இத்தகைய கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் புதியதாக கொதிகலன்களைத் தயாரிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது, இவ்வாய்வகம் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான அனைத்துவித உதவிகளையும் வழங்கி உரிய தொழில் நுட்ப நெறிமுறைகளையும் வழிகாட்டுவதன் மூலமாக, மேற்படி நிறுவனங்கள் எந்தவித இடர்ப்பாடுமின்றி தொழிற்சாலைகளை தமிழகத்தில்



தொடங்கவும் அவ்வாறு தொடங்கப்படும் தொழிற்சாலைகள் வெகு விரைவாக உற்பத்திப் பணிகளை தொடங்கவும் இவ்வாய்வகம் அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முனைவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த பல்வேறு மாநிலங்களில் இயங்கி வந்த பல கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது தமிழகத்தில் தங்கள் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகளைத் தொடங்கி உற்பத்தி செய்து வருவது இதன் தொடர்பாக சிறப்பம்சமாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான தடைபடாத மின்சார விநியோகம் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு, தொலைநோக்குப் பார்வையுடன் தமிழகத்தில் மின்சார உற்பத்தியை பலமடங்கு உயர்த்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது தொடர்பாக பல்வேறு தனியார் அனல் மின் நிலையங்களுக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்து, அவற்றின் ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மின்நிலையங்கள் அமைப்பில், கொதிகலன்கள் பெரும்பங்கு வகிப்பதால், இவற்றின் நிர்மாணத்திற்கு கொதிகலன்கள் ஆய்வகம் அனைத்து உதவிகளையும் நல்கி வருகின்றது. இவ்வாறு கொதிகலன்கள் ஆய்வகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப் பெற்றுள்ள தனியார் அனல்மின் நிலையங்களில் குறிப்பிடத்தக்கவை - தி/ள். தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தாரால் கும்மிடிப்பூண்டியில் அமைக்கப்பட்டு தற்போது 63.75 மெகாவாட் திறன் உற்பத்தியுடன் தொடங்கியுள்ள அனல்மின் நிலையம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இம்மின் நிலையத்திற்குத் தேவையான கொதிகலன் தென் ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, இந்நிறுவனம், தம் சுய தேவைக்கான மின்சக்தியைப் பெற்றுக்கொள்வதுடன், கூடுதலாக உற்பத்தியாகும் மின்சக்தியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் விநியோகித்து உதவி செய்து வருகின்றது. இதுபோன்றே, மேட்டூரில் தி/ள். மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்தாரால் அமைக்கப்பட்டுள்ள 25 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய மூன்று கொதிகலன்கள், முதன் முறையாக சீன நாட்டிலிருந்து கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டு இக்கொதிகலன்களின் வடிவமைப்புக்குத் கடந்த ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதனையடுத்து கொதிகலன்கள் நிறுவப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

மேலும் கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தாலுகாவில் உள்ள உத்தங்கல் என்னும் இடத்தில் அமையவுள்ள தி/ள். எஸ்டிசிஎம்எஸ். எலெக்ட்ரிக் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தில் 250 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினில் நிறுவப்பட உள்ள உயர் அழுத்த கொதிகலனுக்குரிய வடிவமைப்பு வரைபட ஒப்புதல் மற்றும் நீராவி குழாயமைப்பு வரைபட ஒப்புதல் ஆகியவற்றிற்கு கொதிகலன்கள் ஆய்வகத்தின் மூலமாக மிக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு. உரிய ஒப்புதல்கள் குறிப்பிட்ட கால அளவிற்கு முன்னதாகவே அனுமதி வழங்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு கொதிகலனை சென்னை பூந்தமல்லி நிறுவனமான தி/ள். பாப்காக் போர்சிக் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தார் தயாரித்து அளித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வழுதூர் (பெருங்குளம்) என்னுமிடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் அமையப் பெறவுள்ள 107 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய கூட்டுத் தொடர் சுழற்சி மின் திட்டப் பிரிவினில் நிறுவப்படவுள்ள கொதிகலனுக்கு, இக்கொதிகல ஆய்வகம் அளித்துள்ள விரைவான ஒப்புதலினால், கொதிகலன் நிறுவும் பணி தொடங்கப்பெற்றுள்ளது. மேற்படி மின் திட்டப் பிரிவிற்கு கொதிகலனைத் தயாரித்து அளித்தது மட்டுமின்றி, கொதிகலன் மற்றும் அதனுடன் இணைக்கப்படவுள்ள நீராவி குழாயமைப்புகள் நிறுவும் பணியினையும் சேர்த்து, திருச்சி தி/ள. பாரத மிகுமின் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

நெய்வேலி அனல்மின் நிலையம் 210 மெகாவாட் மின் உற்பத்திக்குப் பயன்படும் இரண்டு மிகப்பெரிய கொதிகலன்கள், இத்தாலிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்து நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. இக்கொதிகலன்கள் உடனடியாக நிறுவப்பட காலதாமதம் ஏதுமின்றி வரைபடங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கும் சீரிய பணியை இக்கொதிகலன் ஆய்வகம் திறம்பட நிறைவேற்றியதன் தொடர்ச்சியாக, கொதிகலன்கள் நிறுவும் பணி பல நிலைகளில் நிறைவேறி வருகின்றது.

இவ்வாறு தமிழ்நாட்டின் மின்உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான கொதிகலன்களின் நிறுவும் பணிக்கும் மற்றும் அவற்றின் தங்கு தடையற்ற செயல்பாட்டிற்கும் மிக துரித நடவடிக்கைகளை, தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் தம்முடைய சீரிய தொழில்நுட்ப அணுகுமுறையுடன் ஒத்துழைப்பு அளித்து மேற்கொண்டு வருவதால்





தமிழகத்தில் மின்பற்றாக்குறை மற்றும் மின்தட்டுப்பாடு நிலவாத நிலைமைக்கு இக்கொதிகல ஆய்வகம் உதவுகிறது.

இக்கொதிகல ஆய்வகம் 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதியதாக 265 கொதிகலன்களையும் அவற்றுக்கான நீராவி குழாயமைப்புகளுக்கும் ஒப்புதல் வழங்கி அவற்றைப் பதிவு செய்ததன் மூலம் உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டு தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

மேற்படி கொதிகலன்கள் அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், துணியாலைகள், சாயத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சர்க்கரை ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், மருந்துப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உருக்காலைகள், அனல்மின் நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், நட்சத்திர ஓட்டல்கள் போன்ற பல்வகைப்பட்ட நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளதிலிருந்து தமிழகத்தின் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சியில் கொதிகலன்கள் ஆய்வகம் பெரும்பங்கு வகிப்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களைத் தவிர, கொதிகலன்கள் உதிரி பாகங்களாக உயர் அழுத்த அடைப்பான்கள், குழாய்கள், பற்றவைப்புக் கம்பிகள் போன்ற உபகரணங்களைத் தயாரிக்கும் பெரும்பாலான நிறுவனங்களும் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள், அனைத்தும் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு தரச் சான்றிதழ்கள் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உபகரணங்கள் நம் நாட்டின் மொத்தத் தேவையில் பெரும்பங்கு வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவ்வகையில் உலகத் தரம் வாய்ந்த அடைப்பான்களை தயாரிக்கும் திருவாளர்கள் அட்கோ இந்தியா லிமிடெட் நிறுவனம், சென்னை, மணப்பாக்கத்தில் ஒரு தொழிற்சாலையுடன் தொடங்கி, தற்போது மறைமலைநகரில் ஒரு தொழிற்சாலையும், காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலையுமாக மூன்று தொழிற்சாலையாக தனது உற்பத்தித் திறனை விரிவுபடுத்தி தொடர்ந்து இயங்கி வருவது, கொதிகலன்கள் ஆய்வகம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் ஆற்றிவரும் மிகப் பெரிய பங்கினை எடுத்துக்காட்டுகின்றது.

[2002 ஏப்ரல் 29

இதேபோன்று உயர் அழுத்தக் கொதிகலன்கள் தயாரிப்பில் திருச்சி பாரத மிகுமின் நிறுவனத்திற்கு அடுத்தபடியாக சிறந்து விளங்கும் திருவாளர்கள் சிதார் வெசல்ஸ் லிமிடெட் நிறுவனம், தம்முடைய கொதிகலன்கள் தயாரிப்புப் பிரிவில் பல சிறப்பு வசதிகள் பொருந்திய மூன்றாவது பிரிவினை திருச்சி மாவட்டம், பெரமங்கலம் என்னுமிடத்தில் உற்பத்திப் பணியை ஆரம்பித்து தொடர்ந்து இயங்கி வருவது தமிழக கொதிகலன்கள் உற்பத்தி நிலைக்கு மேலும் ஓர் அளவுகோலினை எட்டியமைக்கு இக்கொதிகலன்கள் ஆய்வகம் வழியமைத்துள்ளது. உதிரி பாகங்கள் தயாரிப்பில் மேற்படி அட்கோ இந்தியா லிமிடெட் நிறுவனத்தைத் தவிர, விராலிமலையில் திருவாளர்கள் எப்எம்சி சன்மார் லிமிடெட், சென்னையில் பிசர் சோமாக்ஸ் சன்மார் லிமிடெட் நிறுவனம், கோவையில் கேஎஸ்பி பம்ப்ஸ் நிறுவனம், ஓசூரில் திருவாளர்கள் சிவானந்தா பைப் பிட்டிங்க்ஸ் நிறுவனம் ஆகியவை மிகப் பெரிய அளவில் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் நிதியாண்டில், கொதிகலன் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு சுமார் 1,14,610 அடைப்பான்களுக்கான தரச் சான்றிதழ்களையும் நீராவி குழாயமைப்பு சாதனத்தில் பொருத்தப்படும் சில வகை உபகரணங்களுக்கான 92,991 தரச் சான்றிதழ்களையும் மற்றும் புதிய கொதிகலன்கள் உட்பட அதன் பல்வேறு பாகங்களுக்கும் மற்றும் உபரி பாகங்களுக்காக 5,033 சான்றாவணங்களுக்கு ஒப்புதலும் இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950-ன்கீழ் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பதுடன் இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923-ன் விதிகளை கொதிகலன்களை பயன்படுத்துவோர் பின்பற்றி, கொதிகலன்கள் முறையாக இயக்கப்பட்டு வருவதை உறுதி செய்வதன்மூலம் பொது மக்களின் உயிர் உடைமைகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்படாமல் கண்காணிக்கும் மிக முக்கிய பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலன்களை ஆண்டிற்கொருமுறை சீரிய முறையில் ஆய்வுகள் செய்து அவற்றின் இயக்கத்திற்கு வருடாந்திர சான்றிதழ்களை வழங்குவதன்மூலம் மேற்படிப் பணியினை கொதிக்லன்கள் ஆய்வகம் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.



2002 ஏப்ரல் 29]

ஆண்டாய்வின்போது பழுதடைந்து இயக்கத்திற்கு அனுமதிக்கப்பட இயலாத கொதிகலன்களுக்கு சான்றிதழ்கள் மறுக்கப்பட்டு உரிய பழுதுகள் சீர் செய்யும் பணி முடிக்கப்பட்டபின் மீண்டும் ஆய்வுகள் மேற்கொண்டு, அதன் பின்னரே அவற்றின் இயக்கத்திற்கு உரிய சான்றிதழ்களை இவ்வாய்வகம் வழங்கி வருகின்றது. இவ்வகையில் 2001-2002 ஆம் வருடத்தில் 2,965 கொதிகலன்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் இயக்கத்திற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் மேற்படி நிறுவனங்களில் உற்பத்தி பாதிப்பிற்கு இடமளிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது பழுதடைந்ததாக காணப்பட்ட சுமார் 89 கொதிகலன்கள் பழுதுகள் நீக்கப்பட தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் அவர்கள் நிலையில் பழுதுகள் ஒப்பளிக்கப்பட்டு அவற்றில் சுமார் 76 கொதிகலன்களுக்கு பழுதுகள் சீர் செய்யப்பட்டு அவை இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கொதிகலன்கள் நிறுவப்படவும், குழாய் அமைப்புப் பணிகள் அமைக்கப்படவும், பழுதுகள் சீர் செய்யப்படவும், தகுதி வாய்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. மேற்படி நிறுவனங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் தகுதிவாய்ந்த உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதையும், மேற்படி நிறுவனங்களின் கொதிகலன்கள் தொழில் நுட்ப அனுபவத்தினையும் கருத்தில் கொண்டு பல்வேறு தரங்களில் இதற்கான ஒப்புதல்கள் அளிக்கப்படுகின்றன.

பதிவு பெற்றுள்ள கொதிகலன்களைத் தவிர, பதிவு பெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து அவற்றின் இயக்கத்தைத் தடை செய்வதுடன், அத்தகைய கொதிகலன்களைப் பயன்படுத்துவோர்மீது இந்திய கொதிகலன்கள் சட்ட விதிகளுக்கு முரணாக பொது மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கொதிகலன்களை அங்கீகாரமின்றி இயக்கி வருவதற்காக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலுள்ள தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் தலைமையில்

[2002 ஏப்ரல் 29

நான்கு துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்களை சென்னை, திருச்சி, கோவை மற்றும் நெய்வேலியில் வட்டார நிலை அலுவலர்களாகக் கொண்டும், பன்னிரெண்டு கொதிகலன்கள் ஆய்வாளர்களையும், ஆறு உதவி கொதிகலன்கள் ஆய்வாளர்களையும் கொண்டு தற்போது இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்கள் உதிரிபாகங்கள் தயாரிப்பிலும் கொதிகலன்களைப் பயன்படுத்துவதிலும் இந்தியாவிலேயே முதல் நிலையில் உள்ள மாநிலமாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு மாநிலத்தில், கொதிகல ஆய்வகப் பணிகளை நிறைவேற்றிடும் பொறுப்பில் உள்ள தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர், நான்கு துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்கள், பன்னிரெண்டு கொதிகலன்கள் ஆய்வாளர்கள் மற்றும் ஆறு உதவி கொதிகலன்கள் ஆய்வாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை, பிற மாநில அளவினைக் காட்டிலும் வெகுவாகக் குறைந்ததொன்றாக இருப்பினும், தம்முடைய திறமையான மற்றும் கடுமையான செயல் திறத்தினால் கொதிகல ஆய்வுப் பணிகளில் சுணக்கமின்றியும் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி தொய்வின்றி சீராக நடைபெற்று வர தமிழக கொதிகல ஆய்வகம் பெரும் பணி ஆற்றி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாய்வகத்தைப் பொறுத்தமட்டில் அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தி நிலை ஆய்வுகள் தொடர்பாகவும் கொதிகலன்களை ஆய்வு செய்வது தொடர்பாகவும், கொதிகலன்கள் தொடர்பான வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாகவும், பற்றவைப்பாளர்கள் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்குதல் தொடர்பாகவும், தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் தேர்வு மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் பணியாளர்கள் தேர்வு ஆகியவை தொடர்பாகவும் மற்றும் பல நிலை ஆய்வுகளுக்காக ஆய்வுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் நிதியாண்டில் இந்த வகையில் தமிழக அரசுக்கு தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் மூலமாக சுமார் ரூபாய் 3,16,43,000/- வருவாயாகக் கிடைத்துள்ளது. இதே காலக்கட்டத்தில் இவ்வாய்வகத்தின் இயக்கத்திற்காக சுமார் ரூ.84,59,000 மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இவ்வகையில் செலவினத்தைக் காட்டிலும் பன்மடங்கு வருவாய் அரசிற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.



2002 ஏப்ரல் 29]

தமிழகத்தில் தற்போதுள்ள தொழில் முன்னேற்றம் வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகத்தின் வருவாய் மேலும் கணிசமான அளவிற்கு வெகுவாக உயரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. மேலும் தமிழகத்தின் வருவாய் நிதிநிலைமையைப் பெருக்கும் நோக்குடன் கொதிகலன்களின் வருடாந்திர ஆய்வுக்கட்டண விகிதத்தினில் சராசரியாக 15 சதவிகித உயர்வினை வருடந்தோறும் சீராக உயர்த்துவதென திட்டம் தீட்டப் பெற்று அதற்கான அரசின் ஒப்புதல் ஆணைகள் பெற்று, கடந்த 2001 மார்ச் மாதம் முதல் ஆய்வுக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வரப்படுகின்றது. தற்போது இதே கொள்கையின்படி, கொதிகலன் ஆய்வுக் கட்டணத்தை மேலும் கூடுதலாக 15 சதவிகிதம் உயர்த்திட கருத்துருக்கள் அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே 2002-2003 ஆம் நிதியாண்டில் இவ்வாய்வகத்தின் மூலம் தமிழக அரசிற்கு ரூபாய் 375 இலட்சங்களுக்கும் குறைவில்லாமல் வருவாய் வரும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வகத்தைப் பொறுத்தமட்டில் அரசால் ஒப்பளிக்கப்படும் திட்டப் பணிகள் ஏதும் நிறைவேற்றப்பட வேண்டிய வாய்ப்புகள் இல்லை. எனவே அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் திட்டப் பணிகள் நிறைவேற்றுதல் என்னும் கோட்பாட்டின்கீழ் நிதி ஒதுக்கீடு கோரப்படுவதில்லை.

தகவல் தொழில் நுட்பத்தினை முழுமையாகப் பின்பற்றும் வகையில், முதல் கட்டமாக தலைமையகமான சென்னையில் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் திருச்சி, கோயம்புத்தூர் வட்டார அளவில் இயங்கும் துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்கள் அலுவலகங்களிலும் நவீன கணினிகள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு கொதிகலன்கள் ஆய்வாளர் வட்ட அலுவலகத்திற்கும் கணினி ஒன்றை நிறுவவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாய்வகத்தின் முக்கிய நோக்கமே இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறைகளை செயலாக்குவதைத் திறம்படக் கண்காணித்து பொது மக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதுடன் பொது சொத்துக்களுக்கு சேதம் நிகழாவண்ணம் கொதிகலன்கள் பாதுகாப்புடன் இயக்குவதை உறுதி செய்வதுமே ஆகும். திறமையான மற்றும் சிறப்பான செயல்பாட்டினால் மேற்படி அடிப்படைக்

கோட்பாட்டினை இக்கொதிகலன்கள் ஆய்வகம் முழுமையாக நிறைவேற்றி வருகின்றது.

இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ன்கீழ் இந்தியாவிலேயே கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பில் தொடர்ந்து தமிழகம் முதல்நிலை வகித்து வருவதால், தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் தனது சிறப்பான செயல்திறனினால், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றது.

**கட்டட அமைப்பு**

பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு 01-04-1996 முதல் 16 வட்டங்கள் (இதில் 13 வட்டங்கள் சிவில் பணிகளும் 3 வட்டங்கள் மின்சாரப் பணிகளும் ஆகும்) மற்றும் புது தில்லியில் உள்ள கோட்டத்தையும் சேர்த்து 52 கோட்டங்களோடு (இதில் 45 கோட்டங்கள் சிவில் பணிகளும் 6 கோட்டங்கள் மின் பணிகளும் ஆகும்) செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு, அரசுத் துறைகளின் தேவைகளுக்கேற்ப கட்டடங்கள் கட்ட திட்டமிடுதல், வடிவமைத்தல், நிலம் கையகப்படுத்தல் ஆகியவற்றுடன் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசுத் துறையைச் சார்ந்த கழகங்களான ஈ.எஸ்.ஐ. பல்கலைக்கழகங்கள், மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம், ஆடுவளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம், உலக வங்கித் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டடப் பணிகளை "செலுத்து மற்றும் வைப்புத் தொகை", கணக்குகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. மேலும் இக்கட்டட அமைப்பு, மாவட்ட சார்பு நிதியிலிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் செயல்படுத்தப்படும். வட்டார வளர்ச்சிப் பணிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் பணிகளையும் மேற்கொள்கிறது. இதுதவிர, இத்துறை, அரசு நினைவு இல்லங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைக்கும் பணிகளையும் நிறைவேற்றுகிறது.

இத்துறை அரசு அலுவலகக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், அரசினர் தோட்டம், சென்னை மற்றும் உதகையில் அமைந்துள்ள ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்களின்



அரசு மற்றும் தனியார் குடியிருப்பு மாளிகைகளின் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது. இதனோடு பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் மெரினா கடற்கரைத் தோட்டம் பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும் புயல், வெள்ளம் மற்றும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட அரசுக் கட்டடங்களை புனரமைப்பு செய்யும் பணிகளையும் நிறைவேற்றுகிறது.

கட்டட அமைப்பின் பொறியாளர்கள், காவல் துறை புலனாய்வுக் குழுமம் மற்றும் நீதிமன்றங்கள் கோரும் வழக்கு சார்ந்த கட்டடங்களின் சொத்து மதிப்பீடுகளையும் தயார் செய்து தருகிறார்கள். மேலும் திரைப்பட அரங்குகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான உறுதிசான்றிதழ் மற்றும் அரசு அலுவலகங்களுக்கான வாடகை நிர்ணய சான்றிதழ் ஆகியவையும் இந்தக் கட்டட அமைப்பினரால் வழங்கப்படுகிறது. இவ்வமைப்பு மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரத் தடுப்பு, மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

கண்காணிப்புப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பின் கட்டுப்பாட்டின்கீழ், செயற் பொறியாளரின் தலைமையில் இயங்கி வரும் சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி நிலையம் கீழ்வரும் பணிகளை அளித்து வருகிறது:—

(1) பொதுப் பணித் துறை கட்டட மையம் மூலம் பொறியாளர்கள் மற்றும் கட்டடத் தொழில் வினைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

(2) பொதுப் பணித் துறை கட்டட மையம் கட்டடப் பணிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டட கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான விலை குறைந்த, தரம் வாய்ந்த கட்டுமானப் பொருட்கள், கருவிகள் தயார் செய்து சந்தைக்குக் கொண்டு வருவது மற்றும் கட்டுமானப் பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.

(3) கட்டுமானப் பொருள்கள் தரப் பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப் பணி மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.

[2002 ஏப்ரல் 29

(4) பழுதடைந்த கட்டடங்களை கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்புப் பணி சிபாரிசு செய்தல் மற்றும் அவற்றை பணி நிலைமைக்குக் கொண்டுவர தேவையான யுக்திகளைக் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.

**தலைமைக் கட்டடக் கலைஞர் பிரிவின் பணிகள்**

தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலைப் பிரிவு கட்டட அமைப்பினோடு தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பிரிவு, பொதுப் பணித் துறையில் கட்டப்பட்டு வரும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்குத் தேவையான வரைபடங்களைத் தயாரிக்கிறது. மேலும் புதிய கட்டடங்களுக்கான, முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களைக் கொண்ட வரைபடங்களையும் தயாரிக்கிறது. இக்கட்டடங்களுக்குத் தேவையான வண்ணப்பூச்சு பற்றிய விவரங்களையும் அறிவிக்கின்றது.

இப்பிரிவு நினைவிடங்கள், மண்டபங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றுக்கான வரைபடங்களைத் தயாரிப்பதோடல்லாமல், மிகப்பெரிய கட்டுமான பணிகளானப் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் தலைமையிட அலுவலகங்கள் உள்ளடங்கிய பெரும் திட்ட வளாகத்திற்குத் தேவையான உள்ளமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மேலும் தொகுப்பு அங்கீகாரம் மூலம் வழங்கப்படும் திட்டப் பணிகளான ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

**சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை**

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட ரூ.4,968.00 இலட்சங்களுக்கு அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதுவரை 625 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 17 கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 10 கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

1999-2000 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டம், இரும்பேடுவில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அங்கீகரிக்கப்பட்ட பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. 2001-2002-ல் சேலம் மாவட்டத்தில் காடையாம்பட்டியில் உள்ள ஆரம்ப



2002 ஏப்ரல் 29]

சுகாதார மையத்தை மேம்படுத்துவதற்காக அரசு ரூ.40.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 20 மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்யும் பொருட்டு ரூ.800 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. அப்பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

**துணை சுகாதார நிலையங்கள்**

தமிழகத்தில் 200 துணை சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.900 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதில், இதுவரை, 199 துணை சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள ஓர் இடத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேலும் நபார்டு உதவியுடன் ரூ.636.00 இலட்சம் மதிப்பில் முதல் கட்டமாக, திருச்சி, திண்டுக்கல், கரூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 100 துணை சுகாதார மையங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 26-12-2001 அன்று நபார்டு ரூ.536.56 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள தொகை மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படவுள்ளது.

இதுபோன்று நபார்டு உதவியுடன், ரூ.657.60 இலட்சம் மதிப்பில், இரண்டாம் கட்டமாக, ஈரோடு, கன்னியாகுமரி, பெரம்பலூர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் 100 துணை சுகாதார மையங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15-01-2002 அன்று நபார்டு ரூ.560.25 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள தொகை மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படவுள்ளது.

மேற்கூறிய பணிகள் இவ்வாண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

**மருத்துவமனைகள் மேம்படுத்தல் திட்டம்**

மாவட்ட தலைமை, தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் 180 மேம்பாட்டுப் பணிகளுக்காக மொத்தம் ரூ. 2,513.35 இலட்சத்திற்கு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

| வருடம் | ஒப்பளிப்புத் தொகை |
|---|---|
| 1997-1998 ஆம் ஆண்டில் | ரூ.250.00 இலட்சத்திற்கும், |
| 1998-1999 ஆம் ஆண்டில் | ரூ.1,840.00 இலட்சத்திற்கும், |

[2002 ஏப்ரல் 29

1999-2000 ஆம் ஆண்டில் ரூ.134.00 இலட்சத்திற்கும்,

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.289.00 இலட்சத்திற்கும்,

இவற்றில் 161 பணிகள் முடிக்கப்பட்டும், 9 பணிகள் முன்னேற்றத்திலும், மீதமுள்ள 10 பணிகள் தொடங்கப்படவும் உள்ளன.

2001-2002-ல் ரூ.63.50 இலட்சத்திற்கு 4 மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**மருத்துவக் கல்வித் திட்டங்கள்**

*தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரிக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்*

1999-2000 ஆம் ஆண்டில், தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி கட்ட ரூ.1,540.00 இலட்சங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியது. இங்கு கட்டப்படும் கட்டடங்கள், திருச்சி, கி.ஆ.பெ. விசுவநாதன் அரசு மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட வசதிகள் உள்ளடக்கிய கட்டடங்களைப் போன்றதாகும். எட்டு கட்டடங்களில் 5 கட்டடங்கள் முடிக்கப்பட்டு, மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 3 கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**சென்னை, அரசு பொது மருத்துவமனையில் டவர் 1, டவர் 2 மற்றும் நவீன சமையலறைப் பிரிவு கட்டடங்கள் கட்டுதல்**

2000-2001ஆம் ஆண்டில், சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள 160 ஆண்டுகள் பழமையான கட்டடத்தினை இடித்துவிட்டு, அவ்விடத்தில் டவர் - 1, டவர் - 2 மற்றும் சமையலறைப் பிரிவுகள் கட்ட ரூ.10,447.00 இலட்சங்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டத்தை ஹட்கோ கடன் பெற்று நிறைவேற்றவும் மற்றும் தேவையான நவீன வசதிகள் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. டவர் - 1 மற்றும் டவர் - 2-க்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நவீன சமையலறைப் பிரிவு கட்டும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

***சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை காயம் மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் புனரமைப்புத் துறைக்கு புதிய கட்டடம் கட்டுதல்***



2002 ஏப்ரல் 29]

சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை காயம் மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் புனரமைப்புத் துறைக்கு புதிய கட்டடங்கள் கட்ட 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.500.00 இலட்சங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இப்பணிகளுக்கு ஹட்கோ கடன் மற்றும் பொது நிதியுதவியும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டடப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இது 4-5-2002-இல் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு கட்டுதல்**

புற நோயாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் உள்ளடக்கிய தனியான புறநோயாளிகள் பிரிவு கட்டடங்கள் கட்ட ரூ.650.00 இலட்சங்களுக்கு 2000-2001-இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. (உரிய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.) இத்திட்டம் ஹட்கோ கடன், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**புதியதாக இரண்டு மருத்துவக் கல்லூரிகள்**

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆசாரிப்பள்ளத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி*

2001-2002 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் சேர்க்கைக்காக ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை வளாகத்தில் உள்ள கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மாற்றங்கள் செய்யும் பணிகளுக்காக ரூ.130.00 இலட்சங்கள் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

*(ஆ) வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரி*

2001-2002 ஆம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கைக்காக, வேலூர் அரசு மருத்துவமனை மற்றும் பெண்ணாத்தூர் காசநோய் மருத்துவ மனை வளாகங்களில் உள்ள கட்டடங்களை இந்திய மருத்துவக் கழகத்தின் தரத்திற்கேற்ப புதுப்பித்தல் மற்றும் மாற்றங்கள் செய்யும் பணிகளுக்காக ரூ.99.80 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

[2002 ஏப்ரல் 29

**அரசு பல் மருத்துவமனை**

சென்னை, அரசு பல் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்புப் பிரிவின் தரைத்தளத்தின்மேல் கூடுதலாக ஒரு தளம் கட்ட, ரூ.80.00 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி**

சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியின் வளர்ச்சிப் பணிக்காக அரசு ரூ.141.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

**வருவாய்த் துறை**

சேலம் மாவட்டம், ஆத்தூரில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் கட்ட ரூ.35.20 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நில அளவை மற்றும் பதிவுருத் துறை**

*நில அளவை மற்றும் பதிவுருத் துறை பதிவறைகள் கட்டுதல்*

பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, சென்னையில் பதிவறைக்காக மத்திய கிடங்கு ரூ.300.51 இலட்சத்திலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் 33 பதிவறைகள் ரூ.330.00 இலட்சத்திலும் கட்ட அரசால் மொத்தம் ரூ.630.51 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் யாவும் முடிக்கப்பட்டு நில அளவைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

**பதிவுத் துறை**

பனங்குடி, அன்னியூர், பேராவூரணி, பேரையூர், கரம்பக்குடி, கருக்காலக்குடி, தியாகதுருகம், தாமல், சின்னாளப்பட்டி மற்றும் திருவோணம் ஆகிய இடங்களில், இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பத்து துணைப் பதிவு அலுவலகங்களுக்கு, புதிய கட்டடங்கள் கட்ட ரூ.133.56 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அனைத்து 10 பணிகளும் முடிக்கப்பட்டு பதிவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.



2002 ஏப்ரல் 29]

மேலும் இவ்வருடத்தில் 124 துணைப் பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யும் பொருட்டு 3 ஃபேஸ் மின்வசதி செய்வதற்காக அரசு ரூ.48.00 இலட்சம் அங்கீகாரம் அளித்துள்ளது. அப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**உள் துறை**

***நீதித் துறை***

மதுரை மாவட்டம், உலகநேரியில், அமர்வு உயர்நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணிக்காக ரூ.3,686.00 இலட்சத்திலும், சென்னையில் சட்ட வல்லுநர் அறைகளுக்கான கட்டடப் பணிகளுக்காக ரூ.1,145.00 இலட்சத்திலும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன.

**காவல் துறை**

1999-2000 ஆம் ஆண்டில் ரூ.461.92 இலட்சத்தில் 20 காவல் நிலையங்கள் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

மேலும் ரூ.200.28 இலட்சத்தில் 10 காவல் நிலையங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டதில் அனைத்து காவல் நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

வெளிப்பாளையத்தில், நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகம் கட்ட ரூ.210.00 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

ரூ.203.20 இலட்சத்தில், 10 காவல் நிலையங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, 5 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் ரூ.80.00 இலட்சம் மதிப்பில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நவீன கட்டுப்பாட்டு அறை கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2002 ஏப்ரல் 29

2001-2002 பகுதி-2 திட்டங்களின் கீழ், அரசு, இவ்வருடத்தில் ரூ.364.00 இலட்சம் மதிப்பில் 6 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 26 காவல் நிலையங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

சென்னை, தடய அறிவியல் துறைக்கு இரண்டாம் கட்டப் பணியாக ஆய்வுக் கூடம் ரூ.111.00 இலட்சம் மதிப்பில் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சிறைத் துறை

இவ்வருடத்தில், புழல் மத்திய சிறைச்சாலை மற்றும் மத்திய சிறைச் சாலைகளில் மருத்துவம் மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய பாதுகாப்புப் பணிகளுக்காக அரசு இவ்வருடம் ரூ.325.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவான பின்பு, பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தீயணைப்புத் துறை

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் 34 தீயணைப்பு நிலையங்கள் கட்டுவதற்கு 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.458.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இப்பணிக்கான ஒப்பந்தக்காரர்கள் தீர்மானிக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

போக்குவரத்துத் துறை

ரூ.30.00 இலட்சம் மதிப்பில் பெரம்பலூர் மற்றும் திருவள்ளூரில் உள்ள மண்டல போக்குவரத்துக் கழக அலுவலகங்களில் சோதனை ஓட்டச்சாலை கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. ரூ.16.60 இலட்சம் மதிப்பில் தூத்துக்குடியில் சோதனை ஓட்டச்சாலை பணி எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

மேலும் பெரம்பலூரில் ரூ.60.00 இலட்சம் செலவில் மண்டல போக்குவரத்துக் கழக அலுவலகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**கல்வித் துறை**

பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல்

இவ்வருடத்தில் 7 மாவட்டங்களில் ரூ.2390.00 இலட்சம் மதிப்பில், மாவட்ட ஆரம்பக் கல்வித் திட்டத்தின்கீழ் 406 ஆரம்பப் பள்ளிகளில்



2002 ஏப்ரல் 29]

தொகுதி ஆதார மையங்கள் மற்றும் 2/3 வகுப்பறைகள் கட்டும் பணிகளில் 388 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அத்துடன் ரூ.211 இலட்சம் செலவில் 3 மாவட்டங்களில் 38 ஆரம்பப் பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது.

உள்ளூர் பொது நூலகங்கள்

1999 ஆம் வருடத்திலிருந்து, பொது நூலகங்கள் கட்டும் பணி இத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பலவிதமான நூலகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வருடம் ரூ.1250.00 இலட்சம் மதிப்பில் 259 நூலகங்கள் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் 117 கட்டடங்கள் முடிக்கப்பட்டு நூலகத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. 27 நூலகக் கட்டடங்கள் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளன. இதரப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நபார்டு வங்கி நிதி உதவியுடன் அரசுப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் கட்டுதல்

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.6000 இலட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி ஆகியவை செய்து தர கருத்துரு உள்ளது.

தற்சமயம் நபார்டு ரூ.1500 இலட்சத்திற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**பொதுப் பணித் துறை**

**அரசு 2001-2002 ஆம் வருடத்தில் கீழ்க்கண்ட பணிகளுக்கு பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்துள்ளது:**

| வ.எண் | | (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | தருமபுரி சுற்றுலா மாளிகையில் முதல் தளம் கட்டுதல் | 29.79 |
| 2 | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஆய்வு மாளிகையில் சுற்றுச்சுவர் கட்டுதல் | 7.23 |

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | | |
|---|---|---|
| 3 | கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் ஆய்வு மாளிகை கட்டுதல் | 18.50 |
| 4 | ஆய்வு மாளிகைகள் / சுற்றுலா மாளிகைகள் ஆகியவற்றில் ஓட்டுநர்கள் தங்குவதற்கான ஓய்வு அறை 10 எண்கள் கட்டுதல் | 12.35 |

அனைத்துப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன.

**பொதுத் துறை**

புது டெல்லியில் கூடுதல் விருந்தினர் மாளிகை கட்டுதல்

புது டெல்லி, சாணக்கியபுரியில் தமிழகத்திற்காக கூடுதல் விருந்தினர் மாளிகை மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணிக்காக ரூ.2207.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம்

ஒவ்வொரு அலுவலகமும் ரூ.4.50 இலட்சம் மதிப்பில் 234 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் அலுவலகம் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவற்றில் 173 தொகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 21 தொகுதிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 40 தொகுதிகளில் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

**பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை**

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவருக்கான புதிய விடுதிகள் கட்டுதல்

நடப்பு ஆண்டில், தமிழ்நாட்டில் 114 இடங்களில் புதிய தங்கும் விடுதிக்கான கட்டடங்கள் 'ஹட்கோ' நிதி உதவியுடன் கட்டுவதற்காக ரூ.3699 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. அதன்பேரில் இத்திட்டத்திற்காக ரூ.2407.14 இலட்சத்திற்கு 'ஹட்கோ' அனுமதி வழங்கியுள்ளது.



பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவர்களுக்கான விடுதிகள் மற்றும் கள்ளர் பள்ளிகளை மேம்படுத்துதல்.

தற்போதைய விடுதிகள் மற்றும் கள்ளர் பள்ளிகளில் 360 இடங்களில் மேம்பாட்டுப்பணிக்காக ரூ.275.60 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**சமூக நலத் துறை**

இவ்வருடத்தில் தலைமைச் செயலக பழைய கட்டடம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ஊனமுற்றோர்களுக்கான சாய்தளம் அமைக்க அரசு ரூ.65.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**தமிழ் வளர்ச்சித் துறை**

சென்னை அருங்காட்சியக வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறைக்காக அலுவலக வளாகம் கட்ட ரூ.200.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது. மேலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பில் தமிழிசை மூவர் மணி மண்டபம் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை**

சென்னையில் அமைந்துள்ள அண்ணா நிர்வாகப் பயிற்சி மையத்திற்காக பெருந்திட்ட வளாகக் கட்டடம் கட்டும் பணிக்காக அரசு ரூ.1000.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி ஹட்கோ நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

**செய்தி மற்றும் சுற்றுலா வளர்ச்சித் துறை**

விழுப்புரத்தில் பெருந்திட்ட வளாகத்தில் சுற்றுலா விடுதி கட்ட அரசு ரூ.23.53 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இப்பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

ரூ.278.30 இலட்சத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

[2002 ஏப்ரல் 29

**நினைவகங்கள்**

சென்னையில் கண்ணியம்மிக்க காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட ரூ.50.00 இலட்சங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணி விரைவில் முடிக்கப்படவுள்ளது.

மேலும் தூத்துக்குடி மாவட்டம், காட்டாரங்குளத்தில் வீரன் அழகு முத்துக்கோன் மணி மண்டபம் கட்ட அரசு ரூ.35.00 இலட்சம் ஒப்புதல் அளித்தது. இப்பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ. சிதம்பரனார் மணி மண்டபம் கட்டும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது.

**வேளாண் விற்பனைத் துறை**

சென்னை கிண்டியில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை மையம் மற்றும் வேளாண் விற்பனை ஆணையர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிக்காக அரசு ரூ.193.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியதன் பேரில் பணி தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும் கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | கோவை மாவட்டம், திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை வளாகத்தில் விற்பனை மையம் கட்டுதல் | 230.00 |
| 2. | மதுரை, மாட்டுத்தாவணியில் நெல் விற்பனை மையம் கட்டுதல் | 1260.00 |
| 3. | சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் விடுதியுடன் கூடிய பயிற்சி மையம் கட்டுதல் | 100.00 |
| 4. | சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனை மையம் மற்றும் விற்பனைக் குழுமம் அலுவலகம் கட்டுதல் | 214.50 |



2002 ஏப்ரல் 29]

**உலக வங்கி நிதியுதவியின் கீழ் நீர்வள ஆதார அமைப்பு திட்டம் மற்றும் நீரியியல் கட்டடப் பணிகள்**

**நீர்வள ஆதார அமைப்புக் கட்டடப் பணிகள்**

நீர்வள ஆதார அமைப்புக் கட்டடப் பணிகளுக்கு திட்ட மதிப்பீடு கருத்துருவின்படி ரூ.4968.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதற்காக, ரூ.5107.33 இலட்சம் மதிப்புள்ள கட்டடப் பணிகள் இனங்கண்டு வைக்கப்பட்டுள்ளன. இதில் ரூ.3634.00 இலட்சம் மதிப்புள்ள கட்டடப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.717.96 இலட்சம் மதிப்புள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.139.50 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

ரூ.227.24 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.

கீழ்க்கண்ட முக்கியமான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், காட்பாடியில் பொதுப் பணித் துறை அலுவலக வளாகம் கட்டுதல் | ரூ.217.80 |
| 2. | சென்னை, காமராஜர் சாலையில் திட்ட மாளிகை கட்டுதல் | ரூ.100.00 |

**நீரியியல் கட்டடங்கள்**

தமிழ்நாடு நீரியியல் திட்ட கட்டடங்களுக்காக 1999-2000ஆம் ஆண்டில் ரூ.728.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டில், 4 ஆய்வகம், 4 கோட்ட அலுவலகம், 12 துணைக் கோட்ட அலுவலகம் மற்றும் 60 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 210.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளான தஞ்சாவூரில் நிலத்தடி நீர் வட்ட அலுவலகம், கடலூர், வேலூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சியில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டதில், வேலூர் தவிர மற்ற இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

**அரசு கட்டடங்கள் பராமரிப்பு**

ஹட்கோ நிதியுதவியுடன் ரூ.110.00 கோடி மதிப்பீட்டில் அரசு கட்டடங்களில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு IV

(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 20-நெடுஞ்சாலைகள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு' 2002-2003

**I. முன்னுரை**

நவநாகரிக சமுதாய முன்னேற்றத்திற்கு ஒரு முனையில் இருந்து அடுத்த முனைக்கு செல்லத்தக்க பயன்திறனும், நிறைவேற்றிடும் ஆற்றலும் கொண்ட முறையான நடமாட்டம்/இடப்பெயர்வு (Mobility Systems) அவசியமானதாகும். ஏனெனில் மனித குலத்தின் உய்வும் சமுதாய அமைப்பின் செயல்பாடுகளும் தடங்கலற்ற வழிகளில் மனிதர்களும் வணிகப் பொருள்களும் இன்றும் என்றும் நடமாடுவதில்/இடம் பெயர்வதில்தான் உள்ளடங்கி உள்ளது. மேலும் தடங்கலற்ற ஒழுங்கான நடமாட்டம்/இடப்பெயர்தல் முறை பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊக்கம் தரும் வாய்ப்பாகவும் அமைகிறது. இவ்வாறு உறுதி வாய்ந்த தடங்கலற்ற நடமாட்டம்/இடப்பெயர்வு முறையினால் மனிதகுலத்தின் மேலாண்மைத் தகுதிகள் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழலின் அவசியம் ஆகியவற்றை அழியாமல் பாதுகாப்பதோடு சமுதாய உயிரோட்டத் தேவைகளான எளிதில் அணுகும் தன்மை, செய்தித் தொடர்பு, வணிகத் தொடர்பு மற்றும் உறவு முறைகள் ஆகியவை நிலைநாட்டப்படுகின்றன. குறைந்த செலவில் மனிதர்களும் வணிகப் பொருள்களும் நடமாடும்/இடம் பெயரும் வகையில் பயனுள்ள சாலைத் தொடர்பு அமைக்கப்பட்டால்தான் வாணிபமும் தொழில் முன்னேற்றமும் கொண்ட போட்டி முனையை உருவாக்க முடியும். அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் சாலைக் கட்டமைப்புப் பணிகளுக்காக நமது மாநிலத்தின் முதலீடுகள் படிப்படியாக அதிக அளவிலேயே ஒதுக்கப்பட்டு சாதனைகள் பாராட்டப்படக்கூடிய அளவிலேயே அமைந்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்டுதான் பெருமதிப்பிற்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திறன் கொண்ட நல்லாட்சியில் தமிழகத்தில் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசுச் சாலைகளையும் வரையறுக்கப்பட்ட தரத்திற்கு மேம்படுத்தி தமிழகத்தை சாலைக் கட்டமைப்பில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இலக்கை எய்திட வேண்டி பயண நேரக் குறைவு, எரிபொருள் சிக்கனம் மற்றும்



2002 ஏப்ரல் 29]

வண்டிகளின் தேய்மானக் குறைவு ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் தரம் வாய்ந்த எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற சாலைகள் அமைத்திட முனைப்பான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாலைக் கட்டமைப்பின் மூலம் இம்மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான கருவளச் செறிவுடைய பங்களிப்பு உறுதி செய்யப்படுகிறது.

கிராமப் புறங்களில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்வதற்கும், உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து விற்பனை மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் சாலை வசதி அவசியம். இதற்கு, கிராமங்களை பெரிய சாலைகளோடு இணைக்கும் இணைப்புச் சாலைகளை அமைப்பது அவசியமாகும். இணைப்புச் சாலைகளை அமைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. கிராமப்புற மக்கள் நலனிலும், வளர்ச்சியிலும் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதால், கிராமபபுறங்களில் இணைப்புச் சாலைகளை அமைப்பதில், நெடுஞ்சாலைத் துறை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

கப்பல் போக்குவரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் சமுதாய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை மற்றும் தூத்துக்குடியில் உள்ள பெரிய துறைமுகங்களைத் தவிர தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு கடல்சார் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. எண்ணூரில் புதிய துறைமுகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. எண்ணூர் துறைமுகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், எண்ணூர் மணலி தொழிற்பேட்டைப் பகுதியில் உள்ள சாலைகளை மேம்பாடு செய்ய, துறைமுகங்களை நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் திட்டத்தின்கீழ், விரிவான செயல்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இத்துறையில் தனியார் பங்கீட்டினை ஊக்குவிப்பதற்காக துறைமுகக் கொள்கை ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையின்படி, தனியார் பங்கீட்டிற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. இக்கொள்கையின் பயனாக, சில துறைமுகங்கள் தனியார் நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ள வகை செய்யும் விதத்தில் அவைகளுக்கென சில துறைமுகங்கள் பிரத்தியேக துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தாராளமயமாக்கல் மூலம் துறைமுகங்கள், என்றும் இல்லாத அளவு, பெரிய அளவில் வளர்ச்சிக்கு வழிவகை ஏற்படுத்தும்.

**சாலைகளும் பாலங்களும்**

**II கொள்கை வரைமுறைகள்**

நெடுஞ்சாலைத் துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைக்கட்டமைப்பில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இந்த சாலைக்கட்டமைப்பில், பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப்பாதை மேம்பாலங்கள், மற்றும் இருப்புப்பாதை கீழ்ப்பாலங்கள் ஆகியவையும் அடங்கும்.

சாலைக்கட்டமைப்பு பின்வரும் வகைப்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

i. தேசிய நெடுஞ்சாலைகள்

ii. மாநில நெடுஞ்சாலைகள்

iii. மாவட்டப் பெரிய சாலைகள்

iv. மாவட்ட இதர சாலைகள்

v. பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப்பாதை மேம்பாலங்கள் மற்றும்இருப்புப்பாதைக் கீழ்ப்பாலங்கள்.

**அரசு சாலைகளை மறு வகைப்படுத்துவதற்குரிய நெறிமுறைகள்**

போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்து சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மற்றும் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 30,000 பயணிகள் சீருந்து அலகினை (PCU)விடக் கூடுதலாக உள்ள சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினை விட கூடுதலாகவும் ஆனால் 30,000 பயணிகள் சீருந்து அலகினை விட குறைவாகவும் உள்ள சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. அது போன்றே போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினைவிட குறைவாகவும் ஆனால் 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிட கூடுதலாகவும் உள்ள சாலைகள் மாவட்ட முக்கியச் சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து சாலைகளும் 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிட குறைவாக போக்குவரத்துச் செறிவுள்ள சாலைகள் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.



குறிப்பிட்ட வரையறைகளுக்கு மிகுதியாக போக்குவரத்துச் செறிவு ஏற்படும்போது ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டில் உள்ள சாலைகளை முறையே அதற்கு அடுத்த உயர் வகைப்பாட்டிற்கு உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் ஒவ்வொரு வகைப்பாடும் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது:

i. தேசிய நெடுஞ்சாலைகள்

இச்சாலைகள் பெரும் துறைமுகங்கள், மாநிலத் தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவைகளை இணைக்கும் வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் சென்றிடும் மிக முக்கியமான சாலைகளாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால், தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகி வருவதை கருத்தில் கொண்டு மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்கு ஏற்ப தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவீன தொழில் நுட்பங்களையும், மேலாண் தொழில் நுணுக்கங்களையும் கடைப்பிடித்து தேவைப்படும் இடங்களில் இடவசதிக்கேற்றபடி ஓடுதளங்களை அகலப்படுத்துதல், போக்குவரத்துத் தடங்களை பிரித்தனுப்புதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப்பாதைக் கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில் தேவையான அடிப்படை விவரங்களை மைய அரசுக்குத் தருவதோடு, தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் இடவசதிக்கேற்றபடி நான்கு வழிப்பாதையாக, ஆறு வழிப்பாதையாக சாலையை அகலப்படுத்திட, சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் அமைக்க ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் பெருக்கத்திற்கு தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது. தற்போது தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3,850 கி.மீ. அளவில் உள்ளது.

ii. மாநில நெடுஞ்சாலைகள்

மாவட்டத் தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும்.

[2002 ஏப்ரல் 29

மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 7,136 கி.மீ.-ல் 3946 கி.மீ. நீளச் சாலைகள் இருவழித்தடச் சாலைகளாகவும், 878 கி.மீ. இடைவழித்தடச் சாலைகளாகவும், 134 கி.மீ. பலவழித்தட சாலைகளாகவும் உள்ளன. ஒருவழித் தடமாக மீதமுள்ள 2,178 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகளை இருவழித்தட அல்லது பல வழித்தடச் சாலைகளாகவோ அகலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**iii.** *மாவட்டப் பெரிய சாலைகள்*

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள், இந்த மையங்களை ஒன்றோடொன்று மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மாவட்டப் பெரிய சாலைகளின் மொத்த நீளமான 7,408 கி.மீ. சாலைகளில் 4,946 கி.மீ. ஒருவழித்தடச் சாலைகளாகவும், 725 கி.மீ. இடைவழித்தடச் சாலைகளாகவும், 1,708 கி.மீ. இருவழித்தடச் சாலைகளாகவும், 29 கி.மீ. பலவழித்தடச் சாலைகளாகவும் உள்ளன. மாவட்டப் பெரிய சாலைகள் மாவட்ட அளவில் வன ஆதாரங்களை மேம்படுத்த பெரிதும் உதவுவதால் தமிழ்நாடு அரசு ஒருவழித்தடச் சாலைகளாக உள்ள மாவட்ட பெரிய சாலைகளை இடவசதிக்கேற்றபடியும் நிதி நிலைமைக்கேற்றபடியும் படிப்படியாக இருவழித்தட சாலைகளாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**iv.** *மாவட்ட இதர சாலைகள்*

கிராமப்புற உற்பத்தி மையங்களையும் விற்பனை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பிரதான சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இன்றைய நிலையில் மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளமான 40,853 கி.மீ.-ல் மிகக் குறைந்த அளவேயான 671 கி.மீ. சாலைகள் மட்டும் இருவழித்தடச் சாலைகளாகவும், 846 கி.மீ. இடைவழித்தட சாலைகளாகவும், 38 கி.மீ. சாலைகள் பலவழித்தடச் சாலைகளாகவும் உள்ளன. கிராமப்புறப் பகுதிகளில் இச்சாலைகள் வளமான பொருளாதார மேம்பாட்டினை தூண்டுவதாக அமைந்திருப்பதால் தமிழ்நாடு அரசு இச்சாலைகளை அகலப்படுத்திடவும் மேம்படுத்திடவும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுவதோடு அரசின் பங்காக குறிப்பிட்ட விழுக்காடு நிதி ஒதுக்கீடும் செய்து வருகிறது.



2002 ஏப்ரல் 29]

**v.** *பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப்பாதை கீழ்ப்பாலங்கள்*

சாலைகளின் நேர்பாடுகளில் நீர் ஆதாரங்களோ புகைவண்டிப் பாதைகளோ குறுக்கிடுவது இயற்கையானதாகும். எனவே இந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறை பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப்பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப்பாதை கீழ்ப்பாலங்கள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் செய்து வருகிறது. அரசு சாலைகளில் பல்லாண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டுள்ள பல பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இப்பாலங்களை நிதிநிலைமைக்கேற்றபடி படிப்படியாகத் திரும்பக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் காவிரி வடிநில மாவட்டங்களில் அரசு சாலைகளில் பழுதடைந்த 204 பாலங்களைத் திரும்பக் கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோளின்படியும் ஏராளமான புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசு சாலைகளில், ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப்பாதைக் கடவுக்குப் பதிலாக இருப்புப்பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிதிவளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், இருப்புப்பாதைப் பணிகள் திட்டத்தில் இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட இருப்புப்பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும் மைய அரசின் இருப்புப்பாதைகள் அமைச்சகமும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

**III நடைபெற்று வரும் திட்டங்கள்**

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் திட்டங்களை 2002-2003-ல் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது:

[2002 ஏப்ரல் 29

## 1. தேசிய நெடுஞ்சாலைகள்

### தேசிய நெடுஞ்சாலைகள்-மூலப்பணிகள் மற்றும் பராமரிப்பு

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 3,850 கி.மீ. ஆகும். மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில், முன்னேற்றப் பணிகள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.196.60 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. இவற்றுள், இதுவரை ரூ.82.91 கோடி மதிப்பீட்டிலான 44 பணிகளுக்கு விவர மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பளிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது.

தங்க நாற்கரம் மற்றும் வடக்கு, தெற்குப் பகுதிகளை இணைக்கும் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்காணும் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு/ஆறு வழிப்பாதைகளாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது:

#### நான்கு பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கரம் திட்டம்

| | | |
|---|---|---|
| i. | தே.நெ. 4 (பூந்தமல்லி-காஞ்சிபுரம்-வாலாஜா பிரிவு) | 93 கி.மீ. |
| ii. | தே.நெ. 5 (சென்னை-கொல்கத்தா இணைப்பு) | 42 கி.மீ. |
| iii. | தே.நெ. 7 (ஓசூர்-கிருஷ்ணகிரி பிரிவு) | 61 கி.மீ. |
| iv. | தே.நெ. 46 (கிருட்டிணகிரி-வாணியம்பாடி-பள்ளிகொண்டா-வாலாஜா பிரிவு) | 143 கி.மீ. |
| | மொத்தம் .. | 339 கி.மீ. |

#### வடக்கு தெற்குப் பகுதிகளில் காஷ்மீரையும், கன்னியாகுமரியையும் இணைக்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| i. | தே.நெ. 7 (பெங்களூர்-சேலம்-மதுரை பிரிவு) | 347 கி.மீ. |
| ii. | தே.நெ. 7 (மதுரை-கன்னியாகுமரி பிரிவு) | 232 கி.மீ. |
| iii. | தே.நெ. 47 (சேலம்-கொச்சின் பிரிவு) | 182 கி.மீ. |
| | மொத்தம் .. | 761 கி.மீ. |



2002 ஏப்ரல் 29]

இத்திட்டப்பணிகளில், சேலம் புறவழிச் சாலையை நான்கு வழித் தடங்களாக அமைக்கும் பணி, கரூர் புறவழிச் சாலையை நான்கு வழித் தடங்களாக அமைக்கும் பணி, கரூர் புறவழிச் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ஆகியவை முடிவுற்றுள்ளன. நாமக்கல் புறவழிச் சாலையை நான்கு வழித்தடமாக அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இவை தவிர, இந்திய தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் பின்வரும் தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது:

i. ஆண்டு திட்டப் பணிகளின்கீழ் தே.நெ. 45-ல் கி.மீ. 67/0-122/0 வரை (55 கி.மீ.) சாலையினை நான்கு வழிப்பாதைகளாக அகலப்படுத்தி பலப்படுத்துதல் மற்றும் கி.மீ.27/8-67-0 (39.2 கி.மீ.) வரை சாலையினை உறுதிப்படுத்துதல்.

ii. தூத்துக்குடி துறைமுகத்தை இணைக்கும் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலை 7-ஏ-ல் கி.மீ. 4/0-51/2 (47.2கி.மீ.) வரை சாலையினை அகலப்படுத்தி, உறுதிப்படுத்துதல்.

iii. எண்ணூர் துறைமுகத்தை தேசிய நெடுஞ்சாலை எண் 5 உடன் இணைக்க 22 கி.மீ. நீளத்திற்கு எண்ணூர் மணலி சாலை அமைத்தல்.

ஆக, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 3,850 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளுள், சுமார் 1,241 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு/ஆறு வழிப்பாதைகளாக மேம்பாடு செய்யப்பட உள்ளன. இதில் சுமார் 400 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக இந்திய தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் 803 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளை தன்வசம் எடுத்துக் கொண்டுள்ளது.

1,091 கி.மீ. நீளமுள்ள எட்டு மாநிலச் சாலைகளை அடிப்படைத் தகுதிகளான நில அகலம் மற்றும் வாகனப் போக்குவரத்துச் செறிவு ஆகியவற்றைப் பூர்த்தி செய்யும் நிலையில் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றம் செய்ய மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

[2002 ஏப்ரல் 29

2. மாநில நெடுஞ்சாலைகள்

2001 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,168 கி.மீ. ஆக இருந்தது. 2,968 கி.மீ. நீளத்திற்கான மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் வகைப்பாட்டினை 2001 ஆகஸ்டு திங்களில் மாற்றி அமைத்ததன் காரணமாக மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 7,136 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெரிய சாலைகளில் உள்ள ஒருவழித் தட மற்றும் இடைவழித் தடச் சாலைகளின் அகலத்தை படிப்படியாக இருவழித் தடச் சாலைகளாக மேம்படுத்தவும், மாவட்ட இதர சால்லகளை மேம்படுத்தவும் ஒரு மாபெரும் திட்டத்தை 2002-2006 ஆண்டுகளில் மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

டிட்கோ பங்குப் பத்திரங்கள் வாயிலாக பெறப்படும் நிதியைக் கொண்டு 330 கி.மீ. சாலைகளை 2002-2003-ல் இயந்திரங்களைக் கொண்டு சாலை அமைக்கும் முறை மூலம் மேம்படுத்த ரூ.52.39 கோடி மதிப்பீட்டில் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மாவட்டப் பெரிய சாலைகள்

இன்றைய நிலவரப்படி மாவட்டப் பெரிய சாலைகளின் மொத்த நீளம் 7408 கி.மீ. ஆகும். டிட்கோ பங்குப் பத்திரங்கள் வாயிலாக பெறப்படும் நிதியைக் கொண்டு 859 கி.மீ. சாலைகளை 2002-2003-ல் இயந்திரங்களைக் கொண்டு சாலை அமைக்கும் முறை மூலம் மேம்படுத்த ரூ.102.50 கோடி மதிப்பீட்டில் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மாவட்ட இதர சாலைகள்

இன்றைய நிலவரப்படி மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளம் 40,853 கி.மீ. ஆகும். மாவட்ட இதர சாலைகளை படிப்படியாக மேம்படுத்தும் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக 7,266 கி.மீ. நீளமுள்ள சாலைகளை ரூ.363.93 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் திட்டம்



2002 ஏப்ரல் 29]

ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. 2002-2003-ல் டிட்கோ பங்குப் பத்திரம் வாயிலாக திரட்டப்பட்ட தொகையில் இருந்து ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பாலங்கள்

(i) அரசு சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்

முந்தைய ஆண்டுகளில் எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள பாலப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.20.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) ஹட்கோ கடனுதவியுடன் 60 பாலங்களைக் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் திட்டம்

ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்கள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பாலங்களுக்கு நேர்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது. புலனாய்வு வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரித்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.45.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

iii) தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையர் மலை இரயில் நிலையம் அருகில் கட்டப்பட்டுவரும் இரயில்வே கீழ்ப்பாலம் முடிவுற்றுள்ளது. திருச்சி மாநகராட்சி எல்லையில், திருச்சி மாநகராட்சிக்காக இத்துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் 3 இரயில்வே மேம்பாலப் பணிகளான தென்னூர் சாலையில் இருப்புப்பாதைக் கடவு எண் 84-ல் இரயில்வே மேம்பாலம், பிஷப்ஹீபர் சாலையில் இருப்புப்பாதைக் கடவு எண் 85-ல் இரயில்வே மேம்பாலம் மற்றும் உத்தமர்கோயில் அருகே இருப்புப்பாதைக் கடவு எண் 246-ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகள் 2002-2003-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்சியில் அரசு சாலையில் இருப்புப்பாதைக் கடவு எண் 241-ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் மற்றொரு பணியும் முன்னேற்றத்தில் உள்ளது.

குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில், எம்.ஐ.டி கேட் அருகில், இருப்புப்பாதைக் கடவு எண்.28-ல் ரூ.20 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் சாலை மேம்பாலப் பணி திட்டமிட்டபடி முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்கண்ட 6 சாலை மேம்பாலங்களும்/கீழ்ப்பாலங்களும் ஹட்கோ கடனுதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக ஹட்கோ நிறுவனம் ரூ.62.04 கோடி கடன் அனுமதித்துள்ளது. இதுவரை முதல் தவணையாக ரூ.28.40 கோடி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 37 இடங்களில், தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாகச் சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்ட ரூ.513.92 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் சென்னை கடற்கரைச் சந்திப்பு-தாம்பரம் இரயில் நிலையங்களுக்கிடையே 6 இடங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை மேம்பாலங்களும்/கீழ்ப்பாலங்களும் அடங்கும். ஏற்கெனவே அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட இப்பணிகளுக்காக ரூ.200 கோடி அளவில் ஹட்கோ கடனுதவியைப் பெற அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளதால் இவற்றிற்கான கடன் விண்ணப்பம் விரைவில் ஹட்கோ நிறுவனத்திடம் அளிக்கப்படும்.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**6. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் அரசு சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் புதிய பாலங்களைக் கட்டுதல்/பழுதடைந்த பழைய பாலங்களைத் திரும்பக் கட்டுதல்**

கடந்த ஆண்டுகளில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி எண் II முதல் VI வரையில், முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தும் பணிகளும் மற்றும் இச்சாலைகளில் புதிய பாலங்கள் கட்டும் பணிகள்/பழைய பாலங்களைத் திரும்பக் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை, ரூ. 271.09 கோடி மதிப்பீட்டில் 4149.93 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.152.28



கோடி மதிப்பீட்டில் 197 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் கடந்த 2001-2002 ஆம் ஆண்டு வரை 4143.83 கி.மீ. நீளத்திற்கான சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 155 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலை மற்றும் பாலப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2001-2002-ல் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VI-ன்கீழ் ரூ.52.66 கோடி மதிப்பீட்டில் 65 பாலப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில் 27 பாலப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 38 பாலங்கள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VII-ன்கீழ் காவிரி வடிகால் மாவட்டங்களில் (திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர்) 94 பாலங்களும் மற்றும் தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 28 பாலங்களை இவற்றின் 40 அணுகு சாலைகளுடன் கட்டுவதற்கு ரூ.79.49 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கென 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்**

**(i) பழைய மகாபலிபுரம் சாலையில் கி.மீ.13/3-ல் (தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலை) இணையும் மத்திய கைலாஷ்-வி.எஸ்.ஐ. எஸ்டேட் பகுதி (சென்ட்ரல் பாலிடெக்னிக் சாலை) மேம்படுத்துதல்**

மத்திய கைலாஷ் ஆலயத்திலிருந்து வி.எஸ்.ஐ. எஸ்டேட் வரை உள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக் சாலையைத் தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ள பழைய மாமல்லபுரம் சாலையில் கி.மீ. 13/3-ல் இணைப்பதற்கு தோராய மதிப்பீடு ரூ.19.50 கோடிக்கு தயாரிக்கப்பட்டு சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்காக மத்திய கைலாஷ் ஆலயத்திலிருந்து வி.எஸ்.ஐ. எஸ்டேட் வரையுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற பரிசீலனையில் உள்ளது.

[2002 ஏப்ரல் 29

**ii) புறவழிச் சாலைகள் மற்றும் ஆரச் சாலைகள்**

போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைகள் மற்றும் ஆரச் சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இராமநாதபுரம், தேனி, திருவள்ளூர் ஆகிய நகரங்களுக்கான புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதுரை நகரை வந்தடையும் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் நகரங்களை வந்தடையும் ஆரச் சாலைகளை அமைக்கும் திட்டங்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்படவுள்ளது.

இப்பணிகளுக்கென 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**iii) பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் சாலை உள் கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்**

திருப்பூர் நகருக்குள்ளும் அதனைச் சுற்றியும் அமைந்துள்ள ஆரச் சாலைகளை ரூ.50 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் எடுத்து செயல்படுத்தத் தேவையான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

**8. சிறப்பு சாலைத் திட்டங்கள்**

**i) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

1995-ல் தமிழ்நாடு அரசு, உலக வங்கியின் உதவியை, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காகக் கோரியது. இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்யவும் திட்டத்தைச் செயல்படுத்தவும் உலக வங்கி நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. பல்வேறு இடைவழிகள் கொண்ட 1280 கி.மீ. சாலைகளுக்கான விரிவான பொறியியல் வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பற்ற ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்காக திருவாளர்கள் கின்ஹில் என்ற தனியார் நிறுவனத்தை திட்ட ஒருங்கிணைப்பு ஆலோசகராக இத்துறை நியமித்தது.



2002 ஏப்ரல் 29]

750 கி.மீ. சாலைகள் மற்றும் 80 கி.மீ. நீள 12 புறவழிச்சாலைகளை உள்ளடக்கிய பகுதி 1, 1-A, 1-B கொண்ட தொகுப்புகளுக்கு சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் பாதிப்பின்மைக்கான சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இதுகுறித்து தன்னிச்சையான சுற்றுச்சூழல் மறு ஆய்வு மேற்கொள்ளும் பணி ஆலோசகருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் மற்றும் திட்டத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு மறு குடியேற்றம் ஆகியவற்றிற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தவும், திட்டத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்விற்கான செயல் திட்டங்களை மேற்கொள்ளவும் தனி வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினால் மரவகைகள் மற்றும் விலங்குகள் பாதிக்காத வகையில் அவற்றைப் பாதுகாக்க தனி வன அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுற்றுச்சூழல் பாதிப்பின்மையை உறுதி செய்ய துறைக்கு அப்பாற்பட்ட சுற்றுச் சூழல் சிறப்பு அலுவலர் மற்றும் நிதி மேலாளர் நியமிக்கப்பட உள்ளனர். உலக வங்கியின் முன் கணிப்புக் குழு கடந்த ஏப்ரல் மாதம் 2001-ல் திட்டத்தைப் பார்வையிட வந்தபோது, திட்டத் தயாரிப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் உலக வங்கியின் திட்ட செயலாக்க ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும் எனக் கூறியுள்ளது. அதன் பின்னர் சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.115 கோடியாகும்.

**ii) உள்வட்டச் சாலை (சென்னை)**

இத்திட்டத்தில் உள்வட்டச் சாலையின் வடக்குப் பகுதி மற்றும் உள்வட்டச் சாலையின் தெற்குப் பகுதி (தில்லை கங்கா நகரில் கட்டப்பட்டு வரும் சாலை கீழ்ப்பாலப் பணியை உள்ளடக்கியது) தவிர மற்ற அனைத்துப் பணிகளும் முடிவுற்றன. இவ்வேலைகளில் உள்வட்டச் சாலையின் வடக்குப் பகுதி மற்றும் தெற்குப் பகுதியில் தில்லை கங்கா நகரில் கட்டப்பட்டு வரும் இருப்புப் பாதை கீழ்ப்பாலப் பணி விரைவில் முடிக்கப்படும். இப்பணிகள் உலக வங்கித் திட்டத்தின்கீழ் முதலில் செயல்படுத்தப்பட்டன. பின்னர் அரசு

நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்ட பணிகள் தற்போது ஹட்கோ கடனுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக ஹட்கோ நிறுவனம் ரூ.65 கோடி அளவில் கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அதில் முதல் தவணையாக ரூ.24.45 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.38.28 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**iii) கிராமச் சாலைகள் திட்டம் (நபார்டு கடனுதவி மூலமாக)**

தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்களில் முக்கியத் தொழில் விவசாயமே. எனவே இக்கிராம மக்கள் தங்கள் விவசாய விளை பொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகள் அனைத்தையும் எல்லா தட்ப வெப்ப நிலைகளுக்கேற்றவாறு மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். இதன் மூலம் கிராம மக்கள் வேளாண் விளைபொருட்களை அருகிலுள்ள நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல ஏதுவாகும். கிராமச் சாலைகள் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களின் கீழ் தார்ச்சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன:—

அ) கிராமச் சாலைகள் திட்டம்

ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம்

இ) பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்

**அ) கிராமச் சாலைகள் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வேலைகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்புடையதாக இருக்க வேண்டும்:—

* கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 500-க்கு மேல் இருக்க வேண்டும்.
* அமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 1.60 கி.மீ. நீளத்திற்கு மேல் இருக்க வேண்டும்.
* ஏற்கெனவே மேற்படி கிராமங்கள் தார்ச்சாலைகளினால் இணைப்பு பெற்று இருத்தல் கூடாது.



1000-க்கு மேலாக மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு ஏற்கெனவே சாலை இணைப்பு வசதி செய்யப்பட்டுவிட்டது. 500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி செய்து கொடுக்கும் பணி 1-4-1999 முதல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2001-2002 வரை 640 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2002-2003-ல் 124 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிராமங்களுக்கு படிப்படியாக இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படும். நடப்பாண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி எண் VII-ன் கீழ் 20 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க 34.32 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும் 2 பாலங்களைக் கட்டவும் மேலும் ஒரு புதிய திட்ட செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும். இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படும் பாரதப் பிரதமரின் கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கான இணைப்புச் சாலை வசதித் திட்டத்தில் உட்படாமல் தனியே செய்யப்படுவதாகும்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 66 கோடியாகும்.

**ஆ) ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி (சிறப்பு உறுப்பு திட்டம்)**

கிராம மக்கட்தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதி திராவிடர் மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு தார்ச் சாலை வசதி செய்திட இத்திட்டம் வழிவகுக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டு வரை ஆயிரத்திற்கும் குறைவான மக்கட்தொகை கொண்ட 182 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2002-2003-ல் 55 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படவுள்ளது.

நடப்பாண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VII-ன் கீழ் 10 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க 9.6 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்த மேலும் ஒரு புதிய திட்ட செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 23 கோடியாகும்.

இ) பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VII-ன்கீழ் 200 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்யவும் 9 பாலங்களைக் கட்டவும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VII-ன் கீழ் எடுக்கப்பட்ட 74.26 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 5 பாலங்கள் கட்டவும் மேலும் ஒரு புதிய திட்ட செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிர்வாக ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும்.

மேற்கண்ட மூன்று திட்டங்களில் எடுக்கப்படும் சாலைகள் மாவட்ட இதர சாலைகள் தரத்திற்கு மேம்படுத்தப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 34.50 கோடியாகும்.

9) மைய அரசின் பங்கேற்பு மற்றும் நிதி திட்டம்

i) மத்திய சாலை நிதி திட்டம்

இந்திய அரசு, பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் மூலம் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் மீது சிறப்புத் தீர்வை விதிப்பதன் மூலம் திரட்டப்படும் நிதியைக் கொண்டு மத்திய சாலை நிதி என்ற ஒரு நிதியத்தை அமைத்துள்ளது. இந்நிதியிலிருந்து மாநிலங்களுக்கு தோராயமாக 15 விழுக்காடு பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு தமிழக அரசுக்கு ரூ. 22.34 கோடி நிதி ஒதுக்கீடும், 2001-2002-ல் ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 73.97 கோடி ஆகும்.



ii) மேற்குத் தொடர்ச்சி மலைச் சாலைகள் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் நிதி ஆண்டில் ரூ. 56.50 இலட்சம் மதிப்பீட்டில் 3 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 62.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

iii) மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் சாலைப்பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.17.97 கோடியாகும். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.10.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

iv) சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள்

மாநிலத்தின் சாலையோரங்களில் கனி மற்றும் நிழல் தரும் மரங்கள் தற்போது இலட்சக்கணக்கில் உள்ளன. இதன்மூலம் பெறப்படும் வருவாய் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேருகின்றன. 20 அம்சத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.70 இலட்சம் ஒதுக்கீட்டில் இத்துறையால் சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வளர்க்கப்படுகின்றன. (இவ்வாண்டில் இப்பணியில் வனத் துறையை ஈடுபடுத்தி மரங்கள் நட்டு குறிப்பிட்ட காலம் வரை பராமரித்து பின்னர் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கும் நடைமுறையைப் பின்பற்ற பரிசீலிக்கப்படுகிறது.)

10) கருவிகளும் தளவாடங்களும்

நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இயந்திர அலகு, பல்வேறு கருவிகள் மற்றும் தளவாடங்களின் பராமரிப்பைக் கவனித்து வருகிறது. சென்னை, புதுக்கோட்டை மற்றும் கோவை ஆகிய இடங்களில் உள்ள பணிமனைகளில் தளவாடங்களின் பெரும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் சென்னையிலுள்ள பண்டகம் மற்றும் கொள்முதல் கோட்டமானது, கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான இரும்புக் கம்பிகள் மற்றும் இதர பொருட்களைக் கொள்முதல் செய்து, தேவைப்படும் கோட்டங்களுக்கு வழங்குதல், கருவிகளும் தளவாடங்களும் மட்டுமின்றி, விஞ்ஞானக் கருவிகள் மற்றும் அவற்றிற்கான உதிரிப்

பாகங்களையும் கொள்முதல் செய்து வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. ஆயுட்காலம் முடிவடைந்த தளவாடங்கள் மற்றும் வாகனங்கள் பயனற்றதெனக் கழிக்கப்பட்டு காலமுறைதோறும் அவற்றுக்குப் பதிலாக புதிய பொருட்களை வாங்க இக்கோட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த 2001-2002-ல் 248 கருவிகள் பயனற்றது எனக் கழிக்கப்பட்டுள்ளன.

கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டின் நிர்வாகம் தலைமைப் பொறியாளர், இயந்திரவியல் அவர்களின் பொறுப்பில் உள்ளது.

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.0.02 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்**

*i) ஆராய்ச்சி நடவடிக்கைகள்*

1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக முழுமை பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாட்டில் அமையப் பெறும் சாலைகள் பாலங்களுக்கான கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல் முறை ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் கீழ்க்கண்ட பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது:

அ. மண் மற்றும் அடித்தளப் பொறியியல்

ஆ. கற்கலவை மற்றும் கட்டுமானம்

இ. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்

ஈ. போக்குவரவு மற்றும் போக்குவரத்து

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்தவும், கட்டுமானத்தின்போது தரக்கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், சோதனை செய்வதற்கும் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்துறையில் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தைக் கண்காணித்து உறுதிப்படுத்தும் அலுவலராக, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் உள்ளார்.



2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டப் பணிகளுக்காக ரூ.9.63 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*ii) தகவல் தொகுப்பு வங்கி*

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில் நுட்ப விவரங்களையும், புள்ளி விவரங்களையும் உடனடியாக அறிந்துகொள்ள தகவல் 'தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. பால விவரங்களும் அனைத்துச் சாலைகளிலுள்ள போக்குவரத்துக் கணக்கெடுப்பு விவரங்களும் ஏற்கெனவே திரட்டப்பட்டு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சாலை மேற்பரப்பு, ஓடுதளத்தின் தரம் மண்ணின் தன்மை முதலான விவரங்களும் திரட்டப்பட்டுள்ளன.

*iii) பயிற்சித் திட்டம்*

புதிதாக பணி அமர்த்தப்பட்ட 269 உதவிப் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் 2001-2002 ஆம் ஆண்டில் பணியிலுள்ள 300 உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு தரக்கட்டுப்பாடு பயிற்சியினை 2002-2003-ல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*iv) நெடுஞ்சாலை ஆய்வு மற்றும் மேலாண்மைப் பயிலகம் ஒன்றைத் தோற்றுவித்தல்*

நெடுஞ்சாலை ஆய்வு, திட்டமிடல் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள் மாறிவரும் சூழ்நிலையில், நவீன தொழில்நுட்பம் பற்றிய தகவல்களைச் சேகரித்துப் பராமரிக்க, பயிலகம் ஒன்றை உருவாக்கி பராமரிப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. ஆதலின் நெடுஞ்சாலை ஆய்வு மற்றும் மேலாண்மைப் பயிலகம் என்ற பெயரில் அண்ணா பல்கலைக்கழகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ் ரூ.5.00 இலட்சம் செலவில் பயிலகம் ஒன்றைத் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை சம்பந்தப்பட்ட பாடப் பிரிவுகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பட்டம் பெறுவதற்கான வகுப்புகள் நடத்தப்படும். பணியிலுள்ள

பொறியாளர்கள் பயன்பெறும் விதத்தில் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போன்றவை நடத்தப்படும். பொதுவில், மாநில அளவில் தொழில்நுட்ப ரீதியாக முழுமையானதொரு பயிலகமாக இது விளங்கும்.

**12) சாலைப் பாதுகாப்புத் திட்டம்**

சாலைப் பாதுகாப்பு புதிய சாலைக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாகும். சாலை விபத்துகள் பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து சாலைப் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளால் அதிக உயிர் சேதங்களுடன் விபத்துக்கள் நடைபெறுகின்றன என்பது தெரிய வந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, சாலைப் பாதுகாப்புக் கொள்கை 2001-ல் உருவாக்கப்பட்டது. இக்கொள்கைகானது சாலைப் பாதுகாப்பின் நான்கு முக்கிய கொள்கைகளான பொறியியல், அமல்படுத்துதல், அவசர மருத்துவ வசதி மற்றும் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. விபத்துகளைக் குறைக்க ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆரம்பகட்டமாக போக்குவரத்து ஆணையர், நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை மற்றும் மருத்துவத் துறையின் உதவியுடன் 13 இடங்களில் விபத்து உதவி மையங்கள் தே.நெ. எண் 4 மற்றும் தே.நெ. எண்45-ல் அமைக்க தெரிந்தெடுத்துள்ளார். இந்த விபத்து மையங்கள் 50-60 கி.மீ. இடைவெளியில் அவசர சிகிச்சை ஊர்தி, காவல் துறை வசதி தொலைத்தொடர்பு வசதி மற்றும் சேதமடைந்தவைகளை அப்புறப்படுத்துதல் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

சாலைப் பாதுகாப்பு நிதி என்ற தனிச் சிறப்பு வாய்ந்த நிதியம் ஒன்றுதமிழ் நாடு அரசினால் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது:

* ஒருங்கிணந்த சாலைப் பாதுகாப்பு

* பாதுகாப்பான பயணம் குறித்த விழிப்புணர்வைத் துறைகள் மூலமாகவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் சாலை உபயோகிப்போரிடம் ஏற்படுத்துதல்.

* விபத்துப் பகுதிகளில் தேவைப்படும் சிகிச்சையினை உடன் அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



நெடுஞ்சாலைத் துறை, விபத்து நேரக்கூடிய இடங்களைச் சீரமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சாலை மைய பிரிப்புகள், சந்திப்புகளை மேம்படுத்துதல் மற்றும் சாலையின் பக்கவாட்டில் சுவர்கள் கட்டுதல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் (IRT) மேற்காணும் விவரங்களைச் சேகரித்துள்ளது. இதன் அடிப்படையில் ரூ. 13.80 கோடி மதிப்பீட்டில் விபத்து நேரக்கூடிய பகுதிகளைச் சீரமைக்கும் திட்டம் இறுதியாக்கப்பட்டுள்ளது. இதே போன்று மாநிலச் சாலைகளில் (மாநிலச் சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், மாவட்ட இதர சாலைகள்) விபத்து நடக்கக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளை ரூ53 கோடி மதிப்பீட்டில் படிப்படியாக மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விதிகளை மீறுவோரிடமிருந்து வசூல் செய்யப்படும் அபராதம் மற்றும் கட்டணங்களின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.

**13) தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்**

ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் ஐ.எல் மற்றும் எஃப்.எஸ். (IL&FS) இவைகளுக்கு இணையாக வணிக ரீதியில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் செயலாக்கத்தினை மேற்பார்வையிடல் ஆகியவைகளுக்காக, தமிழ்நாடு சாலை மேம்பாடு நிறுவனம் அமைக்கப்பட்டது. கிழக்குக் கடற்கரைச் சாலையினை கி.மீ.22/3 முதல் 135/5 வரை மேம்படுத்திப் பராமரித்தல் பணியினை சலுகை அடிப்படையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனிக்கு ஒப்படைத்தது தனியார் பங்கேற்பிற்கு முன்னோடியாக அமைந்துள்ளது. இப்பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மேலும் சேலம்-உளுந்தூர்பேட்டையில் (தே.நெ.எண் 68) மற்றும் திண்டுக்கல்-கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-பெங்களூர் சாலை (தே.நெ.எண் 209) ஆகிய இரு சாலைகளை மேம்படுத்தத் தேவையான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை தொழில் நுட்ப ஆலோசகர்களிடம் ஒப்படைக்க தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்திய அரசின் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

### 14) நெடுஞ்சாலை சட்டம்

சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட நெடுஞ்சாலை சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவில், சாலையோரத் தொடர் கட்டட வளர்ச்சியைத் தடுக்கவும், நெடுஞ்சாலைப் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்பந்தம் செய்யவும், நெடுஞ்சாலை எல்லைக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் சாலைப் பணிகளுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த எளிதான வழிமுறைகளை ஆராய்வது போன்ற அதிகாரங்களை நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## IV புதிய கொள்கைகள்

### 1. சாலைக் கொள்கை

ஒரு புதிய சாலைக் கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது. இக்கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்படும் நெடுஞ்சாலை கட்டுமானம், பராமரிப்புத் திட்டங்கள், பொறியியல் நுணுக்கங்களையும் சிக்கனச் செலவையும் மையமாகக் கொண்டிருக்கும். அத்துடன் சுற்றுச் சூழல் பாதுகாப்பையும் சமுதாயத் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கும். இதன் நோக்கம் பின்வருமாறு:—

* சமுக - பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலை மேம்பாடு.

* அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் நிதி ஆதாரங்களுக்கு வலுவூட்டுதல்.

* நவீன தொழில் நுட்பங்கள் மூலம் சாலைகளின் கட்டுமானம், வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயலாக்கத்தின் தரத்தினை உயர்த்துதல்.

* நெடுஞ்சாலைச் சொத்துக்களையும் ஆதாரங்களையும் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

### 2. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி மயமாக்கல்

தகவல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இத்துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளின் அளவும் தரமும்



2002 ஏப்ரல் 29]

உயர்ந்துள்ளன. வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கேற்ப தகவல் தொழில்நுட்ப வசதிகளான இணையம் மற்றும் மின் அஞ்சல் ஆகியவை பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் நெடுஞ்சாலைத் துறையின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமாக பணியின் தரத்தினை உயர்த்தும் முயற்சியாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நவீனமயமாக்கல் மற்றும் பணித்திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ.15 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறையை தலைமை அலுவலகம் முதல் கோட்ட அலுவலகங்கள் வரை கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்காக கணினிகள் வாங்கிப் பொருத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

### 3. இணையதளம்

www.tnhighways.org என்கின்ற விலாசத்துடன் ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறையின் அனைத்து முக்கிய செயல்பாடுகள், ஆலோசகர்களை அழைக்கும் கடிதங்கள், துறைக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் போன்ற விவரங்கள் இணையதளத்தில் கிடைக்குமாறு செய்யப்படும்.

### 4. நிறுவன மேம்பாடு

நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாகச் சீரமைப்பிற்கான ஆய்வு அமெரிக்க நிறுவனமான பூஸ் ஆலன் ஹேமில்டன் என்ற ஆலோசகர் மூலம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஆய்வு செய்து செயல்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

### 5. மாநில சாலைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட மூன்றாண்டு பராமரிப்பு ஒப்பந்தம்

தற்போது மாநிலச் சாலைகளின் பராமரிப்பு நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்படுகிறது. தனியார் பங்கேற்புடன் மாநிலச் சாலைகளை மூன்றாண்டுகளுக்கு மேம்படுத்திப் பராமரிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இம்முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில நெடுஞ்சாலைகளைப் பகுதிகளாகப் பிரித்து மூன்றாண்டுகளுக்கு மேம்படுத்துதல்-பராமரித்தல் ஆகியவற்றை ஒப்படைக்க உள்ளது. இதனடிப்படையில் தொழில்நுட்ப ரீதியாகவும் நிதி ஆதாரக்

குறியீடுகளின்படியும் ஹட்கோ மற்றும் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றிலிருந்து நிதியினைப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு சாலை நிதி வாரியம் ஏற்படுத்துதல்

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் திரட்டும்பொருட்டு நடப்பு நிதியாண்டில் 5 சதவிகித உள்கட்டமைப்பு மிகை வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து ஒரு பகுதி தமிழ்நாடு சாலை மேம்பாட்டிற்கு அளிக்கப்படும். இந்நிதியினை நிர்வகிக்கவும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளவும் தமிழ்நாடு சாலை நிதி வாரியம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

7. தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையில் திட்டப் பணிகள்

சாலை மற்றும் பாலப் பணிகளைத் தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இதனடிப்படையில் மலேசிய நாட்டு CIDB நிறுவனம் இப்பாலப்பணிகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டியுள்ளது. அதற்கிணங்க இந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு புல ஆய்வு செய்து கீழ்க்காணும் பாலப் பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க ஒப்புக்கொண்டுள்ளது:

(i) விக்ரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கரையில் பாலம் கட்டுதல்.

(ii) நாமக்கல் மாவட்டம், மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம், வாங்கல் ஆகிய பகுதிகளை இணைக்க காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

(iii) கொக்கரையான்பேட்டையை லக்காபுரத்துடன் இணைத்திட காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

8. ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிப் பகுதிகளில் இணைச்சாலை (Lay-Bye) வசதி ஏற்படுத்துதல்

மாநில எல்லையிலுள்ள முக்கிய சாலைப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளால் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைத்திட உதவும் வகையில் அங்கு தடையற்ற, துரிதமான



போக்குவரத்தினை உறுதி செய்வதற்கு நெடுஞ்சாலைத் துறையால் இணைச்சாலை வசதிகள் (Lay-Byes) செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

9. சாலைகளில் பெட்டி அமைப்பு வசதி உருவாக்குதல்

மின்வாரியம், தொலைபேசித் துறை, குடிநீர் வழங்கல் துறை போன்ற சேவை நிறுவனங்கள் தங்களது சேவையை ஏற்படுத்தித் தருவதற்காக முக்கியமான சாலைகளைத் தோண்ட வேண்டியுள்ளது. இதனால் சாலை உபயோகிப்பாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திடவும் சாலைகளைப் பாதுகாத்திடவும் சாலைகளில் பெட்டி போன்ற அமைப்பை ஏற்படுத்தி சேவை நிறுவனங்கள் அதனைக் குறைந்த குத்தகை மற்றும் வாடகை அடிப்படையில் பயன்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

10. தொழிற்சாலை மையங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் ஏற்படுத்துதல்

மகளிர் தொழில் முனைவோர் மற்றும் ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் ஆகியோருக்காக மதுரவாயலில் உருவாக்கப்படவுள்ள தொழில் மையங்களுக்கும் மற்றும் தொழில் நகரங்களுக்கும் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

V. புதிய தொழில் நுட்பங்கள்

1. இயந்திரங்களைக் கொண்டு சாலைகள் அமைத்தல்

மத்திய சுடுகலவை இயந்திரம், பேவர் ஃபினிஷர், அதிர்வு உருளைகள் போன்ற இயந்திரங்களைக் கொண்டு சாலை அமைக்கும் பணிகள் சமீபத்தில் எடுக்கப்பட்டன. இம்மாதிரி அமைக்கப்பட்ட சாலைகளின் தரம் பொது மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இதுவரை 1800 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் நவீன இயந்திரங்களைக் கொண்டு ரூ.100 கோடி மதிப்புள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. ஆய்வுப் பணிகள்

தியோடலைட் மற்றும் பிற வழக்கமான உபகரணங்களுக்கு பதிலாக டோட்டல் ஸ்டேஷன் என்ற புதிய தொழில் நுட்பத்தின் மூலமாக சாலை ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. பாலங்களின் வடிவமைப்பு

பாலங்களின் வடிவமைப்பில் கணினி அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதற்கென பிரத்தியேக மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

## துறைமுகங்கள்

### VI தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டின் 992 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, கடலூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 14 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995-ன்கீழ் 18-03-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் தமிழக அரசின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்தி மேலாண்மை செய்து வருகின்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளித்து துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட எண்ணெய் தொழிற்சாலைகள்/மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்காக தனியார் துறைமுகங்கள்/தோணித்துறைகள்/மிதவைகள் ஆகியவை நிறுவப்படுவதற்கு ஊக்கமளித்து வருகிறது. கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் பல்வகை சரக்குகளைக் கையாளும் துறைமுகங்களைக் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பதினான்கு சிறு துறைமுகங்களுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல் மற்றும் மணப்பாடு ஆகிய ஏழு துறைமுகங்கள் தனியார் பங்கேற்பின் கீழ் பிரத்தியேகத் துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து கடல்சார் வசதிகளும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினராலேயே அமைக்கப்படும்.



இந்த ஏழு தனியார் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி மற்றும் திருக்கடையூர் ஆகியவை தற்சமயம் இயங்கி வருகின்றன. ஏனைய நான்கு தனியார் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

சிறு துறைமுகங்களில் கீழ்க்காணும் சரக்குகள் கையாளப்படுகின்றன:

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| கச்சா எண்ணெய் | சமையல் எண்ணெய் |
| பொதுச் சரக்குகள் | திரவ அமோனியா |
| | நாப்தா புரப்பலீன் திரவ வாயு |
| | பொதுச் சரக்குகள் |

தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான முதலீட்டு வாய்ப்புகளுக்காக துறைமுகக் கொள்கை இவ்வாரியத்தால் உருவாக்கப்பட்டு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட் அவர்களால் அவர்களது பி.வி.சி. தயாரிக்கும் தொழிற்சாலைக்கான வினைல் குளோரைடு மோனமர் (வி.சி.எம்.) கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காக கடலூர் துறைமுகத்தின் தெற்கு எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கடல்சார் கட்டுமானங்கள் அமைப்பதற்கான சுற்றுப்புறச் சூழல் தடையின்மைச் சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

திருவாளர்கள் எஸ்.வி. சுகர் மில்ஸ் லிமிடெட், பழையசீவரம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் கடலூர் துறைமுகத்தின் வழியாக ஆண்டொன்றுக்கு 60,000 மெட்ரிக் டன் சர்க்கரைப்பாகை ஏற்றுமதி செய்ய உத்தேசித்துள்ளனர்.

சென்னை அகேட் குருப் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தார் கடலூர் துறைமுகத்தில் 500 டன் சமையல் எண்ணெய் சுத்திகரிப்புத் திறன் கொண்ட ஆலையை நிறுவ உள்ளனர். இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு சுமார் 2 இலட்சம் டன் கச்சா எண்ணெயை மலேசியா மற்றும் இந்தோனேஷியா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளது. இதற்கான கட்டுமானப் பணி இந்நிறுவனத்தால் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

திருச்சோபுரம் துறைமுகம் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தார் நிறுவ உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு

ஆலைக்காக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகம் சுங்கத் துறைமுகமாக மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு கடல்சார் கட்டுமான வசதிகளை நிறுவுவதற்கான சுற்றுப்புறச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் 1-3-2000 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி நிலை முடிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.

திருக்கடையூர் துறைமுகம் திருவாளர்கள் பி.பி.என். பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தார் பிள்ளைபெருமாள் நல்லூரில் உள்ள அவர்களது 330 மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருள், நாப்தா மற்றும் இயற்கை வாயுவை பிரத்தியேகமாகக் கையாள்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் 14-01-2001 அன்று முதற் கப்பல் வருகைபுரிந்து 15,020 மெட்ரிக் டன் எடையுள்ள நாப்தாவை இறக்குமதி செய்தது. இத்துறைமுகத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 11 கப்பல்கள் மூலம் 1,64,425 மெட்ரிக் டன் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் ஃபுட்ஸ், பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமையல் எண்ணெய் கையாள்வதற்கான சேமிப்புக் களத்தை 1999ஆம் ஆண்டு நிறுவியுள்ளனர்.

2001-2002 ஆம் ஆண்டில் இத்துறைமுகத்திற்கு 20 கப்பல்கள் மூலம் 49,224 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் மேற்படி நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டது. சமையல் எண்ணெய்க் கப்பல்கள் தொடர்ந்து இத்துறைமுகத்திற்கு வருகை புரிகின்றன. துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காக சமையல் எண்ணெய் கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காகத் தனியார் நிறுவனங்களுக்கு துறைமுக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் அந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தார் தனது பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயை கையாள்வதற்காக நாகப்பட்டினம் துறைமுகத்தில் அணுகு பாலத்துடன் கூடிய தோணித்துறையை கட்டி வருகின்றனர். இதற்கான சுற்றுப்புறச் சூழல்



தடையின்மைச் சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் 29-05-2001 அன்று வழங்கப்பட்டுள்ளது. 2002-ம் ஆண்டு ஆகஸ்ட்/செப்டம்பர் மாதத்தில் இந்நிறுவனம் கச்சா எண்ணெயைக் கையாள உத்தேசித்துள்ளது.

இந்தியன் பவர் பிராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தார் வேம்பாரில் நிறுவவுள்ள 2000 மெகாவாட் கேஸ் டர்பைன் பவர் பிராஜக்டிற்கு ஆண்டொன்றுக்கு தேவைப்படும் 2.5 மில்லியன் டன்கள் திரவ இயற்கை வாயுவைக் கையாள்வதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு, சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை உறுதி செய்வதற்கான ஒப்புதல் இந்நிறுவனத்தால் பெறப்பட வேண்டியுள்ளது.

மலேசிய அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தினை சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் துறைமுகமாக உருவாக்குவதற்கு ஆர்வம் காட்டியது. அதன் தொடர்பாக இத்துறைமுகத்தில் பொருளாதாரம் மற்றும் ஆற்றலை அறிவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்து தமிழக அரசிடம் சமர்ப்பித்தது. அவ்வாய்வறிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் இலட்சியமானது, துறைமுகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துறைமுகத்தின் மேம்பாட்டினை தொழில் வளர்ச்சியுடன் இணைந்து மேம்படுத்துவதும் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான பிரத்தியேகத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதனை இவ்வாரியம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கப்பல் உடைப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய தொழில்களின் வளர்ச்சி, தற்போதுள்ள பெரிய துறைமுகங்களின் இட நெருக்கடியினைக் குறைத்தல், ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது ஆகியன தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கொள்கைகளில் அடங்கப்பெற்றவையாகும்.

**VII சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம்**

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் இராமேஸ்வரம் அருகில் பாக் ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் கப்பல் செல்லும் வகையில் இணைக்கப்படவுள்ள கால்வாய்த் திட்டமாகும். இந்தியாவின் கிழக்குக்

[2002 ஏப்ரல் 29

கடற்கரையினையும் மேற்குக் கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் அமையும். மேலும் இதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் குறையும்.

மைய அரசு தூத்துக்குடி துறைமுகத்திடம் இப்பொருளாதார தொழில்நுட்ப அறிக்கையைத் தயார் செய்ய, ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் இவ்வாய்வு அறிக்கை தயாரிக்கும் பணியை நாக்பூரிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கழகத்திடம் மார்ச் 2002-ல் வழங்கியுள்ளது. இவ்வறிக்கையை 12 மாத காலத்திற்குள் தயாரித்துக் கொடுக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த ஆய்வு 'தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கழகத்தால்' மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**VIII புதிய திட்டங்கள்**

1. *கடல் சார் அருங்காட்சியகம்*

தமிழகத்தின் கடல்சார் வரலாற்றினை வெளிக்கொணர்ந்து எடுத்துரைக்க ரூ.16 கோடி மதிப்பீட்டில் மெரினா கடற்கரையில் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் கடல்சார் அருங்காட்சியகம் ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மெரினா கடற்கரையில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்க கடற்படைக்குச் சொந்தமான ஒரு பழைய கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் கப்பற்படையால் இலவசமாக வழங்கப்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த ரூ.16 கோடி செலவினம் தமிழ்நாடு அரசு/தமிழ்நாடு கடல்சார் வாரியம் மற்றும் மைய அரசு/நிதி நிறுவனங்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் முறையே 25:75 என்ற விகிதாச்சாரத்தில் பெறப்படும்.

**2. கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் (BOT) அடிப்படையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கடலூர் மற்றும் இராமேஸ்வரம் துறைமுகங்களை மேம்படுத்துதல்:—**

**i) கடலூர் துறைமுகம்**

கடலூர் துறைமுகம் சென்னைக்குத் தெற்கே 160 கி.மீ. தொலைவில் சாலைவெளித் துறைமுகமாக (Open Road Stead Port) அமைந்துள்ளது. துறைமுகத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் கப்பல்கள்



2002 ஏப்ரல் 29]

நிறுத்தப்பட்டு லைட்டர்ஸ் (lighters) மூலமாக சரக்குகள் கையாளப்படுகின்றன. உர இறக்குமதியாளர்கள் போன்ற பெரிய நிறுவனங்களைக் கவரும் வகையில் அமைந்துள்ள கடலூர் துறைமுகத்தை ரூ.80 கோடி செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேம்படுத்திய பின், ஆண்டொன்றுக்கு 2-2.5 மில்லியன் டன் சரக்குகள் வரை இத்துறைமுகத்தில் கையாள இயலும் எனக் கருதப்படுகிறது.

**ii) இராமேஸ்வரம் துறைமுகம்**

இராமேஸ்வரம் தலைமன்னார் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொள்வதுதான் இராமேஸ்வரம் துறைமுகத்தின் முக்கியச் செயல்பாடு ஆகும். இருப்பினும் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரப் பிரச்சினையால் 1985 முதல் படகுப் போக்குவரத்து (Ferr Service) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. படகுப் போக்குவரத்திற்கு உபயோகப்பட்டு வந்த பயணிகள் நிலையம் (Passenger Terminal) தற்போது கடற்படையால் (Naval Attachment) பயன்படுத்தப்படுகிறது. தற்போது உள்ள மரத்தால் ஆன படகுத்துறை (Wooden Jetty) முற்றிலுமாக பழுதடைந்துள்ளதாலும், இது சீர் செய்ய முடியாத நிலைமையில் உள்ளதாலும் ரூ.20 கோடி செலவில் புதிய தோணித்துறை (R.C.C.) ஒன்றினை படகுப் போக்குவரத்திற்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## IX பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974-ல் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது. இக்கழகமானது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து ஏற்றி, சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து இறக்குகிறது. நிலக்கரியைக் கொண்டு வரும் தேவை ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் குறிக்கோளைப் பூர்த்தி செய்வதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது 40,000 டன் கொள்ளளவுள்ள குறைந்த ஆழத்தில் செல்லவல்ல சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை ஆகஸ்டு 1985 முதல் ஜனவரி 1987 வரையிலான காலகட்டத்தில் சொந்தமாகப் பெற்று இவற்றை முழுமையாக மின்வாரியத்திற்கு, நிலக்கரி கொண்டு வர உபயோகப்படுத்துகிறது. இவை தவிர, கழகமானது 12 முதல் 16 கப்பல்கள் வரை இந்தியக்

[2002 ஏப்ரல் 29

கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல் நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடகைக்குப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் பெருகிக் கொண்டே வரும் தேவைக்கேற்ப நிலக்கரியைக் கொண்டு வர பயன்படுத்தி வருகிறது.

**i) நிலக்கரி கொண்டு வருதல் 2002-2003**

2002-2003-ல் கழகமானது 153.80 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தனக்குச் சொந்தமான 3 தமிழ் கப்பல்கள் மூலமாகவும், இந்தியக் கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல்நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மற்றும் தானியங்கி அதிநவீன கப்பல் ஒன்றும் மற்றும் கிரேன் இல்லாத பெரிய கப்பல்கள் இரண்டு மூலம் நிலக்கரியைக் கொண்டு வர உத்தேசித்துள்ளது.

**ii) நிதி நிலை விவரங்கள் 2002-2003**

2002-2003-ல் இக்கழகம் இயக்க இலாபமாக ரூபாய் 563.33 இலட்சம் ஈட்டும் என்றும் மற்றும் நிகர நஷ்டம் ரூபாய் 91.20 இலட்சமாக குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் நீண்ட காலக் கடனுக்குண்டான வட்டியை ஈடு செய்யாததாலும் மற்றும் சுமைக் கட்டணத்தில் கப்பல்கள் வாங்கப்பட்ட தொகையின் தேய்மானத்தை மட்டுமே ஈடு செய்வதும் இக்கழகம் நஷ்டத்தில் செயல்பட முக்கியக் காரணங்களாகும்.

**iii) எண்ணூர் துறைமுகம்**

எண்ணூர் துறைமுகம் 2001ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இத்துறைமுகம் குறிப்பாக பாரதீப்-எண்ணூர் பாதையில் நிலக்கரியைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்டது. ரைட்ஸ் (Rites) மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் தொழில் நுட்ப ஆலோசகர்களின் பரிந்துரையின்படி பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கிரேன் இல்லாத மற்றும் கன்வேயர் பொருத்திய தானியங்கி கப்பல்கள் மூலம் அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலககரியை பாரதீப்-எண்ணூர் பாதையில் நிலக்கரியைக் கொண்டு வர உத்தேசித்தது. வெஸ்ட் ஏசியா மெரிடைம் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான கிரேனுடன் கூடிய தானியங்கி கப்பல் எம்.வி.ஜெம் ஆப் எண்ணூர் 75066 மெட்ரிக் டன்



2002 ஏப்ரல் 29]

கொள்ளளவுள்ள (2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது) கப்பல் 19-02-2002 அன்று 10 ஆண்டுகளுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. அதிநவீனக் கருவிகள் மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இக்கப்பல் இந்தியாவிலேயே முதன்முதலாக பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி இயந்திரம் மற்றும் கிரேன், கன்வேயர் ஆகிய அதிநவீன கருவிகள் மூலமாக மணிக்கு 2,600 மெட்ரிக் டன் நிலக்கரியை கப்பலிலிருந்து வெளியேற்றுவதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விரைவாக நிலக்கரியைக் கொண்டு சேர்க்க இயலும்.

**iv) கன்னியாகுமரி படகுத்துறை**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை கடல்மார்க்கமாக எடுத்து வரும் சீரியச்செயலோடு, குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினை சுற்றுலாப் பயணிகளுக்காக நடத்தி வருகிறது. தற்பொழுது கழகமானது எம்.எல். தாமிரபரணி, எம்.எல். பாகீரதி மற்றும் எம்.எல்.விவேகானந்தா ஆகிய மூன்று படகுகளை பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. ஒவ்வொரு வருடமும் சுமார் 15 இலட்சம் பயணிகள் நமது படகுத் துறையின் மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குப் பயணம் செய்கிறார்கள்.

**v) தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்**

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. கடல் மாலுமிகள் மற்றும் பொறியாளர்களுக்காக தொடக்க முதலுதவிப் பயிற்சி, தண்ணீரில் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள பயிற்சி, சுய பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள் பற்றிய பயிற்சி, எண்ணெய்க் கப்பலைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல் மற்றும் தீ தடுப்பு மற்றும் தீ அணைப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது தவிர கப்பல் இயக்கும் இயந்திர அறை கண்காணித்தல் வகுப்பு மற்றும் அனுபவம் பெற்ற மாலுமிகளுக்கான கப்பல் செலுத்தும் கண்காணிப்புப் பயிற்சி ஆகிய வகுப்புகள் டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங் அவர்களது ஒப்புதல் பெற்றதும் விரைவில் தொடங்க உள்ளன.

### vi) எதிர்காலத் திட்டம்

அதிநவீன தானியங்கிக் கப்பல் ஒன்றைத் தவிர, கழகமானது கிரேன் இல்லாத இரண்டு பெரிய வகைக் கப்பல்களை நீண்ட நாள் வாடகைக்கு அமர்த்த உத்தேசித்துள்ளது. இவ்வகைக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதால் சிறிய வகை வாடகைக் கப்பல்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவு குறைக்கப்படும்.

ஹால்டியா-பாரதீப் பாதையில் எப்பொழுதும் போல் சிறிய கப்பல்கள் (Handymax) மூலம் நிலக்கரி கொண்டு வரப்படும்.

## X நிறைவுரை

மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக, பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சாலைக் கட்டுமான வளர்ச்சியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இன்று நாட்டிலேயே ஒரு சிறந்த சாலை இணைப்பைப் பெற்ற மாநிலமாக இந்த மாநிலம் திகழ்கின்றது. சாலைகளை மேம்படுத்த மற்றும் பராமரிக்க அதிக நிதி முதலீடு செய்தும், பற்றாக்குறை நிதி மற்றும் சரியான பராமரிப்பின்மையால் சாலைகள் இன்னும் மோசமான உபயோக அளவிலேயே உள்ளன. இந்நிலையை சீர்படுத்த சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு விரிவான சாலை மேம்பாட்டுக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இக்கொள்கையின் ஒரு பகுதியாக நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையானது தரமான சாலைகள், கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், சாலைப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் மீது கவனம், துறையின் கட்டுமானத் தகுதிகள் மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த கிராமப்புற பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்யும். இதை அடைய வழக்கமான சாலை திட்டமிடுதல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பில் பெரிய மாற்றம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையால், மாநிலத்தில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தரமான மற்றும் அதிக சாலை இணைப்புகளைப் பெறமுடியும். இது போன்றே துறைமுகப் பகுதியிலும் நிலையான இடப்பெயர்வு பயன்கள் எய்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# இணைப்பு V

(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 36

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### முன்னுரை

1.1. இந்த அரசின் மதுவிலக்குக் கொள்கையின் முக்கியக் குறிக்கோள் எளிய மற்றும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களை குடிப்பழக்கத்திலிருந்து தடுப்பதாகும். குறிப்பாக அதிலும் அவர்தம் பொருளாதார நல்வாழ்விற்கும் உடல்நலத்திற்கும் பெருந்தீங்கு விளைவிக்கும் கள்ளச்சாராயத்தின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதாகும். ஆயினும் அரசின் நிதி வருவாயில் பெரும்பகுதி ஆயத்தீர்வையின் மூலமாகத்தான் கிடைக்கப்பெறுகிறது என்பதனால், அதனைப் பெருக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கத் தவறவில்லை. குறிப்பாக மதுபானங்களுக்கெனச் செலவு செய்யும் நிலையிலுள்ள பிரிவினரிடமிருந்து கிடைக்கும் வருவாயை அதிகரிக்க அதிக அக்கறை காட்டியுள்ளது.

1.2. கள்ளச்சாராயத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பையும் இவ்வரசு தலையாயதென ஏற்றுக்கொண்டுள்ளது. பாமர மக்களுக்கு கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகள் பற்றி பிரச்சாரம் செய்யத் தேவையான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மிகுந்த சிரத்தையுடன் மேற்கொள்ளும். கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் நிறுவனங்களின் பங்கேற்பு மிக மிக முக்கியமானது என்பதனால் அவர்களுடைய ஒத்துழைப்பை இந்த அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்களின் துணையுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் கள்ளச்சாராயத் துயரச் சம்பவங்கள் மற்றும் உயிரிழப்புகளை தவிர்க்கும் நோக்குடன் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

1.3. கள்ளச்சாராயத்திற்கு எதிரான அமலாக்க நடவடிக்கைகள் மேலும் கடுமையாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் ஏழை மற்றும்

[2002 ஏப்ரல் 29

அப்பாவி மக்களின் விலைமதிக்க முடியாத உயிரிழப்புக்கும் மற்றும் நியாயமாக அரசுக்குக் கிட்டாமல் போகும் வருவாய் இழப்பிற்கும் காரணமாக இருக்கும் தீர்வை செலுத்தப்படாத மது/போலி மது வகைகள் போன்றவற்றின் விற்பனையாளர்கள் மற்றும் கள்ளச்சாராய வியாபாரிகள் ஆகியோர் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். வெறுக்கத்தக்க தொழிலான கள்ளச்சாராய வியாபாரத்திலிருந்து கள்ளச்சாராயம் காய்ச்சுவோரை நிரந்தரமாக விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முகமாக பல புனரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதற்கென 'மறுவாழ்வு நிதி' ஒன்றும் ஒதுக்கப்பட இருக்கின்றது.

1.4. கடந்த ஆண்டு இவ்வரசால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின் விளைவாக இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது விற்பனை அதிகமாக்கப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் அரசுக்கு அதிக வருவாயும் கிட்டியுள்ளது. நடப்பாண்டில் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், அரசு ஆயத்தீர்வை நிர்வாகத்தினை மேம்படுத்துவதுடன் அமலாக்க நடவடிக்கைகளையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கும்.

**2. ஆயத்தீர்வை வருவாயின் வளர்ச்சி**

2.1. ஆய்த்தீர்வை வருவாயின் பங்கு இம்மாநில வருவாயில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். வணிக வரிக்கு அடுத்தபடியாக மாநிலத்தில் இது இரண்டாவது பெரிய வருவாயாக அமைந்துள்ளது. வணிக வரியிலும்கூட, மதுபான விற்பனைமூலம் கிடைக்கும் விற்பனை வரியின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 2001-2002 ஆம் ஆண்டிற்கான ஆயத்தீர்வை வருவாய் ரூ. 2058.21 கோடி ஆகும். மதுபான விற்பனை வழியாக வசூலிக்கப்பட்ட மொத்த விற்பனை வரி ரூ.1636.08 கோடி ஆகும். இவ்வாறாக இத்துறை 2001-2002 ஆம் ஆண்டில், ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வரி மூலம் மொத்தமாக ரூ.3694.29 கோடி அளித்துள்ளது.

2.2. இம்மாநிலத்தின் ஆய்த்தீர்வை வருவாய் முக்கியமாக இரண்டு வழிகளில் கிடைக்கின்றது. (1) இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் சிறப்புரிமைக் கட்டணம் மற்றும் (2) மதுபானம் மற்றும் இதர ஆய்த்தீர்வைப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி மற்றும் கட்டணங்கள்.



2002 ஏப்ரல் 29]

2.3. கடந்த ஆண்டு வரை இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கான உரிமங்கள், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறை மூலம் வழங்கப்பட்டு வந்தன. இம்முறையில் உண்மையான உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கும் வகையில் ஏலம் கேட்பவர்கள் கூட்டாகச் சேர்ந்துகொண்டு குறைந்த தொகைக்கு ஏலம் கேட்டு வந்தார்கள். இதனால் அரசிற்குத் சேர வேண்டிய நியாயமான ஆய வருவாயைப் பெற முடியாத நிலை இருந்து வந்தது. மேலும், அதிக பணம் செலுத்தி உரிமம் பெற்றுக் கொண்ட உரிமதாரர்கள் அதிக உரிமைக் கட்டணம் செலுத்திய காரணத்தால் அவர்களது முதலீடு இழப்பை ஈடு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பலவிதமான போலி மற்றும் தீர்வை செலுத்தாத மதுபானங்களை விற்பனை செய்து குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயற்சித்தனர். இதனால் அரசுக்குச் சேர வேண்டிய நியாயமான வருவாய் கிடைக்காமல் போனது. ஆகவே அரசுக்கு நேர்ந்து வந்த வருவாய் இழப்பைத் தடுக்கும் வகையிலும், உரிமத் தொகை வசூலை மேம்படுத்தும் வகையிலும் இவ்வரசு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக புதிய உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய முறைப்படி கடைகள் அமைந்துள்ள ஊரின் உள்ளாட்சி வகைப்பாட்டினைப் பொறுத்து அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து கடைகளுக்கும் ஒரே சீரான சிறப்புரிமைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறையில் ஒவ்வொரு கடைக்கும் நேரடியாக உரிமம் வழங்கப்படுகின்றது. ஒரு கடைக்கு ஒன்றிற்கு மேல் மனுக்கள் பெறப்பட்டிருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

2.4. நடப்பு உரிம காலத்திற்கு அரசு 6000 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் இதுவரை 5512 கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் சிறப்புரிமைத் தொகையாக கடந்த ஆய்த்தீர்வை ஆண்டில் இதே காலத்தில் பெறப்பட்ட ரூ. 481.09 கோடியுடன் ஒப்பிடும்பொழுது, இந்த ஆண்டில் இதுவரையில் ரூ. 548.79 கோடி பெறப்பட்டுள்ளது. இது சென்ற ஆயத்தீர்வை ஆண்டின் வருவாயைக் காட்டிலும் ரூ. 67.70 கோடி அதிகமாகும்.

2.5. அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம்

[2002 ஏப்ரல் 29

வழங்கும் இப்புதிய முறைக்கு பொதுமக்களிடம் நன்மதிப்பும் அனைத்துத் தரப்பிலிருந்தும் பாராட்டுக்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனை என்னவென்றால், மதுபான வியாபாரத்தில் இம்மாநிலத்தில் அரசின் ஆய்த்தீர்வை வருவாய் இழப்புக்கு தொன்றுதொட்டு காரணமாக இருந்துவந்த கூட்டமைத்து குறைவாக ஏலம் கோரும் முறை முறியடிக்கப்பட்டதே ஆகும்.

2.6. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களின் விற்பனை கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. எனவே, இவ்வரசு கொண்டுவந்த இந்தப் புதிய திட்டமானது ஆய்த்தீர்வை வருவாயை அதிகரிக்க உதவியுள்ளது மட்டுமல்லாமல் கள்ளச்சாராயம் மற்றும் தீர்வை செலுத்தாத மதுபானங்களை ஒழிக்கவும் உதவியுள்ளது என்பது உறுதியாகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனை 148.99 இலட்சம் பெட்டிகளாக இருந்தது. 2001-2002 ஆம் ஆண்டில் இது 161.72 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. இந்த உயர்வு 8.54 சதவிகிதம் ஆகும். புதிய உரிமம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டபின் 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனை 12.16 சதவிகிதம் உயர்வை எட்டியுள்ளது. இதன் மூலம் இப்புதிய முறை கள்ளச்சாராயம்/போலி மது/தீர்வை செலுத்தப்படாத மதுபான விற்பனையினைக் குறைத்துள்ளது தெளிவாகிறது. எனவே, இது அரசிற்கு வருவாய் இழப்பைத் தடுத்ததுடன் கூடுதல் வருவாய் பெறவும் வழிவகுத்துள்ளது.

2.7. இந்த அரசின் பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக கடந்த ஆண்டுகளைக்காட்டிலும் ஆயத்தீர்வை வருவாய் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 1868.68 கோடியாக இருந்த ஆயத்தீர்வை வருவாய் 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 189.53 கோடி அதிகரித்து ரூபாய் 2058.21 கோடியாக உயர்ந்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 1.91 சதவிகிதமாக இருந்த வருவாய் வளர்ச்சி விகிதம் 2001-2002 ஆம் ஆண்டில் 10.14 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதைத் தவிர இத்துறை 2000-2001 இல் விற்பனை வரியாக ரூபாய் 1504.88 கோடி ஈட்டித்தந்துள்ளதைவிட ரூபாய் 131.20



2002 ஏப்ரல் 29]

கோடி அதிகரித்து 2001-2002 இல் ரூபாய் 1636.08 கோடி ஈட்டித்தந்துள்ளது. 2000-2001 இல் அரசு கருவூலத்திற்கு இத்துறையால் வழங்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 3373.56 கோடி மட்டுமே. ஆனால் 2001-2002 இல் இத்துறையின் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் ரூபாய் 3694.29 கோடியாகும். அதாவது, இதனால் கிடைத்த நிகர கூடுதல் தொகை ரூபாய் 320.73 கோடியாகும். இது ஒரு பாராட்டத்தக்க சாதனையாகும்.

### 3. அரசின் புதிய கொள்கை முடிவுகள்

3.1. புதிய உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, இந்த அரசு, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை பலப்படுத்தி ஆயத்தீர்வை வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் பல கொள்கை நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. அவற்றில் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

3.2. கீழ்நிலையிலுள்ள குடும்பங்களையும் மற்றும் ஏழை எளிய மக்களையும் பாதிக்கும் கள்ளச்சாராயத்தினையும் கள்ளச்சாராயச் சாவுகளையும் தடுப்பது இவ்வரசின் முக்கியப் பொறுப்பாகும். சாராயச் சாவுகளில் பெரும்பாலான இனங்களில், மெத்தனால் என்ற உயிர்க்கொல்லிதான் முக்கியக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை இந்த மெத்தனால் என்பது 1919 ஆம் ஆண்டின் விஷச் சட்டம் (Poisons Act) மற்றும் 1934 ஆம் ஆண்டின் பெட்ரோலியச் சட்டம் ஆகிய மத்திய அரசின் சட்டங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இச்சட்டங்களில் மெத்தனால் சம்பந்தமான விதிமீறல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறைக்கு உரிய அதிகாரம் வழங்கப்படவில்லை. இந்தக் குறையை உணர்ந்த இவ்வரசு, மெத்தனாலை, 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழும் மற்றும் 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளின் கீழும் கொண்டு வர சட்டமியற்றி உள்ளது. இதன்மூலம், மெத்தனாலின் இருப்பு, பயன்பாடு, இடம் மாற்றுதல், இறக்குமதி, விற்பனை போன்ற செயல்பாடுகளில் ஏதேனும் சட்ட மீறல்கள் இருந்தால் கடுமையான தண்டனைகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 29

3.3. அமலாக்கப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடன் அது மேலும் திறமையாகச் செயல்பட ஏதுவாக புதியதாக மூன்று மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மண்டலங்கள் உருவாக்கப்பட்டு அவை சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்துள்ளன. ஒவ்வொரு மண்டலமும் முறையே ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் மதுவிலக்கினை அமல்படுத்துவதற்கு மட்டுமே தனியாகச் செயல்படுகிறது. கள்ளச்சாராயம் மிகுதியாகக் காணப்படும் மாவட்டங்கள் மற்றும் எல்லையோரப் பகுதிகளில் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளின் ஊடுருவல் மற்றும் தெளிந்த சாராவி போன்றவை கடத்தப்படுதல் ஆகியவற்றை முழுமையாகத் தடுக்க மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கூடுதலாக எட்டுப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

3.4. அமலாக்கப்பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை அப்பிரிவினர் உபயோகப்படுத்த இவ்வரசு, அனுமதி அளித்துள்ளது. இதனால், காவல் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் தங்கள் தேவைக்கான வாகனங்களை வாங்குவதற்கு அரசின் நிதி உதவியை நாடுவது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், நீண்ட நாட்களாக முடிவுறாத வழக்குகளில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் பயன்படுத்த இயலாமையால் துருப்பிடித்து பயனற்றுப் போவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

3.5. அமலாக்கப் பிரிவின் பணியாளர்களின் நன்னடத்தையை ஊக்குவிக்க ஏதுவாக, இவ்வரசு ஒரு வெகுமதி திட்டத்தை அறிவித்துள்ளது. அதன்படி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் 10 சதவிகித மதிப்பு வரை, சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கலாம் என ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அமலாக்கப் பணியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு மேலும் ஆர்வமுடன் கடமையாற்ற வழிவகுக்கப்பட்டுள்ளது.

3.6. அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு Bar-கள் நடத்த அனுமதியளிக்க அரசு முடிவு செய்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இதுசம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமத்தொகை, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில், அமையப்படவுள்ள "Bar-களுக்கு" முறையே ரூபாய் 3 இலட்சம், 2 இலட்சம், 1 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு வருடத்திற்கு சுமார் ரூ.84 கோடி கூடுதல் வருவாயாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 29]

3.7. இந்த அரசு, அதிநவீன தொழில் நுட்பங்களைக் கொண்ட ஹோலோகிராமுடன் கூடிய புதிய ஆயத்தீர்வை வில்லைகளை, ஏற்கெனவே இரண்டரை ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்த ஆயவில்லைகளுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தி உள்ளது. தற்போது ஆயத்தீர்வை வில்லைகளில் ஒட்டப்படும் ஹோலோகிராம்கள், நவீன மற்றும் சமீபத்திய பாதுகாப்பு அம்சங்களான வழிவிளைவு (Channel effect), ஒளிக்கதிரினால் (laser) பார்க்கக்கூடிய மறைக்கப்பட்ட பிம்பம், புள்ளி அச்சு முறையினால் வடிவமைக்கப்பட்டு ஒளிச்சிதறலால் புலப்படும் குலோச்சீ (guiloche) அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இந்த வகை அதிபாதுகாப்பு அம்சங்கள், சர்வதேச தரத்தில் முதன்மையானதெனக் கருதப்படுகின்றன. மேலும், இந்த அம்சங்களினால், ஹோலோகிராம்களை நகலெடுப்பது முற்றிலும் இயலாத ஒன்று.

**4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்**

4.1. இத்துறையின் பொறுப்புகள், செயல்பாடுகள் மற்றும் வருவாய் உள்ளாற்றல் ஆகியவற்றைக் கருதியும் மற்றும் நிர்வாகத் திறமையை அதிகப்படுத்துதலை கருத்தில் கொண்டும் மதுவிலக்கு மற்றும் ஆய்த்தீர்வை செயலாளர் தலைமையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக்கு என ஒரு தனித் துறையை இந்த அரசு உருவாக்கியது. செயலாளருக்கு உதவியாக, ஒரு துணைச் செயலாளரும் மற்ற சார்புப் பணியாளர்களும் செயல்படுகின்றனர். கொள்கை உருவாக்கம் மற்றும் அதனைச் செயற்படுத்துதல் பற்றிய ஆய்வுகள் ஆகியவை இத்துறையின் முக்கியச் செயல்பாடுகள் ஆகும்.

4.2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கீழ்க்காணும் மூன்று முக்கியப் பிரிவுகள் உள்ளன;

1. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகம்
2. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு
3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர்**

4.3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் துறைத் தலைவர் ஆவார். ஆணையாளருக்கு உதவியாக தலைமையிடத்தில் இந்திய ஆட்சிப் பணியினைச் சேர்ந்த ஒரு கூடுதல் ஆணையாளர், மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் ஒரு இணை ஆணையர் மற்றும் ஒரு நிதிக்

கட்டுப்பாட்டு அலுவலர் (அரசு இணைச் செயலாளர், நிதித் துறை என்ற பதவி நிலையில்) மற்றும் நான்கு உதவி ஆணையாளர்கள் உள்ளனர்.

4.4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மீதான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அரசுக்கு உதவுகிறார். தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 (1937ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் X) மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளைச் செயற்படுத்தும் பொறுப்புகள் அவரிடம் உள்ளன.

4.5. அரசின் முன் அனுமதியுடன் வடிசாலையை அமைப்பதற்கும் மற்றும் ஆல்கஹால் தயாரிப்பதற்கும் உரிய உரிமைகள் மற்றும் உரிமங்கள் வழங்கும் அதிகாரம ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஆணையாளருக்கு அரசின் முன் அனுமதியுடன், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றினை புட்டிகளில் அடைக்கும் அலகுகளை அமைப்பதற்கான உரிமைகள் மற்றும் உரிமங்களை வழங்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள அலகுகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அமைப்பு**

4.6. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆயத்தீர்வை நிர்வாகத்தை மேற்பார்வையிடுகிறார்கள். மதுவிலக்குச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பல்வேறு சட்டமுறைய்ான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுள்ளார். சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர, எல்லா மாவட்டங்களிலும் துணை ஆட்சியர் பதவி நிலையில் ஒரு உதவி ஆணையாளர் (ஆயத்தீர்வை) மாவட்ட ஆட்சித் தலைவருககு உதவியாகப் பணியாற்றுகிறார். சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் துணை ஆணையாளர்கள் (ஆயத்தீர்வை) மாவட்ட ஆட்சித் தலைவர்களுககு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

4.7. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்கீழ் வருவாய்த் துறை அதிகாரிகள், வடிசாலைகள், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை தயாரிப்பு





அலகுகள்/வேதிப்பொருள் அலகுகள் மற்றும் பிணைமுறிக் கிடங்குகள் ஆகியவற்றில் ஆல்கஹாலைத் தயாரித்தல் மற்றும் முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடும் பணிக்காக முறையே வடிசாலை அலுவலர்கள், ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் பிணைமுறித் தயாரிப்பு அலுவலர்கள் (Bonded Manufactory Officers) ஆகிய பதவிகளில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

4.8. துணை ஆட்சியாளர்கள் பதவி நிலையில் வடிசாலைகளில் 15 வடிசாலை அலுவலர்களும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிப்பு அலகுகளின் 7 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் உள்ளனர். மேலும் டி.எல். உரிம அலகுகளில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் வேதிப்பொருள் அலகுகள்) துணை வட்டாட்சியர்கள் பதவி நிலையில் 12 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், ஆர்.எல். உரிம அலகுகளில் (சுத்திகரிக்கப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் வேதிப்பொருள் அலகுகள்) ஒரு ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலரும் மற்றும் பிணைமுறி தயாரிப்புக் கிடங்குகளில் 4 பிணைமுறி தயாரிப்பு அலுவலர்களும் உள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

4.9. இம்மாநிலத்தில் 37 சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. (18 தனியார் ஆலைகள், 16 கூட்டுறவுத் துறை ஆலைகள், 3 பொதுத் துறை ஆலைகள்). சர்க்கரைத் தயாரிப்பில் கிடைக்கும் உபபொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். (சர்க்கரை ஆலைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-5-இல் தரப்பட்டுள்ளன.)

4.10. சாராவி உற்பத்திக்கு பொதுவாகப் பயன்படுத்துகின்ற மூலப் பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பில் இது சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது. எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது.

4.11. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை செய்தல் மற்றும் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றிற்குரிய உரிமங்களை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் முன் அனுமதியோடு வழங்க

மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்/ கூடுதல் ஆட்சித் தலைவர்/ மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4.12. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக, சர்க்கரை ஆலைகள், கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பயன்படுத்த உரிமம் பெற்றவருக்கு சம்பந்தப்பட்ட உரிமத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி விற்கலாம். கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீது விலைக் கட்டுப்பாடு ஏதும் இல்லை என்றாலும், எந்தவொரு தவறான உபயோகத்திற்கும் அதனைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை செய்தல், உபயோகப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்கு, 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்கீழ் எம்.எல்.2, எம்.எல்.4, எம்.எல்.5 மற்றும் எம்.எல்.6 உரிமங்கள் வழங்கப்பட்டு முறைப்படுத்தப்படுகின்றன.

4.13. வருவாயைப் பெருக்குவதற்காக ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.200/- (இருநூறு மட்டும்) நிர்வாக சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.

4.14. கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒரு மூலப் பொருள் என்பதால், பொதுவாக அதனை ஏற்றுமதி செய்வது ஊக்குவிக்கப்படவில்லை. இமமாநிலத்தில் அமையப்பெற்றுள்ள தொழிற்சாலைகளின் தேவையை நோக்குகையில், கருப்பஞ்சாற்றுக் கசண்டின் இருப்பு நிலை தேவைக்குரிய அளவே இருந்ததால், உபரியாக கசண்டு உற்பத்தியாகும் நிலை உருவாகும் வரை கசண்டு ஏற்றுமதிக்கு 18-6-2001 முதல் தற்காலிகத் தடை ஆணை விதிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் சர்க்கரை ஆலைகளில் கரும்பு பிழியும் காலம் தொடங்கிவிட்டதால், கருப்பஞ்சாற்றுக் கசண்டின் இருப்பு நிலை திருப்திகரமாக உள்ளது. எனவே, கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தியையும், ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை சேமித்து வைக்க உள்ள வசதிகளையும் கருத்திற்கொண்டு ஏற்றுமதிக்கு தற்காலிகமாக விதித்த தடையாணையினை மறு ஆய்வு செய்ய அரசு தீர்மானித்து, அதன்படி, கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி குறித்த ஆலோசனைக் குழுவின் கூட்டத்தை குறிப்பிட்ட கால அளவிலான இடைவெளிகளில் நடத்தி சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் தேக்கத்தினைத் தவிர்க்கும் வகையில் எவ்வளவு கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக உள்ளதோ அதனை ஏற்றுமதிக்கு



அனுமதிப்பது குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**வடிசாலைகள் மற்றும் சாராவி**

4.15. இம்மாநிலத்தில், கருப்பஞ்சாற்றுக் கசண்டினை மூலப் பொருளாகக் கொண்டு சாராவி தயாரிக்கும் வடிசாலைகள் 15 உள்ளன. (விவரங்கள் இணைப்பு-6-இல் தரப்பட்டுள்ளன) 15 வடிசாலைகளில் 13 வடிசாலைகள் தனியார் துறையிலும், 2 வடிசாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

4.16. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பிலும், வேதியியல் மற்றும் வார்னிஷ் பொருட்கள் தயாரிப்பிலும் சாராவி மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், மிகச் சிறிய அளவில், கல்விக் கூடங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

4.17. மத்திய அரசு தனது 10-6-1993 நாளிட்ட ஆணையில், 1971 ஆம் ஆண்டின் ஈதைல் ஆல்கஹால் (விலைக்கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தது. இதன் விளைவாக தற்போது ஈதைல் ஆல்கஹால் (சாராவி) மீது விலைக் கட்டுப்பாடு ஏதும் கிடையாது. இதன் பின்னர் இவ்வரசு, உரிமதாரர்கள் சாராவியினை இம்மாநிலத்தில் விற்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும், வைத்திருப்பதற்கும் உபயோகப்படுத்துவதற்கும் வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. தெளிந்த சாராவியை ஒழுங்குபடுத்தும் வகையில், அதனை விற்க, வைத்திருக்க, உபயோகப்படுத்த, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்ய மற்றும் எடுத்துச் செல்ல 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளிலும், இயல்பு மாற்றப்பட்ட சாராவியின் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்த 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் மெத்தில் ஆல்கஹால் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளிலும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தெளிந்த சாராவியை தவறான வழிகளில் உபயோகப்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, 1959 ஆம் ஆண்டு தெளிந்த சாராவி விதிகளுக்குப் பதிலாக, 2000 ஆம் ஆண்டில் புதிய தெளிந்த சாராவி விதிகள் இயற்றப்பெற்று, இதன் மூலம் புது உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

4.18. இம்மாநிலம் சாராவி உற்பத்தியில் உபரி மாநிலமாகும். எனவே, இங்குள்ள வடிசாலைகள் சாராவியை ஏற்றுமதி செய்ய

அனுமதிக்கப்படுகின்றன. அருந்தும் பயன்பாட்டுக்களுக்காக ஏற்றுமதி செய்யப்படும் சாராவிமீது ஒவ்வொரு பல்க் லிட்டருக்கும் ரூ.6/- ஏற்றுமதி அனுமதிக்கட்டணமாக விதிக்கப்படுகிறது. இதன் காரணமாக சாராவியின் விலை இறக்குமதி செய்யும் மாநிலத்திற்கு இலாபகரமாக இல்லை. எனவே, நமது அண்டை மாநிலங்கள்கூட சாராவி விலை மலிவாக உள்ள சில தொலைதூர மாநிலங்களான மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்திலிருந்து சாராவியினை இறக்குமதி செய்கின்றன. எனவே, நம் மாநிலத்தில் உபரியாக உள்ள சாராவியை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்றுமதி அனுமதிக் கட்டணத்தை ஒரு பல்க் லிட்டருக்கு ரூ6/- என வசூல் செய்து வந்ததை ரூ.3/- ஆகக் குறைக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் கருப்பஞ்சாற்றுக் கசண்டை பயன்படுத்தும் வடிசாலைகள் இதுகாறும் 50 முதல் 60 சதவிகித அளவே இயங்கும் நிலையினின்றும் மாறி முழுமையாக செயல்திறனைப் பயன்படுத்தும் நிலை உருவாகும். கருப்பஞ்சாற்றுக் கசண்டை நம் மாநிலத்திலேயே சாராவியாக மாற்றுவதாலும் அச்சாராவியினை ஏற்றுமதி செய்வதாலும் அரசுக்கு அதிக வருவாய் கிடைப்பதோடு வேலை வாய்ப்பு வசதியும் பிறசில ஆதாயங்களும் கிடைக்க வாய்ப்புள்ளது.

**மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு**

4.19. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களைக் கொண்டு செல்லுதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றை அறவே ஒழிப்பதும், பிற மாநிலங்களிலிருந்து இவற்றைக் கடத்துவதை தடுப்பதுமே இந்த அரசின் முக்கியமான நோக்கமாகும். இந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, இந்த அரசானது, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை தனித் துறையாக இயங்க அனுமதிக்க முடிவு செய்துள்ளது. கூடுதல் காவல்துறை இயக்குநர் (அமலாக்கம்) அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினை நேரிடையாகவும் மற்றும் காவல் ஆணையாளர்கள்/மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மூலமாகவும் நிர்வகிக்கின்றார். காவல் ஆணையாளர்கள்/மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மதுவிலக்கு அமலாக்கத்தை தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழுள்ள மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலகுகள் மற்றும் உள்ளூர் காவல் துறையின் உதவியுடன் செயல்படுத்துவதற்கு முழுமையாக பொறுப்புடையவர்களாவர்.



4.20. இம்மாநிலத்தில் காவல் ஆய்வாளரின் தலைமையிலான மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் 94 உள்ளன. அவை பெரிய மாவட்டங்களில் மூன்று அலகுகள், சிறிய மாவட்டங்களில் இரண்டு அலகுகள் என்ற அளவில் உள்ளன. சென்னை மாநகரத்தில் ஆறு அலகுகளும், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாநகரங்களில் முறையே ஒவ்வோர் அலகும் உள்ளன. மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலுள்ள தீவிர மதுவிலக்கு அமலாக்கத்தைக் கண்காணிக்க 37 கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும், 37 துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும் உள்ளனர். இந்த அலகுகள் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. அவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மதுவிலக்கு அமலாக்கத்திற்கு பொறுப்பானவர்கள் ஆவார்கள். அனைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

4.21. சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் போன்றவற்றை யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி மற்றும் காரைக்காலிலிருந்தும் மற்றும் கர்நாடக மாநிலம் மற்றும் பிற எல்லைப்புற மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக எடுத்து வரப்படுவதைத் தடுக்க நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 21 சோதனைச்சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன.

4.22. மதுவிலக்குக் குற்றவாளிகள் மற்றும் கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி மற்றும் போலி மது/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் போன்றவற்றைக் கடத்துபவர்களைத் திரும்பத் திரும்பக் கைது செய்வதன் மூலமும்,. அக்குற்றவாளிகளில் குறிப்பிடத்தக்கவர்களை தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைப்பதன் மூலமும் அமலாக்கமானது மிகக் கடுமையாக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு இடையேயான கூட்டு செயல்பாடுகள் மூலமாக போலி மது/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரித்தல் மற்றும் கடத்துதல் போன்ற செயல்கள் முறியடிக்கப்பட்டு, அதற்குக் காரணமான பெங்களூர் மற்றும் பாண்டிச்சேரி போன்ற இடங்களைச் சேர்ந்த முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். விரிவான விசாரணை மற்றும்

வழக்குகளின் தன்மை ஆகியவற்றிற்கு [2002 ஏப்ரல் 29
கொடுக்கப்பட்டுள்ளதால் தேவையான இடங்களில் அவை முக்கியத்துவம்
தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. போலிமது/தீர்வை போதுமான
இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், செலுத்தப்படாத
மற்றும் கள்ளச்சாராயம் போன்றவை கர்நாடகம், தெளிந்த சாராவி
ஆந்திரப் பிரதேச மாநிலங்களிலிருந்து பாண்டிச்சேரி மற்றும்
வகையில் தற்போதுள்ள 21 சோதனைச் கடத்தப்படுவதைத் தடுக்கும்
தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சாவடிகளின் செயல்பாடுகள்
சாவடிகள் மற்றும் நடமாடும் கூடுதலான தற்காலிக சோதனைச்
ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தவும்

4.23. தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டில் மொத்தம்
1136 கள்ளச்சாராயக்காரர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.
அவர்களில் 367 பேர் 2001 ஆம் ஆண்டின் முதற்பாதியிலும், 769 பேர்
2001 ஆம் ஆண்டின் பிற்பாதியிலும் தடுப்புக் காவலில்
வைக்கப்பட்டனர். 2001 ஜனவரி மாதம் முதல் 2001 மார்ச் மாதம்
முடிய 241 தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள் மட்டுமே தடுப்புக்
காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், 2002 ஜனவரி மாதம் முதல்
2002 மார்ச் மாதம் முடிய 351 தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள்
தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

4.24. 1999 ஆம் ஆண்டில் மொத்தம் 897 போலிமது/தீர்வை
செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்
வழக்குகளும், 2000 ஆண்டில் மொத்தம் 1067 போலிமது/தீர்வை
செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்
வழக்குகளும், 2001 ஆம் ஆண்டில் 2114 போலி மது/தீர்வை
செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்
வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டில் 11319
போலி மது/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு
மதுவகைப் பெட்டிகளும், 2000 ஆம் ஆண்டில் 8911 போலி மது/
தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைப்
பெட்டிகளும் கைப்பற்றப்பட்டன. 2001 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட
போலி மது/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு
மதுவகை அளவு 9.98 இலட்சம் லிட்டர்கள் ஆகும். 2000 ஆம்
ஆண்டில் கைப்பற்றப்பட்ட போலி மது/தீர்வை செலுத்தப்படாத இந்தியத்
தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் அளவு 7.86 இலட்சம் லிட்டர்கள்
மட்டுமேயாகும். 2001 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட 3970 மோட்டார்



2002 ஏப்ரல் 29]

வாகனங்களில், 287 வாகனங்கள் கார்களாகும். (2000 ஆண்டில் 247
கார்களே கைப்பற்றப்பட்டன.) 2001 ஆம் ஆண்டில் மற்ற
பொருட்களுடன் மொத்தம் 4.41 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும்
கைப்பற்றப்பட்டது.

4.25. 2001 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலத்தில் 24.10
இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயமும், 2001 ஜூலை முதல் டிசம்பர்
வரை 35.21 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயமும் கைப்பற்றப்பட்டது.
2001 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் 10.88 இலட்சம்
லிட்டர் கள்ளச் சாராயமும், 2002 ஜனவரி முதல் மார்ச் வரையிலான
காலத்தில் 11.78 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயமும்
கைப்பற்றப்பட்டது.

4.26. 2001 ஜனவரி முதல் ஜூன் வரை 1.89 இலட்சம் சாராயப்
பாக்கெட்டுகளும், 2001 ஜூலை முதல் டிசம்பர் வரை 2.75 இலட்சம்
சாராயப் பாக்கெட்டுகளும் கைப்பற்றப்பட்டன. 2001 ஜனவரி முதல்
மார்ச் வரை 96,528 சாராயப் பாக்கெட்டுகளும், 2002 ஜனவரி முதல்
மார்ச் வரை மொத்தம் 1.13 இலட்சம் சாராயப் பாக்கெட்டுகளும்
கைப்பற்றப்பட்டன.

4.27. 2001 ஜனவரி முதல் ஜூன் வரை 1.89 இலட்சம் லிட்டர்
தெளிந்த சாராவியும், 2001 ஜூலை முதல் டிசம்பர் வரை 2.51
இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும் கைப்பற்றப்பட்டன மேலும்
2001 ஆம் ஆண்டின் முதற்பாதியில் உரிமம் பெறப்படாத மெத்தனால்
ஏதும் கைப்பற்றப்படவில்லை. ஆனால் 2001 ஆம் ஆண்டின் இரண்டாம்
பாதியில் 7,490 லிட்டர் உரிமம் பெறப்படாத மெத்தனால்
கைப்பற்றப்பட்டது. மேலும் மதுவிலக்கு வேட்டையின்போது 2001
ஜனவரி முதல் ஜூன் வரை 2298 வாகனங்களும், 2001 ஜூலை
முதல் டிசம்பர் வரை 2341 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

4.28. பல்லாண்டுகளாக கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை
நடைபெற்று வரும் கரும்புள்ளி கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவைகள்
கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு காவல்
நிலையத்திலும், அமலாக்கப் பிரிவிலும் கரும்புள்ளி கிராமப் பதிவேடுகள்
பராமரிக்கப்படுகின்றன. இதன்மூலம் கள்ளச்சாராயக்காரர்களின்
நடவடிக்கைகளை முற்றிலுமாக தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
முறையாகக் கண்காணிக்கப்படுகின்றன, மேலும் அக்கிராமத்தில் கள்ளச்
சாராயக்காரர்களின் நடமாட்டத்தைத் தடுத்து, தீவிர அமலாக்கம்,

மறுவாழ்வு நடவடிக்கைகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் மதுவிலக்கு கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் ஒத்துழைப்பைப் பெறுவது ஆகியவற்றின் மூலம் பொது மக்களின் கிராமங்களை உருவாக்கும் நோக்கை அடைய கள்ளச்சாராயமற்ற நிலையமும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளும் ஒவ்வொரு காவல் வருகின்றன. செயல்பட்டு

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)**

4.29. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 17-C (1-A) (a) பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை மூலம் வழங்கும் தனியுரிமை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைவர் ஆவார். இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் இக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

4.30. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. இத்தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் ஒரு பொது மேலாளரும், பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவன செயலர் மற்றும் இரண்டு மேலாளர்களும் மற்றும் ஏனைய சார்நிலை அலுவலர்களும் உள்ளனர்.

4.31. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், அனுமதிக்கப்பட்ட மூலதனமாக ரூ.15 கோடியைக் கொண்டுள்ளது. இதில் அரசு 1983 ஆம் ஆண்டு ரூ.5 கோடியும், 1998 ஆம் ஆண்டு ரூ.2 கோடியும், ஆக மொத்தத்தில் ரூ.7 கோடி இக்கழகத்தில், பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சாராவிக் கழகத்தில் (டாஸ்கோ) ரூ.2.40 கோடியை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பங்கு முதலீடு செய்துள்ளது. இவையல்லாது, அவ்வப்போது தேவைப்படும் போதெல்லாம் வழிவகை முன்பணத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து வந்துள்ளது. மேலும், பாரத ஸ்டேட் வங்கி ரூ.50 கோடியும், ஆந்திரா வங்கி மற்றும் பாரத் ஓவர்சீஸ் வங்கி ஆகியவை தலா ரூ.15 கோடியும் இக்கழகத்திற்கு ரொக்க கடன் வசதி அளித்துள்ளன.



4.32. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்து இந்தியத் தயாரிப்பு மதுவகைகளையும் மற்றும் இரண்டு பீர் தயாரிப்பாளர்களிடமிருந்து பீரையும் கொள்முதல் செய்து வருகின்றது. ஒருசில இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், ஸ்காட்ச் மற்றும் பீர் வகைகள் மட்டும் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

4.33. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர் தலைமையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலமெங்கிலுமுள்ள 40 கிடங்குகளின் மூலம் மதுபானங்களை விநியோகம் செய்து வருகின்றது. இந்தக் கிடங்குகள் வட்டாட்சியர் நிலையிலுள்ள மேலாளர்கள் தலைமையில் இயங்குகின்றன.

4.34. மாநிலமெங்கும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகள் 40 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 1983 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட டாஸ்மாக்கின் விற்பனை, பத்து மடங்கிற்கு மேலாக அதிகரித்ததாலும், ஆரம்பத்திலிருந்தே வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த கிடங்குகளில் போதுமான இடவசதி இல்லாமல் இருந்ததாலும், காத்திருக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் இன்றியமையாத மது வகைகளின் இருப்பின்மை ஏற்படும் நிலை உருவானது. எனவே டாஸ்மாக்கிற்காக போதிய இடவசதியுடன் கூடிய சொந்தக் கிடங்குகள் அவசியம் என உணரப்பட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகத்தினுடைய முன்னாள் கலவை அலகுகளை 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் டாஸ்மாக் தன்னகப்படுத்தி பழுது பார்த்தும் மற்றும் செப்பனிட்டும் கீழ்க்கண்ட கிடங்குகளை அமைத்தது:

(1) திருமழிசை-I (2) திருமழிசை-II (3) அம்பத்தூர்-I (4) அம்பத்தூர்-II (5) கும்பகோணம் (6) திருநெல்வேலி (7) ஈரோடு (8) திண்டுக்கல் (9) திருச்சிராப்பள்ளி (10) கடலூர்.

4.35. மேலும் திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாமக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் காலி மனைகளை டாஸ்மாக் வாங்கியுள்ளது.

இவ்விடங்களில் டாஸ்மாக்கிற்காக, அலுவலகம் மற்றும் கிடங்குகள் கட்டும் பணி திருவாளர்கள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகம் மற்றும் காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு டாஸ்மாக் கிடங்குகள் செயல்பட ஆரம்பித்துள்ளன:—

(1) அம்பத்தூர்-III (2) சிவகங்கை (3) தூத்துக்குடி (4) நாமக்கல் (5) புதுக்கோட்டை (6) திருவள்ளூர் (7) இராமநாதபுரம் (8) விருதுநகர்.

4.36. பின்வரும் இடங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் முடிவுறும் தருவாயில் உள்ளன:—(1) காஞ்சிபுரம் (2) தஞ்சாவூர் (3) திருவாரூர்.

**கணினிமயமாக்கல் திட்டம்**

4.37. திறன்பாடுமிக்க, பொருள் இருப்பு நிர்வாகத்தை மேம்படுத்துவது சரக்கு நிலவரம் சம்பந்தமாக நாளது வரையிலான தகவலின் மூலம் வேகமாக விற்பனையாகும் சரக்குகளின் இருப்பின்மையை தடுப்பது அல்லது அத்தகைய நிகழ்வுகளை வெகுவாகக் குறைப்பது, மாவட்ட வாரியாக மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் வாரியாக இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் கொள்முதலை சரியான முறையில் கண்காணிப்பது வியாபாரிகளின் மத்தியில் தீர்வை செலுத்தப்படாத/போலி மதுபான விற்பனையை முற்றிலும் அகற்றுவது மேலும் வாணிபக் கழக தலைமை அலுவலகம் அரசுக்குச் சமர்ப்பிக்கின் பல்வேறு அறிக்கைகள்/விவர அறிக்கைகள்/உரிமக் கோரிக்கைக ஆகியவற்றை குறித்த காலத்தில் மற்றும் துல்லியமான முறையி சமர்ப்பிப்பது ஆகியவற்றுக்காக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தி செயல்பாடுகளை கணினிமயமாக்கிட முடிவு மேற்கொள்ளப்பட்ட அனைத்து 40 மதுபானக் கிடங்குகளின் செயல்பாடுகளும் வெற்றிகரமா கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்ட பொருள் இரு தகவல் முறையில், செம்மைப்படுத்தப்பட்ட பொருள் இருப்பு நிர்வா முறையில் வேகமாக விற்பனையாகும் சரக்குகள் எல்லாக் கிடங்குகளிலு எல்லாக் காலங்களிலும் தேவையான இருப்புள்ளபடி செய்யும் நிலை இன்று இக்கழகம் உள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூலம் செய்யப்பட்ட விற்பனை அளவு மற்றும் அரசுக்கு கிடைக்கும் வருவாய்**

4.38. 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினரால் செய்யப்பட்ட விற்பனை மற்றும் வரிகள் மற்றும்



தீர்வைகள் மூலம் அரசுக்குச் செலுத்தப்பட்ட வருவாய் விவரங்கள் இணைப்பு-8 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து இழப்பீட்டில் குறைப்பு**

4.39. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு வரும் மதுபானம் மற்றும் பீர் சரக்குகள் உரிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்குட்பட்டு இறக்கியதன் பயனால், போக்குவரத்து இழப்பீடு 1998-99 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது 0.16 சதவிகிதம் வரை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ரூ.2.21 கோடி வரையிலும் இழப்பீடு கட்டணத் தொகை சேமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் போக்குவரத்து இழப்பினை மேலும் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளது.

**ஈவுத்தொகை**

4.40. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 2001-2002 ஆம் ஆண்டிலும் கூடுதல் வருமானம் ஈட்டுவதைத் தொடரச் செய்து 5 சதவிகித ஆதாயப் பங்கான ரூ.35 இலட்சத்தை அரசுக்குச் செலுத்தியுள்ளது.

**தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)**

4.41. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) துணை நிறுவனமாக, தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ), இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், பீர் மற்றும் நாட்டு மது ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் 31-12-1989 விருந்து பீர் உற்பத்தியையும். 21-7-1990 விருந்து நாட்டு மது உற்பத்தியையும் தொடங்கியது. எனினும் 16-7-1991 முதல், நாட்டு மது உற்பத்தியை இக்கழகம் நிறுத்திவிட்டது. நாட்டு மது அடைக்கும் 12 பிரிவுகளில் உள்ள சொத்துக்களின் உடைமைகள் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசு நியமித்த குழுவின் பரிந்துரைப்படி பால்வள ஒன்றியங்களிடம் (ஆவின்) ஒப்படைக்கப்பட்டன. பின்னர் 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் பன்னிரெண்டு பிரிவுகளில் பதினொரு பிரிவுகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கிடங்குகளாகப் பயன்படுத்த ஆவின் நிறுவனத்திடமிருந்து எடுத்துக்கொண்டது.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் தமிழ்நாடு சாராவிக் கழகம் ஒருங்கிணைப்பு

4.42. அரசு ஆணை (நிலை) எண் 183, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (8) துறை, நாள் 14-9-2001-இல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன், தமிழ்நாடு சாராவிக் கழகத்தை ஒருங்கிணைப்பதென்பது, பொதுநலன் கருதி எடுக்கப்பட்ட முடிவு என்று சான்றிதழ் வழங்கப்பட்டு, ஒருங்கிணைப்பு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. மத்திய அரசு, ஒருங்கிணைப்பு திட்டம் குறித்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சாராவிக் கழகத்தின், பங்குதாரர்களின்/பற்றாளர்களின் கருத்தினைப் பெறும்வகையில் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிட அறிவுரை வழங்கியுள்ளது. அதற்கேற்ப, பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

4.43. போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டு சென்று வழங்குவதன் மூலம் பெறப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதிகளைச் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (1985 ஆம் ஆண்டைய மத்தியச் சட்டம் 61) இயற்றியது. இச்சட்டம், அபராதம் விதிக்கவும், கடும் சிறைத் தண்டனை விதிக்கவும், குற்றவாளியென ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள், மீண்டும் குறிப்பிட்ட சில குற்றங்களைப் புரிந்தால் அவர்களுக்கு கூடுதல் தண்டனை வழங்கவும், ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள் செய்யும் சிலவகையான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கவும் வகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தண்டனை எதனையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அல்லது குறைக்க அல்லது மாற்ற முடியாது. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் ஒவ்வொன்றும், பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்களாகும். இவை ஜாமீன் பேரில் விடுதலை செய்ய முடியாதவையும் ஆகும்.



4.44. மத்திய அரசு 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (1988 ஆம் ஆண்டைய மத்தியச் சட்டம் 46) என்ற மற்றொரு சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது. இதன்படி போதை மருந்துகள் மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் நபர்களை அவர்கள் காவலில் வைக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது ஓர் ஆண்டுக் காலமும் அதிகபட்சமாக இரண்டாண்டுக் காலமும் காவலில் வைக்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

4.45. இம்மாநிலத்தில் மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை கலெக்டர், வருவாய் உளவுத் தகவல் சேகரிப்பு இயக்ககம் ஆகியவையும் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

4.46. கடந்த ஆண்டு போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு 19 வழக்குகளில் உலகச் சந்தையில் ரூ.13.59 கோடி மதிப்புள்ள 13,591 கிலோ ஹெராயின் என்னும் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளது. கஞ்சா செடி வழக்குகளைப் பொறுத்தவரை 95 வழக்குகளில் ரூ.18.60 கோடி மதிப்புள்ள 93,006 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. உலர் கஞ்சாவைப் பொறுத்தவரை 1180 வழக்குகள் போடப்பட்டு ரூ.2.02 கோடி மதிப்புள்ள 4041.330 கிலோ உலர் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

## 5. 2002-2003 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல்

5.1. இந்த அரசு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்கும் முறையில் சீரமைக்கப்பட்ட புதிய முறையை அறிமுகப்படுத்தி ஆயத்தீர்வை வருமானத்தை அதிகரித்ததன் தொடர்ச்சியாக ஆயத்தீர்வை நிர்வாகத்தை செம்மைப்படுத்தவும் அதன் வழியாக ஆயத்தீர்வை வருமானத்தை இன்னும் அதிகரிக்கவும் மற்றும் கள்ளச்சாராயத் தீமைகளை ஒழிக்க மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் உறுதிப்படுத்தவும் பல திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. கள்ளச்சாராயத்திற்கு எதிராக பல அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேநேரத்தில்

[2002 ஏப்ரல் 29

வெறுக்கத்தக்க கள்ளச்சாராயத் தொழிலிலிருந்து விடுபட்ட கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு தகுந்த பிழைப்புக்கான மாற்று வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டங்களையும் அரசு செயல்படுத்த இருக்கின்றது.

5.2. மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடைய 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன:

**(அ) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை அதன் துறைத் தலைமை அலுவலகங்களுடன் இணைத்தல்**

5.2.1. தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) ஆகிய அலுவலகங்களுடன் மின்னணு முறையில் இணைக்கும் திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும். இதற்காகும் மிகைச் செலவு டாஸ்மாக் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். இதன் மூலம் அடிப்படை விவரங்கள் மற்றும் கோப்புகள் ஆகியவற்றை ஓர் அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு விரைவாகவும் துல்லியமாகவும் அனுப்ப இயலும் என்பதுடன் மின்னணு நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை நடைமுறையில் செயல்படுத்தவும் ஏதுவாகும். இதனால் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம் மற்றும் டாஸ்மாக் நிறுவனத்தில் தினசரி, வாராந்திர மற்றும் மாத அடிப்படையில் தயாரிக்கப்படும் பல்வேறுவிதமான அடிப்படை விவரங்கள், தகவல் தொகுப்புகள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவற்றின் விவரங்களை உடனுக்குடன் பெற வழிவகை செய்ய முடியும்.

5.2.2. இந்தத் திட்டம் செயலாக்கப்பட்ட பின்பு பல்வேறு வடிப்பகங்கள், பீர் உற்பத்தி ஆலைகள் மற்றும் இரசாயன தொழிற்சாலைகள் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படும் சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகள் ஆகியவற்றின் தினசரி உற்பத்தி மற்றும் இருப்பு பற்றிய விவரங்களை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திலிருந்து உடனுக்குடன் தெரிந்து கொள்ள அரசுக்கு ஏதுவாக இருக்கும். இதைத் தவிர மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திலிருந்து இது



2002 ஏப்ரல் 29]

தொடர்பான பிற விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியும். அதைப்போலவே டாஸ்மாக் நிறுவனத்திலிருந்து மாவட்ட வாரியாக அதன் கிடங்குகளில் கையிருப்பில் உள்ள இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகள் மற்றும் மாவட்ட வாரியாக மதுபான வகைகள் எடுப்பு விவரம், கேட்பு மற்றும் ஆணை போன்ற விவரங்களையும் தெரிந்துகொள்ள முடியும்.

5.2.3. முதல் கட்டமாக, தலைமைச் செயலகம் டாஸ்மாக் நிறுவனத்துடன் ரூபாய் 11 இலட்சம் செலவில் தொடரமைப்பு முறையில் இணைக்கப்படும்.

**(ஆ) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகக் கிடங்குகளின் செயல்பாடுகளை படிப்படியாக நவீன மயமாக்குதல்**

5.2.4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் செயல்பாட்டினை சிறிது சிறிதாக நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 40 கிடங்குகளில் முதல்படியாக 10 கிடங்குகளில் பொருள் இருப்பு நிர்வாக முறை, சரக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் முதலிய செயல்பாடுகள் நவீனப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

5.2.5. முதலில் இந்தக் கிடங்குகளில் 1998 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கணினி மென்பொருள்களின் நிலை உயர்த்தப்படுவதுடன் மிக நவீன சாதனங்களும் நிறுவப்படும். இதனால் தற்போதுள்ள மேலாண்மை பொருள் தயாரித்தல் பட்டியல் முறை, மேலும் செம்மைப்படுத்தப்படுவதுடன் இந்தக் கிடங்குகளில் கணினியில் உள்ள விவரங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். அதுபோன்று இந்தக் கிடங்குகளின் சரக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் செயல்பாடுகளிலும் நவீன சாதனங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதனால் பொருள்களைக் கையாள்வதில் உள்ள நுட்பங்கள் மேம்படுத்தப்படுவதுடன் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமும் சில்லறை வியாபாரிகளும் பயனடைவர். இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவினம் ரூ.45.50 இலட்சங்களாகும். இதற்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நிதியிலிருந்து செலவு செய்யப்படும்.

**(இ) மறுவாழ்வுக் குழுக்கள் மற்றும் மறுவாழ்வு நிதி ஏற்படுத்துதல்**

5.2.6. கள்ளச்சாராயத் தொழிலிலிருந்து திருந்தியவர்களுக்கு தகுந்த மறுவாழ்வு அளிக்கும் முக்கிய நோக்கத்துடன் மறுவாழ்வு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். இந்த நிதியுடன் தொழிற்சாலைகள், அரசு சாரா

[2002 ஏப்ரல் 29

நிறுவனங்கள், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் உதவித் தொகைகள்/நன்கொடைகள் ஆகியவையும் சேர்க்கப்படும். இந்த நிதி, மாவட்டங்களில் கள்ளச்சாராயத் தொழிலிலிருந்து திருந்தியவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க பயன்படுத்தப்படும். இந்நிதியை நிர்வகிக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு மாவட்ட மறுவாழ்வு குழு அமைக்கப்படும்.

5.2.7. இக்குழுவுக்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், காவல் துறைக் கண்காணிப்பாளர் உறுப்பினர்-செயலராகவும் இருப்பதோடு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ~(TASMAC),~ அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் (THADCO) ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மாவட்ட மறுவாழ்வுக் குழுக்களின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தகுதிவாய்ந்த, திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளைத் தெரிந்தெடுத்து மறுவாழ்வு அளிக்கும் வகையில் நிதி உதவி வழங்கும் பொறுப்பு இக்குழுவினுடையதாகும்.

5.2.8. இத்திட்டம் வெறுக்கத்தக்க கள்ளச்சாராயத் தொழிலில் தற்போது ஈடுபட்டிருக்கும் சமுதாயத்தின் ஏழை மக்களுக்கு அவர்கள் திருந்தி நல்ல முறையில் வாழ உதவி புரிவதோடல்லாமல் கள்ளச்சாராய நடமாட்டத்தைக் குறைக்கவும் வழிவகுக்கின்றது. மேலும் இது கள்ளச்சாராய துயரச் சம்பவங்களைக் குறைப்பதுடன், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனையினையும் அதிகரித்து அதன்மூலம் அரசுக்கு வருவாயை அதிகரிக்கவும் உதவுகின்றது.

**(ஈ) கள்ளச்சாராயம்/மெத்தனால் ஆகியவை மூலம் ஏற்படும் கேடுகளுக்கு எதிராக மாநில அளவில் விழிப்புணர்வு இயக்கம் அமைத்தல்**

5.2.9. தன்னார்வ பெண்கள் தொண்டு குழுக்கள், அரசு சாராத அமைப்புகள் மற்றும் பிற தொண்டு அமைப்புகள் மூலமாக மக்களை குடிப்பழக்கக் கேடுகளிலிருந்து மீட்கவும், குறிப்பாக கள்ளச்சாராயத்திலிருந்து மீட்கவும் சாராயம் அருந்துவதால் ஏற்படும் கேடுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் பெரும் இயக்கம் ஒன்று தொடங்கப்படும்.

5.2.10. மாநிலத்தில் பல பகுதிகளில் பேரணிகள் மற்றும் மறுவாழ்வு வழிமுறையைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறுவதற்கான விழாக்கள் முதலியன நடைபெற இருக்கின்றன. மேலும் கிராம அளவிலான தெரு நாடகங்கள், கருத்தரங்குகள் முதலியவைகள் மூலம் கள்ளச்சாராயத் தீமைகளைப் பற்றி பிரச்சாரம் செய்யப்படும். கரும்புள்ளி கிராமங்களில்



2002 ஏப்ரல் 29]

மதுவிலக்கு விழிப்புணர்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவை கிராம அளவில் மதுவிலக்கு அமலாக்கத்தைத் தீவிரமாகக் கண்காணிக்கும். குடிப்பழக்கத்திலிருந்து மீண்டவர்கள் மற்றும் ஏனைய அரசு சாரா நிறுவனங்கள் பங்கேற்கும் போதை மீட்பு முகாம்கள் கரும்புள்ளி கிராமங்களில் நடத்தப்படும்.

5.2.11. இந்த அரசு எளிய மற்றும் சமுதாயத்தின் அடிமட்ட மக்களைப் பாதிக்கும் கள்ளச்சாராயத் தொல்லைகளை ஒழித்துக்கட்ட உறுதி பூண்டுள்ளது. எனவே இனிவரும் காலங்களில் மேற்குறிப்பிட்டுள்ளபடி தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

**6. முடிவுரை**

6.1. ஏழை மற்றும் சமுதாயத்தின் அடித்தள மக்களுக்கு ஈடு செய்யமுடியாத பாதிப்பை உண்டாக்கும் கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிப்பதே இந்த அரசின் உறுதியான கொள்கையாகும். அமலாக்கத்தை வலிமைப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுக்கும் அதே நேரத்தில், இந்த அரசு போலி மது மற்றும் கள்ளச்சாராயத்திற்கு எதிரான பிரச்சாரத்தையும் தளராது மேற்கொள்ளும்.


6.2. புதிய உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்திய பின்பும் வருவாயை அதிகரிப்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த அரசு தனது செயல்பாடுகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றது. போலி மது/தீர்வை செலுத்தப்படாத மது விற்பனைகள் மூலம் ஆயத்தீர்வை வருவாய் குறைவதைத் தடுக்க அவைகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்படும். மாநிலத்தின் ஆயத்தீர்வை நிர்வாகத்தை செம்மைப்படுத்தவும், அமலாக்க நடவடிக்கைகளை வலிமைப்படுத்தவும், அதன் மூலம் அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கைகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவும், அரசின் வருவாயைப் பெருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6.3. எனவே இந்த அரசு கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கும், ஆயத்தீர்வை வருவாயை அதிகரிப்பதற்கும் கள்ளச்சாராயத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறந்த தரமான மறுவாழ்வு அளிக்கும் முயற்சிகளை விரிவாக்குவதற்கும், விரைவுபடுத்துவதற்கும் உரிய வழிமுறைகள் அனைத்தையும் பின்பற்றி, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அயராது பாடுபடும்.

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு-1

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்**





* ஆ.ம.ஆ. ஆணையர், மதுவிலக்கு-ஆயத்தீர்வை
* த.மா.வா.க. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
* ம.அ.பி. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு



2002 ஏப்ரல் 29]

## இணைப்பு-2

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்**





* கூ.ஆ. கூடுதல் ஆணையர்
* இ.ஆ. இணை ஆணையர்
* நி.க.அ. நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
* து.ஆ. துணை ஆணையர்
* உ.ஆ. உதவி ஆணையர்
* இ.த.அ.ம. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்
* ப.ப. பறக்கும் படை
* உ.க.அ. உதவி கணக்கு அலுவலர்
* ஆ.மே. ஆயமேற்பார்வையாளர்

[2002 ஏப்ரல் 29

# இணைப்பு-3

## மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு வரைபடம்





- * கா.க. — காவல் கண்காணிப்பாளர்
- * ம.பு.பி. — மத்திய புலனாய்வுப் பிரிவு
- * மா.கா.க. — மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
- * கூ.கா.க. — கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
- * து.கா.க. — துணை காவல் கண்காணிப்பாளர்
- * ம.அ.பி.அ. — மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள்
- * கூ.து.ஆ. — கூடுதல் துணை ஆணையர்
- * உ.ஆ. — உதவி ஆணையர்



2002 ஏப்ரல் 29]

# இணைப்பு-4

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்




- • பொ.மே. (பொது) — பொது மேலாளர் (பொது)
- • பொ.மே(நிதி) மற்றும் நி.செ. — பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவன செயலர்

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு-5

இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்:-

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **கூட்டுறவுத் துறை** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், அலகு-1 | 15,000 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | **பொதுத் துறை** | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 19 | பொம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | **32,000** |



2002 ஏப்ரல் 29]

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **தனியார் துறை** | |
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், அலகு-1 | 12,600 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 18,000 |
| 26 | ஸ்ரீஅம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 22,500 |
| 27 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,600 |
| 28 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 14,500 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 32 | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 33 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் (டெக்கான்) | 14,700 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 35 | தரணி சுகர்ஸ், அலகு-2 | 10,000 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 25,000 |
| 37 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், குறும்பூர் | 5,000 |
| | **மொத்தம்** .. | **2,43,300** |
| | **ஒட்டு மொத்தம்** .. | **5,01,300** |

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு-6

### வடிசாலை - சாராவி உற்பத்தி

### (சாராவி ஆண்டு : டிசம்பர்-நவம்பர்)

| தொடர் எண். | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2000-2001 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்களில்) |
|---|---|---|---|---|
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| | திருவாளர்கள் | | | |
| 1. | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,722 | 1.13 |
| 2. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 1.31 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு-1 | 60,000 | 15,046 | — |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடம்புலியூர், அலகு-2. | 1,10,000 | 26,800 | 1.45 |
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,600 | 0.57 |
| 6. | இஐடி. பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 1.10 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 6,000 | 0.83 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.55 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,000 | 4,758 | 0.30 |
| 10. | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 18,600 | 2.33 |
| 11. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 33,300 | 0.82 |
| 12. | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,646 | 0.79 |
| 13. | கோலிக்ஸ் பீவரேஜஸ் நிறுவனம் | — | — | உற்பத்தி இல்லை |
| | **கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| 14. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.65 |
| 15. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.80 |
| | **மொத்தம்** | **8,68,110** | **2,26,829** | **12.63** |



2002 ஏப்ரல் 29]

[2002 ஏப்ரல் 29

## இணைப்பு-7

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்**

| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி அளவு | பீர் உற்பத்தி |
|---|---|---|
| | (கோடி பல்க் லிட்டர்களில்) | |
| 1991-92 | 4.42 | 3.36 |
| 1992-93 | 6.40 | 4.64 |
| 1993-94 | 7.03 | 3.86 |
| 1994-95 | 8.10 | 4.18 |
| 1995-96 | 8.13 | 5.79 |
| 1996-97 | 12.78 | 5.33 |
| 1997-98 | 10.90 | 5.25 |
| 1998-99 | 9.81 | 5.29 |
| 1999-2000 | 11.74 | 4.23 |
| 2000-2001 | 12.43 | 5.76 |
| 2001-2002 | 13.32 | 5.06 |



2002 ஏப்ரல் 29]

## இணைப்பு-8

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) பல்வேறு தலைப்புகளின்கீழ் செய்த விற்பனை அளவு, விற்று முதல் மற்றும் அரசுக்குச் செலுத்திய வருவாய் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

| ஆண்டு | விற்பனை: இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மதுவகை | விற்பனை: பீர் | இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் ஆகியவற்றின் விற்றுமுதல் | ஆயத் தீர்வை | விற்பனைக் கட்டணம் | கூடுதல் விற்பனைக் கட்டணம் | விற்பனை வரி | இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெட்டிகளின் எண்ணிக்கை கோடிகளில் | | (ரூபாய் கோடிகளில்) | | | | | |
| 1991-92 | 0.62 | 0.51 | 659.20 | 55.94 | 13.57 | 69.26 | 81.10 | 5.23 |
| 1992-93 | 0.86 | 0.65 | 905.23 | 55.10 | 18.44 | 92.73 | 129.38 | 5.00 |
| 1993-94 | 0.90 | 0.60 | 995.66 | 38.94 | 18.87 | 91.90 | 128.18 | 4.64 |
| 1994-95 | 0.93 | 0.68 | 1173.74 | 35.83 | 20.53 | 109.14 | 148.33 | 5.36 |
| 1995-96 | 1.15 | 0.95 | 1518.71 | 42.76 | 25.34 | 144.97 | 193.13 | 6.79 |
| 1996-97 | 1.39 | 1.00 | 1825.39 | 60.42 | 28.10 | 181.74 | 245.83 | 10.33 |
| 1997-98 | 1.30 | 1.02 | 1999.53 | 69.22 | 49.15 | 198.25 | 277.48 | 23.05 |
| 1998-99 | 1.40 | 1.09 | 2352.81 | 51.41 | 43.31 | 239.58 | 442.28 | 32.49 |
| 1999-2000 | 1.41 | 1.05 | 2520.02 | 62.83 | 43.79 | 240.87 | 531.54 | 35.77 |
| 2000-2001 | 1.49 | 1.12 | 2840.65 | 53.01 | 44.61 | 269.54 | 698.66 | 43.22 |
| 2001-2002 | 1.62 | 1.15 | 3017.10 | 55.93 | 47.13 | 272.23 | 779.94 | 54.12 |

# இணைப்பு-9

## ஆயத்தீர்வை வருவாய்

| தொடர் எண் | வருவாய்த் தலைப்பு | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 [illegible] | 2001-2002 [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (ரூபாய் கோடிகளில்) | | | | | | |
| 1 | நாட்டு சாராவி (சாராயம்) | 49.16 | 0.42 | 0.54 | 0.88 | 1.01 | 4.02 | 4.81 | 19.61 | 10.71 | 11.12 | 5.12 | |
| 2 | புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 0.17 | 0.15 | 0.17 | 0.20 | 0.14 | 0.39 | 4.04 | 15.48 | 9.19 | 11.12 | 8.99 | |
| 3 | மால்ட் வகை (பீர்) | 30.42 | 26.98 | 27.03 | 40.09 | 70.88 | 72.59 | 74.43 | 92.12 | 105.82 | 100.81 | 93.50 | |
| 4 | அயல்நாட்டு மது மற்றும் சாராவி | 392.47 | 520.44 | 510.8 | 490.06 | 807.51 | 940.31 | 1171.03 | 1509.70 | 1632.59 | 1675.75 | 1779.06 | |
| 5 | வணிக ரீதியான மற்றும் இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 0.17 | (-)1.00 | 0.07 | 0.11 | 2.36 | 0.26 | 2.01 | 4.69 | 4.61 | 3.73 | 2.00 | |
| 6 | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு | 2.98 | 3.21 | 3.99 | 4.60 | 5.81 | 5.32 | 6.03 | 6.91 | 5.95 | 3.72 | 4.28 | 105.25 |
| 7 | அபின், ஹெம்ப் ஏனைய மருந்துப் பொருட்கள் | 0.04 | 0.1 | 0.01 | 0.01 | 0.01 | 0.02 | 0.35 | (-)0.66 | 0.41 | 0.18 | 0.05 | |
| 8 | அபராதங்களும் பறிமுதல்களும் | 0.19 | 3.58 | 15.22 | 13.57 | 13.27 | 8.76 | 8.77 | 10.52 | 14.34 | 10.10 | 14.50 | |
| 9 | பணியும், பணிக் கட்டணங்களும் | 5.04 | 5.25 | 4.07 | 3.85 | 5.86 | 8.70 | 6.03 | 14.73 | 18.16 | 23.04 | 21.99 | |
| 10 | ஏனைய வரவினங்கள் | 2.48 | 5.73 | 6.92 | 61.37 | 27.81 | 22.70 | 22.35 | 36.72 | 29.92 | 29.11 | 23.48 | |
| | **மொத்தம் -** | **483.12** | **564.86** | **568.82** | **614.74** | **934.66** | **1063.07** | **1299.85** | **1709.82** | **1833.70** | **1868.68** | **1952.96** | **2058.21** |



# இணைப்பு-10

## ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வரி வருவாய் பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | விற்பனை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிகளில்) | | |
| 1 | 1991-92 | 483.12 | 188.23 | 671.35 |
| 2 | 1992-93 | 564.86 | 297.83 | 862.69 |
| 3 | 1993-94 | 568.82 | 318.33 | 887.15 |
| 4 | 1994-95 | 614.74 | 380.95 | 995.69 |
| 5 | 1995-96 | 934.66 | 491.27 | 1425.93 |
| 6 | 1996-97 | 1063.07 | 583.89 | 1646.96 |
| 7 | 1997-98 | 1299.85 | 669.81 | 1969.66 |
| 8 | 1998-99 | 1709.82 | 1009.49 | 2719.31 |
| 9 | 1999-2000 | 1833.74 | 1172.79 | 3006.53 |
| 10 | 2000-2001 | 1868.68 | 1504.88 | 3373.56 |
| 11 | 2001-2002 | 2058.21 | 1636.08 | 3694.29 |

[2002 ஏப்ரல் 29

# இணைப்பு VI

**(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**மானியக் கோரிக்கை எண் 34—
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003**

1. தலைமைச் செயலகத்தில், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. அனைத்து அரசுப் பணியாளர்களுக்குரிய பணி விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்கும் செயல்பாடு, சட்டபூர்வச் செயல்பாடு மற்றும் நிருவாகச் செயல்பாடு ஆகிய மூன்றுவித பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**அறிவுரை வழங்கும் செயல்பாடுகள்**

2. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி, தலைமைச் செயலக நிருவாகத் துறைகள் அனுப்பும் கீழ்க்கண்ட பணிகள் தொடர்பான கோப்புகளில் இத்துறை அறிவுரை வழங்குகிறது:-

(1) பதவி உயர்வுக்குரிய தேர்ந்த பெயர்ப் பட்டியல் தயாரித்தல்;

(2) பணி வரன்முறைப்படுத்துதல்;

(3) தகுதிகாண் பருவம் முடித்து உத்தரவிடுதல்;

(4) அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்தல் மற்றும் ஊதிய உயர்வு வழங்குதல்;

(5) சுயவிருப்ப ஓய்வு மற்றும் கட்டாய ஓய்வு வழங்குதல்;

(6) தற்காலிகப் பணிநீக்கக் காலத்தை வரன்முறைப்படுத்துதல்;

(7) பணி விலகுதல் மற்றும் பணி உரிமையைக் கைவிடுதல்;

(8) பணியில் முதுநிலை மாற்றி அமைத்தல்;

(9) அரசுப் பணியாளர்களை அயற்பணிக்கு அனுப்புதல்;

(10) அரசுப் பணிகளில் நியமனம் செய்வதற்குச் சமமான தகுதியை நிர்ணயம் செய்தல்;



2002 ஏப்ரல் 29]

(11) பணியாளர் மந்தணக் கோப்புகள் நடைமுறைப்படுத்துதல்;

(12) உயர் கல்வித் தகுதி பெற்றதற்கான ஊதிய உயர்வு வழங்குதல்; மற்றும் பணியாளர் தொடர்புடைய நிகழ்வுகள்.

**சட்டபூர்வமான செயல்பாடுகள்.**

3. கீழ்க்கண்ட விதிகள் இத்துறையினால் நிருவகிக்கப்படுகின்றன:

(1) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதிகள்;

(2) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நன்னடத்தை விதிகள், 1973;

(4) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;

(5) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல்;

(6) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்;

(7) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகள், 1954;

(8) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி விதிகள்;

(9) தமிழ்நாடு அடிப்படைப் பணி விதிகள்;

(10) தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்;

(11) தமிழ்நாடு பொதுப் பணிப் பிரிவுகள் XII & XIIA-க்கான விதிகள்;

(12) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிப் பிரிவு XXII-க்கான விதிகள்.

(13) தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.

4. முதலமைச்சரின் நிலையாணைகளை வெளியிடுதல் இத்துறையின் பொறுப்பாகும். இது தவிர, அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளிலும் நிறைவேற்றிட இத்துறை நடவடிக்கை மேற்கொள்கிறது.

**நிருவாகச் செயல்பாடுகள்**

[2002 ஏப்ரல் 29

5. "ஓரலகு" முறையின்கீழ் இயங்கும் அனைத்துத் தலைமைச் செயலகப் பணியாளர்கள் பணி குறித்து எழும் பிரச்சினைகளை இத்துறை கவனிக்கிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மற்றும் மாநில நிருவாகத் தீர்ப்பாயம் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசு அளவிலான நிருவாகத் துறையாகவும் செயல்பட்டு வருகின்றது.

6. அரசுப் பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் சங்கப் பிரதிநிதிகள் கொண்ட கூட்டுமன்றக் குழுவின் கூட்டத்தை நடத்துதல் ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

**நிருவாகச் சீர்திருத்தம்**

**7. கோப்புகள் முடிக்கும் வாரம்**

வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகத்தை அளிக்கும்பொருட்டு, பொதுமக்களிடமிருந்து / அரசு அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் மனுக்கள்மீது ஐந்து தினங்களுக்குள் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் பெறப்பட்ட மனுக்கள் 90 நாட்களுக்குள் கண்டிப்பாக முடிக்கப்படவேண்டும். மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மனுதாரருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் திங்கட்கிழமைதோறும் "மக்கள் குறைகேட்கும் நாள்" நடத்துவதைப்போல, "கோப்புகள் முடிக்கும் வாரம்" நடத்த வேண்டும்.

**8. மக்கள் சாசனம்**

அனைத்துத் துறைகளும் மக்கள் சாசனம் தயாரிக்குமாறும், அவற்றை சட்டமன்றப் பேரவையில் கொள்கைக் குறிப்போடு வைக்க வேண்டுமென்றும், கணினித் தளத்திலும் வைக்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது.

நிருவாகச் சீர்திருத்தம் குறித்து வரப்பெறும் கருத்துகளை, இத்துறை ஆய்வு செய்து அரசாணையிட மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.



2002 ஏப்ரல் 29]

**9. நிருவாகத்தில் சீர்திருத்தம் செய்வது குறித்து பரிந்துரைக்க குழு அமைக்கப்பட்டுள்ளது**

நிருவாக நடைமுறைகள் மற்றும் விதிகளில் அரசின் செயல்பாடுகளில் எல்லா நிலைகளிலும் திறமையை மேம்படுத்தவும் மற்றும் குடிமக்களுடன் தொடர்புகொள்ளும் வகையிலும், நிருவாக நடைமுறைகளையும் இதற்கான விதிகளைச் சீரமைப்பது பற்றியும் ஆராய, சிறப்பு நடவடிக்கையாக வளர்ச்சி ஆணையர் தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. துறைகளில் நடைமுறையில் உள்ள கோப்பு பரிசீலிக்கும் முறைகள் மற்றும் மனித வள மேம்பாடு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் அலுவலக நவீனமயமாக்கல் ஆகியவை பற்றியும் இக்குழு தீவிரமாகப் பரிசீலிக்கிறது. மேலும் கோப்புகள் தேக்கம் குறைப்பது, பதவி நிலைகளில் பல்வேறு அதிகாரப் பகிர்வு மற்றும் இவை சார்ந்த பொருட்கள் சம்பந்தமாகவும் இக்குழு வழிவகைகளைக் காண ஆராய்ந்து வருகிறது.

**10. கணினி பயன்படுத்துவதில் இத்துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

(1) அனைத்துப் பணி விதிகளையும் இதுநாள் வரை உள்ள திருத்தங்களுடன் முறைப்படுத்தவும், தேவைப்படும்போது குறிப்பிற்காகப் பார்க்கவும் மற்றும் உறுதி செய்யவும், அவற்றைக் கணினிமயமாக்கி ஒரு "பார்வை வங்கியாக" உருவாக்க (Reference Bank), "விதிகள் பெட்டகம்" (Rules Cell) ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் பணி தொடர்பான பல்வேறு சிறப்பு விதிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவ்விதிகளை கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது. நடப்பு ஆண்டிற்குள் இப்பணி முடிவடையும். இத்துறையில் நிர்வகிக்கப்படும் அனைத்து விதிகளும் திருத்தங்களுடன் கணினியில் சேர்க்கப்பட்டுள்ளன.

(2) இத்துறை சார்ந்த ஆண்டு வரவு-செலவு அறிக்கை, மறு மதிப்பீடு, இறுதியான திருத்திய ஒதுக்கீடு மற்றும் பகுதி-2 திட்டங்கள் நிதித் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

(3) கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தனிச் செயலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர் மற்றும் தட்டச்சர் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

(4) பணி விதிகள், திருத்தங்கள், அரசு ஆணைகள், சம்பளப் பட்டியல்கள். ஏ,பி,சி,டி ஆகிய பிரிவுகளின் பணியாளர்கள் எண்ணிக்கை, முதலமைச்சர் அவர்கள் மற்றும் அரசுச் செயலாளர்கள் அளவில் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்கள் ஆகிய விவரங்களைக் கணினிமயமாக்கி, அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(5) பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள். கடிதங்கள், பணி விதிகள் போன்றவை தலைமைச் செயலக "வலை" (Web) மற்றும் தமிழ்நாடு அரசின் 'இணைய தள'த்தில் பதிவு செய்யப்படுகிறது.

(6) சட்டமன்ற வினாக்களுக்குரிய விவரங்கள் முதலமைச்சர் அலுவலகக் கணினியுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

## 11. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை இணைய தளத்திலிருந்து தகவல் பெறும் முறை

(1) அறிவிக்கப்பட்ட (Reported) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை கணினியில் உட்செலுத்தி, அவற்றைப் பயன்படுத்துவோருக்கு ஏதுவாக இணையதளம் (Website) ஒன்றினை உச்ச நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் தொடங்கி உள்ளது. மேற்படி இணையதளத்தைப் பயன்படுத்த விரும்புவோர் உச்ச நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தபின் பயன்படுத்தலாம். மேற்படி வசதியைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளைப் பெறலாம். 1998 ஆம் ஆண்டு முதலான உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின் விவரங்களை மேற்படி இணையதளத்திலிருந்து பெறமுடியும்.

(2) 1950 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரையிலான இந்திய உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட தீர்ப்புகளின் திரட்டுகள் அடங்கிய சிடி-ரோம் (CD-ROM) இத்துறையால் பெறப்பட்டு இணைய தளத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசியத் தகவல் மையம் இதற்கு உதவியாக உள்ளது.

(3) இன்டர்நெட் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.





## 12. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்

(1) தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அத்தீர்ப்பாயத்தில் 30-6-2001 நாளைய நிலவரப்படி, 63,429 வழக்குகள் நிலுவையில் இருந்தன. இவ்வழக்குகளின் நிலுவை 31-3-2002 அன்று 59,481 ஆகும்.

(2) 1997 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, தீர்ப்பாயத்தின் ஆணைகள் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டதாகும். ஆகவே இப்பொருள் குறித்த வழக்குகளில் மூன்றடுக்கு நீதிமன்ற அமைப்பு ஏற்படும் (தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) நிலை உள்ளது. ஈரடுக்கு நீதிமன்ற அமைப்பே போதுமென்று முடிவெடுத்து, தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்து விடுவதற்கேதுவாக, 1985 ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று இவ்வரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக நிருவாகத் தீர்ப்பாயச் சட்டம், 1985, (மத்தியச் சட்டம் 13/85)-க்குத் திருத்தம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசும் தெரிவித்துள்ளது.

## 13. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்து நிருவாக ஆணை வெளியிடும் துறையாகவும் மற்றும் தேர்வாணையத்தின் நிருவாகத் துறையாகவும் இத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பின்வரும் நிகழ்வுகளுக்காகக் கலந்தாலோசிக்கப்படுகிறது:

(1) பல்வேறு பணி நியமனங்கள் குறித்து;

(2) அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்குரிய மேல்முறையீடு மற்றும் பணி நீக்கம், பணியறவு மற்றும் கட்டாய ஓய்வு போன்ற கடுந்தண்டனைகள் அளிக்கப்படுவது குறித்து;

(3) பல்வேறு சிறப்புப் பணி விதிகளை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்குரிய திருத்தங்கள் குறித்து;

(4) பணியாளர்கள் பதவி உயர்வு மற்றும் பிற நிகழ்வுகள்

மேலும் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை, விளக்கங்களுடன் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இத்துறையால் வைக்கப்படுகிறது.

## 14. மாநில விழிப்புப்பணி ஆணையம்

(1) மாநில விழிப்புப்பணி ஆணையம் 1965-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மாநில நிருவாகப் பிரச்சினைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குவது, அரசுப் பணியில் ஊழலைத் தடுப்பதற்கு வகை செய்தல் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட நபர்களின் மீதான ஊழல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவை விழிப்புப்பணி ஆணையத்தின் தலையாய பணிகளாகும்.

(2) அரசின் எந்த ஒரு நடவடிக்கையிலும் சந்தேகப்படும்படியான முறையிலோ மற்றும் தவறான அல்லது ஊழலுக்கு வழிவகுக்கும் விதத்திலோ ஈடுபட்டிருக்கும் அரசுப் பணியாளர்மீது, விசாரணை மேற்கொள்ள மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(3) மாநில அரசின் முறையான விசாரணை / புலனாய்வுத் துறையான 1964-ல் அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுக்கக் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம், மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் பணிகளில் உதவி புரிகின்ற முக்கியமான புலனாய்வு அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. காவல் துறைத் தலைவர் நிலையில் ஓர் இயக்குநரைக் கொண்டு செயல்பட்டுவரும் ஊழல் தடுப்பு மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநரகத்திற்கு, இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 165A-ன்கீழ் வரும் குற்றங்களான சதித் திட்டம் அல்லது குற்றம் புரியத் தூண்டுதல் போன்றவற்றை, 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழும், இந்திய குற்ற தண்டனைச் சட்டம் அத்தியாயம் IX-ன்படியும் அமல்படுத்தி தடுக்க அதிகாரம் உண்டு. மாநில அரசு ஊழியர்களின்மீதோ மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அல்லது மாநில அரசின் உதவி பெற்றுச் செயல்படும் பொது நிறுவனங்களின்மீதோ தொடுக்கப்படும் மாநில அரசு சம்பந்தப்பட்ட முக்கியமான வழக்குகளை விசாரணை செய்ய ஊழல் தடுப்பு மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநரகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்பு மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநரிடமிருந்து பெறப்படும் விசாரணை அறிக்கைகளை விழிப்புப்பணி ஆணையம் ஆய்வு செய்து, அவ்வறிக்கைகள்மீது



மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளையும், அதன் மூலம் தத்தம் துறைகளில் ஊழலைத் தடுக்கவும் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது.

(4) பொதுவாக விழிப்புப்பணி ஆணையத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் கமுக்கமானவை. இதுபோன்றே பொதுமக்கள் தொடர்பு இல்லாத ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்ககத்தின் பரிந்துரைகளின்மீது அரசின் இசைவோடு, பத்து ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றன.

## 15. தமிழ்நாட்டில் பயிற்சி

1. நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், திட்டங்களைச் செயல்படுத்தவும் பயிற்சி இன்றியமையாததாகும். அரசுப் பணியாளர்கள், நடைமுறையில் இருக்கும் விதிகளை அறிந்து, தொலைநோக்குப் பார்வையுடன் பணியாற்ற பயிற்சி மிகவும் அவசியமாகின்றது. இத்தகைய பயிற்சி ஓர் அரசுப் பணியாளரின் திறன் மற்றும் முடிவு எடுக்கும் திறனை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. இதனால் இவ்வரசு, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவதுடன், தலைமைச் செயலகத்தில் இதற்கென பயிற்சித் துறைச் செயலர் பதவி உருவாக்கப்பட்டு, அச்செயலரின் நேரடிப் பார்வையில் கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:

(1) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம், சென்னை

(2) அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை

(3) 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம், சென்னை

(4) குடிமுறை அரசுப் பணி பயிற்சி நிலையம், பவானிசாகர்

(5) அனைத்திந்திய குடிமுறை அரசுப் பணிகளுக்கான பயிற்சி மையம், அண்ணாநகர், சென்னை

2. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில், அலுவலக நடைமுறைக்கான அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அண்ணா மேலாண்மை நிலையத்திலும், பவானிசாகர் குடிமுறை அரசுப் பணி பயிற்சி நிலையத்திலும் முறையே 'அ', 'ஆ' மற்றும் 'இ', 'ஈ',

அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும், துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

3. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள், அகில இந்தியக் குடிமுறை அரசுப் பணிகளுக்கான தேர்வில் வெற்றிபெற பயிற்சியளிக்க, சென்னையிலுள்ள அண்ணா நகரில் பயிற்சி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இத்தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது.

4. தற்கால விஞ்ஞானத்தில், கணினியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் பெருகிவரும் நிலையில் கணினி குறித்த தொழில் நுட்பத்தை அரசுப் பணியாளர்களும் அறிந்துகொள்ளும் வகையில் கணினிப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

5. அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் பதவி, துறைத் தலைவராக உயர்த்தப்பட்டு, அவரது கட்டுப்பாட்டிற்குள் பவானிசாகர் குடிமுறை அரசுப் பணி பயிற்சி நிலையம், மற்றும் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம் ஆகியன கொண்டுவரப்பட்டு, அவை செவ்வனே செயல்பட்டு வருகின்றன. மேலும் பவானிசாகரில் நடைபெற்று வரும் அடிப்படைப் பயிற்சி வகுப்புகளின் தேக்க நிலையைச் சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்தந்தத் துறைகளே குறுகிய காலப் பயிற்சி நடத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**16. ஆய்வுத் துறை**

(1) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைச் செயலர் (பயிற்சி) அவர்களது தலைமையில் துணைச் செயலாளர் நிலையில் இரண்டு ஆய்வு அலுவலர்களும், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஓர் ஆய்வு அலுவலரும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில், துணை ஆட்சியர் நிலையில் பதினொன்று ஆய்வு அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

(2) ஆய்வுப் பிரிவினைப் பொறுத்தவரை, மாவட்டந்தோறும் குறுகிய காலப் பயிற்சி மற்றும் முன்னோடிப் பயிற்சிகள் நடத்தப்படுவதுடன் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விதிகள், வழக்கத்திலுள்ள விதிகளில் உள்ள விளக்கங்கள், விதிகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், விதிகளைக்



கையாளும் முறை, அலுவலக நடைமுறை ஆகியவற்றைத் தெளிவுபடுத்தி, நிர்வாகத்தினைச் சிறப்பான முறையில் செயலாக்க அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

(3) இவையன்றி, இரண்டாண்டுக்கொருமுறை தலைமைச் செயலகத் துறைகளை ஆய்வு செய்வதுடன், துறைத் தலைமை அலுவலகங்களும் ஆய்வு அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.

(4) மாவட்டத்தைப் பொறுத்தவரை, சென்னை மாவட்டம் நீங்கலாக ஒவ்வோர் ஆய்வு அலுவலருக்கும், இரண்டுக்கு மேற்பட்ட மாவட்டங்கள், மாவட்டத்தின் பரப்பளவு, மாவட்டத்தில் செயல்படும் அலுவலகங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வலுவலர்களின் ஆய்வுப் பணிகள் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள்மூலம், ஆய்வு-I பிரிவினால் மாதந்தோறும் கண்காணிக்கப்படுகின்றன. மாவட்டத்திலுள்ள ஆய்வு அலுவலர்கள் குறுகிய காலப் பயிற்சி மற்றும் முன்னோடிப் பயிற்சி ஆகியவற்றையும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்றனர்.

(5) தலைமைச் செயலகத்திலுள்ள ஆய்வு அலுவலர்கள் துறைத் தலைமை அலுவலகங்களை ஆய்வு செய்வதுடன், அவற்றின் இறுதி ஆய்வினை முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் ஆய்வு செய்து முடித்தவுடன், அக்கோப்பின்மீது தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(6) கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் 30 மாவட்டங்களில் 30 முன்னோடிப் பயிற்சிகளும் 30 குறுகிய காலப் பயிற்சிகளும நடத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கான செலவு மொத்தம் ரூ.1,08,89,000/- ஆகும்.

(7) கடந்த ஆண்டு, மாவட்டத்திலுள்ள ஆய்வுக் குழு அலுவலர்களால் 132 ஆண்டாய்வுகளும், 2,720 திடீர் ஆய்வுகளும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

**17. அமைப்பு மற்றும் செயல் முறைக் குழு**

(1) அமைப்பு மற்றும் செயல் முறைக் குழுவின் நோக்கமானது, அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்வது. பணி அளவீட்டின்படி தேவையான பணியாளர்களை (மனித சக்தி)

[2002 ஏப்ரல் 29

நிர்ணயம் செய்து சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்துவதாகும். மேலும் துறைகளின் வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவதும், தேவைக்கு அதிகமான பணியாளர்களை நீக்குவதும் இக்குழுவின் இலக்குகளாகும்.

(2) தற்பொழுது நடைமுறையில் உள்ள அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவில் இரண்டு நிர்வாகப் பிரிவுகளும், ஒரு பொறியியல் பிரிவும் உள்ளது. இக்குழுவில் ஆரம்ப காலத்தில் ஆறு பிரிவுகளும், அதில் ஒரு பிரிவு பொறியியல் பிரிவாகவும் இருந்தது. ஒவ்வொரு நிர்வாகக் குழுவும், ஒரு சார்புச் செயலர் இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள் மற்றும் ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சரையும் கொண்டது. துணைச் செயலர் ஒருவர் அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவில் உள்ள அனைத்துப் பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு நிர்வாகப் பிரிவுக்குத் தலைவராகவும் இருந்து செயல்படுகிறார். பொறியியல் குழுவானது செயற் பொறியாளர் நிலையில் உள்ள ஒருவரை அமைப்பு மற்றும் செயல்முறை வல்லுநராகவும், இரண்டு உதவி செயற் பொறியாளர்கள், ஒரு முதுநிலை வரைவாளர் மற்றும் ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சரையும் உள்ளடக்கியது. அதனுடன்கூட மேற்பார்வைப் பிரிவு ஒன்று, ஓர் ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஓர் உதவிப் பிரிவு அலுவலரையும் கொண்டு இக்குழுவின் அறிக்கையின்மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதைக் கண்காணிப்பதோடு, இப்பிரிவுகளுக்குத் தேவையான அலுவலக நடைமுறைப் பணிகளையும் செய்து வருகிறது. அமைப்பு மற்றும் செயல் முறைக் குழுவானது, செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை (பயிற்சி) அவர்களின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது.

(3) ஒவ்வோர் ஆண்டும், மேற்பார்வைக் குழுவிலிருந்து அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும், தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் அவர்களது துறைகளில் நிர்வாகச் சிக்கல் இருந்து, அவற்றிற்கு, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்று கேட்கப்படுகிறது. கோரிக்கையின் அடிப்படையில் ஒரு செயல் திட்டம் தயாரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஆராய



2002 ஏப்ரல் 29]

பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு குழுவும் தனக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருள் குறித்து தீர ஆராய்வு மேற்கொள்கிறது.

(4) அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்வுகள் இரண்டு வகைப்படும்.

(அ) பல நிலைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அவர்கள் செய்கின்ற பணியை அளக்க பணி அளவீடு தயார் செய்து, அதன்படி துறைக்குத் தேவையான பணியாளர்களை (மனித சக்திகளை) நிர்ணயம் செய்வது; மற்றும்

(ஆ) அலுவலகச் செயல்முறைகள் மற்றும் நிர்வாக அமைப்பு வழியாக அலுவலக வேலையைச் செய்து முடிக்கும் திறன் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது.

(5) அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் நிர்வாகக் குழுக்கள் இதுவரை 222 ஆராய்வு அறிக்கைகள் தயார்செய்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அனுப்பியுள்ளன. பொறியியல் பிரிவு தயார் செய்த 85 ஆராய்வு அறிக்கைகள், அதில் குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பத் துறைகளுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அனுப்பியுள்ளது.

(6) அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவிற்கு என தனியானதொரு நிதி ஒதுக்கீடு உள்ளது. அந்தக் குழுவிற்கான 2001-2002 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு முறையே ரூ.41,45,000/- மற்றும் ரூ.41,11,000/- ஆகும், 2000-2001 ஆம் ஆண்டின் செலவினம் ரூ.34,66,000/- ஆகும். 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.41,39,000/- ஆகும்.

**18. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்**

**அந்தந்தத் தலைப்புகளுக்கான 2000-2001 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள், 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை, 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கல் தொகை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:**

[2002 ஏப்ரல் 29

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | 2000-2001 கணக்குகள் | 2001-2002 திருத்தி மதிப்பீடு | 2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 1. | 2052 | பணியாளர்- நிருவாகச் சீர்திருத்தத் துறை | 43098 | 46402 | 48841 |
| 2. | 2052 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் நாடகப் போட்டி தொடர்பான செலவு | 95 | 0 | 0 |
| 3. | 2070 | நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் ஊழல் தடுப்புக்கான உயர் மட்டக் குழு | 0 | 103 | 0 |
| 4. | 2070 | புதுடில்லி இந்தியப் பொது நிருவாக நிறுவனத்திற்கு மானியங்கள் | 5 | 300 | 100 |
| 5. | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு உதவி | -2 | 5 | 5 |
| 6. | 2075 | பணியாளர்களை அமர்த்திக் கொள்ளும் செலவிற்காகத் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 2 | 2 |
| 7. | 2075 | மனமகிழ் பணிகளுக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 2 | 2 |
| 8. | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்- அடிப்படைப் பணியாளர் சங்கத்திற்கு நிதியுதவி | 3 | 2 | 2 |
| 9. | 2075 | தமிழ்நாடு அரசுத் துறை ஓட்டுநர் சங்கத்திற்கு நிதியுதவி | 1 | 2 | 2 |
| 10. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்கள் சங்கத்திற்கு நிதியுதவி | 0 | 2 | 2 |
| 11. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கத்திற்கு நிதியுதவி- பணியாளர்களைப் பணி அமர்த்த மானியங்கள் | 0 | 1 | 1 |



2002 ஏப்ரல் 29]

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | 2000-2001 கணக்குகள் | 2001-2002 திருத்தி மதிப்பீடு | 2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 12. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சென்னை | 3458 | 3906 | 2791 |
| 13. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், கோயம்புத்தூர் | 1859 | 1701 | 1909 |
| 14. | 2070 | பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனம் | 8271 | 6710 | 8697 |
| 15. | 2070 | விழிப்புப் பணி- இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் | 98183 | 932152 | 100607 |
| 16 | 2051 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சாட்டியது | 123225 | 121811 | 140002 |
| 17. | 2070 | மாநில விழிப்புப் பணிக் குழு | 3928 | 3693 | 3816 |
| 18. | 2070 | தமிழ்நாடு மாநில நிருவாகத் தீர்ப்பாயம் | 10198 | 12312 | 12158 |
| 19. | 2014 | தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் | 2846 | 2756 | 3218 |
| 20. | 2052 | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம் | 5402 | 6906 | 6114 |
| 21. | 2070 | குடிமைப் பணி பயிற்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படைப் பயிற்சி அளித்தல் | 99 | 1549 | 1614 |
| 22. | 2070 | அண்ணா மேலாண்மை நிறுவனத்தின்கீழ் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் | 0 | 500 | 0 |
| 23. | 2052 | நிறுவன அமைப்புச் செயல்முறைப் பிரிவு | 3466 | 4111 | 4139 |
| 24. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை ஆணையர், மதுரை | 1438 | 1188 | 1342 |
| 25. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருநெல்வேலி | 1192 | 1483 | 1399 |

[2002 ஏப்ரல் 29

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | 2000-2001 கணக்குகள் | 2001-2002 திருத்தி மதிப்பீடு | 2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 26. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், நாகர்கோவில் | 1335 | 1232 | 1226 |
| 27. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சேலம் | 1332 | 1191 | 1487 |
| 28. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், வேலூர் | 1430 | 1235 | 1276 |
| 29. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருச்சிராப்பள்ளி | 1199 | 1050 | 1112 |
| 30. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், தஞ்சாவூர் | 1130 | 784 | 829 |
| 31. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், இராமநாதபுரம். | 1512 | 1169 | 1407 |
| 32. | 2053 | மாவட்டங்களில் ஆய்வுக் குழுக்கள் | 9952 | 10889 | 11303 |
| 33. | 2225 | அனைத்திந்திய பணிகள் தேர்விற்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிப்பதற்குரிய தேர்வு பயிற்சி மையம் | 2180 | 2714 | 2800 |
| | | மொத்தம் | 326837 | 321753 | 352089 |

19. சமூக நீதியை உயர்த்துவதிலும், சமுதாய, பொருளாதாரத் துறைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதிலும், தொழில்களை வளர்த்தும் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி வளமான மாநிலமாக உருவாக்குவதிலும், அரசு மிகுந்த நாட்டம் செலுத்தி வருகின்றது. அரசு, சட்டம் மற்றும் ஒழுங்கைக் காத்து, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அனைத்துத் தரப்பு வளர்ச்சிக்கும், தகுந்த சூழ்நிலையை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.



2002 ஏப்ரல் 29]

# இணைப்பு VII

**(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**மானியக் கோரிக்கை எண் 23 - உள் துறை - சிறைச்சாலைகள்**
**கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

## முன்னுரை

குற்றவியல் நீதி நிருவாக முறையில், சிறை நிருவாகம் மிக முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. சிறைவாசிகளை நடத்தும் முறையில் நியாயமான மனிதாபிமான அணுகுமுறை வேண்டியதன் அவசியத்தை அரசு நன்கு அறிந்துள்ளது. தற்போதைய சிறைவாசிகளின் நலன் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கான திட்டங்களின் தேவைக்கேற்ப சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. தனிமனிதத் தேவைகள், சமூகக் கடப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற சிறைவாசிகளுக்கு உதவி செய்யும்பொருட்டு வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் கல்வி வகுப்புகளும், யோகாசனம் மற்றும் தியான வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

2. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், அடிப்படை வசதிகள், பாதுகாப்புத் தேவைகள், சிறைவாசிகளின் வாழ் நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் அரசு கணிசமான அளவிற்கு முதலீடு செய்துள்ளது.

## II. நிறுவன அமைப்பு முறை

3. சிறைத் துறையின் நிருவாக அமைப்பு முறை பற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. சிறை நிருவாகத்தின்கீழ் மொத்தம் 134 சிறைகள் உள்ளன. இவற்றில், 9 மத்தியச் சிறைகள், 114 கிளைச் சிறைகள், 6 தனிக் கிளைச் சிறைகள், 2 மகளிர் தனிச் சிறைகள், 1 திறந்தவெளிச் சிறை, சேலம் மத்திய சிறையுடன் இணைந்த 1 பண்ணைச் சிறை, 1 இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவை அடங்கும். இத்துறை இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த ஒரு முதுநிலை அலுவலரான சிறைத் துறைத் தலைவரால் நிருவகிக்கப்படுகிறது. இவருக்கு உதவியாக, தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும், சென்னை,

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் நான்கு சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் பணியாற்றுகின்றனர். மத்தியச் சிறைகளும் அவற்றின் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகளும் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுபபாட்டின்கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4,408 ஆகும். அனைத்துச் சிறைகளிலும் அனுமதிக்கப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 18,292 ஆகும்.

**மத்தியச் சிறை, புழல்**

4. புழலிலுள்ள மத்தியச் சிறை, முதற்கட்டமாக 200 சிறைவாசிகளுடன் செயல்பட்டு வருகிறது. பாதுகாப்பு மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட சில கூடுதல் பணிகள் முடிக்கப்பட்டவுடன் இது அனைத்து வசதிகளுடன் கூடிய சிறையாக விரைவில் செயல்படும்.

**மகளிருக்கான தனிச் சிறை**

5. தென் மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களைச் சேர்ந்த பெண் சிறைவாசிகளை மட்டும் அடைத்து வைப்பதற்காக முறையே திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் மகளிருக்கான இரு தனிச் சிறைகள் அமைந்துள்ளன. இவ்விரு சிறைகளும் முற்றிலும் பெண் பணியாளர்களைக் கொண்டே நிருவகிக்கப்படுகின்றன.

**தனிக் கிளைச் சிறை, பூவிருந்தவல்லி**

6. கோயம்புத்தூர் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு தவிர ஏனைய பல்வேறு குண்டு வெடிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காக, சிறப்பு நீதிமன்றம் ஒன்று, பூவிருந்தவல்லி தனிக் கிளைச் சிறை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இந்தத் தனிச் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

**திறந்தவெளிச் சிறை**

7. 100 சிறைவாசிகளை அடைத்து வைக்கும் இடவசதியுள்ள திறந்த வெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள



சிங்காநல்லூரில் செயல்பட்டு வருகிறது. இச்சிறையில், வேளாண்மை அதிகாரி ஒருவரின் உதவியுடன் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை**

8. இப்பள்ளியில் 16-21 வயதுத் தொகுதியைச் சேர்ந்த வளரிளம்பருவ இளங் குற்றவாளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இங்குள்ளவர்கள், விடுதலை பெற்றுச் சென்ற பின்னர், அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நன்னடத்தைப் பிரிவு**

9. நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்குக்கீழ் வட்டார நன்னடத்தை அலுவலர்களும், நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகளின் நடத்தை, அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் பற்றி விசாரிக்கின்றனர். விடுவிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்க, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதியுதவி பெறுவதற்கும் நன்னடத்தை அலுவலர்கள் ஏற்பாடு செய்கின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள் 2001 ஆம் ஆண்டில், ஆற்றிய பணிகளின் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்னடத்தை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | தொடக்க விசாரணை 4,390 | பல்வகை 8,713 |
| 2. | பார்வையிடப்பட்டவர்களின் எண்ணிக்கை | நன்னடத்தையாளர்கள் 38,541 | மற்றவர்கள் 3,964 |
| 3. | விடுதலைக்குப் பிந்தைய பராமரிப்பு குறித்து அளிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 31,746 | மற்றவை 3,034 |
| 4. | நீதிமன்றங்களில் ஆஜரானவர்களின் எண்ணிக்கை | — | 779 |

மேலும் 2001 ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் மூலமாக ரூ.1,86,500/- வரையில் நிதியுதவிக்கு ஏற்பாடு செய்து, மொத்தம் 33 சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

**நன்னடத்தை அலுவலர் பதவி நியமனத்திற்கான விகிதாச்சாரத்தை நிர்ணயித்தல்**

10. நன்னடத்தைப் பிரிவினை வலுப்படுத்தும் நோக்கிலான நடவடிக்கையாக, நன்னடத்தை அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் மற்றும் பணியிட மாற்றம் மூலம் நியமனம் ஆகியவற்றிற்கிடையிலான விகிதாச்சாரத்தை 1:2 என்று நிர்ணயம் செய்து, பணிவிதிகளைத் திருத்தி அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் இப்பிரிவில் தற்போதுள்ள காலியிடங்களைத் திறமையானவர்களைக் கொண்டு நிரப்பமுடியும்.

**III. சிறை நிருவாகத்தை நிலை உயர்த்துதல், மத்தியச் சிறைகளில் அதிக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வகைசெய்தல் மற்றும் புதிய திட்டங்கள்**

11. சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் உயர் அலை தகவல் தொடர்புச் சாதனங்கள், சிறைவாசிகளைக் கண்காணிக்க வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions), மின்கம்பி வேலி அமைத்தல், மின்விளக்கு வசதிகள், வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், வாக்கி-டாக்கிகள், (walkie Talkies), நவீன ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்குதல், பதிவு செய்யும் வசதிகள் செய்துகொடுத்தல் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று மத்தியச் சிறைகளில் உயர் பாதுகாப்பு வசதி கொண்ட அறைகள் கட்டப்பட்டுள்ளன. சிறைகளின் பாதுகாப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக சிறைப்பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சிறையிலும் தண்ணீர் வழங்குதல், சுகாதார வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவும், கணினி பயிற்சி மையம் ஏற்படுத்துவதற்காகவும், ரூ.800 இலட்சம் அளவிற்கான



திட்டப்பணிகளை 2000-2004 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்த பதினோராவது நிதி ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

**IV. மனிதவள மேம்பாடு**

*சிறைக்காவலர்கள் பயிற்சி மையம், வேலூர்*

12. இந்தப் பயிற்சி மையத்தில் இரண்டாம் நிலை சிறைக்காவலர்களுக்கு ஆறு மாத கால அளவிற்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, நிருவாகம் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த பயிற்சிக்குக் கணிசமான அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதங்களைக் கையாளும் முறை குறித்தும் கற்றுத் தரப்படுகிறது. இவற்றைத் தவிர, தலைமை சிறைக்காவலர்கள் மற்றும் முதல்நிலை சிறைக்காவலர்களுக்கு அவ்வப்போது நினைவுகூர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்**

13. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறை அதிகாரிகளுக்கு குற்றங்களைத் தடுத்தல், குற்றவாளிகளை நடத்தும் விதம் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கிறது. இந்தப் பயிற்சியின் பாடத்திட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் சீர்திருத்த முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் செலவினத்தை நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**செயல் ஊக்கமளித்தல்-பதக்கங்கள்**

14. தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப்பணிப் பதக்கம் ஒவ்வோராண்டும் செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் சிறைத் துறையைச் சேர்ந்த 10 சிறைப்பணியாளர்களுக்கு அவர்களின் மெச்சத் தகுந்த பணிக்காக வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கத்துடன் வழங்கப்படும் ஒரு மொத்த மானியம் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் அவற்றிற்குச் சமமான பதவி நிலையில் உள்ளவர்கள் (மொத்தம் 5 பதக்கங்கள்) | தலா ரூ.2,000/- |

[2002 ஏப்ரல் 29

| | | |
|---|---|---|
| 2. | உதவி சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர் மற்றும் அவற்றிற்குச் சமமான பதவி நிலையில் உள்ளவர்கள் (மொத்தம் 3 பதக்கங்கள்) | தலா ரூ.3,000/- |
| 3. | தமிழ்நாடு சிறைப்பணியில் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான பதவி நிலையில் உள்ள அதிகாரிகள் (1 பதக்கம்) | ரூ.5,000/- |
| 4. | வீரதீரச் செயல்களுக்காக (எந்தப் பதவி நிலையில் இருந்தாலும்) (1 பதக்கம்) | மாதாந்திரப் பணப்படி ரூ.100/- |

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் ஒவ்வோராண்டும் பொங்கல் திருநாளன்று தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிறைக்காவலர்களுக்கு அவர்களின் பணி / கடமை உணர்வு மற்றும் தியாக உணர்வுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெற்ற முதல் நிலை சிறைக் காவலர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.50/- என்ற வீதத்திலும், இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.40/- என்ற வீதத்திலும் படி வழங்கப்படுகிறது.

மைய அரசு, சீர்திருத்தப் பணிகளில் உள்ள பணியாளர்களுக்கு, அவர்கள் ஆற்றிய சிறப்புமிக்க சேவையை அறிந்து பாராட்டும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது:

(i) நற்பணிப் பதக்கங்கள்

(அ) மெச்சத்தகுந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப்பதக்கம்

(ஆ) பாராட்டத்தகுந்த சேவைக்கான சீர்திருத்தப் பணிப்பதக்கம்

(ii) வீரதீரப் பதக்கங்கள்-நன்னடத்தைப் பிரிவு

(அ) வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப்பதக்கம்

(ஆ) வீரதீரச் செயல்களுக்கான சீர்திருத்தப் பணிப்பதக்கம்

இந்தப் பதக்கங்கள் ஆண்டொன்றுக்கு இருமுறை, அதாவது, குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின நிகழ்ச்சிகளின்போது வழங்கப்படுகின்றன.



2002 ஏப்ரல் 29]

வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம் பெறுபவர்களுக்கு மாதாந்திரப்படி ரூ.100/-ம், வீரதீரச் செயல்களுக்கான சீர்திருத்தப் பணிப்பதக்கம் பெறுவோருக்கு மாதாந்திரப்படி ரூ.60/-ம் அனைத்து நிலைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**கருணைத் தொகை வழங்கல்**

15. பணியில் இருக்கும்பொழுது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக ஏலாமை உற்றவர்கள் மற்றும் செயல் திறனற்ற சிறைத் துறைப் பணியாளர்கள் ஆகியோருக்கும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம், அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சென்னை, மத்தியச் சிறை இரண்டாம் நிலை சிறைக்காவலர் திரு. தேவரத்தினத்திற்கு அவருடைய மருத்துவச் சிகிச்சைக்காக 2001-ஆம் ஆண்டில் கருணைத் தொகையாக ரூ.39,000/- அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை, மத்தியச் சிறையில் 17-11-1999 அன்று நடைபெற்ற கலகத்தின்போது காயமுற்ற சென்னை, மத்தியச் சிறையிலுள்ள 37 நிருவாகப் பணியாளர்களுக்கு ரூ.2,25,000/- வழங்கப்பட்டுள்ளது.

16. புழல், மத்தியச் சிறையில் பணியாற்றும் சிறைப் பணியாளர்களுக்காக 100 குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. மத்தியச் சிறைகளில் இரவு நேரப் பணியில் இருக்கும் காவலர்களுக்கு இரவு நேர உணவு மற்றும் காலை தேநீர் வழங்கப்படுகிறது.

**V. சிறைவாசிகளின் நலத் திட்டங்கள்**

17. நல்ல சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட சிறந்த உணவு, நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளின்படி சிறைவாசிகளுக்கு அளிக்கப்படுகிறது. தகுதியான நேர்வில் மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் நல்ல சத்தான உணவு அளிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு பால், ரொட்டி, முட்டை ஆகியவை

வழங்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட அளவின்படி உடைகளும் படுக்கை வசதியும் அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன. சுகாதார முகாம்கள் முறையாக நடத்தப்படுகின்றன. பற்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட சிறைவாசிகள் தனிப்பட்ட சிகிச்சை அளிப்பதன் மூலம் கவனித்துக் கொள்ளப்படுகின்றனர். மன நோய் மருத்துவரின் ஆலோசனையின் பேரில், மனநலங் குன்றிய சிறைவாசிகள், சென்னை, அரசு மன நல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் போதிய அளவுக்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளிடையே காசநோயை ஒழிப்பதற்காக குறுகிய கால நேரடி கவனிப்பு சிகிச்சை முறை (Directly Observed Treatment Shortcourse) முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் நோயாளர் அவசர ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. சிறிய மருத்துவச் சோதனைகளை நடத்துவதற்காக இதயத் துடிப்பை அறிய உதவும் சாதனங்கள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ்-கதிர் படமெடுக்கும் சாதனங்களுடன்கூடிய மருத்துவ ஆய்வுக் கூடங்கள் சிறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறை வளாகத்தைத் தூய்மையாகவும், துப்புரவாகவும் வைத்திருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

18. சிறைவாசிகளும் மனிதர்களே. ரூ.47.20 இலட்சம் செலவில் அவர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற பருத்தியிலான சட்டை மற்றும் அரைக்கால் சட்டைக்குப் பதிலாக டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை வழங்கவும் அவர்களுக்கு வழங்கப்படும் படுக்கை விரிப்பின் அளவினை அதிகரிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

19. சிறைவாசிகளுக்கு நேர்காணல் வசதிகள் உள்ளன. செய்தித் தாள்களும் குறித்த கால வெளியீடுகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. கல்வி மற்றும் இலக்கியத் தரம் வாய்ந்த நூல்கள் சிறைவாசிகளின் பயனுக்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கைப்பந்து, கபடி, வளைப்பந்து (Tennicoit) ஆகிய விளையாட்டுகளை விளையாட சிறைவாசிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சிறையின் உள்ளே தொலைக்காட்சிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

20. சிறைவாசிகளுக்குக் கல்வி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கல்வி மற்றும் பயிற்சிக்கான பொருட்கள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட



தொடக்கப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி கற்பிப்பதற்காக படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு கற்பிக்கும் அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. சில சிறைவாசிகள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் நடத்தும் முதுகலைப்பட்டப் படிப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை அஞ்சல் வழிக் கல்வி மூலம் கற்று வருகின்றனர். அவர்களின் கல்விக்கான செலவினை அரசே ஏற்றுக் கொள்கிறது. இந்திரா காந்தி திறந்த வெளிப்பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாட வகுப்புகளைத் தொடங்கியுள்ளது:-

1. உணவு மற்றும் ஊட்டச் சத்து சான்றிதழ் படிப்பு
2. இளங்கலை ஆயத்த பயிற்சி
3. கணினி பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு
4. கணினி பயன்பாடு குறித்த முதுகலை படிப்பு

நடப்பாண்டில், மொத்தம் 101 சிறைவாசிகள், மேற்காணும் பல்கலைக் கழகத்தில் பல்வேறு படிப்புகள் பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதற்குரிய செலவுத் தொகை ரூ.98,250/-ஐ அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

21. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மத்தியச் சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கென்றே பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற் படிப்பிற்கான கல்வியை அளித்து வருகிறது. நாட்டில் முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் பாடவகுப்புகள், திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களின்படி இருக்கும். இத்திட்டத்தின்கீழ் பல்வேறு சிறைகளிலிருந்தும் 231 சிறைவாசிகள் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் சேர்ந்துள்ள சிறைவாசிகளின் கல்விக்காக அரசு ரூ.4.05 இலட்சம் செலவு செய்துள்ளது.

22. தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு வெளிப்படையான ஒப்பந்த நடைமுறைச் சட்டத்தின்படி, பகிரங்க ஒப்பந்த முறையின் மூலம், உணவுப் பொருட்களை வாங்குவதற்கு புதிய ஏற்பாட்டு முறையை அரசு பின்பற்றியுள்ளது.

### சிறைச்சாலைத் தொழில்கள்

23. சிறைகளில் சிறைவாசிகளுக்கு வேலை கலாச்சாரம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு வாழ்க்கைத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. கருமான் தொழில், செங்கல் தயாரிப்புத் தொழில், குழாய் இணைப்புப் பணி, மின் கம்பி இணைப்புப் பணி, நெசவுத் தொழில், புத்தகம் கட்டுதல், தையல் வேலை, சாயம் தோய்த்தல், கூர்நாடா தயாரித்தல், மெழுகு, ஷூக்கள், பினைல், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. எளிய தொழில்களான குழாய்ப்பணி, சாதாரண மின் கம்பி இணைப்புப் பணி, செங்கல் தயாரித்தல், வர்ணம் பூசுதல் ஆகியவற்றில் சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி முடிவடைவதன் பேரில் மாநில வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினால் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

முந்தைய ஆண்டில் ரூ.3.78 கோடி மதிப்புள்ள சிறைத் தயாரிப்புப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இதன் மூலம், 589 சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பும் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறை மேற்கொண்டுள்ள பல்வேறு உற்பத்திப் பெருக்க நடவடிக்கைகளினால் நடப்பாண்டில் உற்பத்தி மேலும் அதிகரிக்கக்கூடும்.

24. சிறைத் துறை, 'பணித் துறையாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறை, பொருட்களைச் சிறையில் தயாரித்து அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற் பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

25. அனைத்து மத்தியச் சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

26. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு, சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இந்தப் புகார் பெட்டிகளைத் திறந்து, புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்.



27. சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்தியச் சிறைகள் ஒவ்வொன்றிலும் மற்றும் வேலூர் மகளிர் சிறையிலும் இலவச சட்ட உதவித் தனிப் பிரிவைத் தொடங்கியுள்ளது. சிறைவாசிகள் தங்களுடைய தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யவும் ஜாமீன் கோரவும் அல்லது வழக்குகளை நடத்தவும் இந்த இலவச சட்ட உதவிப் பிரிவினை அணுகலாம்.

### பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளித்தல்

28. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, மனித நேயம் மற்றும் கருணையின் அடிப்படையில், 60 ஆயுட் கைதிகளின் தண்டனைக் கால அளவு குறைக்கப்பட்டு, அவர்களுக்கு 15-9-2001 அன்று விடுதலை அளிக்கப்பட்டது.

### அலுவல் மற்றும் அலுவல்சாரா சிறைப்பார்வையாளர்கள்

29. நல்ல நிருவாகம் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும் சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றனரா என்பதையும் உறுதி செய்து கொள்வதற்காக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்கள் சிறைகளைப் பார்வையிடுகின்றனர்.

பொதுமக்களில், முக்கியமாக, சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் அலுவல் சாராப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிறைகளை ஒழுங்காக நிருவகிப்பதில் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துவது குறித்து அறிவதற்காக இவர்கள் சிறைவாசிகளைச் சந்திக்கின்றனர். இந்த அலுவல் சாரா சிறைப்பார்வையாளர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

### யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள்

30. சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்தினை மேம்படுத்துவதற்காக யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள்

நடத்தப்படுகின்றன. போதைப்பொருள் அடிமைப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்காக மருத்துவம் சாராத பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளை சிறைவாசிகள் சிறப்புற வரவேற்கின்றனர். மக்கள் தொடர்பு சாதனங்கள் இதனைப் பெரிதும் பாராட்டுகின்றன. இவற்றின் பலன்கள் ஊக்கம் அளிப்பவையாக உள்ளன.

கடந்த ஆண்டில் 2,477 சிறைவாசிகள் யோகாசனம் மற்றும் தியான வகுப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர். சிறைப்பணியாளர்களும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர்.

**தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்**

31. விடுதலையாகும் சிறைவாசிகள் புதுவாழ்வைத் தொடங்க உதவுவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சிறுதொழில்கள் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் இச்சங்கம் உதவி அளிக்கிறது. இச்சங்கம் சட்ட உதவி அளிப்பதுடன் தேவைப்படுபவர்கள் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கும், ஆடைகள், மூக்குக் கண்ணாடிகள் முதலியவற்றைப் பெறுவதற்கும் உதவுகிறது.

**விடுதலை பெற்ற ஆயுட்கால சிறைவாசிகளுக்கு நிதியுதவி**

32. ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் நீண்ட காலச் சிறைவாசிகள் விடுதலை அடையும்போது அவர்களுக்கு, இயந்திரங்கள் மற்றும் கால்நடைகள் வாங்குவதற்காக வழங்கப்படும் நிதி உதவித் தொகை ஆண்டொன்றிற்கு ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான ஆணை, உள் (சிறை.3) துறையின் 11-4-1994 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் (2டி) 49-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மனித உரிமைகள்**

33. சிறைவாசம் நன்கு அமைய அனைத்துச் சிறைகளிலும் அடிப்படை வசதிகளும், அவசியமாகத் தேவைப்படும் பொருள்களும் வழங்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடையே அதிக விழிப்புணர்வை உருவாக்க திட்டமிட்ட ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதுதில்லி, தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம் / காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்



மனித உரிமைகள் குறித்த பயிற்சி வகுப்புகளுக்கு சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகைதந்து சிறைகளின் நிருவாகத்தைப் பாராட்டியுள்ளனர்.

**சிறை நீதிமன்றங்கள்**

34. சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள் தங்களின் குற்றத்திற்காக மன்னிப்புக் கோரும் நிலையில் அந்த வழக்குகளைத் துரிதப்படுத்தவும் விசாரணை சிறைவாசிகளின் விசாரணை காலத்தினை நீட்டிப்பு செய்வதற்காக சிறைவாசிகளை பல்வேறு நீதிமன்றங்களுக்குக் கொண்டுசெல்லும்போது ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டும் சிறைவாசிகள், சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவர்களை, எளிதில் அணுகி, தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டும் இந்தியாவிலேயே முதன்முதலாக சிறை நீதிமன்றங்கள் சென்னை, வேலூர், திருச்சி, மதுரை ஆகிய மத்தியச் சிறைகளிலும், வேலூர் மகளிர் தனிச் சிறையிலும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த நீதிமன்றங்கள், காலப்போக்கில் எஞ்சியுள்ள சிறைகளுக்கும் நீட்டிக்கப்பட உள்ளன.

**VI. தகவல் தொழில்நுட்பவியல்**

35. அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் "சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை" குறித்து மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையம், சிறைகளின் பதிவேடுகளைக் கணினிமயமாக்கும் முறை குறித்த பிற மென்பொருளையும் தயாரித்து வருகிறது. தேசிய தகவல் மையத்தினரால் தயாரிக்கப்பட்ட முதல் கட்ட மென்பொருளைக்கொண்டு, தகவல் தொகுப்பு விவரங்கள் (Data base) பராமரிக்கப்படுகின்றன. இத்துறையைச் சார்ந்த 156 பணியாளர்களுக்கு கணினியினை இயக்கும் முறை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சிறைத் துறையை கணினிமயமாக்கும் நடவடிக்கையை விரிவுபடுத்துவது மட்டுமின்றி, சிறைவாசிகளுக்கு கணினியில் பயிற்சி அளிப்பதற்காக ரூபாய் 155 இலட்சம் செலவில், ஒவ்வொரு மத்தியச் சிறையிலும் கணினி மையம் தொடங்கவும் கருதப்பட்டுள்ளது.

ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தினை அமைத்திடவும் பொது மக்கள் சிறைத் துறையின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளவும், தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் தகவல் தளம் சிறைத் துறையால் தொடங்கிவைக்கப்பட்டது:

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/tnprisons

**VII. ஏனைய முயற்சிகள்**

சிறை நிருவாகம் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையடுத்து, பின்வரும் திட்டப்பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

36. சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் **"வீடியோ கலந்தாய்வு முறையை" (Video Conferencing System) அறிமுகப்படுத்துதல்:-** இம்மாநிலத்தில், படிப்படியாக, சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் வீடியோ கலந்தாய்வு முறையைச் செயற்படுத்துவதற்காக, தொடரா இனச் செலவு என்ற வகையில் அரசு ரூ.69.20 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

கீழே குறிப்பிடப்படுகின்ற முறையில் சென்னை மாநகரில் உள்ள ஒவ்வோர் இடத்திலும் ஒரு சாதனம் என்ற அளவில், நீதிமன்றங்களில் வீடியோ கலந்தாய்வு முறையை நிறுவும் பணியை முதற்கட்டமாக மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| 1. எழும்பூர் நீதிமன்ற வளாகம் | 1 |
| 2. ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வளாகம் | 1 |
| 3. சைதாப்பேட்டை நீதிமன்ற வளாகம் | 1 |
| 4. சென்னை அமர்வு (செஷன்ஸ்) நீதிமன்றம் | 1 |
| 5. மத்தியச் சிறை, சென்னை | 2 |
| 6. மத்தியச் சிறை, புழல் | 2 |
| மொத்தம் | 8 |





**கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் சிறைக்காவலர் பயிற்சி தற்காலிக நிலையங்கள் தொடங்குதல்**

37. புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பயிற்சி அளிக்கப்படாத தற்போதுள்ள 396 சிறைக்காவலர்களுக்கும், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட உள்ள சிறைக்காவலர்களுக்கும் ஆறுமாத கால அடிப்படைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு கோயம்புத்தூரிலும், சேலத்திலும் சிறைக்காவலர்கள் பயிற்சி தற்காலிகப் பள்ளிகள் அந்தந்த சிறைகளில் தொடங்குவதற்கு சிறைத் துறைத் தலைவருக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சிறைக்காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, தற்காலிகமாக மூடப்பட்டிருந்த வேலூரில் உள்ள சிறைக்காவலர்கள் பயிற்சிப் பள்ளியை புதுப்பித்தும், 100 காவலர்களுக்குப் பதிலாக 136 காவலர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு**

38. பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளைக் கண்டுபிடித்து, தடுக்கும் வகையில் சிறைத் துறையில் புலனாய்வு விழிப்புப் பணிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்காக, பின்வரும் பதவிகளை உருவாக்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:-

| | |
|---|---|
| காவல் துறை ஆய்வாளர் | - 1 பதவி |
| காவல் துறை துணை ஆய்வாளர் | - 2 பதவிகள் |
| தலைமைக் காவலர் | - 1 பதவி |
| காவலர் (நிலை.II) | - 1 பதவி |

இப்பணியாளர்கள் பயன்படுத்துவதற்காக மூன்று மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கும் அரசு, ரூபாய் 2,14,500/-க்கு அனுமதி வழங்கியுள்ளது.

39. காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக சிறைப் பணியாளர்களுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 50 என்ற வீதத்தில் கூடுதல் நேரப் பணி ஊதியம் வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

40. **உணவுக் கட்டணங்கள்** - அவசரக் காலங்களில் மத்தியச் சிறையில், பாதுகாப்புப் பணிகளில் பணிக்கமர்த்தப்படும், செயலாட்சிப்

[2002 ஏப்ரல் 29

பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்களைப் பின்வரும் வீதங்களில் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது:-

| | |
|---|---|
| இரண்டாம் நிலை சிறைக்காவலர் | நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூபாய் 35/- வீதம். |
| முதல் நிலை சிறைக்காவலர் மற்றும் தலைமை சிறைக்காவலர் | நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்கு ரூபாய் 40/- வீதம். |
| உதவி சிறை அலுவலர், மேட்ரன், மற்றும் துணை சிறை அலுவலர் | நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்கு ரூபாய் 50/- வீதம். |

**பதவிகளை நிலை உயர்த்துதல்**

41. கிளைச்சிறைகளின் நிருவாகப் பணியைக் கவனித்து வருகின்ற சிறைக் கண்காணிப்பாளர், பணிக்கு வராதபோது, அந்நிருவாகப் பணியைக் கவனிப்பதற்காக, அரசு, ஒவ்வொரு கிளைச்சிறையிலும் உள்ள 112 சிறைக்காவலர் (நிலை.I) பதவியிடங்களை தலைமை சிறைக்காவலராக நிலை உயர்த்தியுள்ளது. இது, இம்மாநிலத்திலுள்ள கிளைச்சிறைகளின் நிருவாகத்தைச் சீரமைப்பதற்கு உதவும்.

**சிறை மருத்துவமனைகளைச் சீரமைத்தல்**

42. சிறைவாசிகளுக்கு சிறந்த முறையில் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்குரிய முக்கியமான அடிப்படை வசதிகள் சிறை மருத்துவமனைகளில் இல்லை. மருத்துவர்கள், சிறை மருத்துவமனைகளில் பணிபுரிய விரும்புவதில்லை. அதற்குரிய காரணங்களை அவர்களே அறிவர். இது தொடர்பாக சிறை மருத்துவங்களை அவர்களே பிரச்சினைகளை, மருத்துவப் பணிகளிலிருந்து தன்னார்வமுள்ளவர்களைக் கொண்டும் விருப்பமுள்ள தனியார் மருத்துவர்களைக் கொண்டும் சமாளிக்க வேண்டியுள்ளதுடன், இந்தச் சிறை மருத்துவமனைகளின் நிலை படிப்படியாக உயர்த்தப்படும்.

**எட்டு மணி நேர வேலை முறை**

43. சிறை கட்டமைப்பு பாதுகாப்பு என்பதன் கீழ், பல பகுதிகளுக்கு 8 மணி நேர வேலை முறையை நீட்டிக்கும் பொருட்டு கூடுதலாக 352



2002 ஏப்ரல் 29]

சிறைக்காவலர் (நிலை.II) பதவியிடங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தகைய சிறைக்காவலர்கள் பணி நியமனம் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் மூலம் செய்யப்படும்.

**பகுதி II திட்டங்கள் 2001-2002**

44. அரசு பின்வருவனவற்றிற்கு அனுமதி அளித்துள்ளது. அவை,

(a) மத்தியச் சிறைச்சாலைகளில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் செவிலி உதவிப் பணியாளர்களுக்கு பருத்தி (காட்டன்) சீருடைகளுக்குப் பதிலாக, பாலியஸ்டர் சீருடைகள் வழங்குதல்;

(b) அனைத்து மத்தியச் சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, வேலூர் மற்றும் திருச்சியிலுள்ள மகளிர் தனிச் சிறைகள் ஆகியவற்றில் சலிக்கும் - புடைக்கும் இயந்திரம் (Winnowing) சல்லடை வாங்குவதற்காக ரூபாய் 7.26 இலட்சம் அனுமதித்தல்;

(c) நாமக்கல், கிளைச்சிறையில் உள்ள ஓடு வேயப்பட்ட கூரைகளை எடுத்துவிட்டு, சிமிட்டி கற்கலவையிலான RCC கூரைகள் வேய்வதற்காக, ரூபாய் 5.67 இலட்சம் அனுமதித்தல்;

(d) கோயம்புத்தூர், மத்தியச் சிறைப்பணியாளர் குடியிருப்புகளுக்குத் தனி மின்னிணைப்பு கொடுப்பதற்காக ரூபாய் 6.05 இலட்சம் அனுமதித்தல்;

(e) மத்தியச் சிறை, சேலம், இணைப்பு I மற்றும் II-ல் உள்ள தாழ்வாரங்களில் இரும்புக் கம்பி வலைத் தடுப்பு ஏற்படுத்துவதற்காக ரூபாய் 1.89 இலட்சம் அனுமதித்தல்.

**சிறை நடைமுறை நூலைத் திருத்தியமைத்தல்**

45. சிறை நடைமுறை நூல் கடைசியாக 1983 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. அப்போதிலிருந்து, சீர்திருத்த நிருவாகப் பணிகளில் பல்வேறு வளர்ச்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. எனவே மாறி வருகின்ற தேவைகளுக்கேற்ப, சிறை நடைமுறை நூலில், திருத்தம் செய்வது அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறை நூலில் திருத்தம் செய்வதற்காக, பணியிலிருந்து ஓய்வு பெற்ற இந்திய காவல் பணி அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.


[2002 ஏப்ரல் 29

**முடிவுரை**

46. சிறைகளின் நிருவாகத்திற்கு அரசு, உயர் முன்னுரிமையளிக்கிறது. சிறைவாசிகளின் அனைத்து வகை நல நடவடிக்கைகளையும், அடிப்படை இன்றியமையா வசதிகளையும் மேம்படுத்தவும், சிறையின் பாதுகாப்பையும் நலனையும் வலுப்படுத்தவும் வேண்டி, ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சிறைகளின் சீர்திருத்தம் தொடர்பாக மாண்புமிகு நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் அளித்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு நீதியரசர் ஐ. டேவிட் கிறிஸ்டியன் அவர்கள் தெரிவித்த கருத்துரைகளைச் செயற்படுத்த ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறைத் துறையை மறு சீரமைக்கவும், சீர்திருத்தவும் வேண்டி சீர்திருத்த நிருவாகக் கோட்பாடுகளை சிறைத் துறை மனதிற்கொண்டு செயல்பட வேண்டுமென்பதில் தமிழ்நாடு அரசு மிகவும் ஆர்வமுடன் உள்ளது.



2002 ஏப்ரல் 29]




225161. சென்னை-600 008